DIGITIZED

892 MRP
M78

கடவுள் துணை.

# அரிச்சந்திரவிலாசம்.

பழவெற்காடு,
இரங்கப்பிள்ளைகவிராயரவர்கள்
பாடியது.

இஃது
திருவெண்காடு
ஆறுமுகசுவாமிகளால்
பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்,
இருசப்பமுதலியார்-குமாரர்
பரசுராமமுதலியாரால்
தனது-பாப்பிரமமுத்திராக்ஷரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

ஈஸ்வர - ௵.

122
1-78

கடவுள்துணை.

# அரிச்சந்திரவிலாசம்.

பழவெற்காடு,

இரங்கப்பிள்ளைகவிராயரவர்கள்

## பாடியது.

இஃது,

திருவெண்காடு

## ஆறுமுகசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு,

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார் - குமாரர்

## பரசிராமமுதலியாரால்

தனது-பரப்பிரமமுத்திராக்ஷரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

நளவருஷம்—புரட்டாசிமீ.

உ

கடவுள் துணை.

# அரிச்சந்திரவிலாசம்.

## விநாயகர் தோத்திரம்.

வெண்பா.

இராகம்-சங்கராபரணம்.

ஆதித்தன்றன்மரபி லண்ணலரிச்சந்திரன்சீர்
நீதிகதையைத்தமிழால் நீணிலத்தி—லோதும்புக
ழற்புதவிலாசமென வாவலுடன்பாடுதற்கே
கற்பகவிநாயகன்றாள் காப்பு.

சுப்பிரமணியர் தோத்திரம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வெள்ளியங்கிரிமிசை விளங்குமெய்ப்பொருள்
கள்ளவிழ்குழலுமை கலந்தபாகனு
றொள்ளரும்பரிவுட னீன்றசோதியாம்
வள்ளியங்கானனை வணங்கிவாழ்த்துவாம்

சிவதோத்திரம்-இ-ம்-கண்டா.

அருட்புலிக்கன்றினுக் கமுதமீய்ந்தருட்
பெருமைதங்கிய பரன் பிரமன்மாதவ
ராகரமென்றுகொண் டாடுமெய்ப்பொருள்
திருநடனப்பதஞ் சிந்தைசெய்குவாம்.

விஷ்ணுதோத்திரம்-இ-ம்-தோடி.

சங்கொடுசக்கரம்வாள் கோதண்டமோங்கிடு
தழைத்தகதையுடன்பஞ்சாயுதமுந்தாங்கி
பங்கயனைப்படைத்துயிர்களனைத்துமீன்ற
பரந்தாமன்வசுதேவன்சுதனாய்வந்த
துங்கமுகில்நிறத்தானைக்கமலமேவுந்
துலங்கரிய மார்பிற்றுளபத்தானைப்
பொங்கரவினடித்தேங்குமிமைபூண்ட
புகழாதிநாரணன்றாள்போற்றிவாழ்வாம்

சரஸ்வதிஸ்தோத்திரம்-இ-ம்-முகாரி.

சதுர்மறையோடாகமநூலனைத்தினுள்ளும்
ஞானகியுலகமெங்குந் தழைத்துவாழும்
புதியவெண்டாமரைமலரின் விளங்குமெய்யாள்
பொன்னலர்மாதினுக்கு மருமகளாய்வந்த
துதிபெறுநற்பவளவா யருட்கலைப்பொன்னின்
றுலங்குமிகரத்தெழுந்த தனத்தாளோங்கு
மதிவதனத்தருங்கொடிபாரதியின் செம்பொற்
மலரடியையநுதினமும் வணங்கிவாழ்வாம்.

இ-ம்-நாட்டை-தாளம்-திரிபுடை.

புவனபோகவைபோகசுந்தர புண்யனரிச்சந்திரசரிதையை
தவறில்லாமல்விலாசமாகவே தமிழினலுரைசெய்யவே ஆ-ஆ
பவளமால்வரைபோலுமேனியர் பாமனாருளாலுதித்திடுஞ்
சிவகணேசகுஞ்சரானர்பொற்பதந் தினமுந்துணைசெய்துகாக்கவே
ஜெயஜெயா

சீலனினியகிருபாலன் திகழுஞ்செங்கோலி னுயர்சிலைவீரனாகிய
கோலவரிச்சந்திரன்கதைவிலாசமாய்குறித்துநாமுரைசெய்யவே ஆ
(ஆ

சூலிகரகபாலி அன்பர்மூலிவளர்மறைநாவின்முடிவிலும் (ஜெயா
ஏலவளர்மயில்விலாசன்குகன்வடிவேலனுந் துணைசெய்யவே-ஜெய
சொல்லும்புவனங்களெங்குந்துதிசெய்யுந் தூயவரிச்சந்திரன்
மாசரிதையைவல்லபைத்தமிழால்விலாசமாய் வகுத்துரைத்ததைப்
(பாடவே-ஆ-ஆ

கல்விநிறைகருவாணர்நாவிலும்கருது மூவர்கள்பாடுந்தமிழிலும்
எல்லையெங்கினும்வளருங்கலைமகளினிய பதந்துணையாகவே - ஜெய
(ஜெயா

சீர்பெரும்புகழரிச்சந்திரன்கதை திகழ்விலாசமதாய்விளங்கவே
பாரின்மிசைச்செந்தமிழினிலிசைபரிந்து மகிழ்வுடன்பாடவே ஆ
(ஆ

வார்பெருந்தனமாதுசங்கரி வளருந்திருமகள்மலைமுனிமுதல்
பாரளந்தோராதிநாரணன்பாதமுந்துணைசெய்யவே-ஜெய ஜெயா

ஜர்ட்டை.

கதிர்குலத்தில்வந்துதித்தசாதலரிச்சந்திரமன்னன்
விதிமுறைநடந்தகதை விலாசமெனச்சொல்லவே ஆ-ஆ
மதிபுனைத்தவேணியரன் மாமகிழ்விநலளித்த
கதிதருமைங்கரனர் பதக்கமலமிகத்துணையே ஜெய-ஜெயா



சதிரிலகுசூரியகுலந்தன்னிலரிச்சந்திரன்கதை
துதிபெருவிலாசமெனச்சுபம்நிலைக்கச்சொல்லவே ஆ-ஆ
புதியமதிவதனவள்ளி போகம்நிறைவாகிமகிழ்
பதியெனுஞ்சண்முகக்குமரன்பாதமலர்த்துணையே ஜெயஜெயா
நிருபர்புகழரிச்சந்திர நிபுணன்கதைவயத்தமிழால்
அருமைநல்விலாசமதாய் ஆவலுடன்சொல்லவே ஆ-ஆ
திருமகளுமலைமகளுந் திறமிகுந்தகலைமகளும்
பருவரையிற்குறுமுனிவன் பதமலருந்துணையே ஜெயஜெயா
தருநிறைபொன்னுலகுபுகழ் தாமரைரிச்சந்திரன்கதை
விருதுளவிலாசமென மேதினியிற்சொல்லவே ஆ-ஆ
கருமுகிலின்மேனியன்பொற் கவுஸ்தபமணியுந்துலங்க
வருதிகிரிசங்கவணிமாயன்பதத்துணையே ஜெய ஜெயா

தோடயம்.

(இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.)

வீரன்கிரிமிசையுலவுமயூரன்திருபுயைபுதவுகுமாரன் ஆறுமுகசி
லகுசிங்காரன்றுணைசெய்யவே ஆ-ஆ
சீர்பெறும் புவியாண்ட வரிச்சந்திரதீரன் சரிதையை விலாசமா
கவேபாரின்மிசை அருந்தமிழினல்மிகப் பரிந்துமகிழ்வுடன்பாட
வே-வீரன்

பலவிதகலைகளின் நிலைபெறுசிறகுகள் படவெறிகரர்பதிமடம
யில்மருவிய-வீரன்.
பணிமணியணிதிகழ் பதுமமென்மலர்முகபவளவிதழினிய தவ
குறமகள்புணர்-வீரன்.
பதறிக்குறலிட்டபயமதகியிதுப்ரசிற்பனாதரு பாமர்க்குகவே
பழுது நீறிடவொடு அசுரனைகிரியொடு படவெற்றியினயில் விடு
மற்புதகர-வீரன்.
கிரிமிசையுலவு மயூரன்திருபுயை யுதவுகுமாரன் அறுமுகமிலகு
சிங்காரன்றுணைசெய்யவே-ஆ-ஆ.

(மங்களம்-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி.)

மங்களம் ஜெய மங்களம்-மலையச்சிலையென-வளைதருசிவசுத
ன்மருவளர்மலர்நிகர்திருவடிதனக்கினம்-மங்களம்-செயமங்களம்.
எங்கும்நிறைமாமறை புகழிலங்கியசெஞ்சுடரொளிதிகழ் சுந்தரநி
ஊனயருதவமுனிவர்கள் புகழ்மகிமையினிசைபெறு மதிகபசெயமு
லவிய-நவயிங்கிதசங்கர சம்புசதாசிவமிதுபொருளலதினி யெது

பொருளெனவளித்திராதியர்கள் துதிசெய்திதமுறைசந்திரசேகரனுமொருபரமர்க்கும்-மங்களம்.

சிவகாமிநேசருக்கும்மங்களம் அலைகடலினிலொரு சிலைவைப்பிணையென அப்பர்க்கன்றருள்புரிதருபரமெனும்-சிவகாமிநேசருக்கு மங்களம்-அடல்கொண்டொருசிலயடியுண்டுழலியவபிராமிக்கு ளமகிழ்வுறவிசையனையங்கைகொடுத்தி அணைத்துநிலத்திலமுத்தித்திகழ்சச்சையை அற்புதமுடன் அகமகிழ்ந்துகண்காணவென்றருளியதனைமிகுந்தபிரணவாதிதிருபாகசிவகாமிநேசருக்கும்.

மங்களம்.

அத்திபுரித்தவர் நித்தநடித்தவர் அற்புதசிற்பதவித்தகர் மத்தபொருக்கலர் வைத்ததிருச்சடைபொற்புருபத்தனைத்திலுநற்றுதிபெற்றவர் அரியவானவரும் அரியமாதவரும் அரகரசிவசிவவென்னுவாசெயவளர்சிவகாமிநேசருக்கும் சித்தப்பிரகாசருக்கும் தவரில்விலாசருக்கும் தழைக்குமெய்ப்பாகருக்கும் நவமாங்கருடேசருக்கும் நான்முகவிலாசருக்குந்நாடிய திருமகள்கலைமகள்முதலாம்நங்கையர்புகழ்வள்ளிபங்குறை முருகர்க்கும்-மங்களம்.

ஜெயமங்களம்.

அவையடக்கம்- விருத்தம்.

( இராகம்- கும்பகாம்போதி )

தாரணிபின்முற்றமிழ்நூலாய்ந்தோர்முன்னே
திருவரிச்சந்திரன்கதையைத்தமிழ்யனன்பால்
ஓர்பெறவிலாசமெனப்பாட்டுற்ற
திறம்வினைந்தவாறதனைத்தெளிந்துபார்க்கின்
பேர்பெருகுங்கடல்நீரையுண்டுமேகம்
பிறங்குபுவிமேற்பொழிந்துவெள்ளமாக்கி
வெருமக்கடலை நிறைவிப்பதென்ன
இசைத்தமிழாலிக்கதையியம்புவேனே.

(பொது விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.)

மருவளர்கடுக்கைதும்பை மலர்நிறைந்திலங்கும்வேணிப்
புரிசடையரனருளீன்ற புனிதனாரம்கமுதீண்ட
பருவரைமீதிலோங்கும் பாரதமெழுதுஞ்சீரிம்
விரிபொலிதிகழ்சித்தி விநாயகர்தாம்வந்தாரே.

வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே அயோத்தியாபுரியாளப்பட்ட திரிசங்குகுமாரனாகியசத்தியவாஷி அரிச்சந்திரமகாராஜன் கீர்த்திப்பிரதாபங்களை சாங்கமாய்கல்யாணமுதல் முடிசூட்டுமென்றவனாக்கும் விலாசமாய்செய்து ஆடுதற்கு விக்கினேஸ்வரர் வருகிறவிதங்காண்க.



விக்கினேஸ்வரர்-வருகிற-தரு.

இராகம்-பூரிகல்யாணி- தாளம்-ஆதி

திச்செணுந்த-தகதத்தக-தத்தக-தீச்செணுந்தக-திரித்தில்லானு-தாம்-தாம்-தகதக-திம் திம்-தகதக-தசத்தக-தத்தக்கததகதக ததிங்கிணதும்தாம் சித்திவிநாயகர்வந்தார் சிவசத்திதிருபாகர நித்தியகல்யாணிப்பிரசித்த புராதன சித்தமகிழ்ந்தருள் சித்திவிநாயகர் வந்தார்

எத்திசைப்புகழ் பவழபுரியில்வள ரிங்கிதரூபவிலாசவிநோதர் அங்குசபாச மணிந்திடுமாத ரிலகியநடமது புரியவ ளருமகிழ்ந்திலபெறுகபகர நெறியுடனேதிகழ் சித்திவிநாயகர்வந்தார்.

உம்பர்புகழும்வெகு தூயநலவில்லாசெங்கனிவாயர் நம்பிகேறிடர் தீர்க்குமுபாயர் குகன்சகாயர் நவில்சதுர்வேதவத்தியாயர் பிறைதக்கருடவயிறு ரற்புதமென்ன பருத்தபாரபிணிலப்பன்னுமுப்புரிநூல்மின்னயாமனல்லடியவரொனுத்திருக்கூட்டம் பாவிவந்தவருளமகிழ்வர நாட்டசித்திவிநாயகர்வந்தார் சிவசத்திதிருபாகநித்யகல்யாணிப்பிரசித்தபுராதன மகிழ்ந்தருள்சித்தி விநாயகர் வந்தார்

பொது-விருத்தம்-இ-ம்-இலாகுபதி.

மட்டிலாப்புகழ்பெற்றோங்கி வளமிகுமயோத்திவாழும்
கிட்டியந்தரவெறக்கர்க்கு களர்திரிசங்குமைந்தன்
ஒட்டியவினைகடந்த வயரிச்சந்திரன்வாசற்
கட்டியக்காரன்வந்து களமுடன்தோன்றினானே.

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே அயோத்தியாபுரி ஆளப்பட்ட திரிசங்குமைந்தனாகிய சத்தியபாஷி அரிச்சந்திர மகாராஜன்வாசற் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்-தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

திறதகதாம்ததிக்குத்தக்கணக்-தக்கஜெம் தரிகுதாம்-தாரிம்ஜம் தாரிம்ஜம் தாரித்தனந்தன தத்தினதித்தா - திமிதிமி திடநக-தத்தெய்தெய்ய தாத்தெய்-தெய்ய-தகுஹுத்தெய் தெய்ய-தகுத்தத்தினுனு தினுனு- தானுதத்திரினுனுதரினுதரி தித்தில்லானு தில்லில்லானு தானுதத்தரிதிம் தாரதானுதரியத்திரிதித்தில்லான - திரினுதரினுதரி கட்டியக்காரன்வந்தான் ராசாசனரிச்சந்திரமகாராசன் வாசற்கட்டியக்காரன்வந்தான்.

அஷ்டதிசைகளெங்கெங்குமிகுதவநிஷ்டை புரிபவர்முதலோர்புகழ்நவ அரசுக்கிணையெது நீ. ளெவுளாசெய அரசர்கள்சபகரான் சமுகத்ததிசயக்கட்டியக்காரன்வந்தனன்.

திருவெண்ணீறதுநுதல்மேலணிந்து சிந்தையிலனுதினம்அரன்பதம்பணிந்து சிவசிறப்பொன்னுருமாலைபுனைந்து செப்புமுழுத்தர்களொவாட்டநினைந்து சரிகைவலக்கையினிற் றிகழப்பொதி சுறுகாயிலங்கக்கொளுவிற்பனைநற்கலைபெருகச்சபையிறுக்கியிடிக்கி நிகரிக்குரலிட்டுமிரட்டியதட்டியு டெதிர்வருங்கண்டகாரஞ் சபைக்குள் சபாசெனக்கண்டவர் நின்றுபதுங்கிலொதுங்கவேகலைநிறைந்தசமுகாதிபர்புகழ்ந்திட வுலகமெங்குமிவன்பேர்சொல்லி மகிழ்ந்திடக்கட்டியக்காரன்வந்தான்.

அரிச்சந்திரமகாராசன்-வருகிறபொது-விருத்தம்.

இ-ம்-தோடி.

மகிமைசேர்விஸ்வாமித்திரன் வசிஷ்டனலந்தரத்திற்
புகழுநற்சொற்கமேவும் புனிதனுந்திரிச்சங்கென்ற
மகிபதியுலகமெல்லாம் வாழ்த்துநல்லயோத்திவாழும்
தருமரிச்சந்திரபூபன்றன் சொலுவினில்வந்தானே.

இராஜன்-வருகிற-தரு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

தக்கிமிதிமித்-தகதஜுத்தஜெஜுத்திமிதாகஜெம்தரி- தகுந்தகுந்தரி - தக்கிடகிடதரிகிடகிடதக தாகிடகிட் ஜெகிடஜெம்தரி தாகிடஜெம்தரி கிடதக திரித்தில்லானா திரித்தில்லானா திரித்தில்லானா வாசவன்புகழ்திவ்விய வல்லாசனரிச்சந்திரனிதோவந்தான்

வீசும்புகழ்சேர்நல்ல சூரியகுலந்தன்னில் விளங்குஞ்சோதிப்பிரகாசன் மெய்யனெனவர்க்குநேசன்-வாசவன்புகழ்.

ரத்நகிரீடமின்னகோடி சூரியனொன்னரஞ்சிதயிரு கர்னகுண்டலங்களுந் தன்னமுற்றுஞ்செயசுருதி முழங்குரப்புசகிரிமொத்துநித்தியமிலங்க பதக்கங்கள் முத்துவடங்கள்நுலங்க வெற்றிவீரதடைமார்பினில் விசையமுன்னுடன் முப்புரிநூலசையபற்றுசவுபாக்கியமிசைபனைகலருள்ளமசையகைகளிபிசைய அங்புகசியசகலவிசையசுகுணராசிகவாசவன்புகழ்திவ்விய.

வட்டவெண்குடைதாங்கவானவர் கண்டோங்க கட்டியமதிபோடகனநயவிதம்பாட-கிட்டியசரர்வந்து கிலிபிடித்தேபயந்துஒட்டியெச்சரிக்கைசொலவே மந்திரிகள்இஷ்டமாய்தொடர்ந்துசென்வேமட்டிலாதவல்லதுஷ்டனைவெல்ல மறையுள்ளோர்கள் நல்லமனத்தோடாகிசொல்ல இஷ்டகாமியப்பிரதிஷ்டை நிறைபப்பட்டவர்த்தனுகிமிகுந்தசோதி - அரசரோதிவருப்பிரக்யாதி பிரபலகீர்வாசவன் புகழ்திவ்விய.



மின்னுமிடைவாள்கட்டி துன்னலமையநட்டி கன்லியர்கள்பகட்டிதுன்னியிசைபுகட்டி முன்னேசாய்மரவிசமன்னரிதங்கள்பேசதன்னயங்கள்பெருக அரம்பையருன்னி நெஞ்சமுருக சொன்னமொழிதவறாதவசீரன் கன்னல்மதனெனவழகிய வீரன் டன்னகாதிபதிதுதிசெழிப்பேறபகருஞ்சிலவீரதுஷ்டர்நீற கவலையாறவருணமீற தருமந்திற. (வா)

இராசன்-போற்றிகவி-இ-ம்-மத்தியமாவதி.

அருமறைவிளங்கநன்னூ லாகமவிதிகளோங்க
தருவளஞ்செழிக்கநீதி தழைக்கமுப்பாரியெய்ய
திருபர்களுலையாள நிறைந்தநாற்குலங்கள்வாழ்க
திருவளர்மார்பனெங்கள் செங்கண்மால்பாதம்போற்றி.

முதல்-மந்திரி-போற்றி-கவி-இ-ம்-ஆநந்தபைரவி.

மெய்யனேபுலமையாளும் விறல்மிகுவீராபோற்றி
பொய்யுரைக்காதுஞ்சொல்லாப் புண்ணியவிரதாபோற்றி
செய்யநல்லயோத்திராட்டைத் திருத்தியாண்டரசசெய்யும்
அய்யனேபோற்றியெங் கரிச்சந்திரபூபாபோற்றி.

இரண்டாவது-மந்திரி போற்றி-கவி-இ-ம்- ஆனந்தபைரவி.

கதிர்குலத்தரசேபோற்றி கருதியசரையுவென்னும்
நதிவளஞ்சூழநாட்டை நடத்துநல்லரசேபோற்றி
துதிபெறமொருகுடைக்கீழ்ச் சொல்லுமிவ்வுலகுக்கெல்லாம்
அதிபதியாகவந்த அரிச்சந்திரனேபோற்றி.

கட்டியக்காறல்-இ-ம்-ஆனந்தபைரவி.

அலைகடலொலிமேயன்-அடர்மழைமுகிலென்-அமரருலகதன்கதிர்தருமுரசென-அணிமணிமுடிநிறை- அரசர்கள்துதிசெயவருபோகை-நிலைபெருததானி-நிறைதருபுவிமிசை-தடுவளமிகுபலகுடிகள்வந்தடிதொழ - தெளிமறையவர்நிதம்-பரிவுடனெதிர்நெதிர்மொழிபேசி-யிலகிடலதிரதர்சமரதர்பரிகரி- யெழிலுறுதிரலொலிமிசைகொடிவரவர -விளமயிலென்மட-வனிதையர்சுரதநடனமாடவுலையமொட்டர்தரு-படைகளணிந்துவர்-வளர்கதிர்குலநிதி- பதிகரர்பதியதி பதியெனவளரிச்சந்திரமகிபதி-யிவனெ-அறிவீரே.

கட்டியக்காரன்போற்றிகவி-இ-ம்-ஆனந்தபைரவி

சூரவுத்தண்டமார்த்தண்டப் பிரசண்டகண்ட துஷ்டநிக்கிரகமிஷ்டதுபாபோற்றி, பாரில்ண்டாண்டபிரமாண்ட மூர்த்தபண்டிரண்டநாதாபோற்றி, நீருண்டபுயல்கொண்டநாளுமண்டநவகண்டநிருப்ர்கள்கண்டாபோற்றி; தாருண்டபுஜகீர்த்திமகா அரிச்சந்திமகாசக்கிரபதிநின்றாள்போற்றி.

இராசன்-விரு-தேசவிசாரணை-இரட்டை- ஆசிரியவிருத்தம்.
இ-ம்- தோடி.
சீர்கொண்டபுவியிற்றுயரதரும்மாரியுஞ்செழிக்கவேபொழிகின்றதா
மந்திரி-விடை.
இந்தத்திலென்றுநன்னிதிவழுவாதுமன்னுதிரட்சியாய்ப்பொழிகின்ற
இராசன்-விரு. (து
பேர்கொண்டமன்னவர்செலுத்திவருபகுதியும் பிரியமாய்ச்செல்கி
மந்திரி-விடை. (ன்றதா
திராதிராவுநாட்கிணைநெறிதப்பாதுசெலுத்தியேவருகிறார்கள்
இராசன்-விரு.
வர்கொண்டதேவாலயங்கள்பிரமாலயமெங்குந்தழைக்கின்றதா
மந்திரி விடை.
இறைவனேயுனதுகட்டளைப்பொருள் விளங்கவே மெய்த்துத்த
இராசன்-விரு. (ழைக்கின்றது
போர்கொண்டதேசத்திலுள்ளவர்க்கு இவர்களுக் கெட்டிவொருபொன்கடமை
மந்திரி-விடை. (செல்கின்றதா
பூபதியெட்டிலோர்கடமைகோ்கொள்வதால்பூமியுங்கப்பம்யுமே

நாடகசாலை-பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

ஆடகவுலகுபோற்றுமயோத்திநாடாளுசெய்யும்
நீடகவரிச்சந்திரன்றன் நிறைவொளவைனைநாடிச்
சூடகமலர்க்கையின்னைத் துன்னுநுகவிடைகள்வாய்ந்த
நாடகசாலைமாதர் நடனஞ்செய்திடவந்தாரே.

வசனம்.

அகோ தெப்படியென்றால் ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுந்தண்டன் ராசபரமேஸ்வரனாகிய சத்தியபாஷி அரிச்சந்திர மகாராசாவின் கொலுவுக்கு நாடகசாலைப்பெண்கள் வருகிறவிதங் காண்க.

நாடகசாலைப்பெண்கள்-வருகிற-தரு.
இ-ம்-புன்னாகவராளி- தாளம்-ஆதி.
நடனமாதர்வந்தார் - இதோ - நடனமாதர்வந்தார்
நறைதிகழ்கமலமென் மலர்முகமொளிர்தர நிறைகுணவதிகள்
நிலவுதிசைகுவிந்த (நடனமாதர்வந்தார்)
நடைபடாதமோக தாபவலைக்குட்சிக்கித்
தவம்பிரமிக்கியமதியுருவமன்மதன்றிருமுன் (நடனமாதர்வந்தார்)
நிசால்லுங்கொக்கோகமெனுஞ் சாஸ்திரம்-நிறை- தங்கப்பிரவாக
முன்ன ப்ரத்திரம்-வெல்லோம்மதன்பனைகவை மாத்திரம்-என்று-மி
கட்டிதேன்னமென நிதத்திரம்-அல்லமுனிவர்கண்டு மருள்கொள்



லச்செய்யுஞ்சாம வகுத்துரை செய்துமுகப்பாடமாகிய கேஷத்திர
ம-வானவருறவுறு மேனைசைமுதலியர் வடிவழகினைக்கண்டுமேனைத
ரவொளிகண்டு - நடனமாதர்வந்தார் - இதோ நடனமாதர் வந்தார்.

பெண்கள்-கொச்சகம்-இ-ம்- புன்னாகவராளி.

ஓங்குமிந்த்ரப்புவனமெல்லா மொருகுடைக்கீழரசாட்சி,
பாங்குடனேநடத்துகிற பராக்கிரமவரோதயனே
நீங்கொழித்துநலமேவுந் திரிசங்குமகாராசன்
ஈங்களித்தவரிச்சந்திரவிறையவனேசரண்சரணே.

அபிநயபதம்-இ-ம்- பிலஹரி-தாளம்-ஆதி.

சயமீதேதோமோடி-சாமியாரும்
சமராடல்கொண்டவீரா நாரிச்சந்திரதீரா (சாமி)
நன்மதன்கைவில்லம்பாலே வாடிமெத்தன்கொங்கைமேலே
அன்புவைப்பாயொருக்காலே ஆசைநீருமதனாலே (சாமி)
தென்றலனல்போலஜாடத் திகைத்தென்மனதுவாட
வன்றுமுன்மெல்லையல்நீட இங்குமெம்மைச்சேர்ந்துகூட (சா)
கோவையிதழ்த்தேனூறுதே குயிலுமிதோசீறுதே
ஆவலுமிகமீறுதே அதிம்பாகத்தலைக்கேறுதே (சாமி)

இராசன்-விருத்தம்-இ-ம் - தோடி.

தருமநன்னெறியிற்பிக்கச் சத்தியகீர்த்தியென்னும்
பொருவில்லாமந்திரியிந்தப் புனிதரன்னடனஞ்செய்த
மருமலர்க்குழலாரான மகிழ்பிரயங்கள்செய்யும்
விறைசெறியார்தருக்கு வெகுமதிதாச்சொல்வாய்வ.

வசனம்.

கேளுஞ் சத்தியகீர்த்தியாகிய மந்திரி இதோநம்முடைய ராஜ சமுகத்திலே நடனஞ்செய்தநாடகசாலைஸ்திரீகளுக்குச் சகலவெகு மதியுங் கொடுத்தனுப்பச் சொல்லு மந்திரி.

மந்திரி-விருத்தம் -இ-ம்-தோடி.

மன்னவர்மன்னனாக வரிரிச்சந்திரகோன்
பொன்வீரைநதுமுகங்காக்கும் புகழ்பெருகட்டியக்காரா
அன்னமென்நடையாரிங்கே யணிநடம்புரிந்ததாலே
சொர்ணநற்பணியும்வஸ்திரம் துலங்கவீய்ந்தனுப்புவாயே.

வசனம்.

கேளும்பிள்ளாய் ஆசாரவாசல்காக்குங்கட்டியக்காரா நம்முடைய லோகேஸ்வரனான அரிச்சந்திர மகாராசாவினுடைய சந்நிதானத்தி லே இப்போது நடனஞ்செய்தாள்களோநாடகசாலைஸ்திரீகள் அவர்

களுக்கு நவரத்தினங்கள் வைத்திழைத்த ஆபரணங்களும் நல்லப்பட்டு பட்டாவளியும் வெகுமதிகொடுத்தனுப்பும் பிள்ளாய்.

யாத்திரைபிராமணர்-பொது-விருத்தம்-இ ம்-மத்தியமாவதி.

சாத்திரவிதிகளெல்லாந் தழைத்தறம் விளங்கச்செய்யுஞ்
சூத்திரதாரியென்னத் துதியரிச்சந்திரன்வாழ்நாள்
கீர்த்திசேருலகமெங்குங் கிளர்நதித்தலங்கள்கண்டே
யாத்திரைசெய்யும்வேதியாகவந்தனர்வந்தாரே.

வசனம்.

அகோ நெப்படியென்றால் மகாராசராச மார்த்தாண்டராசகெம்பீர சூரியவம்சவுத்தாரகரான அரிச்சந்திரமகாராசாவானவரிவ்வித மாயராசாட்சிசெலுத்திக் கொண்டிருக்குங்காலத்திலே யனேகபுண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துஅனேகதிவ்வியஸ்தலங்களெல்லாங் கண்டுதரிசித்துயாத்திரைசெய்து வரும்படியாகியபிராமணன் வருகிறவிதங்காண்க.

யாத்திரை-பிராமணர்வருகிற-தரு-இ-ம்

சௌராஷ்டகம்-தாளம்-ஆதி.

அரிநாராயணகோவிந்தஹரே அரிநாராயணகோவிந்த
திருநாராயணபுரமேயஹரி ஸ்ரீதாமாதவனேமதுசூதன (அரி)
உபையகாவேரிமத்தியவாசா - உம்பர்கள்பரவியகெருடேசா-ஓ
அரே-செயமிகுமாதவர்விசுவாசா-வேதசிரத்தினில்நடமிடுந்திவ்வியதேசா.
(அரி)

பவவினைகெடவரந்தருவாயே-நாங்கள் - பண்ணும்புண்ணியத்தால்முன்வருவாயே-தவநில்லா திருக்கண்ணிரிவாயே -உந்தன்சரணம் தினந்திடவருவாயே.
(அரிநாராயண)

மஞ்சாமேனிதிகழ்வெங்குராயா-காசியன்-மகனெனவுதித்துவளர்மேசயா-பஞ்சாயுதகரதர்னேயா - செல்லும்பவழபுரிவாழ்செங்கழனிவாயா.
(அரிநாராயண)

இராசன்-விருத்தம்-இ-ம்- சாவேரி.

சதுமறையவரேபோற்றித் தக்கநல்வேள்விவெல்லாம்
விதிமுறைகண்டகீர்த்தி மெய்த்தவத்தோரேபோற்றி
முதிருநம்புண்ணியதீர்த்த முக்கியமாய்த்தோய்ந்தங்குள்ள
பதியெலாங்கண்டுவேத பாக்கியவந்தரேபோற்றி.



யாத்திரைப் பிராமணர் விருத்தம்-இ-ம்-மோகனம்.

சூரியன்மரபில்வந்த சுபகராஆசீர்வாதம்
பாரிலறம்வளர்க்கும் பார்த்திபாஆசீர்வாதம்
தாரணிவேந்தர்போற்றுஞ் சக்கிரேசாஆசீர்வாதம்
சீருறு மரிச்சந்திரேந்திர சீலனேஆசீர்வாதம்

இதுவும்பிராமணர் விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

சகலசௌபாக்கிய சாம்பிராச்சியசித்திரஸ்து
சகம்புகழ்செங்கோலோங்கத் தனதான்யசித்திரஸ்து
தகைசதுரங்கசேனைத் தளமெலாஞ்சித்திரஸ்து
மகிழ்மறையோர்க்குச்சுவர்னம் வழங்குதல்சித்திரஸ்து,

லெதாஸ்து.

இதுவும்பிராமணர்-விருத்தம்-இ ம்-சௌராஷ்டகம்.

மகிபதிவாழிவாழி மனுநெறிதழைக்கவந்த
சுகநிதிவாழிவாழி துலங்குமிவ்வுலகையாளும்
தகுதியேவிளங்கவோங்குந் தருதிரிசங்குமைந்தா
அகிலமீதறம்வளர்க்கும் அரிச்சந்திராவாழிவாழி

இராசன் வசனம்.

தேவரீர்ஆசனத்திலெழுந்தருளுங்கள்சுவாமிகளே.

பிராமணர் வசனம்.

அப்படியேயிருக்கக்கடவோமகாராசனே

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

துங்கவந்தணரேயெந்தன் துதிபெறுகுலத்தோரெல்லாம்
பொங்கமாய்செய்தபுண்ணியம் பூர்த்தியாய்ப்பலித்ததாலே
இங்குவந்தெய்தினீர்கள் என்சொல்வேனெனதுபுண்ணியம்
அங்குநீரெங்கேவந்தீரெனக்கெடுத்துரைசெய்வீரே

கேளுங்கள்சுவாமிகளே எங்கள்வமிசத்தார்செய்த பூஜாபலத்தாலே உங்கள் தரிசனமெனக்குக்கிடைத்தது அதுதானென்னுடையபுண்ணியவசம் நீங்களிருக்கிற ஸ்தலம் எதுவோ இப்போது எங்கேயிருந்துஎனக்குக்காட்சிதாத்தக்கதாகவந்தீர்கள்சொல்லுங்கள்சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

இலகவேகீர்த்திபெற்ற விஜயரிச்சந்திரபூபா
தலமெதுவென்றுகேட்டாய் தழைத்தகாசிவிநாடு
நலமுடனிப்போதீர்த்த யாத்திரைநாடிவந்தோம்
உலகிலுன்புகழைக்கேட்டோ முவந்துகண்டிடவந்தோமே

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே நாங்களெப்போதும் யாகஞ்செய்வதுகாப்பிலிருந்தசம் தீர்த்தயாத்திரையாகவந்தோம் அநேக தீர்த்தங்களில்ஸ்நானஞ்செய்தோம் வெகுதிவ்வியக்ஷேத்திரங்களையுங் கண்டுவந்தோம் உலகிலெங்கும்பார்த்தாலும் உமதுகீர்த்தியைப்பிரக்யாதியாய்க்கேட்டோம் ஆனதால் இதுவழியாகவந்தநாங்களுஞ்சேவித்துக்கொண்டுபோகலாமென்றுவந்தோம் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

மண்மிசையுள்ளமுக்கிய மகாதலமெல்லாங்கண்டே
யெண்ணருநதிகளாடியிங் குவந்தெய்தினீரே
வண்ண நல்லதிசயங்கள் மகிழ்ச்சிகள்விளைவதாக
கண்ணிறுங்கண்டிருந்தால் கருதுநீருரைசெய்வீரே

வசனம்.

கேளுங்கள்சுவாமிகளேபூமியிலேயுண்டாகிய அநேகதிவ்வியக்ஷேத்தலங்களெல்லாம் கண்டுதெரிசித்துஅங்கங்கேயுள்ள புண்ணியதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்திங்கேவந்தீர்கள் நீங்கள்வருகிறவழிகளில் அங்கங்கேகண்ட அதிசயங்களிலே விசித்திரங்களாகியதுவேதுங் கண்ணிற்கண்டிருந்தால் நமதுமனம்செருக்கடையும்படி சொல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணன்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

கங்கைதொட்டிதங்குத்தெற்கே கன்னியாகுமரிமட்டும்
பொங்கியதீர்த்தமாடி புனிதநற்றலஞ்சேவித்தோம்
துங்ககன்றுகிராட்டைத் துணைத்தனஞ் செய்யும்வேந்தே
மங்கையைக்கண்டோமந்தவடிவழகெங்குங்காணோம்

வசனம்.

கேளாய்மகாராசனே வடக்கே கங்காதிமுதல் தெற்கே கன்னியாகுமரிமட்டும் அங்கங்கேயுள்ள திவ்வியதீர்த்தங்களிலே ஸ்நானஞ்செய்து அந்தந்த திவ்வியஸ்தலங்களையுந் தெரிசித்துவந்தோம் அவ்விடங்களிலேயுள்ள அதிசயங்களையுங்கண்டோம் கன்னிகையைமற்ற இராசாவினுடைய மகளைக்கண்டோம் அவளைப்போல் நாங்களுங் கண்டதில்லை மகாராசனே

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கண்டோமென்றுரைத்தீர்த்தக் கன்னியாரவள்பேரென்ன
தெண்டிரைசூழ்புவிக்குட் டிருமணமிலையோவுண்டோ
ஒண்டொடிதனக்குத்தாயா ருற்றதோர்தந்தையாரோ
அண்டியெவ்வாறுகண்டீ ரழகையுஞ்சொல்வீரே



வசனம்.

நல்லகாரியஞ் சுவாமிகளே அந்தப்பெண்ணுக்கு விவாகமுண்டோவில்லையோ அவளைப்பெற்றதாய்தந்தையாரோ நீங்களெப்படிகண்டீர்கள் அவளழகெப்படிப்பட்டதோ தெரியச்சொல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

காசியைவிட்டகன்று கன்னமாபுரிக்குவந்தோம்
மாசிலந்நகராள்வோன் மதிதயனென்பான்செய்த
ஆசிதத்தால்வந்த பொற்கொடிகன்னிகண்டாய்
ஆசைகூறழகைநாங்க ளதிசயப்பட்டோமே

வசனம்.

கேளையா மகாராசனே காசியைவிட்டு கன்னமாபுரிக்குப்போனோம் அங்கேகன்னிகாமேடையிற் கன்னியினழகைக்கண்டோம் இக்கன்னிகாசபையிலே மதிதயராசன் தடகசெய்துபெற்றான் அவளழகை யெங்களுக்குத் தெரிந்தமாத்திரஞ் சொல்லுகிறோம் கேளாய்மகாராசனே.

பிராமணன்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

சந்திரமதியாமந்தநத்தையெல்பேர்விளக்குபூர்ண
சந்திரன்கண்டுநாணித் தனக்குள்ளகிரணமெல்லாம்
இந்நிலைவருமென்றெண்ணி திசிதனில்மறைத்துக்காட்டி
நொந்திடுகின்றான்வேறே நவலுதற்குவமையுண்டோ

வசனம்.

கேளுஞ்சக்கிரேஸ்வரா மதிதயராசனுடைய குமாரத்தியாகிய கன்னிகைக்குச் சந்திரமதியென்றுபெயரிட்டார்கள் அவளழகுக்குத்தகுமானபொருளாய் ஒருசொல்லுமரியனேயொப்பிட்டுச்சொன்னாலுந்தகுமா பூரணச்சந்திரனென்று பெயரிட்டுக்கொண்டு ஆகாசவீதியில் திரிகிறானே இந்தச்சந்திரன் அந்தச்சந்திரமதியினுடையமுகவிம்பத்தைக்கண்டு தானே வெட்கப்பட்டுத்தனக்குள்ளகிரணங்களைக்காட்டுகிறதும் மறைக்கிறதுமா யிராத்திரிகாலங்களிலே கண்டுக்காணமலுந்திரிகிறான் ஆனதால் அந்தச்சந்திரமதிக்கு நாங்களுரைத்தான் ஒப்பென்று சொல்லப்போகிறோம் மகாராசனே

இராசன்-வசனம்.

ஆம்-ஆம்-நீங்கள்சொல்லுகிற துண்மையேயாகிலும் நன்றாய் விசிதமாய்த் தெரியச்சொல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணர் - விருத்தம்-இ-ம்-மோகனம்.

மணிமுடி தன்னைவிட்டொளிர்ந்தெழுமுலைக்கொப்பாக
அணிதருநாமேலாஞ்சொல்வா ராதலால்மதனன்கண்டு
தணிவிலாப்புகழ்சேர்கிரீடந் தையல்முன்காட்டநாணி
அணுகவேயனைத்துஞ்செல்லாம லுருவியாயொழிந்திட்டானே

வசனம்.

கேளுஞ் சக்கிரேஸ்வரா அந்தசந்திரமதிக்குப் பொருந்திய அவயவங்களுண்டாயிருக்கிற அழகுகளிலே இன்னதுமுக்கியமென்றதைத்தான் யாங்களெடுத்துச்சொல்லப்போகிறோம் ஒன்றுக்கொன்றுவமைச்சகலுண்டா அதெல்லாமப்படியிருக்கட்டும் ஸ்திரீகளுடைய ஸ்தனங்களுக்கு ஒப்புச்சொல்ல வேணுமேயானால் அனேக உவமானங்களுண்டு அதிலே மன்மதனுடையகிரீடத்தை முக்கியமாய்ச்சொல்லுவார்கள் ஆனால் ஒருவரும் இணையில்லாதவழகுபொருந்திய மன்மதன் தான்தரித்துக்கொண்டிருக்கிற கிரீடமும் அவளுடையஸ்தனத்துக்குநிகரல்லவென்று வெட்கமடைந்துதானே ஒளித்துக்கொண்டு அருபியாய்த்திரிகிறான் அப்படிக்கிருக்கவேயுவமானமெப்படிச்சொல்லப்போகிறோம் சொல்லவேணுமேயானால் வேண்டியதிருக்கு மதிலேதெரிந்துகொள்ளவு மகாராசனே.

இராசன்-வசனம்.

அப்படியா விசிதமாய்ச் சொல்லிக்கொண்டு வாருங்கள் சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

சொருகியகொண்டையழகு கண்டாலுஞ் சுரர்முதல்முனிவர்களெல்லாம்; புரிதவமிழந்துபுனை நிலைகுலைந்து பூவைக்கே யடிமையென்றுரைப்பார், வருமிளநகையாளழகுக்குநீயே மணமுறுகாதலனுவாய்; இருநிலமீதிலவட்குநீயல்லா லேற்றவோர்புருஷரிங்கிலையே

வசனம்.

கேளுஞ் சக்கிரேஸ்வரா அந்தரூபசௌந்தரியமுள்ள கன்னிகையான சந்திரமதியினுடைய நவரத்தினக்கொப்புக்குச்சமுத்தரக்கட்டிச் சந்திரபிறை சூரியபிறையை த்தலங்கரித்திருக்கின்ற திவ்யபட்டுபுளைநிறைந்த புஷ்பங்களை யடுக்கடுக்காய் கட்டிய சொருகுகொண்டையழகைமாத்திரங் கண்டார்களேயானால் தேவர்களும் ரிஷிகளும் தங்கள்தங்கள் தவங்களைவிட்டு மனநிலைகலங்கித்தடுமாறி அவளழகின் இன்பமே பேரின்பமாகநினைந்து அடிமையாவார்களேயொழிய வேறில்லையாதலா லவளழகுக்கு இராசசக்கிரேஸ்வரனே உம்முடையவழகுக்குமேசரி அவளுக்குநீரேபுருஷன் உமக்கு



மவளே ஸ்திரீயாகவேணுமேயல்லது அவளுக்குத்தகுமானபுருஷன் உம்மையல்லாமல் உலகத்திலே யாரிருக்கிறார்கள் மகாராசனே.

இராஜன்-விருத்தம்-இ-ம்-கண்டா.

இந்தநல்லழகுவாய்ந்த யேந்திழையாளைபெந்தன்
சிந்தையில்நினைத்துவிம்மித் திபெருகாகச்செய்தி
ரந்தமின்னாசைநானே யணைவதற்குமையன்றி
தந்திரமதிகாருண்டோ தமியனுக்குரைசெய்வீரோ.

வசனம்.

கேளுங்கள்சுவாமிகளே இப்போதுநீங்கள்சொல்லிக்கொண்டு வந்தசந்திரமதியினுடைய வழகென்கிற அக்கினியை மூட்டிவிட்டீர்களல்லவோ என்மனமென்றுசொல்லப்பட்ட மெழுகான துருகுதே ஆனதாலப்படிப்பட்ட ஸ்திரீ எனக்குக்கிடைக்கும் படியாகிய வுபாயங்களுங்களையேயல்லாமல் யார்செய்யப்போகிறார்கள் சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தாங்கமாயுலகமோங்கத் துரைத்தனஞ்செய்யுமன்னா
பங்கமேதுனக்குக்காதல் வளர்ந்ததுநிஜமேயானால்
சங்கையேன்மனமுனக்குத் தகுந்தகுமாதலாலே
எங்களாலாகவென்ற இயற்புவாயியம்புவாயே.

வசனம்

கேளுஞ் சக்கிரேஸ்வரா அந்தமதிதயன் மகளான சந்திரமதியின்பேரிலுமக்கு ஆசைவிளைந்தது நிஜமேயானால் சங்கையென்ன இருக்கிறது நீரவளை கலியாணஞ்செய்யத்தகும் உமக்கவளேசரி எங்களால் ஆகவேண்டிய காரியமேதாகிலு மிருக்குமேயானால் சீக்கிரமாகத் தெரியச்சொல்லு மகாராஜனே.

இராஜன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

சொல்லுமென்றுரைத்தீர்வேதச் சுருதிநூல்வலாகண்டோரே
முல்லைமென்னகையாளந்த முகிற்குழல்விளங்குமேனி
வல்லியென்றுதித்தசந்திர மதிதனைப்பெற்றோன்பால்நீர்,
ஒல்லையிற்சென்றெனக்கே வுயர்மணமுடிக்கச்செய்வீர்

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே நீங்களெனக்குச் சகாயப்படுகிறது மெய்யேயாகில் அந்தசந்திரமதியைப்பெற்ற மதிசயராஜனிடத்திற்குப்போய் எவ்விதமாயாவது உபாயதந்திரங்களைப்பேசி எனக்கவளைகலியாணஞ் செய்துகொடுக்கும்படி திட்டப்படுத்திக்கொண்டுவரவேண்டியதுதான் நீங்களெனக்கு செய்கிறசகாயம் சுவாமிகளே

பிராமணன்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

அவனியையாளவந்த வரிச்சந்திரபூபாகேளாய்
தவறிலாமதிதயன்றன் றவத்தினுதித்தமாதை
யெவர்களு மறியநாளை யெழில்மணம்புரியச்செய்வோம்
கவலைதீர்ந்திருப்பீர்நாங்கள் கடிகிப்போய்வருகுவோமே.

வசனம்.

கேளுஞ் சக்கிரேஸ்வரா அந்தமதிதய ராஜனுடைய குமாரத்தியானசந்திரமதியை நாளையதினமே உமக்கவளை மணமாலை சூட்டத்தக்கதாகச் செய்கிறோம் நீர் வியசனப்படவேண்டியதில்லை நாங்கள் சீக்கிரமாய்ப்போய் வருகிறோம் நாங்களிவ்வளவு பிரயாசைப்பட்டது உமக்கு அந்தவிசுவாசந் தெரியாமற் போகிறதா யெங்களுக்குஞ் செலவுகொடும் மகாராசனே.

இராஜன்-விருத்தம்- இ-ம்-மத்தியமாவதி.

ஒப்பேதுமில்லாவேத வுசிதவந்தணரேபோற்றி
முப்போதுஞ்ஸ்நாநசந்தி முடித்துயர்ந்தோரேபோற்றி
தப்பாதமனத்தில்ஞானத் தகையுடையோரேபோற்றி
எப்போது வருவீரென்றே யெதிர்பார்த்திங்கிருப்பேனுனே.

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே நீங்களெப்போது வருவீர்களென்றெதிர்பார்த்துக்கொண்டிருப்பேன் திரிகாலஞ்ஸ்நாநஜெபதபமுதலாகிய யாகாதிகிருத்தியங்கள் சகலவேத சாத்திரக் கிரமபண்டிதர்களாகிய சுவாமிகளே போய்வாருங்கள்.

பிராமணன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மகாராஜராஜராஜ பதிபதிஆசீர்வாதம்
சகாதிபத்தியங்களோங்குந் தூயனேஆசீர்வாதம்
நகாதவர்க்கடங்காதீர்க்க சார்த்தூலஆசீர்வாதம்
விகாதமில்லாமல்நாளை விவாகமும் முடியுந்தானே.

வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அநேக மங்களாவுசிதாலங்கிர்த சபாபிரசங்கருங்கசாரங்க அகளங்க ராஜராஜ மகாராஜனே ஆசீர்வாதம்.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

தரணிமேற்புண்ணியதீர்த்தந் தன்னிலேமூழ்கியன்பால்
விரதயாத்திரைகள்செய்யும் வேதியர்போனபின்பு
வரதவேள்கணையினாலுஞ் சுடர்மதியாலுந்தாவி
அரிதிற்பெய்தேக்கமாளு மரிச்சந்திரன்புலம்புகின்றானே.



வசனம்.

அகோதெப்படியென்றால் யாத்திரைப்பிராமணன் சந்திரமதியினுடைய அதிரூபலாவண்ய சௌந்தரியங்களையெல்லாம் அரிச்சந்திரமகாராசாவுக்குச்சொல்லி அவருக்கு அவளைக் கலியாணஞ்செய்து வைக்கிறதற்காக மதிதயராசனிடத்திற்குப் போனபின்பு இங்கே அரிச்சந்திரமகாராஜன் விரகவேதனையடைகிறவிதங்காண்க.

இராசன்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

காமவிடாய்தீர்க்க வாராயோ-எந்தன்
கருத்தைப்புருக்குமாசை தீராயோ
தாமசஞ் செய்யாதே தாவியனல்போல்சீறிச்
சந்திரனிதோ யிப்போதே தகிக்கிறானயமிகாரி (௧)

மாரன்கொலுவிருக்கு மதிலோரம்-நான்
வந்தங்காயாசந்தீர்வே னிந்நேரம்
ஆபாரக்குயில் செய்யுங் கோரங்-கண்டு
அலைகிறன்வேறிங் கென்ன வுபசாரம்
சேரவா வாராதோ ராநிற்பானேனெஞ்சஞ்
சேர்ந்துகூடப் போகாதோ சுழலுதிதென்னவஞ்சம் (௨)

சந்தனமும்பனிநீருஞ் சுடுமையோ-வேத
சாத்திரர்சொன்னசொல் லதுபொய்யோ
சிந்தைதனிலக்குடன் பதுமெய்யோ-யென்னைச்
சேர்ந்தணைப்பதுவுந்தன் மலர்க்கையோ
தூந்திரவார்த்தைசொல்லித் தள்ளிவிடுவாயோ
சந்ததம்விரகத்தாலேதவிக்கச்செய்திடுவாயோ (௩)

மதியன்பெற்றெடுத்த இளமாதே-இட்ட
வருவாய்நீயெங்கேனதிரா யிப்போதே
சதிசெய்வாயோவென்னமோ தெரியாதே-மோக
தாபமுன்னைவிட்டினிப் பிரியாதே
கதிநீயல்லதுவேறே கதியேதுவேகாலம்
மதிமயங்கிறேன்கண்ணேமருவுதற்கென்னசாலம் (௪)

இராஜன்-விருத்தம்-இ-ம்-கண்டா.

மன்னியவுலகையாளு மதிதயன்பெற்றெடுத்த
கன்னிநல்லமுதேயிப்பக் கருப்பினுமினியதேனே
உன்னழகதனைக்கேட்டே யுளந்தனைத்துநகினேனே
என்னைவந்தாளாயாளி யெப்படிசகிப்பேனே

வசனம்.

ஆகாஆகா அதிரூபவிசித்திரமுள்ள பெண்ணே கண்ணே காமரசமே மதிதயராசன்பெற்றெடுத்த அலங்கிருதாபிஷேகமே உன்னழகையாத்திரைவந்தபிராமணாள்சொன்ன நாள்முதல் நினைந்துநினைந்துருகி விரகாக்கினியினாலே வருத்தப்படுகிறேனே நீவந்தென்னைச்சேராதிருக்கத் தகுமா அரிகரி அரிகரி.

இராஜன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

தத்துறவொழிக்கச்செய்யும் தக்கநல்லறிவின்மிக்க
சத்தியகீர்த்தியென்னுஞ் சதிருள்ள மந்திரியேகேளாய்
முத்தினைப்பழிக்குமின்ப முறுவலன்னநகையாள்பவனை
மத்தகத்தனத்தாள்சந்திர மதிமுகமென்றுகாண்பேன்

வசனம்.

கேளும் என்புத்திக்கிசைந்த சத்தியகீர்த்தியென்னும் சுதந்திரியாகிய மந்திரிகேட்கக் கேட்கச்சிரவணானந்தமான வின்பரசவல்லியாகிய சந்திரமதியினுடைய அதிமோகரூப சௌந்தர ஜெகஜ்ஜல சோதிப்பிரகாசமுகபிம்பத்தை என்றைக்குக்காணப் போகிறேன்மந்திரி

இராசன்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

என்னால்சகிக்கவசமாயிருந்தமோகமென்னால்சகிக்கவசமா
மின்னற்கொடியிடை அன்னநடையெனும்
கன்னிச்சந்திரமதி கட்டழகியாலேநெஞ்சம்
கலங்கிப்பிரமைகொள்ளுஞ்சித்தமுமலைந்துசெயலழிந்திட்டபின் (
சித்தப்பமதனிதோ வருகிறான்-என்மேல்
சிறிச்சண்டைசெய்யவே திரிகிறான்
புத்தம்புதுமலர்க ளெரிகிறான்-எதோ
போர்க்களம்போல்மலர் புரிகிறான்
சற்றும்பயமில்லாமற்கையிற்கருப்புவில்லைத்
தாவிவளைக்கிறான் சாமாரிவிளைக்கிறான்
தளர்த்திப்படிவருத்தத்தோடுசார்ந்தைத்திட விடாத்திட்டபின்
மலர்க்கணையாலுளம் வாடுதே-அந்த
மாருதமனல்போலே சாடுதே
நிலைக்குமோமனதுதன் னாடுதே-இதோ
நெருங்கிக்குயில்கள்போ ராடுதே
சொலைச்சொலப்பிரமைகொண்டு துடிக்குதேயென்
தலைக்கேறியமோக தாடமீறுதே
தரிக்குந்தா-மடைக்கிப்படி-வருத்தும்பயல்பெருக்கிட்டபி



அவனுக்கார்சொல்வாரென் மோகத்தை சொன்னு
லணைந்திதிர்ப்பாளோ டென்தாகத்தை
கவலைச்சஞ்சலமாம்பிர வாகத்தை-நீங்கிக்
கலந்துஞ்சேர்வேனோ அவள்போகத்தை
தவறிலாத்தழல்போலச்சந்திரனுமுதிக்கிறான்
சிவசிவா விரகத்திற்சிக்கவேயொதிக்கிறான்
திசைத்தண்கட-லொலிக்கின்றது கருத்துஞ்சித-றிடக்கண்டபின் (எ

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வேதத்தின்சொல்லேயென்ன விளங்குமெய்வசனங்கொண்ட
போதத்தின்மிகுதிரிச்சங்கு புத்ரமேயினிநீர்கேளுஞ்
சீதச்சந்திரனும்வீசு தென்றலுஞ்சுடுவதேது
போதித்தமறையோர்சொல்லைப் பொய்மெய்யென்வாருகண்டீர்

வசனம்.

கேளும் ராஜசக்ரேஸ்வரா வேதவசனத்தைப்போலும் சத்தியத்தையும் ஞானத்தையுங்கலைகண்டநீரொன்றுந்தெரியாதவர்போலே யாத்திரைபோய்வருகிறபிராமணாள்வார்த்தையைக்கேட்டு இப்படியயங்கலாமா அந்த மதிதயராஜனுடைய குமாரத்தி சந்திரமதியென்னரூபமாயிருப்பாளென்று நீர் கண்ணினாலே கண்டீரா எதோ அந்தவேளை உம்முடையமுகதட்புக்காக வாயிலே வந்ததை சொல்லிக்கொண்டு போனார்கள் யாத்திரை வந்தபிராமணர்கள் அதுவுமுன்னபடியே நிச்சயப்பட்டால் நீர்கலியாணஞ்செய்துகொள்ளுகிறதற்குத் தடையுமுண்டா சும்மாயிவ்விணிலே சந்திரனாலேயும் தென்றலாலேயும் வருத்தப்படுகிறபேர்களுமுண்டா க்ஷமித்துவிடும் மகாராஜனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-பைரவி.

என்மனக்குறிப்பறிந்தே யிதமெடுத்துரைக்கவல்ல
தன்மையையுணர்ந்தமந்திரி சத்தியகீர்த்திநீர்சொல்
சொன்னதோர்மறையோர்வார்த்தை சூதாகவிருக்குமாகில்
என்னுயிரிருக்குமாசை விளையுமோவென்னசெய்வேன்

வசனம்.

கேளாய்எனதுமதிமந்திரியாகிய சத்தியகீர்த்தி இப்போது நீசொல்லுகிறதிலே அந்தபிராமணாள் சொன்னவார்த்தையெல்லாம் பொய்யாகவும் நானேதோ விரகப்படுகிறதாயுஞ் சொல்லவந்தாய் அது பொய்யாயிருக்குமேயாகில் மனதுக்கு மன்மதேசாட்சியென்கிறது பொய்யா அவளழகைக்கேட்ட ஆசையானது என்மனதையுருக்குதே நானென்னசெய்வேன் மந்திரி

மந்திரி விருத்தம்-இ-ம்-தோடி.

மனதுக்கு மனதே சாட்சி யென்பது மெய்யே வாய்ந்த
மனதிலெப்படியே சந்திரமதியை நீர் மணமே செய்வீர்
கனமறையவர்ப்போய் அந்தக் கன்னமாபுரியாள் மன்னன்
மனதறிந்து சேதி வருமட்டும் பொறுத்திடுமே

வசனம்.

கேளும் சக்கிரேஸ்வரா மனதுக்கு மனதே சாட்சி யென்பது சரியே அப்படியிருந்தாலும் அந்தக் கன்னமாபுரிக்குப்போய் மதிதய மகாராசாவினுடைய மனதையறிந்து அந்தப்பிராமணன் வருகிறவரைக்கும் நீர்பொறுத்துக்கொண்டிருக்கவேணும் மகாராசனே.

பொது சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

மந்திரி சொற்கேட்டு மயங்கியரிச்சந்திர வள்ளல்
சிந்தை தளர்ந்திருக்கவப்பால் செழுமறையோர் பேரனதொரு
கந்தமலர்ப்பொழில் சூழ் கன்னமாபுரி தனிலேயான்
அந்தமதிதயன் செய்கை யறியவுமே செய்வனே

வசனம்.

அங்கே தெப்படியென்றால் அயோத்தியாபுரியை யரசாட்சி செய்யாநின்ற இராசாதிராசனான அரிச்சந்திரமகாராசன் இவ்விதமாகச் சந்திரமதியினுடைய ரூபலாவண்ய சௌந்தரியங்களை யாத்திரைப் பிராமணன் சொல்லக்கேட்டு நாள்முதற்கொண்டு காமாந்தகாரனா யெண்ணியெண்ணி மெலிந்துகொண்டிருக்க வப்பால் கன்னமாபுரியைத் தேடிப்போன பிராமணன் கன்னமாபுரிக்கு வருமுன்னாக அங்கேயரசாட்சி செய்யாநின்ற மதிதயமகாராசன் பட்டணத்தில் நடக்கிற விதங்காண்க.

கட்டியக்காரன்-பொது-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

பட்டுடையிடையிற்சாற்றிப் பரிவுடன் கச்சைகட்டி
யெட்டுதிக்கெங்கும் போங்க விசைபெறு செங்கோல்வேந்தன்
வட்டவாருலகையாளு மதிதயராசனென்னும் பேரன்
கட்டளைப்படியே சொல்லுங் கட்டியக்காரனும் வந்தானே

வசனம்.

அங்கே தெப்படியென்றால் கன்னமாபுரியையாளும் மதிதய மகாராசாவினுடைய வாசல் காக்குங் கட்டியக்காரன் வருகிறவிதங் காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

வந்தான்கட்டியக்காரன் மகிமைதங்கோர் பெருமை மதிதயராசன்வாசல் நேர்மை பெருமையைசெய் (வந்தா)



செந்தாமரைமகள்வாசஞ்செய்யநிலவுக்கிணையானபதவீரர்ச்சர்க்குண
மாரவிற்பனசூரியர்திகழ்வீரன் மதிதய மதிவருகிற சதிமிகுமிகுண
மைபதனிலுலாவிரசைகளேயெனவிச்சா (வந்தான்)

பின்னும் பொற்சருவாலேபுனைந்து கவிபுகி முகத்திலிலங்கத்
முன்னுஞ்சாய்ப்பனிவாகுவலயத்துடன் கரிலயொரு கைவிளங்க
மன்னுமிடையிற்கச்சைவரிந்து மீசைமுறுக்கி
நரவாசபைதனிலரசர்களையுறுக்கி
மருவலருளமதுபொடிபட்டுவிடதொனி
விரிதரவொலிதிரை விதானமெனனதனி
விரிப்புனைந்த மீறிக்கசட்டா
சிறந்தவைபுகழ் கூடிச்சபைதனில் (வந்தான்)

வசனம்.

பேசாதிருங்கள் பேசாதிருங்கள் சபையார்களே கன்னமாபுரியையரசாட்சி செய்யாநின்ற மதிதயமகாராசன் வருகிறார் எச்சரிக்கை எச்சரிக்கை.

பொது விருத்தம்-இ-ம்-தோடி.

விதிமுறைதவறாநீதி விளங்குகன்னோர் சீராட்டனைத்
துதிபெறவொரு குடைக்கீழ் அபயமுடனேயாளும்
சதுரனாய மந்திரிமார்கள் தரும்படை சூழ்வதாக
மதிதயராசதீரன் மணிகொலுவருகின்றானே

வசனம்.

அங்கே தெப்படியென்றால் கன்னமாபுரியையரசாட்சிசெய்யாநின்ற மதிதயராசன் கொலுவுக்கு வருகிறவிதங்காண்க.

மதிதயராசன் வருகிற-தரு-இ-ம்-பத்துவராளி-ஆதிதாளம்.

மதிதயராசன்வந்தான் வளமிகு முகஸின்னி லுளபல மகிபர்கள்
வரிசையுடனே துதி
பதிகுல வதிபதி (மதிதய)
எதிரும் மோவிலம்பினை மிந்த வுலகிலெல்லாத்
துதிவா சர்க்கப்புகழ்
கயசெயமுடன் மகிழ் (மதிதய)
வெற்றிவெண்குடை பிடிக்க அரசரெல்லாம்
விருதுகட்டியம் படிக்க
சிற்றிடைமாதர் நடிக்க நடுநடுங்கித்
தினசத்துருபகைவர் துடிக்கச்
சுற்றுமிடைவிடாமல் மந்திரிமார்கள் சூழத்

தழைத்தவுலகமெங்குந் தர்மமிகுத்துவாழச்
சதாதங்கியவெண்சாமரை போட்டத்
தவமுனிவர்களிவன்புகழ் கொண்டாட
மதனனிவனவடிவைக்கண் டுளம்வாட
வருசுரர்வனிதையர்மயல் கொண்டுநாட
வலைகடலொளிமயனமணிமுரசதிர்தர
ஒளிதிகழ்நவமணிக்கடகரன் (மதிதய)

மதிதயராசன் கடவுள்வணக்கம்.

விருத்தம் - இ - ம் - மத்தியமாவதி

அகிலமீதறம்விளங்க வருமறைவிளங்கவோங்க
வகைபெறவுலகமெங்கும் மாதமும்மாரிபெய்யத்
தொகைபெறுமுயிர்கள்வாழத் துய்யசெங்கோல்தழைக்கத்
தருபஞ்சாயுதமாமாயன் றுமனைச்சரணம்போற்றி

முதல்மந்திரி-போற்றி-கவி-இ-ம்-ஆனந்தபைரவி.

உலகாளரசர்புகழ்வேந்தே போதுர்புகழ்சேர்மதிகுலத்திற்
கிலைவேலெனவேவந்துதித்த தீரவீரபராக்கிரமனே
விலகாதெதிர்க்குந்தரியலரை வெல்லும்வலியபுயத்தோனே
நலமுறெங்கள்மதிதயமா நராதிபதிநின்றுள்போற்றி

இரண்டாவதுமந்திரி-போற்றி கவி-இ-ம்-சாவேரி.

தீரர்கள்தீரபோற்றிச் செப்புநற்புகழ்கொண்ட
வீரரில்வீரபோற்றி விளங்குநன்னீதியோங்கும்
கார்திகழ் மதிகளோங்குங் கன்னமாபுரியையாளும்
மாரவேளெனவுதித்த மதிதயதீரபோற்றி

கட்டியக்காரன்-போற்றி-கவி-இ-ம்-சாவேரி.

அதட்டிவெவ்புலியெனக்கு முறுமல்லோசையுட னமர்வென்ற வீராபோற்றி, வுதட்டியாயெதிர்வரக்கண்டஞ்சு மன்னர்களைபுகந்தாளவல்லாய்போற்றி, மதிட்சுருநிலைச்சிகரப்பொன்மேடைசூழ் கன்னமாபுரிக்கரசேபோற்றி; பதட்டமாய்நல்லோர்கள் புகழைப்பழிக்கின்ற பகைவர் சிங்கமே போற்றி

மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

என்னருமந்திரிமாரே யான்செய்ததவத்தால்வந்த
கன்னிச்சந்திரமதிக்குக் கதித்தவெவ்வனந்தான்வாய்த்தும்
இன்னமும்விவாகமில்லா திருப்பது தருமந்தானோ
என்னவாறுமேரீச ரெப்படிநடத்துவாரோ



வசனம்.

கேளும் எனதருமையான மந்திரிமார்களே நான்பரமசிவனை நோக்கித் தவஞ்செய்துபெற்ற என்மகளாகியசந்திரமதிக் கெவ்வனகாலம் வந்தும் இன்னம் விவாகமில்லாதிருப்பது தருமமா ஈஸ்வரரெத்தன மெப்படிமுடியுமோ தெரியாதே என்னசெய்வேன் மந்திரிமார்களே.

மந்திரி-விருத்தம்-இ-ம்-சாவேரி

புவிபுகழ் மதிகுலத்திற் புனிதமாய்வந்துதித்த
தவநிறையரசர்கோமே தழைக்கநீபெற்றபுத்ரி
எவ்வனகாலங்கண்டா ளெழில்மணஞ்சாருமென்றும்
கவலைகொண்டிருகலாமோ கடுகியேமுடியுமையா.

வசனம்.

கேளும் மகாராசனே நீர்தவஞ்செய்துபெற்ற வுத்தமிகோஷ்டபுத்திரியாகிய சந்திரமதிக் கின்னங்கலியாணமாகவில்லையென்றும் எவ்வனகாலமான பக்குவவதியானாளென்றும் விசனப்படலாமா நீர்நினைந்தால் கலியாணமுடிப்பிக்கிறதற்கு தடையுமுண்டா மகாராசனே.

மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மந்திரிநீதான்சொன்னவார்த்தைக்கே மகிழ்ச்சியானேன்
விந்தையொன்றுண்டுகேளென் மிகநவபுத்திரிக்கேற்ற
சுந்தரபுருஷன்வேணும் சுத்திரம் வினையொன்றுண்டு
அந்தசங்கடத்துக்கல்லோ வலைகின்றேனென்ன செய்வேன்

வசனம்.

கேளும் மதிமந்திரி எனதருமைப்புத்திரியாகிய சந்திரமதிக்குத்திருக்கலியாணஞ்செய்யவேணுமேயானால் அவளழகுக்குத்தகுமான சுந்தரமுள்ளபுருஷன் வந்துலபிக்கவேணுமல்லவா ஒருவேளை லபித்தாலும் ஈஸ்வரனெனக்குச்சொல்லியிருக்கிற சங்கையென்றுண்டு அந்தச்சங்கடத்தினாலல்லவா கலியாணமாகிறதற்குத் தடையாயிருக்குது நானென்னசெய்வேன் மந்திரி.

மந்திரி-விருத்தம்-இ-ம்-கலியாணி.

சங்கைபுந்திருநீர்செய் தவத்தினால்வந்துதித்த
மங்கைக்குவிவாகமாகு மகிழ்ச்சியுடையீர்பொங்கு
கங்கையைச்சடையில்வைத்த கடவுளன்னருளினாலே
சங்கடமொழியுமுள்ளந் தயங்காதிருந்திடீரோ

வசனம்.

கேளும் மகாராசனே நீர்நினைத்திருக்கிற சங்கையந்தீரவே

போகுது நீர்செய்த தவத்துக்கிரங்கி யனுக்கிரகஞ்செய்த பரமசிவனுடைய கிருபையினாலே யும்முடைய மனைவியாகுமலமொழியத் தக்கதாக நம்முடைய சந்திரமதியம்மனுக்குத்திருக்கலியாணமும் நிறைவேறப்போகுது சஞ்சலப்படாதேயிரும் மகாராஜனே

பொது-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டிரம்.

மதிதயராஜனிந்தவகை மனதினிலெண்ணி
மதிமந்திரியுடனேசொல்லி மனத்துயராற்றுநாளில்
புதியபொன்மதிலையேந்திப் புரவலன்றனக்குத்தூதாய்
அதிசயமுடனேசொல்லும் யாத்திரைவேதியர்வந்தாரே

வசனம்.

அகோசெப்படியென்றால் இவ்விதமாக மதிதயராசனானவர் தமது குமாரத்தியாகிய சந்திரமதிக்குத் திருக்கலியாணமாகவில்லையென்று மந்திரிகளுடனே விசனப்பட்டுக்கொண்டிருக்கிற தருணத்தில் முன்யாத்திரைபோன பிராமணாள் அரிச்சந்திரமகாராசனுக்குச் சந்திரமதியைத் திருக்கலியாணம் பண்ணிவைக்கத் தக்கதாகக் கன்னமாபுரியையநாடி பிராமணாள் வருகிறவிதங்காண்க.

கன்னமாபுரிக்குப்பிராமணாள்வருகிற-தரு

இ-ட்-சௌராஷ்டிரம்- தாளம்-ஆதி.

தியானப்பிரமானந்த கோவிந்த கோவிந்த
சிதானந்தவைகுந்த முகுந்த
மோகனுதியர் துதி முக்கியபவபுரி
ஞானகுண நிதி சக்கரதாரி (தியா
கங்கையில்மூழ்கிக்காசியைக் கண்டோம்
கதிதருதிருப்பதிதலம்வலம் வந்தோம்
துங்கபத்திரிகோதாவரி முதலாம்
காவிரிநதியில்மூழ்கி வந்தோம்வந்தோம் (தியா
சந்தியாவந்தனஜெபதப ஹோமம்
தப்பாமலேநடத்தி தரித்தோம்சிரேஷ்ட நாமம்
சந்திராதித்தரையுமர்ச்சிசெய்வோம்மந்திர நேமம்
தயங்காமலேநிலத்துத் தரித்தோம் குங்குமம் (தியா
யாகாதிகள்செய்யுந்திராணியெங்களுக் குண்டு
யாவருந்தொழுநாராயணனருள் கொண்டு
வாகாகவேபண்டிப்பழக்கொழித்தது முண்டு
மண்டலந்தனிலேயயக்கியங்கிக் கொண்டு (தியா

மதிதயராசன்-போற்றி-விருத்தம்-இ-ர்-கம்போதி.

உரைக்கின்றவேதநான்கு மோதவல்லவரேபோற்றி
தரிக்கின்றநித்தியபூதி நங்குமர்த்தனரேபோற்றி



பெருக்குமெய்ப்புகழ்சேரியாகப் பெருமைகண்டவரேபோற்றி
திருத்தமாம்புராணசாஸ்திர சீலரேபோற்றிபோற்றி

பிராமணாள்- விருத்தம்-இ-ம்-மோகனம்.

தரணியையாளவல்லதாஷ்டிகா ஆசீர்வாதம்
தருமநன்னெறிகடேர்ந்த தவத்தோனே ஆசீர்வாதம்
பொருவிலாத்திறஞ்சேர்வெற்றிபுஜபலா ஆசீர்வாதம்
அருமறையோர்க்குத்தான மளிப்போனே ஆசீர்வாதம்

பிராமணாள்-வசனம்.

சிரஞ்சீவி சிரஞ்சீவி சுகீபவா சுகீபவா மதிதயமகாராசனே ஆசீர்வாதம்.

இராசன்-வசனம்.

வாரும் வாரும் சுவாமிகளே இந்ததிவ்விய ஆசனத்தில் எழுந்தருளியிருங்கள் சுவாமிகளே.

மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்னருங்குலத்தோரெல்லா மிசையுநற்கதியிற்சேர
நன்னயமிகுந்தகால நான்செய்ததவத்தாலுங்கள்
பொன்னடிகாணப்பெற்றேன் புனிதநற்றவங்கள்யாதோ
என்னகாரியமாய்வந்த திவடத்துக்கியம்புவீரே

வசனம்.

சொல்லுங்கள் சுவாமிகளே எங்கள் வமிசத்தாரெல்லாரு நற்கதியைச்சேரத் தக்கதாக நல்லகாலம்வந்து நேரிட்டதாகையால் தங்கள் தரிசனமெனக்கு கிடைக்கலாச்சுது தங்களிருப்பிடமெதுவோ இவிடம்வந்தகாரியமென்னமோ தெரியச்சொல்லவேணும் சுவாமிகளே,

பிராமணாள்-விருத்தம்-இ-ம்-அடாணா.

அரியநன்னீதிதேர்ந்த வரசர்களேறேஞான
வரமுறைநெறிகளோங்கு மன்னவர்மன்னனேகேளாய்
இருநிலமீதுகாசியெழிற் கன்னியாகுமரிதொட்டு
பொருநதியாடியாத்திரை புகுந்திங்கேவந்தோம்யாங்கள்

வசனம்.

கேளுங்கள் ராசராசனான மதிதயமகாராசனே நாங்கள்தீர்த்த யாத்திரையாய்போய் காசிமுதல் கன்னியாகுமரிவரைக்குமுள்ள ஸ்தலங்களையெல்லாம் தரிசித்துக்கொண்டு வருகிறவழியாகையால்உம்மையுங் கண்டுபோகவந்தோம் மகாராசனே,

மதிதயராசன்- விருத்தம்-இ-ம்- தன்னியாசி.

வந்ததென்பாக்கியஞ்செய்த வல்வினையொழிந்ததேநீங்கள்
செந்தளிர்பாதநோக இவ்வியாத்திரைகளெல்லாம்
விந்தையாய்கண்டவாறு மிகமகிழ்வாகச்சென்றே
எந்தெந்ததிகள்கண்டீர் யாததிசயங்கள்சொல்வீர்

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே உங்களுடைய தரிசனங்கண்டமாத்திரத்திலே நான்சென்மசாபல்யமானேன் உங்கள் திருவடிவருந்தத் தக்கதாக எந்தெந்த ஸ்தலங்களைப் போய்க்கண்டீர்களோ எந்தெந்தநதிகளில் ஸ்நானஞ்செய்தீர்களோ அங்கங்கேயுள்ள அதிசயங்களை யெனக்குத் தெரியச் சொல்லவேண்டுஞ் சுவாமிகளே.

பிராமணாள்-தரு இ-ம்-நாதநாமக்கிரியை-அடதாளம்.

சொல்லுவோங்கேளீர் அதிசயங்கள்
சொல்லுவோங்கேளீர்
வல்லவிவ்வுலகத்தில்மகிமையிலகிய
வளருந்தல-முழுதும்பல-நதியுங்கண்டேமிதுகொண்டதைச் (சொல்

கங்கையமுனைசரஸ்வதிகாளிந்தியுங்
கருதுந்துங்கபத்திரிகோதாவிரியென்னும்
பொங்குகிருஷ்ணைதீரஞ் சரயுசோணநதி
புநிததீர்த்தங்களாடியதன்பின்னும்
பங்கயநிறைவேகவதிப்பிரமநதியென்னும்
பலநன்னதி-தனிலும்விரி-கமலசிந்துவிலிலைகண்டதைச் (சொல்)

பேசுமல்லிகார்ச்சுனங் காசிவளநதி
பேதமில்லாச்செகந்நாதம்பிருந்தாவனம்
மாசிலாவேங்கடங்காளத்திரிகாஞ்சியும்
வளருங்காவிரிமத்யவாசர்வாழ்தலமும்
வீசுர்புகழ்மதுரையழகர்சோலைமலை
விளங்குஞ்சிவ-தலங்கள்திரு-விளங்கும்அரிதலங்கள்முதல் (சொல்

பாபநாசாகத்திசாடிபாவிப்
பகரும்பூமியிலுள்ள மகிமைப்பதிகளுடன்
ஆவல்மிகுமயோத்தி யரிச்சந்திரமகாராசன்
அழகுஞ்சத்தியதர்ம மதிகபராக்கிரம
மேவுமவனைக்கண்டோம்விளங்குமகளுக்கென்று
விரியுந்தட-வரையுஞ்சுடு-சரமுங்கடந்-திவண்வந்தனம் (சொல்)



மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இயம்பியவேதநாலு மெண்ணருங்கலைகளாறும்
நயம்பெறவோதிகண்ட நற்றவத்தோரேகேளீர்
நயனுறுமென்மகட்குப் பதிகிடைத்திட்டானென்ற
வயனமுழுதும்பார்த்த வகையெலாந்தெரியச்சொல்வீர்

வசனம்.

கேளுங்கள் சகலசாஸ்திர பண்டிதர்களாகிய சுவாமிகளே என தருமையாகிய மகள் சந்திரமதிக்குத் தகுமானபுருஷன் கிடைத்தானென்று சொன்னீர்களே அந்தப்புருஷனுமோ அவரிருக்கிறஸ்தலமெதுவோ அவர்பெயரென்னமோ அவனென்மகளுக்குப்புருஷனாவானென்கிறதெப்படிநிச்சயித்தீர்களோ அந்தவயணமெல்லாம் சொல்லவேண்டும் சுவாமிகளே.

பிராமணாள்-விருத்தம்-இ-ம்-சுருட்டி.

தாவியவுலகையாளும் தகைமதிதயமன்னாகேள்
தேவர்கள்மகிழுங்கீர்த்தித் திடம்மகத்துவங்கள்வாய்த்தே
மேவியபுகழயோத்தி விறல்திருச்சங்குமைந்தன்
பூவைச்சந்திரமதிக்கே பொருந்தியகணவனாவான்

வசனம்.

கேளும் மகாராசனே அயோத்தியாபுரியையரசாட்சிசெய்யாநின்ற சூரியவம்சாதிபதியாகிய திரிச்சங்குமகாராசாவினுடைய புத்திரனான சத்தியவாசகனாகிய அரிச்சந்திரமகாராசா அவன்பெயர் அவனுதெய்வபத்தியினாலும் அழகினாலுந் தர்மத்தினாலும் பராக்கிரமத்தினாலுந் தனக்கொருவரு நிகரில்லாதவன் அப்படிப்பட்ட அரிச்சந்திரமகாராசனே உன்மகள் சந்திரமதிக்குப் புருஷனாக வேண்டும் அதற்குச்சந்தேகமில்லை மதிதயமகாராசனே.

மதிதயன் -விருத்தம்-இ-ம்-பியாகடை.

சூரியகுலத்தானென்றுந் துதிபெறுபராக்கிரமத்தின்
பாரணிலழகனென்றும் வல்லிசந்திரமதிக்கே
தாரணிவிவாகஞ்செய்யத் தகுமென்றேயுரைக்கவந்தீர்
பார்வதிபாகன்சொன்ன பயனுரைத்திடவல்லாரே

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே அந்த அரிச்சந்திரமகாராசன் சூரியவம்சத்தானென்றும் அதிகபுஜபலபராக்கிரமமுள்ள கீர்த்திசாலியென்றும் அவரே யென்மகளுக்குமாலைசூட்டி விவாகஞ்செய்யத்த

க்க புருஷனென்றுஞ் சொல்ல வந்தீர்கள் மெய்யே ஆதியிலேயே ஈசனாலே சொல்லப்பட்டிருக்கிற ஒருதேவரகசியமுண்டு அதைத் தெரிந்து சொல்லவல்லவனே சொன்னாலல்லவோ என்மகளுக்குப் புருஷனாவான் சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

சகப்புகழ் மதியமைச்சா சிராத்தம் பரசிவனார்சொன்ன
மகிமைப்புராணைக்கவல்லோன் மகிழ்சந்திரமதியாமுந்தன்
மகளைப் விவாகஞ்செய்ய மணவாளனவனேயாவன்
அகமகிழ்சுயம்வரஞ்செய் தரசனைவரச்செய்வாயே.

வசனம்.

கேளும் மதியமகாராசனே அந்த அரிச்சந்திர மகாராசனே உன்மகள் சந்திரமதிக்குப் புருஷனாகிறதற்குச் சந்தேகமில்லை பரமசிவனாலே சொல்லியிருக்கப்பட்ட தேவரகசியத்தையுஞ் சொல்லுவான் உன்மகள் சந்திரமதி யவனுக்கே பாரியாவாள் ஆகையால் சுயம்வரஞ் சூட்டிவைத்தைம்பத்தாறு தேசத்திராசாக்களையும் வரவழைத்தால் அதிலே அரிச்சந்திரமகாராசாவும் வருவார் அதற்குச் சந்தேகமில்லை மகாராசனே.

மதிய ராசன்-விருத்தம்-இ-ம்-அடாணா.

உத்தமமறையோரே நீருரைத்தசொற்படியேசெய்வேன்
மெய்த்தவப்புத்திரியான மெல்லிசந்திரமதிக்கே
சத்தியவரிச்சந்த்ரேந்திர சக்ரேசன்புருஷனாக
எத்தனஞ்செய்தேயெந்தனெண்ணமீடேறச்செய்வீர்

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே என்னருமைமகளாகிய சந்திரமதிக்குச்சக்ரேஸ்வரனான அரிச்சந்திரமகாராசன் புருஷனாகத்தக்கதாகப் பிரயத்தனஞ் செய்வீர்களானால் அதைமுழுதும்நிறைவேறும்படியநுக்கிரகஞ் செய்யவேணுஞ் சுவாமிகளே.

பிராமணர்-விருத்தம்-இ-ம்-சுருட்டி.

புகழ்ம்புரக்கவந்த புண்ணியமதியவேந்திரா
மீதாரருளினாலுன் சித்தத்தின்படியேயாகும்
அரிச்சந்திரன்சிந்தை புருகமகிழப்பிவைப்போம்
நீதனமேதராங்கள் நிலைக்குப்போய்வருகுவோமே

வசனம்.

கேளும்மகாராசனே ஸ்ரீமந்நாராயணருடைய அநுக்கிரகத்தினாலே நீர்நினைத்தபடியே கைகூடிவரும் நீர்வியாகுலப்படவேண்டியதில்லை அந்த அரிச்சந்திர மகாராசாவுக்கு உன்மகளாகிய சந்திரமதியின்பேரில் அதிமோகமுண்டாகும் விளையத்தக்கதாக வேண்டிய



பக்குவங்களைச்செய்து உம்மிடத்திற்கேயனுப்பிவிடுகிறோம் அதற்குமுன்னமேவருகிறோம் வேண்டியசாக்கிரதைசெய்துகொள்ளும் மதியமகாராசனே நாங்கள்போய்வருகிறோம்.

இராசன் வசனம்.

அப்படியேபோய் வாருங்கள்சுவாமிகளே.

பிராமணர்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பூப்பிரதட்சணையாத்திரைசெய்யப்போவோர்வாரும் ஓர்
மாப்பிள்ளையைய்க்கரோதல்லவரதலெங்கடசாஸ்திரிகளே (பூப்)

பேய்ப்பிள்ளாய்கப்பாசாஸ்திரிநீ பேசாமல்வாடா
ஆப்பிட்டதைசுருட்டிக்கொண்டாய் நீயதிற்பாதிதாடா (பூப்)

சுண்டிப்பயலே சேஷாசாஸ்திரி சத்தியவானோடா
மண்டலீகனரிச்சந்திரன் தந்தவஸ்திரத்திற்பாதிதாடா (பூப்)

ஒற்றைக்கண்ணுள்ளகுப்பாசாஸ்திரி யோடிநீர்வாரும்
உப்பட்டுசோமாசிபட்டரேநீருமோடியேவாரும் (பூப்)

தோடி விருத்தம்-இ-ம்-தோடி.

மதியனிடத்தில்வந்த மறையவர்போனபின்பு
அதிபெறு மவர்சபைக்கு சூட்சியாய்க்கேட்டிருந்த
மதுரவாய்த்தோழியோடி மங்கைசந்திரமதிக்கவ்
விதமெலாஞ்சொல்வேனென்று மிகமகிழ்வுடன்வந்தாளே

வசனம்.

அதோதெப்படியென்றால் மதியராசனிடத்திற்கு வந்திருந்த யாத்திரைப்பிராமணர்போனபின்பு அந்தச்சபையிலேநடந்த விருத்தாந்தங்களெல்லாமறைவாகக்கேட்டுக்கொண்டிருந்தசந்திரமதியினுடையதோழியானவளதையெல்லாஞ் சந்திரமதிக்குத்தெரியப்படுத்தவேண்டுமென்றுசவுந்தரவதிவருகிறவிதங்காண்க

தோழி-சௌந்தரவதி-தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

சரசகுதிதசுபரூபமிலகிய குணசௌந்தரவதிவந்தாள்
பரிமளமிகுநறைவிரிமுகமலர்நிறை
கொண்டொடிசந்திரவதியாங்கியெனவிளங்கும் (சரச)

சேலைமுந்தானியிலிட்டச்சரிகைவர்ணஞ்சிங்காரமதுதன்னைமாலைக்குழலிலங்க மஞ்சள்முகத்தில்மின்னவளையல்கலகலென்ன

ஆலித்தெழுந்துநல்ல-அதிசயமதுசொல்ல
வாலைப்பருவம்நல்ல-மங்கைக்குவந்துமெல்ல
மதிபதிசபைதனில் மறையவர்சொல்லிக்கொண்ட
வகைதனிலிவட்கவன்மணவாளனென்றுகண்ட (சரச)

தோழி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மெல்லியர்க்கரசியாக விளங்குமாமயிலேபோற்றி
வல்லதோர்மதிதயந்திரன் மகளெனவுதித்தாய்போற்றி
சொல்லியதேவர்மாதர் துதித்திடுமழகுவாய்ந்த
மல்லற்பூங்குழலச்சந்திர வதியெனுந்தாயேபோற்றி

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சாவேரி.

நினைக்குமென்மனதிற்கேற்ற நிலைதெரிந்துரைக்கவல்ல
தனந்தழகுடையநல்ல சவுந்தரவதிநீவாழி
எனைத்தனியாகவிட்டே யெங்குபோய்வந்தாயுந்தன்
மனக்குறையேதோசொல்வாய் மற்றொன்றும்பயப்படாதே

வசனம்.

வாழிவாழிசௌந்தரவதியே இங்குண்டாகிய தோழிமார்களிலே யென்மனதிற்குகந்த தோழியென்றே உன்னைநான்நினைந்திருக்க நீ என்னைத்தனியேவிட்டு எங்கேபோனாய் உன்மனக்குறையேதோ தெரியச்சொல்லடி சௌந்தரவதி

தோழி-விருத்தம்-இ-ம்-தோடி.

அன்னையேகேளாயுந்த னழகுக்குணத்திற்கேற்ற
மன்னவர்மன்னன்வந்து மணமாலைசூட்டுங்காலம்
தன்னிச்சையாகவந்து தனக்குத்தானேவாய்த்த
தன்னயமறிந்தேசொல்ல நானிங்கேயோடிவந்தேன்

வசனம்.

கேளம்மா சந்திரமதித்தாயே உன்ரூபலாவண்ய சௌந்தரியத்திற்கும் உனதுகுணத்திற்கும் தகுமான புருஷனாகிய இராசாதிராசன்வந்து மணமாலைசூட்டுங்காலம் வந்துலபித்ததென்கிற சந்தோஷத்தை எண்ணியெண்ணி யடங்காதமகிழ்ச்சிகொண்டு உனக்குத்தெரியப்படுத்தவேண்டுமென்று ஓடிவந்தேன்தாயே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்னடியம்மாதோழி யெனக்கொருநல்லகாலம்
தன்னிலேவருமோதெய்வந் தனக்குமேதயையுண்டாச்சோ
பொன்னலர்மேனியாயென் பொங்கியபருவமெல்லாம்
இன்னிலமாதர்போலு மென்னநான்பலன்கண்டேனே

வசனம்.

ஆகா ஆகா கேளாயென்பிராணபதயான சகியேயெனக்குமோருநல்லகாலமும்வருமா அந்தபாபிஷ்டி தெய்வத்திற்குமென்பேரிலே தயவுமுண்டாகுமா இவ்வுலகிலுண்டாகியஸ்திரீ சாதிகளைப்போல சென்மமெடுத்ததற்குண்டாகிய சுகங்களை யநுபவிப்பேனோ என்னுடைய வெவ்வளவுகாலமெல்லாம் வீணில்கழிக்கும்படியாகிய என்மனதிற்குசம்பிரமான சேதிகளேதாகிலுமுண்டானால் தெரியச்சொல்லடி சகியே.

தோழி சவுந்தரவல்லி-அகவல்-இ-ம்-எதுகுலகாம்போதி

சொல்லுகேனின்கேளாய் தோகையர்க்கரசே
வல்லவுன்பிதாவும் வளமிகுகொலுவில்
மந்திரிமார்கள் மருங்கிலிருந்தே
தந்திரமுரைக்கத் தகுங்கொலுவிருந்தார்
அந்தவேளையிலே யாத்திரைபோன
மந்திரவேதியர்கள் வந்தாகண்டார்கள்
கண்டவர்தம்மைக் கடுகியேபணிந்தே
அண்டர்களுமதிக்குமாமறைவேதியரே
எங்கிருந்திங்கே வந்தனிரென்றார்
கங்கைதொட்டுலகில் கனநதியோடி
உலகினிலுள்ள வும்பர்கள்பரவும்
தலமெலாங்கண்டோஞ் சதிருடனென்றார்
கண்டனமென்றீர் கதித்தநற்றலங்கள்
கண்டதிலதிசயஞ் சொல்லுவீரென்றார்
அம்மொழிகேட்ட அருமறையோருஞ்
செம்மைசேரயோத்தித் திருச்சக்குமைந்தன்
நலமிகுராஜ ராஜதன்னித
விலகியகீர்த்தி யேருலகெங்கும்
நிறைதருபுஜபல நிபுணகெம்பீரன்
அறைதருகதிர்குலத் தரிச்சந்திரதீரன்
வடிவழகதுகண் டகமகிழ்ந்துவந்தோம்
படிமிசையுன்மகள் பருவத்திலிருந்த
சரசவுல்லாசச் சந்திரமதிதன்
சரசசல்லாப சுந்தரமிகுந்த
பொற்கொடிதனக்கவன் புருஷனேயாவன்
மைப்பொருபுயத்தின் மதிபதியென்றார்
அவ்வுரைகேட்ட அரசனுமகிழ்ந்தே
யெவ்வகையென்மகட் கிசைந்தோர்கணவன்
அவனெனவுரைத்தீர் ராசன்றந்தவாத்தின்
கவலைதீர்ப்பாரோ கருத்தறிவாரோ
எப்படிமுடியு மென்றுரைத்திடவே
தப்பிதமிவராது சட்டமாய்முடியும்

சுயவரஞ்செய்யென்று சொல்லியேமறையோர்
தயமிகுமயோத்தி நாடியேயந்த
அரிச்சந்திரற்குன் னழகெலாமுரைத்தே
வரச்செய்வோமென்று மகிழ்வுடன்போனார்

சந்திரமதி-விருத்தம்-இ-ட-தோடி.

சுகுணநற்பாங்கியேநீ சொன்னதேசிமன்னன்மன்னன்
மகிழ்நுவானென்றோதி மறையவர்போனரென்றாய்
தகைபெறுசீரர்ந்தி சவுந்தர்யபராக்கிரமங்கள்
மகிமையெவ்வாறுள்ளாரோ மனக்குறைதீரச்சொல்வாய்

வசனம்.

கேளடியெனதன்புக் கிசைந்தசகியே அந்தமகாராசன் எனக்குப் புருஷனுவாரென்று யாத்திரைபோன பிராமணர்கள் சொல்லிப்போனார்களென்று சொல்லவந்தாய் அந்தமகாராசன் அழகெப்படிப்பட்டதோ அவர்பராக்கிரமமெப்படிப்பட்டதோ அவர்மகிமையெப்படிப்பட்டதோ என்மனக்குறை நீரத்தக்கதாகத் தெரியச்சொல்லடி சகியே.

தோழி-சவுந்தரவதி-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

அந்தமகாராஜன் வடிவழகினைச்சொல்ல ஆரால்முடியுமம்மா
அறிந்துசொல்ல                 எவரால்முடியுமம்மா
சுந்தரக்கதிர்குல தோன்றலயோத்திவளர்
சுகநிதி அரிச்சந்திர மகிபதியாகிய              (அந்த)

சதகோடிசந்திரபிம்பமென்றுனுமவர்முகத்
தனுக்கிணைச்சொல்லக்            கூடுமோ-தாமரை
தழைந்குங்கருணரச விழிக்குச்செந்தாமரை
தன்னையொப்பிடவெண்ணம்            தாடுமோ
மதுரவசனக்கனிவாயிற்புன்சிரிப்பந்த
வானமின்னலைக்கண்டு            வாடுமோ-இரண்டு
மலையெனத்திரண்டுயர் புயவழகைக்கண்டோர்க்கு
மற்றோரின்பங்களைத்            தேடுமோ
புதுமணிவைத்திழைத்த கிரீடப்புஜ            கிரீடு
பூட்டுங்குண்டலங்களைக்கண்டோனும்            பிரீதி
கதியென்றடுத்தவர்க்காக்குமொரு            சமான
கனககாத்திரசற்கற்பகவிலாச            ரூண            (அந்த)
மாறுக்கிணையெனலாமார்பின்விலாசமதில்
பதித்தநவரத்தினஆரமும்            நீன்டு



பளபளெனவொளிமின்னுமலங்கிர்த
பருமணிமுத்தணிசிங்            காரமும்-நல்ல
பாரமலைமேல்வரும்பொன்னருவியைப்போலும்
பஞ்சின்முப்புரிநூலலங்            காரமும்-இந்த
பார்முதலுலகெலாமுண்ட திருநெடுமால்
பாசபவயிறுஞ்சுகச            சீரமும்-அஷ்ட
திரமதகஜங்கள் துதிக்கைபோல்நீண்ட            கையுந்
செப்புஞ்சிரவணம்போலேசுத்தமாயுவர்த்து            மெய்யுந்
சிறுநுமனுவிக்கியானநெறிகள்            பெய்யுந்
சீலநெறியாலிந்தசாலபுவன            முய்யும்(அந்த)
கட்டியவீரகண்டாமணிதாங்கிய
கருதும்பாதாம்புயக்கிரு            பாலனும்-வரும்
காமனுடனையந்தாகியுந் துதிபரவும்
காமசையோகசாஸ்திர            லோலனும்-மிகு
மட்டில்லாநிலநிறைதனதாரதாரனும்
வயங்குப்பிரதாபபுத்ர            சீலனும்-நல்ல
மனுவிக்கியானேஸ்வரமுதலாய்விளங்குந்தர்மம்
வளரவந்துதித்தவி            சாலனும்-மேலும்
வெட்டியபவவினையொழிக்குஞ்சாமர்த்திய            தீரன்
உம்பர்முதலோர்மகிழ்வுசிதரபகம்            பீரன்
துஷ்டரைவாட்டியசுகுண அசாய            சூரன்
தூயத்ரிசங்குபெற்றசோதித்திகழ்வ            சீரன்
அந்தமகாராசன்வடிவழகினைச்சொல்ல            ஆரால்முடியுமம்மா
அறிந்துசொல்ல            எவரால்முடியுமம்மா

சந்திரமதி-விருத்தம்-இ-ட-தோடி.

மதுரமென்மொழியாயெந்தன் மனக்குறிப்பறிந்தெந்நாளும்
இதமெடுத்துரைக்கவல்ல வேந்திழையாளேகேளாய்
துதிபெறுமயோத்தியாளுந் துரையரிச்சந்திரந்த
அதிபனைச்சேருவேனோ அரிவையேயுரைசெய்வாயே

வசனம்.

ஆகா ஆகாகேளாயென்பிராணபதமான சகியே அந்தஅயோத்தியையாளும்படியாகிய திருச்சங்கு மகாராசாவினுடையபுத்திரன அந்தமகாராசனை நான்விவாகஞ்செய்து கூடுவேனோ அவனுடைய குணாதிசயங்களைக் கேட்கக்கேட்க விவாகிதாபமுண்டாகிற என்னசெய்வேனடி சகியே.

சந்திரமதி-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

என்னமோ மனதொருவித மாய்வருகுது இனி
என்னென்று சொல்வேனடி — யன்னமே-இதை
ஏதென்று சொல்வேனடி — யன்னமே
மன்னர்புகழும் அந்த மகாராசன்வடிவெல்லாம்
வடித்துநீசொல்லச்சொல்ல மதிமயங்கிறேனம்மானே (என்ன)
ஓயாமலிந்தக்குயில்கூவுது சலம் — போலே
வருத்திப்பிரமிக்கத் தென்றலுலவுதே புலி — போலே
மாயமருந்தோகொண்டுவந்தாயென் — மேலே
வாதோநீசெய்யுஞ்சூதோவர்மமே — தனாலே (என்)
நினைக்குமுன்னே இதொருரூபமுன் — டாகுது
நிமிஷத்திற்காமமிஞ்சிநிலைதளர் — வாகுது
செனித்துச்சுகசலதிரைதப்பிப் — போகுது
திக்கென்றுநாணம்வந்துதிகைத்துள்ளம் — நோகுது (என்)
கன்னிகையாமெந்தன்கருத்தையுருக்க — லாமோ
கலகம்விளைத்தாலிந்தகாமன்மேற்பழி — போமோ
என்னைமயங்கச்செய்தே யவர்மறந்திருக்க — லாமோ
இந்தவிரகத்தாலேயென்னென்னவிளை — வாமோ (என்)

தோழி-சவுந்தரவதி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

மன்னவர்மன்னன்பெற்ற மகிழ்சந்திரமதியேகேளாய்
கன்னிகையானநீதான் காமத்தால்மயங்கலாமோ
அன்னியரறிந்தால்நாண மந்தநல்லயோத்தியாளும்
மன்னற்கேபாரியாவாய் மனம்பொறுத்திருப்பாயம்மா

வசனம்.

கேளுமம்மா சந்திரமதி நீகன்னியா மேடையிலே விவாகமில்லாமலிருக்கிறகாலத்திலே யொருபுருஷனைநினைத்து விரகப்பட்டால் பார்த்தபேர்கள் பரிகாசம்பண்ணுவார்கள் அதுமகாராணம் உன்னுடைய இஷ்டப்பிரகாரமே அந்த அரிச்சந்திரமகாராசனே புருஷனாவார்திருவுளங்கூட்டிவைக்கும் பதறுபவிரு யம்மாதாயே.

சந்திரமதி-சிங்காரபத்தியம்-இ-ம்-புன்னாகவராளி.

வளைசோரமதிசோர வணைந்தபட்டுடைசோர
தமியேனுறதென்செய்வேன் சகிக்கவசமோ
அதிமோககமோக ஆரம்பவசையாக
தாபமிகுதென் சந்திரவதனையோ



நினைக்குமுன்கனவிலேசகிசமதாயவர்போலு
முருவெளித்தோற்றமோ வுண்மைதானோ
சொல்லவென்றால்வெட்கமேலாகுதென்செய்வன்
வழுத்துநற்பிரமனெழுத்தின்வகையோ
கருதுமுன்னென்னதுநெஞ்சுருகுதெனம்மா
அருகில்நின்றுதுதிசொல்லனங்கன் வருவான்
மருமலர்க்கணைவாரிவருகிறானே
அரிவையலையச்செய்வேன் அடக்கவசமா

தோழி விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மானெனும்விழியாயெங்கள் மதிநயமன்னன்பெற்ற
வானுலகமுதேசந்திர மதியேநான்சொல்லக்கேளாய்
தானிலமுழுதுங்காக்கு நலந்திகழயோத்திமன்னன்
தானுனைவிவாகஞ்செய்வார் தையலேவருந்திடாதே

வசனம்.

கேளுமெங்கள் குரைரத்னமாகிய சந்திரமதித்தாயே எப்படியும் அந்த அரிச்சந்திரமகாராசனே உன்னைமணமாலை சூட்டுவார் தெய்வசகாயமுனக்குண்டாகும் நீகாவுத்தமியானதால் உன்மனதிற்குக்குறையுண்டாகாது விசனப்படாமலிருப்பாய்மாதாயே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-புன்னாகவராளி.

பெண்ணினமயிலேயெந்தன் பிரியமாஞ்சகியேகேளாய்
தண்ணளிக்கயிலைவாசர் தந்தநல்வரத்தினாலே
வண்ணமாய்நான்பிறந்தே வளர்ந்துநற்பருவமானேன்
எண்ணுமென்கருத்துங்கற்றவிதனைக்கூடுமோவென்னே

வசனம்.

கேளாயெனதாபிராணபதமானசகியே ஸ்ரீகயிலாசவாசனுக்கிரகத்தினாலே மதியாசனுடைய வயிற்றிலே நானொருபெண்பிறந்துவளர்ந்து எவ்வளவுசாலமுமடைந்தேன் இனியென்மனதிற்கிசைந்த இங்கிதமானபுருஷனைவிவாகஞ்செய்யக்கூடுமோவென்னுசகியே

தோழி-விருத்தம்-இ-ம்-கலியாணி.

மத்தகமிரஞ்சடைதன்னைவளரிளமுலைபிறனே
தத்தைமென்மொழியாளான சந்திரமதிநீகேளாய்
பத்தனாருளினாலே யந்தநல்லயோத்திவேந்தன்
பத்தினியாவாயென்னம் பலித்திடுஞ்சலித்திடாதே

வசனம்.

கேளுங்கள் சிவநாயகர்போலும்வளரானின்ற சந்திரமதித்தாயே அந்தக்கயிலாசவாசனனுக்கிரகத்தினாலேயுன்னிஷ்டத்திற்கிசை

ந்த சௌந்தராகார சார்வ்ராச்சிய புருஷனான அந்த அரிச்சந்திர மகாராசனையே நீவிவாகஞ்செய்து கூடிவாழ்வாய் தாழ்ச்சியென்ன விருக்கின்றது விசனப்படவேண்டாந் தாயே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

காதல்சேரென துநுயக் கருத்திதலாமறிந்தெ தந்நாளும்
குதுணையாகநீதித் தோழியேசொல்லக்கேளாய்
வேதவேதனர்பாலே விளங்குதேவிரகமந்தப்
பூதலமன்னன்றன்னைப் பொருந்திநான்வாழ்வதென்றே

வசனம்.

கேளாயெனது பிராணபதமான சகியே சும்மாயிருக்கவென்றாலும்நீ அந்தமகாராசாவினுடையபெயரைச்சொன்னமாத்திரத்திலே விரகதாபமேலிட்டு மன்மதனாலே வருத்தப்படும்படி செய்தாயே அவர்பேரிலெனக்கு விளைந்த இஷ்டத்தின்படியே அவரை நான்கூடியெப்போது சுகத்தையடைந்திருப்பேன் என்ன செய்வேன் என்னசெய்வேன் சகியே.

தோழி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விரகமேலிட்டதேயென்றும் விலமதன்வருந்துவாளென்
றுருகிநெஞ்சுலைவேண்டா முறுநியாயவரைக்கூடி
மருவிவாழ்ந்திடுவாய்வேத வாய்மையந்தணர்போய்ச் சொலி
யரியநல்விவாகஞ்செய்ய வவருமிங்கெய்துவாரே. (வா

வசனம்.

கேளுமகாவுத்தமியான சந்திரமதித்தாயே யெப்படியும் யாத்திரைபோனபிராமணாள் போய்சொல்லி அழைத்துவருவார்களந்த அரிச்சந்திரமகாராசனையே கூடிவாழ்வாய் சந்தோஷமாகவேயிருமம்மா சந்திரமதித்தாயே.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

அந்தணர்சொன்னசொல்லை யன்பினுலறிந்ததோழி
சந்திரமதிக்குச்சொல்ல தனக்கந்தவயோத்தி மன்னன்
சொந்தநற்கணவனாகச் சோபமுற்றிருந்தாளப்பால்
விந்தைசேர்மதிநயன்செய் விதங்கள்யான்புகலுவேனே

வசனம்.

யாத்திரைவந்த பிராமணர்களாலே சொல்லக்கேட்டிருந்தசவுந்தரவதியென்னுந்தோழியானவள் சந்திரமதிக்குச்சொல்ல அந்த அரிச்சந்திரமகாராசனே தனக்குப் புருஷனாகவேணுமென்று விசனத்தினாலே விசனப்பட்டுக்கொண்டிருக்க அந்தசந்திரமதியைப் பெற்ற மதிதய ராசன்சபையிலே நடக்கிற விதங்காண்க.



மதிதயராசன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

சொல்லுநல்லறிவின்மிக்க சுபகுணமந்திரியேகேளாய்
வல்லமேதார்கயிலைவாசர் வரத்தினால்மகளாய்வந்த
மல்லலங்குழலாள்சந்திர மதிமணமாலையோலை
யெல்லையிலெழுதவேணு மிராயசனைவரச்செய்வாயே

வசனம்.

கேளும் விவேகமந்திரி ஸ்ரீகயிலாசவாச ரநுக்கிரகத்தினாலே யெனக்குமகளாய்வந்த சந்திரமதிக்குத் திருக்கல்யாணவோலையெழுதவேணும் இராயசக்காரனை வரச்செய்யுமந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியேஇராயசனை வரச்செய்கிறேன்மகாராசனே.

மந்திரி-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

அடல்கொள்வெம்புலிபோற்சிறு மதியநற்கட்டியக்காரா
திடமிகுமதிதயேந்திர தீரன்றன்புதல்விக்கென்று
மடலவிழ்மாலைசூடு மணவோலையெழுதநீபோய்த்
தடையின்றிபிராயசஞ்செய் சதுரனையழைத்துவாடா

வசனம்.

ஆடா ஆசாரவாசல்காக்குங் கட்டியக்கார நம்முடைய இராஜாதிராஜனான மதிதயமகாராஜாவினுடைய குமாரத்தியாகிய சந்திரமதியம்மனுக்குத் திருக்கல்யாணவோலை யெழுதவேண்டியதால் இராயசக்காரனை அதிசீக்கிரமாக அழைத்துக்கொண்டோடிவாடா கட்டியக்காரா.

கட்டியன்-வசனம்.

அப்படியே அழைத்துக்கொண்டு வருகிறேன், சுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி

வக்கணைபொருத்தமாக வரிசையாந்திருமுகத்தைத்
திக்கினிலெதிரில்லாமற் சிறப்புடனெழுதவல்லான்
தக்கமாமதிதயேந்திர சமுகத்துச்சுகமேகோதுங்கள்
இக்கணமெழுதுவேனென் றிராயசன்தான்வந்தானே

வசனம்

அதேதெப்படியென்றால் சந்திரமதியம்மனுக்குத் திருக்கல்யாணத்திருமுகமெழுதுதற்கு மதிதயராசன் கொலுவுக்கு இராயசக்காரன் வருகிறவிதங்காண்க.

இராயசக்காரன்-வருகிற-தரு இ-ம்-தோடி-தாளம்-ஆதி

ராயசக்காரன்வந்தான்-வந்தானிதோ-ராயசக்காரன்வந்தான்

ஞாயசமாதானசந்திரன்-நயநுண்மதிதயேந்திரன்
நாடியழைத்தசேதி யோடியறியநீதி (ராயசக்)

ராஜசமுகத்திலே யாமலவர்முக
நாட்டமறியும்நய குணசீலன்-அர்த்த
ராத்திரியானாலுமெத்தநேத்ரம்நிமைகொட்டாமல்
நாவசைந்தாற்கண்டெழுநதும்வெகுசாலன்
ஆசைவார்த்தைசொல்லியவசியம்நான்செய்வேனென்று
பூரிதமாய்த்திரிகின்ற
பெண்ணியர்போலேயின்று (ராயசக்கா

முறுக்கிமுறுக்கிக்கோணப்பாகைசிரசிற்கட்டி
மூக்கபவிபூதியைநெற்றியிற்பூசி வெகு
முடுக்காய்ப்பட்டஞ்சிவேஷ்டியிடையிலுடுத்திவல்ல
வாட்டுபோட்டுமுன்கைவீசி
இறுக்கும்வெட்டெனகூட்டெழுத்தும்ஆள்மாராட்டக்
குறிப்பெழுதும்உத்தர்களைக்
குடிகெடுக்குங்கள்ளன்றட்ட (ராயசக்கா)

ஓடித்திரவியத்தைத்தேடிவாளவர்க்குதவி
யுள்ளபடிபுகழுநாடாமல் வீணாய்
உதிப்பிப்பசப்புகின்றகசடரைப்போயடித்தே
உள்ளமெலிந்துமிகவாடாமல்
நீடியபுகழ்பெற்றவள்ளல்களானோர்மேலே
பாடிவருவோர்கவி
பறந்திடுமேட்டம்போலே (ராயசக்கா)

கட்டியக்காரன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தருமுறைநயராசர்நோக்கத் தானறிந்துலகநீதி
வருநெறியுணர்க்கவல்ல மந்திரிப்யோற்றிபோற்றி
இருளறவெழுதியோத விராயசக்காரன்றன்னை
வருகவென்றுரைத்தீர்நான்போய் வரச்சொன்னேன்வந்தான்

வசனம். (சுவாமி

தேவரீருத்தாரப்படிக்கு ராயசக்காரனையழைத்துக்கொண்டு வந்தேன் சுவாமி.



தூதன்-வசனம்-அப்படியேயறிவித்துவருகிறேன்சுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டகம்.

செப்புநல்லைம்பத்தாறு தேசமன்னவருக்கெல்லா
மப்படிகண்ணுள்சந்திரமதிமணவோலைதன்னை
யொப்புடனனுப்பினார்முன் னுணர்ந்தயாத்திரையாய்ப்போன
தப்பிலாமறையோரந்த வயோத்தியிற்றாம்வந்தாரே

வசனம்.

அகோதெப்படியே-ரு வித்தப்பிரகாரமாக சன்னையாபுரியிலே சந்திரமதியினது திருக்கல்யாணவோலை யெழுதியனுப்ப ஐம்பத்தாறு தேசத்திராசாக்களும் வருகிறதற்கு முன்னேயாத்திரைவந்த வேதப்பிராமணாள் மறுபடியுமயோத்தியாபுரிக்குவருகிறவிதங்காண்க.

யாத்திரைப்பிராமணாள்-வருகிற-தரு.

இ-ம்-சௌராஷ்டகம்-ரூபகதாளம்.

வேதப்பிராமணர்வந்தார்-யாத்திரைசெய்யும்
வேதப்பிராமணர்வந்தார்.

ஸ்ரீவில்லாசந்திரியாவந்தனஞ்செய்வோமென்றுமெய்மைபுகன்று ()
மலையிசைவருநல்லஅருவிகளைநாடி தீர்த்தமாடி
வருவோம்போறுபோகுமுன்னேயொருமடங்களைத்தேடி
சலசலவென்றொருசெடியசைந்தால் கண்டு
தயங்கிபிரண்டுமனபயமிக்க் கொண்டு
பலபேர்கூடியவிடத்திலே நின்று
பயமொழிந்திருப்போம்நாங்களென்று (வேதப்)

ஆலயந்திருமதில்கோபுரம்விளங்கிமூனாக்காணுமலி போனை
யறிந்துசுலோகங்கள்பூரிப்போமதற்குள்ள சீனை
சீலமாக அந்தஆலயம் புகுந்து
சேவிக்குமுன்னேசதாவிர்த்தி புகந்து
மெலும்பலபலதானங்கள் சொரியும்
விடுகளெங்கேயெனக்கூடிக்கூடித்திரியும் (வேதப்)

அருணாயானபட்டுவஸ்திரங்கிடைத்தாலுமெடுக்கோம் வீணாய்விடுக்
மன்னவன்தம்பியானபோதிலும்சும்மாய்க்கொடுக்கோம் (கோ
ஒருமையாய்ப்பேசுவோம் இனங்களென்றுவ
மொருகாசுவரும்படியா யிருந்தாலுந்
திரியதற்குப்பின்விடுவோமோ சென்று
தீர்த்தயாத்திரைபோவோ மென்று (வேதப்)

அரிச்சந்திரன்போற்றி-விருத்தம்-இ-ம்-மத்தியாமாவதி.

அறிவினிலுயர்ந்தெத்தாளு மருமறையோதவல்ல
மறுமைக்குவித்தாய்த்தோன்றி வளருமந்தணரேபோற்றி
இறையும்பொய்நெஞ்சிலெண்ணு திருக்குமெய்த்தவரேபோ
றுறைமிகுநதிகளாடுந் தூயரேம்போற்றிபோற்றி (ற்றி

வசனம்.

சரணஞ்சரணம்ஆதனத்திலெழுந்தருளியிருங்கள்சுவாமிகளே

பிராமணர்கள்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

மன்னனே ஆசீர்வாதம் பகிபனே ஆசீர்வாதம்
பொன்னணிமுடிதரித்த புண்ணியா ஆசீர்வாதம்
இன்னமுஞ்சர்வாபீஷ்டம் மெய்துவாய்ஆசீர்வாதம்
தன்னயவயோத்தியாளு நாதனே ஆசீர்வாதம்

வசனம்.

தனகனகவஸ்துவாகனாதியும் சகலசௌபாக்கியசாம்பிராச்சிய மும் தீர்க்காயுசும் சித்திரஸ்து சீக்ரமேவிவாகப்ராப்தி சித்திரஸ்து வே தப்பிராமணபரிபாலனசித்திரஸ்து.

கிழக்குப்பணையங்கார்-வசனம்.

நோக்கானபடியேநேக்கு.

கட்டைப்பிராமணன்-வசனம்.

நேக்குமப்படியே.

குருட்டுப்பிராமணன்-வசனம்.

நேக்கேதோகண்ணிருக்கிறதோ மண்ணிருக்கிறதோ அல்ல து ஒருகண்ணுடையாகிலுமிருக்கிறதோ இவாளுக்குற்றபடியே நே க்கும்.

நெட்டைப்பிராமணன்-வசனம்.

நேக்குள்ளகாரியம் நேக்கு நோக்குள்ளகாரியம் நோக்கென் றிராமல் எதுகாணும் பொதிக்களக்கிறதுக்குமுன்னே சத்தத்து க்கணக்கச்சொல்லுகிறது.

நெட்டைப்பிராமணன்-வசனம்.

அடாய்அடாய் நேக்கென்னரிஷிப்போலே யிருக்கிறுயே நேக்குத்தெரியும் மகாராசாவுக்கெப்படியும் விவாகமாகப்போகிற து எம்தா நம்முடைய கஷ்டநிஷ்டூரத்தை சொல்லிக்கொள்ளுகி றேன்.

கட்டைப்பிராமணன்-வசனம்.

அந்நாகாணும் நெட்டை சேஷையங்காரே ஏதோ விவாதத் திலே நான்வந்துவிழுகிறதாய் நினைத்துக்கொண்டு நேக்குங்கூட வென்று குதிக்கிறுன் நேக்குத்தெரியும் நான்பட்டபாடு



குருட்டுப்பணையங்கார்-வசனம்.

அந்நாகாணும் கிழக்குப்பணையங்காரே யினமேதேதோ சம் பாத்தியஞ்செய்தார் இவாரம்புடையாள் தீரணமாத்திர மிவர்கண் ணில் காட்டுவாளா.

கிழக்குப்பணையங்கார்-வசனம்.

ஏதோ ஆத்துகாரியம் ஆத்திலே சீக்கிரமாயிந்தகாரியத்தை ஒ ட்டவைச்சுப்போட்டோமானு விவாயியை விக்க எல்லோரும்பா தேஷ்டமாய்க்கொட்டிக்கொள்ளலாம் சட்டமாய்ப்பேசும் சட்டமா ய்ப்பேசும் அப்பணையங்காரே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆரபி.

அறுதொழிலாளரான வரியவந்தணரேபோற்றி
மறுதருண்ணிடையாள்சந்திர மதிவளர்பதியைநாடி
குறுகிநீர்கண்டவாறும் குறையொழித்தெனக்கேயந்தப்
பிறைநுதலாளைச்சேரப் பேசியவாறுஞ்சொல்வீர்

வசனம்.

சரணஞ்சரணஞ் சேளுங்கள் சுவாமிகளே என்னை விரகவேத னையிலே மயங்கச்செய்யாநின்ற அந்தசந்திரமதியினுடைய ப தியாகிய கன்னமாபுரிக்கு நீங்கள்போனதும் அங்கேயந்தமதிரய ராசனுடனே பேசினதும் அந்தமகாராசபவதியை எனக்குவிவாகம் செய்யும்படி தீர்மானம் பண்ணிக்கொண்டு வந்ததும் தெரியச்சொ ல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணர்கள்-விருத்தம்-இ-ம்-சுருட்டி.

சீர்பெறுதிருச்சங்கின்ற செயவரிச்சந்திரமன்னு
பாரோநீர்நினைத்தால் பலியாதென்றுலகிலுண்டோ
ஞானமதிரயேந்திரன் சுயம்வரஞ்சாட்டிவைத்தான்
வார்முலைமாதுனக்கே மணமாலைசூட்டுவாளே

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே நீர்ஒருகாரியத்தை நினைத் தால் அதுகைகூடி வாராமற்போமா நாங்களந்த கன்னமாபுரியைச் சேர்ந்து மதிரயாசனைக்கண்டு உம்முடையசகலசாம்பிராச்சியகுண நியங்களையுந் தெரியப்படுத்தினோம் அந்தசந்திரமதிக்குத் தகுமா னபுருஷனென்று நாங்கள் பூரித்துச்சொன்ன உச்சாகத்திலே யவ ர்சந்தோஷத்தை யடைந்து ஐம்பத்தாறுதேசத் திராசாக்களுக்கும் திருக்கல்யாணவோலை யெழுதிவிட்டு சுயம்வரஞ்சாட்டிவைத்தார் புறப்படும் தடையில்லாமல் முடித்துக்கொண்டு வரலாம் மகாரா சனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-அடாணா.

வேதவந்தனரோநீங்கள் விரும்பியோர்சருமநாடிப்
போதவேநடத்தாலிந்தப் பூமியில்முடியாதுண்டோ
நீதிலாவென துதந்தை செய்தவப்பலனிதாகும்
சாதலாய்ப்போம்வாய் வாரீர் கன்னமாபுரிக்கிப்போதே

வசனம்.

கேளுங்க ளென துதவப்பலன்போலும் வந்த சுவாமிகளேநீங்களொரு காரியத்தை நினைத்தாப்போனால் அதுமுடியாதுண்டோ அந்த மகாரூபவதியான சந்திரமதியெனக்கே மாலையிடுகிறேனென்று சொன்னதும் அவளைப்பெற்ற மதிதயமகாராசன் சம்மதித்துச் சுயர்வரஞ்சாட்டி வைத்ததும் எங்கள்பெரியோர்களெல்லாஞ்செய்த பூசாபலம் இனிதடையென்னவிருக்கிறது நடக்கலாம் வாருங்கள் சுவாமிகளே.

இராசன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

எதிரொங்குமில்லாவெந்த னெழில்பெறுமரசைச்சார்ந்த
சதுரங்கசேனைச்செல்லாந் தளபதிசொல்லக்கேளாய்
துதிசங்குமதிதயேந்திரன் தூயநற்பதிக்கிப்போதே
உதயமிங்செழுசச்சேனை யுடனுமும்பயணந்தானே

வசனம்.

கேளுமகாபராக்கிரமமுள்ள தளபதி நம்முடைய ரதசெஜதுரகபதாதிகளாகிய சதுரங்கசேனைசமுத்திரமுமின்று உதயமேபயணப்படுத்திக் கன்னமாபுரியைச்சேரநடத்தும் இதோநாமும்பயணப்படுகிறோம்.

தளபதி-வசனம்.

அப்படியேபயணப்படுத்திநடத்துகிறேன்சுவாமி

இராசன்-வசனம்.

நீங்களுங்கூடவேயெழுந்தருளுங்கள்சுவாமிகளே

பிராமணர்-வசனம்.

சதாஸ்து அப்படியேபுறப்படக்கடவோமகாராசனே

நெட்டை சேஷையங்கார்வசனம்.

மகாராஜனாக இருக்கவேண்டும் எதோநாங்கள்போய் காரியத்தையநுகூலப்படுத்திக்கொண்டுவந்தோம் நேக்குநான்குபெண்குழந்தைகளிருக்கிறது மூன்றுஆண்குழந்தைகளிருக்கிறது ஆகவெழுகன்னிகாதானமும் பூதானமு மெனக்கே செய்யவேண்டும் மறந்துவிடப்போகிறீர் மகாராசனே கூடவருகிறேன்.



குருட்டு அப்பணையங்கார்-வசனம்

ஆம் ஆம் நேக்குத்தான்கண்ணுடியில்லாதே இரண்டுகண்ணுந்தெரியாது நோக்கெல்லாம்ரிஷபம்போலே யிருக்கிறுய் நேக்குத்தான்செய்யவேண்டுமகாராசனே.

நெட்டைச்சேஷையங்கார்-வசனம்.

அன்னடா அடாய் குருட்டுத் தேவடியாள் பிள்ளாய் எதுக்கடா நோக்குக் கொட்டுகிறது.

குருட்டு அப்பணையங்கார்வசனம்.

பார்த்திரா பார்த்திரா ஓய்கிழக்குப்பணையங்காரோ யிவளாம்புடையாள் அண்டைவீட்டு நாமணையங்காரா யாட்டிக்கொண்டாளே அதிலே யிவருக்குச் சம்பாத்தியம்.

கிழக்குப்பணையங்கார்-வசனம்.

ஆம்-ஆம்-நேக்குத்தெரியுமவளாம்புடையாளைத் தாலேசொல்லுகிறுய்.

நெட்டைச்சேஷையங்கார்-வசனம்.

அடாய் கிழத்தேவடியாள்பிள்ளாய் எதடாநேக்குத்தெரிகிறது உன்னாம்புடையாள் பூர்வோத்தரம் நேக்குத்தெரியாதா

கட்டைவரதையங்கார்-வசனம்-ஆம்நேக்குத்தெரியும்
கிழக்குப்பணையங்கார்-வசனம் ஆம்நேக்குத்தெரியும்
நெட்டைச்சேஷையங்கார்-வசனம்-ஆம்நேக்குத்தெரியும்
குருட்டப்பணையங்கார்வசனம்-ஆம்-நேக்குத்தெரியும்

குருட்டு அப்பணையங்கார் வசனம்.

அடாய் நேக்கு ரெண்டுகண்ணுந் தெரியாது நம்முடையஆம்புடையாள் ஆத்திலே யிருக்கிறுள் அடாய் நெட்டை சேஷாய் அடா அறுதலைத்தேவடியாள் பிள்ளாய் அடாய் நீதானே யெதுவேளையும் நம்முடைய ஆத்துக்கு வாறதும் போறது நேக்கேதோ என்னு தெரிகிறதோ மன்னு தெரிகிறதோ அடாய்நீதானே வெளியிலே கொட்டறையா

கிழக்குப்பணையங்கார்-வசனம்.

ஓய் ஓய் குருட்டு அப்பணையங்காரோ யிந்தவார்த்தைகளெல்லாம் மகாராசாவுக்குத் தெரியப்போகிறது காணும் எதோநம்முடைய ஆத்துவர்த்தமானம் நாறிருக்கிறது-ஆம்-ஆம்.

இராசன் விருத்தம்-இ-ம்-அடாணா

என்னுடைய தமியைத்தீர்க்க வினையடிவருந்திச்சென்றே
பண்ணிசைமொழியாளந்த மதிதயன்...

நன்னீர்தான்விவாகஞ் செய்யநாடிப்போய்முடித்துவந்த
புண்ணியமறையோரோநாம் போம்வாம்நீர்வருகுவீரே

வசனம்.

வாருங்கள் வாருங்களென் மனக்குறையைத் தீர்க்கவந்த உத்தமப்பிராமணர்களே யுங்கள்மனதுக்குச்சந்தோஷம் வரும்படியாய் சகலமும் நடத்திவைப்பேன் கூடவேபுறப்படுங்கள் சுவாமிகளே.

பிராமணாள்-வசனம்.

அப்படியேபுறப்படுகிறோம் மகாராசனே.

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-அடாணா-தாளம்-ஆதி.

வாரும்வாரும்பெரியோர்களே யிப்போதேநீங்கள்
வாரும்வாரும்பெரியோர்களே
சிறுவலங்கன்னியாப்புரிதனைத்தேடி
நீதிவாதமறிந்தயமாருள் ஐய
மாதுகன்னிநான்மணமகிழ்மணஞ் செய்ய (வாரும்)
பெருத்தரதேர்மீதி லேறுவோம்-அங்கங்கேநின்று
பேசிப்பேசியவகை யாறுவோம்
வருத்தம்தான்றடல்கூடிமலர்வாவிச்சோலைநாடி
வழிகடந்துபரியது கொண்டு நல்ல
வளமிகுந்ததமிசை கொண்டு செல்ல (வாரும்)
ஆனைசேனைபரிவாரம்வெகு விஸ்தாரம்
அணிகளுடனேபோவோம் சிலதூரம்
சேனைகாவலர்சூழதேசமன்னவர்தாழ
தேவநாயகனென்னப் புகழ்ந்திட
வேகமாகஏறி புகழ்ச்சிட (வாரும்)
பச்சைப்புரவிகளைப்பூட்டி அசத்தைநாட்டி
பதந்தங்கசங்கிலிகளை மாட்டி
அச்சமில்லாதமேரும் அசையுமேயிரதப்பாகும்
அவ்வகையழகுள்ள அணித்தேர் மீது
திவ்வியமுகூர்த்தத்தில்ஏறிப் போது (வாரும்)

பிராமணாள்-வசனம்.

சந்தோஷம் சந்தோஷம் மகாசந்தோஷம் வந்தோமிதோவந்தோம் மகாராசனே.

இராசன்-பிராமணருக்கு-சொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்னருந்தவச்சாலவந்த வெழிற்பெரியோமேசேனீர்
பன்னும்பேர்பாலிவைப்பம் பாருங்களதிலோர்தெய்வ



சந்நிதானத்தைப்பாரீர் சதிருடனேனென்று
தன்னமாகப்போற்றித் தகைபெறவருகுவேனே

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே யிதோ இந்தப்பாலவனத்திலுடைய தீட்சண்யத்தைப்பாருங்கள் அதிசயமொருதேவாலயம்தோற்றப்படுது அது துர்க்கைகோயிலைப்போலிருக்கிறது நான்போய் அந்தமகாதேவியைக்கண்டு தரிசனஞ்செய்துவருகிறேன் நீங்களிந்தரதத்திலேயிருங்கள்சுவாமிகளே.

பிராமணாள்-வசனம்.

அப்படியேபோய்தரிசனஞ்செய்துவாருமகாராசனே

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

ஞாலமேழ்புரக்குமந்த நலந்திகழயோத்தியன்னன்
சாலவேதியர்களோடுங் கொடிநெடுந்தேர்மேற்கொண்டு
பாலைவில்துர்க்கைகோயில் பரிவுடன்கண்டிறங்கி
சாலவேசெல்லிதன்னைத் தாழ்த்திப் பணிந்துசொல்வான்

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரமாக அரிச்சந்திரமகாராஜன் தன்னுடைய ரதகஜதுரகபதாதிகளையுங் கன்னமாபுரியைச்சேரநடத்தி தாமும் யாத்திரைவந்தபிராமணர்களும் வசிஷ்டர்முதலாகியபெரியோர்களும் ரதத்தின்மேலேறிக்கொண்டுவருகிறவழியிலே மகாதீட்சண்யமான ஒருபாலைவனமும் அந்தப்பாலைவனத்திலொரு துர்க்கை கோயிலையுங்கண்டு ரதத்தைவிட்டிறங்கி அந்தமகாதேவியாகிய துர்க்கையைத் தோத்திரம்பண்ணுகிறவிதங்காண்க.

இராசன்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி

வானவரும் மணிமதிலு மகிழவுங்கோபுரதிலும்
ஞானநிறைபொதிகைபோல் நடுவினவழுந்தருசத்தழுகும்
வானவர்வந்தடிபரவு மகிமையுடனாகக்கவென்றால்
ஆனதொருதுர்க்கைகருங் அடங்காதப்புரிந்தமே

அரி அரி ஆஆ ஆஆ ஓஓ ஓஓ இதுவென்ன ஆச்சரியம் இந்த தெய்வசந்நிதானத்தினுடைய பெருமையும் அழகையும் நானென்னென்றுசொல்வேன் அதிவன்னதாரணங்காபுரமும் விஸ்தாரமான திருமதிலும் ஸ்வர்ணதுஜஸ்தம்பமும் நவரத்தினகசிதமான திருப்பணியழகும் பார்க்கப்பார்க்கக் கண்கூசுகிறது இப்படிப்பட்டதேவாலயத்துக்குள் எழுந்தருளியிருக்கப்பட்டதிந்த மகாதேவியைக் கண்டு தெரிசிப்போம்.

இராசன்-சொல்-தேவாரம்-இ-ம்-சங்கராபரணம்.

சூலமுங்கபாலங்கட்கந் துலங்குவாள்கையிலேந்தி
காலனுநடுங்கச்சீறி கதித்தசிங்கத்தின்மீத
மாலினுக்கிளையாளென்னும் வன்பெயர்தாங்கிநின்ற
நீலமாதரிகங்காளி நின்மலர்ப்பாதம்போற்றி.

இதுவுமது

மலர்ப்பதமிலர்புகொஞ்ச மருவுதில்லையில்நின்றாடு
நிலைப்பொருட்சிவனோடன்று நேர்ந்துவாதாடுந்தாயே
மலத்ததிப்பவியில்வந்த மானிடச்சிறுவன்யானுன்
நலத்தையெவ்வாறுபோற்றி நாவினுலுரைக்கவல்லேன்

இதுவுமது.

அன்னைநீதந்தைநீயே அருட்பொருளனைத்துநீயே
பின்னையார்பாமுங்காணேன் பேதையேனயர்கின்றேனே
துன்னுநின்மகிமைதன்னைத் துதிசெயவறியேனம்மா
வன்னைநீயாள்வதற்கே யிரங்கவந்தருள்செய்வாயே

பொது-விருத்தம் இ-ம்-மத்தியமாவதி

அணிதிசைழ்யோத்தியாளு மரிச்சந்திரனிருபனந்த
மணிமயானிதுர்க்கைகோயில் வாயில்நின்றருகும்போது
பணியணிச்சிவனோடாடும் பதமிலங்குந்த துர்க்கை
துணிவொடுசிங்கமீது தோன்றிமுன்வருகின்றாளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திரமகாராசன் மிகுந்தஸ்தோத்திரங்களுடனே உருக்கமாகவேண்டிக்கொள்ள அந்தமகாதேவியாகிய துர்க்கையம்மனுக்குக்கிருபைவந்து பிரத்திட்சமாகிறவிதங்காண்க.

துர்க்கையம்மன்-வருகிற-தரு.

இ - ம் - மத்தியமாவதி - அட்டதாளம்.

வனதுர்க்கையிதோவந்தாள்-பாலவனதுர்க்கையிதோவந்தாள்
கனமுங்குமமெங்குங் கண்காட்சியாய்ப்பொங்கும
அனைவாருளமிலங் குமாதிசத்தியாய்த்தங்கும். (வனதுர்க்
சாகினிடாகினிமோகினிபெணுந்த
சூதகவரிசைப்பசாசுகள்பிரயந்த
வாகையோகிதிவ்யமலர்கள்வாரிதந்த
மகிழ்கொண்டேபுவிதனைவளமாய்க்காக்கவந்த (வனதுர்க்கை)



கொண்டிப்பசாசுடன்சண்டிப்பசா | சொன்று
மூர்க்கமாகவந்துகூத்தாடவெதிர் | நின்று
கண்டொருபேயங்கேவயிரயமீது | வென்று
கைகொட்டிப்பாடியகனத்தைமிகப் | புகன்று (வனது)
கரியசாத்தனொருதலையைக்கைதனிற் | கொண்டு
களித்தொருபேய்கையிலிருக்குந்தலையைக் கண்டு
அருமையாயாடுவோம்வாவாயிதே | சென்டு
அவசியம்வாவென்றழைக்குங்கூட்டந்தை விண்டு(வனது)

இராசன்சொல்-தேவாரம்-இ-ம்-சங்கராபரணம்.

அசுரர்கள்மிகநடுங்க அன்றுயாமமிடாகூன்
மிசைநடந்தமரில்வென்ற வீரிமாதங்கிநீலி
உசிதமாம்பசாசுபூத மொடுங்கிநின்றேவல்கேட்க
வசியவாள்சூலமேந்தும் வனதுர்க்கைத்தாயேபோற்றி

இதுவுமது.

காலனையுதைத்தபாதன் கயிலைவாசீசனுன
சீலநற்சிவனோடன்று தில்லையில்நடனஞ்செய்த
கோலசிங்காரிகட்கங் கொடுமழுவாள்வில்லேந்திப்
பாலையாம்வனத்தில்வாழும் பராசத்திநின்றாள்போற்றி

துர்க்கை-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

கனமதிலயோத்திவாழுங் காதல்சேர்திருச்சங்கேந்த
தினகரன்போலவொங்கித் திகழரிச்சந்திராகேள
முனிவர்கள்முதலோர்செய்யு முக்கியமதங்கள்ளோங்க
அனவரதமும்பாலிக்கு மன்புள்ளாய்வாழிவாழி

இதுவும்-துர்க்கை-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்

வளமிகுசதிர்குலத்தின் வந்தவதரித்தமன்னு
உளமகிழ்வானநீசெய் யுருக்கமாந்தோத்திரத்தால்
தளவெடுத்தெங்கேபோக நானுவந்தாயென்னைவேண்டும்
விளைவெல்லாநீதானந்த வுவிதந்தனைச்சொல்லுவாயே

வசனம்.

கேளும் அரிச்சந்திராசனேரங்கசேனு சமுத்திரத்துடனே யெங்கேபோகப்புறப்பட்டாய் இங்கேயென்னுடையசந்நிதானத்திலே வந்து நீ பிரார்த்திக்கிறகாரியமென்ன உன்னுடையஸ்தோத்திரத்தினாலும் பக்திக்கும்மெச்சினேன் உனக்குவேண்டியவரங்களைத்தெரியச்சொல்லும்பிள்ளாய்.

இராசன்-விருத்தம் இ-ம்-தோடி.

மானினுக்கிளையாளான வனதுர்க்கியுமையேகேளாய்
சிலனுமதிதயன்றன் செல்வியைவிவாகஞ்செய்ய
சாலவேவந்தேன்றனிங்கே தங்குவித்தபரித்தேரும்
கோலக்கல்லானதின்று கொழும்பொன்னாய்மேதப்பா

வசனம்.

கேளுமம்மாவனதுர்க்கா பரமேஸ்வரி கன்னமாபுரியையாளு மதிதயராசன்புத்திரியைவிவாகஞ்செய்யவேணுமென்று புறப்பட்டு இவ்வழியாய்வந்தேன் இங்கேயுனது சன்னிதானத்தைக்கண்டு தரிசித்துப்பிரார்த்திக்கலானேன் ஒருஆச்சரியம் இந்ததேர்குதிரை வில்லம்பு இதுகளெல்லாம் கல்லாயிருந்தது இப்போதென்ன காரணம் பொன்னாகுது அந்தவிசயத்தைத்தெரியச்சொல்லவேணுந்தாயே.

துர்க்கி-விருத்தம்-இ-ம்-அடாணா

சேனரிச்சந்திராமுன்னம் சிவர்தருவருணனென்போன்
திருவுலகதனையாண்டு நீங்குதாலென்பாலிந்தக்
கொண்டபிதேர்வில்லம்பைக் குதிரைக்கல்லாக்கிவித்தை
அன்பவர்வந்துகண்டா லரும்பொன்னாமவர்க்கேயென்றான்

வசனம்.

கேளுப்பிள்ளாய் அரிச்சந்திரா முன்னாலே வருணனிந்தத் தேர்குதிரை வில்லம்பு இதுகளைக்கல்லாக்கி யாருடையகண்ணிற்கண்டமாத்திரத்தில் பொன்னாகுமோ அவர்களேயிதற்குடையவர்கள் அவர்களுக்கே யிதைக்கொடுக்கிறதென் றென்னிடத்தில் வைத்துப்போனான் அநேககாலமாய் வைத்து காத்துக்கொண்டிருக்கிறேன் ஆனதால் நீகண்டமாத்திரத்திலே பொன்னாகவிளங்கியதால் நீயேவைத்தாண்டு கொள்ளக்கடவாய்.

இராசன்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

நான்செய்ததவப்பலனோ நாநிலஞ்செய்புண்ணியமோ
வான்போல்விழிச்சந்த்ர மதிதவமோவறியேனே
காண்சேருப்பாலைக்காணிநீதருமிதனை
பேண்வையுடன்கைக்கொண்டேன் விரும்பியிதையருள்குல

வசனம். (மே

கேளுமம்மா ஒப்பற்ற நிதி இப்படியா யிதனுடையபூர்வோத்திரம் ஆனால் மகாசந்தோஷம் உனக்குத்தானே மகிழ்ச்சிவந்து கொடுக்கவந்தால் அடியேன் பெற்றுக்கொள்வதற்குத் தடையாதாமே.



துர்க்கி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இந்தவில்லைப்பெடுத்தே யெழில்பெறுமிரதமேறி
விந்தைசேர்குதிரைபூட்டி மிகமகிழ்வாகச்சென்றே
சந்திரமதியைக்கூடித் தனிமணஞ்செய்தேயானே
வந்திதனைப்பணிந்தயோத்தி மருவிவாழ்ந்திருப்பாயப்பா

வசனம்.

கேளும் அரிச்சந்திரா இந்த சுவர்ணமயமான குதிரைகள்பூட்டிய பொற்றேரின்மேலேறி இதோ இந்தவில்லையும் அம்பையுமெடுத்துக்கொண்டு கன்னமாபுரிக்குப்போய் சந்திரமதியைத்திருக்கல்யாணஞ்செய்து நானவருட்போது இவ்வழியாகவந்துநம்மைத் தரிசனஞ்செய்துகொண்டு அயோத்தியாபுரியையடைந்து அரசாட்சிசெலுத்தி அதிகசுபமாகவாழ்ந்திரும் மகாராசனே

இராசன்-வசனம்.

அப்படியேபோய்வரக்கடவேன்தாயே.

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

பொன்னின்வில்லுநாட்பெடுத்தே பொற்பரித்தேர்மிசையேறி
கன்னி துர்க்கிதனைப்பணிந்து கன்னமாபுரிநாடித்
தன்னுடனேவசிஷ்டர்முதல் தருமறையோர்புடைசூழ
மன்னனரிச்சந்திர மகிபன்வருகின்றனனே

வசனம்.

இந்தப்பிரகாரமாகவன துர்க்கிகொடுத்த பொற்றேர் குதிரை பொன்வில்லம்பு இதுகளைக்கைக்கொண்டு அந்தமகாதேவியைஸ்தோத்திரஞ்செய்து அப்பால்வசிஷ்டர்முதலாகிய பெரியோர்களுடனே யந்ததிவ்ய இரதத்திலேறிகன்னமாபுரிக்கு அரிச்சந்திரமகாராசன் வருகிறவிதங்காண்க.

அரிச்சந்திரன்கன்னமாபுரிக்குவருகிற-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

மாநிலா அரிச்சந்திரமகாராசன்தேரேறி மதிதயன்பதிக்குவந்தானே
பூசிதவசிட்டரும் புனிதமறையோர்களும்
புலவர்களாசொல்ல புகழ்ந்துமகிழ்ந்துநல்ல (மாநிலா)
ஆனைப்படையுடனே குதிரைப்படை நடக்க
அணியணியாயந்தசேனைத்திரள் நடக்க
வாளாவியாணித்தேர்கள்முன் நடக்க
வகுக்குஞ்சேனாநாயகர்தாங்களுடன் நடக்க

தானவர்கள்டுளத்தயங்கிமிக நடுங்கச்
சதுரர்கள்டுதிலை தளர்ந்துமன மொடுங்க (மாசி)
காளமொக்காளங்கைத்தாளஞ்சில்லரி சங்கங்
கடல்போலினையுந்தாரைபூரிபேரி பொங்கங்
கோளுலாவுமண்டகோளஇற்பிர சங்கங்
கூறும்பட்டவர்துதிசோபிடமகா சங்கங்
நீளும்புவியிலெங்குட்நெருங்கிப்படர்ந்து வரும்
திருபர்குடைகொடிகள்நிறைவிந்துளங் கவரும் (மாசி)
இருபுறங்கவரியாம்வெண்சாமரைகள் போட
யெழில்ரம்பையர்போலினியமாத ராட
தருதம்புகழைச்சொல்விவானவர்மிசுக்கொண் டாட
தழைத்தஇந்திரன்கண்டுதயங்கிமனது வாட
அரிவைச்சந்திரமதிமேலாசைவெள்ள மோட
அறிபுத்தூதர்முன்போயத்தநகரைத் தேட (மாசி)

கட்டியன் மதிதயனுக்குச்சொல்-விருத்தம்
இ-ம்-கும்பசாம்போதி.

கன்னமாபுரியையாளுங் கருத்துபர்மதிதயேந்த்ரா
பொன்னடிநாளும்போற்றி புகலுட்விண்ணப்பங்கேளும்
மன்னவர்மன்னனன மணிமதிபோத்தியாளும்
நன்னய அரிச்சந்த்ரோத்திர நாதிபர்வந்தார்சுவாமி

வசனம்.

பராக்கு பராக்கு எச்சரிக்கை எச்சரிக்கை மதிதயேந்திரமகாராசனே அயோத்தியாபுரியை அரசாட்சிசெய்யாநின்ற அரிச்சந்திரமகாராசன் வந்தார் சுவாமி.

மதிதயன்-அரிச்சந்திரனுக்குச்சொல்-விருத்தம்.
இ-ம்-ஆனந்தபைரவி.

சதிர்பெற்றிமணிமாடவயோத்திதயாநிதியேவருக
சதிரற்றிசைக்குவிலாத விநோதபுயாசலனேவருக
துதிபெற்றதிரிச்சங்குகிரே வழிகதாநிதியேவருக
அதிர்பொற்கழல்வீரவதாரமகாவரசேவருகவருக

வசனம்.

வாரும்வாரும் மகாராசனே.

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

வாசவன்போலயோத்தி மன்னனரிச்சந்திரன்றன்
பூசிதரதத்திலேறிக் கன்னமாபுரிக்குவந்தான்



மாசிலாமதிதயன்றன் மகள்மணவோலைகண்ட
தேசந்தேசத்துமன்னர் சிறப்புடன்வருகின்றாரே

வசனம்.

அகோதெப்படியென்று லரிச்சந்திரமகாராசன் கன்னமாபுரிக்குவந்தவுடனே மற்றஐம்பத்தாறுதேசத்துராசாக்களும்வருகிற விதங்காண்க.

தேசாதிபதிகள்-வருகிற-தரு.
இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

தேசதேச மகாராசர்கூடிக்கூடித்திரமுடனேவந்தார்
இதோதிரமுடனேவந்தார்
ஆசைக்கன்னமாபுரிமதிதயன் மகளாலை
அளவிலாநெஞ்சமகிழ்வாகி யொருக்காலே (தேசதேச)
கேகயதேசாதிபதிசோளதேசாதிபதிக்ரவுஞ்சதேசாதிபதியும்-வரு
கேதனநிறைந்திலகுமராடதேசாதிபதிகௌடதேசாதிபதியும்-நல்ல
மகததேசாதிபதிமாளுவதேசாதிபதிமச்சதேசாதிபதியும்-நிறைவா
கிராடதேசாதிபதிவங்களதேசாதிபதிவளருஞ்சிங்களபதியுஞ்சொல்
ஆ-மோகமுடனேபடையைமுடுக்கிநடத்திக்கொண்டு
தாகமுடன்சந்திரமதியுயர்மாலைகண்டு (தேசதேச)

கட்டியன்-வசனம்.

கேகய சோள க்ரவுஞ்ச மாகத மாளுவ மச்ச கிராட வங்காள சிங்கள முதலாய்ச்சொல்லாநின்ற ஐம்பத்தாறுதேசாதிபதிகளும்வந்தார்கள் சுவாமி பராக்கு.

மதிதயன்-பட்டுவிருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

அருமணிமுடிசூடுந்-திருவளர்புயவீர
தருநிறையுலகாளும்-அரசர்களேவாரீர்.

வசனம்.

வாருங்கள் வாருங்கள் தேசாதிபதிகளே

பொதுவிருத்தம்-இ-ம்-அசாவேரி.

செப்புநல்லைம்பத்தாறு தேசமன்னவர்களோடு
மற்பதம் யாத்தியாளும் மழகரிச்சந்திரமன்னன்
தப்பிலாமதிதயேந்திரன் சபைதனிலிருக்கஆங்கோர்
மைப்படிகண்ணாள்சந்த்ர மதிக்குமாத்திடவந்தானே

வசனம்.

அகோதெப்படியென்றால் ஐம்பத்தாறுதேசத்திராசாக்களுடனேகூட மதிதயேந்திரன்சபையில்சொலு விருக்கிறபோது அந்த

அரிச்சந்திரமகாராசனையும் பார்த்ததோழிசவுந்தரவல்லியானவள்ச ந்திரமதியம்மனுக்குச்சொல்ல வருகிறவிதங்காண்க.

தோழிசவுந்தரவல்லி-சந்திரமதியிடத்துவருகிற-தரு.

இ-ம்-சாவேரி ஆதிதாளம்.

தோழிவந்தாளேசுபச்சோபனஞ்சொல்லருட்சாதுரியவல்லி (தோழி)
ஆழிசூழுலகாண்மதியமன்னன்
அழைத்ததேதிசந்திரமதிக்காதிவிக்கத்தந்த (தோழி)
அடங்காமகிழ்ச்சிகொண்டடிக்கடி நின்று — நின்று
ஆரெனைக்கேட்டாலும் கலியாணம்நானேக் — கொண்டுந்
தடங்கண்ஞானசந்திரமதிபேனாட் — புகன்றுஞ்
சகலபாக்கியமுங்கிடைத்ததேயெனக் — கின்று
நடந்துபோவதென்னவோடிச்செல்வதே — யின்று
நன்றெனசுபஞ்சொல்லிதலங்கொள்ளவேமுயன்று (தோ)

தோழிபோற்றி-விருத்தம்-இ-ம்-பியாசடை.

அரிவையர்க்காசேபோற்றி யணிதிகழ்மதியேந்திரன்
தருமகளெனவேவந்த நவப்பலப்பொருளேபோற்றி
மருமலர்க்குழல்சேர்ப மானெனுங்விழியாள்போற்றி
வருநிறைசெல்வச்சந்திர மதியெனுமமுதேபோற்றி

சந்திரமதி-தோழிக்குச்சொல்-வாழ்த்து-விருத்தம்.

இ-ம்-கல்யாணி,

சொற்படிவேவல்செய்தே நாயகர்குணத்தின்மிக்க
நற்பயன்போல்விளங்கு நங்கையேவாழிவாழி
முற்பயனெய்தினும்போல் முடுகிநீவந்ததேதோ
அற்புதமொழித்திட ம லதிசீக்கிரமுனாசெய்வாயே

வசனம்.

வாவாஎனதுபிராணப்பிரமானசகியே நீஅதிவேகமாக ஓடிவர வேண்டிய காரியமென்ன எவ்வளவுமொழிக்காமல் தெரியச்சொல்லடி சகியே.

தோழி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

கேளம்மாவுனதுபுண்ணியங் கிடைத்ததுசகமுங்காண்பாய்
வேள்விசெய்மறையோர்முன்னம் விளம்பியபடியேயரி,
வாளரிச்சந்திரமன்னன் வந்தார்மற்றைம்பத்தாறு
தேன்விலேந்தரசர்தாமு நிறைந்தார்நின்மனத்தைநாடி.

வசனம்,

கேளம்மா சந்திரமதித்தாயே முன்னாலேயாத்திரைவந்தபிராமணர்சொல்லும்படியே அந்த அரிச்சந்திர மகாராசனும்வந்திருக்கிறார் இவிளப்படியுஞ்சுகத்தையடைவாய் அவருடனேகூடஐம்பத்தாறு தேசத்திராசாக்களும்வந்தார்கள் அவர்களும் உன்திருக்கலியாணத்தைக்குறித்துவந்திருக்கிறார்கள் அதைச் சொல்லவேணுமென்று வந்தேனம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

அருமைசேர்சகியேகேளா யன்றுதொட்டிந்நாள்மட்டும்
திருமில்லாவயோத்திமன்னன் தேவிதானாகவெண்ணே
உருகிநெஞ்சழன்றேகாம முபரியாய்வருந்துகின்றேன்
திருவுளச்செயலேதாமோ தெய்வமென்செய்யுமோதான்

வசனம்.

கேளாயென்னுயிரானபதுமான சகியேயாத்திரைவந்தபிராமணர்சொன்னதைக்கேட்டு நீவர்றுசொன்னநாள்முதல் இதுவரைக்கும் அந்தமகாராசனுக்கே பாரியனாகவேணுமென்று நினைந்து நினைந்து விரகவேதனையினாலே வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிறேன் திருவுளச்செயலெப்படியாகுமோ தேவனுடையெப்படியிருக்குமோ என்னசெய்வேன் சகியே.

தோழி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வானுலகமுதைப்போலும் வளர்சந்திரமதிபெண்ணம்மா
நீநினைந்திருக்குமெய்யனரி சோதாய்முடியுங்கண்டாய்
மீன்வளர்கடலுப்புக்கு மிருமலைமாங்காய்க்கும்
தானெனுசம்பந்தம்போல் தப்பாதுமுடியுந்தாயே

வசனம்.

கேளுமம்மா சந்திரமதித்தாயே கடலுப்புக்கும் மலைமாங்காய்க்கும் தொந்தமாய்ச்சம்பந்தப்படுவதுபோல் குறைபடவிருந்தால் அந்தமகாராசனுக்கும் உனக்குமே விவாகசம்பந்தப்படக்கூடுமல்லவோ தடையில்லையம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-காம்போதி.

மயில்போலுமுடையாள்பாக மருவிமான்மழுவுமேந்தும்
கயிலாசர்வரத்தினாலே கன்னிநான்பிறந்தேனிந்த
நயமேவுமெய்வனத்தில் நாதனைச்சேர்ந்திடாத
துயரமுந்திருமோதான் தோகையேயென்னசெய்வேன்

வசனம்.

கேளடியென்னருமையானசகியே ஸ்ரீகயிலாசவாசருடையவரத்தினாலே நானிருபெய்திருந்தேன் எனக்கு எவ்வளவுகாலமும்

கூந்தலு இனியென்பனருக்கேசந்தபுருஷனைக்கூடிப் பின்புசௌக்கியமடையாதிருக்கிற என்பனேதுக்கமுந்திருயா யென்னசெய்வேன் சகியே.

தோழிவிருத்தம்-இ-ம்-தோடி.

சித்திரத்தெழுதவொண்ணாச் சிறப்புள்ளவழகுவாய்ந்த
சத்தையொன்மொழியாய்ச்சந்த்ர மதியெனுந்தாயேகேளாய்
சத்தஞ்சஞ்சலப்படாதே தகுர்புகழரிச்சந்த்ரன்மேக்
உந்தமந்தவியாகியொருகுறைவின்றிவாழ்வாய்

வசனம்.

கேளுஞ்சந்த்ரமதித்தாயே உன்னுடையரூபலாவண்யங்களுக்கிசைந்த அந்த அரிச்சந்த்ரமகாராசனுக்கு மணமாலைசூட்டிசகல சௌக்கியங்களுமடையப்போகிறாய் தாழ்ச்சியென்னவிருக்கின்றதம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சன்னியாசி.

தினகரன்குலத்தில்வந்த திருமுதல்லயோத்திவேந்தன்
கனமிகுமவனைக்கருத்தினில்ஆசைகொண்டேன்
தினந்தினமவரால்நெஞ்சந் திகைத்துமன்மதன்கைவாளி
எனையெனைவருத்தச்செய்யும் கலக்கமெவ்வாறுதீரும்

வசனம்.

கேளாயென்னருமையானசகியே சூரியகுலோத்துங்கனை அயோத்திமாபுரியரசாட்சிசெய்யாநின்ற அந்தமகாராசனைக்கூடும்படியாக வெகுணங்கொண்டமாத்திரமாப்பிராயனுள்சொன்னதன்றி யென்னையன்னி காமக்கணையினால் வருத்தப்படச் செய்கின்றான் என்னசெய்வேனடி சகியே.

சந்திரமதி-விரகதரு-இ-ம்-தவ்போல்-அடதாளம்.

விரகஞானிரிசகோரதே-பிள-மெல்லியென்னுள்ளஞ் சகியாதே
சரசலவிதயிகுமோகத்தையலென்செய்குவன்கையயீநிந்தவி
அந்திமதியனலாய்நாவுதே-தென்றலப்புலிபோலவந்துதாவுதே
சிந்தையொருவகையாய்நாடித்தேடியதிமிவாடித்தள்ளாடுதே திசி
காவிக்கருங்குயில்கள் டாடுதே-யின்டக் (விர
காமரசவெள்ளமிகுந் தோடுதே
ஆவிக்குரியமானவென
தங்கப்புளகிக்கப் பொங்குங்கடலொலிக்க (விர)
மாரன்கணைகணிந்தும் பாயுதே-மந்தில்
பாறுபாடாய்நின்று பேயுதே



யர்ரைவெறுப்பேனினிதடையன்னமே
சொர்னமோதன்னயமாயிந்த (விரகலா)
கொத்தார்தனங்கள்விம்மி மீறுதே-விளங்
கொவ்வைச்செவ்வாயிதழ்த்தே ஊறுந்த
அந்தணர்கள்சொல்லியவிதி
யறிந்துதெரியாதிருந்திருப்பதேனிவ் (விரகலா)
அன்னம்பால்பழஞ்சசப் பானேனே-கிளி
யன்னம்பூவையினுற்பசப் பானேனே
இன்னம்தாமத மேதோ-மன
திட்டமுடனெனைக்கட்டியணைந்திட (விரகலா)
சப்ரமஞ்சமீதிலென்னைக் கூடவே-நல்ல
தருணங்கருணைகூர்ந்துற வாடவே
இப்டிஞ்சமதிக்கும்போக
விச்சையரிச்சந்த்ரசெல்வமதன் (விரகலா)
இந்திராதிதேவரனு கூலனே-கதி
நிலங்குந்துதித்தவி சாலனே
சந்தனக்கந்தகஸ்தூரிச்
சந்திரமகாராசனிந்தவேளைதந்த (விரகலா)

தோழி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

மதுரமென்மொழிவிளங்கு மயிற்சந்த்ரமதியேகேளாய்
மதனவன்கைக்கணையினாலு மலயமாருதத்தினாலும்
விதவிதவிரகமேறி மெலிந்திடாதிருப்பாயம்மா
சிதைவிலாவுனதுபயங்கில் தெய்வமுஞ்சகாயமாமே

வசனம்.

கேளுமம்மா சந்திரமதியே இப்படிப்பட்ட விரகவேதனையினாலே விருதாவாய்நொந்து வருத்தப்படுத்திக்கொள்ள வேண்டாம் மனநின்படியே தெய்வசகாயமுண்டாகும் வியசனப்படவேண்டாம் வியசனப்படவேண்டாம் தாயே.

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

சந்திரமதியைத்தேற்றித் தகுமுபசாரஞ்செய்தே
சுந்தரத்தோழிமார்கள் சூழ்ந்துகொண்டிருக்கவப்பால்
மந்திரிமுதலாயத்த மன்னர்சூழ்சபையிலிந்த
சந்திரமதியேந்த்ரன் தான்செய்யும்விதஞ்சொல்வேனே

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதியம்மனுக்குச் சைத்தியவுபசாரஞ்செய்துகொண்டிருக்க அங்கேமதிதயாசன் சமுகத்தில் ஐய

அ

த்தாறு தேசத்திராசாக்களும் வந்திருக்கிறார்களே இனி அங்கே நடக்கிற விதங்காண்க.

மதியராசன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

அறிவினிலுயர்ந்தமந்திரி யைம்பத்தாறுனதேசத்
திறைவர்களெல்லாம்வந்தா ரென்மகள்மணத்தைநாடி
நிறைதருகுடைக்கீழின்ப நேயமாயெனதுபுத்ரி
யொளையுடன்வருமாங்கோர் பூவையையனுப்புவாயே

வசனம்.

கேளும்விவேகமந்திரி நாம்நாட்டியிருக்கிற சுயம்வரத்தைக் குறித்து ஐம்பத்தாறுதேசத்திராசாக்களும் வந்திருக்கிறார்களே இனிநம்முடைய புத்திரியாகிய சந்திரமதியம்மனை முத்துக்குடைநிழலிலே இராசசபைக்கு அழைத்துக்கொண்டு வரும்படியாக ஒரு தோழியை யனுப்பு மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியேயனுப்பிவைக்கிறேன்சுவாமி.

மந்திரி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வாளொளும் விழியாள்சந்த்ர மதிதனைப்பருவமாக
நாளொருமேனியாக நலமுடன்வளர்த்ததாழி
கேளிந்தசமுகந்தன்னிற் கிளிமொழியாளமாதை
நீளிசைக்குடைக்கீழிந்த நிமிஷத்திலழைத்துவாராய்

வசனம்.

கேளாய் சந்திரமதி யம்மனுடைய அன்புக்கிசைந்த தோழிப்பெண்ணே நம்முடைய ஆண்டவராகிய மதியராசாவின் உத்தாரப்படிக்கு இந்த சுயம்வரச்சாலைக்கு நம்முடைய சந்திரமதி யம்மானை முத்துக்குடைநிழலி லழைத்துவா தோழிப்பெண்ணே.

தோழி-வசனம்.

அப்படியேயழைத்துக்கொண்டு வருகிறேன்சுவாமி.

தோழி - விருத்தம் - இ-ம்-காம்போதி

மானையுருக்குங் கண்ணிமணிச் சந்திரமதியேபோற்றி
பார்புகமுனதுதந்தை பண்புறுசபையின்மன்னர்
சீருடனிருக்கின்றாருன் சித்தத்திற்கிசைந்தோர்தம்மை
நேர்பெறுமாலைசூட்ட நீயெழுந்தருளுவாயே

வசனம்

கேளுஞ்சந்திர மதித்தாயே எங்களாண்டவராகியும் உன்னுடைய பிதாவாகியுமெழுந்தருளி யிராநின்ற மதியராசன் சமுகத்திலே ஐம்பத்தாறு தேசத்திராசக்களும் வந் திருக்கிறார்கள் உன்பிதாவின் உத்தாரப்படியே யுன்சித்தத்திற்குச்சம்மதமான புருஷனை நீமணமாலைசூட்டி விவாகஞ்செய்து கொள்ளத்தக்கதாக இந்தமுத்துக்குடை நிழலில் எழுந்தருளும் அம்மணி.

சந்திரமதியம்மன் வசனம்.

ஆனலப்படியேபோவோம் என்னருமையுள்ளசகியே
சந்திரமதியம்மன் சுயம்வரச்சாலைக்கு-வருகிற-தரு.
இ-ட்-சாவேரி-தாளம்-ஆதி.

மாதுசந்திரமதிவந்தாள் மாசிலாதகனபூசிதமணியென (மாதுசந்)
பூதலமீதென்னமாதவஞ்செய்ததென்று
பொன்னுலகோர்மதிக்க நன்னயமாய்த்துதிக்க (மாது)
குவிந்துதிரண்டுவளர் மேகம்போல்நிறைந்த
கொண்டைச்சொருகழகுந் துன்னவே-வைத்த
சோதிலாச்சந்திரப்பிறை சூரியப்பிறைமனக்
குப்பிதளதவென்ன மின்னவே-நல்ல
தவளநிறமாமுத்துச்சுட்டி நுதலழகுந்
தாமரைமலர்முக பொன்னவே-மதன்
தருசேர்புருவமவன் வைச்சிலையோகவென்
தருந்கருமென்னுலகோர் டன்னவே-வள
ருவமையிகுத்த தமிழ் மூக்கும்பவளவாயும்
உசிதகன்னடியேபோலுங் கன்னமும் வள்ளைக்காதுந்
தவறில்லாதவித்த வனிதையழகாச்சொல்லச்
சுமுகமுகவசமோ தவஞ்செய்துவந்து-நல்ல
தகைபெறு செப்பினையொப்பிடச்செப்பருமற்புதவற்புத மெய்ப்பொருளொப்பென விற்பனை கைப்பிடி பற்பல விற்பனர் முற்பலவினுமென பொற்புறு மொளியென விசயசுந்தர திருமகளெனவொளை வுசிதசொர்ணமணி வுருவெனவழகிய (மாதுசந்திரமதி)

சந்திரமதி-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

அருமையாய்த்தவஞ்செய்தே யன்புடனேயெனையளித்த
பெருமைநிறைவேந்த பிரபலனேசரணமையா
தருமமுறைநின்சமுகந் தன்னிலெனையழைத்த
கருமமெனக்கறியக் கருதியருள்செய்வாயே

வசனம்.

சரணஞ் சரணமையா என்னையீன்ற பிதாவே யென்னைவரவழைத்தகாரியம் அருளிச்செய்யவேணும் எனதுபிதாவே.

மதியன்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

அந்தமிகுமருளா லருமைமகளெனவே
விந்தையுடன்வந்துதித்த மின்னேநிலாழிகண்டாய்

இந்தச்சமுகத்திலிருக்குமன்னர்தங்களிலுன்
சிந்தைக்கிசைந்தவர்மேல் திகழ்மாலைசூட்டுவையே

வசனம்

கேளும்மா எனதுகலைப்புத்திரியாகிய சந்திரமதித்தாயே சந்திரமதித்தாயே இந்தமகாராசருடைய கூட்டங்களிலே உன்மனதுக்குத் தகுமான புருஷனைநினைத்துப்பார்த்துத் தீர்மானித்துத் திடச்சித்தமாய் இந்தமாலையைக் கொண்டுபோய் அவர்கழுத்திற் போடுவாயானால் அந்தப்புருஷனை யுனக்கு விவாகஞ்செய்துதருகிறேன் அப்படியேசெய்யம்மா.

சந்திரமதி-வசனம்.

அப்படியேசெய்கிறேன் என்னையின்றபிதாவே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

தோகையேயெனதுதந்தை சுயம்வரமமைத்தாரிந்த
ராசைமன்னவர்களெல்லா மகிழ்ந்துவந்திருக்கின்றாரே
ஆசையால்மகிழ்ச்சியாய்நா னருமணமாலைசூட்ட
ஏகமாயிவரையின்னா ரின்னாரென்றுரைசெய்வாயே

வசனம்.

கேளாயெனதுபிராணப்தமான சகியே எனக்காக என்பிதாசுயம்வரஞ் சாட்டிவைத்தார் அதற்காக ஐம்பத்தாறு தேசத்திராசாக்களும் வந்திருக்கிறார்கள் அவர்களை யின்னா ரினியாரென்று எனக்குத்தெரியச்சொல்ல வேணுஞ்சகியே.

தோழி-வசனம்-

அப்படியேசொல்லிக்கொண்டு வருகிறேன் பராமுகமில்லாமல் பிரியமாய்க்கேட்க வேணுந்தாயே.

தோழி சந்திரமதியம்மனுக்கு
இராசாக்களைச்சொல்லுகிற-தரு
இ-ம்-புன்னாகவராளி-தாளம்சாபம்.

சொல்வேன்கேளம்மா-அம்மாநான் சொல்வேன்கேளம்மா-இந்த
துரைமன்னவர்கள் தங்கள்நாமப்பெயர்வகை (சொல்வேன்)

வெல்லுஞ்சந்திரசூரிய விசயவம்சத்தனில்
விளங்கவந்திருக்கின்ற வீரர்பெயரைநானே (சொல்)

காசிதேசவிற்பன்னன்-அம்மாயிவன் காம்பிலிதேசமன்னன்
மாகில்லாச்சர்பன்னன்-அம்மாயிவன் மகதநாடாளுமன்னன்
பூசிதவீரன்-அம்மாயிவன் பதிதங்கையதீரன்
மேகலாவிய மாறன்-அம்மாயிவன் சிந்துதேசவீரன்
வாசமலர்த்தாரன்-அம்மாயிவன் மங்களகெம்பீரன்



பேசுங்கனவுதாரன் அம்மாயிவன் பெருங்கோங்குக்கதிபதியான்
வீசும்புகழ்பிரசங்கன் அம்மாயிவன் திருதமிழ்நாடமன்னன்
ஆசைகொள்ளசளர்கன் அம்மாயிவன் அயோத்திமாநகர்துங்கன்
வாசவன்போல்வளர்மதிதயன்வாத்தியால் வந்துநிற்குஞ்சந்திரமதியே
தலைநிதமேசொல்வேன் (கேளம்மா)

சந்திரமதியம்மன்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

என்னுடைமந்தனெண்ணமெல்லாமீடேறவேநினைக்கும்
வண்ணமிகுதோழியெனவாய்த்தமயிலேகேளாய்
நன்னுமறையோருரைத்தநாயகனிவர்தானோ
தன்னையியாமென்னமொருதரமெனக்குச்சொல்வாயே.

வசனம்.

கேளாயெனது பிராணபதமானசகியே முன்னாலேயாத்திரைவந்த பிராமணர்கள்சொன்ன மகாநுபாவர் இவர்தானோ இன்னமொருதரம் எனக்கு விபரமாய்ச்சொல்லடி சகியே.

தோழி-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

இவரேதிரிச்சங்குதந்தவிசைபெறுபுத்திரநிதியாம்
இவரேகதிர்குலத்திலியங்குசிரோமணிகண்டாய்
இவரேசத்தியநிதிபிதாபிசகமேதேபிருக்கும்
இவரேசக்கிரவர்த்தியெழிலரிச்சந்திரனிவரே

வசனம்.

இவர்தானிவர்தானம்மா சூரியவம்சத்திலே பிறந்தருளோத்துங்கனான திரிச்சங்கு மகாராசாவின்புத்திரர் அயோத்திமாபுரியையரசாட்சிசெய்யாநின்ற சத்தியத்தையுங்கீர்த்தியையுந் தர்மத்தையும் நீங்காத அதிரூபசுந்தரியபுஜபலபராக்கிரமசாலியாகியசக்கிரவர்த்தியென்றுவிளங்காநின்ற அரிச்சந்திரமகாராசன் இவர்தானம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-காம்போதி.

சுந்தரச்சகியேயிந்த துரைமன்னர்சபையிலேநானே
சுந்தரப்புகழுமிந்தத்தாரமன்னவனையிப்போது
சொந்தநாற்கலைவல்லோர்துதித்துதெய்வத்தைவாழ்த்தி
விந்தைசேர்மாலைசூட்டி மிகுமகிழ்வடைகுவேனே

வசனம்.

கேளடியெனது பிராணபதமான சகியேயிந்தமகாராஜசபையிலேதானே யிதோயிந்த ராசவர்க்கங்களெல்லாம் புகழ்ந்தகம்பீரமாகிய இவரேயெனக்குப் புருஷனாக இவர்கழுத்திலே யிந்த மாலையைச்சூட்டுகிறேன்பாரடி சகியே.

தோழி வசனம்.

மகாசந்தோஷம் அப்படியே செய்யலாந் தாயே.

அரிச்சந்திரன் விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

திறமிகுமைம்பத்தாறுதேசமன்னவரோகேளீர்
மருமணமாலைசூட்டமன்னர்க்குமுறைதானுண்டோ
பிறைநுதலிவள்கழுத்திற்பிறக்குமங்கலியங்கண்டோம்
மறமிகுமதிதயன்செய்வஞ்சனையறிகிலீரா.

வசனம்.

கேளுங்கள் ஐம்பத்தாறு தேசத் திராசவர்க்கங்களே இதோ ஆச்சரியம் சந்திரவம்சத்திலேயாவது சூரியவம்சத்திலேயாவது ஒரு தரம்விவாகம்பண்ணிக்கொண்ட ஸ்திரீயைமறுபடியும் அவள்மாலை சூட்டினால் அதையேற்றுக்கொண்டு விவாகஞ்செய்து கொள்ளுகிறது தர்மமா அதுமுறைமையா க்ஷத்திரியருக்கு அதுதகுமாஇதோ இந்தமதிதயராசன் நன்மையெல்லாம் பங்கம்பண்ணத் தக்கதாகச் செய்த கபடக்கண்டீர்களா அரி அரி.

கேகயராஜன்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

மற்புயவரிச்சந்த்ரேந்த்ரமகிபமாமணிநீர்கேளுங்
கற்புயரிந்தமாதைக்கண்டுநீர்இப்பதேதோ
விற்பொலிமதிதயன்சொல்விளங்குமிச்சயம்வரத்தைத்
தற்பனைசெய்தானென்றுசவித்திடுவகையேதையா.

வசனம்.

கேளும் சக்கிரேஸ்வரனாகிய அரிச்சந்திரமகாராசனே இந்தக்கன்னிகையாகிய சந்திரமதிமகாபதிவிரதையாச்சுதே இந்தப்பானைப் பார்த்து நீர்இந்தப்படிநிந்திக்கலாமா அவள்முன்னே ஒருபுருஷனுக்குவாழ்க்கைப்பட்டு மறுபடியுமாலைசூட்டவந்தாளென்றும் இந்த மதிதயராசன் எதோமோசஞ்செய்தானென்றும் மறுபடியுஞ்சுயம்வரமுண்டாக்கினானென்றும் அந்தமாள்கழுத்திலே திருமங்கிலியமிருக்குதென்றும் ஏகமகாசபையிலே இப்படிப்பங்கமாய்ப் பேசத்தகுமோ அது தெரியச்சொல்லவேணும் மகாராசனே.

மகததேசாதிபதி-விருத்தம்-இ-ம்-அடாணா.

தீரினிவாழுங்காண்பார் தெறிக்கலல்கடந்துசொல்வா
பாரினில்மதத்தெந்தைப் பகர்ந்திடவெவராலாகும்
நீரனையிதயோர்த்தான் செய்கையேயலதுவேறே
சாருமித்திரபேதத்தின் தகைமையோ அறிகிலோமே.

வசனம்.

கேளும் சக்கிரேஸ்வரனாகிய அரிச்சந்திர மகாராசனேயோசித்



துப்பார்த்தால் லோகத்திலேசத்தசமுத்திரத்தினது சலத்தினுடைய ஆழங்களைத்தீர்மானித்து இவ்வளவென்றுஆழங்காணலாம் ஆகாசவளாக்கும்பற்றி யெரிந்துவருகின்ற அக்கினியிலேயும் நுழைந்துவரலாம் பெண்களுடைய மனதை இன்னதென்றுஒருவராலுங்காணக்கூடாது ஆனதாலிந்த மதிதயராசனுடைய மித்திரபேதமோ அல்லது என்னவிதமாகவிளைந்ததோ நாம் எப்படிசொல்லலாம் அரிச்சந்திர மகாராசனே.

மதிதயராசன்-அரிச்சந்திரனுக்குச்சொல்-விருத்தம்.
இ-ம்-சௌராஷ்டிரம்

கரும்போல்விளங்கவந்த தகைபெறுமரிச்சந்த்ரேந்திரா
திருபமாமணியேகேளாய் நேரிழையிவள்தன்சேதி
திருநிறைமங்கல்யந்தான் நிகழ்கழுத்துடனேயுந்த
பானருள்வரத்தின்வாய்மைப் பணமெலாமறிகிலாயோ.

வசனம்.

கோபமில்லாமற் கேளும் ராசசக்கிரேஸ்வரனாகிய அரிச்சந்திரமகாராசனே இந்தஉத்தமியினுடைய சேதியைநீர் விசாரித்தறிகிலையோ ஆதியிலேநான்பரமசிவனைநோக்கித்தவஞ்செய்துபெற்றேன் அவர்கடாட்சித்தவரமிவள்கழுத்திலேதனக்குத்தானே ஒருதிருமங்கலியம்விளங்கும் அதேதெனறுலிவள்மகாசத்தியவதிஆகையால் அந்தத்திருமாங்கல்யம் எவர்கள்கண்ணிலே காணப்படுமோ அவர்களே இந்தவுத்தமிக்குப் புருஷனாவார்களென்று அனுக்கிரகஞ்செய்திருக்கிறார் அரிச்சந்திர மகாராசனே.

இதுவும்-மதிதயன்-விருத்தம்-இ-ம்-பேகணம்.

இன்னமுஞ்சொல்வேன்கேளாயெழில்பெறுமரிச்சந்த்ரேந்திர
கன்னிகையிவட்குத்தோன்றுதிருப்பதுமன்றிகண்டாய்
மன்னவருளரேயிந்த மகாசபைதனிலுள்ளோரே
பன்னியகண்ணுற்கண்டாற்பகர்ந்தினியுரைசெய்வீரே

வசனம்.

இன்னமொன்று சொல்லுகிறேன்கேளும் அரிச்சந்திரமகாராசனே ஆதியிலேபரமசிவனாலேகடாட்சித்தவரத்துக்கொருமாறுபாடில்லாமல் அவளுக்குப்புருஷனாக வரப்போகிறவனுடையகண்ணுக்குத்தெரிகிறதேயல்லது அவள்தன்கண்ணுக்குத்தெரியாமல் மற்றவர்களுடையகண்ணுக்குத் தெரியாமலிருக்கிறது ஒருதிருஷ்டாந்திரம் இதோ இந்த மகாராசசபையிலே யிருக்கிறராசராசமன்னர் மந்திரிகள் பெரியோர்கள்முதலாய்சகலத்திராளுக்குந் தெரிந்திருக்குமோ யானுஞ் சொல்லலாம்.

நெட்டைச்சேஷையங்கார்-வசனம்.

ஆம் ஆம் அதுவெசரி அதுவேசரி நேக்கேதானாலுங்கொடுக்க வேணும்மகாராசனே.

கட்டைவரதையங்கார்-வசனம்.

அடாய் அறுதலைப்பெட்டிமகனே நோக்கேதுக்கடா கொடுக்கிறது ஒப்படக்காராசுவ்ன நேக்கேதாகிலுஞ் சமர்ப்பியுங் கண்ணுலேகண்டாலு மில்லையென்று சொல்லிவிடுகிறோம்.

குறுட்டு அப்பனையங்கார்-வசனம்.

அடா நேக்குத்தெரியும் சீமாத்திரமன்னு உம்முடைய தம்பி உங்கள்தகப்பனார் உங்கள்பாட்டனார் உம்முடையபெருமகன் நீங்களெல்லாரும் அபத்தப்பட்டிருக்கீங்கள்தானே.

கிழக்குப்பனையங்கார்-வசனம்.

அன்னுடாசீஷா ஏதோ உகாநிமித்தியம் ப்ரகுரதிவேஷிர்ப் படியாகிலும் நம்முடைய அரிச்சந்திரமகாராசனுக்கு விவாகம்நடந்தால் நடக்குவேண்டியதெல்லாங் கொடுப்பார் அபத்தம் எதுக்கடா அவள்யமா பதிவிரதையாச்சுதே அப்படியிருக்குமா.

பிராமணாள்-வசனம்-சதாஸ்து-சதாஸ்து.

கேகயன்மந்திரதேசாதிபதிமுதலாகியதேசாதிபதிகள்-விருத்தம்.

இ-ம்-பைரவி.

சீர்பெறுமரிச்சந்த்ரேந்திர நீசயாமணியேகேளாய்
ஆரவேநீதான்சொன்ன தபத்தமேயாகுமிந்த
மாதரிழைமீதிற்குற்றம் நினைந்திடிற்பாபஞ்சேரும்
தார்குழலிவளைவாழ்த்திச் சந்ததந் துதிக்கலாமே

வசனம்.

கேளும் ராசசக்ரேஸ்வரனாகிய அரிச்சந்திரமகாராசனே நீர்சொன்னவார்த்தையைப்பார்க்குமிடத்தில் அது அபத்தமாகக்காணப்படுகுது இந்தமகாலக்ஷ்மியைப்பார்த்தால் குற்றஞ்சொன்னவர்களுக்குப்பாபம்வந்து லபிக்கும் எப்போதும் நாமெல்லோரும் மகாபதிவிரதையென்று தோத்திரம்பண்ணுகிறதற்குத் தடையுண்டோ குறைவில்லை அரிச்சந்திர மகாராசனே.

அசரீரி-ஆகாசவாணி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

மணிமுடியரிச்சங்கின்ற மைந்தனேயரிச்சந்திராகேள்
அணியிலாமதிதேயந்திர னருந்தவப்பலனால்வந்த
தணிவில்லாவழகுவாய்ந்த சந்திரமதியென்பாளை
மணிகிரீடாநீர்சொன்ன படிமணப்புரிகுவாயே.



வசனம்.

கேளப்பா அரிச்சந்திரமகாராசனே பரமசிவனுடையவரத்தினாலேவந்த சயம்பரமாகிய திருமாங்கிலியந்தோடுங்கூடிய இந்தசந்திரமதியம்மாளை நீ மணமாலை சூட்டிக்கொள்ளுகிறதற்கு யாதொரு சந்தேகப்படவேண்டியதில்லை இதோ சத்தியமாகநானேசொல்லுகிறேன் நான் தருமதேவதையாகிய ஆகாசவாணி இவள்கன்னிகையென்கிறதற்கு எவ்வளவும் யோசனை பண்ணவேண்டியதில்லை அரிச்சந்திரமகாராசனே.

சந்திரமதி-சொச்சகம்-இ-ம் புன்னாகவராளி.

இந்தமன்னர்சபைதனிலே யினப்பிசகாய்மதித்துணர்ந்து
சுந்தரஞ்சேர்திரிச்சங்கு சுதனெனவாழ்மாநிருபர்கேள்
அந்தசிவனளித்தவரம் அவப்படுமோநிஜ மில்
வந்துவிழுமுன் கழுத்தில் மணமாலையெனவியம்புவே

வசனம்.

ஆனால் நானொன்று சொல்லுகிறேன் கேளும் மகாராசனே ஆதியிலே பரமசிவன் கொடுத்த வரப்படியே என்கழுத்திலுண்டாகிய திருமங்கிலியத்தைக் கண்டவரே எனக்குப் புருஷனாகவேண்டியது யாத்திரைவந்த பிராமணாள் இவர்போலச் சொன்னமாத்திரத்திலே சத்தியமா யிவர்பேரிலெனக்கு விளைந்த ஆசையுமதிப்பரமசிவன் கடாட்சித்த வரமேயல்லாமல் வேறில்லையென்பது நிசமேயானால் இதோ என்கையிலிருக்கிற மாலை உம்முடைய கழுத்திலே மணமாலையாய் விழக்கடவது.

பிராமணாள்-வசனம்-சதாஸ்து.

பொது-சொச்சகம்-புன்னாகவராளி.

போகவசீரி புகழ்ந்தவதனுலாகரெல்லாம்
ஈதுநிசமென்றுரைத்தாரிப்பால்மதிதயன்றன்
மாதுவிடுத்த மணமாலையரிச்சந்திர
நீதன்கழுத்தில் நிலவாமாய்விழுந்ததுவே

வசனம்.

இந்தப்பிரகாரம் சந்திரமதியம்மன் அந்தசபையிலே சத்தியத்தைக் குறித்துத் தன்சுய மாங்கிலியத்தைக் கண்டவரே தனக்குப்புருஷனாவாரென்று ஈஸ்வரர்கொடுத்தவரத்தை நினைத்து மாலையை ஆகாசவீதியில் எறிய அது அரிச்சந்திரமகாராசன் கழுத்திலேவந்து விழுந்ததென்றறிக.

மதிதயாசன்-மந்திரிக்குச் சொல்-விருத்தம்-இ-ம்-தோடி.

புகழ்பெறுமந்திரிகேளென் புண்ணியபலனைக்கண்டேன்
மகிழ்ந்தலைப்பத்தாறு மண்டலாதிபர்கள்காண

மகனெனவெனக்குவாய்த்த மாறுபுண்ணியமுங்கண்டேன்
சகலந்தனிலெங்போதுந் தவஞ்செய்தோரார்சொல்வாயே

வசனம்.

கேளும் விவேகமந்திரி ஆஆஆ ஓஓஓ எனக்குமகனாக வந்துபிறந்த இந்தமகா உத்தமியினுடைய புண்ணியவசத்தையுங் கண்டேன் நான்செய்த புண்ணியத்தையு மிந்த பிரத்தியட்சமாகக் கண்டேனே என்னைப்போல யார்தான் தவோபலன் அனுபவிக்கப்போகிறார்கள் நான்செய்தபாக்கியமே பாக்கியம்.

மந்திரி-விருத்தம்-இ-ரா-ஆனந்தபைரவி.

பார்புகழ்மதிவேந்திர பார்த்திபனேகேளும்
ஏர்பெறுமுனதுபுத்திரி யெண்ணப்படுங்காலம்
சேரவேமுடிந்ததப்பால் திருக்கல்யாணசாங்கியந்
சீர்பெறவசிஷ்டராலே திருத்தமாய்முடிக்கச்செய்வீர்

வசனம்.

கேளுமெங்களாண்டவனாகிய மதியமகாராசனே தேவரீருடைய திருக்குமாரத்தியாகிய சந்திரமதியம்மன்செய்த தபோபலம் நிறைவேறுங்காலம் வந்தது ஆகையால் ராசசக்கிரேசுவரனாகிய இந்த அரிச்சந்திரமகாராசன் உமக்கு மருமகனானார் இனி திருமாங்கலியதாரணமுதலாகிய கலியாணச் சடங்கு நடத்தி வைக்கும்படியாக இதோ எழுந்தருளியிருக்கிறாரே வசிஷ்டமகாமுனி யிவருஞ்சொல்லியவாலே நடக்கும்படி செய்யவேணும் மகாராசனே.

மதியராசன்-வசனம்.

அப்படியே செய்வோம் விவேகமந்திரி.

மதியன்-விருத்தம்-இ-ம் சுருட்டி.

கனமொளிர்பிரமரிஷி வசிஷ்டமாமுனிவரேயுற்றுன்
குணநிதிவசிஷ்டநாத குருவேநின்மலர்த்தாள்போற்றி
மணமாலைசூட்டிநிற்கு மகட்குமங்கல்யசாங்கந்
தனிவரநடத்திவாழ்த்தித் தகைபெறமுடிப்பாய்சுவாமி

வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி வசிஷ்டமாமுனிவரே இதோ இந்த அரிச்சந்திர மகாராசனுடைய திருக்கழுத்திலே அடியேன் செய்தபுண்ணிய வசத்தினாலேயுந் தேவரீருடைய கடாட்சத்தினாலேயும் அடியேனுடைய குமாரத்தி பதிவிரதாதர்மம் நிலைக்கத்தக்கதாக மணமாலைசூட்டி நிற்கிறாளே இனி திருமாங்கலியசாங்கியம் நடத்திவை



க்கத்தக்கதாக மணவறை செய்திருக்கின்ற கல்யாணமண்டபத்திற்கு எழுந்தருளும் சுவாமி வசிஷ்டமகாமுனிவரே.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மந்திரத்தோளாய்மிக்க மதியமன்னனேகேளாய்
சுந்தரவரிச்சந்திரற்குன் தோகையேபாரியாளாள்
மந்திரவோமசாங்கியம் வகையெலாமுடித்துத்தானே
இந்திரனிந்திராணிபோலு மென்றும்வாழ்ந்திடச்செய்வேனே

வசனம்.

கேளு மதிய மகாராசனே உம்முடைய குமாரத்தியாகிய சந்திரமதியம்மன் நம்முடைய சிஷ்யனாகிய இந்த அரிச்சந்திரமகாராசனுக்கே பாரியாளாள் அதற்கினிச்சந்தேகமா இந்தத் திருக்கல்யாணச்சடங்கெல்லாம் நானே செய்விக்கிறேன் இதோ கல்யாணமண்டபத்திற்கு வருகிறேன் நடவுங்கள்.

மதியராசன்-வசனம்.

அப்படியே யெல்லோருந் திருக்கல்யாண மண்டபத்திற்கு வரக்கடவோம் சுவாமி.

பொது விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

மாதெறிந்திட்டமாலை மன்னவன்கழுத்திலாழுங்
கூறில்லாமதியன்செய் தோத்திரத்தாலேயந்த
கோதில்கல்யாணசாங்கங் குறித்தமண்டபத்தைநாடி
மாதவமிகுவசிஷ்டர் மகிழ்வுடன்வருகின்றாரே

வசனம்.

அதேதெப்படியென்றால் சந்திரமதியம்மனானவள் தன்னுடைய பதிவிரதா தர்மத்தை நிலைநிறுத்தி ஆகாசத்திலே விட்டெறிந்த மாலையானது அந்த அரிச்சந்திரமகாராசன் கழுத்திலே விழுந்தபடியால் அந்தச்சந்திரமதியம்மனைப்பெற்ற மதியராசன் கல்யாண சாங்கிய நடக்கும்படி வசிஷ்டரைப் பிரார்த்திக்கக் கலியாணமண்டபத்திற்கு வசிஷ்டர் வருகிற விதங் காண்க.

வசிஷ்டர்-கலியாண மண்டபத்திற்குவருகிற தரு
இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

பிரம்மரிஷிவசிஷ்டரிதோ வந்தாரே-சலமிலாநெறிதவநிலையறி (பிர)
தர்மார்த்தகாமமோட்ச சதுர்விதமுறைநிலைபடாட்ச
தயாரசமிகுத்தசோதி சகலநிதியெனுப்பிரதாப (பிர)
துங்கமிகுசடைமுடிநின்றதுலங் கமகமேருவின்மிசைமேவியமதி
போல்சுடர்நிறையும்படாத-தூங்கமிகுசடைமுடிநின்றதுலங்க
பொன்னுல்விழுவிழுதென்றிடப்புவியோர்முதலெலவருந்துதி
புகழ்ந்தமுத்தவாணிமிதென்றிடமகிழ்ந்திற்குணநீர்புகன்றிட (அ)

பண்ணுந்தவநிலைபெற்றவர் பரவுங்கதிதனையுற்றவர்
நண்ணுஞ்சுரர்முதல் மற்றவர் நயமாம்பலகலைகற்றவர்
நாடிநிலைதேடியிசைபாடிகொண்டாடிவரு
நாசதேவேதமோத நயமொடீவிதியொரு பயனெனவளர்தரு(து)
பிரணவகாரசொருபமிதுவென்னவே மெய்யிலங்கத்
தங்குங்காதில்குண்டலந்தரித்துத்தகைபெறநித்யமந்த்ரமுச்சரித்து
பொங்கும்பாத்தைவனுச்சரித்துப் போதசாரகலைகள்விரித்துப்
புகழ்ந்துமனமகிழ்ந்து நல புனிதந்திருத்தண்டொடுநூலணி
சனனுற்றவயானசிரோன்மணிப்பிரம்ம (து

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம-ஆனந்தபைரவி

பார்புகழ்மதிதயேந்திர பார்த்திபாவுனதுபுத்ரி
சீர்தருமரிச்சந்திரற்குத் திகழ்மாலைசூட்டினாலே
பேர்தருவிவாகசாங்கிய மெழிலுடனடத்துதற்கே
சார்தருத்ரவ்யவோமஞ் சமித்தெல்லாம்வரச்செய்வாயே

வசனம்.

கேளாய் மதிதயமகாராசனே உனதுபுத்ரியாகிய இந்தச்சந்திரமதியம்மன் நம்முடைய அரிச்சந்திரமகாராசனுக்கு மணமாலைசூட்டினாளே அனுமேவசரி யாகிலுந் திருமங்கல்ய சாங்கியநடத்துதற்கு வேண்டிய ஓமத்திரவிய முதலாகிய சமித்துகளும் சீக்கிரமாயழைப்பிப்பியும் மகாராசனே.

மதிதயன்-வசனம்.

அப்படியே வேண்டிய ஓமத்திரவியங்களும் சமித்துகளும் சகலசாமக்கிரியைகளும் இதோவரவழைத்தேன் கல்யாணசாங்கியஞ்சீக்கிரமாக நடக்கட்டுஞ் சுவாமி.

வசிஷ்டர்-வசனம்.

ஓய் கேகயமகாராசனே நம்முடைய அரிச்சந்திரமகாராசனை மணக்கோலமாக அலங்காரஞ்செய் திந்தத் திருமணவறையில் இந்த ஆதனத்தின்பேரில் இருக்கச்செய்யும்.

கேகயராசன்-வசனம்.

அப்படியேசெய்கிறேன்சுவாமி வசிஷ்டமகாரிஷியே.

வசிஷ்டர்-வசனம்.

ஓய் மதிதயமகாராசனே உம்முடைய குமாரத்தியாகிய சந்திரமதியம்மனை மணக்கோலமாக அலங்கிர்தஞ்செய்து இந்தத் திருமணவறையில் அரிச்சந்திர மகாராசனுடனேகூட இந்த ஆதனத்தின்பேரி லிருக்கச்செய்யு மிதுமகா சுபலக்கினம்.



மதிதயராசன்-வசனம்.

அப்படியே அலங்கிர்தஞ்செய்து எனதுதவப்புத்திரியாகிய சந்திரமதியம்மனை இதோ ஆதனத்தி லிருக்கச்செய்தேன் சுவாமி.

வசிஷ்டர்-வசனம்.

ஓய் பிராமணஸ்வாமிகளே வேதபாராயணஞ் செய்யுங்கள் நவக்கிரக பூசைசெய்யுங்கள் நவக்கிரக ஓமஞ்செய்யுங்கள் இதோ நாமே புரோகிதராகவிருந்து திருமங்கல்யதாரணஞ் செய்விக்கிறோம்.

பிராமணாள்-வசனம்.

சதாஸ்து அப்படியேசெய்கிறோம் ஓய்வசிஷ்டமகாரிஷியே யேதோ எழைப்பிராமணாள் உமக்கொருவாய் விம்சஷிம் எங்களுக்கொருதலைமூட்டை.

நெட்டைச்சேஷையங்கார் வசனம்-நேக்குமப்படியே.

குருட்டு அப்பணையங்கார்-வசனம்-நேக்குமப்படியே.

கிழக்குப்பணையங்கார்-வசனம்-நேக்குமப்படியே.

நத்திவரதையங்கார்-வசனம்-நேக்குமப்படியே.

நெட்டைச்சேஷையங்கார்-வசனம்.

எதுக்கடா நோக்குமப்படியேகொடுக்கிறது.

கிழக்குப்பணையங்கார்-வசனம்.

அடா நெட்டைச்சேஷா யுந்தலைத்தேவடியாள்பிள்ளாய் சமயத்திலேயாவாதாடுகிறாய் நேக்குந்தான் கிடைக்கட்டுமே.

குருட்டு-அப்பணையங்கார் - வசனம்.

அடா நேக்குரெண்டுகண்ணுந்தெரியாது நோக்குக் கண்ணிருக்கிறது அடா யெவாளெப்படி சொல்லுகிறார்களே அப்படிகேட்கிறது தான் நேக்கே கிடைக்கவேணும்.

நத்திவரதையங்கார்-வசனம்.

நேக்கில்லாதுநந்திரம் நோக்கெல்லாமெப்படியுண்டாச்சுது,

வசிஷ்டர்-வசனம்,

ஓய்பிராமணாளே மகாராசன் உங்களுக்கெல்லாங் குறைவில்லாமல் நடப்பிப்பார் சண்டைபோடாமலிருங்கள் சுவாமிகளே.

பிராமணாள்-வசனம்.

அப்படியேயிருக்கக்கடவோம் சுவாமி வசிஷ்டமகாரிஷியே.

வசிஷ்டர்-வசனம்.

சங்கீதமேளவாத்தியமுழங்கச்செய்யும் மதிதயமகாராசனே.

மதிதயன்-வசனம்.

அப்படியேசகலவாத்தியங்களுமுழங்கச்செய்விக்கிறேன் சுவாமி.

வசிஷ்டர்-ஆசிர்விருத்தம்-இ-ட்-தோடி.

அருந்ததிக்கற்பினளிவ் வருஞ்சந்திரமதியைக்கூடிப்
பெருந்தனையரிச்சந்திர பிரியமாய்வாழிவாழி
திருந்தியவுலகந்தன்னில் திகழுமெய்வசனங்கொண்டே
பொருந்தியபுத்ரசம்பத்தும் புகழுமாய்ப்பெற்றுவாழி

பிராமணர்-வசனம்.

சதாவ்று சகலயாகங்களு முஞ்சித்திரஸ்துநிர்க்கவஞ்சகல தந கரவஸ்துவாகன வெகுபுத்திராயஞ் சித்திரஸ்து சுபமஸ்து.

மதிதயராசன்-கட்டியனுக்குச் சொல்-விருத்தம்.

இ-ம்-ராட்டை.

புனிதநற்சபையிற்கொக்கும் புகழ்பெறுகட்டியக்காரா
வனிதையாமெனது புத்திரி மணக்கோலமிசிசிகொண்டேன்
முனிவர்கள்முதலாய்மற்றமுழுமறைவேதியர்க்கு
தநகநன்மாரிபெய்து களிப்புறச்செய்குவாயே.

வசனம்.

கேளடா ஆசாரவாசற்கட்டியக்காரா நான்செய்தபூர்வபுண்ணியத்தினால் எனதுதவப்புத்திரியாகிய சந்திரமதியம்மனுக்குத்திருக்கல்யாணஞ்சம்பிரமமாகவே நிறைவேறியாச்சுதே யினி குறையென்னவிருக்குது இச்சபைக்குவந்திருக்கிற மகாரிஷிகள் பிராமணாள் பெரியோர்கள் சர்வத்திராணுக்கும் அவாளவாளுடைய அபீஷ்டங்க நிறைவேறத்தக்கதாக சொர்ணவருஷமாகவருஷித்து வேண்டியதெல்லாம் யதேஷ்டமாகக் கொடுத்தனுப்பிவையும் பின்னாய்.

கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேசெய்கிறேன்சுவாமி.

பொதுகெச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

சந்திரமதிதன்னையரிச் சந்திரமன்னன்மணஞ்செய்து
சிந்தைமகிழ்வானபின்பு திருந்தமிர்தபோசனங்கள்
விந்தையுடனுண்டிருக்க விறல்மறையோர்போனபின்பு
அந்தவசிஷ்டமுனியகமகிழ்ந்துதவே துரைப்பார்

வசிஷ்டர்-மதிதயனுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

மலைபெனத்திரண்டதோளாய் மதிதயமன்னாகேளாய்
நிலைபெறுமுனதென்னத்தாள் நிறைவேறி மகிழ்ச்சிகண்டாய்
நலமிகுமரிச்சந்திரேந்திர நாதனன்புத்திரியோடும்
சுலைநிறைவயோத்திக்கேகக் களிவுடனனுப்புவாயே

வசனம்.

கேளு மதிதயமகாராசனே யுர்முடைய என்னத்தின்



வேயுமதுதவப்புத்திரியாகிய இந்தச்சந்திர மதியம்மனுக்குந்திருக்கல்யாணம் நிறைவேறி முடிந்தபடியினாலுக்குமாரனுமைந்த இந்த அரிச்சந்திரமகாராசனையும் உன்முடைய குமாரத்தியையும் நம்முன்னாகவரிக்குங்களையும் பிரயாணசந்நாகப்படிண்ணி அயோத்திக்குப் போய்ச்சேரவுத்தரவுகொடு மதிதயமகாராசனே வந்துவெகுநாளா (ச்சதே

மதிதயராசன்-வசனம்.

அப்படியே போய்வரலாஞ் சம்பூர்ணமாக இருடையிருக்கட்டும் சுவாமி வசிஷ்டமகாமுனியே.

சந்திரமதியம்மன்-மதிதயராசனுக்குச்சொல்-கொச்சகம்.

இ-ம்-புன்னாகவராளி.

எந்தையேயெனையளித்த இனியதவத்தால்மிக்க
மந்திரஞ்சேர்புயமே வளர்மணிநின்றாள்போற்றி
இந்தவந்தனவுமென்னைவளர்த்தே யிவண்கிப்பதிர்
சொந்தமனக்கெய்திவிட நான்தொழுதேன்விடைதவே

வசனம்.

கேளுமெனதருமையாகிய பிதாவே ஈஸ்வரனுக் கிரகத்தினாலேயெங்களைப்பெற்று இதுவரைக்கும் வளர்த்து இந்த மகாராசனுக்கு என்னை விவாகஞ்செய்து கொடுத்தீர் நான் எத்தனைகாலமிங்கேயிருந்தாலும் புருஷனுடைய சொந்தமேயல்லாது வேறில்லை ஆகையால் உத்தரவுகொடும் போய்வருகிறேன் எனதுபிதாவே.

மதிதயராசன் வசனம்.

நல்லது அப்படியே போய்வரலாமம்மா எனது தவப்புத்திரியாகிய சந்திரமதியே.

அரிச்சந்திரன்-வசனம்.

நானும் போய்வருகிறேன் சென்றுகொடும் மதிதயமகாராசனே அப்படியே போய்வரலாம் இராசசக்கிரவர்த்தியாகிய அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-தரு இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

தருக்குள்ளபுவிபுகழரிச்சந்திரமகாராசன்தன் திருநகர்க்குவந்தான்
செருக்குள்ளமந்திரிமாரும் சேனைத்திரளதுவாரும்
சோரட்டிந்துபுகழ் தேவிசந்திரமதியும்
மதிதயராசனன்பாய் வாழ்த்திவிடைகொடுக்க
மங்கையராலாத்திமணிக்கத்தாலெடுக்கத்
துதிபெறுமேசிறிக்கைக் கொக்கியிசைதொடுக்கத்
துந்துபியென்றபேரி தொனிமெய்குமுறவும்

சதுர்மறையோர்களுந்தவமிகுவசிட்டருஞ்
சதுரம்பார்த்துநல்ல சமையமிதென்றுசொல்ல (தருக்கு)

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

திசமுங்கண்டுணெநாட்டைத் திறமுடனரசுசெய்து
மகிழ்வுறுமதியன்றன் மகள்தனை மணஞ்செய்தந்தப்
புகழ்பெறு நகரைநீங்கிப் புனிதநல்லயோத்திநாடுந்
தகைபெறவந்துசேர்ந்து சதிருடன்வாழ்ந்திட்டாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக மதியராசன்குமாரத்தியாகிய சந்திரமதி யம்மனைச் சுயம்வரச்சாலையிலே ஐம்பத்தாறுதேசத்திராசாக்களும் அறி யத்தக்கதாக மணமாலைசூட்டிவிவாகஞ்செய்துகொண்டு அரிச்சந் திரமகாராசாவானவர் அயோத்தியாபுரியில்வந்துசேர்ந்தாரென்றறிக

பொதுகொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

துங்ககதிர்குலதீப சுகுணவரிச்சந்த்ரனைச்
சங்கையின்றிப்பஞ்சணைமேற்றழுவிமகிழ்வாழ்நாளில்
இங்கிதமாஞ்சந்த்ரமதிக்கிசைந்தகர்ப்பந்தரித்துவளர்
திங்களொருபத்துஞ் செழிக்கநிறைந்ததுவே.

சந்திரமதிதோழிக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-பியாசடை.

அன்பினிலுயர்ந்தவென்றனழகுள்ளசகியேகேளாய்
இப்பப்போல்வந்தகர்ப்பமிடுக்கிதுநிறைந்ததாலே
என்பதிக்குளைப்பாய்கைதேர்ந்த இம்மருத்துவச்சிவேணும்
பின்பொருவலிகண்டால்நான் பேதைபேதென்செய்வேனே

வசனம்.

கேளாயென்னுடைய பிராணபதமானசகியே யெனக்கானல்லோ துகாலநிறைந்துவருகுது கர்ப்பவேதனை யெடுக்குமுன்னமே எம்பிராணரட்சகரான அரிச்சந்த்ரமகாராசாவுக்குச்சொல்லி ஒரு ம ருத்துவக்கிழவியை அதிசீக்கிரத்துக்கு அழைத்துவாடி சகியே

தோழி-விருத்தம்-இ-ம்-காம்போதி.

வாரணிதனத்தாய்சந்த்ர மதியெனுந்தாயேகேளாய்
பாரிலேசப்பெண்சென்மங்கள் படைத்துதித்தவர்கட்கெல்லாஞ்
சீர்பெறுகவைவரோடே சேர்தலுங்கர்ப்பமாகி
யேர்பெறுமைந்தர்தம்மை யீன்றிடல்சகசமதானே.

வசனம்.

கேளுமம்மா சந்த்ரமதித்தாயே பூமியிலேபெண்சன்மங்களா ய்ப்பிறந்தோர்க ளெல்லாம்புருஷரைக்கூடி யின்பசவுக்கியங்களை



யடைகிறதும் அதனாலே பிள்ளைகளைப்பெறுகிறதும் சவுக்கியமா யிருக்கிறதுதானே அதைக்குறித்து விசனப்படவேண்டியதில்லை நான்போய் நம்முடைய இராசாவுக்குச்சொல்லிமருத்துவக்கிழவி யை யழைத்துக்கொண்டு வருகிறேனம்மா.

தோழி-இராசாவுக்குச்சொல்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

உலகெலாமதிக்குங்கீர்த்தி யுயரரிச்சந்திரமன்னா
மலர்நிறைமுகத்தாள்சந்த்ர மதியெனுமுனதுதேவி
தலனுறுகர்ப்பமாகி யின்றுநிறைந்திருக்கின்றாள்
வலனுறுமருத்துவச்சி வரச்செய்யவேணுமையா

வசனம்.

கேளும் மகாராசசக்கிரேஸ்வரா உமதுபிராணபதமாகிய சந்தி ரமதியம்மனுக்குப்பூர்ணகர்ப்பமானதால் கர்ப்பவேதனை காணு முன்னமே ஒருமருத்துவக்கிழவியை வரவழைத்தனுப்ப வேணு ஞ் சுவாமி

இராசன் வசனம்.

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் இதோ அழைப்பிக்கிறேன்.

இராசன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

ஆசாரவாசல்காக்கு மரியகட்டியக்காராகேள்
தேசாருமென்துதேவி திகழ்கர்ப்பவேதையாலுன்
கூசாமல்மருத்துவஞ்செய் குறிதெரிகிழவிதன்னை
நீசோம்பலாமற்சென்றே நிமிஷத்திலழைத்துவாடா

வசனம்.

ஆரடா ஆசாரவாசற்கட்டியக்காரா என்னுடையபிராணபதமானசந் திரமதிதேவி கர்ப்பவேதனைபடுகிறாளாம் அதிசீக்கிரத்திலேயோ டி மருத்துவக்கிழவியை யழைத்துவாடா.

கட்டியன்-வசனம்.

அப்படியே போய்அழைத்து வருகிறேன்சுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மாதருமணியாஞ்சந்திர மதிகர்ப்பவேதைதீர்க்க
கோதிலாமந்த்ரதந்த்ர குறிநெறியனைத்துந்தேர்ந்து
சாதகம்பெருத்தவித்தை தன்னிலேயிலாக்கியமான
மூதுயர்மருத்துவச்சி முணுகிக்கொண்டுவந்தாளே

வசனம்.

அதோ வெப்படியென்றால் மருத்துவக் கிழவிவருகிறவிதம் காண்க.

மருத்துவச்சி வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

வந்தாளே ராகவே தன்னொடி மருத்துவச்சிகிழவி வந்தாள்
கூவியிரித்தா மருத்துவச்சிகிழவி வந்தாள்
சங்கையில்லாமலே நான்கைதொட்டவிடமெல்லாம்
தழைத்துப்பிள்ளைபெற்றுப் பிழைத்துநன்றாய்நிலைத்து
சுகிருடன்வாழ்வரென்று சாமர்த்தியமேபுகன்று (வந்தாளே)
எடுத்தடிவைக்குமுன்னே யிறைத்திறைத்தேதடுக்கி
வெத்தலைதூாவென்றே யென்னிக்கொண்டேயொடுங்கிச்
சுடுத்தபாகவே வெட்டி சேலையூமுன்றிக்கொண்டு
கண்ணைமூடித்திறப்பார்த்து அவிழ்பூர்மிதக்க
தலையைப்பிடையிற்சேர்த்து குடுக்கைபோல்வாயிற்பொங்கி
கோடுவாய்வழிச்தொழுக்க சொறட்டையிழுக்கக்கண்ட
துருத்திபோல்முலைதழுக்க குர்ரியிருர்து எழுர்திருந்து
குணிகுனிமென்ன முணமுணவென்றுகள்ளக்
கொழுந்தசிரிக்கவென்னைப்பிழைக்கவொட்டார்களென்ன (வ)

வசனம்.

என்னடிசக்களத்திமகளே யென்னையென்னடி யலட்டுகிறாய் எனக்கென்ன கண்ணுதெரியுதா மண்ணுதெரியுதா நடக்கக்கூடுதா அடிசும்மாயிருந்தாலும் இருக்கவொட்டவில்லையே நல்ல ஆண்பிள்ளையைப்பெறுவாய்பயப்படாதேயம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

மந்திரதந்திரத்திறமிக்க மருத்துவமாதே கேளாய்
இந்தவேதனையின்கோர மென்னென்றுசொல்வேனம்மா
மைந்தனைப்பெறுதல்வேண்டி மாதவஞ்செய்குவார்கள்
சிந்தைதான்கலங்குதென்ன செய்குவேன்கிட்டேவாடி

வசனம்.

கேளாயம்மா மருத்துவச்சி புத்திரவாஞ்சையினாலே தபசு பண்ணிப் பிள்ளைகளைப்பெற நினைப்பார்கள் அதைநினைக்கும்போதே யென்மனது கலங்குதே என்னசெய்வேனென்னசெய்வேனிப்படி சற்றேயென்கிட்டேவாடியம்மா.

மருத்துவச்சி-வசனம்.

பயப்படாதே பயப்படாதே நான்கிட்டேயிருக்கிறேனடியம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

நாணமேலிடுதேசொல்ல நானென்னசொல்வேனம்மா
சாணல்லோவயிறென்பார்கள் சதுர்முகன்விதித்தவாறே



காணுமிப்பிண்டம்நின்று கலக்குதேயடிவயிற்றை
வீணல்லோவென்சென்மந்தான் மேதினிக்கடுத்திடாதே

வசனம்.

ஐயையோ பிரமதேவர் கட்டளைப்படியே யென்சாணுடம்புள்ளமனிதருக்கு ஒருசாண்வயிறென்றுசொல்லுவார்கள் அதிலே நான்படுகிற அகோரத்தையென்னென்றுசொல்லுவேன் ஆ அதோ அடிவயிற்றிலேநின்று அந்தப்பிண்டம் கலக்குதே அதினுள்ளவருத்தத்தையெல்லாஞ்சொல்லவென்றாலும் வெட்கமாயிருக்குதே இப்படிப்பிலே யென்சென்மமெடுக்கிறது விருதாவே யல்லவா இது அடுக்குமா வென்ன செய்வேனடி மருத்துவச்சி.

மருத்துவச்சி-வசனம்.

அம்மா வுன்னைப்பார்த்தால் மகாசவுந்தரவதியாகக்காணுதே உனக்கு இந்த இளமையில்தானே புத்திரபாக்கியங்கிடைத்தது மகாசந்தோஷம் மகாசந்தோஷம் உன்னைப்பெற்றதாய்தந்தையாரிவருக்கு நீயெப்படி பாரியாளானாய் இந்தப்பிள்ளை யெப்படிவந்தது இந்தவரலாறெல்லாம் எனக்குத்தெரியச்சொல்லடியம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-முகாரி

மன்னுமென்னுயிர்போல்வந்த மருத்துவமாதே கேளாய்
சன்னமாபுரியையாள்வோன் காதல்சேர்மெனதுதந்தை
அன்னிலைகைலைவாச ரருட்படிசுயம்வரத்தில்
தன்னெறிமெய்மையோதி நாமணமாலையிட்டேன்

வசனம்.

கேளுமம்மா மருத்துவமாதே சன்னமாபுரியையாளு மதிதயமகாராசன் என்னைப்பெற்றதகப்பனார் அவருக்கு ஆதியிலே கயிலாசவாசர் கொடுத்தவரத்தின்படியே என்கழுத்திலிருக்கின்ற வலயதிருமாங்கிலியத்தைக் கண்டவரே எனக்குப்புருஷனாவாரென்றருளியதால் என்தகப்பனார் உண்டுபண்ணின சுயம்வரச்சாலையிலேதானே இந்த அரிச்சந்திரமகாராசன்கழுத்தில் மாலையிட்டுப் பாரியாளானேன் இதுதானென்னிடவரலாறம்மா.

மருத்துவச்சி வசனம்.

அப்படியா அப்படியா மகாபாக்கியம் ஆனால் பயப்படாமலிருந்தாயே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

எப்படிப்பயப்படாமலிருப்பதென்செய்வேனம்மா
குப்புறச்சுவிழமாண்ணுது குனித்துமேநிமிரொண்ணுது
தப்பிலாக்கைகால்சோர்ந்து தளருதேநாவுலர்ந்து
செப்பமாய்நிற்கொணுது திகைப்புடிதோவருதேதம்மா

வசனம்.

ஆஆ சேளடியம்மாமருத்துவமாதே எப்படிநான்பொறுத்திருப்பேன் கைகால் சோருது நாவுலர்ந்துபோகுது குனியவுங் கூடாது நிமிரவுங் கூடாது ஆ அதோதிரண்டேதோ வொரு விதமாய்வருகுதே என்னசெய்வேன் என்னசெய்வேனடி யம்மா.

சந்திரமதி-தரு-இ.ம்-கண்டா-ஆதிதாளம்.

ஈதென்ன வேதனை-அம்மா-அம்மா-அம்மா-அம்மா-ஒகோ-ஈதென்ன
சோதிக்குதேதெய்வம்பொறுவென்பதில்லையா
நோகையேயெனக்கொருதேறுதல்சொல்லையோ குட்சமம்
அம்மாயிதகுட்சமம்புத்திரசோபத்திலைவி துதாபத்துயராகுது
ஆபத்தென்றலது அனைவர்க்குமேபோறும்-ஈதென்ன
செல்மங்கள்பலகோடியே பெண்ணசென்மமுமதைநாடியே
முன்சென்மந்தனிற்செய்தபூசாபலமுக்யமோ
இனியென்றல்சக்கியமோ ஐயையோயோகமே அதுவெகுதாபமே
இந்தமுதிர்ந்தவலியெடுக்க யிதிர்ந்தென்னுளம்நடுக்க
சிதைந்திவ்வுயிர்கடுக்க திரேகந்தனையொடுக்கச் செய்யுதேபங்கய
நிலைகுலைந்துநையுதென்னங்கப்போதும்போதும்-ஈதென்ன

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னகவராளி.

மன்னனரிச்சந்திரன்றன் மனைவிசந்திரமதிதானோர்
நன்னயஞ்சேர்மலர்க்கொடிபோல் நயந்தகெர்ப்பத்துயர்நீங்கிப்
பொன்னுலகோர்மகிழ்வாகப் புவனியுள்ளோர்தவந்தழைக்க
அன்னிலையாளபுதல்வனையே யகமகிழ்வாய்ப்பயின்றனளே

வசனம்.

அகோதெப்படியென்றல் அயோத்தியாபுரியையாளாநின்றஅரிச்சந்திரமகாராசாவின் மனைவியாகிய சந்திரமதியம்மன் கெர்ப்பவேதனையை நீக்கி ஆண்பிள்ளையைப்பயின்றுவென்றறிக.

தோழி-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

மன்னர்கள்மன்னுபோற்றி மனைவியாயுனக்குவாய்த்த
மன்னுதேன்மொழியாள்சந்திரமதிகெர்ப்பத்துயர்நீங்கி
பொன்னுலகாளுமிந்திரன் புகழ்ந்திடும்புத்ரன்றன்னை
இத்தலப்புகழப்பெற்று ளிணையடிபோற்றிபோற்றி

வசனம்.

கேளும் இராசசக்கிரேஸ்வரா உமதுபத்தினியாகிய சந்திரமதியம்



மன் கெர்ப்பவேதனை நீங்கி இந்தபூலோகமெல்லாமொருகுடையின் கீழாளத்தக்கதாக ஆண்பிள்ளையைப் பெற்றாள்சுவாமி.

இராசன்-வசனம்.

அப்படியே மகாசந்தோஷம் மகாசந்தோஷம் ஆகையினாலிந்தத் தைப்போல்நமக்கொருபிள்ளையும்பிறந்ததுநாமகாபாக்கியம்மகாபாக்யம்

(இராசன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.)

வீரர்கள்புகழுமெய்ம்மை மிகுசத்யகீர்த்திமந்திரி
நீர்பெருமெனக்குப்புத்ர சந்தானமுண்டாச்சென்று
சீருடன்சொன்னளிந்த சேடியைமுக்கனேகரத்ந
ஆரமும்பணிகள்வஸ்திர மடைவுடன்தரச்செய்வாயே

வசனம்.

கேளும் சத்தியகீர்த்தியாகியமந்திரிப்ரதானிகளே நமக்குப்புத்திரோச்சவமுண்டாச்சென்றுவந்துசொன்னாளே இந்த தோழிப்பெண் இவளுக்கநேகரத்நாபரணங்கள்பட்டுபட்டாவளிகள்முதலாகிய நகைகளும்வெகுமதி கொடுத்தனுப்பச்சொல்லுமந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

மகாபாக்கியமப்படியேகொடுத்தனுப்பச்சொல்லுகிறேன்சுவாமி.

(மந்திரி-விருத்தம்-இ-ம்-தோடி.)

திக்கெல்லாம்புகழுங்கீர்த்தி அரிச்சந்த்ரமன்னன்
முக்கிய மாளிகைக்கு முனைபெறுகட்டியக்காரா
தக்கநம்மாசனுக்கே தனையன்வந்துதித்ததாலே
மிக்கமாமணியாடைப்பொன் வெகுமதிவட்டிலோடே

வ-ம்-கேளும்பிள்ளாய் ஆசாரவாசற்காக்கும் கட்டியக்காரா நம்முடைய ஆண்டவராகிய இராசசக்கிரேஸ்வரனுக்குப்புத்ரோச்சவமுண்டானதால் அந்தசேதிசொல்லவந்த இந்தத் தோழிப்பெண்ணுக்கு ரத்நாபரணங்கள்சொர்ணங்கள்பட்டுபட்டாவளிமுதலாகிய நகைகளும்வெகுமதிகொடுத்தனுப்பும்பிள்ளாய் கட்டியக்காரா.

(கட்டியன்-வசனம்)

அப்படியேகொடுத்தனுப்புகிறேன்சுவாமி

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கேளதிவுயர்ந்தசத்ய கீர்த்தியாமமைச்சமந்திரி
ஆளுமென்னரசுக்கு ஆண்பிள்ளைபிறந்ததாலே
நீள்புவிமறையோருக்கு நிறையமாசாரியர்க்கும்
நாளெட்டுவரைக்குமன்ன தானமும்பெற நடத்திவைப்பாயே.

வசனம்

கேளுஞ்சத்தியகீர்த்திநமக்குப்புத்திரோச்சவமானசந்தோஷத்

நக்ஷத்திரப்பூமியிலேயுள்ள வேதப்பிராமணன் யாதொருவன்சர்வ த்திராளுக்கும் எட்டுநாள்வரைக்கும் வந்தவர்களுக் கில்லையென்று சொல்லாமல்ஸ்வர்ணவருஷமாகக் கொடுக்கச்செய்யும் மந்திரி.

(மந்திரி-வசனம்)

அப்படியேகொடுக்கச்செய்கிறேன் சுவாமி.

(இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி)

நானிலம்புகழ்ந்துசொல்லும்நலமிகுசத்யகீர்த்தி
ஆனதோர்மறையோருக்கு மரியநல்முனிவோருக்கு
தானத்தி லுயர்ந்திடும்பூ தானங்கோதானமெல்லாம்
யானைமேல்முரசமேற்றி யறைவித்தேதருவிப்பாயே.

வசனம்.

கேளுஞ்சத்தியகீர்த்தியாகிய மந்திரியே யாகாதிகிருதுக்கள்செய்யு ம்படியாகிய ரிஷிகள்முதலாகியபிராமணாள் பெரியோர்களெல்லோ ருக்கும் பூதானங்கோதானம் அன்னதானம்வஸ்திரதான முதலாகி ய தானங்களை யானையின்மேலில்முரசறைவித்து அவாளவாளுக்கும்வே ண்டியபடியே யபேக்ஷிதமாய்க்கொடுத்தனுப்பச்சொல்லு மந்திரி.

(மந்திரி-வசனம்.)

அப்படியே செய்கிறேன் மகாராஜனே.

(சத்தியகீர்த்தி - விருத்தம்-இ-ம்-நாட்டை)

புனிதநல்லறிவின்மிக்கப் புளகிதகட்டியக்கார
கனமிகுமறையோர் யாசகர்முதலெல்லோருக்கும்
மனமிகுபூதானங்கள் மற்றுங்கோதானமெல்லாந்
தனியானைமுரசிற்சாற்றித் தகைபெறத்தருகுவாயே

வசனம்.

கேளும்பிள்ளாய்கட்டியக்காரா நம்முடைய ஆண்டவனுத்தார ப்படியேயானையின்மேலில் முரசறைவித்து பிராமணாள்முதலாயயா காதிகிருதுக்கள்செய்யத்தக்கவர்களாகிய ரிஷிகளுக்கும்மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் வேண்டியபடியேகோதானம்பூதானம்வஸ்தி ரதானமுதலாகிய தானமெல்லாங் கொடுத்தனுப்பும்பிள்ளாய்.

கட்டியன்-வசனம்.

அப்படியேசெய்கிறேன் சுவாமி.

(பொது-விருத்தம்-இ-ம்-சாவேரி)

பொன்மணிவஸ்திரமற்றும் பூதானங்கோதானங்கள்
தன்னயமுடனேயீந்து நாதனுமரிச்சந்திரன்
தன்னிலேமகிழ்ச்சியானுன் னையலார்நல் லீராட்டிப்
பொன்னணிதொட்டிலேற்றப் புதல்வனைக் கொடுத்தாரே.



வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திரமகாராஜன்புத்திரன் பிறந்தசந் தோஷத்தினால் சகலதானங்களுஞ்செய்து மகிழ்ச்சியடைந்திருக்கி றபடியால் அங்குள்ளதோழிப்பெண்கள் அந்தப்பிள்ளைக்குத் திருமஞ் சனமாட்டி சர்வாலங்காரத்துடனே நவரத்னகசிதமான தொட்டி லிலேற்றி தாலாட்டுகிற விதங்காண்க.

(தாலாட்டு-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்)

ஆராரோ-ஆராரோ-ஆராரோ-ஆராரோ
தாரார்கதிர்குலத்தோன் தவமேயநுபவமே — ஆராரோ
தேனூறல்பாயுஞ் செழுமாங்கனியமுதே
வானோர்புகழுமயோத்திவள்ளலே கண்வளரீர் — ஆராரோ
செங்கரும்பின்பாகுஞ் செழுமாமலர்த்தேனும்
பொங்குபசும்பாலிலிடும் புத்தமுதே கண்வளரீர் — ஆராரோ
பத்தரைமாற்றுள்ள தங்கப் பதுமைமணி நிறைத்த
சித்திரப்பொற்றொட்டிலிலே சீராகக்கண்வளரீர் — ஆராரோ
திங்களணிசடைச்சர் திருவடியைத்தான்றொழுதே
கங்கைகொணர்ந்தோன்குலத்தின் கண்மணியே — ஆராரோ
இகத்திற்குகம்வாய்த்தே யிவ்வுலகோர்கொண்டாட
மிகுத்தபாத்திலுறும் வேல்மன்னர்போற்றவே — ஆராரோ
அங்கத்திரிசங்குமன்னன் சுதனாகவிளங்கவந்த
எங்களரிச்சந்திரற்கே யிசையுந்தவப்பலனே. — ஆராரோ

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

இந்தவகைச்சந்திரமதி யீன்றெடுத்தபாலனுக்கே
சந்ததமும்புகழ் தேவதாசனென்றுபேருமிட்டே
சிந்தைமகிழ்வாயிருக்கத் திகழுமிந்திரன்சொலுச்சபையிற்
சித்திரக்கட்டியக்காரன் றுலங்கவந்தனனே.

வசனம்.

இந்தப்பிரகாரமாகச்சந்திரமதியென்பவளும் அரிச்சந்திரமகாராஜனும் மகாதேவர்கடாட்சத்தினாலேயவர்களுக்குப்பிறந்தபிள்ளைக்குத்தேவதா சனென்றுபேரிட்டுச் சந்தோஷமாய்வாழ்ந்திருக்கின்றநாளில்தேவ லோகத்திலே தேவேந்திரன்சபையில் கட்டியக்காரன் வருகிறவி தங்காண்க.

(கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-யதுகுலகாம்போதி-தாளம்-ஆதி)

கட்டியக்காரன்வந்தான்-வந்தானிதோ-கட்டியக்காரன்வந்தான்.

கூத்து-அதிகபகுமானமொடு-குதிகுதித்து
நல அலங்கிர்தமிகுகெட்டி கட்டியக்காரன்வந்தான்
கெட்டியக்கிட்டிகைசுகளையுமெட்டிப்பிரட்டிய கட்டிப்புளகிதநு கட்டி
சிரசைசந்திரமணியணியொளிபெறுபருவதிந்திரசபைதனில்வளமு
விரித்தகட்டரெனதவமணிபிலகுறு மாலையசைந்தபுனைந்து நல
விசிதமுறைமுறைமெளவர்களுடலிசயமிகுவெனமனதில்நினைந்து
பொருந்துமார்பினிலாரமணிந்து பூதலமாளந்தான்பாதம்பணிந்து
புனிதபுரமிரிச்சுகிரைத்திகழ் புவனத்தரசரு மெய்ச்சியதற்புகழ்ப்பு
பொருந்தட்டிசல்லடமுந்தொட்டுப் (எகித்
பொலிதருவல்லவாட்டைதை வொயிலாய்விட்டுப்
பெரியமாகவே மீசையைமுறுக்கிப்புலவன் வருத்திமாக்கென்று
புருவம்நெரித்துநெரித்துசிரித்துசிரித்து (நக்கிப்
புதுமணவலிதிசைநகுமர்கள்கூற
பொருந்தலமொடுபலபுவிமுதலெவர்களும்
புகழ்ந்துபுகழ்ந்துகுணசாலியென்றுசொல்ல
மகிழ்ந்துமகிழ்ந்துவெசய சீலனென்றுநல-கட்டியக்,,

வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே அதிகதபோபலஇரிசாச
காருண்யமகாராசாகவிஸ்வாசவெகுதேசசாசுவல்லாசந்தோஷதேவ
தேவமகாராசனுகியமகபதிசுரபதிசசபதிசுவர்க்கபதி அஷ்டதிக்
கர்ப்பதி அதல-விதல-சுதல-திதல-தராதல-மகாதல-பாதாள -புவ
லோகம்புவர்லோகசுவர்லோகசனர்லோகம்பகாலோகசத்தியலோகவ
ரைக்குங்கீர்த்திப்பிரதாபங்களுடைய யிந்திராணிசமேதனுகியஜா
வதுங்கதப்பகுத்ருகாமதேனுசிவகிந்தாமணிசங்கநிதிபதுமநிதி வச்
ராயுதம்ஸ்வேதவெண்கொற்றக்குடைமுதலானசகல சௌபாக்கியங்க
ளும்பொருந்தியதேவேந்திரமகாராசாவானவர்சுவர்க்காபுரியிற்கொ
லுவுக்குவருகிறார் வெகுபராக்குவெகுபராக்கு யெச்சரிக்கை யெச்

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி. (சரிக்கை

அரம்பையென்றதரமடமாதர்கள்முனிவர்சூழ
நிரம்பியமதுரகீத நிறைந்துபல்லாண்டுகூறச்
சுரும்பமர்மாலைசூடித் துலங்குவெண்கவரிவீச
விருப்புதேவேந்திரமன்னன் மிகமகிழ்வுடன்வந்தானே.



வசனம்.

அகோதெப்படியென்றால் தேவேந்திரமகாராசன் கொலுவு
க்குவருகிற விதங்காண்க.

தேவேந்திரன்வருகிற-தரு.

இ - ம் - தோடி - தாளம் - ஆதி.

தீரனிவல்லாச தேவேந்திர மகாராசகெம்பீரனிதோவந்தானே
மாரன்கண்டுபணியும் வடிவினிலுயர்தருமணியெனவளர்திரு
மானபூஷணசுவர்க்கவாசமருவிவரு-பன்னியதிபதி
பொன்னுலகதிபதி-தன்னயமகபதிதுன்னியசசபதி (தீர)
சத்திரவட்டவெண்குடை பிடிக்கமாதர்நடிக்க
சதுர்வேதாகமமுனிவர்கள் படிக்கச்
சிந்தைதழைந்தியந்தவசுரர்துடி துடிக்கச்
செப்புப்பிரதாபகட்டியம்வாசையாற்றிசைவெடிக்கத்
துந்துமிம்பரிகைசில்லரிசல்லரிதொந்தொந்தொந்தொம்மெனப்பல்லிய ம
தொனிகள்முழங்கிடத்தவமணியணி திகழ் (ல்லரி
புனிதவலங்கிர்தசுபமுடனே மகிழ் (தீர)

தேவேந்திரன்-போற்றி-விருத்தம்

இ-ம்-மத்தியமாவதி.

உலகெலாம்வாழ்கவந்தவுயிர்களுமுறையேவாழ்க
இலகியவேதம்மோங்க வெண்ணிறுங்கலைகள்வாழ்க
நலமிகுவானோர்வாழ்க நற்றவந்தனழத்தேயோங்கி
மலர்விழிதெய்மாதர்பாதம் வணங்கியெந்நாளும்வாழ்வாம்

முதல்மந்திரிபோற்றி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வெள்ளையானையின்மேற்கொண்டே விண்ணுலகாளவந்த
கிள்ளைமென்மொழியிந்திராணிக் கேள்வனேபோற்றிபோற்றி
எள்ளரும்புகழ்மைக்கொண்டே யெங்களையாளவந்த
வள்ளலேமகிழ்தேவேந்திர மகபதிபோற்றிபோற்றி

இரண்டாமந்திரி-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

ஐந்தருநிழலிற்றிங்கின் றமரர்நாடாளவந்த
சுந்தரக்கிரீடாதார சுபகராபோற்றிபோற்றி
சந்தநாரக்கர்தம்மைச் சதைத்துவென்றிட்டவீரா
எந்தைதேவேந்திரமன்னா விணையடிபோற்றிபோற்றி

கட்டியக்காரன்-போற்றி-விருத்தம்

இ-ம்-ஆனந்த பைரவி.

சொல்லரியசொர்க்கமொடுமெய்யபாதாளமுந்துதித்திடவிராபோற்றி
எல்லையில்லாதபுகழ்கொண்டவச்ராயுத மிலங்குதெய்வராசபோற்றி

பொல்காதவசுரரைக்குலைகுலைத்திடவென்ற புஜபலசிரேஷ்டாபோ
ற்றிநல்லவானவர்பரவுந்தேவேந்திரமகாராசநாதனேநின்றன்போற்றி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

சிருங்காரஞ்சேர்பொன்னாட்டைத் தருக்குடனாளவந்த
திருக்கில்லாவிந்திரமன்னனே இசழ்ந்திகாலுவிருக்கவாங்கே
வருக்கமாமறைகள்போற்று மாதவந்தன்னில்மிக்கோர்
மருக்கமழ்வனத்தில்வாழு மாமுனிவோர்வந்தாரே

வசனம்.

தேவேந்திரன்சபைக்கு மகாரிஷிகள்வருகிறவிதங்காண்க

மகாரிஷிகள்வருகிற தரு.

இ-ம்-தேசிகதோடி-ரூபகதாளம்.

மகாரிஷிகள்வந்தாரிதோ மகாரிஷிகள்வந்தார்
முகாமுகமாய்ப்பார்த்தநாடி-மோனமாம்தன்னெறிபிடித்திட
மதிரும்பலவிதங்கள்மருந் சிதறும்வகையிதன்றிய (மகா)
விரித்தசடைகள்பளபளென்றுமின்ன-திருவெண்பூதி
விளங்கப்ரணவமந்த்ரமயங்கள்மன்ன
புரிந்ததவங்கள்நிறைந்துபெருகப்-பூர்வபுண்யபலனுப்வருகப்
புணரும்பலவரூருந்திவ-கணரும்-அந்தணருந்துதி (மகா)
நாடியனந்தைப்பூரணத்திலேநிறைத்துக்குறைவில்லாமல்
தன்னுங்கள்மவிடமை ஞானத்தால்மறைத்துத்
தேடும்பரத்தைச்சொந்தமாக்கிச் சிக்கும்பந்தபாசத்தைப்போக்கிச்
செழுமைப்புலனடங்கப்பொறி சிசுறும்படிசெயமொன்றிய
காதலங்களில்தெண்டுகமண்டலந்துலங்கசதாளர்த்தக்
கருணைச்சோதிச்சின்மயச்சுடர்விளங்க
வரதமூர்த்திகளிவரெனச்சொல்லவானுளோர்களுசந்துதுதிக்கநல்ல
மலருஞ்சரணிலகுந்திறல் வலிதங்கிய நிலைபொங்கிய (மகா)

தேவேந்திரன்-போற்றி விருத்தம்-இ-ம்-அடாணா.

மூவர்கள்நிற்கும்நல்ல மோனமாம்நிலையைநாடித்
தாவரும்பிரணவத்தின் தசையறிந்தோரேபோற்றி
மேவுசிற்குணத்தின்மிக்க விறல்கொள்மாதவரேபோற்றி
ஆவலாய்க்காணப்பெற்றே னருளுடன்வருகுவீரே

வசனம்.

சரணஞ்சரணம் வாருங்கள் வாருங்கள் மகாரிஷிகளே ஆச
னத்திலெழுந்தருளியிருங்கள் சுவாமிகளே.



மகாரிஷிகள்-ஆசீர்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

பொன்னுலகரசேவாழி புனிதவானவர்கள்போற்ற
மன்னுமிந்திராணிபாகர் வளமுடனுளும்வாழி
துன்னியகற்பகத்தின் சுபநிழற்கீழிருந்தே
தன்னயமாகவாழும் நாதநேவேந்திராவாழி

வசனம்.

வாழிவாழி தேவேந்திரமகாராசனே வாழி

பொது-விருத்தம் இ-ம்-சாவேரி.

இந்திரன்கொலுவிற்கூடி யிருக்குமாதவத்தோரெல்லாம்
வந்தங்கேநிரம்பிவேத வாய்மைகள்புகன்றுதத்தம்
சிந்தையில்மகிழ்ச்சியாகிச் செழிப்புடனிருக்கவாங்கே
மந்திரமூர்த்தியானவசிஷ்டர்தாம் வருகின்றாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக தேவேந்திரமகாராசனுடைய சபையில்ரி
ஷிகளுந்தேவர்களுங்கூடி கொலுவாயிருக்க அந்தச்சபையில் வ
சிஷ்டமகாரிஷிவருகிற விதங்காண்க.

வசிஷ்டர்வருகிற-தரு-இ-ம் புன்னாகவராளி-ஆதிதாளம்.

வசிஷ்டமுனிவர்வந்தார்-மகாதவ வசிஷ்டமுனிவர்வந்தார்
கசட்டுக்குணமொழித்துக் கன்மத்தைப்பழித்துக்
கருதியபிரமநிஷ்டைக்கவலயமாய்ப்பிரதிஷ்டை
சாகண்டிடுதவநெறிதனில் மனமுறு
சுகிகொண்டுயர்பரமிதுவென நிலைபெறு (வசிஷ்)
பகம்பொற்குண்டலந்துலங்க
பளபளெனவொளிதிகழலங்கிர்த
வளமிகுந்தநவமணியிலெனவசித (பசும்)
பதுமமலரினிருபுறமிருசுகிரொணபருவமதியினிருபுரமிருசுடரொண
பகருமருமறைநுழைதருசெவிகளின்மகிழுமொருபரமிருவடிவெ
னபவளக்கொடியைச்சொலுமம்புதசடை (பசு) (ளச்.
திவளச்செழுமற்றலிமெய்ப்பொருள்நடை
பசரிற்சிவனரியயனும்மகிழ்பெரு
மிதுபொற்பிலகிய மகிமைப்புகழுறு (பசும்)
பிரணவாகாரபரத்துவம் வாயினிலிலங்க
விசும்பிற்புடைபரவும்-விண்ணவரும்பரவும்
மெய்த்தவத்தோர்களெல்லாம்-விரும்பு அருள்நிரப்பும் (வசிஷ்டர்)

போற்றி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விசிட்டநல்லறிவிற்மிக்கமெய்ப்பொருளறிந்துசமக்
கசட்டினையறுத்தோர்வாழ்த்துங் கருணையங்கடலேநாளும்

ஆட்டுளத்தவனுமென்னை யாதரித்திதம்பாராட்டும்
வசிட்டமாமுனியுந்தன் மருமலர்ப்பதங்கள்போற்றி

வாழ்த்து-விருத்தம்-இ-ம்-மோகனம்-

சங்கநிதிபதுமநிதிதழைக்குஞ்சிந்தாமணியுடனே
தங்குபுகழ்சேர்கற்பகப்பூந் தருவுந்தழைத்தமிகவாழி
எங்கள்மன துக்கிடர்வாரா திருக்கவசுரர்தமைவென்றே
துங்கமுடன்வாழ்தேவேந்த்ர சுகுணநாளுமிகவாழி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

இத்தகமுனிவரெல்லா மிசைபெறுவசிஷ்டரோடும்
உத்தமவிந்திரன்வாழு முயர்ந்தநற்சபையிற்கூடி
சித்தமுற்றிருக்கவாங்கேதிரிச்சங்குசுவர்க்கஞ்செய்த
வித்தகவிஸ்வாமித்திரன் விணாவுடன்வருகின்றானே

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சகலரிஷிகளும் தேவர்களுங்கூடியிருக்கிற தேவேந்திரன் சபையைநாடி விஸ்வாமித்திரமகாரிஷி வருகிற விதங்காண்க.

விஸ்வாமித்திரர்வருகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

மகாதவங்கள்-நிறை-சுகானுபவமுனிவ ளரும் - விஸ்வாமித்திரனு
சோதியமாய்-வளரும்-விஸ்வாமித்திரனுனே (மே
தகாதவையென்றுஞ்சாதிக்கவே துணிந்தேன்
தற்பரமானதொருசிற்பரத்தைப்பணிந்தேன்
விகாதமெனக்கெதிர்-செய்வாருண்டோ சொல்லு
மேவுமென துசாயம்-லோகமனைத்தும் வெல்லும்
விரிகடல்புடைபரவியபல வுலகிலும்
விறல்மிகுசுரர்முனி-வரருறையுலகிலு
மிகுதவநெறிமுறை யெனையலதெவருளர்
விளையுநல்லிசைய விசயவலுமைபெறு
வீரதத்துவமேமுதலாய்தரு-தீரநித்யபராக்கிரமமாய்வரு (௧௪)
அஷ்டதிசையுமற்றவண்டப்ரம்மாண்டமு
மனைத்துப்பொடியாகச் சாடுவேன்-மேலும்
அரியயன்சிவனென்றுசொல்லுமூவர்களையு
மசையாமலேநிறுத்திப் போடுவேன்
திஷ்டிரக்கோபம்வந்தால் சண்டப்ரசண்டமாக
நிமைக்குள்ளேலோகங்களை மூடுவேன்-என்னை
நிந்தித்தவர்களைநான்விழித்துச்சாம்பலாய்ப்போக்கி
நிரகஞ்செய்துவினை வாடுவேன்



இஷ்டமொருவர்மீதில்வைத்தால்வருமோ நீங்கு
எந்நாளுமவர்களைக் காப்பாற்றுவதே பாங்கு
துஷ்டர்களானாலுமென்சிஷ்டர்களாகவேவந்தால்
கஷ்டங்களையகற்றிக்காட்டுவேன்மோட்சபிரசித்தி
கலக்கமுண்டோவசிஷ்டர்க்கெந்போல் நலக்கமுண்டோநடேக்க
ககனமுதலகிலபுவன அசாசர (க
மகிமையெவையுமொருவமையினியிதிலென
முகிலினியசிறு முறுவலெனமெருவ
புகையினியிருமனல் புகவுமகிமை புரி
பூதகணதபுராரியுமஞ்சத் திறலாதமனாசுமிஞ்சும் (மகாதவ)

(தேவேந்திரன்போற்றி-விருத்தம்-இ-ம்-தோடி.)

மும்மலக்குறும்பைநீக்கி முப்பரம்பொருளைநாடி
இம்மையைவெறுத்துமேலா மின்பத்தைக்கண்டாய்போற்றி
செம்மைசேர்தவங்கள்செய்து சிறந்துளோர்புகழ்ப்பாற்பொங்கி
விம்முநல்லறிவின்விஸ்வா மித்திரமாமுனியேவாராய்

வசனம்.

வாரும் வாரும் விஸ்வாமித்திர மகாரிஷியே ஆசனத்திலெழுந்தருளியிரும்.

விஸ்வாமித்திரர்-ஆசிர்விருத்தம்-இ-ம்-நாட்டை.

அயிராவதத்தின்மிசையிருந்த அமராபுரியையரசாளும்
மயில்போற்சாயலிந்திராணி மகிழ்நநாளுமிகவாழி
செயிர்சேரசுரர்தமையவென்றே திறத்தின்மிகுந்தோய்முனிவர்புகழ்
பயிர்போலோங்குமகபதியே பரிவாயன்றற்றேநிதம்வாழி

தேவேந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சீர்பெறுநயத்திலோங்கித் திரிபுவனமெங்கு
மோர்நொடிக்குள்ளேநாடி யுலாவிமேசஞ்சரிக்கும்
பேர்பெறுமுனிவரேநீர் பெருமைபுவியரசர்தம்மிற்
சார்புறுகீர்த்தியெய்வமைத் தருமவானியார்சொல்வீரே

வசனம்.

கேளுங்கள் மகாரிஷிகளே பிரம்மரிஷிகளே உங்கள்தபோபலத்தினுடைய மகிமையினாலே சுவர்க்கமத்தியபாதாளமென்றுசொல்லும்படியாகிய திரிலோகங்களிலேயும் ஒருநொடிக்குள்ளே சஞ்சரித்து வரும்படியாகிய வல்லமை யுடையவர்களாக விருக்கிறீர்களே ஆனதால் நீங்கள் தியாககாரியனென் றிருக்கின்றதா பூலோகத்திலே க்ஷத்திரியருக்குள் சந்த்ரவம்சம் சூரியவம்சமாகிய இருகிற

னிலே சத்தியம் கீர்த்தி தருமம் இதுமுதலாகிய சகலநீதிகளிலேயும் வழுவாமல் செங்கோல்செலுத்தி அரசாளப்பட்ட இராசனெவனோ அவனைத்தெரியச்சொல்லவேணும் சுவாமிகளே.

வசிஷ்டர் விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

கேள்சுரர்பதிநீகேட்குமிவ்வாய்மை கிளர்தருபூதலந்தனிலே
நீள்கதிர்குலத்தில் நிலைதிரிசங்கு நேர்தவத்தோங்கியபுதல்வன்
வாள்பெருஞ்சத்துரு தகர்விதி வாய்மைசத்திய நிறைகீர்த்தி
தாளுமெய்தவறாஅயோத்தியையாள்வோனல்லரிச்சந்திரனென்பவ(னே

வசனம்.

கேளுந் தேவேந்திரமகாராசனே நீகேட்டவதிசயத்தை யெனக்குத்தெரிந்தமாத்திரஞ்சொல்லுகிறேன் பூலோகத்திலுள்ளஇராசாக்களில் சூரியவம்சாதிபதியாகிய திரிசங்கு மகாராசாவினுடையபுத்திரனாகிய அரிச்சந்திரமகாராசனென்றொருவனயோத்திநாட்டையரசாட்சிசெலுத்தாநின்றவன் சத்தியத்திலுந் தருமத்திலுங் கீர்த்தியிலும் பொய்சொல்லாமையிலும் வீர தருமத்திலயுமவனே விலாக்கியன் அவனைகிரேஷ்டன் அவனேயோக்கியன் மற்றொருவனையும் யான்கண்டதில்லை தேவேந்திரமகாராசனே.

தேவேந்திரன்-வசனம்.

அப்படியா அப்படியா மகாசந்தோஷம் மகாசந்தோஷம்

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-ஆபி.

இன்னமும்புகல்வேன் விண்ணவர்க்கரசே
வெளிறுறுபூதலந்தனிலே
மன்னவர்மன்னன் பிறர்மகள்விரும்பான்
மறுநெறியாகினும்பிசகான்
பன்னிய வேள்வியாதனைக்குறவும்
பரிவுளான்மாசகோவர்க்கும்
சொர்ணமாமழையே பொழிதவம்சொன்ன
சொல்லையுமறுத்திடானவனே

வசனம்.

இன்னமுமவனுடையகுணாதிசயத்தைச்சொல்லுகிறேன்கேளும் பரதாரவர்ச்சிதன் வேதாகமசாஸ்திரங்களிலேசொல்லப்பட்டநீதிமார்க்கங்களிலணுமாத்திரம்பிசகான் யாகாதிகிரமங்கள் செய்யும்படியாகிய ரிஷிகள் பிராமணர் முதலானபேருக்குந் தேகியென்னிறவர்களுக்குமில்லையென்றுசொல்லாமல் கொடுக்கப்பட்டவன்பொய்சொல்லாதவன் சொன்னசொற்பிசகாமல் நடக்கப்பட்டவன் அந்த அரிச்சந்திர மகாராசனையன்றி வேறொருவருங்கிடையாது தேவேந்திரமகாராசனே.



இதுவும்-வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

சொல்லியவிந்தவறநெறிதவறான் சுடருறைஞ்சியவேந்தர்கள் வில்வலிமிகுத்தோனெனத்தருந்திஷ்டன் விளங்குறாம்பூதலமீதி துரி; வல்லமைமிகுத்தேயாகஞ்செய்கின்றனனென்புகழ்மிக்கவேபடைத்தோன், எல்லையில்லவனுக்கிணையெவருமிலையென்சொல்வேனவனிறைமையையா.

வசனம்.

ஆ ஆ ஆ அவனுடையபிரதாபங்களை நானென்னென்றுதான் சொல்லுவேன் வில்லின்வலிமையிலே புகழ்படைகிற ரீப்பிலே மற்றுமுள்ள சகலகுணாதிசயங்களிலே எதைப்பெரிதென்றுசொல்லுவேன் ஒன்றைவொன்று பெரிதல்லது குறைவில்லை இப்படிப்பட்ட அரிச்சந்திர மகாராசன் அவன்தானொன்றுடையசியன் அவனைப்போலொப்புச்சொல்ல உலகத்திலே வேறொருவருமில்லை தேவேந்திர மகாராசனே.

தேவேந்திரன்-வசனம்.

ஆ அப்படியா சகலதருமத்திலேயும் பிரபலமாகிய தேவரீருக்குச் சிஷ்யனாகவும் விளங்காநின்ற அந்த அரிச்சந்திரமகாராசனுடைய கீர்த்தி பிரதாபங்களைக் கேட்கக்கேட்கச் சந்தோஷமயமிருக்க வசிஷ்டமகாரிஷியே.

விசுவாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

கபடன்சடன் அதன்மனுராசலன்
கருணைபொய்வார்த்தைக்கொருகப்பலனையான்
திபாலைத்திகிவாக பிறர்மேல்பரதாரவிருப்பன்
நிலைமையிலெஞ்சபார்திமிஷநிலைத்திடானவனே
சமைப்பெட்டிக்காரர்கள் மகிழ்ந்திடவிந்திரசபாசெனக்
சுற்றுஞ்சாமலேயுணாத்தனை மெய்நெறிதகுமோ
செபமுந்தபமுமகிமையிதெல்லாந்திரண்டபொய்
சொல்லவோதெரிந்தது வசிஷ்டயாமுனிவே

வசனம்.

ஓ ஓ ஓ சோ அடடா ஆச்சரிய மாச்சரியம் அப்ரயோசனனுன அந்த அரிச்சந்திரன் கபடம் சூது அநீதம் பாதகம் இவைகளெல்லாம் அவனிடத்தில் குடிகொண்டிருக்கின்றது மல்லாமல் பொய்யென்கிற ஒருசாக்குகளைவாரி நிறைக்கும்படியான பொருகப்பலுக்கு சமமாகிய அப்பத்தப்பெட்டிமகன் ஒருவரேயிலேயடால்டம் வைப்பதற்கு முதற்பாதம் பாதுகாக்குமோமி நிசமெனக்கிறவார்த்தையிலே ஒருவனைப்பொருத்தி நிலைத்திருக்கிறதையே

யல்ல அப்படிப்பட்டவனையா இந்ததேவேந்திரமகாராசா சபாசுக
பாசென்று புகழத்தக்கதாகவும் சொல்லவந்தீர் இதிலே தெரியவந்
தது நீசெய்கிற செபதபங்களுடைய யோக்கியம் நன்றாய்ச்சொன்
னீர் வசிஷ்டமகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

கல்லாதமூடனறநெறியுணரான்கற்றவர்நேசமேயறிகிலான் வீண
　　காதகத்தொழிலெலாந்தெரிந்தோன் (ன்
பொல்லாதநீர்க்கப்பாவமேகுடிபாய்பொருந்தியமனத்தினோன்
　　சர்ச்சனர்சொல்லும்போதனையாகினும்விரும்பான்
அல்லதுசீலவொழுக்கந்தானுண்டோ அரிசரியவனுக்கரிச்சந்
　　திரனென்றுபேர்யாரிட்டார்குருவும்நீதானோ
நல்லதுபோபோநீதொருபயித்தியமோசொன்னநாவுக்கே
　　சிரேஷ்டமோவிதைநகைப்பார்கள்கேட்டவர்தாமே

வசனம்.

ஐயா சாஸ்திரங்களேதாகிலும் படித்தவனோ நன்மார்க்கங்களை
யறிந்தவனோ அல்லதுபடித்தவர்களுடையநேசமுண்டா பொல்லாங்
கென்றுசொல்லாநின்ற மகாபாதகங்களுக்கு அஞ்சுகிறவனோ சர்ச்ச
னர்கள் சொல்லுகிற ஞானபோதங்களையிச்சிக்கிறவனோ அல்லதுபரிசு
த்தமுண்டா பெரியோர்களென்கிற இடத்தி லொழுக்கமுண்டா இ
த்தியாதி குணங்களோடுங்கூடிய துர்மார்க்கனுக்கு அரிஹரி அரிச்ச
ந்திரனென்றுயார்தான்பேரிட்டார்களோ-அவனுக்குதேவரீர்தானே
ஆசாரியர் ஆஹா தகும்தகும்நல்லதுபோம்போம் உம்முடைய சிஷ்
யனென்கிறதை இந்ததேவசபையிலே ஸ்லாக்கியமாகச்சொல்ல வ
ந்தீரோ உனைக்குறித்துபொய்சொல்லும்படியாகியநாவுக்கு வேதா
தியும் சிரேஷ்டமுண்டோ இதைக்கேட்டவர்கள் நகைப்பார்கள் வா
யைமூடும் வாயைமூடும் வசிஷ்டமகாரிஷியே.

வசிஷ்டர் விருத்தம்-இ-ம்-பைரவி.

செய்வமுமில்லையோசத்தியமுமில்லையோ செப்பியவேதநூல் பொய்
யோ கண்டதவத்தின்பலனைப்போலரிசென்கருதுநல்லரிச்சந்தி
ரன் கீர்த்தி, ஐயமேயாமற்றதிருக்கட்டுஞ்சற்றுமபக்கமொன்றறிகிலா
னவனை, பொய்யனென்றுரைத்தவாயதுவெந்துபுழுக்குமோ கோசி
கமுனியே.

வசனம்.

அரிசரியான்முன்னாலேசொல்லிக்கொண்டுவந்த சர்வசிலாக்கி
யங்களிலேயும் நன்றாயறிவன் அவனுடைய கீர்த்திபிரதாபங்களெ
ல்லாம்நீரிப்போது இந்த தெய்வமகாசபையிலே அவனைநிந்தித்துச்



சொல்லவந்தீர் அவனுடைய கீர்த்தியெல்லாமப்படியிருக்கட்டும் நீ
ரென்னகாணப்போகிறீர் அவனைப்பொய்யனென்று சொன்னீரே
அந்தச்சொல்லுக்காகச்சொன்னநாவும் வெந்துபோம் வாயும்புழு
க்களைச் சொரியும் ஐயையோதெய்வமில்லையா சத்தியமில்லையா
வேதசாஸ்திரங்கள்பொய்யா இப்படியும் சொல்லலாமா ஓய் விஸ்
வாமித்திரமகாரிஷியே.

இதுவும்வசிஷ்டர்சொல்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

நன்னெறியுணரானென்றும் நவிலுங்காதகத்தானென்றும்
என்னருஞ்சிஷ்யனென்று மிரங்கிநான்புகழ்ந்தேனென்று
மன்னுடவ்வரிச்சந்திரன்றன் மனதறியாமற்சொன்னீர்
சொன்னவந்தக்குற்றமென்று நானெசெய்துமகிழ்தல்நன்றே

வசனம்.

இன்னமுஞ்சொல்லுகிறேன்கேளும் ஓய்விஸ்வாமித்திரமகா
ரிஷியே அந்த அரிச்சந்திரமகாராசன் நல்லதீதிமான்களையறியாதவ
னாகவும் மகாகாதகத்தொழிலைச்செய்கிறவனாகவுஞ்சொன்னதுமல்
லாமலவன்என்னுடையசிஷ்யனென்கிறதினாலேயும் அவனுக்கொரு
இழிவுவாராமல்புகழ்ந்துசொன்னதாகவும் அவனுடையமனோதர்மம்
எவ்வளவுமறியாமல் பதறிச்சொல்லிவிட்டீர் இப்போதும் மனதெ
றிந்து மெய்யைப் பொய்யென்றதுபோல அவனையிகழ்ந்தபாவத்
தீர்த்தக்கதாக இந்ததெய்வசபையிலே இகழ்ந்தவாயினாலே புகழ்
ந்து சொல்லுவீரானால் மிகவும் நன்மையாயிருக்கும்போம் வா
யைமூடும் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

கருமம்நெருங்கிடுமோசத்தியம்வீணோமோதவங்களுமவதமா
யவிடுமோ, பரவியவுலகிலரிச்சந்திரன்செய்யும் பாவமாறுமுறைகளை
ச்சொன்னால், உருகிறாய்போபோயின்னமும்பொய்யை யுறுதியா
யநினைக்கிறாயவனை, மருவியமெய்யனென் றுரைசெய்யும் வாயும்
வேம் நாவும்வேம்வசிஷ்டா.

வசனம்.

அடடா மெய்யனைப்பொய்யனென்று சொன்னால் தர்மமும்
இளைத்துப்போம் சத்தியமும் வீணாய்ப்போம் தபசுகளு பழிந்து
போமல்லவா சிஷ்யனென்கிற வருக்கத்தினாலே பொய்யைப்பே
சப்பேசவுனக்கும் இதமாயிருக்குதே அந்தமகாபாதகனைமெய்ய
னென்றுசொல்லுகிற உன்வாயும் வெந்துபோம் நாவும்வெந்து
போம் மனதும்வெந்துபோம் இத்தமட்டு மடங்குங்காணும் வசி
ஷ்டா.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-பைரவி.

அம்புராசிதானந்த அரிச்சந்திரமன்னனென்போன்
மாமறைபொய்த்திட்டாலு மதிசூரியாறினும்
பூமியுள்ளளவும்போர்பொய் புகன்றிடான்புகல்வானென்றே
நீமனம்வாட்டாவெந்து நெருப்பாவாய்விஸ்வாமித்ரா

வசனம்.

ஆம் ஆம் நன்றாய்ச்சொன்னாய் சந்திரசூரியர்கள் தெற்குவடக்காறாலும் வேதங்கள் பொய்த்துப்போனாலும் இந்தப்பூமியுள்ளளவு மொருபொய்சொல்லமாட்டானென்று நானேசொல்லுகிறேன் என்னுடைய நாவும் மனமும் வாயும் ஒருக்காலும் வேகமாட்டாது நீயிருக்க அவனைப்பொய்யன் பொய்யனென்ற உன்னுடைய வாயும் நாவும் மனமும்வெந்து நீயும்வெந்து சாம்பலாய்ப் போகப்போகிறாய் விஸ்வாமித்திரா.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

எத்தனைவிதத்திலேநீபிரக்கியாயவனுக்காகச்
சித்திரக்கதைசொன்னாலுந்திரணமுமதப்புவேனோ
சத்தியமாகச்சொல்வேன் தப்பாதுபொய்யன்பொய்யன்
வித்தகவசிஷ்டாநீதான் வெட்கங்கெட்டிடுவாய்போபோ

வசனம்.

இன்னமுஞ்சொல்லுகிறேன் கேளும் அந்த அரிச்சந்திரனுக்காக எத்தனை சித்திரக்கதைகள்பேசினாலும் அவன்பொய்யன்பொய்யனென்று சத்தியமாகச் சொல்லுவேன் இனிமேல் பேசினால் இந்தத் தெய்வசபையிலே வெட்கங்கெட்டுப்போவாய்இத்தமட்டோடே பேசாமற்போய்விடும் வசிஷ்டா.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

பேசாமற்போகவோவுன் பெருமைதானறிகிலேனோ
மாசிலாவரசைவிட்டு மாதவமென்னைக்கொண்டாய்
ஈசனையறிந்துஞானமில்லாமலதர்மம்பேசக்
கூசாமற்றுணிந்துவீணாய்க் கூவாதேவிஸ்வாமித்ரா

வசனம்.

அறிவேன் அறிவேன் உன்பெருமையெல்லாம் எப்போதும் வீண்பெருமைக்காரன்தானே நீஇராசாங்கஞ் செய்துகொண்டிருந்ததை விட்டுத் தவசுக்கென் வந்தாய் தவஞ்செய்து யாதனையுமடைந்தும் உனக்குஞானவுதயமில்லாமல் பாவமென்கிற அதர்மத்துக்குள்ளாகி இப்படிப் பேசுகிறாய் யோக்கியந்தான் யோக்கியந்தான் போபோ விஸ்வாமித்திரா.



விஸ்வாமித்திரருக்கும்-வசிஷ்டருக்கும்-வாதரு
இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

தனக்குத்தானேமகாதவத்தைக்கைக்கொண்டாயே சர்வதாநீயிங்கேசாதித்ததென்னே யடவசிஷ்டாசப்பறைவார்த்தைபிதற்றுவதென்னே.

எனக்குநிகராவாரோமும்மூர்த்திகளாலே யிரங்கிப்பிரம்மரிஷியென்றேனே-விஸ்வாமித்திராயியங்கும்பாவங்க ளெல்லாம்வென்றேனே

வென்றதுமெய்யானாலொருநூறுமைந்தரை வென்றபோதே வீவிடம்போனாயோ - அடவசிஷ்டாவீண்வார்த்தைபேசலானாயோ.

அன்றுந்தன்மைந்தருஞ்சதுரங்கசேனையுந்தீ அக்கினிப்பொறிபோலேயெரித்தேனே-விஸ்வாமித்திரா - அதிகசிரேஷ்டநாமந்தரித்தேனே.

தரித்தாயேசக்கிலிப்பெண்ணைப்பெலசாதியாய்த்தழைக்கும்பிரமரிஷிதானோ-அடவசிஷ்டாசண்டிப்பேய னென்றுடன்வாதேனோ.

வாதுக்குஞ்சூதுக்குங்காதசனியல்லால் மனையாளருந்ததியென்றறியாயோ-விஸ்வாமித்திராவளருமென்பலத்தைக்குறியாயோ

அறிவேனறிவேனந்தத்திரிசங்குவினைநம்பி அலைந்தபோதவனைநீகாத்தாயோ-அடவசிஷ்டா அந்த அரிச்சந்திரன்மனையைப்போய்ப்பார்த்தாயோ

பார்த்தேன்பரிசோதித்தேன் பாரிலவனுக்கிணையடைக்கப்ராமணாவராலுங்கூடுமோ-விஸ்வாமித்திரா டஞ்சையுள்வாறுமேலாமோ

ஆகிறாய்தெய்வசபையிலேவாதாடி அஞ்சாமல்பேசிக்குதிக்காதே-அடவசிஷ்டா அவனைமெய்யனென்றுமதிக்காதே

மெய்யனென்பதற்குச்சந்தேகமோபோபோமிரட்டுபோராதிக்குட்டிநிக்கத்தனே-விஸ்வாமித்ராவிருதாவாய்க்கொள்ளாதேபட்சத்தனை.

பங்கப்படுவதுண்டோ அண்டாண்டப்ரம்மாண்ட மிரண்டுமுப்பொடியாக்கேளு-அடவசிஷ்டாயதிநால்மூவரையும்பொய்த்தாக்கேனே

தாக்குந்திறத்தாலேயிர்ப்பாக்கியமேயல்லால்சாதிக்கவொருவயாராகுமோ விஸ்வாமித்ரா சத்யவியர்த்தம்விட்டுப்போகுமோ

போகுஞ்சிறுமையக்கிரட்சத்திரமைந்தையும் பறித்துத்தெற்குத்

ர-திசையில்மாட்டினேனன் அடவசிஷ்டா புண்ணியந்திருச்சங்குக்கு க் காட்டினேன்

சாட்டினனுமெய்யேயருந்தவஞ் செய்தத்தைக் காதல்மேன கையாலிழந்தாயே-விஸ்வாமித்ரா கைதப்பிப்போச்சென்று குழைந் தாயே

குழைந்துகுழைந்துநொந்துதவித்தாயே அன்றுந்தன் - கொடிய தமைமிசை பயைக்கண்டேனே அடவசிஷ்டா கோரத்தவப்பலன் கைக்கொண்டேனே.

கொண்டபெண்சாதியைப்பூமியிற்கைவிட்டுக்- குருடன்போல்தவசுக்குவந்தாயே-விஸ்வாமித்ராகூருப்பொய்சொல்லநினைந்தாயே.

தேவேந்திரன்-தரு-இ-ம்- சங்கராபரணம்-ஆதி.

நில்லுங்கள்நில்லுங்கள்சுவாமிகளிங்கே
நேர்ந்தவகையதனைச்சொல்லுங்கள்
வல்லவசிஷ்டவிஸ்வாமித்திரமாதவர்களே
வானுலகோர்பழியாரோ-வசையெங்குமொழியாரோ (நில்)
இந்திரியக்குறும்புகளெல்லாமடக்கிவிடும்
ஏகமனதாய்திவ்யபூரணநிலைக்குட்பட்டும்
இந்தவெகுளியின்னம் இருக்கலாமோஆகட்டும்
ஈஸ்வரரொத்தனந்தானுெவிருக்கட்டுமிந்தமட்டும் (நில்)
அடங்காதகோபமுங்களிருவர்க்குமேவிட்டா
லாரெதிர்ப்பார்நீங்க ளகங்கரித்துப்புறப்பட்டால்
நடுங்காதோபிரம்மாண்டம் சிறுவிரலாலேதொட்டால்
நான்சொல்வதென்னவேதந்தான்சொல்லுமுங்களைவிட்டால் ()
தமக்குத்தமக்குக்கோபமேவிடுதென்னமாயந்
சற்றுமென்செற்கிரங்காதிருப்பதுதென்னநாயம்
அடுக்காதென்றுரைக்கநான் பாத்ரனோடரியாயம்
அனுமாத்ரமாகிலுமென்சொலங்கீகரிக்கவேண்டுமேயும் ()

தேவேந்திரன்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

பொறுத்தருள்வீர்களல்ல புண்ணியதவங்கைக்கொண்ட
இறத்தினிலுயர்ந்தஞான தீபநல்லொளிபோல்வந்த
அறத்துயர்வசிஷ்டவிஸ்வாமித்ரரேயமரர்நாட்டில்
மறத்துயர்சண்டைசெய்தா லென்னில்வீண்வசையாகாதோ

வசனம்.

பொறுத்தருளுங்கள்சுவாமிகளேநீங்களிப்படி வசைக்கஞ்சாமல்



சண்டைசெய்தால் தேவலோகத்திலே வசிஷ்டவிஸ்வாமித்திரர்கள் சச்சரவுபட்டார்களென்று மற்றவுலகத்தாரறிந்தால் பழியார்களா நில்லுங்கள் நில்லுங்கள் வசிஷ்டவிஸ்வாமித்திரர்களே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பழிக்குநானஞ்சேன்பொல்லாப் பாவமென்றுலுங்கேளேன்
முழுப்பொய்யனவனையிந்த முனிவன்மெய்தவறுனென்றால்
வழிவருமாட்டுக்கஞ்சி வல்புலியொதுங்குமோதான்
செழிக்குமிந்த்ராணிபாக தேவதேவேந்த்ரனன்று

வசனம்.

ஏதோவொருஆட்டைக்கண்டு புலியயப்படுமா இந்தவசிஷ்டன்மகாபொய்யனுகிய அந்தஅரிச்சந்திரனை மெய்யனென்று சொன்னால் அவனைநான் பொய்யனென்று சொல்லுகிறதிலேபாவம்வரு கிறதும் பழிவருகிறதும் அதற்குநான் பயப்படுகிறதுமாதேவேந்திரமகாராசனே.

தேவேந்திரன் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இருவரில்யார்தான்பொய்ய ரெவர்களுங்களுக்குமேலோர்
நரபதியரிச்சந்திரன் தன்னிலையறியவேண்டும்
விரிவினிப்பேசவேண்டாம் விளங்குபந்தயங்கள்பேசி
சரிசொன்னோர்செவிக்கவேணுந் தவறினோர்தோற்கவேணும்

வசனம்.

கேளுங்கள்சுவாமிகளேயுங்களிருவரில்யார்தான்பொய்யனென்றுசொல்லக்கூடும் உங்களுக்குமேலானவர்கள் யாரிருக்கிறார்கள் ஆனதால் நீங்களிப்படியொருவரையொருவர் தூஷிக்கிறதில் காரியமில்லை நிச்சயமாகவொருபந்தயம் பேசிக்கொள்ளவேண்டும் அதன்பேரிலந்த அரிச்சந்திரனுடைய பொய்மெய்யைப் பரிசோதிக்கவேண்டும் பிற்பாடுதோற்றவர்களுக்குள்ள பிராயச்சித்தமும் செயித்தவர்களுக்குள்ள சிலாக்கியமுமடையவேண்டும் அதுகாரியமேயல்லது இனிநீங்கள் வீண்சண்டை செய்யவேண்டியதில்லை முனிவர்களே.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-தோடி.

விண்ணவர்க்கரசேநீசொன்னவார்த்தைவெல்லசரிசரியென்று, தன்னவிசிஷ்யன்வாயிலோர் பொய்யைத் தயினையிக்கோசிகன்காட்டில், பன்னுமென்தவமுங்கைவிட்டே னென்றுப்பாண்டமுந்தலையிசையெடுத்தே; திண்ணமாய்த்தெற்குத்திசைதனிற்செல்வேன் செப்புமென்வார்த்தைசத்தியமே.

வசனம்.

அதுவேசரி அதுவேசரிதேவேந்திரமகாராசனே இந்தவிஸ்வா

மித்திரன் என்னுடையசிஷ்யனாகிய அரிச்சந்திரன்வாயிலே பொ
ருபொய்வார்த்தைமாத்திரம் பிறக்கச்செய்வேனேயாகில் அதற்கு
நானொன்று சொல்லுகிறேன் பந்தயம் நான்பண்ணமாதவத்தை யெல்
லாங்கைவிட்டு என்ருபாண்டத்தையுந் தலைமேல்வைத்துக் கொ
ண்டு தெற்குமுகமாய்ப்போய்விடுகிறேன் இதுதான்என்னுடைய
பந்தயம்.

நாரதர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பன்னவர்முன் விருதுகூறி வந்தொருபுதருக்குள்ளே
பின்னடாயொளித்துக்கொண்ட பேதைபோலிருக்கலாமோ
என்னகாண் விஸ்வாமித்ரா விந்தநல்வசிஷ்டர்தாமுஞ்
சொன்னதையறிந்தாய்நீயும் சொல்லொருசபதந்தானே

வசனம்.

சபாசபாசகாணும் விஸ்வாமித்திரரிஷியே உம்மையும் உம்
முடையசொல்லையும் யோசனைபண்ணிப்பார்த்தால் ஒருமகாராஜ
சபையிலேயொருகொஞ்சமனுஷனானவன் சமுத்திரம்போல்வரு
கிறதுக்குஅணைசெய்து வருகிறேனென்று பகத்தாகியவிருதாவ
ளியெல்லாஞ்சொல்லிக்கொண்டு ஓட்டமாயோடி யொருசெடிக்கு
ள் தலையைத்துருத்திக்கொண்டதுபோலிருக்குது இப்போதல்ல
வோஉநம்முடையசபதவார்த்தைகளைப்பேசவேண்டும் விஸ்வாமித்
திரரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

குண்டுணிவார்த்தைசொல்லிக் குடிகெடுத்துலகமெங்கு
மண்டுஞ்ன்றும்போலோடி வளரும்நாரதரேகேளும்
இண்டுறலெனக்கேசரிமேடோசெப்புமிவ் வசிஷ்டனைப்போல்
மிண்டுவீண்வார்த்தைபேசேன் விருதுநான்புகல்வேன்பாரீர்

வசனம்.

கேளும் கேளும் ஓய்நாரதரே உம்மைப்போல் குண்டுணிவா
ர்த்தைசொல்லி அங்கங்கே குடிகெடுத்துக்கொண்டு சுழல்காற்றிலே
அகப்பட்டவண்டைப்போலதிரிகிறவனல்லஇந்தவசிஷ்டனைப்போ
லத்திண்டுமுண்டாய் வாயிலேவந்ததைப் பேசமாட்டேன் நான்
சொல்லுகிறேனென்லொரு பொன்சபதத்தைக்கேளுங்கள்.

தேவேந்திரன்-வசனம்.

தடையில்லாமற்சொல்லுமையா விஸ்வாமித்திரமகாமுனியே

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

தக்கவெந்தியபாதகனந்தச் சபலனரிச்சந்திரன்வாயிற்
பக்குவமாவனேகம்பொய்வார்த்தை பாரிலுண்டாக்கிடேனாகில்



அக்கினிநடுவிலிருந்தாமுக்குற்றமையகற்றியைம்புலனையுமொடுக்
கி மிக்கவேசெய்ததவத்தினிற்பாதி விலைவுடனவனுக்கேகொடுப்
பேன்.

வசனம்.

கேளுந்தேவேந்திரமகாராசனே அந்தப்பொல்லாதமகாபா
தகனாகிய அரிச்சந்திரன்வாயினால் அனேகம்பொய்வார்த்தைகளைச்
சொல்லிவைக்காமற்போவேனேயாகில் பஞ்சாக்கினிமத்தியிலேநி
ன்று மும்மலங்களையுமொழித்து ஐம்புலன்களையுமொடுக்கி அனே
ககாலம் அநேகாசதபசுகளைச்செய்துநான்பெற்றதவப்பலன்களிலே
பாதியவனுக்கேகொடுத்துவிடுகிறேனிதுதானென்னுடையசபதம்

மகாரிஷிகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விளங்குநல்வசிஷ்டவிஸ்வா மித்ரமாதீங்கள்சொன்ன
களங்கமில்லாதமேகாபதிச்சபதங்கள்மேல்லே
வளங்கெழுமுங்கனைப்போல் வாதுகளைவருங்கூறீர்
உளங்கனிவாறேமின்ன முறுதியாய்ச்சாதிப்பீரோ

வசனம்.

கேளுங்கள் வசிஷ்டவிஸ்வாமித்திரர்களே இப்போதுநீங்
களிருவரும் பேசிக்கொண்ட சபதமேசபதம் அதுவேசரி யென்
னைப்போலயார்தான் வாதுசெய்யப்போகிறீர்கள் நாங்கள் மகாசந்
தோஷத்தையடைந்தோம் வசிஷ்டவிஸ்வாமித்திரர்களே.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி.

இந்திரனேயிதற்குச்சாட்சி யிமையவர்மூவர்மற்ற
சுந்திரருவர்களேசாட்சி சதுமுகதேவர்சாட்சி
அந்திரவிஸ்வாமித்திரன் சபதமும்நானுந்தான்சொன்ன
முந்தியசபதவார்த்தை முறையறிவீர்கள்சாட்சி

வசனம்.

கேளுந்தேவேந்திரமகாராசனே நானும் இந்தவிஸ்வாமித்திர
னும் பேசிக்கொண்டசபதத்திற்கு நீசாட்சி இந்தத்தேவர்கள்சாட்
சி இந்தரிஷிகள்சாட்சி இந்தசந்திரர்சாட்சி இந்தவார்த்தைகளைக்
கேட்டவர்களெல்லாரும் சாட்சி

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சத்தியமாகநீங்கள்சாட்சியாயிருக்கவேண்டும்
பித்தன்போல்பிதற்றிவிட்டான் பேதையிவ்வசிஷ்டன்கயமை
தத்துவந்தானுமிந்த சண்டிபோற்றுணமாட்டேன்
மத்தனரிச்சந்திரன் வாய்மைமையக்காண்பேறேனே

வசனம்.

கேளுங்கள் கேளுங்கள் சகலதேவர்களேரிஷிகளேயட்சகின்

ணமில் புருஷருடைகாத்தருவ சித்தவித்தியாதரர்களே இந்தப்பயித்தியம்பிடித்த வசிஷ்டனைப்போல் வாயில்வந்ததைப்பிதற்றமாட்டேன் நான்சொன்னசபதமேசரி அதுவேசத்தியம் அதற்கு நீங்களனைவரும் சாட்சி இதோபுறப்படுகிறேன் அந்த அரசட்டுப்பெட்டிப்பான் சத்தியத்தையுந்தருமத்தையும் பொய்சொல்லாதகெட்டித்தனத்தையும் அறிகிறேன் நீங்களுங்காணப்போகிறீர்கள்

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

உன்னாலேயானமட்டுமோர்த்தனைமொழித்திடாமல்
என்னவாறுகச்சோதித் திழிவுறச்செய்திட்டாலும்
ஏதொன்றுகேளினிங்கே யிமையவர்சபைக்குள்நானே
பன்னியகாவலாமென் வஞ்சகாநடந்திடாயே

வசனம்.

நல்லகாரியம் நல்லகாரியம் அந்தசத்தியமூர்த்தியாகிய அரிச்சந்திரமகாராசனை நீரொருவகைபாய்கையிலைசனிலெவ்வளவளவித்தாலும் எனிப்படிசெய்தாயென்றுகேட்பதில்லை நானேயிந்ததேவசபையைவிட்டுநீங்காமல் காவலுக்குள்ளாக இருக்கிறேன் இப்போதே யெழுந்திருந்து நடவும்

தேவேந்திரன்-விருத்தம்-இ-ம்-தோடி.

போதுநீயிதற்குமேலே புகல்வதொன்றில்லையந்தப்
பூதலத்தரிச்சந்திரன்பாற் போயுன்றன்வலிமையெல்லாம்
ஏதொன்றுங்குறைவில்லாமல் விசைத்துப்பொய்மெய்மைகண்டே
ஓதுநீயுணர்க்கவேண்டா மூடனேபோய்வருகுவாயே

வசனம்.

போதும் போதும் இந்தமட்டுடனே நிறுத்துங்கள் ஓய்விஸ்வாமித்திரமகாரிஷியே நீர்சொன்னசபதப்படிக்கே இப்போது பூலோகத்துக்குப்போய் அந்தஅரிச்சந்திரமகாராசனை யெப்படியெப்படி சோதிக்கவேணுமோ அப்படிக்கெல்லாஞ்சோதித்துப்பொய்யனென்றாவது அல்லது மெய்யனென்றாவது ஸ்தாபித்துக்கொண்டுவாவேண்டியது உமதுகடனேயல்லது வேறேபேசவேண்டியதில்லை நடவுங்கடவும்.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பொய்யையுஞ்சொல்லச்செய்வேன் பொருந்திய அசத்யமெல்லாம்
வையமீதனைத்துஞ்செய்ய மன்னனைச்சபிப்பேன்பாரில்
நையுமிவ்வசிஷ்டன்சொல்லும்நான் சொன்னசொல்லுங்காண்பாய்
மெய்யிதுமாமேவேந்தே விடைகொண்டேவருகுவேனே



(வ-ம் சேரும்தேவேந்திரமகாராசனே அந்தஅப்ரயோசகனான அரிச்சந்திரனைப்பொய்சொல்லுவிக்கிறதுக்கும் அசத்யம்பண்ணச்செய்கிறதற்கும் வேறேதடையா இந்தவசிஷ்டன்வாயிலேவந்தசாமர்த்தியமும் என்னுடையதிராணியும் இதோகாணப்போகிறீர் இதோதான்உத்தரவுபெற்றுக்கொண்டேன் பூலோகத்துக்குப்போய்வருகிறேன்.

தேவேந்திரன்-வசனம்.

அப்படியேசெய்யலாஞ்சுவாமி.

தேவேந்திரனுடைய கட்டியக்காரன்-வசனம்.

ஆனாயாசுவாமிவசிஷ்டரே எங்கேயசைந்துகொண் டெழுந்திருக்கிறீர் எங்கும் அசையக்கூடாது இங்கேதானேகாவலிலிருக்கவேணும்.

வசிஷ்டர்-வசனம்.

ஆமப்பாஆம் எனக்கும் நினைவிருக்கிறது நான் எங்கேயும் போகவில்லை இங்கேதானே யிருக்கிறேன்.

பொதுசொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

ஆய்பொழுதிந்திரன்றன் அருஞ்சபையில்வந்திருந்த
நேயமுனிவோர்முதலோர் நிலைநாடிப்போனபின்பு
ஆயவசிஷ்டருடன் றுடுக்குகள்பேசியகோ
மாயவிஸ்வாமித்திரன்றான் வந்தான்மண்ணிலங்கே

வசனம்.

இந்தப்பிரகாரமாக தேவேந்திரனுடைய சபையிலேவந்திருந்த தேவர்கள் ரிஷிகள் முதலாகியபேர்களுந் தங்கள்தங்களிருப்பிடமேபோனார்கள் அப்பால்வசிஷ்டருடனே வாதுபேசிய விஸ்வாமித்திரமகாரிஷி தாந்தவஞ்செய்கிற இமயோர்கிரிச்சாரலுக்கு வந்திறவிறங்காலேக.

விஸ்வாமித்திரர்-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

தவத்தினிலுயர்ந்தவிஸ்வாமித்திரன்நானே
தவத்தினிலுயர்ந்தவிஸ்வாமித்திரன்நானே
பாவத்தையொழித்துப்பாதத்தைவிழித்துப்
பார்த்துநிலைசேர்த்தானை பயமிகுந்தவசிஷ்டனெனுங்கவே
சுயமாகத்தெரிந்திருங்கவே (தவத்தி)
கோபம்விளைந்துகண்ணைவிழித்துப்பார்ப்பேன்-நான்
சூரியன்றுமுலகொளிக்கவேநிலைசேர்ப்பேன்
சாபத்தாலந்தப்ப்ரமாண்டத்தையும்பேர்ப்பேன்-எந்தன்
சுயமர்த்தியத்தனக்கெதிருண்டோவென்றுதீர்ப்பேன்

நீடத்தைச்சின்னசைக்கள் மொய்க்குமோ
அரிச்சந்திரன்செருக்கு நிலைக்குமோ
தேடிநிலதாடியொரு சிறுவிரலாலெத்திச்
சிதறுவேன்பார்யுக்தி (தவத்தி)

வசனம்.

ஆரடா அடா சிஷ்யா மகாமாயசித்தா சுவாமி ஆரடா அடாசிஷ்யா மகாமாயசாலி ஐயா.

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பிமகாமாயசாலி ஐயருடைய கண்ணுக்குப் பார்வைமட்டாறுதிபோல் காணுது.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணேமகாமாயசித்தா அதுவொன்றுமல்ல மெய்யானசத்தியத்தையுடைய அந்த அரிச்சந்திரமகாராசனைப்பொய்யனுகவத்படுத்துகிறேனென்று அனியாயவார்த்தை சொல்லிவந்தார் அந்ததோஷந்தான்போலே காணுது அந்தமயக்கம்.

விஸ்வாமித்திரர்-வசனம்.

என்னடா துஷ்டப்பயலே அடா ஆசனங்கொண்டுவந்துபோடும் பிள்ளாய்.

சிஷ்யன்-வசனம்.

அப்படியே ஆசனங்கொண்டுவந்து போட்டேன்சுவாமி

விஸ்வாமித்திரர் -வசனம்.

எங்கேயடா துஷ்டப்பயலே.

சிஷியன்வசனம்.

அப்படியொன்றும் வித்தியாசமிராது எனக்குச்சம்மதியானவிடத்தில்போட்டேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

இப்படிகொண்டுவந்துபோடும்பிள்ளாய்.

சிஷியன்-வசனம்.

முன்னமே இப்படிச்சொல்லிக்கொளுத்தப்போகாதா சுவாமி பொன்னகிரிக்குப்புவனகிரிக்குமெந்நாளுமுள்ள இழிவுதானிது

சிஷியர்-வசனம்.

அண்ணே மகாமாயசித்தா னதுஐயர் ஆதனத்தின்பேரிலுட்கார்ந்துகொண்டு அழப்போகிறாப்போலேகாணுது ஏதோ அவமூத்தை அவர்தொலைக்கப்போகிறார் தொலைக்கட்டும்.

பொதுவிருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

மாதவவிஸ்வாமித்ரன் மகிழ்சவச்சரன்றண்ணி
யேதினுலரிச்சந்த்ரன்றன் னிழிவைநான்காண்பேனென்று



காதிபோனதிலெண்ணிக் கலக்கமுற்றிருக்கும்போதில்
ஆதியாயவனம்வாழ்முருமுனிவோர்வந்தாரே

வசனம்.

விஸ்வாமித்திரமகாரிஷியானவர் இமோத்கிரிச்சாரலிலே வந்து அந்த அரிச்சந்திரனை யெவ்விதத்திலே பொய்யனுக்குவேனென்று உபாயம் நினைத்துக்கொண்டிருக்க அங்குள்ளவனத்திலே வாழும்படியாகிய தவமுனிவர்கள் வருகிறவிதங்காண்க.

தவமுனிவர்கள்-வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

தவமுனிவர்கள்வந்தார்களே-மகா-தவமுனிவர்கள்வந்தார்களே

கவலையொழித்து மலக்கசட்டையறுத்துநல
சிவநற்பொருளின்பலத்தானம்நிறைந்துவளை (தவமு)
கோடைவெய்யலில்மழை காலங்குளிர்ந்தபனிக்
கூறுங்காலமெல்லாம் கூசாமலேதனி
யாடையாய்த்தரிப்பதுங்தோலிந்தமேதினி
ஆசையொழிர்தடுத்தோர் அரியபஞ்சாக்கினி
நாடிப்பாத்தைநண்ணி நற்கதிதன்னையெண்ணி (தவமு)
நீமெங்கபற்கண்ணிநேசமாப்பூசைபண்ணி

முனிவர்கள்-போற்றி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பொருந்துநற்றவத்தின்மிக்க புகழ்விஸ்வாமித்ரநாதா
திருந்துமெய்ப்பொருளைநாமும் தீபனைநின்றும்போற்றி
அருந்துணைநின்னையல்லா லயலொருதுணைகாணுண்டோ
மருந்துபோலெமக்குவாய்த்த மாமுனிப்போற்றிப்போற்றி

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பஞ்சாக்கினிநடுவேநின்று பரத்தினைவ்னினைவாடி
அஞ்சாமற்றவங்கள்செய்யு மரியபன்மனதுக்கேற்ற
மஞ்சாரும்பொழில்சூழ்ந்த மனத்தின்மாதவங்கள்செய்யும்
செஞ்சாமாருதம்போல்வாழும் திறமுடையோர்வாரீர்

வசனம்.

ஆசனத்திலெழுந்தருளியிருக்க இவ்வனத்தில்வாழும்படியாகிய தவமுனிவர்களே.

முனிவர்கள்-விருத்தம் இ-ம்-தோடி.

இந்திரன்பதிக்கேயேகியீன்னர் யாதிசயமங்கேயிருந்து
வந்ததெப்போதுவானவர்சபையில் வந்தவர்யாவர்யாரந்தச்
சுந்தரதேவரென்னசெய்கின்றார் தொகுத்தங்கேநடந்ததைவிரித்து
எந்தமக்குரைத்தாலுள்மகிழடைவோ மினிமையாய்புகன்றிடுவீரே

வசனம்.

தேவரீர் தேவேந்திரன்சபைக்குப்போயிருந்தீரோ அங்கேயாரீ

யார்வந்திருந்தார்கள் அந்ததேவர்கள் என்னசெய்கிறார்கள் அங்கே யென்ன அதிசயம் விளைந்ததோ தேவரீரிங்கே யெப்போது வந்தீரோ அதையெல்லாம் நாங்கள்கேட்டு மனமகிழடையும்படியாகத் திருவுளம்பற்றவேணும் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-எழுசீர்நெடில்-விருத்தம்-இ-ம் - எதுகுலகாம்போதி.

அமரர்கோன்சபையில்யாவருமிருந்தார் யானுமங்கெய்தினேன்
புவியில்வாழரசரில்மெய்யன்யாரென்றவர்கேட்டார்
குலகுருவசிஷ்டன்தன்னருஞ்சிஷ்யன்கூரிச்சந்திரனே
மெய்யனென்றஞ்சாமலவர்முன்னேசொடுமையாயுரைத்தான்
சமரசமாகவெப்படியறிவாயென்றுநான்சொல்லச்சபதமுங்
கூறினானவனைச்சாதிக்கத்துணிந்திங்கேதாவந்தேன்
காலதாமதமாகுமுன்னிவனரிமுகவோர்காக்கவந்தாலுந்தடுத்
தெந்தச்சபதங்களைத்தினில்முடித்திடவேணும்

(எ-ம்) தேவசபையிலே யெல்லோரும்வந்திருந்தார்கள் நானும்போயிருந்தேன் அந்ததேவேந்திரமகாராசன் அங்கிருந்தவர்களைப்பார்த்துப் பூலோகத்திலுள்ள ராசாக்களில் எவன்பொய்சொல்லாதவனென்றுகேட்டார் இந்தப் பஞ்சைப் பெட்டிமகனான வசிஷ்டன்வாயைமூடிக்கொண்டிருக்கவேண்டாமா தன்னுடையசிஷ்ய னரிச்சந்திரன் மகாமெய்யனென்று சொல்லவந்தான் அப்படியிராதென்று தடுத்தேன் சபதம்பண்ணிக்கொண்டான் நானும்சபதம்பண்ணிக்கொண்டு இதோவந்தேன் அதைநிறைவேற்றவேணுந் தவமுனிவர்களே.

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

நல்லகாரியம்நீர்செய்கிர் நலமிகுவிஸ்வாமித்ர
வல்லமாதவரேயந்த வசிட்டர்தான்கொஞ்சமோவிவ்
வெல்லையிலரிச்சந்திரன்று னிசைவாலேபொய்யைச்சொல்ல
புல்லியசபதஞ்சொல்லிப் புறப்படலாமோஅய்யா

வசனம்.

நல்லகாரியம் நல்லகாரியம் அந்த வசிஷ்டமகாரிஷி என்னசாமான்யமானவரா அந்தஅரிச்சந்திரமகாராசன் ஒருபொய்சொல்லுகிறது லகுவிலே யிருக்கிறதா இப்படிவழுத்தப்பாய் சபதஞ்சொல்லிப்புறப்படலாமோ விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

நீறுநீறாக்செய்வே னினைக்குமுன்னுலகையெல்லாம்
தாறுமாறாகச்சொன்னீர் தவமுனிவர்களேநீங்கள்
வேறொருவர்களேயானால் விழித்தெரித்திடுவேனென்றன்
கூறரும்பலமென்னால் கூசாமற்சொல்லலாமோ.



வசனம்.

நீங்கள்சொன்னதுபோல் வேறொருவர்சொல்லுவார்களேயானால் சாம்பலாக எரித்துப்போடுவேன் என்னுடையதபோபலமாகுத் துவத்தெரியாததனாலே வாய்கூசாமல்சொல்லிவிட்டீர்கள் நானினைத்தேனேயாகில் திரிலோகங்களையும் நீறுநீறாச்செய்வேன் தவமுனிவர்களே.

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

எங்கள்மேற்கோபமாமோ விசைபெறுவிஸ்வாமித்ர
துங்கமாமுனியேயுன்றன் றுணையடிபோற்றிபோற்றி
பங்கம்வந்தாலுஞ்சொன்ன படிசெலித்தாலுமிங்கே
தங்குமெங்களுக்கேதையா சமைவோம்நீரிடும்வேலைக்கே

வசனம்.

எங்கள்பேரிலேன் கோபஞ் செய்கிறீர்கள் நீர்சொன்னபடிக்குச்செலித்தாலும் உம்முடைய கீர்த்தியும் தோற்றாலும் உம்முடைய இழிவு நாங்களிந்தவனத்திலே உம்முடையஆதரவினாலிருந்து தபசுபண்ணுகிறவர்கள் தேவரீர்கட்டளையிட்டபணிவிடைக்குக்காத்திருக்கிறோம் கோபத்தைப்பொறுத்துக்கொள்ளுமையா விஸ்வாமித்திரமகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

நாளையேகாண்பீரந்த நவையுள்ளவசிஷ்டன்சொல்லும்
கோளிலாதெந்தன்சொல்லுங் குறைவிலாதவத்துளோரே
நீருமோர்யாகஞ்செய்ய நினைவுமாகுமதற்காயோத்தி
ஆளரிச்சந்திரனைஞ்சையறிந்துவந்தாற்போம்வனே

வசனம்.

கேளுங்கள் தவமுனிவர்களே நாளையே காணப்போகிறீர்கள் அந்தஸ்வல்பமுடைய வசிஷ்டனுடைய சொல்லையும் என்சொல்லையும் அதிருக்கட்டும் நாமொருயாகஞ்செய்யவேணும் அதற்குக்கொஞ்சந்திரவியம்வேணுமதற்காக அயோத்தியாபுரிக்கு யானும்படியாகிய அரிச்சந்திரமகாராசனிடத்திற்கு நீங்கள்போய் விஸ்வாமித்திரமகாரிஷி ஒருமெய்யிகம்பொருந்தியயாகஞ்செய்யப்போகிறார் அந்தயாகத்துக்குக் கொஞ்சந்திரவியம் வேண்டியிருக்குதாம்நீர்கொடுக்க மாட்டீரோவென்று நான்கேட்டுவரச்சொன்னேனென்றுசொல்லி அவன்மனதையறிந்துவாருங்கள்பார்க்கலாமுனிவர்களே

முனிவர்கள்-வசனம்.

அப்படியேயரிச்சந்திரமகாராசாவைக்கண்டு அவருடனேநீர்

சொல்லியவார்த்தைகளைச்சொல்லி அவர்மனதையறிந்துவருகிறேம் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர் வசனம்.

மேல்நடந்த காரியங்களெதாகிலும் அவனுடனே சூசகவி டப்போகிறீர்கள் உங்களுக்காணையிருக்கிறது.

முனிவர்கள்-வசனம்.

அரிசரி யப்படியிருக்குமா சுவாமி யதார்த்தமாய் சொல்லிவ ருகிறோம் விஸ்வாமித்திர மகாரிஷியே

விஸ்வாமித்திரர் -வசனம்.

ஆனால்போய்வாருங்கள்முனிவர்களே

பொது-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

மிக்கவேவசிஷ்டரோடும் வெம்புசெய்விஸ்வாமித்திரன்
சொற்குள்ளாய்முனிவராலே சூழலச்செய்திடவிடுக்க
அக்கொடுவினையமென்று வரிச்சந்திரமன்னன்வாசல்
கைக்கொண்டதூரவார்த்தைக் கட்டியக்காரனும்வந்தானே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திர மகாரிஷியனுப்பின தவ முனிவர்கள் அயோத்தியாபுரிக்கு வருமுன்னாக அங்கே யரிச்சந்தி ரமகாராஜன் வாசற்கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க

கட்டியக்காரன்-வருகிற-தரு-இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கட்டியக்காரன்வந்தானே இவ்வுல்லாசக்-கட்டியக்காரன்வந்தான்
அஷ்டதிசைகளினும் அமருலகத்திலும்
அவனிமேஷ்டனென்னவரும்புகழ்நிருபன்ன
ஆசைகூர்புகழரிச்சந்திராமக
ராசன்வாசலலங்கரித்திடமிக
அடல்பெருகடல்படு தொனியெனவடிபடு
மதிர்முரசொலியினு முதிர்சொலினெவர்களு
மடையுமடையுமினி மணிவரிசைகள்பெற
மரசர்களெவினவி யதிசநன்மையுற (கட்டியக்)
இரசிதப்பொன்னுருமாலை-நன்றாய்த் தரித்துத்
இசற்மணிமுத்துத்தூரவலம் கரித்து
அரியநற்றிருமாலைநயல் கரித்து
அருள்பெறவேமனதிலுச் சரித்து
திருப்பர்களெவர்களுந்துதிமிகுமகிழ்சொலும்
நிபுணாசிக்கயவிபவசுசிதசெய
நிலைபெருகியமெய்நெறியறிதருமய
நினைந்துசல்லடர்தட்டிப் புனைந்துகண்ணுக்கியிட்டி



நிறைப்பற்புதசற்சனர்மெச்சிடுவிற்பன
நிர்ப்பயநிர்க்குணமிக்கவனென
நிசமங்கொள்சபதியமிகுவிசித
வனதுங்கனெனவளருமதியுசித (கட்டியக்)

கட்டியக்காரன்-வசனம்.

பேசாதிருங்கள் பேசாதிருங்கள் அரிச்சந்திரமகாராசாவான வர் கொலுவுக்கு வருகிறார் வெகுபராக்கு

அரிச்சந்திரன்-தரு இ-ம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி

மாசில்லாதகலைவல்லாசனுமதிகப்ரகாசனுஞ் சுகுணநல்விலாசனரிச்சந் திரமகாராசமகிடன்வந்தானே.
பூசுரர்கள்நிதம்புகலருமறைநெறி-தவறாமேயவர்களுமதி
பூபன்மகிமைபெறுபுரவலன் கதிர்குலமரபினில்வருமொரு
பூபதியெனவேபுகழினிற்நிகழொருபொருளெனவெவரென
பூவிலுறையயன்-அரியரன்மகிழவே-அரசர்கள்புகழவே
பொற்பினற்புதத்தின்முகய-விற்பனர்க்குளிப்ராசித்த
புளகமணிமெத்தமிகவளாமழகியபுருஷராசிகவுசித மணியெனவென
புனிதமானகனநிதானசகுநிறைவுடனதயானசிரீசமான்மகேசுமா
மாணிக்கமிட்டிழைத்தகிரீடஞ்சிரசில் மின்ன
வச்ரகுண்டலங்களிருசெவிகளுந் துன்ன
ஆணிப்பொற்கவசமீதமார்க்குமரி தென்ன
அப்புறத்தாணிமுதுகிலமைந்தலங்கிர்த மின்ன
காணிக்கைகொண்டரசர்கலங்கியெதிர் விலங்க
கதித்தவிற்பிடித்துடைவாள்கட்டிச்சரிகை யிலங்க
காணக்கிடைக்குமோஇவர்புசகிரிதி யெங்கும்
காட்டமுத்தாணிப்பதக்கம் தாணிக்கநீச் விலங்க
கதியுற்றிற்றற்றுணைபெற்றவர்களு
மதிசற்குணநிற்பயமுற்றிசைகொளும்
அதுலசூரனிவனெனமொழிதர
சிதைவிலாதமகிழொடுவரவர
அண்டையில்பிரண்டுகொள்-கண்டகண்டமி
ரண்டுபுரண்டு-இரண்டுவரண்டிட
ஆயாரகோரபேரிவீரமாரிதானைபூரி
அடுபடுகிடுகுகளழகியரவில்முழு
வணிநகாஜபவைறயறைதிசைநிறை
அதிர்துந்துமிதொந்தொம்மென
அடல்சங்குகொளவிபய்யம்பமென
அரிவையர்நடமிட-மருவலர்கொடிபட

வருமிசையொலியிட-தரிபலர்பகைவிட
அன்புகொண்டமந்திரிகளுருகவே
இன்பமுண்டுசேந்ததிபெருகவே
அருமைமேவுநிபுட ஞானநயநிதி
பெருமைதாவுசுபகுணாலசெயநிதி (யாதி)

இராசன்கடவுள்வாழ்த்து விருத்தம் இ-ம்-மத்தியமாவதி.

திருவளர்புவியிலோங்கித் திங்கள்மும்மாரிபெய்க
வருபலவுயிர்கள்மீதி வளமுடனனும்வாழ்க
தருநெறி மறைவிளங்கத் தருமநன்னிதிபொங்க
அருநிறைநெடியமாலி னப்புயச்சரணைப்போற்றி

பொது விருத்தம்-இ-ம்-புன்னாகவராளி.

சீற்றத்தின்மிகுந்தவிஸ்வா மித்திரன்செய்கைதன்னை
மாற்றுதற்கரியதன்றென்னி மாதவமுனிவரெல்லாம்
வேற்றொருவினைகள்செய்யா மெய்யரிச்சந்த்ரமன்னன்
நாற்றிசைபுகழுங்கீர்த்தி நற்சபைதனில்வந்தாரே

வசனம்.

விஸ்வாமித்திரனனுப்பியதவமுனிவர்கள் அரிச்சந்திரமகாராசன்சபைக்கு வருகிற விதங்காண்க.

தவமுனிவர்கள்-வருகிற-தரு-இ-ம்- புன்னாகவராளி தாளம்-ஆதி.

எல்லாந்தெய்வச்செயல்செகமெல்லாந்தெய்வச்செயல்
வல்லோரொருவர்களுண்டோ ஆதி ஆதி
மனநிலையாகியமாதவமே சரி (எல்லாம்)
ருத்ராதாரி சாலரிது
தோன்றுநெறியென்னமோ கோலம்
சாத்ரபுராணசம்பந்தசை தன்யமும்
படித்ததினாலென்னபா அன்னியவுன்னியமும் (எல்லாம்)
தத்துவக்குப்பைகளை நீக்கிச்சொல்லும்
சங்கடவேதனைதனைப் போக்கிச்
சத்துச்சித்தானந்த பூரணமானது
நித்தியவிநோதநியாயபரம்பொருது (எல்லாம்)
வசிஷ்டருடனே வாது-இவர்
வலியப்போய்ச்செய்வ தேது
அசட்டுக்குணம்வந்தாலும் அதர்மங்கள்விளைந்தாலும்
சசட்டுக்கொரம்பிறந்தாலும் கபடங்கள்நிறைந்தாலும் (எல்லா

அரிச்சந்திரன்-போற்றி விருத்தம்-இ-ம்-சாவேரி.

தாவியநெருப்பினின்று தவம்புரிமகத்துவம்வாய்ந்த
தேவமாதவரோவாநீர் திருவடியிணையும்போற்றி



ஆவலாமெனதுபுண்ணியமனைத்தையுமின்றேபெற்றேன்
மூவருமதிக்கநல்ல முக்கியமாதவரேபோற்றி

வசனம்.

வாருங்கள்வாருங்கள் தவமுனிகளே ஆசனத்திலெழுந்தருளியிருங்கள்சுவாமிகளே.

தவமுனிவர்கள்-விருத்தம்-இ-ம்-கன்னியாசி.

செல்கள்பாய்வயல்கள்சூழ்ந்த திகழ்வளமிகும்யோத்தி
நால்வகைத்தருமமோங்க நல்லரசுடையாய்வாழி
மாலெனச்சக்கரந்தை வையகந்தனிற்செலுத்தி
மேலுலகோர்மதிக்க விளங்கரிச்சந்திராவாழி

வசனம்.

வாழிவாழி இராசசக்கிரேஸ்வரனான அரிச்சந்திரமகாராசனே வாழி

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தவமுனிவோரேயுந்தன் தவப்பலன்போலேயிங்கே
கவலைதீர்த்திடவேவந்த காரணமேதோசொல்வீர்
தவமொன்றுமிலாமலுங்கள் தாசன்யான்முடிப்பேனித்த
குவலயம்பெயர்த்திட்டாலுங்குறுக்கொன்றும்புகன்றிடேனே

வசனம்.

கேளுங்கள் தவமுனிவர்களாகிய சுவாமிகளே நான்செய்த சாபலம் என்மனக்கவலை தீர்த்தக்கதாக உங்கள் தெரிசனங்கிடைத்தது அதுவேயன்றி நீங்கள் வந்த காரியார்த்தத்தைச்சொன்னால்தடையில்லாமல் முடிக்கிறேன் இந்தப்பூமிபொய்த்தாலுமென்வார்த்தை பொய்யாது சுவாமிகளே.

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-அடாணா.

இசையரிச்சந்திரமன்னா திறல்விஸ்வாமித்திரர்தாமோர்
மகமொன்றுசெய்யவேண்டி வரவிட்டார்நாங்கள்வந்தோம்
தகைபெறவதற்குக்கொஞ்சம் தனம்வேணுங்கொடுப்பையாகில்
மகிபனேயவர்தாமிங்கே வருகுவார்தருகுவாயே

(வ-ம்) கேளும் அரிச்சந்திரமகாராசனே விஸ்வாமித்திரமகாரிஷியெங்களையனுப்பிவைத்தார் நாங்கள் வந்தோம் அவரொருயாகஞ்செய்ய வேண்டியிருக்குதாம் அதற்குக் கொஞ்சந்திரவியம் வேணுமாம் அதைநீர்தருகிறீரோவென்றுசொன்னால் அவர்வருகிறேரென்றுசொன்னார் இதுதான் நாங்கள்வந்தகாரியம் மகாராசனே.

இராஜன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அந்தமாமுனிவன்செப்பு மருமைசேர்வேள்விக்காக
முந்திவந்தென்னைக்கேட்டு முடிக்கவும்வேணுமோதான்

மு

இந்தநாழிகையிலேவேன் எத்தனைதனமாகுனுந்
சிந்தைதான்மகிழ்ந்துநீர் சீக்கிரமாய்வாச்சொல்வீரே

வசனம்.

சேனுங்கள் தவமுனிவர்களே ஈதொருபிரயோசனமாக முந்தி உங்களையனுப்பி என்னைக்கேட்டுக்கொண்டாவரவேணும் அந்த விஸ்வாமித்திரமகாரிஷி யாகஞ்செய்கிறதற்குத் திரவியங்கொடுக்க நான்என்னபாக்கியம்பெற்றேன் எவ்வளவு வேணுமென்றாலும் கொடுப்பேன் நீங்கள்போய் சீக்கிரமாய் வரச்சொல்லுங்கள் சுவாமிகளே.

முனிவர்-வசனம்.

அப்படியே நீர்தருகிறேனென்று ஏற்றுக்கொண்டீரென்று விஸ்வாமித்திரமகாரிஷிக்குச் சொல்லுகிறோம் அரிச்சந்திரமகாராசனே.

பொது-விருத்தம்-இ-ம்-பூரிகல்யாணி.

தன்னளியரிச்சந்திரன்றான் சாற்றியவாய்மைகேட்டு
பண்ணுமாதவத்தோரந்தப் பதிதனைநீங்கிமுன்னே
விண்ணவர்சபையில்வாது விளம்பியவிஸ்வாமித்ரன்
தன்னியச்சாலைவைகும் நற்றவநிலைவந்தாரே

வசனம்.

அரிச்சந்திரமகாராசனிடத்திற்கு வந்ததவமுனிவர்கள் வேண்டியதிரவியந் தருகிறேனென்று அவர்சொன்னவார்த்தையை விஸ்வாமித்திர மகாரிஷிக்குச் சொல்லவருகிற விதங்காண்க.

முனிவர்கள் விஸ்வாமித்திரனிடத்திற்குவருகிற-தரு
இ-ம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதி.

சிவசிவ ஞானசாரமே சாரப்ரணவாகாரந்
தெரிந்தாலல்லவோகாணும்நிர்விசாரம்
தவறில்லாசோதிப்பிரகாசத்தபோபலத்தின்நிறைவிலாசத்
தற்பரம்பொருளாகியதீபந்தழைத்துவிளங்கும்மகாப்ரதாபம் ()
பந்தபாசக்கட்டில் மயங்கலாமோ-அதைப்
பரித்தால்ப்ரபஞ்ச மாய்கைபோமோ
சிந்தைநிலைக்கமருந்துக ஞண்டாமோ-கண்டு
தெளியும்வல்லமைவிளைந்திருப்பது நாமோ
ஐந்துபூதமைந்துபொறிக ளைந்துபஞ்சமனகுறிகள்
விந்துநாதங்கலந்ததேகம் விளைந்தவாறுஞானஞுயோக (சிவ)

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

நிறைதவவிஸ்வாமித்திர நிபுணனேசரணமையா
மறைபுகழ்முனிபத்தி வள்ளலேசரணமையா



முறையேநீர்சொன்னசொல்லை முடிமன்னனிடத்திற்சொன்னோம்
குறைவில்லையவேந்தநாற் கொடுப்பேன்யாதனமுமென்றான்

வசனம்.

சரணஞ் சரணமையா விஸ்வாமித்திரமகாரிஷியே தேவரீருத்தாரப்படியே அயோத்தியாபுரிக்குப்போய் அரிச்சந்திரமகாராசனைக்கண்டோம் தேவரீர்சொன்னசொல்லையுஞ்சொன்னோம் தேவரீரவனிடத்திற்கெப்போதுபோனாலும் உமக்குவேண்டியதிரவியங் கொடுக்கும்படியாய் உம்மிட வரவுக் கெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான் விஸ்வாமித்திரமகாரிஷியே.

விஸ்வாமித்திரர் - வசனம்.

அப்படியா நான்தன்னிடத்துக்குவந்தால் நான்கேட்டதிரவியமெல்லாம் தருகிறேனென்று சம்மதித்தானுமகாசந்தோஷம் மகாசந்தோஷம்.

முனிவர்கள்-வசனம்.

உத்தரவுகொடுத்தால் எங்களாசிரமத்துக்குப்போகிறோம் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அப்படியே போய்வரலாம் தவமுனிவர்களே.

விஸ்வாமித்திரர் - வசனம்.

ஆடா அடாசிஷ்யா மகாமாயமித்ரா ஆடா அடா மகாமாயசாலி நாம் அயோத்தியா புரிக்குப்போகவேணும் வாருங்கள் வாருங்கள் சிஷர்களே.

மகாமாயசாலி-வசனம்.

நாங்கள் பின்னாலே மெள்ளவருகிறோம் நீர் முன்னாலேபோமையா சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

என்னடாசொன்னாய் துஷ்டப்பயலே

மகாமாயசாலி-வசனம்.

பின்னையொன்றுமில்லை இப்பவேவந்து தொலைக்கிறோம்சுவாமி

விஸ்வாமித்திரர்-அரிச்சந்திரனிடத்திற்குவருகிற-தரு
இ-ம்-மோகனம்-ஆதிதாளம்

அதிகவுக்ரமகாதபோபலங்கள்நிறை அரியவிஸ்வாமித்திரஞனே
ஜெகப்ரசித்தமானவிஸ்வாமித்திர ஞனே
மதிகதிர்சூழுமித்தவெவ்வடிசைமுத னுள்ள
மற்றவுலகங்களுமென்புகழ்சொல்லிக் கொள்ள

அதிபெருகிய அஷ்டகசங்களும்மனங் கலங்கத்
தன்னுஞ்சடையிலங்கத் தொனிப்பேனண்டங் குலுங்க
சுடர்விட்டிலகிய கனல்நடுவினில்மன
திடமுற்றுயர்தவ நெறிதருபரமென (அதி)
ஒருவிரலாலிந்தத்தரையின்கையூன்றியே
யூழிகாலமுந்தவஞ் சாதிப்பேன்-மோனும்
உலவிடவாயுவைசாக்கிரனங்களை
யுண்ணாமலேயிருந்தும் போதிப்பேன்
திருக்கில்லாமலேநீதமூவர்க்குமேலாகத்
திசமூம்பிரகாசத்தையுஞ் சோதிப்பென்-நின்று
சிவராசிகளுந்தாபரசங்கமுந்
சிருஷ்டித்துப்பிரம்மாவுடன் வாதிப்பேன்
சரணென்றடைந்தவரைத்தற்காத்துக்கொள்வே னென்னை
சாதிக்குநினைந்தோரைத்தரைமட்டஞ்செய்வேன் யென்னை
தாழ்த்துவனேவசிஷ்டனுமே மூழ்குவனேபாரும்பாரும்
சகலப்ரதாபவிவேக விலாசன்
சாமர்த்தியத்தினால்நான்சக தீசன்
மகிமைக்கெதிரிட்டப்ர காசன்
வலுமைத்திறல்பெற்றவு லாசன் (அதிக)

அரிச்சந்திரன்-போற்றி-விருத்தம்-இ-ம்-தோடி.

வருத்தமும்மலங்கள்போக்கி மாதவப்பலன்கைக்கொண்ட
கருத்துயர்விஸ்வாமித்ர காரணமுனியேபோற்றி
அருத்தியாலென்னைநாடி அருளுடன்வருமென்பாக்கியம்
ஒருத்தருக்கிதைப்போலுண்டோ வுயர்மலர்ப்பதங்கள்போற்றி

வசனம்.

சரணம் சரணம் ஆதனத்தி லெழுந்தருளியிரும் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

கொடைக்கொருதருவைப்போலும் குவலயத்தோர்கட்கெல்லாம்
தடைப்படாதளிக்குங்கீர்த்தி தரித்துயர்மகியாவாழி
சடைப்புனைமுனிவர்செய்யுந் தவங்களுக்கிடமில்லாமல்
அடுத்துவந்தலையுந்தந்தே யனுதினம்வாழ்வாய்வாழி

வசனம்.

வாழிவாழி அரிச்சந்திரமகாராசனேவாழி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-வராளி.

முன்னம்யான்செய்ததவத்தினிற்பயனோமொழியுமிவ்வயோ
த்திமாநகரம்புண்ணியதவங்கள்செய்தவப்பயனோடரிச்சந்திரனெதி



ரிசிக்கப்பெற்ற, நன்னயசுகிர்த மன்மிசையார்தான் நாடிவேயெ ருகுவாராயா; என்னகாரியமாவென்னருகிங்கே யெய்தியதுரைசெ ய்தால் முடிப்பேன்.

வசனம்.

சரணஞ்சரணம் விஸ்வாமித்திரமகாரிஷியே தேவரீருடைய தெரிசனங்கிடைத்தது அடியேன்செய்தபாக்கியமோ இந்தஅயோ த்தியாநகரஞ்செய்த பாக்கியமோ நல்லகாரியம் தேவரீரென்னைநா டிவந்த காரியந் தெரியச்சொன்னால் உடனே முடித்தனுப்புகிறே ன்சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்னகாணரிச்சந்திரா நீ யாதொன்றுந்தெரியாப்போல
என்னகாரியமாய்வந்தீ ரென்பதுதருமந்தானோ
முன்னமேமுனிவர்சொன்ன முறையறிந்திசைத்திட்டாயே
சொன்னசொல்மறாமலந்த சொன்னதைத்தருகுவாயே

வசனம்.

ஆ ஆ ஆ நன்றாயிருக்கின்றது நீசொன்னவார்த்தை யெனீ னைவேலை மினக்கெட்டவனைத் தீர்த்துக்கொண்டாய் முன்னமேய ந்தத் தவமுனிவர்களாலே வுனக்கறிக்கையிட்டுசம்மதித்தபடியே யென்னுடையயாகத்துக்குவேண்டிய திரவியத்தைச்சொன்னசொ ல் மறுக்காமற் கொடுக்கவேணு மரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆரபி.

கோபமில்லாமற்கேளுங் குறித்துநீயாகஞ்செய்ய
சோபிதமாகுஞ்சொர்ணத் தொகைதானெவ்வளவுவேணும்
கோபுரம்போலேவாரிக் குவித்துளமகிழவேவன்
தாபரித்துரைப்பீரேதுந் தடையொன்றுஞ்சொல்லேன்சுவாமி

வசனம்.

கோபமில்லாமற்கேளும் சுவாமி தேவரீர்செய்கிற யாகத்து க்கெவ்வளவு திரவியம் வேணுமோ அதை யெவ்வளவென்றுசொன் னால் கோபுரம்போல வுயர்ந்த குப்பல் குப்பலாகத் தருகிறேன் கொடுப்பதற்கொருதடையுமில்லை விஸ்வாமித்திரமகாரிஷியே.

விஸ்வாமித்திரன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

வானவர்புகழுங்கீர்த்தி வளரரிச்சந்திரனே
யானைமேற்கவண்கல்விட்டா லதுபோகுமளவுமட்டும்
நீநலதிரவியத்தை நிறைவுடன்சொரிக்கவேணுந்
தானம்யான்பெறவேவேணுந் தடையின்றிக்கொடுத்திட்டாயே

வசனம்.

சகலதேவர்களும் புகழத்தக்கதாகிய கீர்த்தியையுடைய வரிச்சந்திர மகாராசனே இப்போது சொல்லீரோ இதுவேசரி ஒரியானையின்மேலில் பலவந்தனாகிய வொருவனைநிறுத்தி அவன்கையில்கவண்கொடுத்து அவனெறிந்தகவண்கல் போனவுயரந் திரவியந்தீர் கொடுக்கவேணும் நான்பெற்றுக்கொள்ளவேணும் தடையில்லாமற் கொடும் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன். வசனம்.

மகாசந்தோஷம் அப்படியேயிதோ கொடுக்கிறேன்சுவாமி

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி

தணிவிலாவறிவின்மிக்கச்-சத்தியகீர்த்திகேளாய்
பணிமதிச்சடையோனான பராபரன்றன்னருளினாலே
அணிதிகழ்விஸ்வாமித்திரர்க்களித்திடவிசைந்தேன்சொர்ணங்
கணிதப்பொன்னைநிறப்பாய்மதமொன்றுவரச்செய்வாயே

வசனம்.

கேளாய் சத்தியகீர்த்தியாகிய மந்திரி ஸ்ரீகபிலாசுவரசருடைய கிருபையினாலே இந்தவிஸ்வாமித்திரர் செய்கிற யாகத்துக்காக யானையின்மேலில்நின்று கவண்கல் லெறிந்தவுயரந் திரவியங்கொடுக்கச் சம்மதித்தேன் நம்மிடபொக்கிஷத்தைத் திறந்துவிடும் யானையொன்றை யழைப்பியும் மந்திரி.

சத்தியகீர்த்தி விருத்தம்-இ-ர்-ஆனந்தபைரவி.

தரணிமன்னவர்கள்போற்றுந் தகைபெறுங்கதிர்குலத்தில்
அரியநன்மணிபோல்வந்த அரிச்சந்திராபோற்றி
திரவியம்பெரிதோவிந்தத் திகழ்விஸ்வாமித்திரர்க்கீய்ந்தால்
பரமதுகிடைத்தபாக்கியம் படைத்ததாந்தடையொன்றுண்டோ

வசனம்.

கேளும் அரிச்சந்திர மகாராசசக்கிரேஸ்வரா திரவியமொருபெரிதா புண்ணியமே பெரிது அதிலும் யாகஞ்செய்வதற்காக இந்தவிஸ்வாமித்திரமகாரிஷிக்குத்திரவியங் கொடுத்தால் அதைவிடமேலான புண்யமொன்றிருக்கின்றதா தடையில்லாமற் கொடுக்கலாம் இதோ பொக்கிஷசாலைகளுந்திறந் திருக்கிறதுயானையும் வரவழைக்கிறேன் சுவாமி

மந்திரி-வசனம்.

ஆடா அடா ஆசாரவாசற் கட்டியக்காரா பட்டத்தானையை வரவழையும் பிள்ளாய்.



கட்டியக்காரன்-வசனம்.

அப்படியேயழைப்பிக்கிறேன்சுவாமி

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

மதயானைமேலேநின்று வல்லவனெறிந்ததூரம்
நிதநற்றனங்கொடுக்கச் சிந்தைதான் மகிழ்ந்தாய்கண்டேன்
நதியிதுவல்லயாகஞ் சமீபிக்கவருவேனிந்த
நிதியுந்தன்வசத்தில்வைத்தே னிபுணனாகத்தளித்திடாயே

வசனம்.

மகாசந்தோஷம் மகாசந்தோஷம் யானையின்மேரிலேநின்று கவண்கல்லெறிந்தவுயரம் நீயேதிரவியங்கொடுக்கச் சம்மதித்தாய் நானே பெற்றுக் கொண்டேன் மோசமில்லை இப்போதிந்த திரவிய மெனக்கு வேண்டுவ தில்லை யாகஞ் சமீபிக்கிற போது வருவேன் அதுவரையிலும் உம்முடைய வசத்திற்றனே வைத்துக் காப்பாற்றி நான்கேட்டபோது தடையில்லாமற்கொடுக்க வேணும் அரிசந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

பாக்கியம் பாக்கியம் அப்படியே காப்பாற்றி வைத்துக்கொண்டிருந்து தேவரீர்கேட்டபோது தருகிறேன்சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

பாரையாளரசருக்குள் பார்த்திபாவுனைப்போற்காணேன்
போரைவென்றெனைப்போல்வந்த புனிதருக்குதவிவாழ்வாய்
நீரையேகைக்கொண்டிந்த நிதியெந்தன்சொந்தமென்று
தாரைவார்த்திடுவாயப்பால் தயக்கம்நானகன்றுபோவேன்

வசனம்.

சத்துருக்களையெல்லாஞ் செயித்து என்னைப்போல்வந்த தபோநிதிகளுக்குச்சகலவொத்தாசைகளுஞ்செய்துவாழ்வாய்குறைவில்லை இந்தத்திரவியமென்னுடையசொந்தமென்று சகலருமறியத் தக்கதாக எள்ளுந்தண்ணீருடனே தாரைவார்த்துக்கொடுத்தால் மனதுக்கொரு ஐயமில்லாமற் போய்வருவேன் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

இதோ பூமிதேவி யாகாயவாணிமுதலாகிய சகலதேவர்களுமறியத்தக்கதாக விஸ்வாமித்திரருடைய திரவியமென்னிடத்திலிருக்குது அவர்கேட்டபோது நான்தருவேன் இது அவருடையசொந்தம் பிடியுமையா வென்றுந் தண்ணீரும் விஸ்வாமித்திரயாரி டமே.

விஸ்வாமித்திரரும் அரிச்சந்திரனும்-சொல்தரு
இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

விஸ்வாமித்திரர்.
அரி அரிபிந்தப்புண்ணிய முன்னைப்போலார்செய்வா
ரருளரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்
பரிவாகச்சொல்லுகிறீர் யதிசனுஞ்செய்யும்புண்ணியம்
பாரமோவிஸ்வாமித்திரநாதரே

விஸ்வாமித்திரர்
தருமமென்யதீய சொரூபமாகவந்தாய்
தருமரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்.
வருவதெல்லாந்தெய்வச்செயலலால்வேறுண்டோ
மாதவவிஸ்வாமித்திரநாதரே

விஸ்வாமித்திரர்.
தரணியில்மாதவர்செய்யும் யாகப்பலன்கள்நீ
தானரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்.
உண்மைசெய்யும்மாதவர்களுமிலும்வேறுண்டோ
வுத்தமவிஸ்வாமித்திரநாதரே

விஸ்வாமித்திரர்.
திரவிய முன்னைப்போலார் கொடுப்பார்தந்தாயே
திரளரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்.
சரணஞ்சரணமென்னைப்புகழ்ந்தது போதுஞ்சுவாமி
சாமர்த்தியவிஸ்வாமித்திரநாதரே

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ர்-ஆனந்தபைரவி.
எந்தவேளையிலேவந்தென் யாகத்துக்கிரந்துன்கையிற்
சொந்தமாய்வாங்கிக்கொண்ட தொகையிலாத்திரவியத்தை
தந்திடவேணுமென்றால் தடையின்றிக்கொடுப்பாய்நீயே
அந்தநாள்மட்டுமெந்த ஆசிரமத்திருந்துவாழ்வேன்

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே கணக்கிடக் கூடாததாயியா னையின்மேலில்நின்று கவண்கல் லெறிந்தவுயரம் திரவியத்தைத்தானங் கொடுத்தீர் அது எந்தனுக்குச் சொந்தந்தானே அதைநானெப்போதுவந்துகேட்பேனோ அப்போது தடையில்லாமற் கொ



டுக்கவேணும் இனிநான் தவஞ்செய்கிற ஆசிரமத்துக்குப் போய்வருகிறேன் மகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

தடையென்ன இருக்குது தேவரீருக்குத்தேவையானபோது வந்துகேட்டால் உடனேகொடுக்கக் காத்திருக்கிறேன் சுவாமி.

மகாமாயசித்தன்-வசனம்.

சுவாமிநாங்களிரண்டுபேரும் கூடவாமாட்டோம்.

விஸ்வாமித்திரர்-வசனம்.

என்பின்னாய்வரமாட்டீர்கள்.

மகாமாயசித்தன்-வசனம்.

உம்முடையபாட்டை நீர்பார்த்துக்கொள்ளுமே மீந்ததுசோரிந்தது எங்களுக்கொன்று மில்லையாசுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அடத்தாவோழி பொதிக்களக்கிறத்துக்கு முன்னமே சத்தியக்களக்கவந்தாய் அரிச்சந்திரமகாராசன் கணக்குப்பார்த்துச் சரியாய் நாமிட்டபணத்தை நமக்குச்செலுத்துப்போதல்லவோ பார்க்கவேணும்.

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி நம்மிட ஐயருடைய குணத்தைப்பார்த்தால் சாதகத்தொழிலுக்கு முதற்பாதமாய்க் காணுது அந்தமகாராசன் குடியைக் கெடுக்கத்தான் யோசனைபண்ணிக் கொண்டிருக்கிறாற்போல காணுதப்பா.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே அதிலே குறைவண்டா அய்யரெடுக்கிறது பிட்சையானாலும் எத்துகிறது திருவிளக்குத்தான் பின்னையேனிப்படியாலுந் தோணுடா யலைகிறார்.

விஸ்வாமித்திரர்-வசனம்.

நடவடா துஷ்டப்பயலே நட.

பொது-விருத்தம்-இ-ர்-சாவேரி.

சுசந்திரன்போல்சுவர்க்கம்விட்ட சுடர்ந்தாராபொன்னைவாங்கி
நிசத்தின்வாழரிச்சந்திர நிருபன்றன்னிடத்திலைத்தே

கப்பட்டானவனென்றெண்ணி மகிழ்ச்சியாய்வனத்திலவந்தே
விசித்திரவிஸ்வாமித்ரன் மிருகங்களைவரச்செய்வானே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக யானையின்பேரில் கவண்கல்லெறிந்தவயா
ம் பொன்னைத்தானம்வாங்கி அந்த அரிச்சந்திரமகாராசனிடத்தி
லுனே வைத்துத் தானிருக்கும் ஆசிரமத்தேவத்து வனத்திலுள்
ளாகிய மிருகங்களை வரவழைக்கிற விதங்காண்க.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

புலிகள்கரடிகாளிப் புதலக்கலைகாண்மான்கள்
எலிபெருச்சாளியென வென்னும்கூட்டங்கள் நாய்கள்
நலிவுறுநரிகாள்மற்றும் நாட்டுள்ளமிருகங்காள்நீர்
பலபலபந்தியாகப்பரிவுடன்வருகுவீரே

வசனம்.

ஓகோ புலிக்கூட்டங்களே- நரிக்கூட்டங்களே நாய்க்கூட்டங்
களே கரடிக்கூட்டங்களே பன்றிக்கூட்டங்களே யெலிபெருச்சா
ளிக் கூட்டங்களே மான்கூட்டங்களே மற்றுமிந்தக்காட்டில் வாழு
ம்படியாகிய மிருகக்கூட்டங்களே வாருங்கள் வாருங்கள்

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

மயில்களேகுயில்களேநீள் மலைமிசையிருந்துவாழும்
பயில்சிறைபட்சிகாள்நீர் பரிவுடன்வருவீரிங்கே
செயிருகாடைகாள்நற் செழுங்கவுதாரிகாள்பா
தையபுடன்பறவைக்கூட்டந் தனித்தனிவருகுவீரே

வசனம்.

ஓகோ மயில்பட்சிகளே குயில்பட்சிகளே காடைகவுதாரி கு
க்கில்சக்கரவாகம் நாரை காக்கை அன்றில்சிட்டுஊர்க்குருவிமுதலா
கிய சகல பட்சிசாதிகளும் வருகவருக அதிசீக்கிரம் வருக.

விஸ்வாமித்திரர் -வசனம்.

ஓகோ மிருகக்கூட்டங்களா பட்சிக்கூட்டங்களா அசையாம
லிருங்கள் அசையாமலிருங்கள்கூப்பிடாமலிருங்கள்.

மகாமாயசாலி-வசனம்.

சுவாமி சுவாமி லோகத்திலேயுள்ளவர்களில் சிலபேர்கள் ஆ
சோழி சொக்கட்டான் இவைகளைப்பிடித்து இன்பார்கள் வனத்தி
லிருக்கிறகிராதகராகிய வேடனைப்பார்க்கிலும் பெரியவராய்த்தா
தேவுங்களைப்பார்த்தால் சுவாமி.



விஸ்வாமித்திரர்-வசனம்.

அதுவென்னடா அப்படிசொல்லுகிறாய் துஷ்டப்பயலே

மகாமாயசாலி-வசனம்.

சுவாமி சுவாமி புலிகரடி நாய்கழுதை யிவைவெல்லாம் பிடி
க்கித்திங்களிநீர்

விஸ்வாமித்திரர்-வசனம்.

அல்லடா துஷ்டப்பயலே அந்த அரிச்சந்திரமகாராசனுடைய
நாட்டை அதம்பண்ணுகிறதற்காக அனுப்புகிறேனடா

மகாமாயசாலி-வசனம்.

சுவாமிசுவாமி இந்தரிஷிக ளெல்லாம் உங்களைவிட்டுக்கொண்
டாகுஞ்செய்கிறவர்களா ஆனால் சரிதான் நடக்கட்டும் நடக்கட்டும்
சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பறவைகாள் மிருகங்காள்நீர் பாவியவயோத்திநாட்டை
நாசமெனச்செய்தங்குள்ள தழைத்திடும்பயிர்களெல்லாம்
முறிமுறித்தகங்கள்செய்து முடிக்கவேண்டுமெத்தன்
அறைதருமாணைசொன்னேன் வடைவுடனேநடத்துமீரே

வசனம்.

கேளுங்கள் மிருகக்கூட்டங்களே பட்சிக்கூட்டங்களே நீங்க
ள் இந்தட்சணமே அந்த அரிச்சந்திரனுடைய நாட்டைப்போய்ச்
சுற்றிக்கொண்டு அங்குண்டாகிய பயிர்பச்சைகள் சோலைகள்குள
ங்கள் ஏரிகள் எல்லாவற்றையும் அநாகதங்களாய்ப்போகச் சேதப்
படுத்துங்கள் என்மேலாணைப்படிக்கு நடவுங்கள் போங்கள்

மிருகங்கள்-வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-தாளம்-ஆதி

வனத்திலவாழ்மிருகக்கூட்டங்கள் கூடிவந்ததேபாரீர் - பொல்லா

| | | |
|---|---|---|
| மாயவிஸ்வாமித்திரன் | சொல்லும் | |
| முபாயமோமுனிந்து | சொல்லும் | (வனத்தில்) |
| தனித்தனியாய்ப்பன்றிகள் | கூட்டம் | |
| தாவியேபயிர்மேல் | நாட்டம் | |
| இனைத்தயோத்திநாட்டை | நாடி | |
| நிற்காமலேயோட்டமாக | யோடி | (வனத்தில்) |
| வெண்புலிகரடிசிங்கம் | யானைகளுடன் | |
| மிருத்தபட்சிசாலக்கருங் | குயில்கள் | |

வெண்கரிகளோரிநரிஞாளிகள் பொல்லா
மந்திக்கூட்டங்கள்பெருச் சாளிகள்
உண்கவென்றுரைத்திட்ட விவ்
வுலகையுமுண்போம் நாங்கள்
உறுக்கிவெளிக ளுடும்
பூர்க்குருவிகாரம் தீங்கள்
பண்புடன்வாருங்க ளென்று
பரித்துகிரண் டேழன்று
பலபலநிலைகொளும் பலமுள்ள மிருகங்களும்
குலவிபுலவிவெய்யக் கோசிகன்பணிசெய்ய (வனத்தில்)

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

வந்ததோர்பறவைக்கூட்டம் மற்றுள்ளமிருகக்கூட்டம்
மந்திரவிஸ்வாமித்திரன் மாய்கையாலயோத்திநாட்டை
சிந்தியசேதமாக்குஞ் செய்கையையநர்காட்டுகின்றோர்
சுத்திரவரிச்சந்திரர்க்கே சொல்வோமென்றவர்வந்தாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திர மகாரிஷி அனுப்பினமிருகங்களும் பட்சிகளும் அயோத்திநாட்டை யதஞ்செய்யவே அந்தநாட்டிலுள்ள குடிகள் அரிச்சந்திர மகாராசனிடத்திற் சொல்லிக்கொள்ள வருகிற விதங்காண்க.

குடிகள்-வருகிற-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி.

குடிகள்வந்தார்களேபயிரிடுங் குடிகள்வந்தார்களே.
படிமிசைபெருண்டுழுதுகுடித்தனம்
பாலித்துக்கீர்த்தியைப் படைப்பதவர்தனம்
வடித்தாலும்ஆற்றிலேகால்வெட்டிநீர்கொண்டு
மாறுமற்பயிர்செய்யும் வாழ்விலேமிகுதுய்ய (குடிகள்)

பன்னுந்திரவியபாக்கியமிகுத்தாலும்
பட்சம்புலவர்மிசைநாட்டுவாரிந்தப்
பார்மிசைவேந்தர்கள் வந்திறந்தாலுமே
பயமில்லையென்றுறுதிகாட்டுவார்
தன்னையக்கவிரங்க நாதன்றமிழ்க்கொரு
நல்குடமைபோலிதம்பூட்டுவார்நாளும்
நவிலுமொழிசெல்வங்கோழைப்படாதென்ற
தட்கிலையாலம்பனைநாட்டுவார்



கன்னற்கமுகிளஞ்செந்நெற்சாலிநிறை
புன்னமில்லாப்பயிர்பெருத்தவளமுறை
மன்னுங்காலகதிர் வர்த்தமானத்துறை
யென்னமாமோவென்று யிளைத்திடார்களிறை
சொன்னசொல்லுக்கொரு சோர்வுபோகாமல
நன்னயமுடனிந்த நாட்டிலிலொருக்காலே (குடிகள்)

குடிகள்போற்றி விருத்தம்-இ-ம்-மோகனம்.

அரசருக்கரசேபோற்றி யருமறைநெறியைச்சார்ந்தே
மரபுடனயோத்திநாட்டை வளமுடனாள்வாய்போற்றி
கரைபுரண்டோங்குங்கீர்த்தி காவலர்திருச்சங்கின்ற
நரபதியரிச்சந்த்ரேந்த்ர நாயகநின்றாள்போற்றி

இராசன்-விருத்தம்-இ-ம்-அடாணா.

மருதமுமுல்லைநெய்தல் வளமிகுகுறிஞ்சிபாலை
பெருஞ்சமைந்தாம்நிலத்திற் பெருநிலவாழ்வையெய்தி
அருமையாய்க்கைகண்டோங்கு மயலிராக்குடித்தனஞ்செய்
மருவியகுடிகள்நீங்கள் வரக்கண்டு மகிழ்ந்திட்டேனே

வசனம்.

வாருங்கள் வாருங்கள் மருதநிலத்தவர்களாகிய குடிகளே

இராசன்-விருத்தம்-இ-ம்-கும்ப காம்போதி.

கருணமும்மாரிபெய்கத் தாழ்வுண்டோவலதுவேறோர்
அரசாற்பயத்தாலுண்டோ வமைச்சாற்பொல்லாங்குண்டோ
தருமுறைப்பகுதிநீங்கள் தருகின்றவருத்தமுண்டோ
உருகியங்கெண்பால்வந்த துரைசெய்தாற்பயந்தீர்ப்பேனே

வசனம்.

கேளுங்கள் குடிகளே மாதமும்மாரி பெய்கிறத்திலே தாழ்வுண்டா அல்லது அன்னிய இராசாக்களாலே பயமாகிலும் பயமுண்டா நம்மையல்லாமல் மந்திரிகளாலே ஒருபொல்லாங்குண்டா நீங்கள் கொடுக்கின்ற பகுதியினாலேதாகிலும் வருத்தமுண்டா அந்தப்பகுதிகொடுக்கச் சக்திப்படாதா நீங்கள் வியசனமாகவந்தகாரியந் தெரியச் சொல்லுங்கள் குடிகளே.

குடிகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

என்னசெய்வோம்குடிகள்நாங்கள் எங்களுக்குலகந்தன்னில்
பொன்பெறுமெல்லாவாழ்வும் புகழ்பயிர்வளங்களோயா

ஐனயநுமிருகக்கூட்டம் ஒட்டில்லாப்பறவைக்கூட்டம்
இன்பப்போற்கூடிவந்து துலைப்பதால்நயந்திவந்தோம்

வசனம்.

செகமெல்லாமண்டவராகிய இராசபரமேஸ்வரா எங்களுக்குக் குடித்தனஞ்செய்கிறவாழ்வெல்லாமுமது பயிர்செய்கிற பாக்கியமேயல்லது வேறில்லையேயது அனர்த்தகாலம்போல காட்டிலுள்ள மிருகசாதிகளாலும் பட்சிசாதிகளாலும் நாங்களிட்டபட்ட பயிர்களெல்லாம் அதமாய்ப்போகுது அதனாலே பயத்தசொல்ல வந்தோம் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ட்-காம்போதி.

இங்களைமுடிமேல்வைத்த சிவனருளினாலேநான்செய்
பங்கமில்லாதபூசாபல னிருதாலேநீங்கள்
சங்கடப்படவும்வேண்டாம் தரும்பொருளிரண்டாண்டுக்கும்
உங்களுக்கேவேண்டாம் மிதமுடனிருந்திடீரே

வசனம்.

நல்லகாரியம் நல்லகாரியம் வருகிறதெல்லாம் அந்தமகாதேவருடைய கடாட்சமேயல்லது வேறில்லை நீங்களிட்ட பயிர்களெல்லாம் மிருகங்களாலே நஷ்டமாய்ப்போகுதென்று வியசனப்படுகிறீர்களே அந்த வியசனந்தீர இரண்டு வருஷத்துக்குள்ள பகுதிப்பணம் நீங்களொருவருக்கும் கட்ட வேண்டுவதில்லை பயப்படாமல் சுகமாயிருங்கள் குடிகளே.

இதுவும் இராசன் விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

அஞ்சாமலிருங்கள்நீங்கள் அநேகஞ்செய்யுமிருகக்கூட்டம்
பஞ்சாகப்பறக்கத்தானே பாணத்தாற்றுணித்துக்கொள்வேன்
மஞ்சாரும்பொழில்சூழுங்கள் வளநகர்க்கேகலாகும்
அஞ்சாமல்வேட்டையாட இதோவாத்துணிந்திட்டேனே

வசனம்

பயப்படாமலிருங்கள் குடிகளே நீங்கள் பயிரிடும்படியாகிய தானியமுதலானவைகளைச் சேதப்படுத்தும்படியாகிய துஷ்டமிருகங்களையெல்லாம் அந்தாகமியாக அழித்துப்போடத்தக்கதாக வேட்டையாட நானிதோ வருகிறேன் நீங்களுங்களிருப்பிடம்போய்ச்சேருங்கள் குடிகளே.

குடிகள்-விருத்தம்-இ-ம்-கலியாணி.

வேட்டைகளாடியந்த மிருகத்தின்கூட்டந்தன்னை
வாட்டியேயெங்கள்நாட்டை வளரச்செய்தாலுநீரே
நாட்டம்வைத்தெங்களுக்கோர் நயம்படைத்தாலும்நீரே
நாஷ்டிகவசம்போற்றும் மக்கேசனே போற்றி.



வசனம்.

கேளும் இராசசக்கிரேஸ்வரா வேட்டையாடி மிருகங்களைக்கொன்று எங்களையும் எங்கள் நாட்டையும் இரட்சித்தாலும் நீரேயெங்களுக்கொரு நஷ்டமில்லாமல் நயமுண்டாக்கினாலும் நீரே நாங்கள் போய் வருகிறோம் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

இங்கிதகுணத்தின்மிக்க எழிலுறுசத்தியகீர்த்தி
பங்கஞ்செய்மிருகத்தாலே பதைக்கிறார்குடிகளெல்லாம்
அங்கதைவேட்டையாட வசங்கிழ்கொண்டேநல்ல
பொங்கமாய்வேட்டைக்காரர் புடைசூழவரச்செய்வீரே

வசனம்.

கேளும் சத்தியகீர்த்தியாகிய மந்திரி நம்முடையநாட்டிலுள்ள குடிகளெல்லாம் மிருகங்களாலே பயிர்களெல்லாஞ் சின்னாபின்னப்பட்டுச் சேதப்படுகிறதென்று முறையிட்டார்களே அவர்கள் துயரந் தீரத்தக்கதாக மிருகவேட்டையாடவேணும் வேட்டைக்காரரை வரச்செய்யு மந்திரி.

மந்திரி வசனம்.

அப்படியேவேட்டைக்காரரைவரவழைக்கிறேன் சுவாமி.

மந்திரி-வசனம்.

அடா அடா ஆசாரவாசற் கட்டியக்காரா நம்முடைய இராசா வேட்டைக்குப்போகச்சித்தமாயிருக்கிறார் ஆகையால்வேடர்வில்வீரர் முதலிய யாவத்துமானபேரையுஞ் சீக்கிரமா யழைப்பியும்பின்னாய் கட்டியக்காரா.

கட்டியன்-வசனம்.

அப்படியேயழைப்பிக்கிறேன் சுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

வஞ்சனும்விஸ்வாமித்திரன் மாய்கையால்மிருகக்கூட்டம்
அஞ்சமயோத்திநாட்டைத் தருக்கியேயழிப்பதாலே
யெஞ்சியேகுடிகள்சொல்லு மிரக்கத்தாலரிச்சந்திரன்றன்
செஞ்சொலால்வேட்டைக்காரர் திறமுடன்வருகின்றாரே.

வசனம்.

அரிச்சந்திரமகாராசனிடத்தில் வேட்டைக்காரர் வருகிறவிதங்காண்க.

வேட்டைக்காரர் வருகிற-தரு-இ-ர்-பந்துவராளி-தாளம்-ஆதி.

வேட்டைக்காரர் நாங்களே ஐயே-ஐயே-ஐயே
வேட்டைக்காரர் நாங்களே.

காட்டைப்போய்சுத்திவளைத்தொரு
மூட்டைப்பம்பலெத்திநிலத்தரு
கற்படுமூற்பெருபற்பலதிர்ப்பய
காடிபுலிகள்செல்லுங்கதியைக்கண்டிடர்சொல்லும் (வேட்டைக்)

வசனம்.

போடாபோ பயித்தியக்காரா காட்டிலேவாய்விடாதசாதிதண்ணீரைக்குடித்து நிழலில்லை விழுந்து கிடக்கிறதைச்சொல்லுகிறதா விரம் பின்னை யென்னடா வீரம் நான் சொல்லுகிறேன் கேளடா கேள்.

தரு

யாட்டிக்கீழ்முந்தியிழைத்தருநாட்டிற்பாவிமனதுசொலிவரு
பக்குவநற்கிரிகைக்குளிலங்கிய
டயனறிகிலர்சொல்லும்படர்சொடிபடவெல்லும் (வேட்டைக்
வெள்ளிச்சங்கிலிகட்டும்நாய்களனேக முண்டு
வீரச்செந்நாய்களைச் சேரப்பிடித்துக்கொண்டு
மெள்ளப்பதுங்கிச்சீறித் தாவும்புலிமேல்விட்டுத்
துள்ளிக்குதிக்காமலேசொளிப்போங்கெக்கெலியிட்டுச்
கள்ளிக்காடுதறியுலவிதிரி
கள்ளப்போரிடுகாடிகள்நரி
சுற்றிக்கத்திந்தத்திபிளைத்திட
தொடுவெல்வலை ஒருதுடிகிற்பெருமைப்படு (வேட்டைக்)
வள்ளலென்றுருவனா நாடிப்போயடித்தே
பன்னுமித்தமிழிகை மாலையாகத்தொடுத்தே
கொள்வீரென்றிதஞ்சொன்னால் கூகாவென்றேநடுங்கும்
கள்ளர்போல்வீறும்பன்றிகள்கத்தக்குத்திப்படுங்கும்
கத்திப்போல்பல்லுள்ளநாய்சில
சுற்றிச்சூழ்சொல்லநிலாவுல
கத்திற்பொய்த்தசித்தமுளைத்திடு
கலைகளைவெலவுறு வலையினிற்கொடுவரு (வேட்டைக்)
பன்றிவலைகளுடன்மான்வலை நாட்டுவோம்
பதுங்கியிருக்கின்றனதவுசிப்பிப்பயங்காட்டுவோம்
தின்றுவிடுஞ்சிங்கங்கண்டால்சிதறவிட்டாலேபங்கம்
தின்றுகொல்வோமின்னும் நெருங்கினுலேன்விளங்கம்
குன்றைப்போலதாவுகடம்பைகள்
குன்றிச்சாய்தாவெறியம்புகள்
கொத்திக்கொத்திப்பத்தியெரித்திட
குறுகுமுசல்களபடுமறுகுவலைகள்விடு (வேட்டைக்)



இருப்புவலைகள்கொண்டுபலாய் — வீசுவோம்
இடறிபாங்விழுவெகுவிருதுகள் — பேசுவோம்
பொருப்பின்மேலிருந்தொருமுசலைக்கண்டாலும் — விடோம்
பொச்செனப்பிடித்ததனைச்சுட்டுத்தின்றுமற் — படோம்
நெருப்பைக்கட்பொறிபிலுலன் — டாக்குவோம்
விருப்பிற்பிறர்மேலெனப் — போக்குவோம்
நெருக்கிப்புக்கிச்சிக்கிமிருகம்பட
நெறிமுறைவழுவுள துமவெனநிலைமைகொள் (வேட்டைக்)

வேட்டைக்காரர்-போற்றி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சுந்தரமேயாத்திநாடாசாளவேவந்த சக்ரேசநிதியேபோற்றி
இந்திரன்முதலமரொல்லோரும்வாழ்த்தவே யிலகுமாமணியேபோற்றி
சுந்தரத்திரிச்சங்குமகாராசசுதனெனத் தோன்றுபூபதியேபோற்றி
எந்தமக்கருள்செயுமரிச்சந்திரமகாராசவிறைவனேநின்றுள்போற்(றி)

வசனம்.

வந்தோம்வந்தோம்வேட்டைக்காரர்நாங்கள்சுவாமியாக்கு

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

மனத்தினுக்கிசைந்த அன்பு வளர்சத்தியகீர்த்திகேள்
வனத்துளமிருகமெல்லாம்வதைத்திடவேட்டைக்காக
சினத்துடன்முன்னேசெல்வேன் தேவியோடெனதுசேனை
அனைத்தையுமமைச்சர்பின்னே யடவிக்கேவரச்செய்வாயே

வசனம்.

கேளாய்சத்தியகீர்த்தியாகிய மந்திரி நானிந்த வேட்டைக்காரரை யழைத்துக்கொண்டு வனவேட்டைக்கு முன்னேபோகிறேன் நம்முடைய ரதகெச துரகபதாதியாகிய சதுரங்கசேனைகளுடனே கூட எனதுபத்தினியாகிய சந்திரமதியையும் எனது புத்திரசிகாமணியாகிய தேவதாசனையும் இரதத்தின்பேரிலேற்றிக்கொண்டுசகல மந்திரி பிரதானிகளுடனே கூட பின்னாலே வனத்துக்கு வரச்செய்யுமந்திரி.

மந்திரி-வசனம்.

அப்படியேசெய்கிறேன் தேவரீர் மிருகவேட்டையாடுகிறத்திலே சாவதானமாயிருக்கவேணும் சுவாமி.

இராசன்-வேட்டைக்குப்புறப்படுகிற-தரு

இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

வனவேட்டையாட — வாரீர்-பொல்லா
மதத்தமிருகங்கள்கொல்லுவதற்கு வல்லவரீர்

களமாமயோத்திநாடு கலங்கச்செய்தபிற்பாடு
காட்டிலொருசெந்தூவைவிடுவேனே
கூட்டமிருகத்தால்பயப்படுவேனோ (வன)

உக்ரமுடனேவெற்றிவில்லைக்கையி லெடுத்து
வோங்காரத்தொனிசெய்துவளைத்தோரம்பு தொடுத்து
திக்குகள்நடுங்கவேகிரமுடன் விடுத்து
சிதற அக்கினிப்பொறிதெறிக்கக்கடு கடுத்துத்
தேரில்நின்றொருகெர்ச்சனையிட்டு
செறியவ்வொருபுகழ்க்கொடிநட்டு (வன)

வெற்றிமுரசடிக்க வீரப்பலைத்துடிக்கச்
சுற்றிலிசைபடிக்கத்தொனிகளெங்கும் வெடிக்க
கத்திக்கதறிவருங்கலையான்பன்றிகளோடு
மற்றுங்காடிமுசல்வலியமிருகங்கள்படு
மாட்சிநீங்கள்காண்பதுபெரிதோ
சாட்சியென்கைக்கிணைக்கிதரிதோ (வன)

ஒளிநரிகள்கண்டுவெருண்டிங்கோடும்பயங் கொண்டு
சாரிசாரியாகப்பண்டுசதுர்முகாஸ்திரம்போ திரண்டு
கோரமாங்காளிகூடிச்செய்ய நிர்த்தனி
கூர்பொருந்துமென்கைவாளிகொல்லநிற்குமோ காளி
கூவிக்கதறிப்புரண்டிட வோடித்
தாவிச்சரமழைபொழிகுவோம் நாடி (வன)

தளபதி-விருத்தம்-இ-ம்-ஆனந்த பைரவி.

கண்ணிமுன்வலையிருப்புக் கைத்தடிவில்லம்போடு
எண்ணுறுபடைகைக்கொண்ட யிசைபடுவேடரோடும்
புண்ணியவரிச்சந்த்ரேந்த்ர பூபதிமகிழ்வதாக
வண்ணமாய்வேட்டையாடும் வகையெலாம்புரிகுவோமே

வசனம்.

கேளடா அதிவீரசிங்கக்குட்டியடா காவுக்ர வீரப்புலியடா ஒண்டி
சாத்தானடா தொண்டிகோட்டானடா ஆனைமுழுங்கியடா மலைமுழு
ங்கியடா ஒட்டைகுத்தானடா கம்பளிமுத்தாநாமிட ஆண்டவனு
ரிச்சந்திர மகாராசா இந்தாசந்தோஷமடையத் தக்கதாக நாமுடைய
விருதுபெற்ற வேடச்சாதிபிறுடைய வீரத்துக்கேதுங்குறைவில்
லாமல் இந்தக்காட்டை வளைந்து வேட்டையாடுவோம் வாருங்கள்



வேட்டைக்காரர் தரு-இ-ம்-பந்துவாரளி-தாளம்-ஆதி.

காட்டைவளைத்துக்கொள்ளடையே இந்தக்
காட்டைவளைத்துக்கொள்ளடையே
காட்டைவளைத்துக்கொண்டுகள்ளவழியைக்கண்டு
கூட்டுப்புலிகளுண்டு தோல்நகம் நயக்குண்டு
தொடர்ந்துவராஜாடைகள் காட்டி
கடமைமான்களைச்சிதறும் லோட்டி (காட்)

மூறுக்குவலையைக்கொண்டு முன்னேகட்டடா-நல்ல
முசல்கூட்டங்கள்மேல்நாய்களைவிடடா-செல்ல
அறுக்கிவருகுதோபன்றிமற்றொன்றுமல்ல
வோடிவருகுதிந்தப் பூமியதனைக்கொல்ல
மறுக்காமலென்சொல்கேட்டுவலைக்குமுன்வலையம்நாட்டு
பொறுக்காமலேதட்டிப்போட்டும்பாருல்தடியாலேவாட்டு
புகுந்துவருமிந்தக்கடுவன் பொல்லாறு
மிகுந்தவிளாச்சலிட்டாலும் நில்லாறு (காட்டை)

மான்கூட்டம்வருகிதோவுற்றுக்கல்லூலே பாரு
வலைநடிகொண்டெறிந்துவஞ்சமெல்லாந் தீரு
நான்சொல்வேனிதையெல்லாமோதுக்கிவேறே சேரு
நாட்டுவேடர்க்கேயிதுசாதகமான நேரு
மேன்மையுடனேயில்லாக்கோலிருக்கிறு பொல்லா
நில்லா
மாண்மதமிருகங்கள் வோடு
வாய்மையுடனேசெல்லரவலைக்கிடுகை
மனிதவில்லடிபடுவலைகளுடனேகொடுமலைகளுவையும்தடு ()

நிஷ்டூரத்தனிப்பன்றிஅதோவென்று வருகிறு
நேருக்குநேரோநின்றுபார்விசை பெருகிறு
அவ்விடமிருகங்கள்போனசாடையுந் தெரிகிறு
குட்சமம்புகள்பட்டுத்துடித்து தொந்தருகிறு
எட்டிப்பிடிப்போம்பத்தி-யதிவோம்பத்துபோலெத்தித்
கிட்டிநெறிப்போம்குத்திக் கிடைக்குமோஇந்த வெற்றி
மரங்கள்நறைநின்றால முள்காடு
நெருங்கியிருபுறங்கடம்பைய வோடுங் (காட்டை)

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

சங்கிலிநாய்கள் நல்ல தருக்குளவலைகளம்பு
துங்கவிற்றடிகைக்கொண்ட துடிக்குள்ளவேடரே நீர்
இங்குள்ள மிருகக்கூட்டம் யாவையும் வதைத்தோமெந்தன்
மங்கையுஞ் சேனை நிற்கும் வளையிடம் போவோம் வாரீர்.

வசனம்.

கேளுங்கள் வேடர்களே வேட்டைநாய்கள் வலைகள் அம்புவில்லுகள் அது முதலான உங்கள் பலத்தினாலே யிங்குள்ள மிருகக் கூட்டங்களெல்லாம் அநேகவிதமாக அடித்துவிட்டோம் இனிபயமில்லையென்னுடைய பத்தினியாகிய சந்திரமதியும் நம்முடைய ரதகஜதுரகபதாதிகளும் இறங்கியிருக்கிற மலைச்சாரலுக்குப் போவோம் வாருங்கள் வேடர்களே.

வேட்டைக்காரர்-வசனம்.

அப்படியே போவோம் மகாராசனே.

பொரு-சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

மன்னனரிச்சந்திரனந்த வனவேட்டையாடியபின்
தன்னருஞ்சேனைகளருகே தான்வரும் வேளையிலே
முன்னர் விஸ்வாமித்ரமுனி முடுகிவிட்ட மிருகங்களில்
சின்னபின்னமாகியங்கே சிலபிழைத்துவந்தனவே

வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திர மகாராசன் வனவேட்டையாடி தன்னுடைய சேனைகள் நிற்கு மலையடிவாரத்திற்கு வரும்போது முன்னே விஸ்வாமித்திர ரிஷியினாலே யனுப்பின மிருகங்களில் சிலமிருகங்கள் தப்பி விஸ்வாமித்திரரிடத்திற்கு வருகிற விதங்காண்க.

மிருகங்கள்-விஸ்வாமித்திரரிடத்துக்கு-வருகிறது.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

அபயமபயமெங்களையனே இனி
ஆதரித்தருள் செய்யுமையனே
தபோபலம்மிகுத்து சாம்ப்ரதாயம்வகுத்து
தனியேயொருவனென நின்றீரே-அய்யோ (அபய)



வசிஷ்டருடனே வாது வந்ததுமெங்கள் தீது
மலைபோலிருந்துஞ் சகிநினைத்தாயே அய்யோ
கசட்டுக்குணமோவென்ன கபடமோ நீர்சொன்ன
காரியத்திலேமோசம் புனைந்தாயோ அய்யோ (அபய)

பயமில்லையென்றுசொல் பாராவித்திடச்செய்து
பார்த்திருப்பதுமென்னமாயமோ-அய்யோ
நயவசனங்களாலே நாமிமோசம்போனோம்
நடுங்கச்செய்தாயே யிதுமாயமோ அய்யோ (அபய)

வாய்விடாச்சாதியென்று மனுநெறிநினைந்தானோ
வம்சந்தனைக்களைந்து வதைத்தானே-அய்யோ
ஆயர்புவியரசர்கட்கடைவோ தர்மமோவுன்னை
அனுமதியாமலே வதைத்தானே-அய்யோ (அபய)

விஸ்வாமித்திரன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

கலங்கிநீர் அழுவதேது காயங்களுநொந்து
சலனப்பட்டிடுவதேது தயக்கமேதென்னை நாடி
அலங்கோலமாகவுந்தீராருன் வதைசெய்தோர்கள்
மலங்கெரிமூட்டுவேனுன் வாய்திறந்துரைசெய்வீரே.

வசனம்.

கதறவேண்டாம் கதறவேண்டாம் உங்களையிப்படிகாயப்படுத்தி வதைசெய்தவர்களைத்தெரியச் சொன்னால் அக்கினிதத்தம் பண்ணிப்போடுகிறேன் சொல்லுங்கள் மிருகங்களே.

மிருகங்கள்-கழிநெடில்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

என்செய்வோமெங்களையிப்புவிமீதினிலிலகியவயோத்திநாடதனில்; புன்பயிர்முதலாம் பலன்களையழிக்கப்போக்கினீர் நாங்களே போயழித்தோம், மின்றிகழ்வடிவேலரிச்சந்திரனென்னும் வேந்தனே வேட்டைகளாடத்; தந்திரனுடனேவந்தெமைக்கொன்றான் தப்பினோ மிருவர்களையா.

வசனம்.

காட்டிலுள்ள ஆகாரங்களைப்புசித்து அங்குண்டாகிய தண்ணீரைக்குடித்துத்திரிகிற வாய்விடாச்சாதி நாங்கள் எங்கள் தலையிலெழுத்திப்படிமுடிந்தது உத்தாவின்படியே அயோத்திநாட்டைய

ஸ்ரீத்துஅநம்பன்னுனேனும் அரிச்சந்திரமகாராசனாலே யெங்களிராணிக்கே யொப்பித்தோம் அதனாலே நாங்களிரண்டுபேர் தப்பிவந்தோமையா விஸ்வாமித்திரமகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-குழிநெடில்-விருத்தம்-இ-ர்-நாட்டை.

உலகமுடனண்டாண்டப்ரமாண்டபகிரண்டமுநொடியி
லுறுக்கியேபொடிபொடியதாய்
நிலைகலங்கிடகடல்வறண்டிடநிலநெறிமுட்டி
நிலைக்குள்யானனைத்தையுமழிக்கவல்லேன்
மலையநேகஞ்சலமொழிதவிர்மன்னவனரிச்சந்திரன்
வலிமையுமாண்மையுமழிவன்
சலமேயெனுந்தன் றிராணியைப்பாருஞ்
சண்டமாருதத்தனுடல்கொண்டுவெய்வேன்

வசனம்.

சொர்க்கமத்திய பாதாள திரிலோகங்களும் ஆயிரத்தெட்டண்டமும் இருநூற்றிருபத்துநாலு புவனங்களும் பொடிப்பொடியாய் நீறுநீறாய் அக்கினிவாய்ப் போகச்செய்கிறேன் அந்த அரிச்சந்திரனுடைய பலபராக்கிரமங்களையுமழிக்கிறேன் என்றிராணியை நீங்களே பார்க்கப்போறீர்கள் லோகங்களையழிக்கிற ப்ரசண்டமாருதத்தைப்போலே அவனுடையபலத்தையெல்லாம் நானேயழித்துப்போடுகிறேன் பயப்படாமலிருங்கள் மிருகங்களே

பொது-விருத்தம்-இ-ர்-மோகனம்.

வினைசெய்வதற்குமிருகங்கள்மான வெட்டிவேயரிச்சந்திரன்சொல்
கலைவிட்டபஞ்சபோலெரிந்தோடிக் கதறியசேதியையறிந்தே (வெ
மனவலிமிகுத்தகோசிகனென்னுமாமுனிநிர்மிக்கவாங்கோர்
த்தினிநெடும்பன்றியுருவெகொண்டு கலக்குஞ்சமனெனவந்துதித்ததுவே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திரமகாரிஷியானவர் அரிச்சந்திரனாலேவதைசெய்யப்பட்ட மிருகங்களானது ஓடிவந்து அழுததைக்கேட்டு மந்திர சக்தியினாலே நிர்மிக்கப்பட்ட ஒருதனிப்பன்றியானது வருகிற விதங்காண்க

மாயப்பன்றிவருகிற-தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

பர்வதாக்ருதியானமகாமாயப்பன்றியுதித்து வந்ததே
மகாமாயப்பன்றியுதித்து வந்ததே
கர்வக்ரூரமகாகண்டதிஷ்கண்டக
காட்டிலுள்ளமிருகக்கூட்டங்கண்டுவெருவ



கடுகிநெட்டெனமுடுகிபடபடெனக்
ககனமுதல்கிரிபுவனதிலகளையும்
கருவிபுறமிறிறநிறனவேகிக்கோடு
முறுவலுடனேதவமுனிவிடுதானிபம் (பர்வதா)
நாலுகாலுங்கொள்ளைதிரோகங்கறுப்புநெற்றி
நடுவேதுர்க்குணசுழிகாட்டவே நெடும்
நடுவால்செம்பட்டமயிர்பூமிபிளக்கவைத்து
நாலுகுளர்புகளைநாட்டவே கொடும்
காலனுங்கண்டலறக்கினிப்பொறிகள்சிந்திக்
கண்ணைவிழித்துலகைவாட்டவே கடும்
காட்டுத்தீயைமுதல்வடவாக்கினியையும்
கணத்திலவிக்குங்கோபமூட்டவே விடும்
கற்குகை-யிற்புகு-நிர்ப்பய-சற்குணர்
சக்கரம்-வெற்பொடு-இக்குகளைப்பொடி
யிற்பொடி-யொப்பெனநெக்கி-னுறுக்கிய
டிக்க-முடிக்க-நினைக்கில்நடக்குமெ
னும்படி-பப்பி-கிளப்பி-வெதும்பிக
தும்பிய தும்பியுதும்பி-நிதம்படு
கடலுலகினிலுள பலபலவுயிர்களும்
கிடுகிடெனத்தனி மலைவெனவலிவொடும் (பர்வதா)

பன்றி-விருத்தம்-இ-ச-கலியாணி

ரன்னுமாதவத்தோர்போற்றுமகிழ்விஸ்வாமித்திரநாதா
நின்னருங்கமலப்பாதம் நெறிமுறையவணங்கப்பெற்றேன்
என்னையோர்பொருளாயெண்ணி யேதினால்வரச்செய்தீரோ
என்னதுழியமெனக்கே யிடுந்தொழில்செப்புவேனையா

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி அடியேனை யொருபொருட்டாய்நினைத்து எதுகாரியத்துக்காக வழைத்தீரோ தெரியவில்லை அத்தனுழியத்தைக்கேட்டா லதிகசாக்கிரதையாகச் செய்யக்காத்திருக்கிறேன் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-காம்போதி

பன்றியேகேளாயுன்னைப் படைத்ததோர்கருமமுண்டு
வென்றிவேலாசனை விறலரிச்சந்திரனெந்த
குன்றுசூழ்காட்டின்மிருகக்கூட்டத்தைவதைத்தானீயவ
னின்றவன்படையைக்கொன்றே யிங்ஙனவரச்செய்வாயே

வசனம்.

சௌரியென துமாய்கையாற் பிறந்தபன்றியே யிந்தக்காட்டிலேயுள்ள மிருகக்கூட்டங்களையெல்லாம் கொலைசெய்த அந்த அரிச்சந்திரனுடைய சேனைகளையெல்லாங்கொன்று அவனையுமிங்கேவரும்படியாய்ச் செய்யவேணும் இதுதான் நீயெனக்குச் செய்கிற வுபகாரம் பன்றியே

பன்றி-வசனம்.

அப்படியே அந்தஅரிச்சந்திரனுடையசேனையைக்கொன்று அவனையுமிங்கே யிழுத்துக்கொண்டுவருகிறேன் சுவாமி.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

வெஞ்சினவிஸ்வாமித்திரன் வினையினால்விடுத்தபன்றி
யெஞ்சிடாவரிச்சந்திரன்றன் னிகல்சேனைத்திரளின்மேவி
ரஞ்செப்பதைக்கக்கண்டு நடுங்கியேதூதரோடி
அஞ்சவிங்காரனையென்றே யலைந்துரைத்திடவந்தாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திரன் விசித்திரமாய்கைப்பன்றியினாலே சதுரங்கசேனையுஞ்சின்னபின்னப்பட அந்தச்சேதியை அரிச்சந்திரமகாராசனுக்குச்சொல்லத் தூதர்வருகிறவிதங்காண்க

தூதர்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

ஐயையோநாங்களென்னசெய்வோ மிதை
யாரிடத்திற்சொல்லியுய்குவோம்
மெய்யரிச்சந்திரன்மேலே விஸ்வாமித்திரன்சதியெண்ணி
யையபட்டன்றியாலாவிடச்செய்தான்குதுபண்ணி (ஐயை)
சொல்லவென்றால்நாவுலர்ந்து வாடுதே அந்த
துஷ்ட-மிருகத்தாலாவி யோடுதே
வல்லமைகளுந்தளர்ச் சாடுதே சொல்ல
மனதுக்கும்நடுக்கம்வந்து மூடுதே
கல்லைநார்தைமற்றக்காட்டிலுள்ளவற்றைக்கண்டால்
கொல்லருமையென்பாலேகுலையுதேயெண்ணங்கொண்டால் (ஐயை)

தூதர்கள்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

எங்களையாளவந்த வெழில்பெறுமரசேபோற்றி
துங்கநல்லயோத்தியாளுந் துரைத்தனமணியேபோற்றி
பங்கமில்லாமலெங்கள் பக்குள்ளதெய்வமேபோதும்
சங்கையில்லாமலாளும் தயாபரநிருபாபோற்றி



வசனம்.

சரணம் சரணம் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

போற்றியென்றிருகைகூப்பிப் புகழ்தருந்துயர்த்தாலே
மாற்றலர்க்கஞ்சிவந்த வாறென்னபயந்திற்கும்
காற்றிறமுடையதூதர் கடுகிநீர்வந்தத்தது
வேற்றொருவினைதானுண்டோ விரைந்துநீருரைசெய்வீரே

வசனம்.

கேளுங்கள் தூதர்களே உங்களுடைய மனோதுக்கத்தைப் பார்த்தால் சத்துருக்களாலே அடிப்பட்டு வந்தவர்களைப்போலக் காணுது அதுதானோ அல்லது வேறொருதுன்பமுண்டோ விசனப்படாமற் சொல்லுங்கள் தூதர்களே.

தூதர்கள்-விருத்தம்-இ-ம்-முகாரி.

நிருபனேசொல்லக்கேளாய் நெடுவனவேட்டையாடி
இரவெல்லாம்பரவிவந்தோம் இமையையென்னசொல்வோம்
அருவினைப்பன்றியொன்று வழிந்ததுசேனையையா
செருமுனைகலங்கினார்கள் சிதறியேயிருவர்வந்தோம்

வசனம்.

கேளும்ராசபரமேஸ்வரா எங்கள் துக்கத்தை யென்னென்று சொல்லுவோம் தேவரீருடன் கூட வேட்டையாடி இரதகசதுரகபதாதிகளெல்லாம் காடுகள் பாவி யிருந்தார்களே அதிலேயொருபன்றியானது வந்துவிழுந்து நானாவிதமாகச் சேனைகளையெல்லாங்கொன்றுகலக்கியதால் நாங்களிருவருந்தப்பித்துக்கொண்டோடிவந்தோம் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-தோடி.

என்கையில்வில்லிருக்க யிறையருளிருக்கச்சேனை
துன்பமுற்றிறவதுண்டோ தூதுங்கள்சொன்னடைவெந்த
வன்பெறும்பன்றிதன்னை வதைக்கிறேனஞ்சவேண்டாம்
பொன்புவியமரரெல்லாம் புகழ்ந்திடப்புகழ்கொள்வேனே

வசனம்.

கேளுங்கள் தூதர்களே செயம்பொருந்தியவில் என்கையிலிருக்கப் பரமசிவனது கடாட்சமிருக்க என்னுடைய சேனாசமுத்திரத்துக் கொருதுன்பம் வருமா அந்தப்பொல்லாத பன்றியைநானே இத்திரவதை செய்கிறேன் தேவர்களெல்லோரு மெச்சத்தக்கதாக இதோ புறப்படுகிறேன் பாருங்கள் தூதர்களே.

அரிச்சந்திரன் தரு-இ-ம்-மோகனம்-தாளம்-ஆதி.

இந்தப்பன்றியைவிடுவேனோ-கொல்லாமல்நா
    னிதற்குப்பின்னிடுவேனோ
அந்தமகாவனதுர்க்கையருள்செய்த
    அற்புதவில்லுங்கொண்டு அந்தத்தேர்மேற்கொண்டு
அகிலபுவனமெனும் பகிரதலமகிபர்க
    ளதிரதிசைநிலைபிதிரவுலவிவரும்      (இந்த

எடுத்தவில்லதைத்தொட்டுவளைப்பேன்-வாயு
    விருக்குமஸ்திரமழைவிளைப்பேன்
கடுத்தோராயிரந்தூளிதுளைப்பேன்-இந்தக்
    காட்டில்விடாமற்சுற்றி-வளைப்பேன்
சடுத்தம்பேசியென்னசாரமகாகுரூரம்
    துடைப்பேன்டேனுவிசாரந்-துதர்களேயிந்நேரம்(இந்த

இராசன்-சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

செங்கமலமெனக்குமுதந் திகழ்குவளைக்காந்தண்மலர்
தங்குமிந்தஇவ்யநதி சதுர்முகன்மால்சந்நிதியோ
எங்குமிந்தப்பூதலத்தில் யானறியேனிளஞ்சோலைத்
துங்கசொர்க்கத்தருக்களென்றால் தோற்குமதுஸ்லாக்கியமிதே

வசனம்.

ஓகோகோ அரிகரி இந்தஆரண்யத்திலே இப்படிப்பட்டதெய்வீகம் பொருந்திய தடாகத்தையுஞ் சோலைகளையும் நான்கண்டதில்லை ஆகிலுமிதிலே புஷ்பித்திருக்கிற செந்தாமரைப் புஷ்பங்களும் நீலோத்பலமும் செங்காந்தள் வெண்காந்தள் குமுதமுதலாகிய புஷ்பங்கள் நிறைந்திருக்கிற சிங்காரமும் இந்தத்தடாகத்தைச் சூழ்ந்து தளிர்த்துத் தழைத்திருக்கிற புஷ்பங்களின்விநோதமும் இந்த இளஞ்சோலையினுடைய அழகும்சுவர்க்க லோகங்களிலுண்டாகிய கற்பகச்சோலைகளும் நிகராகுமா பாரும் பாரும் மந்திரி

வசனம்.

ஆம் ஆம் சுவாமி வெகுசிங்காரமாக இருக்கிறது இதுதான்இன்றைக்கு வாசம் பண்ணுவதற்கு யோக்கியமான க்ஷேத்திரமகாராசனே.



பொது விருத்தம்-இ-ம்-சாவேரி.

பன்றியைபம்பாலெய்யப்பதைத்தொளித்ததுதான்போக
மன்றலங்குழலான்சந்த்ர மதியுடன்சேனையோடும்
சென்றொருநதியைக்கண்டு தீர்த்தமுண்டிருந்தாரங்கே
வென்றிசேர்சந்திசெய்ய மிகுதவத்தோர்வந்தாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திர மகாராசனானவர் அந்தப்பன்றியை பொருபாணத்தாலெய்ய அந்தப்பாணம்பட்டுப் பதைத்து ஒளித்துப்போனபின்பு தனதுதேவியுடன்கூட சதுரங்கசேனையுங் கூட்டிக்கொண்டு ஒருநதியைக்கண்டு தீர்த்தபானஞ்செய்து ஆயாசந்தீர்ந்திருக்க அங்கே வாசம்பண்ணுகிற ரிஷிகள் சந்தியாவந்தனஞ்செய்ய வருகிறவிதங்காண்க.

ரிஷிகள்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-அடதாளம்.

அருந்தவமுனிவர்களிதோவந்தார்-மறை
    படங்கவும்முறையிடங்கொள்ளுந்துறை
அருந்தவமுனிவர்களிதோவந்தார்
    பெருந்தகைபெறும்பரத்திற்கே      தொண்டு
பேதமில்லாமல்செய்நெறி      கண்டு
    திருந்துஞானஅமிர்த      முண்டு
செபதபநிலையநினைக்கைக்      கொண்டு(அரு)

உசிதமாகச்சடைமுடி      புனைந்து-தவறில்லாமல
    துயர்ந்தநித்யதத்துவம்      நினைந்து
விசிதமானகாரணந்தனில்      முனைந்து வேதசாஸ்திரம்
    பொய்மைக்கிடமில்லாமலே      முனிந்து
திசைவிளங்கியகுண்டலம்      பூட்டித்
    திரிபுண்டரந்தன்னுதலிற்      காட்டி
இசைபொருந்தியமுப்புரி      நாலு
    மெழிற்செபமாலைக்      கோலு
மிலகும்படிமிசைதங்கிய
    நலமுற்றிகழ்மகிழ்பொங்கிய      (அருந்தவ)

இராசன்-போற்றி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

செப்பியதவத்தினோர்க்குந் திறமுடையோரேபோற்றி
ஒப்பெவர்க்குஞ்சொல்லவொண்ணா துயர்நெறியோரேபோற்றி

இப்பெரும்புவியில்யாவின் றெய்வபலன்போல்யார்க்கு
மற்புதமாவதுண்டோ அரியபொற்சரணம்போற்றி

வசனம்.

சரணஞ் சரணம் ஆசனத்தி லெழுந்தருளி யிருங்கள் சுவாமிகளே

ரிஷிகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

குலந்தி சம்பரிதிபோலும் கோசிலாவம்யாத்திராட்டை
தலைபுனைந்தாளவந்த மன்னெறியோனேவாழி
கலங்கவொன்னலவாட்டிக் கதியென்றோர்தம்மைக்காக்கும்
பலங்கொள்வேலரிச்சந்த்ரோத்ர பார்த்திபாவாழிவாழி

வசனம்.

வாழி வாழி அரிச்சந்திரமகாராசனே வாழி

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

மும்மலக்குறும்பைநீக்கி மோனமாம்நிலையைச்சார்ந்த
யசம்மைசேர்தவத்துளோரே திகழுமிவ்வனத்தில்நின்றே
இம்மையைக்கடக்கும்வேள்வி யியற்றியிங்கிருக்கின்றீரோ
விம்முநல்லதிசயங்க ளிருந்திடில்விளம்புவீரோ

வசனம்.

கேளுங்கள் தபோதிதிகளாகிய சுவாமிகளே நீங்களிந்தவனத்திலிருந்து தபஞ்செய்கிறீர்களே இங்கேயேதாகிலும் அதிசயங்களுண்டா அடியேனுக்குத் தெரியச்சொல்லும் சுவாமிகளே.

முனிவர்கள்-விருத்தம்-ஸ்ரீராகம்.

கதிர்குலத்தரசேயிந்தக் கடிமலர்வனத்தில்நாங்கள்
முதிர்தவஞ்செய்யுஞ்சூழல் முக்கியமேயதிசயங்காண்
நதிவளமிகுமயோத்தி நாட்டைவிட்டிங்கேவந்த
அதிசயமேதோநாங்க ளகமகிழ்ந்திடச்செய்வாயே

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே இந்தவனத்திலே தபசிகளாகியநாங்கள் தபங்கள் செய்கிறதே அதிசயம் வேறென்ன இருக்கிறது அதுதான்முக்கியம் நீரயோத்தியாபுரியைவிட்டுக் காட்டுக்குவந்தகாரியந் தெரியச் சொல்லுவீர் அரிச்சந்திரமகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

வன்னநற்பயிர்களெல்லாம் வனமிர்கக்கூட்டத்தாலே
புன்மெனவழிபுதென்று புகன்றனர்குடிகள்தானே



தின்னமாம்வேட்டைவந்தே சிதைத்தேன்பின்பன்றியொன்றை
கன்னிற்கண்டெய்தேன்காணேன் கங்குலிங்கிருக்கின்றேனே.

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே மிருகங்களாலே பயிர்களெல்லாம் அழிந்துபோகுதென்று குடிகள்வந்துசொன்னார்கள் அதற்காகவேட்டையாடவந்தேன் வேட்டையாடித்திரும்புகிறபோது மலைபோலொருபன்றிவந்து தூரத்தியது அதையொருபாணத்தினால் போட்டேன் பட்டோடிப் போய்விட்டது அதற்குள்ளாகப்பொழுது போச்சுது ஆனதாலிந்தக் கங்காரதிக் கனாயிலிருக்கிறேன்சுவாமிகளே.

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

வருங்கபடறியாமன்று மாதவவிஸ்வாமித்ரன்
நெருங்கியேயுன்மேற்கோபம் நெடும்பகைவிளைவதானுன்
பெருங்கொடுஞ்சாபமிட்டுப் பேதிக்கச்செய்வானிந்தத்
தருணந்தீதப்பியோடித் தருக்குடனயோத்திசேர்வாய்

வசனம்.

கேளும் அரிச்சந்திர மகாராசனே விஸ்வாமித்திர மகாரிஷியானவர் உம்மிட்டேரி லதிககோபமாயுன்மைக்கண்டமாத்திரத்தில் சபிக்கக்காத்திருக்கிறார் இந்தவேளை தப்பவைத்துக்கொண்டு சீக்கிரமாக அயோத்தியாபுரி பட்டணத்தைப்போய்ச்சேரு மரிச்சந்திர மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

அரிகரியவர்க்கேநா னடிமையுமாமனெனன்மேல்
பரியன்றிகோபமேதோ பட்சம்போய்சபிப்பதென்ன
திருக்கெவர்செய்தாரிந்தத் தீவினைவிளைவதேது
சரணடைந்தவனாப்போற்றிதயையும்பெற்றதன்பின்போவேன்

வசனம்.

கேளுங்கள் சுவாமிகளே அந்தவிஸ்வாமித்திர மகாரிஷிக்கு நான்தாசானுதாசனல்லவோ அப்படியிருக்க அடியேன்பேரில்சபிக்கும்படியாகிய கோபம் வரவேண்டியதென்ன இப்படிப்பட்ட வினையும் ஆராலே விளைந்ததோ எப்படிவந்தாலும்நானே யவர்பாதத்திலே விழுந்து அவர்மனதைச் சமாதானப்படுத்தி அவரதுகடையையும் பெற்றுக்கொண்டு பிற்பாடு நானயோத்திபுரிக்குப்போகிறேன் வந்ததெல்லாம் வரட்டும் சுவாமிகளே.

முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

ஊழ்வினையொருவராலு மொழிக்கவொண்ணாதுவந்த
தாழ்வொடுபெருமையெல்லாம் தாங்கள்செய்கருமமேயாம்

வேழ்விசெய்விஸ்வாமித்ரன் வினைக்குளொருபாயமாக
சூழ்வினைகடந்துபோம்நீர் துஷிபிடம்போவோம்நாங்கள்

வசனம்.

கேளும் அரிச்சந்திர மகாராசனே தாங்கள் தாங்கள்செய்த உ
க்கிரத்தின் பெருமையுஞ்சிறுமையும் இரண்டுந்தாங்களே அறுப
வித்தவேணும் விஸ்வாமித்திரருடைய கற்பனையை மெள்ளவுபாய
மாகத் தப்புவித்துக்கொண்டு போம் நாங்கள் தபம்பண்ணுகிற இ
டத்துக்குப்போய் வருகிறோம் அரிச்சந்திரமகாராசனே.

இராசன்-வசனம்.

அடியேனும் வனவேட்டையாடி வேசாறி யிருக்கிறேன் ஆ
கையால் சற்றுநேரஞ் சயனித்துக் கொள்ளவேணும் கிருபையிரு
க்கட்டும் போய்வாருங்கள் சுவாமிகளே.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

அருந்தவர்போனபின்னரிச்சந்திரன்தேவியோடு
பொருந்தடஞ்சோலையில்தடப்பொய்கையின்கரையின்மேவித்
திருந்துநித்திரைதான்செய்து திடுக்கிட்டோர்கனவினாலே
மருந்தெனுமந்திரிக்கு புலவிக்குமுனர்செய்வானே

வசனம்.

இந்தப்பிரகாரமாக வனவேட்டை யாடிவந்த அரிச்சந்திரம
காராசனைக்கண்ட தவமுனிவர்கள் போனபின்பு அந்தத்தடாகக் க
ரையிலே தானுந்தன்னுடைய தேவியாகிய சந்திரமதியும் பஞ்ச
ணைமெத்தையின்மேலில் நித்திரைபண்ணிக் கொண்டிருக்கத்தானொ
ரு சொற்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்து தன்தேவியுடனேயும் ம
ந்திரியுடனேயும் சொல்லுகிற விதங்காண்க.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கண்டா.

என்னருந்தவர்போல்வந்த இன்பமாமயிலேகேளாய்
என்னென்றுசொல்வேனிந்த இரவினிற்றுயிலும்போது
துன்னுமோர்சொப்பனத்தின் றுணுக்கத்தைநினைந்தாற்சிந்தை
சின்னபின்னங்களாகச் சிதறுதென்செய்வேனேயோ

வசனம்.

கேளாயென துபிராணநாயகியான சந்திரமதி யிந்த இராக்கா
லத்தில் இந்தத் தடாகக் கரையில் நாமிருவருஞ் சயனித்திருக்கை
யில் நானொரு கோர சொப்பனங்கண்டேன் அதைநினைத்தால் மன
துபதைக்குது புத்திசபலப்படுது சித்தம் நிலைதளர்கிறது அரிக
ரி அரிகரியென்ன செய்வேன்.



சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

காதல்சேரென துப்ராண கர்த்தரேநீர்தான்கண்ட
வேதனைசொப்பனத்தில் விதமெலாந்தெரியச்சொல்வீர்
யாதுவந்தாலுந்தெய்வ மெண்ணத்தின்படியேயாகும்
தீதொருக்காலும்வந்து சேருமோதேவரீர்க்கே

வசனம்.

விசனப்படவேண்டியதில்லை சுவாமி பொருபொல்லாங்குந்
தேவரீருக்கு வாராமற்றாலு வருவதெல்லாந் தெய்வச்செயல் வந்த
தாந் தெய்வச்செயல் தேவரீர்கண்டசொப்பனத்தைத்தெரியச்சொ
ல்லவேணுஞ் சுவாமி

இராசன்-விருத்தம்-இ-ம்-வராளி.

பெண்ணினாயிலேமித்ரபதம்பாவெவர்செய்குதோ
என்னுடைய கருத்துக்கேற்ற விடர்தருசொப்பனத்தின்
புண்ணியபாவமென்னும் பொருள்தெரியவென்றால்
நண்ணியபெரியோருக்குஞ் சாத்யமோ அசாத்யந்தானே

வசனம்.

கேளாயென துபிராணநாயகியானசந்திரமதி நான்கண்டசொ
ப்பனத்தின்பலனையறிந்து இதுபுண்ணியகதி இதுபாவகதி யென்று
சொல்லவென்றாலோ பெரியோர்களுக்கும் அசாத்தியமாகக்
காணும் ஆகையால் இப்படிப்பட்ட தீங்கு வரும்படியாய் யார்செ
ய்த குற்றமோ யார்செய்தபித்திரமேதமோ அறியேனே அரிகரி

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

இக்கொடுஞ்சனவின்சேதி யெண்ணிலொருமையேயாம்
பக்குவமறிந்துசொல்லும் பண்புநானறிகிலேனே
திக்கிலிதெய்வமல்லாற் செய்யுபவாரதிலேனே
தக்கநற்சத்தியகீர்த்தி தனைவரவழைத்துச்சொல்வீர்

வசனம்.

கேளும் என துப்ராணநாயகா தேவரீர்கண்ட சொப்பனத்தி
ன்பயனை நினைந்தால் எனக்கே சொல்லக்கூடாமல் மயங்குகிறத்தினா
லே நானெப்படி சொல்லப் போகிறேன் உள்ளபடியிருக்குது ந
ம்முடைய சத்தியகீர்த்தியாகிய மந்திரியை வரவழைத்துச் சொன்னா
ல் அவராலே தெரிந்து கொள்ளலாம் சுவாமி.

இராசன்-வசனம்.

ஆனால் அப்படியே தெரிந்துகொள்ளலாம் என துப்ராணநாயகி

இதுவும்-இராசன்-வசனம்.

ஆரடா அந்த நம்முடைய மந்திரியாகிய சத்தியகீர்த்தியை யழைத்
துக்கொண்டு வாருமப்பிள்ளாய்.

ஆரன்-வசனம்.

அப்படியே யழைத்துக்கொண்டு வருகிறேன் சுவாமி.

சத்தியகீர்த்தி-போற்றி-விருத்தம்-இ-ம்-சாவேரி.

தருமமுங்கீர்த்திசத்யந் தவறிலாமனத்தோய்போற்றி
திருவுடையயோத்தியாளுந் திரிசங்குலமைந்தாபோற்றி
அருமையாமெய்மையாளும் அரிச்சந்த்ரபூபாபோற்றி
பரிவுடனெனையழைத்துப் பணியெனக்குரைசெய்வீரோ

வசனம்.

சரணஞ் சரணம் சுவாமி. தேவரீரடியேனை யழைப்பித்தகாரியந் தெரியச் சொல்லவேணுஞ் சுவாமி.

இராசன்-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டிரம்.

மதிமந்திரிசத்தியகீர்த்தி மணியேநீசொல்லக்கேளாய்
விதிமுறையாலேயிங்கே மேவிநித்திரைசெய்தோமே
அதிரும்பார்சொப்பனத்தை யடைவுடன்கண்டேனதை
சதிருடன்கேட்டுநன்றாய்த் தரும்பலனுரைசெய்வாயே

வசனம்.

கேளும் எனதுமந்திரியாகிய சத்தியகீர்த்தி நானொருசொப்பனங்கண்டேனந்தசொப்பனத்தைக்கேட்டு அதினுடையபலனை நன்றாயாராய்ந்துசொல்லவேணும் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்படியே தேவரீர்கண்டகனவைத் தெரியச்சொல்லும் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-கனவுகண்ட-தரு-கண்ணி

இ-ம்-பைரவி-தாளம்-ஆதி.

இந்தக்கனவுநான்கண்டவிதந்தன்னை
யென்னென்றுசொல்லுவேன் மந்த்ரீ மந்த்ரீ
சுந்தரமேவுநிறைந்தவிந்தத்தடாகமிந்தக்
கரையிலிருந்தோம்நாமே மந்த்ரீ-மந்த்ரீ
இந்துநுதலாளிந்தசந்த்ரமதியுடனே
யிரவினிற்றுயின்றேனான் மந்த்ரீ-மந்த்ரீ
சத்தியமெய்ந்நெசாமராத்திரிதனிற்
றயங்கக்கண்டதைக்கேளும் மந்த்ரீ-மந்த்ரீ



மூன்றுளென்றதற்றையந்தவத்தாச்சொர்க்கமென்னும்
மோட்சமடையக்கண்டேன் மந்த்ரீ-மந்த்ரீ
அந்நாள் முத்தவுடனைந்துபேர்ஸ்திரீகளை
அடையவுங்கண்டேனே மந்த்ரீ-மந்த்ரீ
ஐந்துபத்தஅந்தமாதரிலொருத்தியை
மாதவர்க்கீயக்கண்டேன் மந்த்ரீ-மந்த்ரீ
தந்திரமாய்ப்பின்னொருத்திதானவனுடன்கூடி
சதிசெய்துபோகக்கண்டேன் மந்த்ரீ-மந்த்ரீ
மற்றமூவரிலொரு மாதுபொசிப்பைவிட்டு
வனத்திற்போகக்கண்டேன் மந்த்ரீ-மந்த்ரீ
சிற்றிடைபின்னொருத்திகண்கள்தெரியாமலே
திகைத்துப்போய்விடக்கண்டேன் மந்த்ரீ-மந்த்ரீ
ஐவரில்நால்வர்போகஅசையாமலேயொருத்தி
அன்புடனேயிருந்தாள் மந்த்ரீ-மந்த்ரீ
தெய்வச்செயல்பின்புசித்தியாய்ப்பாக்கியமெல்லாம்
சேர்ந்ததனவளால்நானே மந்த்ரீ-மந்த்ரீ
மனைவியாயைவராசவாய்த்ததுமதிலுண்டான
வாறெல்லாந்தெரியச்சொல்வாய் மந்த்ரீ-மந்த்ரீ
உனையலாலுலகினிலுற்றதுணைவேறுண்டோ
ஓகோஅறிவுடைய மந்த்ரீ-மந்த்ரீ

இராசன்-விருத்தம்-இ-ம்-கன்னியாகி.

இந்தவாறுநானே யின்றையதினத்திற்கண்ட
தந்திரசொப்பனத்தின் சதியிதுதான்காண்மந்த்ரீ
முந்தநூழ்வினை யறிவென்ன முடிவிதேவறிகிலேன்யான்
சிந்தைநழில்பயக்கந்தீரச் சீக்கிரமாயுரைசெய்வாயே

வசனம்.

கேளுஞ்சத்தியகீர்த்தி இன்றையதினஞ்சொப்பனத்திலேகண்டஸ்திரீகளாறு அதிலேயொருத்தியை யொருரிஷிக்குத் தானாவாக்கக்கண்டேன் அந்தரிஷியார் அவளுடனே யின்னொரு ஸ்திரீயும் போய்விடக்கண்டேன் அவளாற் அந்தப்பல னென்ன மற்றொரு ஸ்திரீ ஆகாரத்தை வெறுத்து நீங்கிப்போய்விட்டவளார் அவள்வெறுத்த ஆகாரமென்ன பின்னொருஸ்திரீ யிரண்டுகண்ணுந்தெரியாமல்

மல் தப்பிப்போய் விட்டவளார் கண்தெரியாமற்போன காரண
மென்ன ஒருஸ்திரீயன்னைவிட்டு நீங்காயிருந்து பூலோகத்திலே
யுள்ளாள்வரைக்குங் கூடவேவாழ்ந்து மோட்சலோகத்துக்குங் கூ
டவே வரக்கண்டேன் அவளாரோ இந்தசொப்பனத்தின் பலனை
யெனக்கு விபரமாகத் தெரியச்சொல்லு மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ட்-முகாரி.

தாரைவார்த்திட்டமாதுந் தன்னுடன்போனமாதுஞ்
சீருள்ள நகரம்நாடும் இருவர்மற்றிருவர்சேதி
யாராமுஞ்சதனும்வேற்றுர் தையலேயுன்னைநீங்கச்
சாரமாயிவைகளெல்லாஞ் சதிசெய்கோசிகனால்வேறும்

வசனம்.

கேளும் மகாராசனே நீர்தாரைவார்த்த ஸ்திரியும் அவளுட
னே கூடப்போய் விட்ட ஸ்திரியும் நாடுநகரமுதலாகிய சகலபாக்கி
யமும் அதையேற்றுக்கொண்டவரோ விஸ்வாமித்திரமகாரிஷி சாப்
பாட்டை வெறுத்து நீங்கிப்போய் விட்டவளும் கண்தெரியாமற்
றவித்தவளுக் வெவ்வேறுபடப் போகிற வுமது பெண்சாதியும்
பிள்ளையுமாகும் உம்மை நீங்காம லிருந்தவொருத்தியும் உம்முடைய
சத்தியமாகும் இதுதான் கனவினுடைய பலன் மகாராசனே.

இதுவும்-சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-தோடி-

கபடனும்விஸ்வாமித்ர சாதகனாலேபுத்தன்
சுபமுள நகரிநாடு சோர்விலாதனமுந்தோற்று
அபவமாய்மனைவிமைந்த னவருடன்நீயுர்வேறும்
விபவமில்லாமற்காணும் விதிக்கென்னசெய்வேனைய

வசனம்.

ஐயையோஇந்த அனியாயத்தை நானென்னென்று சொல்லு
வேன் இந்தப்பொல்லாத விஸ்வாமித்திரனாலே நாடுநகரந்தன மு
தலாகியதுகளையுந் தோற்று பெண்சாதிவேறு பிள்ளைவேறுயி தேப
ரதேசியைப்போலாகவோ அப்படி நாங்கள்காணவோ ஐயையோ
யென்னசெய்வேன் அரிச்சந்திர மகாராசனே அரிகரி.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா-

பெண்டிழந்தாலுமிந்தப் பிள்ளைபோய்நீர்வேறுகி
மண்டலத்தலைந்திட்டாலும் மாய்கையால்விஸ்வாமித்ர
கண்டகனென்செய்தாலுங் காயம்போங்கீர்த்திநிற்கும்
அண்டர்கள்புகழுஞ்சத்ய மதைவிடவேண்டாஞ்சுவாமி



வசனம்.

கேளும் என்னுயிர் பிராண ரட்சகா நான்வேறு பிள்ளைவேறுகி
நீரும் வேறுகி படாத சங்கடமெல்லாம் பட்டாலும் இந்தவிஸ்வா
மித்திரமகாரிஷியினாலே பிராணம்போய்விட்டாலுஞ் சத்தியத்தை
க்கைவிடாம லிருக்கவேணும் அதனாலே கீர்த்தியடையவேணும் எ
ன்பிராணரட்சகா.

சத்தியகீர்த்திபுலம்பல்-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

ஐயையோஇந்தவிதிகாணவோகூடி
அடவியில்வந்திருந்தோம் — தெய்வமே

செய்புர்வமையறியேன்இருவளச்செயலிதுவோ
இசைக்குதென்மனதையோ — தெய்வமே

தந்தையுடனேதாயும் சகலமும்மன்னவென்று
தானினைத்திருந்தேனையோ — தெய்வமே

சந்தமலர்க்குழலாள்சந்திரமதிதானென்னைக்
காப்பாற்றுந்தாயல்லவோ — தெய்வமே

மைந்தன்வேறுயிந்தமன்னன்வேறானல்பின்பு
மாதென்னசெய்வாளையோ — தெய்வமே

சிவசிவகாசிவிஸ்வநாதா கமலபாதா
செய்வினையறியேனையோ — தெய்வமே

தவப்பலனிதுதானோதெய்வமும்பொதுதானோ
சத்யமும்பொதுவோஐயையா — தெய்வமே

கன்றிழந்தபசுபோலுங் கண்ணிழந்தோர்தம்மைப்போலுங்
கருத்தறிந்தலை[illegible]னோ — தெய்வமே

[illegible]சொல்லி நெறிப்படிநடப்பேனோவென்
நினைவறிந்தாண்பவனையோ — தெய்வமே

இராசன்-விருத்தம்-இ-ம்-சுருட்டி.

மனைத்துயரென்னவேண்டாம் வரும்விதிதவிர்வதுண்டோ
நினைத்துக்கொண்டிருவிந்த நெறிமுறைதவிருமோதான்
புனற்சடையீசன்செய்யும் புதுமையைப்றியோமித்த
விசைப்படைவிஸ்வாமித்ரன் வேகுவிருங்கல்போமத்தின

வசனம்.

கேளும் விவேகமுள்ள சத்தியகீர்த்தி விசனப்படுவதினாலெ ன்னகூடிவரும் காசிவிஸ்வநாதருடையகிருபையும் இந்தவிஸ்வாமி த்திரருடைய வினையும் வருகிறவிதியும் அனுபவித்துத் தீருவோம் வருகிறவிதி வழியில்நிற்கப்போகுதா விசனப்படவேண்டாம் மந் திரி.

பொருவிருத்தம்-இ-ம்-சாவேரி.

காட்டினில்மன்னன்கண்ட கனநிலைமந்திரிகூறக்
கேட்டவரிருந்தபின்பு கிரியெனவந்தபன்றி
கிட்டியபாணம்பட்டுத் திகைத்துத்தள்ளாடியோடி
நாட்டமாம்விஸ்வாமித்ர நாதர்முன்வந்ததன்றே

வசனம்.

இந்தவிதமாக ஆரண்யத்திலே அரிச்சந்திரமகாராசாவானவர் தாம்கண்ட சொப்பனத்தை மந்திரியுடனே சொல்ல மந்திரி யதற் குப்பயன்சொல்ல இவ்விதமா யங்கேயவர்க ளிருக்குமுன்னாலேவி ஸ்வாமித்திரர் விடுத்த பன்றியானது அந்த அரிச்சந்திரனுடையபா ணம்பட்டு விஸ்வாமித்திர ரிடத்திற்கு வருகிறவிதங்காண்க.

பன்றி-விருத்தம்-இ-ம்-ரேகுப்தி.

அய்யனேயபயமென்னை யனுக்ரகஞ்செய்ததேவா
மெய்யனேயடியனொத்தன் மெய்யெலாம்நொந்தேனையா
செய்யுமிவ்வாறேதுங்காணேன் திரளரிச்சந்திரன்விட்ட
கையம்பினாலேபட்டுக் கலங்குதென்னாவிசுவாமி.

வசனம்.

அபயம் அபயம் விஸ்வாமித்திரமகாரிஷியே தேவரீருத்தார ப்படியேபோனவென்னை அந்த அரிச்சந்திரமகாராசன் விட்டபா ணத்திலே சரீரம்நொந்து கஷ்டமாகியவாதனைபடுகிறேன் என்னசெ ய்வே னென்னசெய்வேன் விஸ்வாமித்திரமகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

நல்லதுநல்லதந்த நலமிகுமரிச்சந்திரன்றன்
செல்வமும்பலமும்பாணஞ் சிலாக்கியமுமதிகுலேன்பான்
வல்லமையதனால்வென்றான் வருத்தந்தீர்ந்திடுவாய்நீய
ஒல்லையிற்சபிப்பேன்வேறோ ருபாயத்தால்வெல்வன்பாராய்

வசனம்.

கேளாய் பாணத்திலேவருத்தப்பட்டபன்றியே அந்த அரிச் சந்திரனுடைய பலமுஞ் செல்வமும் அவன்பாணத்தினுடைய செ ருக்கும் நாசனிக்கிறேன் ஆனாலிப்போது சபிப்பேன் வேறொருபா



யத்தினாற் செயிக்கவேணும் நீயேபார்க்கப்போகிறாய் நீவருத்தந் தீர்ந்திருப்பாய் போய்விடும்பன்றி.

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

அம்புபட்டபன்றிவந்து அடிவணங்கிச்சொன்னபின்பு
வெம்புமனக்குரூர விஸ்வாமித்திரன்கோபத்திலிரு
கொம்பனையார்ப்புவிழி கொண்டநறுங்கொண்டலெனுங்
கும்பமுலைநீச்சியாய்க் குதித்தனர்மோகினியர்களே

வசனம்.

இந்தப் பிரகாரமாக அரிச்சந்திர மகாராசனுடைய பாணம்பட் டுவந்து சொன்னபன்றியின் சொல்லைக்கேட்ட விஸ்வாமித்திரர் கோ பத்தினதுபெருமூச்சினால் இரண்டுஸ்திரீகளாகிய மோகினிப்பெண் கள்பிறந்தார்களென்றுகாண்க.

மோகினிப்பெண்கள்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

இருமையிலும்நற்கதியை யெய்துதவமேபுரிந்த
பெருமைமிகுமாதவனே பெண்களெனவெங்களைநீர்
தரணிமிசையுண்டுபண்ண தந்திரமேதெடுத்தனைத்தால்
சரணநினைந்தொருநொடியில் சாதிப்போந்தடையிலையே

வசனம்.

சரணம் சரணஞ் சுவாமி யெங்களைத் தேவரீருக்குக் குமாரத் தியாகவுண்டுபண்ணின காரியமென்ன அதைத் தெரியப்படுத்தினா ல் தேவரீருடைய திருவடியைத் தியானம்பண்ணிக்கொண்டு யெ ப்படிப்பட்ட காரியமாகிலும் முடிக்கிறதுக்கு எங்களுக்குவல்ல மையுண்டு கடாட்சிக்கவேணும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

காணரும்பொருட்போல்வந்த கன்னியர்களேகேளீர்
வீணையினிசையுக்கியான [illegible]களும்பாதநாட்டியம்
சேணுயர்மாநர்நான அத்தியாயமுமாய்ந்து
[illegible]ர்களிருமிச்சைப் பாடவுந்திறங்கொள்வீரோ

வசனம்.

கேளுங்கள் நம்முடைய அனுக்ரகத்தினாலே வந்தநீச்சஸ்திரீ களாகிய சௌந்தமோகன சித்விலாசமகா மோகினிப்பெண்களே யு ங்களுக்கு வீணைமுதலாகிய சகலவாத்தியங்களுடைய யிசையும்பர தநாட்டியவிசித்திரங்களும் ஆடல்பாடல் நிரம்பிய பிராணியுஞ்சித் தியாகி சிலாக்கியமாகக்கடவீர்கள் வாழிவாழி.

விசுவாமித்திரர்-விருத்தம்-இராகம்-ஆனந்தபைரவி.

உங்களையும்பெண்ணை தொன்றுண்டுவனத்திலாங்கோர்
கங்கையின்கரையின்மேவுஞ் சாதல்சேரிச்சந்திரன்றன்
றுங்கநற்சமுகங்கண்டு துதிபெறுகானம்பாடி
திங்கள்வெண்குடைகைக்கொள்விர் மறுத்திட்டால்சோர்ந்துவாரீர்

வசனம்.

கேளுங்கள் மோகினிப் பெண்களேயுங்களையும்பெண்ணென்று காரியம் வேறொன்று மல்ல இந்தவனத்தில் அதோ அந்தநதிக்கரையில்வந்து இறங்கியிருக்கிற அரிச்சந்திர மகாராசனைக்கண்டு நீங்கள் சுத்த சங்கீத பரத நாட்டியங்களைக் காட்டி மெய்ப்பித்து உங்களுக்கு வெகுமதியாகப் பூச்சக்கரக்குடையைக்கேளுங்கள் இல்லாவிடில் உங்களைக்கூடி யனுபவிக்கும்படியாகத் திட்டப்படையுங்கள் இதுதானீங்கள் செய்கிற வுபகாரம் போய்வாருங்கள் பெண்களே.

மோகினிப்பெண்கள் வசனம்.

அப்படியேபோய்வருகிறோம்சுவாமி.

மோகினிப்பெண்கள் அரிச்சந்திரனிடத்துக்கு வருகிற-தரு

இராகம்-பூரிகல்யாணி-தாளம்-ஆதி.

மதுரவசனநவமோகனமாகவாக
மாயமோகினிமாதர்வந்தார்

விதிவசத்தாலேவிசுவாமித்திரன்றனக்குவந்த
மிண்டாமதிகசோபச் சூட்டானந்தனியெழுந்த (மதுர)

காட்டிமறையுமின்னற்கொடியென்றுவிவரிடை
காமினிதனிவிலி தோற்றுமோ-வந்து
காதல்வினைக்குமிரண்டென்னத் தனைக்கண்டான்
கண்ணாடிதனைக்கண்டு தோற்குமோ-சொல்லுந்
தீட்டியவேல்விந்தவமுனிவர்கள்நெஞ்சைத்
திகைக்கச்செய்மாமலேங்கிப் பார்க்குமோ-வரு
திங்கள்விரண்டிதென்ன விளைந்தபுருவநெறி
சிவன்கைவில்லையினையாய்ச் சேர்க்குமோ-இணை
பூட்டிச்சரியைமைத்துப்பொருத்துமம்விழிகொண்டு
பாட்டிவிசைபெருகப்பூட்டக்குலக்கண்டு (மதுர)



கோவைப்பிதழமிர்தமுதே...ந்திறமுடைய
கொற்றவருக்கேட்டுமென்றுநயம் பேசி விளை
கோதில்லாக்காமாசபுஞ்சைமேர்சநிலை
கொதிக்குசென்றுநொடித்துக்கை வீசி திவத
ஆவலினாருர்மணமதனையுருக்கமுலலை
யரும்பில்நகைதாளமுளம் கூசி நாளும்
அறம்போகக்சலவியைக்கரைக்கண்டறிந்தவ
ரசன்னடையதனைக்கண் டேசி யெக்குந்
தாவியமரீமரக்குமுறுதழைக்கத்
தனித்துத்தொண்டுசெய்யுமன்மதன்வந்தழைக்க (மதுர)

பச்சைவச்சிரமுத்துமாணிக்கமிட்டிழைத்த
பணிகள்நிறைந்தழகு காட்டவே யிவர்
பரதநாட்டியசதிவகுக்குநடக்கும்பாத
பங்கயச்சிலம்பொலிகள் நாட்டவே கண்டு
இச்சையொழித்துமகாநிஷ்டையனுசரித்தோர்க்
கிங்கிதக்கலவிமயல் மூட்டவே மிகும்
இலையவருலகத்திலிருக்குமிந்த்ராணியு
மிவளைக்கண்டஞ்சிமுகஞ் கோட்டவே விளை
விசித்திரங்களறியாமலரிச்சந்திர
வீரன்சபையில்நின்றுவெற்றிகைக்கொள்வோமென்று (மதுர)

மோகினி-கொச்சகம்-இராகம்-புன்னாகவராளி.

சிந்தைமகிழ்கதிர்குலத்தில் சிறந்ததிருச்சங்குதரும்
மைந்தனெனவந்துதித்த மதனவரிச்சந்த்ரமன்னா
சந்ததமுமிசைபெருகித் தழைத்துடையாளவந்த
சுந்தரமேநின்பதத்தைத் தொழுவோந்தமியர்களே

இராசன்-விருத்தம்-இராகம்-கல்யாணி.

கனிநிறமொழிசிறந்த குவிழ்புருவக் கலைமதிவதனம்வேற்கண்கள்
புனையதல்கூந்தல்நுண்ணிடையின்பம் பொருந்திய வண்ணங்கள்
மேனுமிகுமனிதரைச்சாமைமதவர் தம்மைவருத்துமன்னடையின்
நீங்கே, தனிபிருபேடைமயிலென வந்திர் தானம்பேர் குலம்வந்து
யுரைப்பீர்.

வசனம்.

கேளுங்கள் பெண்களே சகலபுவனங்களையும் பரிபாலிக்கச்செய்யுங்குறைசெயங்களோடிங்கூடிய நீங்களார் உங்கள்பேரென்ன

நீங்களிருக்குந்தலமெது நீங்களெவர்கள் நீங்களெங்கேவந்தீர்கள் வந்தகாரியந் தெரியச் சொல்லுங்கள் பெண்களே.

மோகினி-விருத்தம் இ-ம்-அடாணா.

பாவமார் புலைச்சியர் நாங்களிவ்வனத்திற்பகல் விஸ்வாமித்திரன் தவஞ்செய், கோவிமின் மலைச்சாரலி னிருப்போங்கூறுறன்மது யபிலாசிபுட்; ஆவலினடஞ்செய்திறபதிசேவா மாதலானுனதுசந்நிதியின், மேவிய ஆடல்பாடலைக்காட்டிவெகுமதிபெற்றிடவந்தோம்.

வசனம்.

கேளுங் சுவாமி நாங்கள்செய்தவப்பலத்தினாலே நீச்சக்குலத்திற் பிறந்தோம் சங்கீத பாதசாஸ்திரங்களெல்லாம்படித்துக்கொண்டோம் இந்தவனத்தில் விஸ்வாமித்திர ரிஷி தவஞ்செய்கிற மலைச்சாரலில் குடியிருப்போம் நீர்வந்தசெதியைக்கேட்டு உம்முடைய சமுகத்திலே கேளிக்கையடி வீணை முதலாகிய வாத்தியங்களுடனே பாடிமெய்ப்பித்து தேவரீரைச் சந்தோஷப்படுத்தி வெகுமதி பெற்றுக்கொள்ள வந்தோம் மகாராசனே.

இராசன்-வசனம்.

ஆனால் நீங்கள் கற்றிருக்கிற ஆடல்பாடல்களைத் தெரியப்படுத்தினால் நம்சந்தோஷத்தையடையலாம்.

மோகினிப்பெண்கள்-ஆபிரயப்பதம்.

இ-ம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

சகிக்கவசமோசாமிமோக தாகம்பொல்லாதுராஜ்சாமி
சக்குமகாப்ரதாபா எங்கள் துரையரிச்சந்திரபூபா (சகிக்க)

கரும்புவில்மதன்சாட்டிக் கருவிநாணியைப்பூட்டி
விரிக்குயவர்க்கணைதிட்டி வியகிறான் சலம்பாராட்டி (சகிக்க)

பாருநடனல்போற்றுவமாங்குயிலெதிரோகூவ
திருமேமாப்ரவாக செந்தழல்மதியுந்தூவ (சகிக்க)

உபாதிசமரதி வோகோகலவிவிதி
குபுகுபெனமதசலதி கொண்டிட்டவேகூடத்ததி (சகிக்க)

மோகினி-சிங்காரபத்தியம்-இ-ம்-புன்னாகவராளி.

மேருவோ அலசுந்த மேருநேராங்கிரிகள்
சேருமோ வுமருபுச நிலையினழகும்



தாருவோ அலதந்த தாருநேரானதரு
சேருமோகைக்குவமைதிகாதென்றால்
[illegible] துவிளையாடும் மார்பினோடுமிவ்
வையமொப்பாகுமோ துய்யநிபனே
அருளானபார்வையும் அழகின்மதசேர்வையும்
ஒருநாளுமறவேனென்னுருகுமுளமே
பருஷகாட்பிராத்னமே போகசாலி
சரசசிங்காரமுக்யமேதாபமாதர்
உருகுகிறிச்சோபாமறியாதவுனதுகடினம்
அரியவுற்பாதவிரக மென்றுவல்லீரோய்

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

பெண்களே நீங்கள்செய்த பிரியமாம்நடனசாரம்
கண்களிற்கண்டேன்கீத கல்வியுந்திறமுமெய்யே
நண்பதாயுங்கள்சிந்தை நயமிகுமகிழ்ச்சியாகப்
பண்புறுசொர்ணம்வஸ்திரம் புணிகளுங்கொடுப்பேனே

வசனம்.

கேளுங்கள் பெண்களே உங்களாடல் பாடல்களுக்கு மெச்சினேன் உங்களுக்குவேண்டிய திரவியங்கள் வஸ்திரங்கள் ஆபரணங்களும் வாங்கிக் கொள்ளுங்கள் பெண்களே.

மோகினி விருத்தம்-இ-ம்-தன்னியாசி

எங்களாண்டவரே சொர்ண மிலியபொற்பணிகளாடை
எங்களுக்கெசேஷ்டமுண்டிவ் வேளையர்கருத்தொன்றுண்டு
துங்கமாங்கதிர்குலத்துக் துரைத்தனந்தழைக்கும்நீதி
தங்குவெண்குடையாய்த்தந்தால் சந்தோஷமடைவோம்நாங்கள்

வசனம்.

கேளுமெங்களாண்டவரே திரவியம் வஸ்திரம் ஆபரண முதலானதும் எங்களுக் கெசேஷ்டமாகவே யிருக்கின்றது குறைவில்லை ஆகையால் அந்தாவிருக்கிற உங்கள் பூச்சக்ரக் குடையைத் தந்தால் நாங்கள் சந்தோஷ மடைகுவோம் சுவாமி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-பியாகடை.

நுடியிடைமாதரே நீர் சுவைபெறுமதுராகீத
நடனமுஞ்செய்திர்மன்ன னயந்தொருபொருளீத்தந்தால்
குடைதரவேணுமென்றீர் கொற்றவர்க்கடாதவார்த்தை
இடுவதற்குளத்தைக்கேட்டா லிதமுடன்கொடுக்கலாமோ
யினு

வசனம்.

கேளுங்கள் பெண்களே நீங்கள்பாடிய பாட்டையும் ஆடலை யுங் கண்டு இராசாவுக்குச் சந்தோஷம்வந்து ஒரு வெகுமதியைக் கொடுத்தால் அதையேற்றுக் கொள்ளாமல் இராசாக்களுக்குக் கொடுக்கத் தகாதகாரியமாக விருக்கின்ற குடையைக்கேட்டால்கொடுப்பார்களா கொடுக்கத்தக்க பதார்த்தங்களைக்கேட்டு நீங்கள்பெற்றுக் கொள்ளலாம் பெண்களே.

பெண்கள்-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

நாடியகுடையுந்தந்து நயம்பெறச்செய்யாவிட்டால்
வாடியவிரகத்தாலே மாய்க்குமெங்களையன்பாக
கூடியபின்பந்தந்தாற் கொண்டயிதுபெரிதன்றெண்ணி
நீடியமகிழ்ச்சியாவோம் நிறையரிச்சந்த்ரமன்னா

வசனம்.

கேளும் இராசசக்ரேஸ்வரா நாங்களுமக்கு நாடிவந்த பூச்சக்கிரக்குடையைத்தாமலிருந்தால் விட்டால் எங்களைக் கூடியின்பசவுக்கியங்களைத்தந்தால் அதுபோதும் அதைப்பார்க்கிலும் வேறேவெகுமதி யிருக்கின்றதா சுவாமி.

மந்திரி-விருத்தம்-இ-ம்-குப்பகாம்போதி.

அஞ்சாமலரசர்முன்னே அடுக்காதபரிசுகேட்க
நெஞ்சமும்வலிகொண்டீர்கள் நீச்சியரானநீங்கள்
எஞ்சலில்லாமல்யார்க்கு மேற்குமேபொருளைக்கேட்டால்
சஞ்சலமில்லாமலீவார் தகாதசொல்மொழியலாமோ

வசனம்.

கேளுங்கள் பெண்களேநீங்கள் நீச்சஸ்திரீகளாகையால் நினைக்கத் தகாத காரியங்களைக் கொடுக்கச்சொல்லிக் கேட்கிறீர்கள் தருமத்துக்கு விரோதமில்லாமல் கொடுக்கத்தகுமான வெகுமதியைக் கேட்டு வாங்கிக்கொண்டு போங்கள் பெண்களே.

மோகினி-விருத்தம்-இ-ப்-கலியாணி.

கொடுக்கிலாருந்தனைப்போலுங் குவலயந்தன்னிற்காணோம்
அடுத்துநற்பாதசாஸ்திர வழிநயமெல்லாங்காட்டி
இடத்துடனுன்மைத்தாவித் தேகியென்றடுத்துக்கேட்டோம்
தடுத்துரைக்கவுள்ளன்றீயன் சபலனென்றறிகிலோமே

வசனம்.

கேளும் மகாராசனே கொடாதவுத்தர்களிலே யுமையைப்போலெங்குங் கண்டதில்லை நாங்களொருபெரியவென்று எங்களுடைய



பாதசங்கேதவித்தைகளைக்காட்டினோம் நாங்கள் பொல்லாதவர் சபலமிந்தர் ஆனதால் தேகியென்றவர்கள் கேட்டதைக்கொடாமல் தடுத்தீர் தங்களுடைய நிர்வாகமறியாமல் வந்தோம் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

வீரமாம்புலிபோற்சீறு மிகுவலிநாதரேயிக்
கார்நிறக்கூந்தல்நீச்சக் கன்னியரானோர்தம்மை
நேருமென்சமுகம்விட்டு நெடியதூரத்திலோடச்
சோரவந்திழுத்துத்தள்ளித் திருப்புவீருடன்செய்வீரே.

வசனம்.

கேளுங்கள் பலபராக்கிரமமுள்ள தூதர்களே இந்த நீச்சப்பெண்களைத் தாட்சண்யமில்லாமல் கழுத்தைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோய் தூரத்தில் விட்டுவாருங்கள் உடனேசெய்யுங்கள் தூதர்களே.

தூதர்கள்-வசனம்.

அப்படியே செய்கிறோம் சுவாமி.

பொது-வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திர மகாராசாவின் உத்தாரப்படியேதூதராலே தள்ளிவிடப்பட்ட மாயமோகினிகளாகிய நீச்சஸ்திரீகள் அங்கேயுண்டுபண்ணி யனுப்பின விஸ்வாமித்திர மகாரிஷியினிடத்திற்கு வருகிற விதங்காண்க.

மோகினிப்பெண்கள்-பிரலாபனை-தரு.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

ஐயையோநாங்கள்போயவதிப்பட்டோமையா முனிநாதா
தெய்வச்சகியேநாங்கள் செய்தபாவந்தானோ முனிநாதா
அருமையாயெங்களை யனுக்ரகஞ்செய்தாயே முனிநாதா
கருஷிக்கும்பாவிகையிற் காட்டிக்கொடுத்தாயே முனிநாதா
உத்தரங்கொண்டந்தவூத்தனைப்போய்க்கண்டோம் முனிநாதா
எத்தனையோவித விங்கிதங்காட்டினோம் முனிநாதா
எல்லாந்தெரிந்தவன்போலிருந்தானையா முனிநாதா
நல்லவெகுமதி தருவானென்றிருந்தோம் முனிநாதா
என்னவெகுமதிவேணுமென்றகேட்டான் முனிநாதா
மன்னவனென்றெண்ணிவெண்குடையைக்கேட்டோம் முனிநாதா

கொடுக்கப்படாதென்றான் கூடவேமோகித்தோம் முனிநாதா
தடித்துத்தூதரைவிட்டுத்தள்ளிவிடச்சொன்னான் முனிநாதா
அடுக்குமோதூதர்களடித்துத்தள்ளினார்கள் முனிநாதா
நடுக்குதுதேகமும்நாங்களென்னசெய்வோம் முனிநாதா

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

அழுதகண்ணீருமேனு மடியுண்டதழும்புமாகி
விழுதெனக்கூந்தல்விழ மெல்லியநுகிலுஞ்சோரப்
பழுதுடனிங்கேவந்த பாவையீரார்தானிந்த
முழுமனத்திடமாச்செய்தோர் மொழிகுவீரினியொருக்கால்

வசனம்.

கேளுங்க ளென்னுடமாய்கையாலே வந்த மோகினிப் பெண்களே அந்தஅரிச்சந்திரனிடத்தில் நீங்கள்போய் ஆடல் பாடல்களைச்செய்து வெகுமதிபெற்று வாருங்களென்று சொன்னேனே அப்படியிருக்க உங்களையிப்படி அலங்கோலமாய் மேலெல்லாந்தழும்பேறக் கண்களிலே தாரைதாரையாய் சலம்பெருகக் கட்டியிருக்கின்ற வஸ்திரஞ்சோர்ந்து போக நானாவிதமாக அடித்துத்துரத்தவந்த காரணமேதோ இன்னமொருதரந் தெரியச் சொல்லுங்கள் பெண்களே.

மோகினிப்பெண்கள்-விருத்தம்-இ-ம்-முகாரி.

மொழிப்படிநாங்களரிச்சந்திரமன்னன்
முகங்கண்டேயபிநயம்பிடித்தோஞ்
செழிப்புடன்கேட்டுக் கொடுத்ததைமறுத்துத்
திகழும்வெண்குடைதனைக்கேட்டோம்
பழித்ததைத்தடுத்தான் மோகந்தீரென்றோம்
பாதகத்தூதரைவிடுத்துக்
கழுத்தினைப்பிடித்துத்தள்ளியேயடித்தார்
கலங்கினோமென்செய்வோமையா

வசனம்.

தேவரீருத்தாரப்படியே யந்த அரிச்சந்திர மகாராசனைக்கண்டு அபிநயம் பிடித்தோம் மெச்சி வெகுமதி கொடுக்கவந்தான் அதை மறுத்துப் பூச்சக்ரக் குடையைக் கேட்டோம் கொடுக்கமாட்டேனென்றான் எங்கள் மோகந்தீர்க்கச்சொன்னால் எங்களையிப்படித் தூதர்களாலே யடித்துத் தள்ளினான் வெகுவருந்தப்பட்டோம் என்னசெய்வோம் என்னசெய்வோம் விஸ்வாமித்திரமகாரிஷியே.



விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

பதைத்தழுதேங்கிநிற்கும் பாவைநல்லோரேகேளீர்
வதைத்தொழிற்கஞ்சானந்த மன்னனையான்போய்க்கண்டு
கொதித்தெழுஞ்சுடரைப்போலக் கூசாமல்சபிப்பேனென்று
மதித்தவன்வணங்கிவந்தால் மணஞ்செய்துவைப்பேன்வாரீர்.

வசனம்.

கேளுங்கள்பெண்களே கொலைசெய்வதற்கஞ்சாத அந்தஅரிச்சந்திரன்உங்களை யடித்தானல்லவா நல்லது நல்லது அதோநான் புறப்படுகிறேன் வடவாமுகாக்கினியைப்போலச் சீறி யெவ்வளவுந்தாட்சண்யமில்லாமற் சபிக்கிறேன் அதற்குமுந்தி அவனென்னை வணங்கிக்கொண்டால் அவனுக்கே யுங்களைக் கலியாணஞ்செய்து வைக்கிறேன் கூடவே வாருங்கள்பெண்களே.

பொது-விருத்தம்-இ-ம் சாவேரி.

நலமிகுமரிச்சந்திரனெழிற்சபையில்
நடனஞ்சேத்தொழில்முறையெலாங்காட்டி
இலகியவரிசைபெறாமலேதள்ளுண்
டிட்டோலாம்வனிதையர்சொலவே
அலைகடல்நிறைவுலகெலாம்பதற
அரியயன்சிவன்முதலெவர்களுமஞ்ச
நிலைபெறுமந்தக்கோசிகமுனிவ
நிருபன்வந்திருக்கும் நிலைக்குவந்தனனே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக வனத்திலே வந்திருக்கும் அரிச்சந்திரமகாராசனிடத்திற்கு விஸ்வாமித்திர மகாரிஷி வருகிறவிதங்காண்க.

விஸ்வாமித்திரர்-தரு-இ-ம்,மோகனம்-தாளம்-ஆதி.

விஸ்வாமித்திரனானே-மகாதவ-விஸ்வாமித்திரனானே

திசாதிசையிலுள்ளநிசாசரர்முதலாஞ்
சிலாக்கியனேமிகுந்தபலாஷ்டகசங்கனுந்
திக்குகள்கெட்டிடல்நெக்குக்கள்விட்டிட
பக்கெனவுலகையும் திக்கெரித்திடவல
திறமிகுகிழிபடு கனல்நடுவிலிசொரு
திகழ்சதுர்யுகமுகமே மிகுதவமகிமைசெய் (விஸ்வா)
சாருமிவ்வையகரிச்சாரல்நாலுநிலைசயுந்
தவஞ்செய்தமனவலிமெளி தர்மோ-இந்தத்

தாரணியாளரிச்சந்திரனைபேதஞ்செய்ய
  சாமர்த்தியமென்னிடத்திற்பிழை போமோ
ஆரும்நடுங்க அவன்புனைவினையப்புதல்வனை
  அரசைமேருக்கிணைவறம் போமோ-சொல்லும்
அந்தவசிஷ்டனென்றுயிந்த்ரன்சபையிற்சொன்ன
  அசட்டுவார்த்தையாலெந்தம்பகைபோமோ
சிலரிலகியமனைவனுமைமூவர்களானுஞ்
  செப்பவரோவெனக்கிணைசெகத்தினுண்டோமோலும்
காருங்கெடுநீந்தகருங்கடல்வந்தெதிர்த்திட்டாலுங்
  கடுங்கனல்போலெரிப்பேன்கலங்கேனெவருக்காலும்
சீர்த்தனைதாக்கும் பிரயப்பிரசித்த
  விசித்ரசரித்ர சருக்கினைத்தடுக்கவெங்
கடுவிடமெனநெறி கொடுவருசினமிகு
  கனலெதிர்வருபவ ரெவரினியுலகினில் (வில்வா)

அரிச்சந்திரன்-போற்றி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

விரித்தபொற்சடையிலங்க மெய்யெலாம்வெயர்வுசிந்தப்
பிரித்துடன்வருத்தவத்தின் பாக்யரேபோற்றிபோற்றி
தெரிந்திவைவனைங்கவிந்தச் சிறியனலாவதுண்டோ
பருந்தேனுங்கமலபாதம் மகிழுடனருள் போற்றி

விஸ்வாமித்திரர்-வசனம்.

விடுவிடுவிடுவிடடா பாதத்தைவிடடா மகாபாவியானதுரோகி விடடா விடு.

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

யாதொருகுற்றந்தன்னை யடியனான்செய்ததில்லை
தீதறுகோபமின்றி சினந்தென்னையுதைத்ததாலே
பாதந்தொழுந்திடுமேயிந்தப் பழிக்கியான்வந்தேனையா
பேதமாந்தமும்புண்டாகும் பிடித்துச்சரிப்பேன்சுவாமி

வசனம்.

அரிசரி தேவரீர் சித்தத்துக்குக் கோபம் வரும்படியா யடிமையொரு குற்றமுஞ் செய்ததில்லையே அப்படியிருக்கவீணிலே யென்னை மாறிமாறி யுதைத்தீர் அப்படியுதைத்ததினாலே தேவரீருடைய பாதங்கள் நோகுமே அதனாற்றமும்புண்டாகுமே அந்தவருத்தந் தீரத்தக்கதாக நானே சயித்திய வுபசாரஞ்செய்து பாதங்களைப் பிடிக்கிறேன் சுவாமி,



விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

குற்றங்களறியேனென்றுங் கொடுமையாயுரைத்தேனென்றும்
வெற்றியாய்விசித்ரமாக விளம்பினாய்பண்டாநன்றுச்சு
கற்றுவாய்மிர்கக்கூட்டத்தைக் காவல்போல்வதைசெய்தாயே
சுற்றுமிவ்வனத்தையெல்லாஞ் சுட்டெரித்தழித்திட்டாயே.

வசனம்.

ஆமடா துஷ்டா வாயினாலே வின்னுணம் பேசிப்பலுக்கிறுய் பள்ளபள்ளா உன்னைப்போல் ஒருவனையுங்கண்டதில்லை நான்யஞ்சமாபாதகங்களுக்கும் அஞ்சாதவனைப்போல் காட்டிலே இடக்கிற வாய்விடாச் சாதியாகியமிருகக்கூட்டங்களையெல்லாங்கொன்று வரியிலேபோட்டுக் கொண்டாயே இந்தவனத்தையு மெரித்துச்சாம்பலாக்கிவிட்டாயே யித்தோடே விட்டையா போடா அப்புறத்தே.

இதுவும்-விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

தவஞ்செய்வோர்க்குதவியாகத் தழைந்தப்பூத்திருந்தாயித்த
நவமுள்சோலையெல்லாம் நாசஞ்செய்தழித்தாயெந்தன்
புவரிதழ்மாதர்வந்து சங்கீதவிதங்கள்செய்தால்
கவலைகொண்டழுந்தவேங்கிக் கதறவேயடித்திட்டாயே

வசனம்.

இன்னமும் நீசெய்த பொல்லாதவிதங்களைச் சொல்லுகிறேன் கேள் பஞ்சேந்திரியங்களையு மொடுக்கித் தவஞ்செய்கிறரிஷிகளுக்குதவியாக இருக்கிற சோலைகளை யெல்லாமழித்தாய் நான் சிருஷ்டித்து வளர்த்த பெண்களையுமென்னிடத்திற் கருப்பினால் அவர்கள் செய்த ஆடல்பாடல்களைக் கேட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தாமலும் ஸ்திரீசாதிகளென்றும் பாராமலும் அலங்கோலமாயடித்துத் துரத்தினாய் ஆகையாலுன்னைப்பார்க்கினுந் துஷ்டன் இவ்வுலகத்திலுண்டோபோடா.

இராசன்-விருத்தம்-இ-ம்-கலியாணி.

மனுநெறியரசர்க்கெல்லாம் வனவேட்டையாடவந்த
பணுவலின்விதியுமன்றிப் பாவிகுடிகளானோர்
தினமியம்பயிர்களெல்லாஞ் சேதமாக்கிட்டாருமிருகால்
வனமுளமிருகந்தன்னை வதைத்ததாற்பாவமுண்டோ

வசனம்.

கேளுஞ் சுவாமி சுபாவமாக வனவேட்டையடுகிறது க்ஷத்திரியருக்குத் தருமமென்று மனுவிக்கியான சாஸ்திரமிருக்க நாட்டிலுள்ள குடிகள் தாங்களிட்டபயிர்களையெல்லாம் அழித்து

ப்போடுதென்று முறையிட்டால் அந்தமிருகங்களைவதைத்தால்பா பமுண்டா கோபமேன் விஸ்வாமித்திர மகாரிஷியே.

இதுவும்-இராசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

தீராதகோபமேன்மேற் செனிப்பதேன்யானென்செய்தேன்
பேரானமிருகக்கூட்டம் பிரளயசமுத்திரம்போலே
ஆராலுமளவிடாதா யடர்ந்ததிவ்வனத்திற்கொல்ல
தாராளவழிபுண்டாகத் தடுக்குமுள்வனத்தைச்சுட்டேன்.

வசனம்.

கேளும் மகானுபாவரே அடியேனைப்பார்க்கப்பார்க்கத் தீரா த கோபங்கள் மேலிட வேண்டியதென்ன ஒருவராலும் எண்ணி யளவிடக் கூடாததாய் பிரளயகால சமுத்திரம்போல மிருகக்கூட் டங்கள் பெருத்து நாட்டையழிக்க இந்தக்காட்டிலே நிறைந்ததுஅ துகளைவளைத்துக்கொல்லத் தடுத்துக்கொள்ளும்படியாகிய முள்பு தருகளையெல்லாஞ் சுட்டெரித்தேனேயல்லது வேறில்லைசுவாமி.

இதுவும்-இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

வனிதையர் தம்மைநானே வம்பதாயடித்தேனென்றீர்
தனிநெடுங்குடையைக்கேட்டார் தாபத்தைத்தீர்க்கச்சொன்னார்
வினயமொன்றெண்ணிவேறே வெகுமதிகொடுக்கப்போனால்
சினமிகுந்தேசினார்கள் சிறியேனுரத்திவிட்டேன்

வசனம்.

தேவரீரனுப்பின ஸ்திரீகளை அனியாயமாக அடித்தேனென் றநீதத்தை சொல்லுகிறீர் அவர்கள் ஆட்டபாடல்களைக் கேட்டுவெகு மதி கொடுக்கப்போனால் அதைத்தள்ளி பூச்சக்கரக்குடையைக்கே ட்டார்கள் அதுமுறையல்லவென்றால் நங்களைக்கூடி யணையச்சொ ன்னார்கள் சத்தியபங்கமென்று சொன்னால் வாயிலே வந்தபடியே சினார்கள் சபையைவிட்டுத் துரத்திவிட்டேன் இதுதான் நடந்த சேதி விஸ்வாமித்திர மகாரிஷியே.

இதுவும்-இராசன்-விருத்தம்-இ-ம்-சுருட்டி.

வந்ததோர்மிருகக்கூட்டம் வளநகர்நாடிதெல்லாஞ்
சிந்தவேயழித்திட்டாலுஞ் சேனையைவதைத்திட்டாலும்
அந்தமாமாதவரே நின்னுருயிர்தனைக்கேட்டாலும்
நிந்தனைப்படுத்தேன்கொல்லேனீவிட்டதறியேன்சுவாமி

வசனம்

என்னுடைய நாடெல்லாமழித்தாலும் அந்தமிருகங்களைக்கொல் லேன் என்பிராணனைக்கேட்டாலுந்தகாதென்று கோபித்துக்கொள்



ளாமலிருப்பேன் நீருண்டுபண்ணியனுப்பினதென்றறியேன்பொ றுத்துக்கொள்ளவேணும் சுவாமி

விஸ்வாமித்திரர் விருத்தம்-இ-ம்-நாட்டை.

கழுத்தினையறுத்தபின்பு கைதப்புவந்ததென்றால்
பழுத்தநல்லறிவன்னைப்போற் பாரினிலொருவர்க்குண்டோ
அழுத்தமாய்ப்பேசவேண்டா மதாமமேசெய்தாய்நீயும்
வழுத்துமென்கோபம்பொங்கி வளர்வதாற்சபிப்பேன்பாராய்

வசனம்.

கேளடா அடா அதர்மா நீசெய்த காரியமெல்லாம் பொல்லா ங்கென்றுதெரியாமல் நீசமர்த்தியமெல்லாம்பேசிப் புரட்டுகி றாய் இந்த அகங்கார வார்த்தையைவிட்டு நீசெய்கிற காரியங்களை நினைக்கக் கோபமேலிட்டுச் சொலிக்கிறது மனது எரிகிறது ஆர றில்லடா இனிப்பேசினால் சபிப்பேன்.

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

சிறியரானவர்கள்நாளுஞ் செய்கிடும்தீமைதன்னை
அறிவிலாதவரொன்றெண்ணி ஆள்வதுபெரியோர்தன்மை
மறுவிலாவுமதுபெண்கள் வார்த்தையாலென்மேற்கோபம்
நிறைவதுதர்மமல்ல நீர்பொறுத்தருளுஞ்சுவாமி

வசனம்.

தேவரீர் சிருஷ்டித்தனுப்பின பெண்களென்றறியாமல்தான் துரத்திவிட அவர்கள் வந்து உம்முடனே சொன்னவார்த்தையினு லே யுண்டாகிய கோபத்தை சமிக்கவேண்டும் அது எப்படியென் றால் என்னைப்போலுஞ்சிறியோர்செய்தகுற்றங்களையெல்லாம் உம் மைப்போலுள்ள பெரியோர்கள் பொறுத்துரட்சிக்கிறதே கடன் ஆனபடியினாலே கோபத்தைப் பொறுத் தளிக்கவேண்டும் சுவாமி

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

எத்தனைவிதத்திலேநீ யெனக்கிதம்பேசினாலும்
சித்தத்திற்பிறந்தகோபந் தீருமோசபித்திடாமல்
முத்தணிமுலையினாரை மோகந்தீர்த்தாளாவிட்டால்
பெற்றவுன்னைப்பனைப்போற் பெரும்புலையாகச்செய்வேன்

வசனம்.

இதோரொருவார்த்தைசொல்லுகிறேன்இதைமாத்திரங்கேட்டுக்கொ ள் என்பெண்களாகிவந்த இந்த இரண்டு பெண்களையும் விவாகஞ் செய்துகூடினாலாச்சுது இல்லாவிட்டால் உன்னைப்பெற்ற திருச்

சங்கு மகாராசனுக்கு நீச்சத்துவம் வந்து பறையனானதுபோல வு
ன்னையும் புலையனாகச்சபிப்பேன் சொன்னேன் சொன்னேன்.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

அன்னைநீதந்தைநீயே அரியதோர்தெய்வம்நீயே
உன்னையல்லாமலெம்மை யுவந்திரட்சிப்பாருண்டோ
முன்னமென்மாமனார்க்கு முடுகிய சாபந்தீர்த்தாய்
என்கணவனைச்செபித்தா லேற்குமோஆள்வாய்சுவாமி

வசனம்.

அரிகரி தேவரீருக்கிப்படித் தீராதகோபமும் வருமா என்மா
மனாகிய திரிசங்குமகாராசனுக்கு வந்த சாபத்தைத்தீர்த்தீர் இ
ப்போதவர் குமாரனாகிய என்புருஷனைச் சபிக்க மனதுவருமா வுங்
மையல்லாமல் தாய்தகப்பன் தெய்வம் சகலமும்எங்களுக்குவேறே
யுண்டோ கோபத்தைப் பொறுத்து ரட்சியும் சுவாமி.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

அந்தரசொர்க்கந்தன்னி லமைத்திரொன்பாட்டனை
விந்தையாம்வசிஷ்டராலே விளைந்திடுஞ்சாபந்தீர்த்தீர்
தந்தைதாய்நானுமற்றச் சதிருள்ளசுற்றத்தாருஞ்
சந்ததமடிமையாவோம் தயைபுரிந்தாள்வீர்சுவாமி

வசனம்.

என்பாட்டனாகிய திரிசங்குமகாராசாவைச் சபித்த வசிஷ்ட
ருடைய சாபத்தையும் நீக்கி அவருக்கு அந்தர சொர்க்கமொன்று
ண்டாக்கினீர் அப்படிப்பட்ட தேவரீர் அந்த திரிசங்கு மகார
சாவினிட புத்திரனாகிய என்பிதாவைச் சபிக்கிறேனென்று கோ
பிக்கலாமா பொறுத்து ரட்சிக்கவேணும் சுவாமி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-காம்போதி.

அருந்தவமுனிவோர்க்கிந்த வவனியையாளுமன்னர்
திருந்துநல்லுதவியாக ஸ்திரமுடன்வாழ்கவென்றும் (தைப்
பொருந்துமுன்மனதிற்கோபம்பொறுக்காமற்சொலித்தாலத்
பிரிந்திடத்தீர்ப்பாருண்டோ பிழைபொறுத்தருளுஞ்சுவாமி.

வசனம்.

உலகத்திலே துறவறத்தை யடைந்த ரிஷிகளுக்கெல்லாம்இரா
சாக்களாலே எப்போதும் வேண்டிய வுதவிகளுண்டு அப்படிக்கி
ருக்க விருதாவிலே இந்தராசன்பேரிலே கோபஞ் செய்கிறீரே த
போ நிதிகளுக்குக் கோபம் வரலாமா அல்லதுமக்கிப்போதுபிற



தகோபத்தைத்தீர்க்கவொருவரால்ஆகுமா கோபத்தைப்பொறுத்து
க் கிருபைசெய் திரட்சிக்கவேணும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

இதுநல்லசாமர்த்தியந்தா னென்னடாசத்தியகீர்த்தி
புதுமையாயிவனுமிந்தப் புதல்வனும்பசப்புகின்றான்
இதமென்றுநினைத்துநீயு மிரங்குவீர்பொறுப்பீரென்று
மதமுடன்பேசவந்தாய் வஞ்சன்மேல்பொறுத்திடேனே.

வசனம்.

சபாசஉன்னைப்போல்மந்திரியை நான்யாரையுங்கண்டதில்லை
நீபேசுகிறதும் வெகு சாமர்த்தியந்தான் இந்த அரிச்சந்திரன்செய்த
துஷ்டகாரியங்களுக்கு நான் எவ்வளவும் பொறுக்கமாட்டேன் அவ
ன் பெண்சாதியாயிவள் இவளும் இந்தப்பிள்ளையும் பசப்புகிறார்க
ளே இந்தப் பசப்பு வார்த்தைகளை நம்பியோசனை பண்ணாமல்பே
சவந்தாய் நீ போபோ அப்புறத்தே போய்விடு போய்விடு.

இராசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

முன்னமென்றந்தைதன்னை முச்சயாம்வசிஷ்டராலே
துன்னியபுலைச்சாபத்தைத் தொலைத்துநீராண்டுகொண்டீர்
இந்நாளிலெனக்குச்சாப மிடவென்றுநினைக்கலாமோ
புன்னெறிப்புலைச்சிமாரை புணர்வதுந்தகாதேசுவாமி.

வசனம்.

அந்தவசிஷ்டராலே வந்த நீச்சத்துவ மென்னுஞ்சாபத்தை எ
ன்பிதாவுக்குத் தீர்த்திரட்சித்தீர் அவர்குமாரனை அடிமையைச்ச
பிக்க லாமா க்ஷத்திரியனாய்ப்பிறந்துநீச்சஸ்திரீகளைச் சேரலாகாதே
சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

தகாதகாரியமானாலுஞ் சண்டாளகுலத்தில்வந்த
நிகாதமாதர்களானாலு மேவினர்பொறுப்பேனிந்த
யுகாதியாங்கதைகள்சொல்லி யுசப்பியேபசப்புகின்றாய்
சகாதியர்வுயிர்நடுங்கச் சபிப்பேன்மூவர்க்குமஞ்சேன்

வசனம்.

இனிதிரிமூர்த்திகளுக்குப் பயப்படேன் அவர்கள் நீச்சஸ்திரீ
களானாலும் அவர்களையே நீகூடவேணும் யுகம்பிறக்கிறதுக்குமு
தலுண்டாகிய கதைகளைச் சொல்லுகிற யிந்தப் பசப்பு வார்த்தை
க் கிரங்குவேனோ விடாயானால் விடா சபிப்பேன்.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

அன்னியமாதர்தம்மை அருங்கனவதிலு நாடேன்
என்னையொரு தம்பிளந்தே யிரண்டுகூறிடினுமிந்தக்
கன்னியர்தமைக்கூடேன் கருநிறேலிக்குஞ்சாபம்
என்னவந்தாலுங்கொள்வேன் இனியுந்தன்கடாட்சஞ்சுவாமி

வசனம்.

கேளும் சுவாமி யென்னை வாளினாலேவெட்டி இரண்டுகூறுக் கினாலும் உம்முடைய சாபாக்கினியினாலே யெரித்து விட்டாலும் வந்ததெல்லாமனுபவிக்கிறதே யல்லாமல் அன்னியஸ்திரீகளைக்கன விலும் நினையேன் இந்தநீச்ச ஸ்திரீகளைக் கூடேன் அப்பாலுந்தவ ரீருடையகடாட்சம் சுவாமி.

இதுவும்-இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இன்னமோர்வார்த்தைகேளுமென்னரும்பொருள்களெல்லாந்
தன்னையாவாளாகவேன் தரணிதன்னகரம்நாடு
மன்னுமெய்பாக்கியமெல்லாம் பற்றரந்தாச்சொன்னாலும்
சொன்னசொற்பிசகாதேவன் தோஷத்திற்குள்ளாகேனே

வசனம்.

இன்னமொருவார்த்தைகேளும் சுவாமி யென்னிடத்திலுண்டா கிய தெதைக்கேட்டாலும் தடையில்லாமற்கொடுப்பேன் பின்னும் என்னுடைய நாடுநகரம் பண்டி பண்டாரஞ் சகலத்தையுங்கொடுக்க ச்சொன்னாலும் கொடுத்துவிடுவேனேயல்லது பாபத்திற்குமாத்தி ரம் நானுடன்படமாட்டேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்

ஆமிதுசரிநீசொன்ன அருமொழிதனைக்காப்பாற்று
பூமிதன்னகரம்நாடும் பொருந்துபொன்னிதுகளெல்லாம்
தாமதமில்லாமலிவ்வ தையலார்தம்மைக்கூடேன்
நேமமும்பிசகேனென்றாய் நீசொன்னசொல்மறந்திடாதே

வசனம்.

அதுவேசரி அதுவேசரி அரிச்சந்திரமகாராசனே யென்னுடை ய பூமி நாடுநகரம் பண்டிபண்டாரமுதல் சகலமுங்கொடுத்தா விடு வேனேயல்லது இந்த ஸ்திரீகளைமாத்திரம் நான்கூடுகிறதில்லையென் றுசொன்னசொல்லைப் பிசகிப்போகாமல்சொன்னபடி நடத்துமரிச் சந்திர மகாராசனே.



இராசன்-விருத்தம்-இ-ம்-பியாகடை.

தப்புமோசொன்னவார்த்தை சத்யமாயின்னஞ்சொல்வேன்
செப்பியஅந்தமாதர் சேர்க்கையைவிரும்பிடேன்யான்
இப்புவிநகரம்நாடு மெனதரும்பொருளிதெல்லாம்
முப்புரமெரித்தோன்போல்வாழ் முனிவரோயுமக்கேயீந்தேன்.

வசனம்.

ஆம் ஆம் நான்முன்னே சொன்னசொல்லுஞ்சரியே யின்ன மும் சத்தியமாகச் சொல்லுகிறேன் அந்நிய ஸ்திரீகளை யொருக் காலுஞ் சேரேன் என்னுடைய நாடுநகர முதலாகிய சகலபாக்கிய மும் உமக்கே தந்துவிட்டேன் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-தோடி,

பாரையாளரசர்க்கெல்லாம் பதியெனுமரிச்சந்த்ராவுன்
பேரையும்நினைக்கில்வார்த்தைப் பெருமையுஞ்சத்யம் ஞாயம்
நீரையுன்கையாலள்ளி நின்னரும்பொருளையெல்லாந்
தாரைவார்த்திட்டாலெந்தன் தளர்மனமகிழ்ச்சியாமே.

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே உம்முடையபேரையும் உம் முடையவார்த்தையின்பெருமையும் நினைத்தால் ஒன்றும்பிசகில்லை யெல்லாஞ் சத்தியமாகவே யிருக்கின்றது ஒருதுளி சலத்தையள் ளி தாரைவார்த்துக் கொடுத்தால் அப்போதும்முடைய பாக்கியமெ ல்லாமென்னதென்று சந்தோஷமடைவேன் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

இந்தநற்சென்மந்தன்னி லினியொருமாதர்தம்மைச்
சிந்தையிலெண்ணேனிந்தத் திருநாடுநகரிதெல்லாஞ்
சுந்தரம்ஆள்வீர்தந்தேன் தாரைநீரேற்றுக்கொள்ளும்
அந்தரத்தமரர்மற்றிவ் வவனியுமறியச்சொன்னேன்

வசனம்.

கேளும் சுவாமி யெடுத்த இந்தசென்மமுள்ளவரைக்கும்பரஸ் திரீகளைக்கூடுகிறதில்லை யென்னுடைய நாடுநகரம் வஸ்திரபரணம் பொக்கிஷம் யானைசேனை பரிவாரம் சகலமும் உமக்குத்தந்துவிட் டேன் இதோதாரைவார்க்கிறேனெடுத்துக்கொள்ளும் இதற்குச்சா ட்சி தேவதைகள் இந்தபூமி யிதற்கொரு சந்தேகமுமில்லைசுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

தவமுனியோமேமற்றத் தவறிலாச்சிஷ்யமோநீர்
குலமுழுதுமிர்தக் கொற்றவனமக்கேதந்தான்

திவலொளிபொன்னுஞ்சேனை செறிபலவளங்களெல்லாம்
தவறிலாவிஸ்வாமித்திரர் தாங்கொண்டாரென்றுரைப்பீரோ

வசனம்.

ஓ சோதவமுனிவர்களே ஓ கோசிஷ்யர்களே இந்த அரிச்சந்திர மகாராசனுடைய நாடுநகர முதலான சகலபாக்கியமும் நமக்கேதாரைவார்த்துவிட்டான் ஆகையாலயோத்தியாபுரி நாடுநகரம்யானை சேனை பரிவாரஞ் சொர்ணங்கள் இரத்தினங்கள் சகலமும் நிரம்பிய ராச்சியத்தை விஸ்வாமித்திரமகாரிஷி கைக்கொண்டாரென்று ஆர்ப்பரித்து இரைச்சலிடுங்கள் இரைச்சலிடுங்கள் தவமுனிவர்களே.

தவமுனிவர்கள்-விருத்தம்-இ-ம்-ஆரபி.

அயோத்திராடசு வாழ்வு பதிலுள்ளயானைசேனை
தயாராகப்பரிசனங்கள் தனமுதல்பாக்யமெல்லாஞ்
சயோத்தியராசமன்னன் றானைவார்த்திட்டான்மெய்யாய்
வியாகுலமழிந்துநாமே மேதினியாள்குவோமே.

வசனம்.

ஓகோகோ எங்களுக்குக்கிடைத்த பாக்கியமே பாக்கியம் இந்த அயோத்தியாநாடு நகரம் யானை சேனை பரிவாரங்களையும் நாங்கள் யாளத்தக்கதாகத் தாரைவார்த்துக்கொடுத்தான் நாங்கள்போய் ராசாங்கம் பண்ணுவோம் எங்களுடைய பாக்கியமே பாக்கியம்.

இதுவும்-முனிவர்கள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சூரியகுலத்தில்வந்த தோன்றலேயரிச்சந்திராவுன்
பேருயர்பெருமைகீர்த்தி பெருத்திடுஞ்சத்யஞானம்
ஆருனக்கொப்பாவார்களரசாட்சியதனையிந்தச்
சாரமாமுனிவர்க்கீந்தாய் பொசுனைப்போற்காணேனே

வசனம்.

சூரியகுலத்தில்வந்த அரிச்சந்திர மகாராசனே சத்தியத்திலேயுங்கீர்த்தியிலேயும் பெருமையிலேயும் ஞானத்திலேயும் உனக்குச் சமானம் ஆராவார்கள் ஒருக்ஷணமாத்திரத்திலே யுன்னுடைய அரசாட்சியாகிய சகலபாக்கியமும் தபோநிதியாகிய இந்தவிஸ்வாமித்திர மகாரிஷிக்குத் தாரைவார்த்துவிட்டாயே சபாசு சபாசு ஆர் உன்னைப்போலார்செய்வார் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கொடைதந்தேனென்கொடித்தந்தேன்யான்குறித்தாளும்
படிதந்தேனிப்பதிதந்தேனென்பரிவாலே



முடிகொண்டாளும்போதாம்பெருகீர்முனிராட்டில்
அடிதங்கேனென்மனைவி மகனுடன்யானுமகல்வோமே

வசனம்.

கேளும்சுவாமி விஸ்வாமித்திர மகாரிஷியே யென்னுடைய சதுரங்கபதாதிகளையும் நாடுநகரம் சகலசாம்பிராச்சியமும் தந்துவிட்டேன் இதோ இந்த முத்திரைமோதிரத்தையும் வாங்கிக்கொள்ளும் ரிஷிகளுக்குத்தாரைவார்த்த இந்தப் பூமியிலேயொரு நிமைப்போதாவது நிற்கக்கூடாது நானுமென் பெண்சாதி பிள்ளையுமாக அப்புறத்தே போய்விடுகிறோம் உத்தாரவு கொடும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

அரசநீதந்தாய்மெய்யே ஆள்வதற்கழகுவேண்டுந்
திருமுடிமகுடமாலை திகழுங்குண்டலங்கள்மற்றும்
பரிவுளவலயம்வாளும் பணிகளுமுள்ளதெல்லாம்
அரிவையுஞ்சுதனும்நீயு மளித்திட்டால்மகிழ்ச்சியாமே

வசனம்.

சரிதான் அரிச்சந்திரமகாராசனே இராச்சியத்தைக் கொடுத்தாய் சந்தேகமில்லை இராசாங்கத்துக்கு வேண்டிய சிறப்புவேணுமே ஆகையால் உன்னுடையகிரீடகுண்டலம் புசகிருதி காதுவளையம் உடைவாள்சகல ஆபரணமும் உன்னிடபெண்சாதிபிள்ளையவர்களுடைய ஆபரணமுங் கொடுத்தால் சந்தோஷத்தையடைவேன் மகாராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

மாதுடன்மகனும்நானும் மலரடிதொழுதுபோற்றி
ஈதொருபொருளோநல மென்னத்தின்படியேயீவேன்
இதருமுனிவரோநீர் சித்தம்வைத்திதைக்கைக்கொண்டு
நீதிமேசரித்தநாட்டை நீங்களேவிடைதந்தாள்வீர்

வசனம்.

தேவரீர் சித்தத்தின்படியே சகல ஆபரணங்களையும்கொடுக்கிறோம் இந்நாடும் இனியாகிலும் உத்தாரங் கொடும்சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்-ஆனாற்போய்வாருங்கள்.

இராசன்-வசனம்.

அப்படியே போய் வருகிறேன்சுவாமி வாருங்பெண்ணே சந்திரமதி அப்பா அடா தேவதாசா இந்தபட்டணமேவிட்டுப்போவோம் வாருங்களப்பா.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே மறந்து போனேன்மறந்துபோனேன் ஓடிவாரும் ஓடிவாரும்.

அரிச்சந்திரன் வசனம்-வந்தேன் வந்தேன்சுவாமி

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டிகம்

பூமியைத்தந்தாய்பூண்ட பொற்பணியெல்லாந்தந்தாய்
நாமினியுனைப்புகழ்ந்து நாட்டவுமெளிதேயல்லால்
பூமலர்க்குழலாளுந்தன் பூவையுமகனுந்நீயும்
சேமமாயுடுத்தவஸ்திரம் நெறிப்படிதருகுவாயே

வசனம்.

கேளும் மகாராசனே சகலசாம்பிராச்சியமும் கொடுத்தீர் நீங்கள் தரித்த ஆபரணங்களையுங்கொடுத்தீர்கள் மூன்றுபேரும் உடுத்தியிருக்கப்பட்ட வஸ்திரத்தையுங் கொடுக்கவேணும் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கண்டா.

ஆனாப்போயிரப்போர்வஸ்திரம் அபிமானபங்கமாகும்
சாருமுன்சரணமல்லாற் றஞ்சம்வேறில்லையையா
தூரமாம்வேறூர்நாட்டைத் தொடர்ந்துபோயிரக்கவேணும்
தீரமாயுரைத்திடாமற் சித்தம்வைத்தருளும்சுவாமி

வசனம்.

அரிகரி மானபங்கமாகுமே வஸ்திரத்தைக் கொடுத்துவிட்டால்இரக்கவேணுமானாலும் அன்னியதேசங்களதிகதூரமாகவிருக்கின்றதே வஸ்திரமில்லாமலெப்படிபோவோம் அபிமானபங்கமில்லாமல் கிருபைசெய்து ரட்சிக்கவேணும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

மைந்தனும்மாதுநீயும் மருவியேயுடுத்தவாடைக்
கந்தலையெனக்குத்தந்தால் காஷாயவஸ்திரந்தன்னை
சிந்தைநான்மகிழ்ந்துமூன்று சேலையாக்கிழித்தேயீவேன்
கந்தரவழகுண்டாகுங் கசக்குமோசொல்லிடாயே

வசனம்.

மகாதபசைச்செய்து பேர்பெற்ற நானுடுத்தியிருக்கிற இந்த காஷாயவஸ்திரத்தை மூன்றுதுண்டாகக் கிழித்துத் தருகிறேன் நீயும் உன்பெண்சாதியும் பிள்ளையுங் கட்டிக்கொண்டிருக்கிற அந்தக்கந்தத்துணியைக்கொடுத்துவிடுங்கள் இந்தக்காஷாயவஸ்திரத்தை யுடுத்திக்கொண்டால் கெந்தருவர்களைப்போல அழகும் சொகுசும் பிறக்கும் அதற்கென்ன கசக்கிறதோ சொல்லும் பிள்ளாய் சொல்லும்.

அரிச்சந்திரன்-வசனம்.

ஆனாலந்தகாஷாயவஸ்திரத்தைப்பாகிலுங் கிழித்துக்கொடும் சுவாமி.



விஸ்வாமித்திரர்-வசனம்.

பட்டுவஸ்திரத்தைக்கொடுத்துப் பழங்கந்தத்துணியை வாங்கிக் கொள்ளுகிறதும் என்னுடைய கர்மவசந்தான்கொடுத்துத்தொலையப்பா தொலை.

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி அப்பா அடா தேவதாசா காஷாயவஸ்திரத்தை யுடுத்திக்கொண்டு நீங்களுடுத்தியிருக்கிற வஸ்திரத்தைவிஸ்வாமித்திரரிஷிக்குக் கொடுத்துவிடுங்களப்பா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

தவப்பலந்தன்னில்மிக்க தருமறற்பொருளாய்வந்த
தவரிலாவிஸ்வாமித்ர ராயமாமுனியேபோற்றி
அவத்தினிலெங்கள்பூமி ஐஸ்வரியம்வஸ்திரமெல்லாம்
பவத்தினிலொழித்திடாமற் பற்றிக்கொண்டதுதான்பாக்கியம்

வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி எங்கள் பூமிமுதலாகிய சகல ஐஸ்வரியமும் நாங்களுடுத்திய வஸ்திரமுதலாகியதுகளும் வீணிலே தானைவார்க்காமல் தேவரீரைக்கொண்டுதான் எங்கள் பாக்கியஞ் சுவாமி.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

ஆண்பெண்ணிரண்டினுள்ளே யபிமானமதனைக்காக்க
மாண்பெறுபுவியில்மூடும் வஸ்திரமேதில்லையாகும்
சேண்புகழ்நகரநாடு திகழ்வளமெல்லாங்கொண்டு
நாண்மவஸ்திரங்கொள்ள நாங்கள்செய்ததுபாக்கியம்

வசனம்.

கேளும் சுவாமி எங்கள் நாடுநகர முதலாகிய சகலபாக்கியமுங்கைக்கொண்டு நாங்கள் உடுத்தியிருக்கிற வஸ்திரத்தையுங்கைக்கொண்டீரே அதுதான் எங்கள் பாக்கியம் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அப்புறத்தேபோடா பிஞ்சிலே பழுத்த பயலே.

தேவதாசன்-வசனம்.

தூரத்தேபோய்விடுகிறேன் கோபத்தைப்பொறுத்திரட்சியுஞ்சுவாமி

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

மண்ணையுமுமக்கேதந்தேன் வாழ்வையுமுமக்கேதந்தேன்
எண்ணருமெனது பாக்கியம் யாவையுமுமக்கேதந்தேன்
பெண்ணவிள்மயிலாளிந்தப் பேதையும்மகனும் யானும்
தன்னுடன்னியநாடேக நல்விடைகொடுப்பீர்சுவாமி

வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி தேவரீர் இஷ்டப்பிரகாரம் என்னுடைய நாடு நகரம் வஸ்திராபரணம் சகலபாக்கியமுங்கொடுத்துவிட்டேன் இனியென் பெண்சாதியும் பிள்ளையும் நானும் அன்னியதேசங்களிலேபோய்ச் சீவனஞ் செய்யத்தக்கதாகச் செலவுகொடும் விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனால்சுகமாய்ப் போய்வாரும் அரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்-வசனம்.

பெண்ணே சந்திரமதி அப்பா அடா தேவதாசா இனிநாமன்னியதேசங்களுக்குப் போவோம் வாருங்களப்பா.

தேவதாசன்-வசனம்.

சீக்கிரமாய்ப்போவோம்பிதாவே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே இன்னமொருகாரியமறந்துபோனேன் ஓடிவாரும் ஓடிவாரும்.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி சுவாமி இதோ வந்தேன் என்னமறந்துபோனீரோ அதைத் தெரியச் சொல்லும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

மறந்தவருடைமையிந்த மண்ணினில்மன்னர்க்கெல்லாம்
சிறந்ததாதகையோதர்மந் தீர்ந்திடாதானோசொல்வாய்
நிறைந்திடுயாகஞ்செய்ய நிறையானைமேற்கவண்கல்
எறிந்தளவீந்தபொன்னை யிப்போதேதருகுவாயே

வசனம்.

அல்லகாணும் ஓய்அரிச்சந்திர மகாராசனே இந்தப்பூமியிலிருக்கிற இராசாக்களுக்கெல்லாம் ஒருவர் தங்களிடத்திலே வைத்து மறந்துபோன உடைமைகளெல்லாம் அவர்களதுதானே அவர்களுக்குச் சிறப்போ தருமத்துக்கு விரோதமாச்சுதே அரியானையின்



பேரில்நின்று கவண்கல்லெறிந்தளவாம் கொட்டினபொன்னை நம்மிடயாகத்துக்காக வும்மிடத்தில் நான்வாங்கி அடைக்கலமாகவைத்தேனே அந்தப்பொன்னைக் கொடுத்துவிட்டு அப்புறம்போம்பின்னாய்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டிகம்.

நாடுநகரமற்றநால்வகைச்சேனைசெம்பொன்
ஆடையாபரணமெல்லாம் ஆவலாய்த்தாரைவார்த்தேன்
கொடியர்யானைமீது குதித்தகல்லெறிதூரம்
தேடியபொன்வேறிங்கே நினைத்ததாற்றருவாருண்டோ

வசனம்.

கேளும் சுவாமி விஸ்வாமித்திர மகாரிஷியே என்னுடைய நாடு நகரம் யானைசேனையும் தனகனவஸ்துவாகனாதி சகலபாக்கியமும் தேவரீருக்கே தாரைவார்த்துவிட்டேன் அப்படியிருக்கநானந்த நாட்டையாளுகிறபோது என்னிடத்தில் தானம் வாங்கினபொன்னை பொக்கிஷசாலையில்தானே வைத்திருக்கின்றதை யாத்திரைக்காகக் கொடுக்கச்சொன்னால் நானெங்கே யிருந்துகொடுப்பேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

தனைவார்த்திட்டாயுந்தன் தரணிதன்னகராடு
சாருமுன்பாக்யமெல்லாம் சந்தேகமில்லைமன்னா
ஆனாநீமோசஞ்செய்ய அஞ்சாமற்பேசவந்தாய்
யாரறியாதோஅந்தப் பணமில்லையென்றாற்போதும்

வசனம்.

கேளும் அரிச்சந்திர மகாராசனே யென்னைத்தானேயிப்படி மோசஞ்செய்வாயென் றறியாமற்போனேன் உன்னுடைய நாடுநகர முதலாகிய பாக்கியங்களைத்தாரை வார்த்ததுமெய்யே யிப்போது உன்னுடைய குணத்தைப் பார்த்தால் அதைக்கூட இல்லையென்று சொல்லுவாய் போற்காண்கிறது நீ எனக்குக் கொடுத்ததானம் உன்னிடத்தி லிருக்கிறதை இந்தலோகம் அறியாதா இல்லையென்றுகிலும் சொல்லிவிடும் அதுபோதும் மகாராசனே.

இதுவும்-விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-தோடி.

எனக்கென்னபெரிதோநீதானேக்கமேன்பிடித்தாய்போபோ
தினக்கருமன்குலத்தின்முன்னோர் நெறியிசகார்களையோ
கனக்கடும் துயரம்வேண்டாம் கடுகேயில்லையென்றால்
உனக்கிதுசகாயமாகு மொழியுமென்கடனுமப்பா

வசனம்.

ஐயையோ சுவாமி விருதாவிலே இசைப்படுகிறாய் உன

கிருமுன்னிருந்த வுங்கள் குலத்தோர்களெல்லாம்நீதி தவறாதிருந்தார்கள் அதைக்கெடுக்க நீயொருவனேற்பட்டாய் இருக்கட்டும் மென்கடனுந்தீரவேணும் உன்மனேதுக்கமுமொழியவேணும் அதென்னவென்றால் சுனுவிலேயிருக்கிறது உன்னைக்கண்டதார் உன்பொன்னைக்கண்டதார் என்னிடத்திலில்லை போவென்றால் விட்டுவிடுகிறேன் அதுதான் காரியமகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

தூண்டிவிட்டாட்டினாலுஞ் சொன்னசொல்மறுத்தப்பேசேன்
பூண்டவுன்கடனைத்தீர்க்கப் பொருளெனதன்கையிலில்லை
நீண்டதோர்அன்யதேச நெறிசென்றங்கிரந்தேயீவேன்
வேண்டும்மாரானைக்கூட்டி விடுத்துகைக்கொள்வீர்சுவாமி

வசனம்.

உயிர்க்கழுகைப்போலும் வாதனை செய்யாநின்ற தூண்டின் முள்ளிலே மாட்டியாட்டினாலும் பொய்பேசேன் ஒரு ஆளைமாத்திரங்கூட அனுப்பினால் அன்னியதேசங்களிலேபோய் யாசகம்பண்ணியாவது வும்முடைய பொன்னைத் தருகிறேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-கும்பகாம்போதி.

குதிரைசெத்ததுமல்லாமற் குழிதோண்டவேலையொன்று
நிதியையுங்கொடுத்தோராளை நின்பின்னேகாவல்வைக்க
விதியெனக்குண்டோபோபோ வீண்வார்த்தைபேசவேண்டாம்
சதியிதுசெய்தாய்நீதான் சத்தியமழித்திட்டாய்ய.

வசனம்.

நல்லகாரியஞ்செய்தாய் குதிரைசெத்ததுமல்லாமல் குழிதோண்ட ஒரு ஆளாஎன் பொன்னைக்கொடுத்ததுமல்லாமல் ஒருசம்பளக்காரனையும் பின்னாலே காவல்வைக்கவேணுமல்லவா அப்படிப்பட்டவிதி யெனக்கில்லை இப்படிப்பட்ட வீண்வார்த்தை யிங்கே பேசவேண்டாம் அப்புறத்தே போய்விடு என்னைச்சதிசெய்ததுமல்லாமல் சத்தியமுந் தப்பிப்போனாய் நல்லகாரியம் நல்லகாரியம்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கண்டா

நாலுவேதங்களாறு சாத்திரவில்மெய்ஞ்ஞான
சீலமுங்கைக்கொண்டோங்கும் திறத்துயர்முனியேபோற்றி
பாலன்யானன்னைநீயே பரமுந்நீயடிமைநானே
காலவேபொறுத்தென்னோடுந் தரகனையனுப்பாய்சுவாமி

வசனம்.

தேவரீரொருதாய் அடியேனொருபிள்ளை தேவரீரொரு



தெய்வம் அடியேனொருஅடிமை இப்படிப்பட்ட என்பேரில் தேவரீர்கோபஞ்செய்யலாமா வேதசாஸ்திரமெய்ஞ்ஞான சிகாமணியாகிய விஸ்வாமித்திர மகாரிஷிகளேயிந்த வேழைக்கிரங்கி யொருதரகனைமாத்திர மனுப்பிவைக்கவேணுஞ்சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

ஒருபகலளவுமெந்த வுடைமையாய்வைத்தபொன்னைக்
திருகுசெய்தகளுல்யானுந் திரவேபொறுப்பதில்லை
கருதுமுன்விசனத்தால சுருணையாய்ச்சொல்லுகின்றேன்
இருபதுநாளிற்றந்தா விட்டோதான்விடுவேனே

வசனம்.

கேளும் பிள்ளாயரிச்சந்திரமகாராசனே நம்முடைய வுடைமையை அபகரித்துக் கொண்டு நீ செய்த மோசந்தான் அறிவுங்கருமமோசயம் நீ விசனப்படுகிறதைப்பார்த்தால் பரிதாபமாயிருக்கிறது இருபது நாளிலே கொடுக்கிறதானால் இப்போதே ஆளனுப்புகிறேன் சம்மதியானால் சொல்லு மகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-நன்னியாசி.

காசிக்குமிசந்துஞ்செல்லக் கடுந்தூரநெடுநாட்செல்லும்
மாசிலாவல்லூர்க்கேகி மாநிதிதரவேணும்
பூசித்முனிவரேநீர் பொறுக்குநாள்நாற்பத்தெட்டில்
மாசிலாவுமதுபொன்னை வளமுடன்சேர்ப்பேன்சுவாமி

வசனம்.

கோபமில்லாமற்கேளுஞ் சுவாமி இங்கே சமீபத்தில் கிடைக்கிறதல்ல காசிப்பட்டணத்திற்குப்போய் பொன்சம்பாதித்துவுமக்குக் கொடுக்க வேணும் ஆகையால் அந்தக்காசிப்பட்டணத்திற்கும் இதற்குந் தொலை தூரமாகையால் இராசகெடுவு நாற்பத்தெட்டுநாள் கொடுக்க வேணுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓய் அரிச்சந்திர மகாராசனே யொருத்தருக்குங்கடன்வாங்குகிற பேர் இருக்கிற சத்தோஷகுணம் கொடுக்கிறபோதிராது ஆனபடியினாலிந்த கெடுவிலே தப்பாமற் கொடுப்பீராக சத்தியமாகச் சொல்லும் பார்க்கலாம்.

அரிச்சந்திரன் விருத்தம்-இ-ம்-முகாரி.

ஆகமம்பொய்த்திட்டாலும் அருமறைபொய்த்திட்டாலும்
வேகமாமுனியேயெந்தன் மெய்யுரைதவறாதையா

ஆனையும்விந்தராவிலருமபொருள்கொடேனேயாகில்
சொகாம்பரதாரத்தின் துரோகியாவேன்சுவாமி

வசனம்.

வேதசாஸ்திரங்க ளெல்லாம் பொய்த்திட்டாலும் அடியேன் ஒரு பொய்வார்த்தைசொல்லமாட்டேன் இந்தநாம்பத்தெட்டுநாளில் தேவரீருக்குச் சொன்னபடி பொன்னைக் கொடாமற் போவேனேயாகில் பரதாரத்துரோகியாவேனென் றுத்தரவு கொடுஞ் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

நல்லது அப்படியே போய்வாரு மரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

வாரும்பொனே துபிரணைபதமான சந்திரமதி வாடா அப்பா தேவதாசா இனிநாம் போவோம் வாருங்கள்.

தேவதாசன்-வசனம்.

இனியாகிலுஞ் சீக்கிரமாய்த் தொலைந்துபோய்விடுவோம் வாருமெனது பிதாவே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே மறந்துபோனேன் மறந்துபோனேன் ஓடிவாரும் ஓடிவாரும்.

அரிச்சந்திரன்-வசனம்.

சுவாமி சுவாமி இதோ வந்தேன் இதோவந்தேன் மறந்துபோனதைத் தெரியச் சொல்லும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-சாவேரி

நாடுநகரம்நீயளித்தாய் நான்போயந்தநாடாளக்
கூடுங்குடிகள்மந்திரிகள் குறிக்குஞ்சேனைக்காசெல்லாம்
நாடிவணங்கியிருப்பாரோ நம்மையவர்கள் நிவாரோ
நீடுமெமைச்சிங்காதனத்தில் நிறுத்திவருவாய்நினைமன்னா

வசனம்.

நீர்கொடுத்தநாட்டை நாஞளவேணுமென்று அயோத்தியாபுரிக்குப்போனால் என்னையாரிவர்கள் ஆக்ஞையால் நீருங்கூடவே வந்து சகலரும் வணங்கிச் சிங்காதனத்திலே வைத்துப் பட்டாபிஷேகஞ் செய்வித்து பிற்பாடு போம் பின்னாய் அரிச்சந்திரமகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே செய்கிறேன் வாரும் போவோம் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆடா சிஷ்யா மகாமாயசாலி ஆடா மகாமாயசித்தா ஓய்ரிஷிக்கூட்டங்களே புலித்தோல் மான்தோல் தருப்பை சமிதைமுதலா



யெதுவ ளெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள் நாமயோத்தியாபுரியைப் பட்டங் கட்டிக்கொள்ளலாம் வாருங்கள்

மகாமாயசித்தன்-வசனம்-தம்பி-அடாமகாமாயசாலி

மகாமாயசாலி-வசனம்-என்டா-அண்ணே

மகாமாயசித்தன்-வசனம் தம்பிடஐயர்போகிறஇடமுனக்குத் தெரியுமா.

மகாமாயசாலி வசனம்-எனக்குத்தெரியாது அண்ணே.

மகாமாயசித்தன்-வசனம்-ஐயனாக்கமுவிக்குளிப்பாட்டி சயாதியிலே வைக்கப்பேகிறார்க ளப்பா.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அடத் தாயோழி செங்கால்ஞானம் பண்ணிவைத்துச் சிங்காதனத்தில் வைக்கப் போகிறார்களென்றுசொல்லடா துஷ்டப்பயலே

இதுவும்-விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆர்சானும் ஓய்மந்திரி நமக்கொரு இரதங் கொண்டுவரச்சொல்லும் இந்த ரிஷிக்கூட்டங்களுக்கெல்லாம் குதிரைகள் யானைகள் கொண்டு வரச்சொல்லும்.

மந்திரி-வசனம்.

அப்படியே கொண்டுவரச்சொல்லுகிறேன் சுவாமி

விஸ்வாமித்திரர்-வசனம்

ஓய் ரிஷிக்கூட்டங்களே நானிதோ இரதத்தின்பேரி லேறுகிறேன் நீங்க ளெல்லோரும் யானைகுதிரைமேலேறிக் கொள்ளுங்கள்

விஸ்வாமித்திரர்-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

பட்டாபிஷேகம்நாம்கட்டிக்கொள்வோம்-நீங்கள்
பயணம் புறப்படுங்கள்
அட்டாளந்தசத்தநிபெரிதிரோவந்து
அடிகட்கெதிரேநின்றுமுடிகள்வணங்கஇன்று (பட்டா)
மான்தோல்கலைத்தோல புலித்தோல்முதலான
வஸ்திரங்களை யெடுங்கள்-நீங்கள்
வழக்கமாய்க்கொடுக்கின்ற அவிர்ப்பாகமக்கினிக்கு
வரிசையுடன் கொடுங்கள்
வான்படாந்தமதிரங்கிர்க்குஞ்சுத்தியா
வர்த்தனத்தைத் தொடுங்கள்-நல்ல
மார்க்கமிது நமக்காதாரமாச்சுது
வாயாரவாழ்த் திடுங்கள்

தேன்மொழிச்சந்திரமதி புத்திரனுடன்
திசமுடியரிச்சந்திர பூபனுமருகவே (பட்டா)

பொது-விருத்தம்-இம்-கண்டா.

வஞ்சனையால்நகரமுடனுடுவாழ்வும்
வளமானபாக்கியமெல்லாம்வாங்கிக்கொண்டு
பஞ்சையைப்போல்மனைவியுடன்மகனுங்கூட
பயந்துவரஅரிச்சந்திர மன்னன்பாரில்
அஞ்சிநடைநடந்துவர அயோத்திநாட்டை
யரசாள்வனென்றுவிஸ்வாமித்திரன்தேர்மேல்
மிஞ்சிடவேமுடன்வரவே கண்டுவாடி
மிரண்டுமுதுநகரிலுள்ளோர் மெலிகின்றாரே.

வசனம்,

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திரர் சகலபாக்கியங்களையும் பறித்துக்கொண்டு பட்டாபிஷேகம்பண்ணிக்கொள்ள தேரேறி வருகிறதையுஞ் சந்திரமதியுந் தேவதாசனும் பஞ்சைகளைப்போலவ ர அரிச்சந்திர மகாராசன் கால்நடையாய் வருகிறதையும் ஊரிலுள்ளசெனங்கள் கண்டு பிரலாபிக்கிற விதங்காண்க

அயோத்தியாபுரியிலுள்ள பிரசைகள்பிரலாபிக்கிற-தரு

இ-ம்-கண்டா-தாளம்-ஆதி

வெற்றிரதமேறிவனவேட்டைக்குப்போய்நாட்டை
விட்டுவிதிதானோதலை — விதிதானோ
பற்றியெரியுதேகண்ணால்பார்க்கவுங்கூடுமோவையோ
பரிதாபம்இந்த — பரிதாபம்
மாயவிஸ்வாமித்திரன்செய்தவஞ்சனைதகுமோவையோ
மதிகேடோபொல்லா — மதிகேடோ
தாயுந்தந்தையும்நீயேசகலமும்நீயென்றிருந்தோம்
சதிசெய்தாய்நல்ல — சதிசெய்தாய்
கல்லுங்கரையுமிந்தகபடமாய்விஸ்வாமித்திரன்
கருத்திரங்காதோ ஐயோ — தெய்வமே
செல்லும்வழியில்ரத்னஞ்சிந்துமேயிவர்நடந்தால்
சிவக்குதேபாதங்களையோ — தெய்வமே
நல்லவராயுள்ளவர்க்குநடுவாயிராதோ தெய்வம்
நகைத்துதைதையோஅரிகரி — தெய்வமே



மெல்லிசந்திரமதிக்கிந்த விதியும்வருமோஓகோ
மேதினிபொறுமே அய்யோ — தெய்வமே
சோதிமணிமுடிகாணோம் அலங்கியகுண்டலங்காணோம்
சூழ்வினையைக்கண்டோம் அய்யோ — தெய்வமே
ஓதுபுசகிரிநிகாணோம் உடைவாளதனைக்காணோம்
உற்றஆடைதன்னைக்காணோம் — தெய்வமே
சொர்னப்பட்டுவஸ்திரம்போய்த் துண்டுதுண்டாய்க்கிழிந்தகந்தை
துலங்கவுடுப்பாரோஅய்யோ — தெய்வமே
என்னசதிசெய்தானிந்தப்பாதகவிஸ்வாமித்திரன்
இப்படிசெய்வாருண்டோ — தெய்வமே
தலைவனிருக்கச்சந்திரமதியம்மனுக்குத்
தாழ்வுவரலாமோ அய்யோ — தெய்வமே
உலகையாளுந்தேவதாசன்உருகியே நடந்துவர
ஒப்புமோஆருக்குமையோ — தெய்வமே

குடிகள்-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

சாம்பலைப்பூசிச்சடைதனைவளர்த்துத் தவஞ்செய்யுஞ் சன்னசிக்கூட்டம், பூம்பொழில் வனத்தி விருப்பதுவிட்டுப் புனிதமாமயோத்தியாண்டிடவே, தாம்வருவதுமெங்களையாளுஞ் சத்தியவரிச்சந்திரமகிபா, தேம்பிநீநடக்கமனைவியுமகனுந் திகைத்திடக்காண்பதும் விதியோ.

வசனம்;

கேளும் எங்களாண்டவராகிய அரிச்சந்திரமகாராசனே சந்திரமதியம்மனும் இந்தக்குழந்தையுந் துக்கமடைந்து பின்னேவரத் தேவரீர்கால்நடையாய் நடக்கவும் நாங்கள் காணலாச்சுதே காட்டிலேயிருக்கிற இந்த சந்நியாசிக் கூட்டங்கள் நாட்டை யாளவருகிறதும் அதைநாங்கள் பார்க்கிறதுக்கும் எங்கள்தலைவிதியோஐயையோ அரிகரி அரிகரி.

அரிச்சந்திரன்-விருத்தம்-ஸ்ரீராகம்.

ஈங்கிடவேவண்டாமென்னைக் கருதியேயிவர்சொற்கேட்டுத்
தூலங்கலேயிருப்பீரொந்தன் துரைத்தனமிவரேசெய்வார்
விலகிடுபிவரைநாளும் விளம்புமென்சத்தியவார்த்தை
கலந்திடாவண்ணங்காருங் கடன்முறைவாங்கொடுப்பீர்

வசனம்.

நீங்கள்விசனப்படுவதில் காரியமில்லை யேனென்றால் நான் மனப்பூர்த்தியாய் இந்தவிஸ்வாமித்திர மகாரிஷிக்கு என்னுடைய ராஜ்ஜிய முதலாகிய துகளையெல்லாங் கொடுத்துவிட்டேன் அவரே துரைத்தனஞ் செய்வார் அதைக்குறித்து நீங்களெனக்கொருவரங் கொடுக்கவேணும் அதாவது அவர்சொல்லுக்கு மாறுபாடில்லாம ல் நடக்க வேணும் பிரஜைகளே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

எதுகாணரிச்சந்த்ரா நீ யேளிதமாகவென்னை
யேழைதனக்குடிகளாலே பேசவுமிழுத்துவிட்டாய்
நீதயசாலிமெய்யே நிமிஷத்தில்மகுடஞ்சூட்டி
மேதினியாளச்செய்த்த விரைவுடனடர்த்திடாயே

வசனம்.

ஓய் அரிச்சந்திரமகாராசனே யென்னை யுடாயபாயமழைத்து வ ந்து இந்தப்பட்டணத்துக்குடிகளால் என்னை நிந்திக்கச்செய்தாய் இருக்கட்டும் நீசொன்ன சொற்படி யெனக்குப் பட்டாபிஷேகஞ் செய்துசீக்ரமாக நீபட்டணத்தை விட்டு அப்புறம் போய்விடுமகா ராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

சூதுவஞ்சனை துரோகம் சூடுக்குறுடிசொற்பேசேன்
தீதிலாக்குடிகளுந்தன் செப்புநல்லேவல்கேட்பார்
ஆதலாலய்யாத்தியாள அணிமுடிதரித்துக்கொள்வீர்
மாதவவிஸ்வாமித்ர மணியேநின்சரணஞ்சுவாமி.

வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி தேவரீர் சொல்லும்படியாகியபொ ல்லாதவார்த்தைகளுக்கு நானெவ்வளவுமுட்படமாட்டேன் தேவரீ ருடைய சொல்லையுங் கடந்து பேசார்கள் இந்தக்குடிகள் ஆகையா ல் தேவரீர் தடையில்லாமல் பட்டங் கட்டிக்கொள்ளும் கோபத் தைப் பொறுத்தருளுஞ் சுவாமி விஸ்வாமித்திர மகாரிஷியே.

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஆனால்சட்டமாய்ப்பட்டங் கட்டிவையும் பிள்ளாய்.

அரிச்சந்திரன்-வசனம்.

தேவரீர் இந்தச் சிங்காதனத்தின் பேரில் கிழக்குமுகமா யெழு ந்தருளி யிருங்சுவாமி.



விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓட்ரிஷிக்கூட்டங்களே சிஷ்யவர்க்கங்களே உங்கள்தோலாச னத்தை இந்தசிங்காதனத்தில் விரித்துக்கொண்டு வரிசையாய் உரு க்காருங்கள்.

மகாமாயசாலி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பிறவியாந்தரித்திரனுக்குப் பெருத்ததோர்விருத்தாப்யத்தில்
நிறைசெல்வம்வந்தாற்போகம் நிலைக்குமோமாயசிமுண்டாமோ
முறைமுறைதவங்கள்செய்யு முனிக்கூட்டமரசுசெய்ய
குறைவில்சிங்காதனத்தில் குரங்குபோலிருக்குதன்றோ

வசனம்.

அண்ணேமாயசித்தா ஒருவன்பிறந்தநாள்முதல்தொண்ணூற் றொன்பது வயதுவனாக்குந் தரித்திரன் அப்படிப் பட்டவனுக்கு அயிஸ்வர்யம்வந்தா லென்னசுகங்களை யனுபவிக்கப் போகிறான் என்னசந்தோஷத்தை யடைவான் மகாமாயசித்தா.

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி நீசொன்னது சரியே புருஷாயுசுநூறல் லவோ அதிலேஇன்னம்பதினொருமாதமும்இருபத்தொருநாளும்வி ட்டு விட்டாயே அதுதானெனக்குச் சம்மதி யில்லை.

மகாமாயசாலி-வசனம்.

ஆமண்ணே மகாமாயசித்தா அப்படிப்பட்டவனுக்கு அயிஸ் வர்யம்வந்தால் என்னசெய்கிறது அதுபோல இந்தரிஷிப்பிண்டம் க்கள் இவர்களாயசுள்ளவரைக்கும் கண்ணைமூடிக்கொண்டு காட்டி லே தபசுபண்ணுகிறவர்களுக்கு நாட்டையாளச்சொல்லிப்பட்டங் கட்டினால் என்னசெய்வார்கள் இதோபார்சிங்காதனத்திலேநம்மிட அய்யர் கிழக்குரங்குபோலக் குந்திக்கொண்டு கண்ணைமிளமிள முழித்துக்கொண்டிருக்கிறார்.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அடாதுஷ்டப்பயலே நாம் காட்டிலேயு மிருப்போம் நாட் டிலேயு மிருப்போம் தபசும் பண்ணுவோம்இராச்சியமுமாளுவோ மதற்கொருதடையா.

மகாமாயசித்தன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

காட்டிலுமிருப்பாரித்தக் கனம்பெறுமயோத்தியைச்சூழ்
நாட்டிலுமிருப்பார்முன்னே நம்மிலுஞ்சடையாயந்த

நீட்டுங்கெளசிகனுடைய திருபன்றுனேதோபுண்யங்
கூட்டியவழியினாலே குறித்ததோர்நபசியானுர்

வசனம்.

தம்பிமகாமாயசாலி நம்பிட அய்யர்சொல்லுகிறது சரியேமு
ன்னாலே நம்மைப் பார்க்கிலுங் கஷ்டமாய்த் திரிந்தவர் தானே

மகாமாயசாலி-வசனம்.

அண்ணேமகாமாயசித்தா எனைச்சொல்லுகிறாய் அய்யர் தப
சுபண்ணுகிறேன் தபசுபண்ணுகிறேனென்று முண்டைகளைக்கட்
டிக்கொண்டழுதாரே அதைச் சொல்லுகிறாயோ அல்லதந்த அம்ம
மார் வயிற்றிலே பிள்ளை பிறந்ததே அதைச்சொல்லுகிறையோ

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி அதுவல்லாமல் இவர்முன்னே யிராசா
வாயிருந்து நாட்டை யாண்டுகொண்டிருந்தவர்தானே சுத்தபாவி
க்குக் கொஞ்சம் புண்ணியங்கிடைத்தாற்போல் தபசியானுர் தபசி
யானு ரப்பா.

இதுவும்-மகாமாயசித்தன்-வசனம்.

சுவாமி சுவாமி முன்னாலே நீர்நாட்டையாண்டபோது சாப்பி
ட்ட பதார்த்தங்களையெல்லாம் இப்போது நினைத்துக்கொள்ளும்
சுவாமி.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணேமகாமாயசித்தா அவர்தான் சோத்துக்குலிங்கி கா
ட்டைவிட்டு நாட்டுக்கு வந்தார் இதோ இருக்கிறார்களே அய்யமா
ர்கள் துரும்புபோல எலும்பெடுத்துக்கொண்டு இனி யெருமைக்க
டாப்போலத் தின்று கொழுப்பார்க ளப்பா.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கலியாணி

இந்திரன்வரகராடு மிடைவிடாதாள்வீரியானை
பந்தியிற்குதிரைபந்தி படையிறுதான்யசாலை
அந்தமில்சொர்ணசாலை யணிபெறுசெங்கோல்கொள்ளும்
தந்தனம்யான்போய்மற்ற தனமிரந்தளிப்பேன்சுவாமி

வசனம்.

சாணஞ் சாணர்சுவாமி யிந்தாருஞ் செங்கோல் கையில்வாங்
கிக்கொள்ளும் இராச்சிய பட்டாபிஷேகம் செய்துகொள்ளும் நா
ட்டை யாண்டு கொள்ளும் இதோயானைசாலை குதிரைசாலை பொக்
கிஷசாலை தானியசாலை இதோசேனை சமுத்திரங்கள்சகலமும் ஒப்பு



வித்துவிட்டேன் இதையெல்லாங் கைக்கொள்ளும் நான் அன்ய
தேசங்களுக்குச்சென்று யாசகஞ்செய்து தேவரீருடையதிரவியத்
தைக்கொடுத்துவிடுகிறேன் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

அப்படியே சகலமு மொப்புவித்துக்கொண்டேன் இந்தசிங்
காதனத்திலேயிருந்து நானே யிராச்சியபாரம் பண்ணிக்கொள்ளு
கிறேன் நீர்போய்வாரும் அரிச்சந்திர மகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மந்திரிமுதலாய்மற்ற மன்னரோகுடிகள்நீங்கள்
இந்தமாமுனிவர்சொல்லை யென்றுசொல்லாகவெண்ணி
சந்ததம்வாழ்வீர்வந்து தாளிணைவாங்கிக்கொள்வீர்
அந்தமில்லாதபுண்ய மடைகுவேனுங்களாலே

வசனம்.

கேளுங்கள் மந்திரிமுதலாகிய இராசகூட்டங்களே குடிகளே
இந்தமகானுபாவருடைய வார்த்தையை யென்வார்த்தையாக நினை
த்து அவர்சொற்படி கேட்டிருந்தால் அதனாலே யெனக்குவருகி
றபுண்ணியமெல்லாம் உங்களாலே வந்ததாக இருக்கும் ஆகையா
ல் இப்போதே வந்து வணங்கிக்கொள்ளுங்கள்.

மந்திரிவசனம்-அப்படியே செய்கிறோம் சுவாமி.

மந்திரி-விருத்தம்-இ-ம்-தோடி.

எங்களையாண்டமன்ன னியம்பியபடியேநாங்கள்
சங்கையில்லாமலுந்தன் றாளிணைவணங்கிவாழ்வோம்
பொங்குமாதவத்தின்மிக்க புகலுமாமுனியேயிந்த
பங்கமில்லாதநாட்டை பரிவுடனாள்வாய்போற்றி

அரிச்சந்திரன்-வசனம்.

இனி யெனக்குச் செலவுகொடும் ஒருநாழிகைமாத்திரங் கூடக்கூ
டாதும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

கேளும் அரிச்சந்திர மகாராசனே நானையதினம் ஆனையனு
ப்புகிறேன் நம்முடைய பொன் ஓடிப்போகுதா நீஇன்றைக்கே ப
ட்டணத்தைவிட்டு வெளியே போயிரு நட நட.

அரிச்சந்திரன்-வசனம்.

அப்படியே வெளியிலே போயிருக்கிறேன் சுவாமி

அரிச்சந்திரன் - விருத்தம்.

எத்தனை குறைகளிந்த இறைதருகுடிகளெல்லாம்
சித்தமொத்திடச்செய்தாலும் திருவுளந்தனிற்பொறுத்தே
சத்தாலொழிக்கவேயாள்வீர் தமியன்யாஞ்செய்தவினை
பற்றறவிடுத்தேயன்பு பாலிப்பீர்பொறுத்தருள்வீரே

வசனம்.

கேளும் விஸ்வாமித்திர மகாரிஷியே யிந்தப் பிரசைகளெல்லாரும் எத்தனைகுற்றங்கள் குறைகள் செய்தாலும் தேவரீர்பொறுத்து இதுவரையில் அடியேன்செய்த குற்றங்களையும் பொறுத்துக் கோபத்தை நீக்கவேணும் சுவாமி நான்போய்வருகிறேன்

விஸ்வாமித்திரர்-வசனம்.

நமக்குச்சந்தோஷமாச்சுது போய்வாரும் அரிச்சந்திரமகாராசனே

அரிச்சந்திரன்-வசனம்.

வாராய்பெண்ணே சந்திரமதி அடா அப்பா தேவதாசா இந்த மட்டோடே போய் வருவோம்.

தேவதாசன்-வசனம்.

அப்படியே போய் வருவோம் என்பிதாவே.

விஸ்வாமித்திரர் -வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே மறந்துபோனேன் மறந்துபோனேன் ஓடிவாரும்.

அரிச்சந்திரன்-வசனம்.

மறந்ததெல்லாம் நினைத்துச்சொல்லுஞ் சுவாமி இதோவந்தேன்

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ர-சங்கராபரணம்.

அறிகுவோமனதையென்றேஆள்வேண்டாம்போவென்றேன்யான்
மறபடிநினைக்குமுன்னே வஞ்சமாய்நடக்கலாமோ
குறிதருமிடஞ்சொல்லாயற் குலாவியேநடக்கின்றாயே
முறைவழியாள்விடுத்தால் மோசமுஞ்செய்குவாயே

வசனம்.

ஓய் அரிச்சந்திரமகாராசனே உன்பேரில் எனக்குப்பாக்கியிருக்கஉன்னுடையடனதையறிபவரென்றுநானேயதினால் ஆள்விடுகிறேன் போவென்றல் போயிருக்கிற இடமுஞ்சொல்லாமல்சாடையாய்



நடந்துவிடுகிறையே இதுதானுதர்மம் நல்லது ஆளைத்தானனுப்பினேன் அவனையுந்நீ மோசந்தானே செய்வாய் நல்லகாரியம் நல்லகாரியம்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ப-தன்னியாசி.

தேவரீருனாத்தவார்த்தை தெய்வத்துக்கொப்பாகாது
தேவரீர்பொல்லைநானே தேடியெவ்விதமுரிவேன்
காவலில்லாமற்போகேன் கனம்பெருசனையுங்கி
மேவுமக்களாயிருப்பேன் வினையமாய்நினைக்கொணுதே

வசனம்.

தேவரீர்சொற்படி நடந்தேனே யல்லது வேறில்லை இந்தவார்த்தை தெய்வத்துக்கு பொறக்காது உம்முடையதாகள்கூடவராமல் நான்போகமாட்டேன் இதோ இந்தசனையுததியென்கிற ஆற்றின் கரையிலே யிருக்கிறேன் உத்தரவுகொடும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம-ஆரபி.

மகுடகுண்டலமும் வளர்புஜகிருதிதானும்
திசமுதல்லணிகளெல்லாந் தேசத்தோடரசுநீங்கி
மகவொடுமனையாள்கூட மறுகியேயலைகின்றாய்நீ
மகிழெழுமக்களைப்புணர்ந்து மண்ணுலகாண்டுவாழ்வாய்

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே உம்முடையகிரீடகுண்டலமும் புஜகீர்த்தி உடைவாள் வீரகண்டாமணி இராசயோக்கிய ஆபரணங்களையெல்லாம் விட்டு நீயும் உன்பெண்சாதியும் பிள்ளையும்பரதவிக்கிறது நன்றாகவிருக்கவில்லை இதோ என்பெண்களாகிய இந்த இரண்டு ஸ்திரீகளையும் விவாகம் செய்துகொண்டு இனிமே லிந்த இராச்சியத்தை நீயேயாண்டுகொள்ளும் வாரும் வாரும் போகவேண்டாம் வாரும் வாரும்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ய-ரோகுப்தி.

கைப்பிடித்துனாக்கவந்தீர் கால்பிடித்துனைப்பேன்கேளும்
மெய்ப்படிகண்ணுரன்ய மாதர்ம்றசாதல்வேண்டேன்
இப்புவிவாழ்வும்வேண்டேன் எனக்குமதருளேவேண்டும்
தப்பிதமுனாக்கமாட்டேன் சத்தியமாய்தப்புஞ்சுவாமி

வசனம்.

சரணஞ் சரணஞ் சுவாமி இந்த பூலோகத்திலுண்டாகிய வாழ்வெல்லா மெனக்கு வேண்டியதில்லை அன்னிய ஸ்திரீக ளுடைய போகத்தைநான் விரும்பப்போகிறதுமில்லை துலையாமணையத்து

எனக்குவேண்டியதுமில்லை எனக்குவேண்டியது தேவரீருடையதி
ருவையொன்றுதான் இதுசத்யமாக நம்பும்உத்தரவுகொடும்சுவாமி

விஸ்வாமித்திரர்-வசனம்.

கேளும். அரிச்சந்திரமகாராசனே ஆளனுப்புகிறவனைக்கும் ச
ரயுநதியென்கிற ஆற்றின்கரையிலேதானேயிரும் அதைவிட்டு அப்
புறம் போகவேண்டியதில்லை போம் போம்.

அரிச்சந்திரன்-நாட்டைவிட்டுச்சரயுநதிக்குப்போகிற-தரு

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

நடந்துவருவாய்பெண்ணே நீநடந்துவருவாய்கண்ணே

அடர்ந்தசோலைநிறைசரயுநதியெனும்
ஆற்றின்கரையின்று அமைந்திருப்போய்சென்று (நடந்து)

பஞ்சணைமீதினிலெடுத்தடிவைத்தால்நோகும்
பாதம்வருந்துமென்று தளராதேபெண்ணே
பாவபுண்யமெல்லாம் ஊழ்வினைப்பயனல்லால்
யதைத்தாலதிகமொன்றுவளராதே
கஞ்சமலரயனாகிய பிரமாமுன்பு
கண்டெழுதிவிட்டநிலைதக்கண்டோம்வேறென்னபின்பு
தஞ்சமென்றுநினைந்திடலாமோ
நெஞ்சமுருகிடத்துயரதுபோமே (நடந்து)

ஜெனனமரணமென்னுஞ்சாகரமிதையினி
சிந்தித்துக்கடக்கவும்வசமாமோ பெண்ணே
தெய்வச்செயலென்பதை நீக்கிபுலகிலுள்ளோர்
சித்தத்தின்படிவாழ்வதும் நிஜமாமோ
கனவுகண்டதுபோலே போகபாக்கியமெல்லாங்
கண்டேன்போச்சுதென்றுருகதைதானென்பதோர்சொ
மனதினிலிதைப்பெரிதாகவெண்ணாதே (ல்லாம்
தினமுமுனிவனைமறக்கவொண்ணாதே (நடந்து).

தவஞ்செய்துபெற்றெடுத்தபாலன்தேவதாசன்
தவிக்கிறானென்றுமனமிருகாதே பெண்ணே
சத்யநிலைக்குமல்லால் வாழ்வுநிலையுண்டாமோ
சந்தேகமாய்த்துயரம் பெருகாதே
தவமுனியானவிஸ்வாமித்திரனுக்கிந்தராட்டை



தந்தப்லனேநமக்குமோட்சசாம்ப்ராச்யமுட்டை
கலைகொண்டுதளர்ந்திடலாமோசிவ
னனுக்ரகத்தடைசொல்லப்போமோ (நடந்து)

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கண்டா.

அருமையாய்த்தவஞ்செய்தெந்த னகமகிழ்ந்திடவேவந்த
பெருமையும்வாழ்வும்நல்ல பிரபலமார்க்கமுமுண்டாக
வருமெமர்தன்மகனேயப்பா மலரடிவருந்திநீயும்
தரணியில்நடக்கவுந்தன் தலைவிதிக்கிளைத்திடாதே

வசனம்.

நான்செய்ததபோபலத்தினாலேவந்த எனது புத்ர சிகாமணி
யாகிய அப்பா அடாதேவதாசா தாமரைமலர்போலுமிராநின்றபாத
ம்வருந்த நடக்கிறேனென்று இளைக்காதே யப்பா.

பிரசைகள்-புலம்பல்-தரு-இ-ம்-கண்டா-தாளம்-ஆதி.

மகுடமுடிசூட்டவையகந்தன்னையாண்ட
மன்னவர்க்கிந்தவிதிவரலாமோவிதி வரலாமோ
தகுமோவஞ்சனையாலே தரணியைக்கைக்கொண்டு
தவமுனிவர்க்குநலந்தரலாமோநலந் தரலாமோ
நீதியில்லையோஐயோ நிசமுமில்லையோஇந்த
நிஷ்டூரம்விளைந்ததுநெறிதானோஇது நெறிதானோ
எதிர்நல்லவர்க்குமிடர்வரலாமோதெய்வம்
இல்லையோஐயையோபழிதானோஐயோ பழிதானோ
அன்னப்பேடையே இந்த அரிவையாஞ்சந்திரமதி
அலங்கோலப்படுவதுந்தகுமோதான்இது தகுமோதான்
சின்னவயதறியாச்சிறுவனாந்தேவதாசன்
திருமுகம்வாடுதேஐயோதெய்வமேஐயோ தெய்வமே
தவமுனிவர்யாகஞ்செய்யத் தனங்கேட்டா ரென்றிருந்தோம்
தரணியைப்பறிக்கவந்தசதிதானோஇது சதிதானோ
அவ்வமதியோநாடுநகர்யானைசேனையடங்கலும்
அவர்க்கேகொடுத்துவிட்டார்மதிமோசம்இது மதிமோசம்
தாடிழந்துநகரிழந்துநல்லாசுநானிழந்து
நடப்பாரோஇப்படி நடப்பாரோ

பேடைமயிலாளுடனேபிள்ளையும்பின்னேவரப்
பிரிவாரோவெங்களைப் — பிரிவாரோ
வேதசாஸ்திரங்கற்றவிஸ்வாமித்திரனுக்
கெவ்வளவும்விளையாதோதயை — விளையாதோ
மேதினியாண்டிருந்தவீரனைப்
பாதவிக்கவிடலாமோவை — விடலாமோ
பாக்யமெல்லாம்பறித்துக்கொண்டு பழையபொன்னைத்
தாச்சொன்னால்படையாதோநெஞ்சம் — படையாதோ
எக்கமுற்றும்ற்றுமன்னவா மிரந்துபொன்னைத்
தருவேனென்றுலிரங்காதோயன — மிரங்காதோ
கொப்பளிக்கும்பாதமையோ கோதைமலரடிநடந்தால்
கொதிக்காதோமனந் — கொதிக்காதோ
சர்ப்பனையோதாங்களிந்த தவமுனிவன்றிருந்து
தளர்வோமோநெஞ்சந் — தளர்வோமோ

பிரசைகள் விருத்தம்-இ-ட-சாவேரி.

புவிபுகழயோத்தியாளும் புனிதனுத்திருச்சக்கின்ற
தவறிலாவரிச்சந்த்ரேந்த்ர சற்குணமணியேபோற்றி
கவலைகொண்டழுதேநாங்கள் காதகவிஸ்வாமித்ரன்
அலமதிக்காளாவோமோ அடியருட்வருகுவோமே

வசனம்.

தேவரீரித்தத் திருக்கோலத்துடனே பட்டணத்தை விட்டுப் போகவும்நாங்களிந்த மகாபாதகனுன விஸ்வாமித்திரன்சொல்லுக்கு அடங்கிநிற்கவும் தகுமா நாங்களும் கூடவேவருகிறோம்சுவாமி

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம-பைரவி.

பெருத்ததன்னகரில்வாழும் பிரசைகளேநீங்கள்மிக்க
வருத்தமாய்மொழியவேண்டாம் மனத்துயரொழிவீரொத்தன்
கருத்தினில்மறித்தேயந்தக் கவுசிகர்க்கரசையீந்தன்
திருத்தமாயவர்சொற்கேட்டுத் திறமுடன்வாழ்குவீரே

வசனம்.

கேளுங்கள் பிரசைகளேயெனக்காகநீங்கள்விசனப்படவேண்டியதில்லை யுங்களுக்கொரு வருத்தமும்வாராது என்மனப்பூர்வகமாக என்னுடைய ராசாங்கத்தை யவருக்கே கொடுத்தேன் எவ்வித விரோதமில்லாமல் அவர்சொற்படி நடவுங்கள் பிரசைகளே.



பிரசைகள்-வசனம்

தேவரீர் திருவாக்குக்கு மறுவாக்குண்டோசுவாமி அப்படியேயிருக்கக்கடவோம் எங்கள் தலைவிதிப்படி யாச்சது மகாராசனே.

அரிச்சந்திரன்-வசனம்.

ஒரு குறைவும் வாராது சுகமாயிருங்கள் பிரசைகளே.

இதுவுமரிச்சந்திரன்-வசனம்.

அடா அப்பா தேவதாசா பெண்ணே சந்திரமதி சாயுநதிக்கு அக்கரைபோயிருப்போம் வாருங்கள்.

தேவதாசன்-வசனம்.

அப்படியேபோயிருப்போம் வாருமென்பிதாவே.

பொது-விருத்தம்-இ-ம-தோடி.

அரசநன்னகரம்நாடு மளித்தரிச்சந்த்ரமன்னன்
உரைசிதறாதபொன்னை யுவந்தளித்திடுவேனென்று
கரைசெறிசாயுநல்லணிக் காதலியுடனிருக்க
முறைசெறியயோத்தியாளு முனிமனந்தளர்கின்றனே

வசனம்.

இந்தப்பிரகாரமாகத் தன்னுடைய இராச்சிய முழுமையுந்தாரைவார்த்ததுமல்லாமல் தொடர்வழக்காகவந்த பொன்னையுந்தருகிறேனென்று சம்மதித்த அரிச்சந்திரமகாராசனவர் சாயுநதிக்கரையிலே வந்திருக்க அங்கே அயோத்தியாபுரியையாளவந்த தவமுனியாகிய விஸ்வாமித்திர மகாரிஷி விசனப்படுகிறவிதங்காண்க.

விஸ்வாமித்திரர்-விதனப்படுகிற-தரு

இ-ம-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

இனிநானெப்படிமுடிப்பேன் இந்தச்சபதம்
இனிநானெப்படிமுடிப்பேன்

சனிபிடித்ததுபோலஇந்திரன்சபைதனில்
தர்க்கமிட்டேனையையோ சாதிப்பதுவுமெய்யோ (இனி)

யானையின்மேலொருபலசாலிவர்துநின்று
எறிந்தகவண்கல்லதுபோற்றூரம்
தானங்கொடுக்கச்சொன்னால் தளராமற்கொடுத்தபின்
சற்றுமெண்ணாமற்போனேனக்ரசாம்

ஆனமட்டும்பார்ப்போமென்றுகாட்டிலிழுத்துவிட்டேன்
  அங்கேயெல்லநினைத்த
னேகவலைச்சுற்பட்டேன் (இனி)

மாயமிருகக்கூட்டத்தால் மலைபோலோர்பன்றியினால்
  வளநாடழிக்கச்செய்தேன்வெகுமோசம்
நேயம்பண்ணுவாளென்றெண்ணிநீச்சப்பெண்களை
  விட்டேனீங்கிவிட்டானறியாரோர்வித்யாசம்
சாயுமோநான்செய்யுந் தந்த்ரசாலவித்தைதைக்கடக்க
  ஞாயப்பிசகாதஇந்த
நாதிபன்மெய்மைநடக்க (இனி)

உண்டானபாக்யமெல்லா மொன்றுந்தப்பாமல்வாங்கி
  யூர்கடக்கவிட்டும்பயப்படுவாரோ
கல்டோரிரக்கமவன்கட்டியவஸ்திரங்களைக்
  கைக்கொண்டுந்தயிரியந்தவிர்வாரோ
பெண்பிள்ளைத்துயரத்திலும் பேதியாமலானாவிட்டால்
  கொண்டுவந்துன்பொன்தருவேன்
கூட்டுமென்றுபுறப்பட்டால் (இனி)

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி அய்யர் நல்ல நாள்கொண்டு அழத்தொடங்கினார் கூடசகாயஞ் வேணும்.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே மகாமாயசித்தா நாமிரண்டுபேருங்கூடகட்டிக்கொண்டழுவோமா.

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி அப்படி யாகிலுஞ் செய்து தொலைப்போம் வா என்சுவாமி ஊளையிடுகிறீர்.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே மகாமாயசித்தா காட்டிலே யிருக்கிற வெகுகாலங்கண்ட கிழநரி ஊளையிடுகிறது நீபார்த்திருக்கிறையா.

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி நான்பார்த்ததில்லை அது எப்படியிருக்கும்

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே யிதோ இப்படிதா னிருக்கும் நம்முடையஐயரூளையிடுகிறதுபோல.



விஸ்வாமித்திரர்-வசனம்.

அடா துஷ்டப்பயலே யென்னடா சொல்லுகிறாய்

மகாமாயசாலி-வசனம்.

பின்னையொன்றுமில்லை சுவாமி தேவரீரழுங்கால் நாங்களுங் கூட அழுவோமாவென்று ஆலோசனை பண்ணுகிறோம் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்-அடத்தாயோழி-துஷ்டப்பயலே

மகாமாயசாலி-வசனம்.

என் சுவாமி உள்ளத்தைச் சொன்னால் ளொள்ளென்று விழுகிறீர்

பொது-விருத்தம்-இ-ம்-பந்துவராளி,

வஞ்சனையாலேயந்த மன்னன்பொய்சொல்லானென்று
நெஞ்சந்தான்தளர்ந்துவிஸ்வா மித்திரனினைத்தெழுந்து
சஞ்சலத்துடன்பதுங்கித் தான்மறைந்திருக்க அந்த
தஞ்சமன்னவன்பால்மந்திரித் தலைவர்கள்நாடிவந்தாரே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திரன் விசனப்பட்டு அரிச்சந்திரன் என்னபேரிக் கொள்ளுகிறானோ வென்று சாயுநிக்கனாயிலே வந்து பதுங்கியிருக்க அரிச்சந்திரமகாராசனிடத்தில் மந்திரித்தலைவர்கள் விசாரிக்கவருகிற விதங்காண்க.

மந்திரித்தலைவர்-புலம்பல்-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்

ஐயையோவுமை நாங்களெப்படிப்பிரிவோம்-உன
தடைக்கலம்புகுந்தோமே-கூடவருவோம்
தெய்வமிப்படிசதிசெய்யுமென்று
திரணமுமறியோம்சிந்தையிற்குறியோம் (ஐயை)

அடுக்குமோசொல்லுமுலகினிலிந்தவநீதசெய்யத் தகாது
அடல்கொண்டவிஸ்வாமித்திரர்க்கென்ன வாது
தடுக்கொண்ணுதவினையும்விளைவதேது விதிபொல்லாது
தவஞ்செய்யுமுனிவர்கொடுமைசெயச் செல்லாது
நடுக்கண்டுசொல்லத்தெய்வ மில்லையோ
நம்மைக்கொல்லும்படிவைக்கொன்றார் கொலையோ
மிடுக்குள்ள அந்தமுனிவர்க் கஞ்சி
மிரண்டோடிப்போவாரோபயப்பட்டுக் கெஞ்சி (ஐயை)

மந்திரித்தலைவர்-விருத்தம்-இ-ம்-ஆசிரி

செங்கோல்செலுத்திபராஜனரிச்சந்திரனரிச்சங்களித்ததிறல்வேந்தே
இங்கேசோழையெனவிந்த இளமாயமதிருந்திருமகனும்
தங்காதுழன்றுதயங்கிலாத் தளருமுனதுதிருமுகத்தின்
சிங்காரமுட்டே பாய்வருந்துவதை ஸ்திரமாய்ப் பார்த்து மகிழ்வோ

வசனம். (மோ

ஐயையோ இந்தமகாபதிவிரதையான சந்திரமதியம்மனுந்தேவரீர் திருக்குமாரனுகிய இந்தக்குழந்தைதேவதாசனும் பரதேசிகளைப்போல இப்படிப்பரதவித்துவரவும்முடைய சிங்காரமுட்போய் நீர்வருந்தப்பட்டதாங்களெப்படிப் பார்த்திருப்போஞ்சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

வருந்திவர்துனைக்கவருந்து மந்திரித்தலைவமோதீர்
பொருந்துமென்சத்தியத்துக்கோர் பொல்லாங்குநினைக்கொணது
பெருந்தனாதனிற்பிறந்தோர் பெருவதுபுண்யபாவம்
இருந்தந்தமுனிவன்சொல்லுக் கிடங்கொடுவாழ்குவீரே

வசனம்.

கேளுங்கள் மந்திரித்தலைவர்களே பூமியிலே பிறந்தபேருக்கு நிலைநின்றது புண்யபாவமாகையால் நான்செய்த புண்ணியத்துக் கொருவிரோதமில்லாமல் அந்த விஸ்வாமித்திர மகாரிஷியின்சொற்படி கேட்டு வாழ்ந்திருங்கள் மந்திரித் தலைவர்களே

மந்திரித்தலைவர்-விருத்தம்-இ-ம்-தோடி

அதர்மமாயுமதுநாட்டை யபகரித்ததுமல்லாமல்
முதல்வைத்தபொன்னைக்கேட்டு முடிநதொருவழக்கைகாடிச்
சாதனுடன்மனையாளோடுந் தூரதேசத்திற்போகும்
விதம்நினைத்திட்டவிஸ்வா மித்ரனுக்கிரங்குவாரே

வசனம்.

கேளு மெங்களாண்டவரே ரிஷிகளுக்கு அதர்மஞ்செய்யத்தகுமா நல்லது அப்படி அதர்மத்துக்குட்பட்டு மோசஞ்செய்துநாட்டைப்பறித்துக்கொண்டது மல்லாமல் முன்னேதான் வாங்கினைத்த பொன்னைத்தாவென்று மொருவழக்கிட்டு அன்னிய தேசத்திலே யோடிப்போகத் துரத்தலாமா அப்படிப்பட்ட விஸ்வாமித்திர மகாரிஷிக்கு இரக்கப்படலாமா சுவாமி.

அரிச்சந்திரன்-வசனம்.

அவரொருக்காலு மோசஞ்செய்ததில்லை இப்படிப்பட்டவார்த்தைகளைச் சொல்லவேண்டாம் மந்திரித் தலைவர்களே.



மந்திரித்தலைவர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அத்துடன்விட்டானோமுன் வருலையாய்த்தானங்கொண்ட
சொத்ததைத்தருவாயென்று தொடர்வழக்கிட்டானீ
இத்தலமீங்கிறாந்பத் தெட்டுநாள்தருவையென்றான்
மத்தனைக்காவல்வைக்க மனுநெறிக்கடுப்பதுண்டோ

வசனம்.

அரிகரி அந்தமகாபாவியாகிய விஸ்வாமித்திரன் நாட்டைப்பறித்துக்கொண்டதோடே விட்டானு தானங்கொடுத்த பொன்னென்று அதை நாற்பத்தெட்டுநாளில் தரவேணுமென்றும் ஒருதானைக்காவல் வைக்கத்தகுமா இதுமனுநீதிக் கடுக்குமா மகாராசனே

அரிச்சந்திரன்-வசனம்.

அவரெப்படி செய்தாலும் நமக்குச் சற்றேதாஷமில்லை நீங்கள்வர் சொன்னபடி கேட்டிருங்கள் மந்திரித்தலைவர்களே.

மந்திரித்தலைவர்-விருத்தம்-இ-ம்-கன்னியாசி.

பூண்டதோர்பணிகளெல்லாம் பொறுக்கியேமுட்டிக்கொண்டு
தீண்டதோர்வஸ்திரந்தன்னை நிலையுரியுரித்துக்கொண்டான்
அரண்டோபாதாளுஞ்செய் தும்ராஜியமனைக்கொண்டே
ஆண்டவரேயுமக்கு மருமுடிகுட்டிவைப்போம்

வசனம்.

சற்றுமிரக்கமில்லாமல் நீங்கள்தரித்திருந்த ஆபரணத்தையும் உடுத்தியிருந்த வஸ்திரத்தையும் பறித்துக்கொண்டு இப்படியலைய விட்ட அந்தமகாபாவியான விஸ்வாமித்திரனை வதைத்து எங்களாண்டவரே யுமக்குப் பட்டாபிஷேகஞ் செய்விப்போம்அதிலொன்றுந் தோஷமில்லை மகாராசனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

அரிகரிசிந்தவார்த்தை யறநெறிக்கடுத்திடாதே
விரிசதுர்மறையின்நீதி விளங்கியவிஸ்வாமித்திரர்
இராவலனுகவந்தா லிவருபெரியபாக்கியம்
தாகங்கைக்கொள்ள வேண்டாம் நாதனென்றவர்கீழ் வாழ்வீர்

வசனம்.

அரிகரி அரிகரி இப்படி தருமத்துக்குவிரோதமானவார்த்தைகளைச் சொல்லலாமா சத்தியவதம் சொல்லுடைய முடிவையுமறிந்து நாமே பிரமமாய்ப்பிரகாசிக்கப்பட்ட விஸ்வாமித்திரர் தேவென்றால் நான்கொடுக்கத் தகாத தொன்றுமுண்டோ இப்போது நீங்களென்சொல்

லுகிறத்திலே நரகப்பிராப்தியாகு மப்படி வரவொட்டாமல் அவனையே ராசாவாகப்பாவித்து அவர்கட்டளையிட்டபடி நடவுங்கள்மந்திரித்தலைவர்களே.

மந்திரித்தலைவர்கள்-வசனம்.

எங்களுடைய பிராரத்துவபூர்வமிப்படியிருந்ததா ஈஸ்வரா ஈஸ்வரா தேவரீருத்தாரப்படிக்கே நடக்கக்கடவோம்சுவாமி-

பொது-இகாச்சகம் இ-ம்-புன்னாகவராளி

சிலமிகுகுடிகளுடன் இசமூமந்திரித்தலைவர்களும்
பாலர்முதல்பெரியோரும் பதைபதைத்துக்கதறியழ
ஞாலம்புகழரிச்சந்திர நராதிபதிதன்மனதை
மேலுஞ்சோதிக்கவிஸ்வா மித்திரன்வந்துற்றனனே

வசனம்.

இந்தப் பிரகாரமாக அழுதுவருகிற பிரசைகளையெல்லாம் நிறுத்திவைபின்பு மறைந்திருந்த விஸ்வாமித்திரன் அரிச்சந்திரமகாராசனைச் சோதிக்க வருகிற விதங்காண்க.

விஸ்வாமித்திரன்-தரு-இ-ம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

அறிவேன் அறிவேன்சாணும்நீசெய்கபடம்
அறிவேன் அறிவேன்சாணும்

அறிவேனறிவேனுன்னை அரிச்சந்திரனெனவே
அசத்யங்குடிகொண்டதோ ஐயோவுன்னினைவை (அறி)

அந்நியாயமாகக்காட்டில் மிருகங்களைவதைத்தா
யருந்தவத்தோர்க்குதவியான காட்டைச்சிதைத்தாய்
டன்னுமென்மந்த்ரசிருஷ்டிப் பன்றிதனையுங்கொன்றாய்
பாவையர்தனையடித்துப் பாதகன்போலேநின்றாய் (அறி)

செப்பிடுவித்தைகள்செகச்சாலப்புரட்டுமந்த்ரம்
செய்மையாய்க்கற்றநீதான் செய்வாயனேகதந்த்ரம்
ஒப்புச்சொல்லவென்றாலு முன்னைப்போற்கிடையாது
ஒரேவுபாயவித்தை யுன்னிடத்திருக்குஞ்சூது (அறி)

பார்த்தவர்க்குமெய்யாகவே பட்டாபிஷேகந்தந்தாய்
பஞ்சைரிஷிகளென்று சொல்லச்சதிநினைத்தாய்
தூர்த்தராணமந்திரிகள் சொல்லுக்கேசம்மதித்தாய்
சுத்தப்புரட்டனென்றால் சத்தியவானென்றுகுதித்தாய் (அறி)



விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-ஆரபி.

மறைவினிலிருந்ததாலும் வஞ்சனைப்புரட்டிதெல்லாம்
குறைவறக்கேட்டேன்கண்டேன் கொடுமைசெய்யரிச்சந்த்ராகேள்
நிறையுமுன்செல்வம்நாடு நீயேகைக்கொள்வாயென்னை
விறல்மிகுபிராணனோடு விட்டால்போய்விடுவேனப்பா

வசனம்.

போதும் போதும் ஏய் அரிச்சந்திரமகாராசனே தெய்வாதீனமாய் நான்மறைவிலேகேட்டுக்கொண்டிருந்த படியினாலே நீ மந்திரிகளுடனே பேசிக்கொண்ட சூதுவார்த்தைகளெல்லாம் கேட்டேன் கண்ணினாலுங்கண்டேன் நீசெய்கிற வுபாயத்தைப்பார்த்தால் நமக்குப் பயமாயிருக்கின்றது உன்னுடைய நகரத்தை நீயேவாங்கிக்கொண்டு என்னைப்பிராணனுடனே விட்டுவிட்டால் ஓடிப்போய் விடுகிறேனப்பா.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

வாயினில்வராதவார்த்தை வாய்புகளாகப்பேசி
நீயெனைத்தூஷித்தேசும் நிலவரமெல்லாங்கண்டேன்
ஆயுந்தான்கொடுப்பேனுன்னாட்டை யதனைக்கைக்கொள்ளாயாகில்
நீயிர்தீயனாவாய் செய்தகுற்றமும்போகாதே

வசனம்.

இப்போதுநானொன்று சொல்லுகிறேன் கேளும் இந்தராச்சியத்தை உனக்கே கொடுத்து விடுகிறேனதை நீ பெற்றுக்கொண்டாலாச்சுது இல்லாவிட்டால் பாவிகளிலேயெல்லாம் மகாபாவியாவாய் அதெப்படியென்றால் காட்டிலே யிருக்கின்றவாய்விடாச்சாதிகளையெல்லாங் கொலைசெய்தாய் நானுண்டு பண்ணியனுப்பின பெண்களிடத்தில் ஆடல்பாடல்களைக் கேட்டு அவர்களையுமடித்தாய் நான்மந்திரசக்தியினாலே சிருஷ்டித்த பன்றியையுங் கொன்றாய் அந்தப்பாவங்களையெல்லாம் நீக்கிக்கொள்ளவேணும் பாவத்துக்குப் பயந்தால் என்சொற்படி யிந்தநாட்டை நீ கைக்கொள்ள வேணும் நானில்லு நானில்லு.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-வராளி.

சிறியோர்கள்செய்தபிழை பெரியோர்கள்பொறுப்பதுவுஞ்சிரிதானையா; குறியாயவிவ்வார்த்தை யென்னுடனே யுரைத்ததனாற் குணந்தானுண்டோ, நெறியெதுப்பிசகிடேனியாள்வா யென்னாட்டை நான்போய்நின்ற; குறைவானபொன்கொடுப்பேன் ஆள்விடுவாய் தவப்பெருமைக் கொழுந்தே போற்றி.

வசனம்.

ஒருகாலத்திலுஞ் சொன்னசொற்பிசகேன் சிறியோர்கள்செய்த குற்றமெல்லாம் பெரியோர்கள்பொறுக்கக்கடவர் ஆகையால்தவசிகாமணியாகியதேவரீர் அடியேன் செய்த குற்றமெல்லாம்பொறுத்து ஒருஆளை யனுப்பினால் உமக்குக் கொடுக்கவேண்டிய பொன்னைக் கொடுத்து விடுகிறேன் தேவரீர் இந்தநாட்டையாண்டுகொண்டும் நீர்மறுத்தொன்றுஞ்சொல்லாமல் திருவுளமிரங்கி யுத்தாரவு கொடுங் சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

நல்லது நல்லது இந்தக்குற்றமும் பொறுத்தேன் சொற்றவறாமல் என்பொன்னை யெல்லாம் நாற்பத்தெட்டுநாளில்சரியாய் செலுத்திப் போடும்.

அரிச்சந்திரன் வசனம்.

அதற்கொருதடையா ஆளனுப்பும் சுவாமி.

பொது-விருத்தம்-இ-ம்-சாவேரி

கோபஞ்செய்விஸ்வாமித்ரன் சோபலர்ப்பாதம்போற்றி
பூபதியரிச்சந்த்ரன்றன் பொன்னுக்காளனுப்புமென்ன
தாபதர்பணியுமந்தத் தவமுனிநினைந்ததாலே
சாபம்போல்சுக்ராச்சாரி தூதனென்றெதிர்வந்தானே

வசனம்.

அரிச்சந்திரமகாராசனானவர் பொன்னைத் தருகிறேன் ஆளனுப்புமென்றுசொல்ல விஸ்வாமித்திரமகாரிஷி சுக்ராச்சாரியை மனதிலே நினைக்க நட்சத்திரத் தாசனாக வருகிறவிதங் காண்க

நட்சத்திரத்தாசன்-வருகிற-தரு-இ-ம்-காம்போதி அடதாளம்.

தாசன்வந்தானே-நட்சத்திரத்-தாசன்வந்தானே
வரவேண்டியபொன்னுக் காளைக்காட்டிவிட்டால்
வதையாமலேமித்ர வதைசெய்மகாமித்ரத் (தாசன்)

வெடுவெடென்றுபேசிக்கையை-வீசிவீசி
மின்னும்பூணூலை மன்னித்திருத்திக்கொண்டு-ஆகா
கடுகடுத்துமகாகர்வத்துடனடந்து
சுருவிக்கருவித்தனக்குள்ளே சிரித்துக்கொண்டு
நடுநடுங்கியரிச்சந்திரமகாராசன்
நமஸ்காரமென்றுசொல்லநடக்கென்னவெற்றுபொக்லாத் (த)



சாண்கயிற்றிலண்ணாந்தாள்போடுவேனென்றும்
தடித்துக்கொண்டெட்டிக்கோல்போடுவேனென்றும்-ஆகா
வெய்வார்த்தைதேடுகிறல்முதுகில்கல்லைவைத்து
மேலேயேறிக்கொண்டு மீசையைபிழுப்பேனென்று
ஆண்பிள்ளைகளெல்லோருமிந்தவரிச்சந்திரனைக்
கசக்கிப்பிழிவேனென்றுகாட்டுவன்சாமர்த்தியமென்றும் (தா)

பெண்சாதியழுதாலும் பிள்ளைவந்தழுதாலும்
பெரியோர்வந்தழுதாலும் விடுவேனோ-ஆகா
கண்சாடையினாலும் கைக்கூலியினாலும்
கள்ளவுபசாரத்தாற்படுவேனோ
என்னுஞ்சம்பளமெனக் கேயும்விஸ்வாமித்திரர்க்
கிரண்டுசெய்தோஷமெனக்கேனென்றுபாதகத் (தாசன்)

நட்சத்திரத்தாசன்-விருத்தம்-இ-ம்-நாட்டை

சாட்டியார்விறுகச்சுற்றித் தாணியிற்சுழலவேவிட்
பாட்டியபம்பரம்போ லாட்டுவேனெவரானாலும்
காட்டுமென்கண்ணிற்பொன்னைக் கக்கவைத்திடுவேன்கையை
நீட்டிடும்விஸ்வாமித்ர நித்யமாதவரோபோற்றி

வசனம்.

நமஸ்காரஞ் சுவாமி விஸ்வாமித்திரமகாரிஷியே யார் உமக்கெவ்வளவு பொன்கொடுக்க வேணுமோ அவர்களைமாத்திரம் உம்முடையகையை நீட்டிக்காட்டிவிட்டா லதுபோதும் அவனையல்லோ லகல்லோலப்படுத்திப் பம்பரம்போ லாட்டிவிட்டுப் பணத்தையுங்கக்க வைப்பேன் காட்டிவிடும் காட்டிவிடும்

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

காட்டுதற்கையமுண்டோ கட்டரிச்சந்த்ரன்றன்னை
ஆட்டுவாய்பம்பரம்போ லன்மகன்மனையாளோடும்
வாட்டமுற்றழவேபொன்னை வாங்குவாய்பெரிதல்ல
பூட்டுமுன்றிராணியாலோர் பொய்வரச்செய்குவாயே

வசனம்.

கேளும் நட்சத்திரத்தாசனோ தானிந்த அரிச்சந்திரனைக்காட்டித் தந்தொருசந்தேகமா சிறவனைப் பம்பரம்போலாட்டி அவன்பெண்சாதி பிள்ளையெல்லாங் கதறியழத்தக்கதாகப் பெரிய்கனையவன் கையில் வாங்குகிறதற்கொரு சந்தேகமா அதுபெரிதல்ல எவ்விதமாகிலும் உன்சாமர்த்தியத்தினாலே யவன்வாயி னொருபொய்யைச் செய்யவேணும் அதுதான் உம்மிட திறமை.

நட்சத்திரத்தாகன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பொய்யையுஞ்சொல்லச்செய்வேன் பொன்னையும்வாங்கிவைப்பே
செய்யுமென்றிராணியெல்லாந் தேவரீர்தாமேகாண்பீர் (ன்
மையிழியானசந்த்ர மதியுடன்மகனுமேங்கி
நைவதிலழுதுவாடி தவிவதிலிரங்கும்வண்ணே

வசனம்.

கேளுஞ்சுவாமி விஸ்வாமித்திர மகாரிஷியே அப்ரயோசக
ன அந்த அரிச்சந்திரனைப் பொய்சொல்லச் செய்கிறதும் அவன்
கையில் பொன்னை வாங்குகிறதுமெனக்கொரு பெரிதல்ல அவனு
ம அவன்பெண்சாதியும அவன்பிள்ளையும அவர்கள் படப்போகி
றார்களேபாடு அதைக்கண்டு ஏதாகிலுங் கொஞ்ச மிரக்கப்படுவே
னோ அதுவெல்லாந் தேவரீர் காணப்போகிறீர் விஸ்வாமித்திரமகா
ரிஷியே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

காணப்படுமெய்யேபித்தக் கபடனுமரிச்சந்த்ரற்கு
சாண்வயிறடிகிட்டிக்கோற் றப்பாமாற்செலுத்திமேலும்
மாண்பதிகோட்டிவைப்பாய் வாங்கிக்கொள்நாட்டையென்பாய்
நாண்பெறுபுவனிசைந்தாம் றனையைப்போலழைத்துவாராய்

வசனம்

கேளும் நட்சத்திரத்தாகரே பொன்னைவாங்குகிறதுசா னிரு
க்கட்டும் அதற்குள்ளாக நீரவனைப்படுத்துகிற நானாவித இம்சைகளி
லே நீரேன் வருத்தப்படுகிறீர் உம்மிட நாட்டைக்கொடுத்து விடச்
சொல்லுகிறேன் நீர்சுகமா யாண்டுகொள்ளுமென்று சொல்லும் அ
வன் சம்மதித்து வந்தால் அவனை நம்மிட துரையென்று நினைத்து
சோடசவுபசாரத்துடனே யழைத்துவாரும் இதுதா னமக்குவே
ண்டியதுபோம்.

நட்சத்திரத்தாகன்-வசனம்.

ஆனால் ஆனைக் காட்டி விடும்

விஸ்வாமித்திரர்-வசனம்.

இதோ நிற்கிறானே யிவன்தா னரிச்சந்திர மகாராசன் யானை
யின்மேலே நின்று சவுக்கால் வெறிந்த தூரம் பொன்னை ஒரேகு
ப்பலாக நாற்பத் தெட்டு நாளைக்குள்ளாக வாங்கிக்கொள்ளும்

நட்சத்திரத்தாகன்-விருத்தம்-இ-ம்-நாட்டை

நம்மைநீரழைக்கவேணும் நானுங்காத்திருக்கவேணும்
செம்மையாய்ப்பேசவேணும் சிரித்துநான்மகிழவேணும்
கும்பலாய்க்கொடுவிற்பொன்னைக் கொட்டிமுன்தெண்டிப்பேனுன்
இம்மெசீறுமெழுந்துபோவேனில்லையென்றுரைத்தானென்பேன்



வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே கேளும் நாமானால் பிராம
ணன் உமக்கேதுவேணையும் பயந்தோன்றும் நம்மை நீர்மதியழை
க்கவேணும் நீரும் உம்முடைய ஆம்பிடையாளும் பிள்ளையும் நம்
மைக்காத்துக்கொண்டு கூடவே யிருக்கவேணும் நான்கேட்டபோ
து பொன்னைக்கும்பலாய்க் கொட்டிக் கொடுக்கவேணும் சற்றே த
டைப்பட்டா லேதோ நம்மிடமேயிருக்கிற ஆயுதங்களாலே உ
ம்மைநான் தெண்டிக்க வேண்டியிருக்கும் அழைத்த போதாவது
பொன்னைக் கேட்டபோதாவது நாம் தெண்டிக்கிற போதாவது ச
ற்றே ஆவென்று உடனே போய்விடுவேன் இல்லையென்றுசொன்
னேனென்று சொல்லுவேனிதற்குச்சம்மதியானால் வருகிறேன்சொ
ல்லும்.

அரிச்சந்திரன்-விருத்தம் இ-ம்-தன்னியாசி.

தெண்டிக்கப்பொன்னைக்கேட்கச் செப்புமுன்கொடுவிற்றுள்ளே
கண்டிக்கத்தேவரீர்க்குக் கவலைசாரமுண்டு
பெண்டுடன் பிள்ளைநானும் பொறுத்தசோர்பிழைசெய்தாலும்
கொண்டுடன்பொறுப்பீரெங்கள் குலதெய்வம்நீர்சுவாமி

வசனம்.

உம்மையெங்கள் குலதெய்வம்போல வைத்திருப்போமேய
ல்லது குறைவில்லை பொன்னைக்கொடுக்கிறவரைக்குந்தேவரீருடை
ய தண்டனைக் குட்பட்டுச் சொற்படிநடப்போமேயல்லது ஒருவி
த்தியாசங்களும் வராது கிருபைசெய்து கூடவாருஞ் சுவாமி

தாகன்-வசனம்.

எனக்கிப்போதுதான் சந்தோஷம் இனிமே லிருக்கிறதுவயி
த்தெரிச்சல்

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-கல்யாணி.

காதினிலொன்றுசொல்வேன் கருத்தினில்வைத்துக்கொள்ளும்
சாதமுஞ்சறியுந்தெய்யுந் தயிருடன்கொடுக்கச்சொல்லும்
போதவேயொன்வந்தாக்கால் பொசிப்பேனென்றுரைப்பீர்தந்தால்
மாதமுநாளுமென்னி வாங்குஞ்சம்பளங்கிட்டாமத

வசனம்.

இன்னமொரு இரகசியங் காதிலே சொல்லுகிறேன் மனதிலே
வைத்துக்கொள்ளும் அவர்கள் சாப்பிடுகிறபோது சாயிலைகிழங்
குகளையுமக்குக் கொடுக்கவருவார்கள் நீரதை வாங்காமல் நல்லதயி
ர்நெய் சறியுடனே திவ்ய மானபோசனம் வேணுமென்றுகேளும் ஒ
ருவேளை யதுவுங்கிடைத்தாலும் என்பணத்தைக் கொடுத்துவிட்டா

ல் சாப்பிடுவேனென்று சொல்லும் அப்படிப் பணத்தைக்கொடுத்துவிட்டாலும் நின்றமாதமும் நாளும் கணக்கெண்ணிக்கொண்டு உம்முடைய இஷ்டப்படிக்குச் சம்பளங்கேளும் அதற்குவழிவிலாமற்போகும் அதுதான் இவனடக்கிக் கொள்ளும் நட்சத்திரத் தாகரே.

தாகன்-வசனம்.

ஒருபோது சாப்பிட்டேனானால் மூன்றுநாளைக்குப் பசியெடாமல் கெட்டித்துக்கொண்டு அவனைப்படுத்துகிற பாட்டிலேகும்பல் கும்பலாய்ப் பொய்யைக் கொட்டப்போகிறான் தடையென்ன இருக்கிறது சுவாமி.

விஸ்வாமித்திரர்-வசனம்.

பொன்னைக்கொடுத்துவிடுவீரா நான்போய்வருவேனோ அரிச்சந்திரமகாராசனே நம்பிட சிஷியன் பிராமணப்பிள்ளை சாக்கிரதையாய் வைத்துக்கொண்டிரும்

அரிச்சந்திரன்-வசனம்.

அடியேன்பிராணனிருக்கிறவரைக்கும் ஒருகுறைவுமில்லை நீதமட்டுக்கும் உத்தரவுகொடுக்கவேணும் சுவாமி விஸ்வாமித்திரரே

விஸ்வாமித்திரர்-வசனம்.

அறியாத பிராமணப்பிள்ளையென்று எய்க்கப்போகிறாய் சாக்கிரதையாய்ப் பொன்னைச் சேர்த்துவிடும்.

அரிச்சந்திரன்-வசனம்.

தேவரீர் கூடவேவரும் நட்சத்திரத்தாகரை மெதுவாயழைத்துக்கொண்டு போகிறேன் நடந்துவாரும் சுவாமி

தாகன்-வசனம்.

எதடா எனக்குமுன்னே பெட்டிவைத்தாய் நான்வரமாட்டேன் நான்வரமாட்டேன்

அரிச்சந்திரன்-வசனம்.

தேவரீர் சித்தத்துக்கு அடியேன் செய்ததெல்லாங் குற்றம் பொறுத்திரட்சிக்கவேணும் சுவாமி.

பொது-விருத்தம்-இ-ம்-செஞ்சுருட்டி

கண்டகவிஸ்வாமித்திரன் கபடத்தால்தகனைவாங்கி
யெண்டிசைபுகழுங்காசிச் செழில்மதன்பவனையானைகேடு
ருண்டனிதாகனோடு முழைந்தரிச்சந்திரன்போகக்
கண்டத்தசத்யகீர்த்தி கலங்கியேவருகின்றானே



வசனம்.

விஸ்வாமித்திரர்செய்த பொல்லாங்கினாலே பிள்ளையும்பெண்சாதியும் துயரத்துடனே விஸ்வா நட்சத்திரத் தாகனைக் கூட்டிக்கொண்டு காசிப்பட்டணத்தைத்தேடி அரிச்சந்திரமகாராசன் நடக்க அவனைத்தேடிக்கொண்டு சத்தியகீர்த்தியாகிய மந்திரிவருகிற விதந்தரங்க.

சத்தியகீர்த்திவருகிற-தரு-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-மிசிரம்

தெய்வம்பொதுவென்பதுபொய்யோ-அதர்மமெய்யோ
தெய்வம்பொதுவென்பதுபொய்யோ-ஐயையோஐயையோ (தெய்)
செய்யும்வகையினியொன்றுமறியேன்
திருவுளச்செயலென்று றிடேன் (தெய்)
சக்ரேஸ்வரனரிச்சந்திரமகாராசன் மகாவிசுவாசன்
தருமநீதிபிசகில்லாப்ர காசன்
எக்காலமும்பொய்யில்லா வாயன்
இனைத்தோருக்குபகாரஞ் சகாயன்
தக்கோர்மிகப்புகழுந் தூயன்
தனாலையோவெனது நேயன் (தெய்)
தருமமிவனென்றுட்சலியாதே பொய்படவியாதே
தவமுமிவன்நேர்ந்தான் கெலியாதே
கருமமோசந்திரமதியாந் தாய்க்குக்
கலக்கஞ்செய்விஸ்வாமித்திரப் பேய்க்குத்
தர்மமேது அதர்ம வாய்க்குத்
தருமருந்துண்டோதலைவிதி நோய்க்குத் (தெய்)
தவஞ்செய்திவாருடையாய்ப்பெற்றபாலன்சுகுணசீலன்
தழைத்திடுந்தேவதாசனை லோலன்
எவனாவிட்டதுசதிபொல் லாதே
இந்தவிஸ்வாமித்திரன்குறுதில் லாதே
கவலையோயோவிதிபொல் லாதே
காலம்வராமற்கதிசொல் லாதே
தெய்வம்பொதுவென்பதுபொய்யோ-அதர்மமெய்யோ
தெய்வம்பொதுவென்பதுபொய்யோ
ஐயையோஐயோ-தெய்வம்பொதுவென்பதுபொய்யோ

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-கண்டா.

கம்சனாவிர்தக்காட்சி காணவும்பெற்றேனையா
மன்முதன்மாங்கண்மற்ற மலைகளுமுருகிடாதோ
வன்மதிமுகத்தாள்சந்திரமதியுடன்மகனுமீயு
மன்மிசைநடக்கக்கண்டுவாழ்வதேனாயினேனே

வசனம்.

கேளும் எங்களாண்டவராகிய இராசசக்கிரேஸ்வரா எனதாயாகிய சந்திரமதியம்மனும் இந்த தவப்புத்திரனாகிய லோகிதாசனுந்தேவரீரும் பாதகமலங்கள்நோக நடக்கின்றதைக் கண்டால் மண்மரங்கள் முதலாகியது முருகாதா ஐயையா இப்படிவருத்தப்பட்டு நீங்கள் நடக்கின்றதைப் பார்த்திருந்தும் நான்பட்டணத்திலிருந்து வாழ்கிறதா நானுங்கூடவே வருகிறேன் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-சாவேரி

என்னிலுமழுதுமாறி யேங்கியோர்பரதேசிபோல்
பன்னுதன்னைக்கைவிட்டு வருவதேன்மந்திரிநீதான்
மன்னியவிஸ்வாமித்திரர் பருத்தநாடகசெய்ய
உன்னையல்லாறுவேறே குற்றநற்றுணைவருண்டோ

வசனம்.

வாராயென்னுடைய விவேகமந்திரியாகிய சத்தியகீர்த்தி நானொருபரதேசியென்றிருந்தால் என்னிலும் பரதேசியாயழுதுமாறி யிப்படிவருவானேன் அந்த விஸ்வாமித்திரமகாரிஷிக்கு இராசாங்கம் பண்ணுகிறதற்குச் சகாயமாயிருக்க உன்னையல்லாது உரித்தானமந்திரியுண்டோ போய்விடு போய்விடு சத்தியகீர்த்தி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-ஆகிரி

காறுடாறென்றாலுநம்மேலெல்லாம் கருதிய பாக்கியம்வேண்டாம்
பேறுந்தருளேயும்மைப் பிரிந்துநானிருக்கமாட்டேன்
நீறணி புனிவனுக்கே நிலைமையோவடிமையோநான்
சோறுவேண்டாதபேர்க்குத் தரித்திரமுண்டோசுவாமி

வசனம்.

கேளும் எங்களாண்டவராகிய இராச சக்கிரேஸ்வரா அந்தவிஸ்வாமித்திரரிஷிக்கு நானேதானிலும் சொந்தமனுஷனோ அல்லது நானேதானிலும் அவருக்கடிமையா அவனிடத்திலெனக்கு மந்திரித்தனம்வேண்டாம் பாரிடத்திலே யாசித்து சம்பளம் வேண்டியவன் தானே சேவிக்கவேண்டும் சோறுவேண்டாதபேருக்குத் தரித்திரமுண்டா உம்மைவிட்டு நான்பிரியமாட்டேன் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

ஆடையாபரணமாச்சிய படம்பூமவர்க்குக்கொடுத்தேன்
தேடியவானைசேனைத் திரளெலாமவர்க்கேகொடுத்தேன்
காடெலாங்கடந்தேகாந்தக் காசிக்கேசென்றுபொன்னைத்
தேடப்போமென்பின்வந்து திகைத்திரோவாமோ மந்திரி



வசனம்.

போனாய் சத்தியகீர்த்தி என்னுடைய நாடுநகரம் யானைசேனை ஆடையாபரண முதலாகியதும் அந்தவிஸ்வாமித்திரருக்கேகொடுத்துவிட்டேன் அவருக்குக்கொடுக்கவேண்டிய கடனுக்காகக் காசிப்பட்டணம்போய் இரக்கப்போகிறேன் என்பின்னேநீயும்வந்து அலைச்சல் படவேண்டுமோ நில்லுமந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-கண்டா.

அக்கினிக் குழியிலென்னை யழுத்தியேவதைத்திட்டாலும்
உக்கிரமாய்விஸ்வாமித்திர னெங்கியேசபித்திட்டாலும்
சொக்கியதளருமுங்கள் துயரத்தையானுங்கூட
சக்கிஷியில்லாமற்பாதி கைக்கொள்ளாதிருந்திடேனே

வசனம்.

என்னையக்கினிக்குழியிலே தள்ளிச் சித்திரவதையாக வதைத்தாலும் அந்தவிஸ்வாமித்திரரிஷிக்குக் கோபம் வந்து சாம்பலாகச் சபித்தாலும் நீங்கள் படுகிறதுக்கத்தை நானுங்கூடவிருந்தனுபவிக்கிறதேயல்லாது ஒருக்ஷணப்போதாவது நானிங்கேயிருக்கமாட்டேன் சுவாமி.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-வராளி

தான்தான்பட்டகருமமெல்லாந்தான்றான்றொலைக்கவேணுமல்லால்
நான்போய்ப்படும்பாடெல்லாம் நீயானும்படவேணென்றாலும்
வான்சேர்மேன்விமுனிவிஸ்வா மித்ரர்மனமிரங்கலியாரோ
யான்போல்விழிபாளுடன்மகனும் வருவார்நீபோய்வருவாயே

வசனம்.

கேளாயெனது விவேக மந்திரியாகிய சத்தியகீர்த்தி நான்தான்பட்டகருமத்தைத் தான்தான் அனுபவிக்கவேண்டுமேயல்லாதொருவர் கருமத்தை யொருவ ரனுபவிக்கமாட்டார்கள் அதப்படியிருந்தாலுங் கெட்டிக்காரனை மந்திரியைமோசஞ்செய் தழைத்துக்கொண்டுபோய்விட்டானென்று விஸ்வாமித்திரர் சபித்தாலுங்கொள்ளுவார் ஆகையாலென்பெண்சாதி பிள்ளைகளென்னுடன் கூடவருவார்கள் நீர்பட்டணம்போய்ச் சேரும் மந்திரி

நட்சத்திரகன்-வசனம்.

ஓய்-ஓய் அரிச்சந்திரமகாராசனே நீரும் உம்முடைய பெண்சாதி பிள்ளையுங்கூடிக்கொண்டு போகிறதும் நம்மைக்காட்டிலேவிட்டுவிடுகிறதுமா இதோமோசஞ்செய்தான் இதோமோசஞ் செய்தான்.

அரிச்சந்திரன்-வசனம்.

சத்தியகீர்த்திக்குச் சொல்லிய சமாதானத்தில் உலகவாயாகச் சொன்னேனேயல்லது உம்மையொருக்காலும் விட்டுப்பிரியோம் சுவாமி நட்சத்திரத்தரகரே.

தரகன்-வசனம்.

ஆனால் சந்தோஷம் ஆனால் சந்தோஷம்

சத்தியகீர்த்தி-புலம்பல்-தரு-இ-ம்-எதுகுல காம்போதி-தாளம்-ஆதி

அன்புடனேநீயாருமென்னை யாதரிப்பாரென்றுசொல்லி
யிருந்தேனே துயர் விருந்தேனே
முன்பின்னென்றுடலெல்லை முசமதியானாற்போல
மோசஞ்செய்யநினைத்திட்ட மொழிதானோவேறோர் பழிதானோ
என்னைப்பெற்றதாய்தந்தை யெல்லாம்நீயென்றிருந்தேன்
வங்கிப்பாதவிக்கவிடலாமோ சகிக்கப் படலாமோ
தன்னைநம்பியிருந்தபேரைத் தனக்குவருத்தம்வந்தால்
தள்ளிவிட்டெண்ணிநெஞ்சந் தரிப்பாரோ நமஸ்கரிப்பாரோ
நாடுவரும்நகரம்வரும்நல்லபிள்ளைபெண்டுவரும்
நம்பினவர்போனால்பின்புவருவாரோ நலந் தருவாரோ
கூடுபோனால்கூட்டிலுள்ளகுற்றுயிர்போகாதுண்டோ
குலையுதென்பனைதபோவிதிஞாயம் ஓகோ இதுமாயம்
காடுமலையிந்தபூமிசுக்கிஷமென்றெண்ணிமெள்ளக்
கடிவாரோவினையம் முடிவாரோ
பாடுவந்துநேர்ந்திட்டாலும் பழிவந்தடுத்திட்டாலும்
பற்றுதல்விட்டனைக்கணமொழிவேறோ சூதுமொழிவேறோ

அரிச்சந்திரன்-விருத்தம் இ-ம்-முகாரி

பனைவியுமகனுநானும் வருமிந்தத்தரகன்கையில்
சனங்கொலைநலையுடங்கள் காட்சியைநீயுங்கூடத்
தினமுங்கண்டழவேலப்பா சிந்தித்தாய்துயரப்படவேண்டாத்
தனிமதிசத்தியகீர்த்தி தளராமல்வருகுவாயே

வசனம்.

கேளப்பா எனதுவிவேகமந்திரியாகிய சத்தியகீர்த்தி நாங்கள் மூன்றுபேரும் இந்த நட்சத்திரத்தரகர் கையில் படப் போகிற பாட்டையும் நீர்பார்த்து அழவேண்டாமாவிசனப்படவேண்டாமய்யா.



சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-கண்டா

இடிவந்தேவிழுந்திட்டாலு மிவர்கையில்நாமெல்லோரும்
கடனுக்காய்ப்பாடுபட்டுக் கலக்கமுற்றழுதிட்டாலு
மடிவிலாவெனதுநெஞ்சம் வருந்துபோவருந்தமாட்டேன்
படிமிசைநான்செய்புண்ணியம் பலித்ததுபுனிதனானேன்

வசனம்.

சேனுந்தசுவாமி யெங்களாண்டவராகிய இராசசக்ரேஸ்வரா இப்போ நல்லதேவா நான்புனிதனானேன் கடனுக்காக நீங்கள் படுகிற பாடெல்லாம் நானும் படுவேனே யல்லது தளரமாட்டேன் உள்ளபடியாகின்றது நடவுஞ் சுவாமி.

பொருகொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

வாடியமுமந்திரியை மன்னனுடன்வாழ்செய்தே
நாடியந்தசிவகாசி நகரையெண்ணித்தாடைக்க
காடுமலைமிகச்சூழும் கடும்பாலைவனத்தில்வா
நீமுனிபாய்கையினால் நேர்ந்ததுன்பப்புகல்வேனோ

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சத்தியகீர்த்தியாகிய மந்திரியையுங்கூட அழைத்துக்கொண்டு சந்திரமதியம்மனுந் தேவதாசனும் அரிச்சந்திரமகாராசனும்நட்சத்திரத்தரகருடனே கூடசாகிப்பட்டணத்தேடி ஆரண்யத்திலே பாலைவனத்தில் வரும்போது விஸ்வாமித்திரர் மாய்கையினாலே அவர்கள் துன்பப்படுகிற விதங்காண்க.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-வராளி.

இந்தவெண்மணலுஞ் செந்தழல்போ லிருக்குதே சகிக்கவென்வசமோ, தந்தையே அம்மா சத்தியகீர்த்தி தகிக்குதேயென்செய்வேனேயோ, சந்தாப்பாதஞ்சிவக்குதேயிவந்து ,சுருக்கென்று கொப்பளிக்கிறதே; முந்தநான்செய்ததீவினைப்பயனோ முடிவிதுவாகுமோ வழியேயன்.

வசனம்.

ஆ என்னைப்பெற்ற அய்யனே அம்மா ஆ சத்யகீர்த்தி இந்த மணல் நெருப்புப்போலக் கொதிக்கிறதே பாதமெல்லாஞ் சிவந்து கொப்பளிக்கிறதே இப்படி தகிக்கால் என்னால்சகிக்கவசமோ இது நான் முன் செனனத்தில் செய்தபாவமோ இனியெப்படி முடியுமோ என்னசெய்வேன் என்னசெய்வேன் ஈஸ்வரா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சௌராஷ்டகம்.

ஐயையோமகனேநீபடுந்துயர மாற்றவோதந்தையைப்பார்த்தால்
வையகமுழுமைபெற்றதோர்தன்வயிறுதான்கொதிக்கின்றதப்பா

செய்யபஞ்சணைமேல்மருமலர்தூவிச்சிற்றடிவைத்துநீநடந்தால்
செய்யுபசாரமெத்தவுண்டதனைச்சிந்தித்தால்மனந்தரித்திடுமோ

வசனம்.

ஆ எனதுதவப்புத்திரனாகிய தேவதாசா என் கண்மணியேயுன்
னுடைய துக்கத்தை நானெப்படி கண்ணினால்பார்ப்பேன் இதோ
உன்னைப்பெற்ற பிதாவாகிய மகாராசா உன்னைப்பார்த்துப்படுகிற
துக்கத்தைக்கண்டால் இந்தவுலகமெல்லாமழுமே அப்பாமகனே ப
ஞ்சணையின்மேல் புஷ்பங்களைத்தூவி யதன்மேல் நீ சிற்றடியிட்டு
நடந்தால் பாதம் நோகுமென்றழுவாயே அப்படிப்பட்ட நீ யிந்
த வெண்மணலில் நடக்கவும் நாங்கள் கண்ணினாற்பார்க்கவும் வந்த
தா மகனே பெற்றவயிறு கொதிக்கின்றதே யென்னசெய்வேன் எ
ன்னசெய்வேனடாமகனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி.

மூவருங்காணாமங்கல்யங்கண்டு முறைப்படிவிவாகநான்செய்தே
ஆவலாய்க்கூடித்தவத்தினாலுதித்த அருமைசேர்மைந்தனேயப்பா
நீவருந்திடவுமுன்னுடன்தாயார் நின்றுநின்றழுதிடநானுஞ்
சிவனில்லாப்பதுமைபோலிருக்கத் தெய்வமும்விதித்தவாறிதுவே

வசனம்.

திரிமூர்த்திகளுங் காணப்படாத திருமங்கல்யங்கண்டு விவா
கஞ்செய்து கூடி அருமையாய்ப் பெற்ற என்மகனே நீபடுகிறது
யாமும் நான்கண்ணினாலே கண்டு சித்திரப் பதுமைபோ லிருக்கி
றேனே தெய்வமிப்படியும் விதித்ததாமகனே.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

சிங்காதனத்தின்மிசையிருந்த தேவாவுனது துக்கமுமுன்
மங்காகியதோர்மனையாளும் படுந்துக்கமுநான்பார்த்தாலும்
இங்கேயிந்தவிளங்குழந்தை யெய்துந்துயரம்பார்ப்பேனோ
பொங்கோர்தோளின்மிசையெடுப்பேன் புனிதாவேறென்செய்வே
(னே

வசனம்.

ஐயையோ சிங்காதனத்தின்மேலிருந்து அரசாட்சிசெய்ததே
வரீர் படுகிறதுக்கமும் தேவரீர் பத்தினியாகிய வெனது தாய்சந்
திரமதியம்மன் படுந்துக்கமும் நான்பார்த்துக்கொண் டிருந்தாலு
ம் இந்தக்குழந்தைபடுகிற துக்கத்தை நானெப்படி பார்ப்பேன் எ
ன்னையன் தேவதாசனை யென்தோளின்மே லெடுத்துக் கொள்ளு
கிறேன் அதற்குமேலும் நானென்ன செய்யப்போகிறேன் மகாரா
சனே.



சத்தியகீர்த்தி-வசனம்.

அப்பாதேவதாசா என்கண்மணியே என்தோளின்மேலே
றிக்கொள்ளு மப்பா.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆகிரி

பெண்ணினமயிலேசருப்பிறுமதுவாற்பெருத்ததுதல்லின்பவாரிதிசேர
கண்ணினாற்கண்டுநேயத்துயரம் கடக்கவுமினியென்னால்வசமோ
மண்சுடப்பாதம்வருந்துமேயதனால் வந்தெந்தன்தோள்மிசையே
எண்படுமிராமனெழுதியவெழுத்தினியல்பிதோவறிகிலனேயோ(ரும்

வசனம்.

ஐயையோ எனது பிராணபதமான சந்திரமதியே இந்த சுடுமே
ணலின்மேல வருந்தப்பட்டு உன்பாதம் நோசக்கண்டு நானெப்படி ச
கித்திருப்பேன் ஆகிலும்பிரமாவும் எழுதினது இருக்கட்டும் என்
தோளின்மேலேறிக்கொள்ளும் நானெடுத்துக்கொள்ளுகிறேன் பெ
ண்ணேசந்திரமதி.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

பூமகளுநிலமகளும்பொருந்துபுயமிசையடியேன் பொருந்தியேற
நீமனதுசம்மதித்தாலுனதற்குச்சம்மதிக்கநினைக்கலாமோ
சாமுடலுக்குறுதியுண்டோசத்தியத்துக்கழிவுமுண்டோ தாணிமன்
றேதமதுவாரகம்வரும்வரும்நீநடக்கிலந்நெறிசெல்வேனே

வசனம்.

ஸ்ரீமகாலட்சுமியும் பூமிதேவியும் வாசஞ்செய்யாநின்ற உம்
முடைய புசத்தின்மேல் நாயினுங் கடையாகிய நானேறத்தகுமா நா
கமல்லாகிடைக்கும் நான்படுகிற துக்கத்தைப் பார்க்கமாட்டாமல்
நீர் சம்மதித்தாலும் தெய்வம் சம்மதிக்குமா நீர்மாத்திரந் துக்கப்
படாமல்நடந்தால் உம்முடையின்னாலே கூடவேநடந்து வருகிறே
ன் மகாராசனே.

நட்சத்திரத்தரகன்-வசனம்.

அடாய் அடாய் நேரமாகிறது நேரமாகிறதுவேறுவைபிரா
னைன்பாறது நேக்கெப்படி நேக்கெயிபடி சொல்லும் பின்னாய்

அரிச்சந்திரன்-வசனம்.

திரிகால சந்தியாவந்தனந் தவறாமல் ஓமாக்கினி வளர்த்திக்
கொண்டிராநின்ற பிராமணனே இந்தமனைத்தங்கை யொன்றுஞ்செ
ய்யமாட்டாது தேவரீர்பாதத்தைக் கையிலேந்திக் கொள்ளுமேரும்
சுவாமி.

தாசன்-வசனம்-ஆம் ஆம் தேக்கு மிப்போதுதான் சந்தோஷம்

சந்திரமதி விருத்தம்-இ-ம்-கண்டா.

ஈதென்னபொல்லாக்கால மெரிவனஞ்சுடுமணற்குன்
றாதம்வைத்திடப்பதைத்துப் பதறியயர்கின்றோமே
சாதகவெறும்புதேள்கட் டறணைபாம்புடன்செம்பூரந்
திறுடன்கடிக்கச்சீறந் திருவிளையாட்டைப்பாரும்

வசனம்.

அரிகரி யிதென்ன பொல்லாதகாலம் இந்தக்குரூரமான வனத்திலே யிந்தச்சுடுமணலிலே நாம்படுகிறதுக்கந்தா னிருக்குதே அதுபோதாதென்று தேள் பாம்பு கட்டெறும்பு அரணைபூரம் கும்பல் கும்பலாய் கால் வைக்க இடமில்லாமல் சீறிக்கொண்டுவருகிற திருவிளையாடலைப்பாருமகாராசனே

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

கண்களுங்கூசித்தக் காட்டினிற்காடிசெந்நாய்
வெண்புலிநரிகள்மற்றும் விசித்ரமிருகக்கூட்டம்
புண்படவதைக்கவோடிப் புறண்டிதோவருகுதையா
தண்புடனென்னைப்பெற்ற தாதனேயென்னசெய்வேன்

வசனம்.

ஓகோ எனதுபிதாவே பார்க்கின்றதற்குக் கண்கள் கூசத்தக்கதாக இந்த ஆரண்யத்திலே காடிகள் புலிகள் செந்நாய்கள் நரிகள் விசித்ர விசித்ரமான அகோரமிருகக் கூட்டங்கள் இளைச்சலிட்டுவருகின்றதே யென்னசெய்வேன் என்னசெய்வேனையா

அரிச்சந்திரன்-கண்ணி-இ-ம்-புன்னாகவராளி-அடதாளம்

சிவசிவா அந்தவிஸ்வாமித்திரர்செய்கையுமிதுவோ-நான்
செய்ததிவினையனுபவித்திடத்தெய்வமும்-பொறுவோ
தவறில்லாமற்காசிப்பட்டணந்தனைச்சேரவோ-இந்த
சங்கடம்வந்துமாட்டிக்கொள்வதும்-தர்மத்தேரவோ
சகலத்தினிலென்னைப்போலொருபாவிதானுண்டோ-நான்
தர்மஞ்செய்யக்கர்மம்வருமோ-இவையக்கைக்கொண்டோ
மகன்படுந்துயர்கண்டு தாயார்மனதுவாடவோ-அந்த
வருத்தங்கண்டுநானுங்கூட மனந்தள்ளாடவோ
நாடுநகரம் பூமிவாழ்வும் நலமும்விட்டேனே-என்றன்
நல்வினைப்பயனென்றுநினைத்து நான்புறப்பட்டேனே



தேடியயானைசேனைசெல்வச்செருக்கும்வென்றேனே-முன்
செய்ததிவினையொழிந்ததென்றுஞ்சிரமாய்நின்றேனே
போனதெல்லாம்போகட்டென்று காலைக்கொடுக்கவோ-நடந்து
போகொட்டாமலிராமதிமிலேனிற்கவிலையைத்தடுக்கவோ
ஆனதெல்லாமாகட்டுமென்ன வினைந்தகாரணர்-ஐயோ
ஆருமோவிஸ்வாமித்திரர்க்குமனதுபூரணம்
விஷத்தின்மிகுந்தபாம்புகளுந்தேள்கடிக்கவருகுதே-இந்த
விரியன்குத்திரிப்பாம்பைக்கண்டாலெஞ்சமுருகுதே
நிமிஷநாமநினைக்கப்போதுமோரிஷிகள்செய்ததை-எஞ்சில்
நினைத்திரந்தசித்ரவதைகள் செய்யநினைப்பாரோகதை
சுருக்குசுருக்கென்றெரிய விஷங்கள்கடிக்கநேருதே-இந்த
குழந்தைவினைநினைக்கப்ராணமகொண் டேற்தந்தேகந் சோருதே
பொறுக்குமோசந்திரமதிதன்தேகம்தெய்வமில்லையோ-என்
பூர்வபுண்யவசமேயொருவார்த்தைசொல்லையோ

அரிச்சந்திரன் விருத்தம்-இ-ம்-ஜோலாப்புரி

செங்குளவிதேளரணை செம்பூரமட்டை
வங்கையொடேபாய்புகளடித்திடவருந்தி
இங்கெனதுதேகமுங் கறுத்ததுதடித்தே
மங்கையுமிந்துயரமாற்றவசமாமோ

வசனம்.

அரிகரி இந்தத்தேள்களுங் குளவிகளும் கொட்டுகிறதிலேயும் இந்த மட்டை அரணை செம்பூரம் பாம்புகள் மேலும்மேலுங்விழுந்து கடிக்கிறதினாலேயும் தேகமெல்லாங் கறுத்து விஷமேறித் தழும்பாச்சுதே இனியென்பிராண நாயகியான சந்திரமதியடுகிற அவஸ்தையை யெப்படிச் சகிக்கலாகும் ஈஸ்வரா ஈஸ்வரா

சந்திரமதி-தரு-கண்ணி-இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி

பாவிதெய்வமேநாட்டைப் பறித்துக்காட்டினில்விட்டுப்
பதைக்கச்செய்தாயேயிது — போதாதோ
ஆவிதுடிமாறவெங்களுடைமைகொலைத்தகற
அலையவிட்டாயெங்கள்மேலே — வாதேதோ
பிறந்துநம்புயாதவித்துப்பெண்ணெனும்நான்வாழ்வதிலும்
பேசாமலிறக்கச்செய்ய — லாகாதோ

மறந்திருந்தாரோஐயோ மாயவிஸ்வாமித்திரமுனி
வஞ்சனைவெங்களைவிட்டுப் போகாதோ
பேர்தெரியாப்பாம்புக்கூட்டம்பிடுங்கவுந் துர்த்துதையோ
பேதைநானென்னசெய்வேன் சதிதானோ
பார்மிசைப்பெருத்தெழுந்த செங்குளவிபூரமட்டை
பற்றியெரியக்கடிக்க விதிதானோ
மன்னன்படுந்துயாமும் மைந்தன்படுந்துயாமும்
மந்திரிபடுந்துயாமுந் தீராதோ
என்னசெய்வேன்ப ர்த்திருந்து மென்னுடப்புநோகுதையோ
இந்தவிதிவஞ்சகர்க்கு வாராதோ

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

என்னையாள்மன்னுவுந்த னெழில்மேனிவருந்துமுன்னே
என்றுபிறமன்றிடாதோ வென்செய்வேனையோவித்தப்
டன்னியவிஷத்திஜ்பூச்சி பலபலவடிவாய்வந்து
மின்னுடார்படைக்கத்தேகம் வெதும்பவேகடிக்குதையோ

வசனம்.

ஆ எனதுபிராணநாட்சகா தேவரீர் படுகிற வருத்தத்தைப்பா ர்க்கிறத்துக்கு முன்னமே அடியாளுடைய பிராணன் போய்விட லாகாதா இந்தசெங்குளவி கருங்குளவி பாம்பு அட்டை அரணை இதுகள் கடிக்கிறதினாலே மார்பிலடைக்கிறது தேகமுங்கறுத்து த்தழும் பேறுகின்றது பிராணனும்போக வில்லையே யென்னசெ ய்வேன் என்னசெய்வேன் பிராணநாயகா.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

என்னநான்செய்வேனென்னை யீன்றதாய்தந்தையானோர்
இன்னல்சேர்வனத்திலித்த விடர்படக்காண்பதுண்டோ
முன்னமேபிரமனிந்த முறையறிந்தெழுதிவிட்டான்
தன்மையில்லாதபாவித் தெய்வமுஞ்சதிக்குள்ளாயோ

வசனம்.

ஐயையோ என்னைப்பெற்ற தாய்தந்தையர்களிந்த அத்வான ஆரண்யத்திலே யவஸ்தை படுகிறதை நான்பின்னைபிறந்து கண்ணி னாலேபார்த்துப் பாதவிக்கும்படி யாச்சுதே பிரமாவுக்குத்தான் மு ன்னமே தெரிந்து இப்படியெழுதிவிட்டாலும் பாவிஷ்டிதெய்வமு ஞ் சதிசெய்யலாகுமா அரிகரி.



சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-வராளி.

ஒருபிடிக்கவுயிர்போனாலு முறுதியாப்புண்ணியமுண்டு
வருமுச்சடாப்புத்திரன் மருந்தொன்றுமதிலில்லையே
உருகிச்சிந்தையர்வேருமி புடம்பெலாங்கிஷத்தால்வெம்பி
கருகிச்செய்புண்ணுக்குச்சன்னை பாராமலுயிர்போகாதே

வசனம்.

எங்களாண்டவனாகிய இராஜசக்கிரவர்த்தியாரும் அவர் பத்தினியாகி ய சந்திரமதியம்மையாரும் படுகிறதுக்கத்திற் கழுவேறு இந்தபாழும் பாம்பு தேள் முதலியவைகள் கடித்து விஷமேறித் திகிர்மேலெல்லா ம் கறுத்துத் தழும்பேறினதற் கழுவேறு விஷத்துக்கு மருந்து மறியாமலோ பிராணனுமொடாமலில்லையே இவ்வுபாரிகிறது பிரா ணனை விட்டுவிட்டாலும் புண்ணியமாகுமே அரிகரி.

அரிச்சந்திரராசன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

வில்லுவாளேபிடிப்பவனை வீழுங்காக்கவலைமேந்துவந்து
தஞ்சமில்லாதகாட்டிற் றவிக்கச்செய்த துவல்லமதீ
கஞ்சுறுத்தேள்பாம்பட்டைகருங்குளவிகள்செய்பூரம் (பா
புஞ்ஞூக்கடிக்கச்செய்தாய் பொன்வேண்டாம்போதேனப்

வசனம்.

ஒய் ஒய் அரிச்சந்திரமகாராசனே நம்மைப்பகைப்பித்தக்கா ட்டிக்குள்ளே யழைத்துவந்து சட்டமாலையிலே புறட்டுவித்தா ய் அப்படியும் நாங்கள் விடவில்லையென்றுபாம்புதேள்ட்டை அரணை கருங்குளவி செங்குளவி நம்மிருக்காய் வன்றி பூரம் செய்யான் கிறதேள்ப்பு கட்டெறும்பு முதலாகிய துயிட செந்துக்களை யேவி னேய் அதுகள் கொட்டுறது கொட்டுறது காணும் ஒய் கடிக்கிறது காணும் பிடிக்கிறதுகாணும் பிடுங்கிறதுகாணும் ஒய்சவ்வுறுதுகா ணும் கல்லுறதுகாணும் பிராணன் போகிறது காணும் போகிறது காணும் ஓய் நம்மையரசதிசர்விட்டுவிட்டால் எந்த அரசிலேப்பெ ட்டிமகன் உன்னைப்பணங் கேட்டான் இதோ போய்விடுகிறேன் காணும்.

ராசன்-வசனம்.

வஞ்சனையாகவாடி நீர்வருத்தப்படவேண்டாம் நாங்கள் காத்தை யடைகிறோம் இந்தராசபீடத்தில் கோமதியாயிருக்கின்றது அங்கே போனால் சபாசந்நிதிக்குக்கொள்ளலாம் சுவாமி.

தாசன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே தேசத்துக்கெரித்துக்காணும்

உம்மிடநினைவு ஆற்றங்கரைக்குப் போய்ச் சேருகிறத்துக்குள்ளே தேக்குப்பிராணன் போகப்போகிறது ஒருசனிவிட்டதென்று ஸ்நானஞ்செய்துபோட்டு அக்கரைபோகலாமென் றிருக்கிறீரா. இதுவே நல்லயோசனை நல்லயோசனை.

இராசன்-வசனம்.

தேவரீருடைய பிராணன்போகிறபோது எங்கள்பிராணனையுங் கூடவிட்டுவிடுவோமேயல்லது உயிருடனே யிருப்போமாசுவாமி மெள்ளநடந்துவாரும் மெள்ளநடந்துவாரும்.

நாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே யிந்தசென்மத்திலே யும்முடன்கூடத் தாசனாய் வந்ததற்குக் காட்டிலேயிழுத்துவந்து சுட்டமணலிலேபுரட்டிப் பாம்பு தேள் அட்டை அனையைக்கடிக்கவிட்டு இவ்வளவு பரிவட்டனைகள் நடத்தினீரே யினிசெத்தாலும் உம்முடன்கூட பணத்துக்கு வரவா நானுஞ்சாகவேண்டாம் நீருஞ்சாகவேண்டாம் பொன்னும்வேண்டாம் நானும்போய் விடுகிறேன்காணும்

மந்திரி-வசனம்

மரணவேதனைப்படுகிறபோது க்ஷத்திரியாருக்கு ஆங்கிகேட்டிருப்போலே காணுது கோபம்பண்ணுமற் கொஞ்சதூரம் நடந்துவாரும் சுவாமி.

நாகன்-வசனம்.

அடாய் அடாய் அந்தப்பசப்பனுக்கு வசப்பட்டமந்திரியல்லவா நீ யிங்கே உங்களுடனேயதிகமாய்ப்பேசினால் ஒருவேளை அப்படியிப்படிசெய்துபோட்டால்சாட்சியார்வந்துதொலைக்கிறேன்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-பர்துவாளி

கடன்வாங்கத்தாகனென்றே காவலாய்த்தொடர்ந்துவந்த
கொடுமையில்லாததீதா கோமதியாறிதையா
அடவியிற்பட்டதுன்ப மாயாசமெல்லாந்தீரத்
திடமுடன்ஸ்நானஞ்செய்து தாகமுந்தீரலாமே

வசனம்.

கேளுஞ்சுவாமி நட்சத்திரத்தாகரே நாமிந்த அத்வான வாரண்யத்திலே பட்ட வாதனை சங்கடந்தீர இதோ இந்தக்கோமதியாற்றிலே ஸ்நானஞ் செய்து ஆயாசந் தீர்த்துக் கொள்ளலாஞ்சுவாமி



நாகன்-வசனம்.

மகாராசனே யிருக்கக்கடவாய் மகாராசனேயிருக்கக்கடவாய்நம்முடைய பிராண அவஸ்தைதீர்த்துக்கொண்டு உங்கள் பிராணனுக்கு உலை வைக்கிறேன்.

இராசன்-வசனம்.

அப்படியே செய்யலாம் சுவாமி முன்னே ஸ்நானஞ்செய்து தாகந்தீர்த்துக்கொள்ளும் சுவாமி.

நாகன்-வசனம்.

சட்டவட்டமாய் ஸ்நானஞ்செய்து தாகந்தீர்த்துக்கொண்டேன் ஓய் அரிச்சந்திர மகாராசனே பொய்சொன்னாலும் பொருந்தச்சொல்லவேணும்நீச்சநிலையில்லாதபொய்சொல்லிறென்னகாணும்.

இராசன்-வசனம்-

அதுவேதுசுவாமி அடியேன் வாக்கினுளொருபோதும்பொய்வரமாட்டாது.

நாகன்-வசனம்.

ஆம்காணும் ஓய்ராசனே இப்போது அனாதாமிக்குமுன்னே நீங்களெல்லாஞ்சாகிறதாகக் கட்டிக்கொண்டழுதீர்களே நீர்செத்தீரா உம்மிட பெண்சாதிபிள்ளை செத்தார்களா உம்மிடமந்திரிகூடச்செத்தானு எதுகாணும் வெறுமைபொய்வார்த்தை.

இராசன்-வசனம்.

உம்மைச்கடித்த தேளும் பாம்புந்தான் எங்களையுங்கடித்தது நீர்பிராணன் போகுதென்று பட்டபாடுதான் நாங்களும்பட்டோம் நீர்செத்தீராசுவாமி நாங்கள் சாக.

மந்திரி-வசனம்.

நாம்சாகப்போகிறதில்லையென்று நமக்குத்தானென்றாய்த்தெரியுமே உங்களைப்போலே நாமேதாகினு மழுதோமா.

இராசன்-வசனம்.

பிராணன்போகவில்லை ரூபமாறிப் போச்சுது இதுவெல்லாஞ்சல்வரொத்தனம் நீர்பட்ட ஆயாசந்தீரச்சற்றுநேரம் பேசாமலிரும் சுவாமி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-முகாரி

ஏகவெண்குடைக்கீழ்நின்ற இசைபெறுமுலகையாண்ட
போகத்தின்மிகுந்தமன்னு பொன்மலர்சரணம்போற்றி
தேகத்தைக்காத்தல்லோமின் திரவியந்தேடலேனும்
ஆசையாற்கிழங்குகாய்க ளருந்தவேகொண்டுவந்தேன்

வசனம்.

கேளும் இராசசக்கிரேஸ்வரா திரிலோகத்தைக் காப்பாற்றிக்கொண்டல்லவோ திரவியஞ்சம்பாதிக்க வேணும் ஆகையால் காய்த்திலை கிழங்கு பழங்கள் கொண்டுவந்தேன் புசிக்க வெழுந்திரும் சுவாமி.

இராசன்-விருத்தம்-இ-ட்-பிரணாயிடிகம்.

பெருந்தவப்பயன்போல்வந்த பிரியமாந்திரகசேநீர்
வருந்தியிவ்வெகன்சேறைடந்த வனத்திலிருன்பட்டீரீ
அருந்தவெண்மந்திரிதந்த அருங்கனிகிழங்குகாய்கள்
இருந்ததிற்பொறுக்கிவைத்த விதைப்பெய்திருளுங்சுவா(மி

வசனம்.

கேளும் நட்சத்திரத் தாசரே யென்னுடனேகூட வந்துவெனக்காக இந்தக்காட்டிலே மகாவருத்தப்பட்டீரே அதையெல்லாம் பொறுக்க என்மந்திரிகொண்டுவந்த கந்தமூலபலாதிகளில் நல்ல காய்கிழங்கு பழங்களை யாகிகொண்டு பொறுக்கி யெடுத்துவைத்தேன் இதைப்புசிக்க எழுந்திருஞ் சுவாமி.

நாகன்-விருத்தம்-இ-ர-காம்போதி.

பிறந்தநாள்முதலாயிந்தப் பிரியமாங்கிழங்குகாய்கள்
மறந்துபோர்காமத்தின்று வயிற்றைநான்வளர்த்ததில்லை
இறப்படவுன்பின்வந்து இவ்வேயென்றறிந்திருந்தால்
சுறந்தபாற்றயிர்நெய்சோறு கட்டோடேசாப்பிட்டேனே

வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே நீரொரு நாளாய்ப்பிறைந்துக்கட்டவர்தான் போசயில்லை நான்பிறந்த நாள்முதல் புளிக்காய் புளியங்காய் காட்டிலே கிடக்கிறதென்றி எருக்கிலை காய்கிழங்கு இதுகளைச்சாப்பிட்டு வயிறு வளர்த்ததில்லையானும் உன்பின்னாலே வட்டைப்போல் இந்தக்காட்டிலேயலைந்து திண்டப வென்றறிந்திருந்தால் சாதம் நெய்பால் தயிர் கறியமுதுகள் இதுகளெல்லா முன்னமே தள்ளிப் போடுவேன் காணும்.

இராசன்-விருத்தம்-இ-ட-தன்னியாசி

தேவரீரறியாதுண்டோ தேவியுமகனுமாநம்
பாவிகள்போலேபக்ளெம் பாடுபட்டிட்டோமையா
நாவிலேசோறுதேடச் சமீபத்திலார்தானுண்டோ
ஆவலாயிதைப்பொசிப்பீர் யருந்துயர்படுகிறோமே



வசனம்.

சுவாமி நட்சத்திரத்தாசரே எங்களிடத்திலிருக்கிற பாக்கியம் உம்மையல்லாமல் வேறென்றுமில்லை உம்மை வஞ்சனைசெய்து நாங்க ளொருகிலும் பாவஞ்சாதமுண்டோ யாக்குமாத்திரம் சம்பாதித்துக்கொடுப்போமென்று சமீபத்திலிருக்கின்றதாய் கோபத்தைப்பொறுத்து எங்களையுங்கூப் பார்த்திருந்த வேணுமிது வே யமுதமென்று புசிப்பீரானுஞ் சுவாமி.

நாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே வாயையமூடிக்காணும் எனக்குச் சோறுபோட வுனக்குத் தெரியில்லாவிட்டால் இல்லையென்று சொல்லலேனுமேயல்லாமல் உன்னுடைய வார்த்தைகளைச்சொல்லிக்கொண்டதுமேல் எப்படியிருந்தாலும் இதைப் பெய்தெரியுங்காணுமைய முன்னே விழுங்காணுங் விமக்

சந்திரமதி-விருத்தம்-இ-ம-கண்டா.

பொன்னுடனுடனேநீர் பிறந்ததுமில்லையாதியா
மன்முழுதாண்டமன்னர் வருந்திநோவதுமிக்காணுண்டோ
கண்ணினுற்கண்டாய்வேசன் காட்டியாங்கோலத்தந்தை
தன்புடன்பொறுத்தேயிதை நல்லமுதென்றுகொள்வீர்

வசனம்.

ஆ நட்சத்திரத்தாசரே யித்தவுலகத்தையெல்லா மரசாண்டமகாராசனானவர் இப்படி யலைக்கியமுதால் உம்முடைய மனதென்னகல்லா நீருமுடன் பெண்ணுடன் பிறந்ததில்லையா நாங்கள்படுகிற ஆபத்தெல்லாங் கண்ணினாலே பார்த்திருந்தாயிந்தவேணுமிது வே யமுதமென்று புசிக்கவேணுஞ் சுவாமி.

நாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே உன்னைப்பார்க்கிலும் பசப்பிகளும் உன்னுடைய ஆம்புடையாள் இவள் உன்பின்னாலேயைத்திறந்தா லெப்படியிருக்குமோ தெரியாது நடக்கட்டும் நடக்கட்டும் இதுவு மென்னுடைய கர்மவசந்தான்.

இராசன்-வசனம்.

சுவாமிநட்சத்திரத் தாசரே சற்றே சயனித்துக்கொள்ளும் நாங்களும் சற்றே சயனித்துக் கொள்ளுகிறோம் சுவாமி.

நாகன்-வசனம்.

ஆம் ஆம் சேக்கு நித்திரைவாராது நீரும் உம்முட ஆம்படையாளும் சற்றே தாலாட்டுங்கள் நானித்திரை பண்ணட்டும்.

இராசன்-வசனம்.

அப்படியேதாலாட்டுகிறோம் நித்திரைபண்ணுஞ்சுவாமி

தாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே நீர் கால்மாட்டிலேயும் உம்முடைய ஆர்ப்புடையாள் தலைமாட்டிலேயுமிருந்து தாலாட்டவேணும் பிள்ளாய்.

தாலாட்டுகிற-தரு-இ-ம்-நீலாம்புரி-ஆதிதாளம்.

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆராரோ
ஆராகிலும்பார்ப்பார்க் காதைசொல்லலாகாதே (ஆராரோ)
தானமென்றுகடனுகித் தாகனென்றுபின்கூட்டத்
தீனதயாளமில்லாத் திரிக்கடனுத்தானே (ஆராரோ)
பாம்பாலேதேள்விழுங்கள் பற்றிக்கடித்ததினுற்
றேர்பியமும்போதுமுந்தன் சித்தமிரங்காயே (ஆராரோ)
பட்டபாடெல்லாம் பதறுமம்பார்த்திருந்தும்
இஷ்டமுடன்பாலுஞ்சோறு மெனக்களிப்பாயென்பவனே ()
மனைபாளமுதாலும் மைந்தனமுதாலும்
வினையம்மேம்பசி வெறுப்பனைகண்வளராய் (ஆராரோ)

தாகன்-வசனம்.

ஓய் ஓய் என்காணும் வெறுமைசாபித்துக்கொட்டறது

இராசன்-வசனம்.

இல்லை சுவாமி தேவரீர் குணத்தைப் புகழுகிறோம்.

தாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே ஏதுகாணும் நோக்கின்னம் இராசபட்டம் பேர்பெரிதா யிருக்கிறதினுலே அழைக்கிறது நேக்கு வருத்தமா யிருக்கிறதுகாணும்.

இராசன்-வசனம்.

அப்படி வேண்டாம்சுவாமி அரிச்சந்திரா வென்றழையும்.

தாகன்-வசனம்-அதுவுஞ்சொல்லமாட்டேன்.

இராசன்-வசனம்.

இல்லாவிட்டால் அரிச்சாவென்று கூப்பிடுஞ் சுவாமி,

தாகன்-வசனம்-அதுவுஞ் சொல்லமாட்டேன்

இராசன்-வசனம்-அப்பால் தேவரீர் சித்தம் சுவாமி.



தாகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தா சந்தா வென்று கூப்பிடுவேன்

இராசன்-வசனம்.

சுவாமி சுவாமி மகாபாக்கியம் மகாபாக்கியம்

தாகன்-வசனம்.

ஏதுகாணும் நேக்கிப்படி மழைவந்ததே மழைவந்ததே யிடியிடிக்கிறதே யிடியிடிக்கிறதே நேக்குப் பயமாயிருக்கிறதே

இராசன்-வசனம்.

பயப்படவேண்டாம் பயப்படவேண்டாம் உமக்கொருகுறைவும் வரமாட்டாது நாங்கள் நனைந்தால் நீரும் நனையும் சுவாமி.

தாகன்-வசனம்.

பல்லைக்கிட்டறதே குளிர் நடுக்கிறதே எப்படிகாணும் எப்படி காணும்.

இராசன்-வசனம்.

இந்தஆறு பெருகிக் கொள்ளுமுன்னே அக்கரை போய்விடுவோம் சுவாமி.

தாகன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

வாச்சொன்னவிடத்துக்கெல்லாம்வாவநாளுமோபோனினைத்
தாச்சொன்னவிடத்தில்நீயே தந்துபின்னடக்கவேணும்
நுரைசெறியாற்றில்மெள்ள நாழ்ந்தவோவழைக்கிறாய்நீ
துரைச்சிங்கந்தீயேயுன்னைச் சூரனென்றறிகிலனே

வசனம்.

ஆம்காணும் ஆம் நீவைத்த ஆளோநான் நீ வாச்சொன்ன விடத்துக்கெல்லாம் வரவும் போகவும் இப்போ பெருகி வருகிற ஆற்றிலே யென்னை நாழ்த்திப்போட்டப் பார்க்கிறாயோ சபாசகாணும் துரைச்சிங்கமே யிப்படிப்பட்ட சூதனென்றறியேன்காணும் நான்தாச்சொன்னபோது பொன்னைத் தரவேணுமே யல்லாமல் நானுன்பின்னே வரவேண்டியதில்லை போம்.

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி

நீர்மனக்கொதிப்பாயென்னை நிந்தித்தாலெனக்குவேறே
ஆர்துணையென்பதற்கே யானதோர்துணையுநீரே
பார்மிசையென்னைப்போலும் பாவியார்பொறுத்திடுவீரோ
பேர்பெறுமாற்றைத்தாண்டப் பிரியமாய்வருகுவீரே

வசனம்.

உம்மிடகோபத்தினு லென்னை நிந்தித்தா லெனக்குவேறேகதி யுண்டா என்பதற்குத்தெய்வம்போற் றுணைப்பட்டீரே முழுதும்

இரட்சிக்கத் தக்கதாகிய பிரயாசைசெய்துவாரும் இந்த ஆற்றைத்தாண்டிப்போய் விடுவோம் சுவாமி.

வசனம்.

ஓய் ஓய் இராசாவே அது அதிவேகமாய் மகாவெள்ளம் வாராதே நீங்களெல்லோரும் ஆற்றிலே போய்விட்டாலும் என்னைப்பாத்திரங் கல்பாடு தலைமாடாய்த் தூக்கிக்கொண்டுபோய் அக்கரைசேர்த்துவிடுங்கள் மகாபுண்ணியம் மகாபுண்ணியம் மகாராசனே.

இராசன்-வசனம்.

அப்படியேயடுத்துக் கொண்டு ஒருசிந்தனையு மில்லாமல் அக்கரைசேர்க்கின்றோம் பயப்படாமல் வாரும்சுவாமி.

நாகன்-வசனம்.

மகாராசனே கரையிற்சேர்த்தேனுநீங்களாற்போய்விட்டாலுங் கரையில் வந்துபார்த்துக்கொள்ளுகிறோம் நான்பாத்திரங்களை வந்து சேர்த்தனுப்பாரும் பாரும்.

இராசன்-வசனம்.

நாங்களொருவரும் ஆற்றிலே போகவில்லை தேவரீரையுங்கரைகொண்டுவைத்து சேர்த்தோம் சுவாமி.

நாகன்-வசனம்.

அப்படியா அப்படியா மகாசந்தோஷம் மகாசந்தோஷம்

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

பாதகவிஸ்வாமித்திரன் மாயமாயாற்றைத்தாண்டி
சோதனைராசனோடு கூடவந்தமைச்சேர்ந்தார்
காதகப்பசாசொன்றுங் கறுவிக்கொக்கரித்துச்சீறி
வாதுசெய்தாலென்றுமி வந்ததுபூதந்தானே

வசனம்.

அசோதெப்படியென்றால் கோமதி யென்கிற ஆற்றைத்தாண்டி அரிச்சந்திரமகாராசன் நாகனோடு கூட அக்கரையேறினவுடனே விஸ்வாமித்திரன் மாய்கையினாலே பயங்கரம் பசாசுக்கூட்டங்களுடனே கர்ச்சித்துப் பூதம் வருகிற விதங்காண்க.

பூதம்வருகிற-தரு-இ-ம்-தேசிக்தோடி-ரூபகதாளம்.

பூதம்வந்ததே-மகாபெரும்-பூதம்வந்ததே.

பாதகவிஸ்வாமித்திரன்செய்புமகாக்காலச்சர்ப்பசாசுக்கூட்டம்
பதறப்பதறக்கதறப்பயர்குதிக்குதிக்குதிக்தொடரொரு(பூ)



ஓவென்றெழுபிசாசுதான்வந்துகூவ-மற்றொருபசாசு
உதும்பிக்குதும்பிபூவென்றுபின்னேயேவ
ஆவென்றுவாயைத்திறந்தோர்பசாசுதாவ பின்னொருபசாசு
அதனையுறக்கிக்கோவென்றிரைச்சலேவ
யாவராகிலுமெதிர்நிற்கக்கூடுமோ
அகப்பட்டாற்கொல்லாமல்தருமத்தைநாடுமோ
அறையக்கறுவிக்கறுவிப்பிடியெனக்
குறங்கிப்பயலைத்தலையைக்கடியென (பூதம்)

காட்டிலுள்ளயானைகள்சுண்டாங்கி-மற்றுமங்குள்ள
கடினமிருகங்கள்கலங்குமேகண்டேங்கி
நாட்டுமனிதரால்போகுமோபசிநீங்கிஆறுநூர்லெகு
நாளாய்ப்பசிக்குதுநான்விடுவேனோபின்வாங்கி
நீட்டமாமிந்தப்பல்லுக்குப்போதாது
நேர்ந்ததைவிட்டிடநினைத்திடலாகாது
நிணமுங்குடலுந்தலையும்பொடிபட
நிரையுமுதிரம்பெருகியின்றெதிர்பட (பூதம்)

ஆரவாரத்திறுல்தலைகளுங்குலுங்க கைகளைநீட்டி
அட்டகாசமிட்டதிலண்டங்கலங்க
கோரமானவுக்ரதந்தங்களிலங்க கண்களிலும்
கோபத்திலெழுங்கனலாலெங்குமலங்கச்
சாருமேகக்கர்ச்சனையென்னத்
தழைத்துவளர்ந்து நிறமிறென்னத்
தரையுங்கடலுந்திசையும்விடவிட
அறையுங்காமுஞ்சிரமும்பொடிபட (பூதம்)

நாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே நான்பிராமணன் நம்மைப்பூதங்கொல்லவந்தது நம்மை யிரட்சிக்கவேணும் கைகால் நடுக்கிறதே பயமா யிருக்கிறதே ஓய் என்னைத்தானே பார்க்கிறதுகாணும் மகாராசனே.

இராசன்-வசனம்.

பயப்படவேண்டாம் பயப்படவேண்டாம் சுவாமி யெங்களுக்கு நடுவேயிரும்.

பூதம்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஆரடாமனிதாபத்த வந்தணன்நீங்களாகப்
பேர்பெறமுங்கள்நாலு பேரையுஞ்சொல்லவேணும்
காரடஞ்செய்வதாலுங் கதறிநின்றழுவதாலுந்
தீருமோபசியெனக்குத் தின்னாமல்விடுகிலேனே

வசனம்.

ஆரடா அடா மனிதா நானொரு பெரும்பூதம் என்பின்னாலே நிற்கின்றதோ பசாசக் கூட்டங்கள் அந்தப்பிராமணன் நீங்கலாக உங்கள் நாலுபேரையும் கொன்று டசிக்கவேணும் நீங்கள்பண்ணு கிற காரடி வித்தையினாலேயும் அழுகிறதினாலும் விட்டுவிடுவேனா வாடாவா

இராசன்-விருத்தம்-இ-ம்-ரேகுப்தி.

சாலவேபுண்ணியந்தான் தாபதமறையோன்றன்னை
கோலமாவதைசெய்யாமற் குறித்திட்டாய்நாலுபேரை
ஞாலமேற்பிறந்தபாண்டம் ஞாலத்திலுடைவதல்லாற்
சீலமாய்நிற்பதுண்டோ சீக்கிரம்நீபொசித்தால்நன்றே

வசனம்.

பூதமென்றன்னைச் சொல்லலாகாது இந்தப்பிராமணனைமாத் திரம் உயிருடனே விட்டு எங்கள் நாலும்பேரையுங் கொல்லநினைத்த தினாலே யுன்னைப் புண்ணிய புருஷனென்றுசொல்ல வேணும் ம ண்ணிலே பிறந்தபாண்டம் மண்ணிலே யுடையவேணுமாகையால் எங்கள் நாலுபேரையுஞ் சீக்கிரமாய்ப்பொசித்துவிடும் பூதமே

தாகன்-வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே உங்களைக்கொன்றபின்பு எ ன்னையுங் கொல்லுமோ வென்னமோ தெரியவாது உங்களைவிழுங் கிப்போட்டபிற்பாடு என்னைமாத்திரங் கொல்லாமல் விட்டுவிடும்ப டியாக அதனிடத்தில் சத்தியஞ்செய்து சொல்லும் மகாராசனே

இராசன்-வசனம்.

அப்படிக் கெங்கள் பிராணன்போனாலும் உனைக்கொல்லா மல் விட்டுவிடும்படி பத்திரப்படுத்திக் கொள்ளுகிறேம் பயப்ப டாதேயுஞ் சுவாமி.

பூதம்-விருத்தம்-இ-ம்-காம்போதி

நானொன்றுசொல்வேன்கேளும் நாலுபேர்நீங்கள்நிற்க (ம்
எனக்கேயாற்கொழுத்தபார்ப்பா னிவனைத்தந்திட்டாற்போது



ஊனுடன்கொழுத்தானன்று புருசியாயிருக்குந்தேகம்
தானிதுபசியடக்குந் தப்பிப்போய்விடுங்கள்நீங்கள்

வசனம்.

ஓய் மனிதரே யுங்களைப்பார்த்தால் விங்கலுந் தூங்கலுமா யி ருக்கிறீர்கள் காட்டுப்பன்றியைப்போல அந்தப்பார்ப்பான்கொ ழுத்துப் பருப்பு நெய்யுந்தின்று திரேகமுறுதியா யிருக்கின்றான் அவனைத்தின்றாலென்பசிதீரும் அவனைக்கொடுத்துவிட்டு நீங்கள் ஓடிப்போய் விடுங்கள்.

நாசன்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

இதுநல்லதருணம்புண்ணிய மென்னாலுன்னைப்போலும்
ததியினுபகாரஞ்செய் சத்தியமன்னவர்களுண்டோ
விதம்விதமாகவெந்தன் மெய்யெலாந்தடுக்கக்கைகால்
பதறுதென்செய்வேன்காத்தால் பரிந்திடப்பொன்கேளேனே

வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே நேக்காலும் கையுங்காலும் விடவிடென்று உதறுகிறது பிராணன் நிற்கிறதா யிருக்கவில்லை எ ன்னைக்காப்பாற்றி ரட்சிக்கிறது உமக்கு மகாகீர்த்தி இந்தவேளை பூதத்தின் கையிற் காட்டிக்கொடாமற் காப்பாற்றினால் ஆனைப்ப டிக்கு உம்மைப் பொன்கேளேன் நீர்காப்பாற்றுவீரென்று நேக்கு த்தெரியும் உம்மைப்போல் புண்ணியபுருஷர் இவ்வுலகத்திலுண் டோ மகாராசனே.

இராசன்-வசனம்.

எங்கள் பிராணன்போனாலு முன்முடையபிராணனுக்குப்பய மில்லை எங்கள் மத்தியிலிருஞ் சுவாமி.

நாகன்-வசனம்.

ஆனாலென்னை யழுத்திப்பிடியுங்கள் உர்பிட ஆட்பிடையா ளையுஞ் சற்றே பிடிக்கச் சொல்லும் பத்திரமாய்ப் பிடியுங்கள் மகா ராசனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி.

சத்தியமாய்ச்சொல்வேன்கேளாய்த் தகைபெறுபூதமேயெல்
சத்தியத்துக்கிடர்வாராமற் றரும்வரமொன்றுண்டையா
சுத்தசெனுமறையோன்றன்னைத் தப்பவைத்தெங்கள்தேகம்
நத்தியிவ்வேபோகொட்டாமற் சாப்பிடத்துணிகுவாயே

வசனம்.

கேளாய் மகாசத்தியபுள்ள பூதமே யெனக்கொரு வரந்தர

வேணும் என்சத்தியத்துக் கொரு குறைவும்வாராமல் இந்தப்பிராமணனைத் தப்பவைத்து எங்கள் இரேகம் வீண்போகாமல் பட்சணைபண்ணிவிடும் பூதமே.

பூதம்-வசனம்-ஆ அவனை விட்மாட்டீர்களா

இராசன்-வசனம்.

நாங்கள் உமக்கிரையாகிறதேயல்லாமல் இந்தப்பிராமணனை விடமாட்டோம் பூதமே.

இராசன்-வசனம்.

சுவாமி நட்சத்திரத் தாசரே பொழுதும் விடிந்தது பூதமும் மறைந்து போய் விட்டது சுவாமி.

தாசன்-வசனம்.

நன்றாய்ப் பார்த்து சொல்லும் நன்றாய்ப்பார்த்து சொல்லும் பயமாயிருக்கிறதே பயமாயிருக்கிறதே மகாராசனே

தாசன்-வசனம்-அதோ நிற்கிறதேபூதம்

இராசன்-வசனம்.

அதுபூதமல்லசுவாமி அடியேனிட பெண்சாதியல்லவா

தாசன்-வசனம்-இதோநிற்கிறதே பெரும்பூதம்

இராசன்-வசனம்.

அடியேனிடமந்திரி-சத்தியகீர்த்தியல்லவா சுவாமி

தாசன்-வசனம்-அதோநிற்கிறதே பக்கத்தில் குட்டிபூதம்

இராசன்-வசனம்.

அடியேனிடகுழந்தை தேவதாசன் சுவாமி

தாசன்-வசனம்-ஓய் ஓய் தூரத்திலே நில்லுங்காணும் நீரா

இராசன்-வசனம்.

சுவாமி சத்தனென்றுபேர்வைத்தீரோ அந்த அரிச்சந்திரனல்லவா

தாசன்-வசனம்.

ஆம் ஆம் நேக்குத் தெரியும் நம்மிட மந்திர சக்தியினாலே பலீலா மறைந்துவிட்டது பூதம்நம்மிட பேனாச்சொன்னால் பேயேது பசாசமேது பூதமேதுகாணும் இனிமேல் நம்மிடரொக்கத்தைக் கட்டிப்போட்டு அப்புறமடியெடுத்து வையும் பிள்ளாய்



இராசன்-வசனம்.

இதோ இந்தக்காடெல்லாம் தாண்டினவுடனே காசிப்பட்டணஞ்சேர்ந்து உம்முடைய பொன்னையெல்லாம் தந்துவிடுகிறேன் சுவாமி.

பொது-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

கொல்வேனென்றெதிர்த்தபூதங் குறித்தரிச்சந்திரன்றன்னை
வெல்வதுஅரிதென்றெண்ணி விலங்கியேபோனபின்பு
வல்வினைத்தாசன்செய்யும்வருத்தத்துக்குள்ளாயாங்கே
செல்வழிதனிலேவஞ்சஞ்செய்யுங்கௌசிகன்வந்தானே

வசனம்

இப்படி பூதமானது மறைந்துபோனவுடனே நட்சத்திரத்தாசன் கையில் உபத்திரவப்பட்டுக்கொண்டு போகும்போது விஸ்வாமித்திரரிஷி வருகிற விதங்காண்க.

விஸ்வாமித்திரர்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-தாளம்-மிசரம்.

வினைவழியறியாமற்போனேனே-அருந்தவத்தினில்
மிகுந்தவிஸ்வாமித்திரனானே

எனையொருவர்கள் செயிப்பதுண்டோ
எதிர்த்தான்வசிஷ்டனிவனுலகண்டோ
இருக்கட்டும்பார்ப்போம்தெய்வமுமில
னெண்ணமேமுடியப்பண்ணுமோசொடிய (வினைவழி)

அந்தாத்திலேசொர்க்கமுண்டாக்கினேனேவசிஷ்டபிள்ளைக
ளவிந்துசாம்பலாகப் பேசுகினேனே
அந்தமூவருங்கண்டாற்கலங்குமற்றத்தவரும்பயந்தோடி
எதிர்நில்லாரோயிந்தப்பாதகனாலேயென்மனம்
எங்குமோராதெவர்செய்தந்திரயித்துடனே
விட்டேனேதப்புமோகுறியெனவாய்ப்
போகுமோஎளிதமாகுமோஇகனால்
மனஞ்சிற்றும்வேயிருந்தேமிகவருந்தாமலே
பெண்ணிக்கொடிமுடிந்தெறிகுவேன்
பண்ணைக்கபடமுமறிகுவேன் (வினைவழி)

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விலக்கருந்தவத்தின்விஸ்வா மித்திரமாமுனியேபோற்றி
மலர்ப்பதம்வருந்தவேண்டி வந்தகாரணமேதையா

அலைச்சலுண்டோ நீர்நம் மயோத்தியிலுள்ளோரை
கலக்கமுற்றிடுதே நெஞ்சம் கருணையாய்ச்சொல்லுஞ்சுவாமி.

வசனம்.

சரணஞ் சரணம் சுவாமி விஸ்வாமித்திரமகாரிஷியே தேவரீர் திருவடிகளை வருந்த இத்தனைதூரமாய் அடியேனிடத்துக்கு வந்தகாரியமென்னதோ தேவரீராளப்பட்ட அயோத்தியிலே மந்திரி பிரதானிகள் சேனாதிபதிகள் குடிகள் மற்றுமுள்ள பிரசைகளினாலே மனதுக்கேதாகிலுங் குறைவுண்டோ அடியேனைப் பிரட்சிக்கும்பொருட்டாய்க்கிருபை செய்துணர்க்கவேண்டும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-ஆடாணா.

நானுனைநாட்டிலென்னை நலமிடர்விளைந்தென்வாழ்வு
மேனாளும்போகட்டுன்னைப் புத்திகேட்பேனுமன்று
வானோர்கள்மதிக்கநாட்டை மன்னுநீயாளவேணும்
இந்நாட்டையாண்டால்புண்ணியந்தவக்குநான்றவஞ்செய்வேனே

வசனம்.

கேளும் அரிச்சந்திரமகாராசனே நாளைப்பட்டநாட்டிலே நலம்விளைந்தாலென்ன இடர்விளைந்தாலென்ன அதற்காக நீபுத்தி சொல்ல வேண்டியதில்லை மனுவிக்யானந் தெரிந்த இராசாக்களே பூமியாளவேணுமானதால் அந்தநாட்டை நீயேயாளவேணும் அதினாலே யென்தலைபாரந் தீரவேணும் அந்தப் புண்ணியமுனக்கு லபிக்கத்தக்கதாக யான்போய்த்தவஞ் செய்யவேணும் மகாராசனே

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

தவத்தினில்மிகுந்தோரித்தத் தவறுசொல்வாரோ அய்யா
அவத்தினிலொழிந்திடாம லரியநாடுமக்கேதந்தேன்
பவத்தினின்றுயர்ந்தேபுண்யம் பலித்ததேசுகுணராய்பாவக்
கவத்துவஞ்செய்தேனைக்கக் கருதினீர்போம்போம்சுவாமி

வசனம்.

சரணம் சரணம் சுவாமி கோபமில்லாமற்கேளும் தவத்திலே மிகுந்த பெரியோர்களிப்படியுஞ் சொல்லலாமோ அரிசிபுர்மை மகாருஷியாரே வெகுணியுமக்கு நாட்டைக்கொடுத்துச் சனுவிலே சம்பாதித்த புண்யத்தை நான்போக்கடித்துக்கொண்டு பாவத்தைச்சம்பாதிக்க வல்லோ நீர்செய்கிற சுவத்துவம் நானளித்தநாட்டை வாங்குவேனோ போம் போம் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-காம்போதி

நாட்டைத்தான்வேண்டாமென்றாய் நான்றவஞ்செய்துதித்த
பெட்டினமயிலாரத்தப் பெண்களையாகிலுஞ்சேர்



காட்டினிற்பாதவித்துக் காசிக்குப்போனாலங்கே
மூட்டையாய்ப்பொன்னைக்கட்டி முடித்துவைத்திருக்கிறாயோ

வசனம்.

இன்னமொன்று சொல்லுகிறேன் கேளும்கொடுத்தநாட்டை வாங்க லச்சைபடுகிறாய் போகட்டும் நானருமையாகத்தவஞ்செய்துதித்த பெண்களிருக்கிறார்களே யவர்களையாகிலும் விவாகஞ்செய்துகொள்ளும் இதையெல்லாந் தட்டிப்போட்டு இந்தக்காட்டிலே யலைந்துபட்டுக் காசிக்குப்போனதினாலே யானைமேல்நின்று வண்கல்லெறிந்தவுயரம் பொன்னைக் கொட்டிக்கொடுக்க மூட்டையாகக்கட்டிவைத்திருக்கின்றாயோ இந்தப்பிடிவாதத்தை விட்டுவிடு விட்டுவிடும்.

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

மயில்நேரொன்னுமனையாளு மகனும்யானுமடிந்தாலும்
உயிர்போமளவும்பொய்ச்சொல்லே னுனைக்கும்பிடுவாறனைச்சேரே
பயிர்சூழயோத்திராடதனைப் பரிவாய்க்கேயாண்டிடுவீர் (ன்
செயிர்சேருமது கெடுப்படிக்கே ஸ்திரமாய்ச் சடனைக்கொடுப்பே

வசனம். (னே

சரணஞ் சரணஞ் சுவாமி உமக்குக்கொடுத்த நாட்டையுமனை வியேகன் அவ்வியமாதனையுங் கூடேன் உம்முடைய கெடுவப்படிக் குப் பொன்னைக் கொடுத்து விடுவனே யல்லது எங்கள்பிராணன் போனாலும் அசத்தியத்துக் குட்படுவேனென்று நினைக்கவேண்டா ஞ்சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எத்தனையிகஞ்சொன்னாலு மிடுக்கங்கள்வாசிசெய்தாலும்
சற்றுநெஞ்சிரக்கஞ்சொன்ன சத்தியமுந்தவறானையா
சுத்தமாமிவனையின்னந் துக்கத்திலழுத்தச்செய்வேன்
பித்தன்போலுத்தரித்துப்போவான் பெருமைதானடைகுவேனே

வசனம்.

எத்தனை தந்திரங்கள் செய்தும் இதஞ்சொல்லியும் பிடிவாதமாய்த்தானே யிருக்கிறான் நல்லதாகட்டும் இன்னமிவனைப் படுத்துகிறபாட்டிலே பொய்மாத்திரமா சொல்லப்போகிறான் வாயிலே வந்தபடியெல்லாம் பினத்தப்போகிறான் நான்றான்கெலிக்கப்போகிறேனே.

மகாமாயலித்தன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

தோயபலிதலையாட்டித்தப்பரியாமிட்டுழுழுது தொந்தாம்போனும்
காயதமாத்திலிவருகளிபிருக்குநெஞ்சலைக்கும்சட்சமாலும்

வாயாலேவந்தமதெல்லாம்வதறுமுனி யிவர்குணத்தைவர்ணித்திங்கே ஓயாமலழும்வாமோவிழும்வாமோ இவர்மதியையுரைசெய்வமோ

வசனம்.

சாகிறநோயாளியின் தலைமாட்டிலே கண்ணீர்விட்டழுகின்ற பரியாரிபோலவும் ஒருநாளுங் காயாதமரத்திலே யனேகம் பழமிருக்கிறதென்று நினைக்கிறமூடன்போலும் இருக்கிறதப்பா இவர் சொல்கின்றது.

மகாமாயசாலி-வசனம்.

ஆம் அண்ணே யதற்கு நாமென்ன செய்வோம்

மகாமாயசித்தன்-வசனம்.

தம்பி மகாமாயசாலி நம்மிட அய்யர் பிதற்றுகிறதைப்பார்த்தால் ஒன்றுங் காரியமில்லை.

மகாமாயசாலி வசனம்.

என்ன அண்ணே நீசொல்லுகிற தொன்றுந் தெரியவில்லையே

மகாமாயசித்தன்-வசனம்.

நம்முடைய அய்யா அழுகிறரே

மகாமாயசாலி-வசனம்.

அவரழுகிறதுந்தெரியும் அவர்பிதற்றுகிறதுந்தெரியும்

மகாமாயசித்தன்-வசனம்

அதைத்தான்சொல்லுகிறேன் தம்பி

மகாமாயசாலி-வசனம் ஆனால் சொல்லண்ணே

மகாமாயசித்தன்-வசனம்

சொல்லப்போனால் சிரிப்பு வருகிறது இவர்தன்னைத்தானே வீணாய்க் கொண்டாடுகிறரோ இவர்யஷியக்கூலியஇந்த வயிற்றெரிச்சலைச் சொல்லியழுவோமா கட்டிக்கொண்டு கீழ்ழ விழுவோமா இவரெழவை யென்னென்று சொல்லுகிறது ஐயையா இம்மாத்திரந் தெரியாதா இத்தனை பூரபெடுத்தியும் பொய்யாதவன் இனிமேற்பொய் சொல்லுவானு தம்பி

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே அய்யருக்குவந்திருக்கிறதுகேடு

விஸ்வாமித்திரர்-வசனம்-இருக்கட்டுமடா துஷ்டப்பயலே

மகாமாயசித்தன்-வசனம்

உம்மைப்பார்க்கிலு மாரிருக்கிறர்கள் சுவாமி

விஸ்வாமித்திரர்-வசனம்

ஓய் அரிச்சந்திரமகாராசனே நானுகவந்த சிநேவியைக்காலேயுதைத்துத் தள்ளவேண்டாம் நீர்கடிக்குட்போகாயலெனனு்ம்னை கூடவாரும்



இராசன்-வசனம்.

நீர்போய்வாரும் நான்வரமாட்டேன்சுவாமி

விஸ்வாமித்திரர்-வசனம்.

ஓய் நட்சத்திரத்தாரகரே யும்மிட வீட்டுச் சமாச்சார மொன்றிருக்கின்றது வாரும் இரகசியமாகச் சொல்லுகிறேன்.

தாரகன்-வசனம்.

நான் ஆத்தைவிட்டு வந்து வெகுநாளாச்சுதே யென்னசமாச்சாரம் வந்தது தெரியச் சொல்லும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-அடாணு.

தாரகனுமுமையைவிட்டுஞ் சந்ததைகளே துங்காணேம்
வரவாவுரத்துக்கொண்டான் வலுமைகள்பேசுகின்றன்
ஒருநிமைப்பொதானுலும் ஒழிவாகவிடாமல்நீ ய
பாபமென்றருக்கிப்பொல்லாங் படர்செய்தாற்பொய்யாகா (ளு

வசனம்.

ஏதுகாணும் நட்சத்திரத்தாரகரே உம்மைச்சம்பளத்திற்குவைத்துக்கொண்டதில் ஒருபிரயோசனமுங் காணேம் வரவா அவனுக்கு மனவுறுதியும், விருப்பமுமுண்டாகிறதே யதுவாகாரியம் இழுத்துப்பறித்துஉறுக்கிமுறுக்கி அடித்துஇடித்துவசநாபியைக்கொண்டுவிஷத்திலே தோய்த்தாற் போல நிலத்திலே கால்பாவவொட்டாமல் அவதிமே லவதியாய் மேலும் மேலு முண்டாக்கிச் சித்திரவதைசெய்தால் குப்பல் குப்பலாய்ப் பொய்யைக்கொட்டானு

தாரகன்-விருத்தம்-இ-ம்-காம்போதி

இத்தனைகோபமென்மே லினிவேண்டாம் பொறுப்பீர்சுவாமி
சித்திரவதைமாத்திரம்நான் செய்வேனேயுயிரைவைத்து
நத்தமலாகிவெம்பித் தடுமாறித்தவிதவிக்க
எத்தனைகோடிசித்ர இம்சைகள்செய்வேன்பாரும்

வசனம்.

தேவரீருக்கிவ்வளவுகோபம்வேண்டாம் பொறுத்தருளும் இவர்களாலே வருகிற பாலத்துக்கு நான்பயப்படுகிறவனு இனிமேல்தயை தாட்சண்ய மில்லாமல் இவனைப்படுத்துகிற அனேககோடி இம்சைகளில் இவனியின்னை யழப்போகிறதும் பெண்சாதிகதறப்போகிறதும் மந்திரி மறுகப்போகிறதும் அதைக்கண்டு இவன்தடுமாறித் தவிக்கப்போகிறதும் நீரே பார்க்கப்போகிறீர் சுவாமி

மகாமாயசித்தன்-வசனம்.

ஐயையோ இந்தப் பார்ப்பானை யஷ்டமச்சனிபிடித்ததுமுன்னாலேயிவன்பண்ணின அதிகப்பிரசங்கத்தினாலே யொருகன்றொள்ளையாச்சுது இப்போதிந்த இராசனுகிய புண்ணிய புருஷனாலே மற்றொருகன்றும் தொள்ளையாகுதோ அல்லது நாசமாய்ப்போகிறதோ தெரியாது.

மகாமாயசாலி-வசனம்.

அண்ணே மகாமாயசித்தா இவருக்குக்கன்றுள்ளையா.

மகாமாயசித்தன்-வசனம்

ஏகபுண்ணுக்குக்கன்றுடியாவிதோவிருக்கின்றான்பாரேன்

மகாமாயசாலி-வசனம்.

ஆம் அண்ணே தலாட்பிரமாய்த் தானிருக்கிறது

விஸ்வாமித்திரர்-வசனம்.

வாருங்கள் சிஷ்யர்களே நாம் போவோம்

சிஷ்யர்கள்-வசனம்

நாங்கள் வந்தமுகிறோம் நீரும்வந்து தொலையும்சுவாமி

தாகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தாய்நம்பிடைக்கையிலேயிருக்கின்றதனிலஞ் காங்கொறடா இப்பேர்ப்பட்ட பரிவட்டணைகளெல்லாம் அதிவாயே யிங்கேதானே ரொக்கத்தைக் கொட்டறையா யில்லாவிட்டா விதையெல்லாம் தோச்குப் பூட்டிடட்டுமா சொல்லுங்காணும்.

இராசன்-வசனம்.

அதுவெல்லாம் வேண்டாம் அடியேன் சொன்னபடியேகாசிப்பட்டணம்போய்ச் சேர்ந்தவுடனே கட்டிப்போடுகிறேன்.

பொது-விருத்தம்-இ-ம்-சாவேரி

வன்மமாய்விஸ்வாமித்ரன் மறைந்துநின்றேவிவிட்ட
வன்னியாம்நெருப்பாறந்த வனத்தினில் வளைத்துக்கொள்ள
மன்மகன்மனைவிமந்திரி யுள்ளலுங்கலங்கியேங்க
கன்மமாந்தாகனேனின் கதறியேயழுகின்றனே

வசனம்.

இந்தப்பிரகாரமாக விஸ்வாமித்திரர் மாய்கையினாலே நெருப்பாறுவந்து வளைத்துக்கொள்ள இராசாவும் பெண்சாதிபிள்ளையும்மந்திரியு நட்சத்திரத்தாகனும்நின்று பரதவிக்கிற விதங்காண்க.



தாகன்-வசனம்.

ஏதுகாணும் ஏதுகாணும் ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே நெருப்புப் பற்றிக்கொண்டு வாரதே வாரதே சுற்றிவளைத்துக்கொள்ளறதே ஐயையோ பத்தி யெரிகிறதே நேச்சுப்பயமா யிருக்கிறதே யிந்த நெருப்பிலே நம்மைத்தள்ளவா கொண்டு வந்தீர் நீங்களெல்லாருஞ் செத்தாலும் நம்மைமாத்திரங் காப்பாற்றுங்காணும் நான்பிராமணன் மகாராசனே மகாராசனே.

இராசன்-வசனம்.

எங்கள் பிராணன் போனாலும் உம்முடையபிராணனுக்கொரு சிந்தனையும் வராமற் காத்துக்கொள்ளுகிறோம் பயப்படாமலிருப்பீர் சுவாமி.

இராசன்-விருத்தம்-இ-ம்-கண்டா

தவப்பயனாலேவந்த வையலேமகனேமந்திரி
அவப்படுமோவென்சத்யம் அழிபாமலுருக்கவேறுஞ்
சிவப்புநெருப்புக்கெந்தன் சிவனைக்கொடுப்பேனிந்த
சிவபெருமான்போல்வந்த செழுமறையோனைக்காப்பீர்

வசனம்.

என்பிராணநாயகியாகிய சந்திரமதியே அப்பாதேவதாசா ஆகா அறிவுள்ள மந்திரியாகிய சத்தியகீர்த்தி யிதோபத்திவெரிந்து வருகிற அக்கினியிலே விழுந்திறந்து விடுகிறேன் இந்தப் பிராமணனைமாத்திரம் நீங்கள்காப்பாற்றிக்கொள்ளுங்கள் என்னென்றால் காட்டாறுபோலே சுற்றிவளைத்துக்கொண்ட படியினாலே நானொருவனுதத்திலாயானுல் மற்றவர்கள் தப்பிப்போகலாம்.

சத்திய கீர்த்தி-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

அருமாமுனிகடன்கொடுப்பா யுமும்பிசகாய் புவியாள்வாய்
வருமோசாலபாக்கியமு முன்மனதுக்காறாருளாலே
ஒருகாரியமுமில்லாம லழலுந்தாம்பன்வீழ்ந்திறந்தால்
திருமாமகனுமனையாளுஞ் சிவனிலப்பாருன்னுடனே

வசனம்.

கேளும் இராசசக்கிரேஸ்வரா தேவரீர் அடியேனுக்கு உத்தரவு கொடுக்கவேணும் அடியே னிந்த அக்கினிக்கிரையானல் நீங்களுயிருடனே தப்பலாம் தேவரீருயிருடனே யிருந்தால் தேவரீர் தருமத்துக்குஞ் சத்தியத்துக்கும் காசிவிஸ்வநாதருடைய கிருபையினாலே சகலபாக்கியமு முண்டாகப்போகின்றது அந்தவிஸ்வாமித்திரனுடைய கடனையுந்தீர்ப்பீர் இந்த அம்மான் சந்திரமதித்தாயும் கு

ழந்தை தேவதாசனும் பிராணன் நிலைத்திருப்பார்கள் நீர் நில்லும் நானிந்த அக்கினியிலே விழுகிறேன் சுவாமி.

இராசன்-விருத்தம் இ-ம்-புன்னாகவராளி.

வாழுமாசருடனிருப்பார் மந்திரித்தொழில்பெற்றிருப்பார்கள்
தாழும்வினைகண்டிடையாமற் சாகத்துணிந்தாய்தலைவிதியே
ஏழுபுவியும்புகழ்நீயு மென்றோடிறந்தவிவர்களுக்கே
சூழுமுலகிற்றுணையுண்டோ தொடர்ந்தோரிடத்திற்சேர்வாயே

வசனம்.

கேளாயெனது அருமையுள்ள மந்திரி இராசாங்கம்பண்ணுகிறவாழ்வை யுடைய இராசாக்களை மந்திரிக் கூட்டங்க ளடைந்திருப்பார்கள் நாட்டைவிட்டுக் காட்டிலேவந்து அவதிப்படுகிற என்னுடனே கூடத் தொடர்ந்து சமயம்வந்தப்போது சாகவுந் துணிந்தாய் இதுவும் உனக்குத் தலைவிதியோ இருக்கட்டு மென்னுடனே நீயுமிறந்துவிட்டா லிவர்களை யோரிடத்திற் கொண்டுபோய்ச்சேர்க்கிறவர்களார் ஆகையால் நீயிரு மந்திரி நான்போய் விழுகிறேன்

இராசன்-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி

ஐயையோவென்செய்வோ மக்கினிநதிவருகுதோ
தையலேமகனேமந்திரி தகிக்குதென்னகாரணமோ
வையகமெல்லாம்புகழும் வளரும்விஸ்வாமித்திரர்தாம்
செய்யும்வகையோவறியேன் திருவுளத்தின்செயலிதுவோ

வசனம்.

பெண்ணேசந்திரமதி அப்பா அடாதேவதாசா மந்திரிசத்தியகீர்த்தி ஐயையோ இதென்னகாரணமோ தெரியவில்லை இம்மாநமக்கெதிராக அக்கினியாறு வருகுது அதனால் சரீரமெல்லாம் வெந்துபோகுதே அந்தவிஸ்வாமித்திரன் வஞ்சகமோ அல்லதுதிருவுளத்தின்செயலோ என்னசெய்வேன் என்னசெய்வேன் ஈஸ்வரா

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-வராளி.

ஐய்யோகொடுமையெனைப்போலு மவனிதனிலேயார்செய்தார்
மெய்யோகாயபுருடனையும் விட்டேயிருக்கத்துணிவாரோ
பொய்யோவாழ்ந்தவாழ்வெல்லாம் பிறகார்கொடுப்பார்நீரிறந்தாற்
செய்யோருதவிவேறுண்டோ திகையாதிரும்நான்விழுவேனே

வசனம்.

அரிசரி தேவரீர் வாழ்ந்த வாழ்வெல்லாம் பொய்யாகிநீர்முன்னேயிறந்தால்பிறகுஎங்களுக்கோராதாரமுண்டோ புருஷனைச்சாக்கொடுத்து உயிருடனே துணிந்திருக்கிற ஸ்திரீகளுமுண்டோ நீர்துணிந்தாலும் நான்துணிவேனோ அல்லது நீரிறந்தால் விஸ்வாமித்திரர் கடன்திரும்ப நீரிரும் என்னைப்போலே இவ்வுலகத்தில் கொடுமை செய்தவர்க ளொருமில்லை ஆகையால் நானேயிந்தஅக்கினிக்கிரையாகிறேன் பிராணரட்சகா.



தேவதாசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பத்துமாதஞ்சுமந்துபெற்ற பலனோநான்முன்பார்த்திருக்க
பத்தியெரியும்நெருப்பதனிற் பாய்வேனென்றாய்தாயேநீ
பெற்றகடனைத்தீர்ப்பவனே பிள்ளையதனால்முன்போயென்
அத்தனுமோதந்தையும்போ யன்னையும்போய்நானிருப்பேனோ

வசனம்.

கேளுமம்மாஎன்னைப்பெற்றதாயே பத்துமாதஞ்சுமந்துஎன்னைப்பெற்றதற்கோ நீயும் என்னையீன்ற தகப்பனும் அக்கினியிலே விழுந்திறக்கவும் அதைப்பார்த்திருந்து உயிருடன்நான் வாழவுமா இதுவெல்லாம் விஸ்வநாதருடைய செயல்தானோ தாயேபெற்றவர்களுக்கு வந்ததுன்பங்களைத் தீர்க்கும்படியான கடமை பிள்ளைக்கல்லவோ ஆகையால் நான்முன்பாக அக்கினியில் விழுவேன் எனக்குச் செலவு கொடுத்திடுவாய்தாயே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

தனையெழுதியுண்டிருந்து தவஞ்செய்துன்னை நான்பெற்றெடுத்து, நிறையுஞ்செல்வத்துடன்வளர்ந்து நிதமுமகிழ்ந்தேனொருமகனே, மறைமாமுனிவன்வஞ்சனையால் வனத்திலெரியும் நெருப்புக்கோர்; குறையோயிரையாய்க் கொடுத்துனை நான் கொடும்பாவியைப்போ லிருப்பேனோ.

வசனம்.

சொன்னார் சொன்னபடியெல்லாம் அருமையான தவங்கள் செய்து தலையைமுழுகி சோதிட்டுஸ்னும் பரமசிவனருளினாலே உன்னைப்பெற்றெடுத்து இந்தவிஸ்வாமித்திர ரிஷியினுடைய வஞ்சனையா லெரியப்பட்ட அக்கினிக்கிரையாகக் கொடுக்க நானென்ன குறைகள் செய்தேனோ நீயிந்தத்தீயினில் விழுந்திறக்கவும் நான்பாவியினு மகாபாவியாகப் பார்த்து மகிழவுமா அப்பாஎன் மகனே என்கண்ணே கண்மணியே.

தேவதாசன்-வசனம்.

தாய்தகப்பனுக்கு வந்ததுன்பத்தைத் தீர்க்காதபிள்ளையுமொருபிள்ளையா நானே யிந்த அக்கினியில் விழுகிறேன் உத்தரவுகொடுப்பாய்தாயே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அப்பாமகனேயித்துணிவு மறிவுமுனக்கேயடுத்ததெந்
தெப்பாப்பல்விழுந்திலையே செழித்தமுலைப்பால்மறக்கிலையே
ஒப்பாருமோநீதானீவிழ்ந்தா லுந்தன்றந்தையுயிரதனை
வைப்பாரோநான்முன்விழுந்து வார்த்தையுமெல்நிறுத்துவனே

வசனம்.

அப்பாமகனே தேவதாசாஇன்னம்பால்பல் லுவிழவில்லையே முலைப்பாலு மறக்கவில்லையே யுனக்கிந்த கோசாமானபுத்தியும் மிகுந்த தைரியமு மெப்படி யுண்டாச்சுதோ அறியேன் நீஅக்கினியில் விழுந்தா லுனது தந்தை யுயிர்வைத்திருப்பாரா உலகத்திலே கீர்த்தியிலக்கும்படியாக நானே முன்னதாக அக்கினியிலே விழுகிறே னப்பா என்கட்டிக்கரும்பே என்கண்மணியே

தாசன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

கடித்தபாக்கிடாச்சிற்றப்பன் கடைத்தெருக்கோடிமட்டும்
குடித்துப்போய்வழிவிடுத்துத் தொடர்ந்தமுங்கதையைப்போல
அடித்துமேல்விழுந்துநீங்க ளழுகின்றவிந்தைபார்த்தால்
பிடித்தென்னைத்தள்ளிப்போடும் புரட்டொன்றுநினைக்கலாமோ

வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே கடித்த பாக்கிடாச்சிற்றப்பன் கடைத்தெரு மட்டும் வழிவிடுத்துக் குடித்தழுத கதையைப் போலு மிருக்கிறதுகாணும் ஆகாகா இப்போதுநீங்கள் ஒருவருக்கொருவர் கட்டிக்கொண்டழுகிறதைப் பார்த்தால் நீங்கள்செத்து என்னைமாத்திரம் காப்பாற்றப்போகிறதாக எல்லோரும் நினைப்பார்கள் இந்தம்மாள் பசப்பி யழுகிறதைப்பார்த்தால் வெள்ளவென்னை இந்த அக்கினிக்கிரையாகத் தள்ளிவிட்டு நீங்களோடிப்போகிற மார்க்கமாய்த்தான் காணுகிறது

சந்திரமதி-வசனம்

அப்படி யொருக்காலும் நினைக்கவேண்டாம் நானே யிந்த அக்கினியில் முன்னே விழுகிறேன் நீங்களெல்லோரும் உயிருடனே தப்பியிருக்கலாஞ் சுவாமி

நட்சத்திரத்தாசன்-வசனம்

ஆனால் நீபதிவிரதைதான் பார்ப்போம் முன்னேநட

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

மறைநெறிபிசகினாலும் வருவிருந்திழந்திட்டாலும்
முறைபிழிலவரைசெய்தாலு மூப்பினையிகழ்ந்திட்டாலும்



பிறர்மனைபிச்சித்தாலும் பிறர்மனைநோந்திட்டாலுங்
குறைகளொன்றிருந்தாலென்னைக் கொல்வாய்காட்டெரிநெருப்பே

வசனம்.

ஓ அக்கினிபகவானே சத்தியமாகவொருவார்த்தைசொல்கிறேன்கேளும் என்புருஷனிடத்திலேயாவது என்னிடத்திலேயாவது பரதாரத்துரோகம் பிறர்பொருளிச்சை பிறர்மனம் நோகச் செய்கிறது சொன்ன சத்தியம் மறக்கிறது பெரியோர்களை நிந்திக்கிறது விருந்திழக்கிறது அதர்மம்அக்கிரமம்வஞ்சனை குருகுருநிந்தை தேவதாபக்தி மறக்கிறது வேதவிரோதம் இப்படிப்பட்டதாக விருக்குமேயானால் என்னையெரித்துப்போடக்கடவாய் அக்கினிதேவனே.

தேவதாசன்-வசனம்

அம்மா அம்மா என்னைப்பெற்றதாயே யுன்னுடனே கூடநானும்வருகிறேன்.

சத்தியகீர்த்தி-வசனம்.

அப்பாதேவதாசா நானும் உன்னுடனேகூட இதோவருகிறேன்

இராசன்-வசனம்.

சந்திரமதி சொன்னசத்தியத்துக் கொரு பழுதா நாமுங் கூடவே போவோம் வாரும் நட்சத்திரத் தாசரே.

தாசன்வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திர மகாராசனே யென்வினையேயெல்லோரும் விழுந்து சாகப்போகிறீர்கள் தான்மனப் பூர்வமாய்ச்சொல்லுகிறேன் என்னை யிதிலே தள்ளிவிட்டால் நீங்களெல்லோருப்பிழைக்கலாம் யதார்த்தமான வார்த்தைகாணும்.

இராசன்-வசனம்.

எங்கள் பிராணனெல்லாம் போனாலும் போகிறதேயல்லாமல் அப்படி யொருபோதுஞ் செய்யமாட்டோம் சுவாமி.

தாசன்-வசனம்.

சுட்டுப்போடுகிறது சுட்டுப்போடுகிறது இராசாவே நீரும் மந்திரியும் என்னைவெடுத்துக்கொண்டுபோய் அப்புறத்திலே விடுங்கள் சந்திரமதி அங்கனேசேர்ந்தாளா.

இராசன்-வசனம்.

சந்திரமதியுஞ் சேர்ந்தாள் கூடப்பிள்ளையுஞ்சேர்ந்தது நாமும் வந்துசேர்ந்தோம் சுவாமி.

பொது-சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி

வீசிக்கொழுந்துவிட்டு விரிந்தெழுந்தவக்கினியைப்
பேரியசத்யவார்த்தைசொல்லிப் பேதைசந்த்ரமதிகடக்க
வாசித்தருமறையோன் மந்திரிமன்னன்மகனுடனே
காசித்திருநகரைக் கண்டார்மனமகிழ்ந்தே

வசனம்.

அயோத்தியா புரியை விட்டு நட்சத்திரத் தாகருடனேகூட வந்து காட்டிலே திருகங்களாலேயும் மழையினாலேயும் இடியினாலேயும் பூதத்தினாலேயும் அக்கினியாற்றிலேயும் நானாவித இம்சைகள் பட்டுக் கரையேறிக் காசிப்பட்டணத்தைக்கண்டார்களென்றறிக

அரிச்சந்திரன்-தரு-இ-ம்-தோடி-தாளம்-ஆதி

தெரிசனஞ்செய்பெண்ணே - இதோகாசி - தெரியுதுபார்கண்ணே
விரிசதுர்முகப்பிரமம் விதியால்விளைந்தகன்மம்
வேதைதீரவுள்ளங்கொண்டு விருப்பமாகவேகண்டு (தெரிச)

எத்தனைபிறவிகள்பிறந்தாலும்புண்ய
மெய்துயோலோகாசாரமறந்தாலுஞ்
சுத்தமாயாபாசந்துறந்தாலுஞ்சுகம்
சுளுவாய்க்காணுமோ எட்டிப்பறந்தாலுஞ்
சுத்தநிராதாரதூயபராபர
முத்தர்சடாதர மூர்த்திநிருபாகர
முதல்வன்பிரணவ நிலைமேவியதவ
முடிவிற்பொருளா யுறைவோன்வளர்சிவ (தெரிச)

தவஞ்செய்வோர்பெருங்கதியிதுவாமே-சென்ம
சாகரக்கடலொழிந்திடும்போமே
தவறுசெய்திடமுண்டதிவர்தாமே
தலத்தைக்கண்டிடதவப்பரிந்தோமே
திவலைபெரிக்குங்கங்கை திவ்யதீர்த்தமாடி
திளைக்குங்கலைதிரச் சிவநாமங்கள்பாடி
திகழ்வானொடுமுருகுலழுமேந்த
மகிழ்வாய்காமேவாறுருறைபதம் (தெரிச)

வந்தவல்வினையென்பதுதீரும்-உன்னுள்
வன்பழிபோகநன்னெறிசேரும்
அந்தரவர்க்கந்தன்னிலுறைவோரும்-மற்று
மரியாதவரெண்ணமிதிலேசேரும்



இந்தப்பொற்கோபுரமணிமதில்சோலையும்
இங்கிதபங்கருமாமலர்ச்சாலையும்
இதமாயறிபிது நலமாகியகதி
நிதமாயொருதனிமுதலோனுறைபதி (தெரிச)

இராசன்-வசனம்.

கேளும்பெண்ணே யிதோ கோபுரந்தெரிகின்றதே இதுதான் காசிவிஸ்வநாதரிருக்கிற ஆலயம் நம்முடைய கருமங்களெல்லாந் தீரத்தக்கதாகத் தெரிசனஞ்செய் பெண்ணே சந்திரமதி

சந்திரமதி-சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

வல்வினைபோம்விதியின் வசத்தாலவதிபடத்
தொல்வினைபோமினிநமது துயரம்போஞ்சுகம்பெறலாம்
செல்விவிசாலாட்சிமாதேவி மகிழ்விஸ்வேசர்
நல்விருப்போடுறைகாசி நகரைக்கண்டபலனிதுவே

வசனம்.

. என்னுயிரானாட்சகா நாம்பட்டதுன்பங்களெல்லாந்தீர இந்தக் காசிஸ்தலத்தைக்கண்டு தெரிசித்தோமித்தப் புண்ணியவசத்தினாலே யினிமேல்நாம் சுகத்தையடையலாஞ் சுவாமி

இராசன்-வசனம்.

ஆனால் இந்தக்காசிப் பட்டணத்தினுடைய அலங்காரமும் இந்த மகாதேவராகிய விஸ்வநாதசுவாமி விசாலாட்சி யம்மன் ஆலயத்தி னலங்காரமுங் காட்டிக்கொண்டுவருகிறேன் பாரும்பெண்ணே

இராசன்-தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-திரிபுடை

வானளவுதாவுமிந்தவண்ணப்பொன்மதில்பாராய் மயிலே
யிளமான் குயிலே
ஆனைசேனைதானடக்குமழகுவாசற்படிபாராய் அனமே
நான்படைத்த தனமே
விப்ரகுலவேதசாஸ்திர விதிமறையோர்வீதிபாராய் மின்னே
ஆசைசிறந்த பொன்னே
செப்புமொழிதவறாதஇராசவீதிபார்ப்பாய்-தேன் விழியே
எந்தன்தேன் மொழியே
பொன்னைக்கொண்டுபொன்னைவிற்கும்பொன்படைத்தோர்வீதிபாராய், பூவினமேபோவின்பசம் பாவினமே
தன்னையாராய்வாழுந்தருவல்லவிநிகன்றும்பாராய் நாயகியே
பிராணன் நாயகியே

சதுரங்கசேனைநிறைதரபரமாய்வீதிபாராய் நவநிலையே
எந்தன் நவநிலையே
புதுநவரத்னமணிபொருந்துமண்டபங்கள்பாராய் பொற்கிளியே
மதுரசொற் கிளியே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சாவேரி.

புண்ணியதலமாமிந்தப் புரிதமாநகராயின்று
கண்ணுற்றுக்கண்டபாக்யங் கருதுமுற்பயனேயாகும்
வண்ணமாமுலையாள்பாகம் வளர்விஸ்வநாதர்வாழும்
இவ்வமாந்தலத்தின்காட்சி தெரிசிப்பேனுனைசெய்வீரே

வசனம்.

கேளுஞ் சுவாமி யிந்த மகாபுண்ய ஸ்தலமாகிய காசிப்பட்டணத்தைக்கண்டு சந்தோஷமானேன் அதுவும் நான்முன்சென்மத்திலே செய்தபாக்யம் இன்னமிங்குண்டாகிய அதிசயங்களும் இந்த மகாதேவராகிய விஸ்வநாதசுவாமி வாசம்பண்ணுகிற ஆலயத்தைக்கண்டு தெரிசனம் பண்ணுவோம் சுவாமி

இராசன்-வசனம்.

அப்படியே சொல்லிக்கொண்டு வருகிறேன் பார்த்துத்தெரிசனம் பண்ணும் பெண்ணே.

இராசன்-தரு-இ-ம்-பைரவி ஆதிதாளம்.

காசிநகரைக்கண்ணுற்றுக்கண்டாயேபின்னங்
காட்சியநேகமுண்டு காண்பாயே-பெண்ணே
மாசில்லாராசவீதிவளமும்பலவளமும்
வரிசையாய்க்கண்டுமகிழ் பூண்பாயே
இந்திரலோகம்போலேயிருக்குமிந்தநக
ரதுபெரிதெருசிறிதுறை நேராய்-கண்ணே
அந்தக்குபேரன்வாழு மளகாபுரியுமீதோ
அள்ளிலாக்கடைவீதியிதைப் பாராய்
சூழ்விண்போகுமிந்த சொர்ணகோபுரங்கண்டால்
தொழுதுகீழேநமஸ் கரிப்பாயே-மின்னே
தாழ்வுவருமோஇந்தநந்திகேஸ்வரர்பாதந்
தலைமேல்வைத்தன்புமனந் தரிப்பாயே
அன்னைவிசாலாட்சி ஐயர்விஸ்வநாத
ரரியபொற்பதங்களிற் பணிவாயே-பொன்னே
முன்னஞ்செய்தீவினைபோமிந்தாட்படுந்துயர்போ
முக்யமானகுறை தணிவாயே



இராசன்-வசனம்.

இவர்தான் நம்முடைய ஆண்டவராகிய விஸ்வநாதசுவாமியும் விசாலாட்சி யம்மனும் இவர்களைத் தரிசனஞ் செய்பெண்ணே சந்திரமதி.

இராசன்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

வேடன்வாயெச்சிலுண்டாய் விருந்துக்கோர்பிள்ளையுண்டாய்
ஆடரவதனைப்பூண்டாய் அணிவிடையேறிக்கொண்டாய்
நீடரும்புகழ்சேர்காசி நித்தனேவிஸ்வநாத
காடவோவடியேனுள்ளம் வருத்தந்தீர்த்தருள்செய்வாயே

வசனம்.

சிவசிவசம்போ மகாதேவா மான்மழுகாலகண்ட திரிநேத்ர சடாதர காசிவிஸ்வநாதீஸ்வரா நீனாட்சகா அடியேன் படுகிறவருத்தங்களைத் தீர்த்துரட்சியும் சுவாமி.

இராசன்-தோத்திரம்-அகவல்-இ-ம்-எதுகுலகாம்போதி

சிவசிவசம்போ திகழ்சடையாளா
நவநிலைப்பொருளே சதுர்மறைமுதலே
மதிநுதற்குமுத வாய்விசாலாட்சி
நதியிடப்பாகந் தோன்றியபரனே
மகிழ்மழுவேந்து மலர்க்கரத்தோனே
வான்படர்கங்கை வளர்சடையோனே
நீலதயாளா திரிபுரதகனா
ஞானவாரிதியே நற்றவப்பயனே
காலனையுதைத்த காரணப்பாதா
தொண்டர்க்கிரங்குந் தூயதன்னேயா
கண்டிடப்பணிவோர் களிக்குஞ்சகாயா
திரைசெறிகங்கை செழிக்குநல்வளமும்
விரிதருங்காசி விஸ்வநாதீசா
அடியனுற்பட்ட வவதியைக்கேட்பாய்
படிமிசைபுகழும் பதியெனுமயோத்தி
நிருபநகரஞ் செல்வமுமிழந்தே
அரிவைதான்மகனு மருங்கடன்தீர்க்க
வருவழிதனிலே மழையிடிகாற்றுப்
பெருவிஷப்பாம்பு பெருத்தவெம்புலிகள்
கட்டெறும்பானை கருங்குளவிகளும்
மட்டிலாத்தேளும் வரும்பலசெந்தும்
கொட்டிடக்கடிக்கக் கொதித்துநான்வாடிச்

சுட்டுமெனவிற் சோர்ந்துமெய்வெதும்பி
பூதப்பசாசின் பேர்தனிலுழன்று
சேதப்படாமற் செந்தழல்கடந்து
காயிலையருந்திக் கருதிநெஞ்சழன்று
ஓய்விலாத்துயருள்ளிருந் துலைக்க
மகன்முகநோக்கி மங்கைதானழவும்
மகிழ்சுகமாதென் மலர்முகநோக்கத்
துங்கமேலிட்டுத் தோகையின்முகத்தை
நெக்குவிட்டருகி நின்றுநான்பார்க்கக்
கதறியேமூவருங் கலங்கிநின்றழுதே
பதறுதல்கண்டும் பரதவித்திடாமற்
கடன்றரச்சொல்லிக் கடிந்திடுமிவர்கோ
ருடன்படிக்கையின்மே லுறுதியொன்றுரைக்க
வழியேதுமின்றி மயங்குமிவ்வேளை
ஆழிவிடமுந்த னருட்பதியெல்லை
வந்துமாமதிலும் வளர்கோபுரமும்
முந்திநான்காண மூடியதுயரால்
வாடியமனத்தின் வருத்தமுங்கலியு
மோடியதையா வுமையொருபாகா
பிருதவவிஸ்வா மித்திரனென்னை
வெருவெருமாய வித்தைகளின்னம்
எத்தனைசெயினு மேங்காதிருந்து
சத்தியமாக்கடனைத் தரும்வகையருள்வாய்
அருட்புலிகன்றினுக் கமுதளித்தாண்டாய்
வருங்கரியுரித் தேவல்வினைதீர்த்தாய்
இத்துயர்தீர்ப்ப தெவ்வளவுமக்குப்
பித்தனென்றுரைத்த பெருமைகொண்டோனே
அத்தனேகாசி யரும்பதிவாழ்வே
நித்தமேயிரங்குந் தேவநாயகனே

வசனம்-இதுதானடியேன்பட்ட துன்பங்களெல்லாம் சுவாமி

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

எந்நாளொழியுமிந்த இடர்படுந்துயரமெல்லாம்
சந்திரன்விளங்கும்பொற் சடையணிவிஸ்வநாதா
மைந்தனும்யானுமெந்தன் மன்னனும்வருத்தந்தீர்ந்து
சிந்தைதான்மகிழ்ச்சியாகத் திருவருள்புரிந் தாள்வாய்



வசனம்-

அரகரா காசிவிஸ்வநாதீஸ்வரா நாங்கள் படுந்துன்ப மொத்த நாளிலொழியும் எங்கள் துக்கத்தைத் தீர்த்துக் கிருபைசெய்து இரட்சிக்கவேணும் சுவாமி.

தேவதாசன்சொல்-தேவாரப்பண்-கொல்லி

தேசுந்தர்மதிதரிக்குஞ் செஞ்சடாதரனேபோற்றி
வாசுதேவன்விரிஞ்சன் வந்திக்கும்விமலாபோற்றி
தாசரட்சகனேபோற்றி தற்பரசிவனேபோற்றி
காசிவாழ்விஸ்வநாதா கமலத்தாள்போற்றிபோற்றி

வசனம்ஐயா எங்களைப் பாதுகாத்து ரட்சியும் சுவாமி

இராசன்-வசனம்.

இந்த மகாதேவராகிய விஸ்வநாதனையும் விசாலாட்சியம்மனையுந் தெரிசித்தோமே சற்றுநேரம் இந்த வசந்த மண்டபத்திலிருந்து ஆயாசந்தீர்த்துக் கொள்ளுவோம் வாருங்கள்.

நாகன் விருத்தம்-மு-ப்-நாட்டை

பட்டினியிருக்கநீங்கள் பயப்படவேமாட்டீர்கள்
ஒட்டியேயிடத்துகால முபாயமாய்க்கழித்ததாலே
நட்டியதுக்குங்களுக்கு நான்பயிநாளமாட்டேன்
கட்டியேமுடிப்பாய்பொன்னைக் கட்டாமல்விடுவேனே

வசனம்-

அடாய் அடாய் சந்திராய் நீ உன்றும்பிடையாள் நோக்குப்பிறந்த பிள்ளை நோக்குத்துணைப்பட்டமந்திரி நீங்கள் நாலுபேரும் பட்டினி யிருந்து லோலாயப்பட்டு வயிற்றைக் காயப்போட்டுக் கொண்டிருக்கிறது வாடிக்கை தானே மோசமில்லை யதனுடன்களுக்குக் கூடுதலேயல்லது நஷ்டமில்லை நேக்குத் தயிர் பால்நெய் மொத்தை மொத்தையாய்ப் பருப்பும் பச்சரிசிச் சாதமுஞ் சாப்பிட்டு எப்படிட்டுக்கொண்டிருக்கிறதுபோய் பட்டினியிருக்கத் தலைவிதியா யிருக்கட்டும் ஆனைவிட்டது நேகசாரம் காசிப்பட்டணம் போனவுடனே நம்மிடரொக்கத்தைக் கொட்டறேனென்று சாதித்தாயே யொரே சாதனையா யில்லையென்று சாதிக்கிறையா அல்லது நம்மிடரொக்கத்தைக்கொட்டறையா இனி விடேன்விடேன்விடேன்

இராசன் விருத்தம்-இ-ம்-சாவேரி

சொன்னதுமெய்தானையா தொலைதூரநடந்துவந்த
சென்மவிடாய்களின்று செகமைப்பொழுதிங்கிருந்து
மன்னர்கள்வணிகர்மற்ற வகைவகையிங்குள்ளோரை
இன்றைகின்றறிந்துநாடி இரந்துபொன்றருகுவேனே

வசனம்.

கேளும் நட்சத்திரதாசரே தொலைதூரம் நடந்துவந்த ஆயாசத்தில் சயனப்பிரித மண்டபத்திலிருந்து இப்பட்டணத்திலுண்டாகிய பாக்கியவான்களை இன்னாரினியாரென்று விசாரித்து அவர்களைக்கண்டு யாசகம் பண்ணி உம்முடைய கடனைக் கொடுத்து விடுகிறேன் கோபஞ் செய்யாமற் பொறுத்து ரட்சிக்கவேணுஞ் சுவாமி

தாரகன்-விருத்தம்-இ-ம் கும்பசாம்போதி

பட்டாடைபிரவலித்து பலகைவொன்றெடுத்துங்கொண்டு
பட்டத்தின்பின்னேபோன புருஷையேபோனாய்நீயே
வட்டமோலட்டியாவுன் வசம்வைத்தபொன்னுக்கிந்த
கிட்டைகள்செய்யவேணும் தெருவிலிங்கேநிற்பாயே

வசனம்.

அடாய் அடாய் சந்தாய் நீகதைகேட்டதில்லையோ பட்டுப் புடவை யிரவல் கொடுத்து மனைவைத்தூக்கிக்கொண்டு பின்னே, திரிந்தது கேட்டிலாயோ அந்தன்மைபோல நம்மிடரொக்கத்தை உன்கையிற்கொடுத்துவிட்டு உன்பின்னே திரியலாச்சுது ஆயிரத்துக்கு ஐந்நூறு வட்டமோ நூற்றுக்குப் பத்து வட்டியோ அதுவெல்லா மிருக்கட்டும் இதோ நம்மிட கையிலே யிருக்கிற மோகமாலை கைக்காப்பு முதுகுகவசம் மீசைமுறுக்கி யறுமட்ட சேர்வை இதுவெல்லாம் நோக்குச் சாதிக்கவேண்டி யிருக்கிறது ஆனையாயிந்தக் கொடிய வெய்யிலிலே கடுகிறமணலிலே நடுத்தெருவிலே இந்தக்கோட்டைக் குள்ளே அசையாமலிரும் பிள்ளாய்

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி

தானைவார்த்திட்ட பொன்னைத் தருவதற்கையமுண்டோ
ஆனாநான்கொடுமைதிமை யனியாயஞ்செய்திட்டேனோ
பானையாளரசன்முன்னே பட்டபாடுதுவோயித்தைத்
தீனாயோதெய்வமேயுன் சித்தமுங்கல்லதானோ

வசனம்.

சரணஞ்சரணஞ்சுவாமி, தானங்கேட்ட ரிஷிகளுக்குக்கொடுத்த பொன்னைப் பிராணன்போனாலுமில்லையென்றுசொல்வேனோ ஐயையோ ஆனாலிந்தக் கொடுமை செய்தனோ அந்தப்பாவமிப்படி யநுபவிக்கிறேன் தெய்வமே யிந்தச்சங்கடத்தைத்தீர்க்காமலுன்மனது கல்லா கொஞ்சமுமிரங்காதா தெய்வமே

தாரகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தாய் உங்கப்பன் வீட்டுப்பணத்தை ரொக்கமாகக் கொட்டிக்கொண்டு நான்கேட்கவே யெப்படிகொடுக்கிறதென்று முழிக்கிறாயோ மாப்பிள்ளைபோலே நிற்கவைத்தேனே அதனாலேயோ குனியும்பிள்ளாய் சப்பளிட்டுட்டும்

இராசன்-வசனம்.

சுவாமி சுவாமி யும்முடைய சித்த மென்பாக்கியம் அரிசிவ அரிசிவ.

இராசன்-தரு இ-ம்-சாவேரி-அட தாளம்

சிவசிவா சாசிபுரிவாசாவிஸ்வேசா
திருவுளச்செயலொன்றுமறியேனே
எவர்களுக்கெந்தவினை யெப்படிசெய்தேனோ
எனக்குலபிக்குமென்று குறியேனே
நான்செய்தகர்மமெல்லாந் தானேயநுபவிக்கத்
தர்மசாஸ்திரஞ்சொல்வது மெய்தானோ
வான்பதியானதேவர் மாதவர்மறையோர்கள்
மனநொந்திடக்குறை செய்தேனோ
அடைக்கலம்வைத்தபொருளபகரித்தேனோதெய்வமே
ஆலயம்பாழாகக்கண்டு சகித்தேனோ
தடைக்குள்ளிருக்கும்பாம்பைத் தடிகொண்டடித்தேனோ
தழுவிப்பிறர்தாரத்தைச் சுகித்தேனோ
தாழ்ந்தவலுமையிலுற் றளர்ந்த மனிதர்மனந்
தத்தளித்துக்கொதிக்கநான் வைதேனோ
சூழ்ந்தராணைக்களத்திற் சூற்றமுறுவிட்டோவா
யாத்திப்பாணங்களினு லெய்தேனோ

தாரகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தாய் நீ பழுதிறத்திலே நேக்கு பாணாபுளைக்கிறது நம்மிட ரொக்கத்தைக் கொட்டமையா நோக்குக்கையிலே காப்பு மாட்டட்டுமா

இராசன்-வசனம்.

தடையில்லாமற்கொடுக்கிறேன் என்மேரில் கோபஞ்செய்திப் பேர்க்கொத்த வருத்தங்கள் செய்யவேண்டாம் இன்றைக்குவிடியுமட்டும் பொறுத்தாற் தாரகரே

தாரகன்-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

விடிவேனோயாரும் இனிமேல்நாஸ்-விடிவேனோயாரும்
விடிவேனோபடத்தை விடுவேனோதருணத்தில்
விடிவேனோஇவனேநந்து பொலியும்வேளையிருந்து
விடிக்கும்வெகுதந்த மிருக்குமரிச்சந்திர
னிராஜகுடுப்போட்பெருகுதுங் (விடிவே)

உண்மைசொற்பாராட்டிஇவள்பெண்டாட்டியுருகிறாள்சீராட்டி
அண்ணாந்தாளைப்பூட்டிக்கையை நீட்டியநிற்கிட்டிக்கோலைமாட்டி
கண்ணீர்விட்டழுதாலுங்கைகூப்பித்தொழுதாலும்
கசக்கியிறுக்கிச்சாறு சக்கச்செய்கிடைநூறு
சாட்டிப்பம்பரமாட்டிக் கடுவினையைமூட்டிக்
கதறியனைவியுமகனுஞ்சழலவே கருதியிவன்மனமதிலுழலவே
கடினமுனிவெண்ணமுடியவெகுவண்ணம்
காலனைநிகர்சனிபோலுமுனிந்தினிவிடுவேனோபாரும்-இனி

தாரகன்-வசனம்.

அடாய் அடாய் நோக்கு வருத்தமுண்டானாலன்றோ நம்மி டரொக்கத்தைக் கொட்டுவாய் கையை நீட்டும்பிள்ளாய் காப்புமாட் டட்டும்.

இராசன்-வசனம்.

இப்படிக்கெல்லாம் வருத்தப் படுத்துவதினால் பொன்வந்து போமா சுவாமி.

தாரகன்-வசனம்.

இருக்கட்டும் பொன்னைக் கொட்டடா கொட்டு

இராசன்-தரு-இ-ம்-கண்டா-அடதாளம்

இந்தவிதியெந்தனுக்குவரலாமோ-ஒகோ
இன்னமென்னவிதியோஐயையோதெய்வமே
வந்தவிதியெல்லாந்தானே மறுக்கஎன்னால்வசமோ
வாட்டுமவாட்டுமையையோதெய்வமே
செங்கோல்பிடித்தகையிற் கிட்டிக்கோல்நெரிக்கவுந்
செய்தேன்தவங்களே யையையோதெய்வமே
அங்கமெல்லாநொந்து ஆவிதடுமாறுதே
அரிகரியேதென்ன ஐயையோதெய்வமே
ஒட்டைச்சாண்வயிற்றிலே யண்ணாந்தாள்பூட்டிக்கொண்டே
உபத்திரவப்படவிட்டாயையோதெய்வமே
கட்டமுண்ணிவொற்றைக்காலில்தொடுத்த அண்ணாந்தாள் கிட்டிக்
தொலையவிதியுண்டோஐயையோதெய்வமே (கோல்

இராசன்-வசனம்.

அர்கரா சிவசிவாசம்போ காசிவிஸ்வநாதா இந்தவருத்தப் ப டவுமென்னால் முடியுமா கிருபைசெய் இரட்சியும் சுவாமி

தாரகன்-வசனம்.

இதோ பொய்சொன்னான் இதோ பொய்சொன்னான் இதோ பொய்சொன்னான் இதோபொய்சொன்னான் பாருங்கள்



தாரகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தாய் அண்ணாந்தாள் போடக்கூடாதென் றும் கிட்டிக்கோல் போடக் கூடாதென்றும் நம்மிடமாக்கினைக்குட் படக்கூடாதென்றும் சொன்னையே அதுபோதும் அதுபோதும்

இராசன்-வசனம்.

தெய்வத்தை வேண்டிக்கொண்டேனேயல்லது உம்மைச்சொ ல்லவில்லை சுவாமி.

தாரகன்-வசனம்.

ஆனால் சந்தோஷம் நன்றாய்க்கிட்டிக்கோல் நெரிக்கிறேன்.

இராசன்-வசனம்-அரிகரி-அரிகரி

சந்திரமதி-தரு-இ-ம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

மறையவர்ராஜயோகமுமனமுங்கருங்கல்லோ இந்த
மன்னர்படுந்துயரங்கண்டால் வையகமிரங்காதோ
குறைகளொன்றுஞ்செய்ததில்லையாங்கோபஞ்செய்யலாமோ இந்த
குழந்தைபடுந்துயரங்கண்டால் கொஞ்சமுமிரங்காதோ
பெண்ணுடனே ஆணுடனேபிறந்த தருமமில்லையோ இந்தப்
பேதைபடுந்துயரங்கண்டால் பேயுமிரங்காதோ
உண்மையாகக்கடங்கொடுக்க வுடன்பட்டிருந்தோமே நல்ல
உத்தமரோவுங்களாக்கங்கண்டால் சித்தமிரங்காதோ
மகாராசராசனரிச்சந்திரபூபாலன் படும்
வாதைகண்டாலும்பஞ்ச பூதமிரங்காதோ
சகசிரமகாவெப்பிரானையரிச்சந்திரமன்னன் இந்த
துக்கப்படக்கோபிக்குமுமதுசொல்லு மிரங்காதோ
என்னைக்கொன்றுகோபந்திருமெநக்கமணவாளன் ஐயோ
இந்தவருத்தப்பட்டாற்பூமியெல்லா மிரங்காதோ
சின்னஞ்சிறுகுழந்தையிவன் திகைத்தழுகிறான்பாரும் நீர்
செய்யுங்கோரத்தால்மரங்களுஞ்செடிகளு மிரங்காதோ

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

என்செய்வேனையா கைதனிற்கிட்டி யிறுக்கவுந் நீ யழுதேங்க; முன்பின்னோர் துன்பங்களில்லையோ தெய்வ முழுதுஞ்சோதிப்பது விதியா, கன்மனோவடியேன்கதறியின்றழுதால் கருங்கல்லுமிரங்கு மேயித்த, சென்மகாதகர்க்குங் கொஞ்சமும் பொல்லாசித்தமுமிர ங்குவதில்லையோ.

வசனம்.

ஐயையோ என்னைப்பெற்ற ஐயனே யித்தவருத்தமு மனுப விக்கத் தெய்வமுஞ்சம்மதிக்குமா என்னைப்போலொருபிள்ளையே

நட

ங்கியமுகின்றதைக் கண்டால் கருங்கல்லுமுருகுமே இந்தநட்சத்திரத் தாசருக்குச் சித்தம் இரங்கவில்லை யா ஐயையோதெய்வமே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-புன்னாகவராளி.

என்னருமகனேயென்றவப்பலனேயென்செய்வேனுன்னைப் பெற்றெடுத்த, பன்னவனிந்தவருத்தமுந்துயாமும் வளரநின்றழுவதைக்கண்டு, உன்முகம்பார்த்துநானமுதிடவு மொடுங்கிநின்றழுதுநீமயங்கி; என்முகம்பார்க்கிலென்செய்வேனப்பாஇதுவுமுன்செய்வினைமகனே.

வசனம்.

அப்பாமகனே தேவதாசா அருமையாயுன்னைப்பெற்றதகப்பனிந்தத்துக்கப்படவும் அதைப்பார்த்துநீயழவும் உன்முகத்தைப்பார்த்து நானழவும் இப்படியுந் தெய்வஞ் செய்ததோ என்னசெய்வோம் என்னசெய்வோ மய்யா.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ர்-முகாரி.

நெருங்கியசேனைக்கடவிலேபுகுந்து நெருப்பெனப்பாணங்கள்மழைபோற், சொரிந்தமர்வெல்லுமன்னர்கள்மன்னு சூதிலாமனம்படைத்தோனே; கருங்கல்லோ விந்நாமறையவனெஞ்சங் கடுமையாய்வருத்தங்கள்செய்தால், அருங்கடன் றீர்க்கவகையெனக்குண்டோ ஐயையோபாவிநானானேன்.

வசனம்.

இரதகசதுரகபதாதிகளுடனேகூட எதிர்த்தமகாபலசாலிகளையெல்லாம் வெட்டிச் செயங்கொண்ட இராசராசனுன உமக்கு இப்படிப்பட்ட துன்பமும் வரலாகுமா இந்த துக்கத்தைக்கண்டிரக்கமில்லாமல் மனதைக் கருங்கல்லாக்கி வைத்திருக்கிறாரே யிந்தமகாபாவர் இவருக்குநானிந்தக்கடனைத்தீர்க்க வகையில்லாமல்பாவிபோலப் பார்த்திருக்கிறேனே அரிகரி.

நாகன்-வசனம்.

அடாய் அடாய் சந்நாய் உன்பர்த்திரி சொல்லுகிறத்திலேநீ என்னமோ வெட்டிக் கொலைசெய்தவனும் அதைக்கேட்கவே நேக்குப்பயமாயிருக்கிறது நீ சண்டை பண்ணுகிற இராசாவானதினலே முதுகிலே யிந்தஅம்பறாத்தூணி வைத்துக்கொண்டாய் இப்போது பார்த்தையா கழுத்துக்குமாலை விரலுக்குப்பௌத்திரம் சட்டமாயிருக்கிறது கட்டிநெறிக்கட்டும் பிள்ளாய்.

இராசன்-தரு-இ-ட-எதுகுலகாம்போதி ஆதிதாளம்.

வராதபோதும்போதுமிந்தத்துக்கப்பொறுக்கலன்றுல்வசமோ காசிவிஸ்வநாதா
ஏதுகாரணமோநான்முன்னென்னபாவஞ்செய்தேன் காசிவிஸ்வநாதா



பதிபிழந்துபலமிழந்துபன்னுநாடிழந்தேன் காசிவிஸ்வநாதா
கதிபிழந்துபோனுலுங்கடனைத்தீர்க்கவந்தேன் காசிவிஸ்வநாதா
சந்தனஞ்சவ்வாதுபூசுஞ் சரீரம்நோகுதேகாசி விஸ்வநாதா
தந்திரஇந்திரசெக சாலப்புரட்டரியேகாசி விஸ்வநாதா
அந்தவிஸ்வாமித்திரர்க்கோராக்கிரமமுஞ்செய்தேனேகாசி விஸ்வநாதா
செந்தவிர்விரல்நகங்கத்தேகநோகுதையோகாசி விஸ்வநாதா

வசனம்.

சிவசிவா சர்வசீவாட்சகா தயாபரமூர்த்தி விசாலாட்சிநேசா காசிவிஸ்வநாதீசா கையிலே கிட்டிக்கோல் தெரிக்கிறத்திலேமாணவேதனையெடுத்து விரல்களெல்லாம் பஞ்சுபஞ்சாய் நசுங்குதே கழுத்தொடிந்தும்போகுதே இடிப்பு விட்டுப்போகுதே இனியிந்தவருத்தப்பட என்னால் முடியாது கிருபைசெய்து ரட்சியும் சுவாமி.

நாகன்-வசனம்.

சாத்தியாரே வாத்தியாரே பிள்ளைக்கென்ன வருமென்றால் அவளாயிலைவிக்க அவனுக்கேனுவருமோ நேக்குத்தெரியாது நேக்குமாதம் மூணுயின்னபணம் வருமென்கிறதைகேட்டதில்லையோ நீ இப்படியழுகிறத்திலேயும் உன்னுட்புடையாள் பாசாங்கு காட்டுகிறத்திலேயும் இந்தக்கள்ளப்பயல் கண்ணைச் சிமிட்டுகிறத்திலேயும் நம்மிட ரொக்கத்தை விட்டுவிடுவேனு நீ ரொக்கத்தைக் கட்டப்போகிறதுமில்லை நான் விடப்போகிறதுமில்லை இதுநல்ல தருணம் கொடுத்தநாட்டையில்லையென்று ஒருபொய்மாத்திரஞ்சொன்னால் உண்மைத் தாக்கிக்கொண்டுபோய் அயோத்தியில் பட்டங்கட்டி வைக்கிறேன்.

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

பொரிக்கின்றவயலாலுயிரானபோனுலு மொருபொய்சொல்
இடங்கொளாதுவந்தாலு மென்றலைவிதியேயல்லால் (வேலன்
தரிக்கங்கொண்டவைதத்து நறுக்கியேபிழிந்திட்டாலும்
அடிக்குமேநாட்டைவாங்க அருங்கடன்றீர்ப்பேன்சுவாமி

வசனம்.

இதைப்பார்க்கிலுங்குரூரமான வருத்தங்கள்செய்து என்னை நறுக்கிச் சக்கிப்பிழிந்தாலும் ஒருவருக்குத்தானங்கொடுத்த நாட்டைவாங்க அரிக்குமோ பொருக்கென்று பிராணன்போனாலும் ஒருபொய் சொல்லமாட்டேன் எவ்விதத்திலேயும் உம்மிடபொன்னைச் செலுத்திப்போடுகிறேன் சுவாமி.

நாகன்-வசனம்.

அடாய் அடாய் மனிதனுக்குச் சந்தோஷம் வந்தபோதுயாசித்துவந்தவர்களுக்கு வேணுமெல்லாந் தருகிறேனென்றுசொன்னு

ன் சங்கடம்வந்தபோது அதைநினைக்கிறதா இன்னம்நோக்கு வரு
த்தம்போராது இதோ அனுமந்தசேர்வையும் மீசைமுறுக்கியுங்காட்
டுகிறான் பாரும்பிள்ளாய்.

இராசன்-வசனம்.

தேவரீர்சித்தஞ்சுவாமிவந்ததெல்லாமனுபவிக்கக்காத்திருக்கிறேன்

நாகன்-வசனம்.

படுகளத்திலொப்பாரியா பணத்துமுன்னையா தாட்சண்யம்
நான்விட்டேன் விட்டேன்.

இராசன்-வசனம்.

ஏழைகூலிகொடாத பாவியாக்களும் நான் ஆசையாலிந்தவ
தனையும் வருத்தமும் படவந்தது அரிகரி அரிகரி.

சந்திரமதி-தரு-கண்ணி.

இ-ம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

தருமமில்லையோநீதிசத்யமில்லையோ இது.
தலைவிதிதானோஐயோ தெய்வமே
கர்மவசமோஎந்தன்கணவன்படுந்துயரம்
கண்ணாற்காணவோவைத்தாய் தெய்வமே
ஆவாயடித்துநாங்க ளலங்கோலஞ்செய்தோமோ
அன்றிவிதிவினையோ தெய்வமே
வாரங்குடிகளுக்குவழங்கினதற்குறையோ
வரன்முறைதப்பினேனோ தெய்வமே
தாயில்லாப்பிள்ளைகளைத் தளரவெட்டிவெடுத்து
தள்ளிநிந்தித்தேனோஐயோ தெய்வமே
சாயும்நிழல்வழியிற் றழைத்திருந்தமரங்களைத்
தறித்தேனோநாங்களையோ தெய்வமே
பர்லடைக்குப்பால்வராமல் பாலர்நொந்துகதறியழப்
பார்த்திருந்தோமோஐயோ தெய்வமே
காலஞ்சென்றபெரியோர்மனங் கலக்கம்படச்செய்தோமோ
காரணமோஅரிகரி தெய்வமே

நரகன்-வசனம்.

சத்தி சந்தி நோக்குத் துக்கம்வந்ததிலே நேக்குரொக்கம்வந்
தது வந்தது.



சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஆணைப்போலுயர்ந்தோரா துவண்டுநீவருந்துந்துக்கம்
காணப்போமிவர்போல்நெஞ்சக்கருங்கல்லாயிருப்பவர்க்கே
காணிப்பொன்னிருக்கச்சொந்தக்கணவனையிழப்பாருண்டோ
நாணச்சஞ்சலப்படாமல் நாயேனைவிற்பாய்சுவாமி

வசனம்.

கேளுமெனது பிராணரட்சகரே இப்போது நீர்படுகிறவாத
னையை நட்சத்திரகனைப்போல கருங்கல்லுக்குச் சமையான
நெஞ்சம்படைத்தவர்கள் பார்க்கலாமே யல்லது என்கண்ணினாலே
பார்க்கத் தகுமா காணிப்பொன்னிருக்கக் கணவனையிழப்பார்களா
எவ்வளவுஞ் சிஞ்சலப்படாமல் அடியாளைவிற்று தேவரீர்கடனைத்
தீர்த்துப்போடுஞ் சுவாமி.

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

கண்ணினின்மணியேயின்பக் கரும்பெனுமாதராளே
பெண்களின்மிகுந்தசாற்பின் பெருந்தவப்பயனேகேளாய்
என்றுமென்கருத்துக்கேற்ற வெண்ணம்நீகொண்டாய்மெய்
வண்ணமாயுன்னைவிற்று வாழ்வேனோமனந்துணிந்தே (யே

வசனம்.

கேளாய் பெண்ணே சந்திரமதி நான்சொன்னசத்தியந்தவறா
தபடியே நீயும் நினைத்தாய் அதுசரியே பிராணநாயகியான உன்
னைவிலையறவிற்று அப்பாவிந்தப்பூமியிலிருந்து உயிருடனே வா
ழ்வேனோ என்கண்ணின்மணியே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-பந்துவராளி

வாழ்வதுபொய்யேயாகும் வையகந்தனிற்பிறந்தோர்
ஊழ்வினைதொலைக்கவேறு முறையியாய்மகனோடென்னைத்
தாழ்வறவிலையாய்விற்றுத் தாகற்கேபொன்னைத்தந்து
கேள்வியின்மிகுந்தசத்திய கீர்த்தியோடிருந்துவாழ்வீர்

வசனம்.

கேளுமெனது பிராணரட்சகரே பூமியிலே பிறந்தவர்களெ
ல்லாம் வாழ்கிறதுபொய்யுஞ்சாகிறது மெய்யுமென்பது தெரிந்தி
ருக்குமே ஊழ்வினைப்பயனை யனுபவித்துத் தீரவேணும் என்னை
யுமகனையும் விலையறவிற்று இந்தக்காகருக்குக் கடனைத்தீர்த்துதே
வரீர் மந்திரியுடனே கூடச் சுகமாயிரும் சுவாமி.

இராசன்-வசனம்.

சத்தியமே நித்தியம் சுயமே யநித்தியம் அப்படியே செய்
குவேன் பெண்ணேசந்திரமதி.

நாகன்-வசனம்.

அடாய் அடாய் சந்தாய் நேக்கு இப்படிவிட்டுப் போகிறது கையை வலிக்கிறது சமுத்தை நோகிறது ஆகையால் ரொக்கத்தைக் கொட்டடையா கொட்டடையா தாடையா நெருக்கிறேன் இன்னம் நெருக்கிறேன் துளி துளி அசையாதே அசையாதே வைவை

இராசன்-விருத்தம்-இ-ம்-தன்னியாசி

முடிந்ததோசெய்யவேண்டு முறையெலாமின்னமுண்டோ
கடிந்தாலவருவதுண்டோ கலங்கிறேன்கண்ணுறக்கண்டீர்
படிந்தசொல்மகனோடெந்தன் பத்தினிதனையும் விற்று
விடிந்தசூரியன்போமுன்னே மிகுங்கடன் தருவேன்சுவாமி

வசனம்.

ஆச்சுதா சுவாமி நட்சத்திரரகரே படுத்தவேண்டிய உபத்திரவங்களெல்லாம் படுத்தினீரா இன்னமிருக்கின்றதா

நாகன்-வசனம்.

ஓகோகோ இன்னம்வேண்டிய விசித்திரங்களெல்லா மிருக்கின்றதே அதையெல்லா மெங்கே கண்டாய்.

இராசன்-வசனம்.

அப்படி யினிமேலென்னை யொன்றும் வருத்தப்படுத்தவேண்டாம் இந்தபட்டிக்கும் நான்பட்ட அவஸ்தை அந்தவிசுவாமித்திர றியாரா உம்மிட மனமென்னகல்லா அரிகரி யிந்தபட்டோடே யென்னை விட்டுவிடும் என் பெண்சாதி பிள்ளைகளை விலைகூறிவிற்று உமுடைய பொன்னைக் கொடுத்துவிடுகிறேன் சுவாமி.

நாகன்-வசனம்.

ஆகா ஆகா ஆகா ஆகா அடாய் அடாய் சந்தாய் நோக்கேதடா வெட்கமில்லை ஆட்புடையாளையும் பிள்ளையையும் விற்கப்போகிறாய் இவளையு மிந்தப்பயலையுங் கண்டால் ஒருகாசுங் கொடார்கள்.

இராசன்-வசனம்.

வந்ததெல்லா மென்ன இருஷ்டம் உமக்கேனிந்தவழக்கு உம்முடைய பொன்னைக்கொடுத்துவிடுகிறேன் சுவாமி.

நாகன்-வசனம்.

ஆனால் விற்றுக்கொடும் பிள்ளாய் கூத்தாய்

சந்திரமதி-சொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி

சன்னல்வில்வேளொழிந்தக் காளையுடனேயென்னையும்
இன்னம்விலைகூறு திருப்பதென்னவகையறியேன்
என்னவகைவேறே யிருக்குதிவர்கடன்கொடுக்க
சொன்னமொழிதவறமற் றுணிந்துவிலைகூறாரே



வசனம்.

கேளுமென்னுடைய பிராணநாயகரே தேவரீர்சொன்னசத்தியத்துக்குப் பழுதில்லாமல் என்னையும் இந்தப்பிள்ளையையும் விற்று விசுவாமித்திரர் கடனைத்திரும் வேறேயென்ன விருக்கின்றது அவர் கடனைத்தீர்க்கத் தடைசெய்யாமல் விலைகூறுஞ்சுவாமி.

இராசன்-வசனம்.

அப்படியே செய்கிறேன் வீசோ இந்தத்துரும்பைக்கிள்ளியுங்கள் தலையிலே வைக்கிறேன் நீங்கள் சத்தியமாய்விலைப்படவேணுமென்று முன்னே நடவுங்கள் பெண்ணே சந்திரமதி அப்பாலேவ நாசா.

சந்திரமதி-வசனம்.

அப்படியே நடக்கிறேம் சுவாமி

இராசன்-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

காசிநகரில்வாழுங்கனத்ததுடிகளேயென்
காதலியையக்கொள்ளுங்கள்விலை கூறினேன்-பட்ட
கடன்றீர்க்கவேயனந் தேடினேன்
எச்சுவிட்டோமென்மனை யென்மனைவிதன்னைதானே
இன்றுவிற்கக்கூறிவிலை விடுத்தேனே-வந்த
இடருக்காய்விற்கமனேஸ் சித்தேனே
விசுவாமித்திரமுனிவ வேதியராலுஞ்சரி
வேறவர்கள்வந்துபொன்னைக் கொடுத்தாலும்-விற்பேன்
விசுவாமித்திரவிலைவிதி விடுத்தாலும்
மாதில்லாக்ஷத்திரியருல மன்னராலுஞ்சரி
மற்றும்பொன்கொடுத்துக்கொள்ளத்தடையுண்டோயார்க்கும்
வருவீர்விதிவெல்வதார்மன்னர் மதிகொண்டோ
காணிகாணியாசந்தேடி கோடிகோடிசெலவழிக்கும்
கருத்துள்ளவைசியருல நிதியாரோ-எந்தன்
கடனுக்கிதல்லாமல்வேறே கதியாரோ
நீணிலத்தைப்பழுதுபயிர்நிலைக்கச்செய்துயிரைக்காக்கும்
நிறைபொழிசெல்வமுள்ள குடியோரோ-இவளை
நிதிகொடுத்துக்கொள்விரீரதப் படியோரோ
தேரோடும்வீதியதன் தெருவீதிமைவீதி
செப்பும்பலவீதிகளி லுள்ளோரோ-கடன்
தீர்க்கவென்னுடைய பொருள்தந்து கொள்வாரோ
ஆனாலிப்படிசெய்தேனே அரிமூர்த்துபெண்பிள்ளை
யடங்கலும் விற்கநினைந்து பாவிநானே-இந்த
ஆபத்திற்கொள்வீரென்று கூவினேனே

தாரகன்-விருத்தம்-இ-ம்-தோடி.

உழுகிறதுண்டையானா லுன்னூரில்விலைப்போகாதோ
அழுகிறபூனைச்சுற்றி யார்கொள்வாரிவளையன்று
தொழுதுநீவிஸ்வாமித்ரர் சொற்படிசெய்தாயானாற்
பழுதுண்டோகடனுந்திரும்பாக்கியமுமடைவாய்சொன்னேன்

வசனம்.

அடாய் அடாய் சந்தாய் என்விருதாவிலே செருத்தெருவாயிவர்களையிழுத்துக்கொண்டலைகிறாய் அலைந்தலைந்துலை யார்வாங்குகிறார்கள் உழுகிறதுண்டையானால் உள்ளூரில் விலைப்போகாதா இந்தத்தொந்தனை நீ யடமாட்டாய் கடனுந் தீரமாட்டாது விஸ்வாமித்திரர்க்கு நீ கொடுத்தநாட்டை இல்லையென்றுரைந்துபொய்சொல்லுவாயானால் இராச்சிய பட்டாபிஷேகம்உனக்குண்டாகித்தருகிறேன் இந்தக்கடனையும் விட்டுவிடுகிறேன் இதைச்சத்தியமாய் நம்பும் சேக்கானால் ரொம்பவும் பரிதாபமாயிருக்கிறது ஆனைப்படிக்கு யதார்த்தம் யதார்த்தம்

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

எரிகிறநெருப்பினிற்றிலெண்ணெயைவிட்டாற்போலென்மேற்
பரிகிதிருக்கவெப்பப்பாதத்துக்கஞ்சவேனும்
தருகிறதுமதுபொன்னைச் சட்டமாயிவனாவித்தே
வருகிறகன்மமெல்லாம் வரினும்பொய்சொல்லேனையா

வசனம்.

நீர் பரிந்துபேசுகிறதைப்பார்த்தால் எரிகின்றநெருப்பில் எண்ணெயைவிட்டாற்போ லிருக்கின்றது பாவத்துக்கஞ்சாமற்பொய் சொல்வேனோ என்னகர்மம் வந்தாலும் வரட்டும் இவர்களைவிற்று உம்மிட கடனைத்தீர்க்கிறேன் சற்றுநேரங் கோபம்பண்ணாமலிரும் நட்சத்திரத்தாகரே.

தாரகன்-வசனம்.

உள்ளத்தைச்சொன்னால் ஙொள்ளொன்று விழுகிறாய் உன்பாபெதிணாயிரங் கூழ கொட்டாங்கச்சி, யெப்படியாகிலும் நாமிட ரொக்கத்தைக் கொட்டிறதே நமக்குப்பெரியகாரியம் இனியிந்த விடத்தைவிட்டெடுத்தடிவையேன் உன்பின்னாலேதிரிந்துதிரிந்துதேக்குக்கால்வலிக்கிறது.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி

இந்தநற்காசிதன்னி லிருக்கின்றபாக்கியவான்கள்
வந்திவர்தம்மைக்கொள்வீர் மறையவர்கடனால்நொந்தேன்



எந்தச்சாதியாரானாலு மிவர்கடன்கொடுத்தேயிந்தச்
சுந்தரமாதோடெந்தன் சுதனையுங்கொள்ளுவீரோ

வசனம்.

கேளுங்கள் இந்தக் காசிப்பட்டணத்தி லுண்டாகிய புண்ணியவான்களாகிலும் பாக்கியவான்களாகிலும் யாராகிலும் எந்தச்சாதியாராகிலும் இவருக்குநான்கொடுக்கவேண்டிய கடனைக்கொடுத்து விட்டால் இந்தஸ்திரீயையும் பிள்ளையையும் விலையாகக்கொடுத்து விடுகிறேன் இரக்கமுள்ள உத்தமர்களே.

பொது-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

மகனொடுமனையாள்தன்னை வருத்தியேயந்தக்காசி
நகரெலாந்திரிந்துகூவி நாடியேவிலைதான்கூற
மிகுதவவிஸ்வாமித்ரன் வினையவஞ்சனையாலாங்கோர்
இகழ்மறையவன்போலக்னி தேவர்தாம்வருகின்றாரே

வசனம்.

அஃதெப்படியென்றால் அரிச்சந்திரமகாராசன் காசிப்பட்டணத்தின் வீதிவீதியாய் விலைகூறிவருகிறபோது விசுவமித்திரர் மாய்கையினாலே யக்கினிதேவர் பிராமணருபமாய்வருகிறவிதங்காண்க.

காலகண்டகன்-வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

காலகண்டகவேதியர்வந்தார்-வந்தாரிதோ
காலகண்டகவேதியர்வந்தார்
நீலகண்டசதாசிவன்விழிவளர்
நெருப்புப்பொறியெனநினைவிற்செறிமன (காலகண்)
சிலமான அக்கினிப்பொதியெனுந்தேகம்விளங்க மகாப்ரசங்கங்க
ளிடு, "கிகழ்சதுர்வேதமும்நாவிலே நுலங்க
ஆலகாலவிஷம்போலிருகண்க விலங்க-வெடுவெடென்று
அருகினில்வருகிறபேர்களுங்கண்டுவிலங்க
காலங்கண்டபெரியோரிலும் நானே
வைகண்டயாகமனேகஞ்செய் தேனே
காலப்பெண்டுபிள்ளைவிற்கிறே னென்று
தவித்தவனெங்கேசொல்வே னின்று
நடந்தெட்டுரோஷநடந்துதன்னாடித்
தந்தடியிட்டுத்தாவிக்கூப்பிட்டுக் (காலகண்டகவே)

காலகண்டகன் விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

உசிதமாய்த்தெருவில்நின்றே யொப்பனையிட்டேகூவிப்
பசுவைவிற்பவர்கள்போலப் பரிந்திங்கேவிலைதான்கூறி
இசையுடனேமுதனாரோ இவன்றானோநீயோ ஆரோ
கசியுங்கண்ணீரேதுந்தன் கருத்தேதோவுரைசெய்வாயே

வசனம்.

ஏதடா அடா இங்கேபசுமாட்டை விலைகூறிவிற்கிறதுபோலேயிருந்தது நேக்கு ஆரடா கூவியமுதலன் நீயாய் அடாய் நீயாய் அடாய் நீயேதுக்கடா அழறாய் நீகூப்பிட்டகாரியந்தெரியச்சொல்லும்பிள்ளாய்.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மறையவனே நீர்கேளும் மனைவியைமகனைதானே
நிறைமனதுடனேவிற்க நெடுந்தெருவெங்குஞ் சென்றேன்
பொறையுடன்கொள்வீரானால் புனிதமாங்கடனுந்தீரும்
குறைவிலையிதுதான்சேதி குணமுடனுரைத்திடேனே

வசனம்.

கேளும் சுவாமி பசுவுமல்ல கன்றுமல்ல என்பெண்சாதியையும் பிள்ளையையும் விலைகூறினேன் நீர்கொண்டால் மகாவுத்தமம் என்கடனும் தீரும் புனிதனாவேன் சொல்லுஞ் சுவாமி.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

பையவேலாடிவனைக்கொண்டாற் பணத்துக்கோர்லாபமுண்டோ
கையிலேயிருக்கும்பொன்னைக் கரைத்திடப்பார்க்கிறாயோ
மெய்யோதானிவளைநீயே விலைகூறிவிற்றபின்பு
பொய்யாமோநேக்கேதேனும் புனசுருட்டுகளுண்டாமோ

வசனம்.

அடாய் அடாய் நீ சொல்லுகிறதைப்பார்த்தால் நேக்குப் பயமாயிருக்கிறது என்கையிலே கொஞ்சத்திரவியம் இருக்கிறதைக் கரைக்கப்பார்க்கிறாயோ இவளையு மிந்தப்பயலையும் கொண்டால் பணத்துக்கேதாகிலும் லாபமுண்டோ அல்லது புனசுருட்டுகளேதாவதுண்டோ மெய்யாக விற்கிறையா சொல்லும்பிள்ளாய்

இராசன்-வசனம்.

ஆம் சுவாமி நிச்சயமாய்க் கடனுக்காகவே விற்கிறேன்

காலகண்டகன்-வசனம்.

அடாய் அடாய் நீ விற்றுப்போன பிற்பாடு இன்னமொருவன் என்பெண்சாதி பிள்ளையென்று வந்தால் நேக்கெப்படி



இராசன்-வசனம்.

அப்படி வித்தியாசம் வாராது தேவரீர் சந்தேகப்படாமற்கொள்ளும் சந்தேகமுண்டானால் நடுத்தெருவிலே விலை கூறுவேனே சுவாமி.

காலகண்டகன்-வசனம்-ஆனால்விலைசொல்லும்பிள்ளாய்

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

பலவானோரானையின்மேற் பற்றிநின்றுயரநோக்கி
விலகாதுகவண்கல்விட்ட விசையாரம்நிறைந்தபொன்னை
நலமாகயிவர்க்குத்தந்தால் நான்பட்டகடன்தான்தீரும்
குலமனையாளோடிந்தக் குழந்தைக்கும்விலையிதாமே

வசனம்.

விலை சொல்லுகிறேன் கேளுஞ் சுவாமி யானையின்பேரில்பலசாலி நின்றெறிந்த கவண்கல் போகுந்தூரம் பொன்னையிவருக்குக் கொடுக்க வேணும் அதுதான் இவளுக்கும் இந்தக் குழந்தைக்கும் விலைசுவாமி.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இந்தநற்சிறுவனோடு மிவளையும்விலையாய்விற்க
வந்தநீதார்சருமமென்ன வரலாறேதறிகிலேனே
வந்தவாறுரைத்தால்வாங்க மனதுசம்மதிப்பேன்பொன்னைத்
தந்துனைமகிழச்செய்வேன் தரும்விலைக்கிவர்களீடோ

வசனம்.

அடாய் அடாய் நீ சொல்லுகிற விலைக்கு இந்தப்பிள்ளையுமிவளுமா யிப்பொறுது பொறுது ஆனால் நீ படுகிறத்தைப் பார்த்தால் நேக்கு விசனமாக விருக்கிறது உன்முகத்தைப் பார்த்துப் பொன்கொடுக்கவேணுமேயல்லது இவர்களைக்காசும் பெறமாட்டார்கள் அதிருக்கட்டும் நோக்கில் விறிவந்தவிதமென்னதெரியச்சொல்லும் பிள்ளாய்.

இராசன்-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி

வரலாறுகேட்கவந்த மறையோரேசொல்லக்கேளும்
வரமிகுமயோத்தியாண்ட மன்னனுமரிச்சந்திரன்பேர்
தரணியையீந்தேன்முன்னே தானமாய்க்கொடுத்தபொன்னைத்
தரச்சொன்னார்விஸ்வாமித்ரர் தவிக்கிறேனதிருலையா

வசனம்.

அயோத்தியையாண்ட அரிச்சந்திரன் என்பேர் என்னுடநகரமும் விஸ்வாமித்திரர்க்குக் கொடுத்தேன் அதற்குமுன்னே கொஞ்சம்பொன்னைத்தானம்வாங்கியென்னிடத்திலேதானேவைத்தாரது

தப் பொன்னைத் தரச்சொல்லி யிவனைக்கூட்டினார் அந்தக்கடனுக் காகத்தவிக்கிறேன் சுவாமி.

காலகண்டகன்-வசனம்.

அப்படியா, அப்படியா அந்தக்கடனை யிவருக்குக் கொடுக்கிறேமென்று நாமேற்றுக்கொண்டால் தேக்கிவர்களை விலையாய்விற்றுப் போடுகிறையா இப்படிப்பட்ட இராஸ்திரீ நம்மிடமிழப் பிராமணத்திக்கும் நமக்கும் உள்ளவேலை யெல்லாஞ்செய்வாளாசெய்வாளா.

இராசன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

வேதவேதியரேநீர்சொல் வேலைகளெல்லாஞ்செய்வாள்
நிதிலாச்சிறுவன்றனும் தேவரீர்க்கேவல்செய்வன்
யாதொருகுறையுஞ்செய்யா ரிவர்களைவிலையாய்க்கொண்டே
வேதனைதீர்த்தேயென்னை விடுதலைபண்ணுவீரோ

வசனம்.

தேவரீருத்தாரப்படியே யிவளும் இந்தப் பிள்ளையும் நீங்கள் காலினாலே காட்டியவேலையைக் கையினாற் செய்வார்களேயல்லது வேறில்லை யாகையா லென்கடனைத்தீர்த்து என்னைப்புனிதனாக்கி யிவர்களைக் கைக்கொள்ளும் சுவாமி.

காலகண்டகன்-வசனம்.

ஓய் நட்சத்திரத்தாகரே தேக்குத்தந்தால் நோக்குத் தந்தாற் போலே தானே பிடியுங்கையை யடிக்கிறேன்.

இராசன்-வசனம்.

ஆம் சுவாமி அப்படியே வந்தது வந்தது தேக்கு ரொக்கம் வந்தது வந்தது-

காலகண்டகன்-வசனம்-ஓய்உம்பிடபேரென்ன
இராசன்-வசனம்-என்பேர்அரிச்சந்திரன்சுவாமி
காலகண்டகன்-வசனம்-இவள்பேரென்ன
இராசன்-வசனம்-இவள்பேர்-சந்திரமதிசுவாமி
காலகண்டகன்-வசனம்-இந்தப்பிள்ளைபேரென்ன
இராசன்-வசனம்-இவன்பேர்தேவதாசன்சுவாமி

காலகண்டகன்-வசனம்.

இவளும் இந்தப்பையனும் உமக்கென்னவேணும்

இராசன்-வசனம்.

இவளென்பெண்சாதி இவனெனக்குப் பிள்ளைசுவாமி

காலகண்டகன்-வசனம்.

ஆனால் முறிச்சீட் டெழுதும் பிள்ளாய்



இராசன்-வசனம்.

இதோ எழுதினேன் இந்தாருஞ் சுவாமி.

காலகண்டகன்-வசனம்.

தேக்குச் சாலேசரம் நீதானே வாசியும் பிள்ளாய்

இராசன்-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி.

கதிர்குலத்தரசனயோத்தியையாண்டோன்
காதல்சேர்திரிச்சங்குமைந்தன்
சதிரரிச்சந்திரன் றன்மகன்மனையா
டம்மைதன்னவசரநிமித்தியம்
விதிவசவிஸ்வாமித்திரர்தன்கடனால்
விற்றனன்காசியில்வாழும்
துதிதருமறையோன் காலகண்டற்கே
சூழிவர்சாட்சியாய்த்தானே

வசனம்.

இன்ன வருஷம் இன்னமாதம் இந்தத்தேதி காசிப்பட்டணத்தி லிருக்கும் பிராமணரில் காலகண்டக ஐயருக்கு அயோத்தியாபுரியையாண்ட திரிசங்கு மகாராசன் புத்திரனான அரிச்சந்திரன் எழுதிக்கொடுத்த விற்கிரயச்சீட்டென்னவென்றால் என்பெண்சாதி சந்திரமதியையும் என்பிள்ளை தேவதாசனையும் விஸ்வாமித்திரமகாரிஷிகையிலே நான்பட்ட கடனுக்காக இந்தநாள் நம்மிடமையி லிவர்களை விலையறவிற்ற பொன் யானைபின்பரில்நின்றுகவண்கல் லெறிந்தவுயரங் கொட்டியபொன் இதற் கிவர்களைவிலையறவிற்றுப் பொருளறக் கைக்கொண்டேன் இந்தப்படிக்கு என்மனோராசியில் எழுதிக்கொடுத்த பெண்டுபிள்ளை விற்கிரயச்சீட்டு இதற்குச் சாட்சி நட்சத்திரத்தாகர் சத்தியகீர்த்தி யிவர்களறியஎழுதின தன்மைக்கு சுகஸ்தலிகிதம்.

காலகண்டகன்-வசனம்.

ஓய் இராசனே சீட்டைத்தாரும் பெண்சாதியையும் பிள்ளையையும் கூடக் கூட்டும்.

இராசன்-வசனம்.

இந்தாரும் சுவாமி சீட்டு இந்தாரும் பெண்சாதி இந்தாரும்பிள்ளை சுகமாயழைத்துக்கொண்டுபோம் சுவாமி.

சந்திரமதி-தரு-சவ்ணி
இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

கொண்டகணவன்றானேபெண்டுபிள்ளையைவிற்குங்
கொடுமையினைத்தகையோ மன்னவனே

பண்டுநாஞ்செய்தபழிபாவமோநமக்கிந்த
    பாடுவிளைந்ததையோ                                        மன்னவனே
காராம்பசுவுங்கன்றுங்கதறக்கதறப்பொல்லாக்
    காதகர்க்குவிற்றேமேநாம்                                        மன்னவனே
ஆரும்படாதகடன் அருங்கடன்பட்டோமோநாம்
    ஐயோவிதென்னவிதி                                        மன்னவனே
வாடியென்றழைப்பாரோமகனும்நானுமாயெங்க
    வந்ததோகாலமையோ                                        மன்னவனே
தேடிவந்துமாலையிட்டுச்சேர்ந்துவாழ்ந்திருந்ததெல்லாம்
    தீர்ந்ததோசொப்பனமாச்சோ                                        மன்னவனே
என்றும்பிரியேனென்றேயிருந்தேன்விதிவசத்தால்
    இப்படியாச்சுதோஐயோ                                        மன்னவனே
இன்றுகண்டதிருமுகத்தையென்றுகாண்பேன்பொனவழிக
    ளிதுதானேஐயோ                                        மன்னவனே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி

பஞ்சணைமீதிற்பாதம் பட்டிடில்வருந்துமென்றே
அஞ்சலிகரத்தாலேந்தி யருமையாய்மடிமேல்வைத்த
தஞ்சமுமறைந்தபிள்ளை தன்னையுமறந்துநீரும்
பஞ்சையானீரோநாங்கள் பாவத்தால்முறிபட்டோமோ

வசனம்.

ஆ என்பிராணரட்சகா பஞ்சணைமெத்தையின்பேரிலென்பாதம் வைத்தால் நோகுமென்று அணைத்தெடுத்து மடிமேல்வைத்துக்கொள்வீரோ யப்பேர்ப்பட்ட யட்சமு மறந்து தவஞ்செய்து பெற்றபிள்ளையையுந் துறந்து நீரொருபரதேசியைப்போலேபோகவும் நாங்கள் விலைப்பட்டுமுறியாகவும் தலையெழுத்துவந்ததா அரிகரி அரிகரி.

இதுவும்-சந்திரமதி-வசனம்

அப்பாமகனே தேவதாசா நமக்கிப்படியும் வந்ததா என்புத்திரசிகாமணியே.

தேவதாசன்-தரு-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்.

ஐயையோவித்தவிதி                                        வரலாமோ-ஐயா
    தெய்வஞ்செய்திட்டசதி                                        யாதுபோமோ
செய்யும்வகைகளேதும்                                        அறிகிலேனையா
    திகைக்கிறேனுஞ்சின்னஞ்                                        சிறியேனே



தாயும்பிள்ளையுமாகப்                                        பிரிவோமோ-ஐயா
    சதிவருமென்றுமுன்னந்                                        தெரிவோமோ
முத்தமிட்டுஉச்சியையோந்திடு                                        வாயே ஐயா
    முகம்பார்க்கவுதயத்திற்கூப்                                        பிடுவாயே
ஆனாநானையாவென்று                                        தாவுவேன்-ஐயா
    ஆர்முகம்பார்த்தினி                                        யுலாவுவேன்
நாடிழந்தோமென்றுசொல்லி                                        தளர்ந்தேனே-ஐயா
    நானுன்னைப்பிரியவினாய்                                        வளர்ந்தேனே
அப்பாமகனேயென்று                                        அழைப்பாரார்-ஐயா
    ஆசைவாயெங்களுக்                                        குழைப்பாரார்
அடிமைப்படுத்திவைக்க                                        வளர்த்தாயோ-ஐயா
    அறிவுள்ளவாழ்வினையினால்                                        இளைத்தாயோ

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

பிள்ளையென்றென்னைப்பெற்ற பிரியமாய்வளர்த்தெடுத்து
கள்ளமாம்விஸ்வாமித்ரர் கடனுக்கேயெப்பித்தாயோ
உள்ளநாள்மட்டுந்நாங்கி யொழியாமலிருந்தபாரம்
யெள்ளவேதொலைத்திட்டாயே விட்டதோதுன்பமையா

வசனம்.

ஆ என்னைப்பெற்ற ஐயாவே என்னைப்பிள்ளையென்று பெற்றெடுத்து அருமையாய்வளர்த்து விஸ்வாமித்திரர் கடனுக்காக விற்று ஒப்புவித்துப் போட்டீரோ நானுமென்தாயும் உமக்குத் தீராச்சுமையா யிருந்ததா அச்சுமையைத் தொலைத்தீரா இனிச் சுகமா யிருப்பீரா என்னைப்பெற்ற ஐயனே.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

குவலயந்தனிலேவிற்ற குதிரைக்குப்புல்லெடுக்கத்
தவறிலாதுனக்கேன்விளைப்பத் தலையெழுத்தோதான்மன்னா
இவருடனிந்தப்பைய விருவருமுறிப்பட்டாரோ
சிவனைநொந்தழுதிட்டாலுந் தீரணப்பொழுதினிவிடேனே

வசனம்.

ஓய் ஓய் வெகுகாலமாய்ப் பிழைத்துக்கெட்டவன் தான்நீயோ சமிக்லை விற்றுப்போட்ட குதிரைக்குப் புல்லு சுமக்கத்திரிகிறாய் இந்தப்பயலும் இவளும் எனக்கு முறிபட்டார்களோ இல்லையோ ஆகையா லிவர்களெப்படி அழுதாலும் நிமிஷமாவதினி விடுகிறேனோ இனிவிடுகிறேனோ வாருங்கள் வாருங்கள்.

இராசன்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

தலைவிதியவராலுந்தவிர்க்கவொண்ணதென்று
சாஸ்திரங்கள்சொல்லுவதுமெய் யாச்சதோ-எந்தன்
தவப்பலன்களுந்தப்பிப் போச்சுதோ
விலையாகப்பெண்டுபிள்ளை விற்கவும்வந்துதித்த
விதிவசகாலமோதான் கலிகாலம்-அந்த
விஸ்வாமித்திரர்விதித்த அலங்கோலம்
வாங்கினோர்க்குண்டோவாய்தான்விங்கினோர்க்குண்டோ வெட்கம்.
மறைபோனைநொந்தத்தாலே நீருமோகடன்
வழக்குவழியாய்வந்து நேருமோ
தாங்குவான்பிள்ளையென்றுதளராமலேவளர்த்து
தரணிபோர்பலன்காண்பார் நான்பாவி-யுன்னைச்
சலியாமல்விற்றேனையா விலைகூவி
மான்போல்விழியணங்கே மயிலேயின்பக்குயிலே
வலியவுன்னைவிற்க வானேனே-உந்தன்
வாஞ்சையை மறந்து போனேனே
தேன்போல்மொழிக்கியுன்னைத்திசைக்குமகனுடனே
தெய்வம்பிரித்ததையோ தரிப்பேனோ-இன்னஞ்
சீவனஞ்செய்யாமல்மனஸ்க் கரிப்பேனோ
மைந்தனைவறியமடனைவிகதறியழ
மரம்போல்நான்பார்த்திருக்க விதித்தாயோ-இந்த
வஞ்சனைக்கேதெய்வமோசம் மதித்தாயோ
எந்தப்பிறப்பிலினியிவர்களுடனேகூடி
ஏகபோகமாகவாழ்வேன் அணிநாகா-கிருபை
இதுவோவிஸ்வேஸ்வரனே யுமைபாகா

இராசன்-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி

காசிவாழ்விஸ்வநாதா கடவுளேயுலகத்தோர்கள்
பாசமாய்பெண்டுபிள்ளை படைத்ததிற்பலன்காண்பார்கள்
ஆசைசேர்மனையாள்மைந்தன் அமைந்துபிரிந்துபோக
மோசமோசதியோகால முடிவிதுதானோஐயோ

வசனம்.

அரகரா காசிவிஸ்வநாதாஉலகத்திலேயுள்ளவர்கள்பெண்சாதி யைக்கொண்டு பிள்ளைகளைப்பெற்று அதனாலேயனேகபலன்களை யனுபவிப்பார்களெனக்கெல்லாமைந்து மிப்படிப்பரிகொடுத்து ப்பரதவிக்கவும் வந்ததா சிவ சிவா இது ஆர்செய்த மோசமோ



தெய்வந்தானிப்படி சதிசெய்ததோ அல்லது இருவரன் முடிந்து போகிறகாலமோ ஈஸ்வரா ஈஸ்வரா.

சத்தியகீர்த்தி விருத்தம்-இ-ம்-முகாரி.

பெருவிதிசிரிவென்றெண்ணிப் பேதைபோற்கலங்கலாமோ
அறிவினிலுயர்ந்தவேந்தே ஆனாலும்பொய்சொல்லாத
நெறியிசகாமற்சத்யம் நிலைக்கவேநினைக்கவேணும்
செறிதருபெண்டுபிள்ளை ஸ்திரமாகாயாகாய்மெய்யோ

வசனம்.

இப்படியும் விசனப்படுவாருண்டோ மகாராசனே உம்முடை யசத்தியம் நிலைக்கவேண்டி யொருபொய்சொல்லமாட்டாமல் பெ ண்சாதிபிள்ளையைவிற்றுக் கொடுத்தீர் அதினாலே சத்தியமுங் கீர்த் தியும் நிலையாச்சுது காயம் நிலையாமா பெண்சாதிபிள்ளை நிலையா மா மனதைத் திடப்படுத்திக்கொள்ளு மென்றுண்டவனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி

தரும்பொருளுனக்கல்ல சத்தியகீர்த்திநீகேள்
புகழுக்கோர்குறைவுமில்லை புண்ணியந்தாழ்ந்திடாது
மகிழ்சந்திரமதியென்றன் மனைவியை மகனையந்த
யுகந்தனிற்காண்பேனோ யுதவெய்பேன்பாவிநானே

வசனம்.

கேளாயென தன்புக்குரிய அறிவுள்ளசத்தியகீர்த்தி யெப்ப டியாகிலுஞ் சத்தியமே பெரிய தருமமே நிலைக்குங் காயநிலையா து மெய்யே யென்மனை துக்கிசைந்த குணவதியானசந்திரமதியை யும் அருமையான சிவரத்னம்போல் வளர்ந்த தேவதாசனையும் எந் தயுகத்திலே காணப்போகிறேன் என்னிலும்பாவியொருவருண்டா மந்திரி

சத்தியகீர்த்தி-வசனம்.

கேளும் மகாராசனே யெல்லாந் தெய்வச் செயலேயல்லாம ல் நம்மிட செயலொன்றுமில்லை சுவாமி.

நாகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

முனிவர்க்குச்சொன்னபொன்னை மூக்காலேயழுதுகொண்டே
உனையெயர்கொடுக்கச்சொன்னு ருன்பெண்டுபிள்ளைதன்னை
விலையமாய்விற்றதாலே மிரண்டையோவினைகொண்டாயோ
தனியிருந்தழுதிருந்தே சத்யவான்நீதான்மெய்யே

வசனம்.

ஓய் ஓய் நேக்குத் தெரிந்தது காணும் நேக்குத் தெரிந்தது காணும் நீ யேதோ பாசாங்கு போட்டுக்கொண்டு பெண்சாதிபிள் ளையை விற்றுவைனைப்போல்நம்மிடரொக்கத்தை விட்டுவிடுவேனெ

ன்றுவேஷம்போட்டால்நான் விடுவேனோ இப்போது நீ மூக்கா லேயழுகிறதும் பெண்டுகளைப்போல வொண்டிக்குரலாயழுகிறது ம் பார்த்தால் உன்னைப்போல் சத்தியவானொருவருமில்லைமுன்னே தானே யில்லையென்று ஒருபொய்சொன்னால் இந்த துக்கம் வருமா வருமா.

இராசன்-வசனம்.

அதற்காக அழவில்லை சுவாமி யெப்படியும் வந்தது தலைவிதி யென்று விதிக்கழுதேனே யல்லது வேறில்லை யும்மிட கடன்தீர்த்த தா நட்சத்திரத்தாரகரே.

தாரகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

தவமுனிவிஸ்வாமித்ரா தாசனுன்கடனவர்க்கே
எவளவுங்குறைவில்லாம லீந்திட்டாய்மோசமில்லை
தலைமட்டாயுன்பின்னே சலியாமற்றிரிந்தகூலி
இவளவென்றீந்துவாயோ இல்லையோசொல்லுவாயே

வசனம்.

நமக்கேதுங் காணும் கடன்விஸ்வாமித்திரருடையபாக்கியை க்கொடுத்தாய் மோசமில்லை அவர்விட்ட தாரகன் நான் இத்தனைநா ளாய் நீ வரச்சொன்ன விடமெல்லாம் வந்து நீ சொன்னபடியெ ல்லாங்கேட்டு உன் பின்னே திரிந்த கூலி யெவ்வளவென்று நோக்கு ள்ளது கொடுப்பாயோ இல்லையோ சொல்லும் பிள்ளாய்.

இராசன்-வசனம்.

அரிகரி அரிகரி யிப்படியா சுவாமி இதுவும் ஈஸ்வரபத்தனம் நீ தான் இவ்வளவு தரவேண்டு மென்றுகேட்டால் தருகிறேன் நட்ச த்திரத் தாரகரே.

தாரகன்-வசனம்.

உம்முடைய சொத்து நேக்கதிகம் வேண்டாம் நேர்குப்பதி னாயிரம் பொன்னுண்டு.

இராசன்-வசனம்.

அப்படியே தருகிறேன் சுவாமி நட்சத்திரத்தாரகரே

இராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

வருகிறகர்மமெல்லாம் வழிதனில்நிற்பதுண்டோ
தாரகனுமிவர்க்குக்கூலி சத்யமாய்க்கொடுக்கவேணும்
உருகுமென்மனையில்வேறே புனையறியாததுண்டோ
ஒருபதினாயிரம்பொன்னுதவுவாயென்னைவிற்றே

வசனம்.

கேளாய் சத்தியகீர்த்தி யினி யென்னயோசனை வருகிறகர்ம மோ வழியிலே நிற்குமா வந்ததெல்லா மனுபவிக்கத்தானேவேணு



ம் இந்தநட்சத்திரத் தாரகருக்குள்ளகூலி பதினாயிரம்பொன்கொடு க்கவேணும் அதற்கு நம்மிடமையி லென்னவிருக்கிறது ஆகையா லென்னை விற்றுக் கொடுத்துவிடும் அப்பா சத்தியகீர்த்தி

சத்தியகீர்த்தி-தரு-கல்யாணி

இ-ம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

இதற்கோதானிந்நாள்மட்டும் உம்மைப்பிரியாமலே
இருந்ததுமையா ஐயோ மன்னவனே
இப்படிசற்றனை யொப்புமோதெய்வம்
எப்படிபோமிது எவ்வகையாமோ
என்னதான்செய்வேனையோ மன்னவனே
தகிக்குநானுதவிப்போலே சதிக்குள்ளாகவிருந்து
தவிக்கப்பார்த்திடவோ ஐயோ மன்னவனே
சத்தியமித்தனை சித்தவிசித்திரம்
உத்தமமோதெய் வந்தொழிலேமெய்
தயங்கச்செய்தாயோ ஐயோ மன்னவனே
உள்ளநாளுள்ளமட்டும் உன்னுடைமையுண்டுதானே
உடம்பெடுத்தேனே ஐயா மன்னவனே
ஒட்டிய நீவினை நெட்டியிழுத்திட
விட்டிடுமோசனி பட்டழிவோமினி
உம்மைதன்விலைகூறவோ மன்னவனே
எள்ளளவுந்தடையில்லாமல் என்னைவிற்கமனம்வாராமல்
இப்படியுஞ்செய்வாருண்டோ மன்னவனே
இச்சகம்மாவிது மெச்சுவதோசொலும்
அச்சமில்லாமலெ னைச்சுழுவாய்வில்லும்
அட்டியொன்றுண்டோஐயோ மன்னவனே
பாவிபோல்நான்பார்த்திருக்கப் பரதேசிபோல்நீரிந்தப்
பதியில்விலைப்படவோ ஐயோ மன்னவனே
பாத்திரமோநான் தோத்திரஞ்சொல்லவும்
மாத்திரமித்தனை மாத்திரம்வில்லும்
பாங்காகாதோ ஐயோ மன்னவனே
கூலிநானும்மைவிலை கூறவும்வாய்வருமோ
கொடுமைக்காரானேனையோ மன்னவனே
சொத்தடிமைத்தொழில் பெற்றவெனக்கினி
சித்தமிரங்கிவி டத்தகுமோதான்
கூறையாவென்னவிலை மன்னவனே

மயில்போல்மனைவியையும் மகனையும்விற்றுவென்னை
வாழ்த்துணையென்றுநம்பி மன்னவனே
வஞ்சகமோபிர பஞ்சவிநோத
தஞ்சமென்றுன்னையி றைஞ்சிடுநாயேன்
மகிழ்வேயென்னைவிற்பாய் மன்னவனே
உயிர்போனாலுடலிருந்துஉபயோகமுண்டோவென்னை
உறுதியாய்முன்னேவிற்பாய் மன்னவனே
உற்பனமோவிது விற்பனமன்று
நிற்பயமாய்வில் அற்புதமாகும்
உள்ளபடிநானையா மன்னவனே

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி

நாராசங்காய்ச்சியெந்த னெடுச்செவிதனில்விட்டாற்போல்
ஏராதவார்த்தைசொன்னா லேற்குமோதெய்வமன்று
பாராளுமன்னனேநீயே படைத்திடும்நாய்தானென்னை
தாராளமாகவிற்றுந் தாகனையொழித்திடாயே

வசனம்.

கேளும் இராசசக்ரேஸ்வரா தேவரீர்வளர்த்த நாய்க்குட்டியாகிய வென்னைவிற்று இவருக்குத்தாரு கூலி கொடாமல் உம்மைவிற்கச்சொன்னவார்த்தை என்காதில் நாராசங் காய்ச்சிவிட்டாற்போ லிருக்கின்றது அப்படி சொன்னால் தெய்வத்துக்குக் கேற்குமா என்னையேவிற்றுஞ் சத்தியமாகச் சொல்லுகிறேன் சுவாமி.

இராசன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

அவரவர்செய்தகர்மம் அவரவரனுபவித்துப்
பவவினையொழிக்கவேணும் பாரினிற்பிறந்தோரெல்லாம்
நவையறுமந்திரிநீதான் நாடியேயென்னைவிற்றே
இவர்கடனொழித்தாலென்ன ஈன்றதாய்தந்தைநீயே

வசனம்.

கேளாய் சத்தியகீர்த்தி பூமியிற் பிறந்தவர்களெல்லாம் அவரவர்கள் செய்த கருமத்தை யவரவர்களே யனுபவிக்கவேணும் ஆதலால் நான்பட்ட கடனுக்கு உன்னைவிற்கிறது தருமமல்ல அதற்கு நானொப்ப மாட்டேன் என்சொல்லைத்தடுக்காம லென்னைவிற்று இவர்கடனைத்தீர்த்தால் நீயென்தாய் தகப்பன் நீவிசனப்பட வேண்டா மந்திரி.

தரகன்-விருத்தம்-இ-ம்-தோடி.

பண்டைநாளுறவாய்வந்து பரிந்தமுமந்திரிநீகேள்
கண்டதார்சத்யத்தாலே காண்பனேயின்றுன்மோட்சம்



பெண்டுடன்பிள்ளைநாடும் பெறச்செய்வேனுனக்குக்கூலி
உண்டென்றுவாங்கேனோர்பொய்யுரைசெய்தால் முழுகிப்போமோ

வசனம்.

ஓய்சத்தியகீர்த்தி வெகுநாளாய் உறவென்று பரிந்து பரிந்த முகிறாயே இராசனாகிய இந்தப் பயித்தியக்காரன் என்னமோட்சங் காணப்போகிறான் இப்போது கொடுத்தபொன்னையாவது எனக்குக்கொடுக்கவேண்டிய கூலியையாவது இல்லையென்று இரகசியமாக வொருபொய்மாத்திரஞ் சொன்னால் முழுகிப்போகின்றதா இந்தக் கூலியையும் விட்டுவிடுகிறேன் பெண்சாதி பிள்ளையிராச்சியம் யாவற்றும் வாங்கித்தருகிறேன் இதுசத்தியமானவார்த்தை இத்துடனேசரி இதுசமயந்தப்பினால் வாராது மோட்சத்தைக்கண்டதார் சத்தியத்தைக்கண்டதார் இதுபயித்தியம் பயித்தியம் விண்விண் கண்டதேகாட்சி யுண்டதே யுறுதி சொன்னேன் சொன்னேன்.

சத்தியகீர்த்தி-வசனம்.

என்னுடையவன் வளர்த்த நாய்க்குட்டி நானிருக்க அவனையெப்படிவிற்பே னென்று அழுதேனே யல்லது அவர்சொன்னசத்தியத்துக் கொருகுறைவுண்டா அவனையே விற்றுத்தருகிறேன் சுவாமி நட்சத்திரத் தாயமே.

தரகன்-வசனம்.

நேக்கென்ன கொட்டறது மகளே வல்லாண்மை யென்பது போல நேக்குள்ள கூலியைக்கொடும் கொடும் ஓகோ குப்பலாகக் கொட்டும்.

இராசன்-வசனம்.

கேளாயெனது மனதுக்கிசைந்த சத்தியகீர்த்தி அவருடனே ஏன்வீண்பேச்சுப் பேசுகின்றாய் என்தலையிலே யொருதுரும்பை வைத்து விலைகூறும் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்

அப்படியேசெய்கிறேன் விதிவசம் விடுமா என்னுடையவனே

சத்தியகீர்த்தி-தரு-கண்ணி

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

உண்டுடலிருந்தால் ஊழ்வினைகடனிது பாரீர்-இந்த
ஊரிலுள்ளபேர்களே வாமனிவனைக்கொள்ள வாரீர்
கண்மணிபோல்மகனையுமனைவியையும்விற்றார் முன்னே-அந்தக்
கடன்தீர்த்தகூலிக்காகத்தன்னைவிற்கிறார்தாமின்னே
மாதவமிகுவிஸ்வாமித்திரமாமுனி மாயத் திர
வசையுண்டோவிலைப்படவந்தார்கொள்வீர் சகாயம்

பாதகனுனிந்தமகாராசன்றனைவிற்க லாச்சேரான்
பண்ணுர்புண்ணியமெல்லாம்பலியாமலே பொட்டுப்போச்சே
பொங்குதிருயிரப்பெரிதல்லவிவர்தம்மைக் கொள்ளுவீர்-நல்ல
புண்ணியபலனைக்கொண்டுபோவதுயரமெல்லாம் விள்ளுவீர்
என்போம்-ஆவிபிருந்தும் இவர்க்கொருதவியுஞ் செய்ததிலேன்யான்
இந்தவுதவிசெய்யவந்தேனறிவில்லாத சிறியேன்
மேல்வீதிவடவீதிகீழ்வீதிதென்வீதி நீதிராச
வீதிமுதல்மற்றவீதிகளறியவோ சேதி
நாலுத்தெருவும்விலைகூறிவந்தேனிந்த ஊரில்-எங்கள்
நாயகன்றனைக்கொள்ளயாருமில்லையோபெரியோரில்

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

முன்னர்நான்செய்தகர்ம முடிவினாலென்னையாண்ட
மன்னனைவிலையாவிற்க மனங்கொண்டேன்காசியோரே
என்னசாதியாராலுமெவர்களாயினுஞ்சான்சொன்ன
பொன்னைத்தந்திவனைக் கொள்வீர்புண்ணியமெய்க்கொள்வீரே

வசனம்.

கேளுங்கள் காசிப்பட்டணத்தில் வாசஞ்செய்யாநின்ற பிரம க்ஷத்திரிய வைசிய சூத்ர பஞ்சம சர்வசனங்களே இந்தமகாராசா வை என்னுடைய அவசர நிமித்தமாக விலையற விற்கத் துணிந் தேன் தேவையானபேர் தடையில்லாமற் கொள்ளலாம் வாருங்கள்

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி

மன்னனரிச்சந்திரனை மந்திரிவிலைகூறியந்த
நன்னகரமாங்காசி நாலுதெருவுந்திரிய
முன்னைவினைப்பயனாலே முடிந்துவிஸ்வாமித்திரர்தாஞ்
சொன்னநெறிப்படநமனுந் தோட்டிவந்து தோன்றினனே

தோட்டிவருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்

தோட்டிநானே சாமி தோட்டிநானே

உடம்புகுளிக்கூசிப்பார்மிசைத்
தேர்புவனுவீரசாம்புவனாகிய (தோட்டி)
கேட்டீரோவொருசெகமுன்னாளிலிச்சுனனாகியவிச்சுனுதானந்தி
கிலிதிர்மபெலிதலைமே லளந்திட்ட
நலதாட்டபறைகொட்டிவல்லனாய் வருசெட்டி (தோட்டி)
வசிஷ்டரொருபெண்ணைச்சக்கிலிவளவிலேகொண்டாரோ அந்த
வழக்குத்தொடுத்ததனாலென்னைவந்துவேண்டிக்கொண்டாரோ



அதிஷ்டரொன்செலிவன் குறப்பெண்ணாவாளோ வள்ளி
யாருமறியாரோவள்ளுவாவருடன்பிறந்த கள்ளி
பகட்டாய்வேலர் கல்யாணமுடித்திட்ட
பவனியிலானைமேற்பறைதானடித்திட்ட (தோட்டி)
அமுதங்கடைந்திட்டார் கலங்கும்பறையடித்தேன்-தெய்வ
யானைக்கல்யாணத்தில்சாமி அங்கும்பறையடித்தேன்
விமலர்கூத்தாடுகையில் காளிவெட்கப்பறையடித்தேன்
சகலவேதசாஸ்திரமும் ஆண்டே விளங்கப்பறையடித்தேன்
சமயத்துக்கெல்லாம் நான்முதற்பாதம்
சாதிபேதந்தன்னில்நானொருபாதம் (தோட்டி)
ஆண்டைகளேயெந்தன்றல்ல-அருமைகள் தெரியாதோ - கட்டை
அஞ்சாறும்வைத்தால்கூடி அடுக்கா வெரியாதோ
மாண்டவர்போனாலும் ஆண்டே-மற்றவ றறியாரோ-நாங்கள்
மாயின்றிருந்தாலும் ஆண்டே-வசிஷ்ட ரறியாதோ
திண்டாப்பறையனும்நானாண்டே திருமாலயனுஞ்சிவனுமாண்டே

தோட்டிநானே-சாமி-தோட்டிநானே

தோட்டிசொல்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

ஆளாயாயாண்டேயிங்கே யாள்விலைகூறக்கேட்டேன்
பேடிகளானாரெனன்ன பேசியவிலையாதென்ன
பாரினிற்பறையனானே பணத்தையுங்கொடுத்தாலிந்தத்
தீரராசனைவிற்கச்சித்தமுண்டாமோசொல்வாய்

வசனம்.

ஏ ஆண்டே ஏ ஆண்டே ஆளாயா இங்கே யானை விலைக்குவி ற்கிறது நான் தோட்டி சாமி நான்பணத்தைக்கொடுத்தால் விற்கிற தற்கு மனதுண்டா அப்படியானால் எத்தனூர் பேரென்ன விலை யென்ன சொல்லையா செல்லு

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம் ஆனந்தபைரவி

சித்ரபாயிவனைநானே தெருவினில்விலையேகூறி
விற்றிடவந்தேனெய்ய விலைகிநான்கொடுப்பாயானால்
சத்தியாகவிற்பேன் சாதிபுலையருங்பேருஞ்
குற்றமில்லாமற்சொல்லிக் கொண்டிடல்மிகவுநன்றே

வசனம்.

ஆர் அப்பா இவனைத்தான் விலைக்குவிற்கவந்தேன் நீகொள் ளும்படியிருந்தால் மெத்தசந்தோஷம் உன்னைப்பார்த்தால் எனக் குச் சந்தேகமாயிருக்கிறது உன்சாதி பூர்வோர் தெரியச்சொல்ல வேணும் அப்பா

கோட்டி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சாதியிற்பறையனானே சயங்கரசுடலைகாப்பேன்
நிலாவிந்தக்காசித் திருநகர்க்கோட்டியையா
வீதியில்விலைதான்கூறி விற்பதால்கேட்கவந்தேன்
நீதியாயிருந்துவிற்றால் நிலைவரமாகக்கொள்வேன்

வசனம்.

என்னுடைய சாதியோ பறைச்சாதி யென்பேரோ வீரவாகு நானிந்தக் காசிநகரத்தி லிருக்கிறது சுடலைகாக்கிற தோட்டி வீதியிலே விலைகூறி விற்றபடியினாலே கேட்கவந்தேன் உங்களுக்குச் சம்மதிபட்டால் விலைக்குக்கொள்ளுகிறேன் கோபம் பண்ணாதே ஆண்டே.

இராசன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்

சாதியினர்களானாலுந் தனம்படைத்தவரேநல்ல
நீதியும்நெறியும்பெண்மை நிலைமையுமுடையோர்கண்டாய்
ஆதலாலிவன்பொன்னீந்தா லடிமைநானாவேன்விற்பாய்
கோதிலாச்சத்தியகீர்த்தி குறையொன்றுமெண்ணவேண்டாம்

வசனம்.

சேனா பெனது புத்திக்கிசைந்த சத்தியகீர்த்தி யெந்தச்சாதி யாராகிலும் பணமுள்ளவனே பெரியவ னாகையால் நானிவனுக்கடிமையாகிறத்துக் கொருதடையுமில்லை யென்னைவிற்று இவர்கடனைக்கொடும் மயங்கவேண்டாம் அப்பாமந்திரி

சத்தியகீர்த்தி-தரு

இ-ம்-சங்கராபரணம்-திரிபுடைதாளம்

பாவிபிரமதேவன்பறையனுக்கராசப் படைத்தானோ-நான்
பண்ணும்புண்ணியமெல்லாம்பாழாசப்போகவுந் தடைத்தானோ
ஆவிநீயேயிந்தஅநியாயம்பார்க்கவு மானேனோ - என்னை
யாண்டநாயகருக்கோராறுவுமுதவாமற் போனேனோ
கெட்டாலுமேன்மக்கள்மேன்மக்களாகாமற் கெடுவாரோ - சங்கு
சுட்டாலும்வெண்மைதருமேயிப்படியாந் பழிவாரோ
மாணிக்கமுழு-குலமன்னவர்க்கித்துயர் வரலாமோ - சென்ம
காணிக்கைப்பறையர்க்கு அடிமையாய்க்கைக்கொள்ளத்தரலாமோ

வீரவாகு-விருத்தம்-இ-ம்-நாட்டை

பலைத்தாகவும்மைப் பற்றிவத்திழுத்தேனோநான்
கலகலென்றிறைச்சலிட்டுக் கடைத்தெருவெங்குங்கூவி
விலைசொல்லக்கேட்டுவந்தேன் விற்பாயேயாகிலுந்தன்
குலமுடன்பேருஞ்சொன்னாற் கொள்ளுவன்பொன்னைத்தந்தே





வசனம்.

அகாதே அகாதே ஆண்டே நானுபலவந்தம் பண்ணவந்தேனா கடைத்தெருவிலேகூவினபடியினாலே கேக்கவந்தேன் எங்குலத்தையும் பேரையுங்கேட்டு அகராயே யுன்குலத்தையும் பேரையுஞ்சொல்லு உனக்குச் சம்மதியானால் உள்ளகாசை கொடுத்து வாங்கிக் கொள்ளுகிறேன் ஆண்டே.

இராசன்-விருத்தம்-இ-ம்-கண்டா

என்பேரோஅரிச்சந்திரனென்று மிருந்தவூராயோத்தியப்பா
பொன்பதினாயிரந்தான் போதவேயிவர்க்குத்தந்தால்
உன்பணிவிடைநான்செய்வே னுனக்கேநானடிமையாவேன்
முன்பின்பார்த்திடாமற்பொன்னை முடிப்பாய் வைத்தென்னைக்கொள் (வாயே

வசனம்.

நானேசொல்லுகிறேன் கேளப்பா என்பேர் அரிச்சந்திரன் நானிருந்து அரசாட்சி செய்தவூர் அயோத்தியாபுரி யதிலேயென் குலத்தைத் தெரிந்துகொள்ளப்பா நீ மத்திப்பதினாயிரம்பொன் இவருக்குக் கொடுத்து விடுவையேயானால் உனக்கு நானடிமையாகிறேன் நீசொன்ன வேலைசெய்கிறேனப்பா.

வீரவாகு விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எனக்குச்சம்மதியானாலு மெனக்குள்ளதோட்டிச்சிதன்
மனக்குறைதீரவேலை வரிசையாய்ச்செய்யவேணும்
தனித்தரசாட்சிசெய்த சக்கிராசாவுன்னைநானின்று
குனித்தேதோரேவல்கொண்டாற் கொள்ளுமோகோபமாமோ

வசனம்.

என்னாத்துக் காண்டே பத்துப்பேச்சு எம்பெண்டாட்டியானாலென்ன உம்பெண்டாட்டியானாலென்ன நீ கொண்டஆள் உம்பெண்டாட்டிக்கு வேலைசெய்யவாணாமா அப்படிதான் எனக்கு வேலைசெய்யவேணும் எம்பெண்டாட்டிக்கும் வேலைசெய்யவேணும் அதுக்குச் சம்மதியா.

இராசன்-வசனம்

பத்துவிதத்துக்கும் எனக்குச் சம்மதிதானப்பா வீரவாகுவே

வீரவாகு-வசனம்.

உன்னைப்பார்த்தால் பெரும் பூதம்போ லிருக்கிறாய் மேலும் இராசாவா யிருக்கிறாய் எனக்கடிமைபட்டால் மாடுரிக்கவேணும் வடக்கயிறு போடவேணும் பிணங்களைச் சுடவேணும் இதுவெல்லாம் உனக்கு வலையுமா ஆண்டையென்னும் அடிமையென்னுந் தெரிந்திச்சுதானால் தெண்டிக்கவேணும் அதுஉனக்குச் சம்மதியா சொல்லு.

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி

பழுதுவாராதுசொன்னேன் படைத்தநீயாண்டையானால்
நழுவாமல்வேலைசெய்வே னுன்தப்பிநடந்தேனானால்
தொழுமரம்போடுதெண்டி சுறுக்கிடச்சொன்னாற்பின்னும்
அழுததாற்றீருமோதான் அடிமையிற்பிசகேனப்பா

வசனம்.

கேளப்பா வீரவாகுவே கொண்ட யசமான் தெண்டிக்கவுஞ் செல்லும் திட்டவுஞ்செல்லும் சொன்னவேலையைச்செய்யா விட்டால் தொழுவிலே போடவுஞ்செல்லும் அடிமைப்பட்ட நான் கோபம் பண்ணுவேனோ நெறிதப்பாமல் நடப்பேன் கொள்ளுமப்பா கொள்ளும்.

வீரவாகு-வசனம்.

அப்படியானால் முறிச்சீட்டெழுதுமையா

சத்தியகீர்த்தி-வசனம்.

அரிகரி அரிகரியிப்படியு மிருந்ததா யத்தனம் ஈஸ்வரா ஈஸ்வரா

இராசன்-வசனம்.

விசனப்படவேண்டாம் என்தலையிலே யிருக்கிற துரும்பை யெடுத்து அவன்கையிலே கொடுத்து அச்சாரந்தட்டிக்கொள்ளுமப்பா மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தா அப்பா வீரவாகுவே.

வீரவாகு-வசனம்

ஆண்டே ஆண்டே ஊத்தப்பிணங்கள் ரொம்ப வந்திருக்குது சுடுகாட்டுக்குநான் அருசாய்ப்போகவேணும் சீட்டெழுதும் ஆண்டே

சத்தியகீர்த்தி-அகவல்-இ-ட்-எதுகுலகாம்போதி.

காசிவாழ்புலையன் கனநிதியுடைய
மாசில்லாவீர வாகுவுக்கின்று
வாசவன்போல வாழ்ந்துலகாண்ட
பூசிதஅயோத்திப் புரவலன்றன்னைக்
கோசிலாத்தரகன் கூலிக்காயடிமை
சாதனமெழுதும் சாரம்யாதென்றால்
இந்தநாளிவனை யிசைந்துவிற்றிடவே
பார்த்திபனொன்றோர் பதினாயிரந்தான்



சத்தியகீர்த்தி தானப்பற்றலானேன்
நித்தமாயிவனை நீங்காமலித்தேன்
சாட்சிநட்சத்திரத் தானுருமிவருங்
காட்சியர்தானே கையெழுத்துடனே
அடிமைசாதனத்தை யன்புடனெழுதி
திடமுடனிந்த சீட்டிதுதானே

சத்தியகீர்த்தி-வசனம்.

இந்தச் சீட்டைப் பறையன்கையில் மனதொப்பி யெப்படி கொடுப்பேன் சுவாமி.

இராசன்-வசனம்.

அரிகரி அரிகரி யிப்படியுந் சொல்லலாமா சத்தியபங்கமாமே உடனே பறையன்கையிற் கொடுத்துவிடும் மந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்

இந்தா அப்பா வீரவாகு பொன்னைக்கொடுத்துச் சீட்டைவாங்கிக்கொள்ளப்பா

வீரவாகு-வசனம்.

பொன்னையார் கையில் கொடுக்கவேணும் ஆண்டே

சத்தியகீர்த்தி-வசனம்

இந்தப் புண்ணியவான்கையிற் கொடுத்துவிடுமப்பா

வீரவாகு-வசனம்.

இந்தாசாமி பார்ப்பார ஆண்டே கொள்ளிக்காசுகுடக்காசு வாய்க்கரிசி நோர்ப்பிச்சோறு துண்டம் விற்றகாசியெல்லா மிதிலேயிருக்குது என்னைத்தீண்டாதே தூரப்போசாமி பார்ப்பாரஆண்டே

இராசன்-வசனம்.

அடாய் அறுதலைத் தேவடியாபிள்ளாய் பொன்னுக்குந்திட்டுண்டாதாய்விற்றகாசு கொலைக்கிறதா தொடாமல்வையடா எடுத்துக் கொள்ளுகிறேன்.

வீரவாகு-வசனம்.

ஓ ஆண்டே விலைப்படாத ஆண்டே நீ இந்தக்கணக்குப்பார்த்துக்கோ நீயா விலைப்பட்ட ஆண்டே இந்தத் தோல்காவடியையெடுத்துக் கொண்டு பறைச்சேரிக்குமுன்னே நடபோ.

இராசன்-வசனம்.

காவடியெடுத்துக் கொள்ளுகிறேன் முன்னேயும் நடக்கிறேன் இனிமேல் நீயெனக்கு ஆண்டே நானுனக்கடிமையப்பா

தாசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

விருதுக்குவேட்டையாடும் விவேகமில்லாதமன்னு
வருகிறபாக்யமெல்லாம் வாயினுலிழப்பாருண்டோ
ஒருபொய்மாத்திரஞ்சொன்னு லுனக்கொருகுறைதானுண்டோ
பெருமையோபறையனுக்குப் பிணத்தொழில்செய்வதையா

வசனம்.

ஐயையோ மகாராசனே யொருபொய் சொன்னமாத்திரத்திலே யுனக்குக்குறைவு வருமா வருகிறபாக்யமெல்லாம் வாயினுலே போக்கடித்துக் கொள்ளுவாருண்டோ வொருபொய்சொல்வதற்கஞ்சிப் பறையனுக்கு அடிமையாவார்களா பிணஞ்சுடவுஞ் மனதொப்புவார்களா இப்போதானாலு மொருபொய் சொல்லும் பார்ப்போம் சகலமும் உம்முடையதாகப் பண்ணுகிறேன் நேக்குஉம்மைப்பார்க்க மிகவும் துக்கம் வாரதே அரிகரி.

இராசன்-வசனம்.

போதும் போதும் புண்ணியபுருஷா இரக்கமுள்ள மகானுபாவா உம்முடைய கூலிவந்து சேர்ந்ததா சொல்லும் சுவாமி

தாசன்-வசனம்.

ஆம் ஆம் இனியுன்முடைய தலைப்பாடு எனக்குத் தாருக்கூலிவந்தது நேக்கு உத்தரவு கொடுக்கிறீரா என்தாலி லகப்பட்டவர்களொருநிமிஷத்தி லாயிரம்பொய்சொல்லிப் போவார்கள் உன்னைப்போலுஞ் சத்தியவான் இந்த ஈரேழுபதினுலுலோகத்திலுமில்லை நேக்கு உத்தரவுகொடு மகாராசனே

இராசன்-வசனம்.

சுவாமி நட்சத்திரத் தாசரே அடியேனொருவிண்ணப்பம் பலையன்வீட்டிலடிமைப்பட்டுஞ் சுடாதபிணஞ்சுடுமாய்க்கசிசியை நான்சமைத்துப் பொசித்தாலும் இன்னம் இதிலுமதிகமானயிடர்கள்வந்துவாய்த்தாலும் பொய்சொல்லமாட்டேன் அதுவிஸ்வாமித்திரருடைய அருளென்று நான்சொன்னதாகச்சொல்லும் சுவாமி தயவிருக்கட்டும் போய்வாரும்

தாசன்-வசனம்.

அப்படியே சொல்லுகிறேன் நான்போய்வருகிறேன்மகாராசனே

வீரவாகு-வசனம்.

அடாயோடா இது எதடா பெருசுருக்காயிருக்குது இனிடார் நால்வாடாபோடாஎன் பன்னவிலைப்பட்டாதநூண்டே நீஅங்கேதரேனில் தோட்டிச்சிறுக்கியாத்தாக்காகோபிச்சுக் துவாவிலைப்பட்டாண்டே நீமுன்னேநட! அட ஆரடாயிவன் கால்றாங்கிநடக்கப்பெருசுருக்காயிக்குது

இராசன்-வசனம்-நடக்கிறே னப்பா வீரவாகுவே

மந்திரி-விருத்தம்-இ-ம்-முகாரி.

இதம்கோநாள்கூடவந்த வென்னையாள்மன்னுவுன்னை
பதைக்கவேபறையன்கையிற் பற்றவிலையாய்விற்றேன்
கதித்தமாட்டிறைச்சிதானும் காயடிதனிலேதாங்க
விதித்ததோவென்னையுந் நீங்கும்விதஞ்சொல்லலாமோதெய்வம்

வசனம்.

ஐயையோ இராசசக்கிரேஸ்வரா நீயொருபறையனுக்கடிமையாகி மாட்டுத்தோல்மாட்டிறைச்சியொலடியைச்சுமந்துகொண்டு பறைச்சேரியைச் சேரவுஞ் வந்ததா என்னையும்பிரித்துவிடலாச்சுதா இதற்காகவா நான்காத்திருந்தேன் இப்படியுஞ் செய்யுமா பாவிதெய்வம் அரிகரி.

பொது-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்

மந்திரியிவ்வாறழுது தளர்ந்துசாகி
    வளநகரிற்மந்தெருவில்மருகிநிற்க
வித்தைபெறுந்தோட்டியெனும் வீரவாகு
    விளங்குமரிச்சந்திரனை விலையாய்க்கொண்டு
தந்திரமாய்க்குடியிருக்குஞ்சேரிநோக்கிச்
    சடசடெனத்த னடந்துபோயவேளை
வந்தனைகளறியாத அந்தத்தோட்டி
    மனைவியெனுந்தோட்டிச்சிவருகின்றாளே

வசனம்.

இந்தவிதமாக அடிமைப்பட்ட அரிச்சந்திரமகாராசனைத்தோட்டி யழைத்துக்கொண்டு பறைச்சேரிக்கு வருகிறபோது தோட்டிச்சிவருகிற விதங்காண்க.

தோட்டிச்சி-வருகிற-தரு-இ-ம்-புன்னுகவராளி-ஆதிதாளம்

தானேதோட்டிச்சி-ஆம்படையாளோ-நான் தானேதோட்டிச்சி
    வானோர்புகழுந்தங்காசிப்பேரணியாட்சி
    மாறுதிருக்கிறதொந்தம் ஆறுப்பெருக்கமிழ்ந்த (நானே)
    ஒருமைத்தோலாயிரம்பொன்-வருஷத்தில்
        ஒருநூத்தோலாயிரம்பொன்
    ஒருமைக்கொம்பாயிரம்பொன்-வருஷத்தில்
        எலும்புகளாயிரம்பொன்

வரும்பிணஞ்சுட்டகட்டை-யிந்தது
வருஷத்திலாயிரம்பொன்
தரும்பணங்காணுண்டு பிணத்துக்கிரு
சான் சீலையுமுண்டு
அருண்மையோபணஞ்சாசசக்களத்தி
அவனுக்குப்பாதிபோச்சு
நிரம்பிச்சவிடெங்குந்தோட்டிக்கு
நினைவுண்டோகுறித்தங்கு
துரும்புபோனலும்விடேன்
தோட்டிவயவிட்டுப்படேன்
கரும்பொன்போலென்தோட்டிவந்தாரோ
கண்டதுண்டோ ஆண்டைமாரே (நானே)

தோட்டிச்சி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பார்ப்பான்வீட்டெருமைக்கண்ணும்பட்டன்வீட்டெருதும்செத்து
சாப்பாடில்லாமனூரார் தவிக்கிறுரென்றழைத்த
கூப்பாடுகேக்கப்போன கூலிதானெங்கேம்கட்டால்
தோப்பாளமென்டாதோட்டி நானழுந்தநெஞ்சேசொல்வாயே

வசனம்.

டோடா தோட்டி யெப்புருசாடா எங்கூட்டுக்காராடாசாமிஉ ன்னைக்காணுறே ஆட்டிவிக்கிறுப்போலே இக்கிறு வாசலிலே யிக்கிறுப்போலேஇக்கிறு சட்டிம்மலே இக்கிதா பானைமேலேஇக்கிதா பிள்ளைமேலே யிக்கிதா என்மனசு

தோட்டி-வசனம்.

டீ இவளே டீஇவளே டீதோட்டிச்சி இதறி இதறி யெப்பெஞ்சாறி டீயெப்பெஞ்சாறி

தோட்டிச்சி-வசனம்.

டா நல்லது இக்கட்டு பாப்பான்வீட்டிலே செத்ததும்அந்த ப்பட்டன்வீட்டிலே செத்ததும் அதுக்குநீபோனதும் அதையெடுத்துப்போட்டபின்பு அவங்கசாப்பிட்டதானே கூப்பிட்டாங்கோ

தோட்டி-வசனம்.

பாப்பான் வீட்டிலேயும் பட்டன்வீட்டிலேயும் ஒருத்தருஞ் சாவ வில்லை யொருகண்ணும் ஒரு எருதுமல்லோ செத்தது

தோட்டிச்சி-வசனம்.

அடா இக்கட்டுமடா உனக்குதோப்பாளம் வாங்கரதோவாரது உன்னைப்போல ஓட்டிலேயா யெபிடிப்டிச்சேன் அந்தக்கூலியெங்கே அந்தத்தோலெங்கேகண்ணுக்குட்டிக்காலெங்கே யெருதுவா



லெங்கே இப்படிசாக்குவைச்சிக்கிறு சின்னபறைச்சிவூட்டுக்குப் போறயோ.

தோட்டி-வசனம்.

டீ தோட்டிச்சி யதுவெல்லாம் வொண்ணு மல்லடியுனக்கும் எனக்கும் அடிமைவேலைசெய்ய இவனைவிலைக்குவாங்கிக்கினு வந்தேண்டி.

தோட்டிச்சி-வசனம்.

கண்ணுக்குட்டித்தோல் வித்தகாசைக் கொடுத்துட்டடா இவன் என்னவிலை.

தோட்டி-வசனம்.

டீயே யதெல்லாமடி பத்தாயிரம் பொன்னுமடி ஆண்டைமார்சொன்னார்களே.

தோட்டிச்சி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இவன்நமக்குதவுவானோ இளைக்காமல்வேலைசெய்து
சவஞ்சுடுஞ்சுடலைகாத்துச் சத்தியமாயிருப்பானோதான்
இவனையுங்கட்டோமென்னு மென்னுமல் வாங்கிப்போட்
கவலையோவுனக்குக்காசு கருத்துண்டோகணக்கிதாமேடாய்

வசனம்.

இதுவும் மும்பட்டகடனோ பவிசுகெட்டவனே இவனுக்குப் பத்தாயிரம்பொன் கொடுத்தாயேதோலைவுரிப்பானுமாட்டையிசிப்பானு பிணஞ்சுடுவானு தோட்டிவுடைமையைத்திருடாமலிருப்பானு இவனென்னவேலைசெய்வனென்னுகொண்டாபோடா பவிசுகெட்டவனே.

இராசன்-விருத்தம்-இ-ம்-காம்போதி

கள்ளவாகிலும்நீ ரென்மீதோரையமாக
உள்ளத்திலெண்ணவேண்டா முறுதியாயேவல்செய்வேன்
கள்ளமுங்கபடுமெண்ணேன் கருத்தையுங்காணலாகும்
உள்ளவேலைகளேதேதோடா செய்தாற்றலையாற்செய்வேன்

வசனம்.

ஐயாவீரவாகுவே யென்பேரி லெவ்வளவுஞ் சந்தேகம் நினைக்கவேண்டியதில்லை கள்ளங்கபடு என்னிடத்தில்வாராது என்னவேலை யிடுகிறீரோ இடுந் தலையாற்செய்கிறேன் உம்முடையமனதுக்கே தெரியவரும்.

தோட்டிச்சி-வசனம்.

டாயெஞ்சாமி இவனைநீதானே வேலைவாங்கவேணும் இவனைப்பாத்தாக்கா எனக்குப் பயமாயிக்குது.

தோட்டி-வசனம்.

டீ இவளே நீசும்மாயிரடி யிடுப்புநசா அவன்கையிலேவேலை வாங்கிறேண்டி.

தோட்டிச்சி-வசனம்

டாசாமி தோட்டிசாமி உட்டாடு அவம்பாடு

தோட்டி-வசனம்.

அதெல்லாரிக்கட்டும் உம்பேரென்ன

இராசன்-வசனம்-

என்பேர் அரிச்சந்திரனப்பா வீரவாகு

வீரவாகு-வசனம்.

நல்லா இந்திச்சு அந்தப்பேரை வச்சுக்கிறஇன்ன மிச்கிறு எங்குலத்தைக் கெடுக்கப் பாக்கிறியோ

இராசன்-வசனம்.

நீ இட்டபேரை நான்வைத்துக்கொள்ளுகிறே னப்பா

வீரவாகு-வசனம்-

இப்போசந்தோஷம் எங்கதோட்டிச்சிக்கும் சந்தோஷம்டயி வளே யிவனுக்கென்னபே ரிடலாமடி

தோட்டிச்சி-வசனம்.

டாயிவனேடாதோட்டி எப்பவும்நான்வைச்சாத்தானேயுனக் குச்சரியாயிக்கிது

வீரவாகு-வசனம்.

அதாண்டி எப்பெஞ்சாதி வுனக்கும் எனக்கும் பண்ணிவைச்சாப்போலேதானேயிக்கும்

தோட்டிச்சி-வசனம்.

டாசாமி யிவனுக்கு அனிச்சந் தோட்டி யென்று வைக்கலாண்டா

வீரவாகு-வசனம்.

எப்பெஞ்சாதிவைச்சதேயெனக்குச் சரியாப்போச்சுது வுனக்கு அனிச்சந்தோட்டியென்று பேருவைச்சன்

இராசன்-வசனம்.

ஆனாலெனக்குச்சந்தோஷமப்பா நீயிடுகிற வேலையைச் சொல்லும்

வீரவாகு-விருத்தம்-இ-ம் நாட்டை

விடுவிடீ ண்டெச்சென்ன விறுவிதென்றேடியிவ்வூர்ச்
சுடலையிலிருந்தேயங்கே சுடவரும்பிணங்களுக்கு
இடுமுழத்துண்டப்பிண்டம் எரிகொள்ளிக்காசும் வாங்கி
அடிமைத்தனக்கொள்ளாம லவையெல்லா னுப்புவாயே



வசனம்.

நீசேசேவென்று விறுவிதென்று நடந்துபோய் இந்தவூர்க்கு காடு போய்ச்சேரு அங்கேயிரு அங்கேசுடவார பிணங்களுக்குவா ய்க்கரிசி தோம்பிச்சோறு முழச்சீலே கொள்ளிக்காசு கொடுப்பார்க ள் அதைவாங்கி யெனக்கனுப்பிவிட்டு பிணங்களைச்சுட்டுநீறும்நெ ருப்புமாக்கிப்போட்டு மீந்தகட்டை முட்டையும் அனுப்பிவிடு எ ம்பேரையும் என்னூரையும் என்பவிசையும் எங்குலத்தையும் கெடுத் தாலுங் கெடுக்கிறு எந்தோட்டிச்சி பவிசைமாத்திரங்கெடுக்காதே

இராசன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

கயிறுகள்கொம்புநாறு காஷ்டத்திற்மீந்தகட்டை
வயணமாய்ச்சேர்த்துக்காசு வாய்க்கரிசிகளுஞ்சீலை
நியமமாயனுப்பச்சொன்ன நெறிப்படிசெய்வேனென்றன்
வயிறுதான்வளர்க்கவேணும் வகையெனக்குரைசெய்வாயே

வசனம்.

கேளாயெங் ஆண்டைத்தோட்டியாகிய வீரவாகுவே நீசொ ன்னபடியே சுடலையிற்காத்திருந்து அங்கேவருகிற பிணங்க ளுக்குக் கொள்ளிக்காசு வாய்க்கரிசி முழச்சீலைபிண்டச்சோறும்வா ங்கியனுப்புவேன் மீந்தகட்டை முட்டை பாடைக்கொம்பு முதலா னதும் அனுப்புவிப்பேன் பிணங்களையும் சுடுவேன் என்வயிறுவ ளர்க்கவேணும் அதற்கொரு வழிசொல்லப்பா

வீரவாகு-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

நல்லதுநோய்பிச்சோறு நானுனக்களிப்போமென்றல்
நல்லதல்லாசொடுக்க நியாயமுமல்லா நீயும்
புல்லியபடசியெடுத்தாம் புசிக்கவாகாரம்வேணுஞ்
சொல்லும்வாய்க்கரிசியான சுதந்திரங்கைக்கொள்வாயே

வசனம்.

டா அரிச்சந்தோட்டி அங்கே வேறேயென்னஇக்குது நோ ம்பிச்சோறுதானிக்குது அதுபோதுமா உனக்கு.

தோட்டிச்சி-வசனம்.

டாசாமி தோட்டிப் பறையா குத்திரனைக்கொண்டுவந்து ப றைச்சாதியிலே போட்டு எம்பவிசையுங்கெடுத்து குலத்தையுங்கெ டுத்தாயே போதாகுறைக்கோ இது நோம்பிச்சோற்றையும் அசவி லே கொடுப்பார்களா நம்பச்சாதியிலேகேட்டாக்கா உம்பவிசம் எ ம்பவிசுங் கெடுத்துப் போடாங்களா

வீரவாகு-வசனம்.

டேயிவளே அப்பானை சாமியானை அத்தைக் கொடுப்பேனு டா அரிச்சந்தோட்டி அந்தவாய்க்கரிசியை நீயெடுத்துக்கோமை ந்ததெல்லாமிங்கே யனுப்பிவிடெம்மனசாரக்கொடுத்துவிட்டேன் நட நட

இராசன்-வசனம்.

அப்படியே செய்கிறேனப்பா வீரவாகுவே

இராசன்-தரு-கண்ணி-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

திகழுஞ்சூரியகுலத்திரிச்சங்குவயிற்றினில் பிறந்தேனே-நல்ல
செல்வஅயோத்தியைச்செங்கோல்செலித்தியே சிறந்தேனே
சுகாதியாஞ்சந்திரமதியைமனைவியாகப் படைத்தேனே-எந்தன்
சுகிர்தத்தாலேதேவதாசன்மகனாகக் கிடைத்தானே
சதுரங்கசேனைகள்சூழக்கொலுவிருந்து வாழ்ந்தேனே-அந்தத்
தவமுனிமாயத்தால்தாழ்ந்தவர்க்கெல்லாநான் தாழ்ந்தேனே
பதியையிழந்துபின்புபத்தினிதன்னையு மிழந்தேனே-அந்தப்
...ள்தன்னுடன்பாலனையுமிழந்து குழைந்தேனே
மறையவர்க்கவர்களைவிற்றுப்பரதேசிபோ லானேனே-என்னை
மாயன்தோட்டிவீரவாகுவுக்கடிமையா யானேனே
பறையர்க்கடிமையாகப்படைத்தானோபிரமாவெனும்பாவி-அந்தப்
பறையன்சுடலைகாக்கப்போ வென்றுரைத்தானே எனக்கூலி
தருமோவுனக்கிதுசிவசிவாகாசி விஸ்வநாதா-எங்கள்
தாயார்விசாலாட்சிமேவியனுதினம் வாழ்சமேதா
இதுவோகாசிபுரியூருக்கடுத்ததோர் சுடுகாடு-எனக்
கெழுத்திதுவோபிணஞ்சுடவுமமைந்தது தலைப்பாடு

வசனம்.

சிவசிவா காசிபுரி விஸ்வநாதா அடியேன்வாழ்வெல்லாம்போ ய் பெண்சாதிபிள்ளையுந் துறந்து நானொரு பறையனுக்கடிமையா கி இந்தச் சுடுகாட்டிற் காத்திருந்து பிணஞ்சுடவும் விதித்ததா இந் தமட்டுக்கும் தேவரீர்திருவுள்ளம் பூர்த்தியாச்சுதாசுவாமி

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

பாரினைமகனையந்தப் பார்ப்பானுக்கடிமையாக்கி
வீரவாகுவுக்குத்தானும் விலைப்பட்டுப்பாடைக்கொம்பால்
ஆரவோர்பந்தலிட்டுச் சுடுகாடுகாத்திருக்குந்
தீரனைச்சத்தியகீர்த்தி தேடியேவருகின்றானே



வசனம்.

சுடுகாட்டிலே யிராசனானவன் அங்குள்ளபாடைக்கொம்புக ளாலே பரணைகட்டிக்கொண்டு அதின்மேலேறி அந்தச்சுடலைகாத் திருக்கிறபோது முன்னே பிரிந்துபோன சத்தியகீர்த்தியானவன் அரிச்சந்திரமகாராசனைத்தேடி யழுதுகொண்டு வருகிற விதங்கா ண்க.

சத்தியகீர்த்தி-தரு-கண்ணி.

இ-ம் கண்டா-ஆதிதாளம்

ஆறுதுமென்னைப்போலே
அரும்பாவிதானுண்டோ தெய்வமே-ஓ

நானேதான்கொடும்பாவி
நாட்டினிலின்னமுண்டோ தெய்வமே-ஓ

தாயுந்தந்தையுமவர்
தானென்றிருந்தேனையோ தெய்வமே-ஓ

பூபுஞ்சத்தமுதலா
யனைத்துமவனென்றிருந்தேன் தெய்வமே-ஓ

நாடிழந்துநகரிழந்து
நல்வளமுந்தானிழந்தார் தெய்வமே-ஓ

பாடுபட்டுக்காசிவந்து
பத்தினிதனையும்விற்றார் தெய்வமே-ஓ

அத்துடன்விட்டதோசனி
அருமைமகனையும்விற்றார் தெய்வமே-ஓ

பித்தனைப்போலேதவித்து
பேதைபோற்கலங்கினரோ தெய்வமே-ஓ

பாவம்பெரிதாகினும்
பறையனுக்கடிமையானார் தெய்வமே-ஓ

கூலிகனவரைவிற்று
கொடும்பாவியானேனையோ தெய்வமே-ஓ

ஊரைச்சுற்றிச்சேரியெங்கு
முழன்றுதேடினேனையோ தெய்வமே-ஓ

யாரைக்கேட்டாலுங்காணே
மென்றாரிதென்னஐயோ தெய்வமே-ஓ

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-காம்போதி

ஐயையோ அயோத்தியாண்ட வரிச்சந்திரமகிபா நீமுன்
செய்ததோர்வினையோ நாங்கள் செய்திட்டபாவந்தானோ
தையலைமகனைவிற்றுஞ் சண்டாளர்க்கடிமையாகி
வெய்யதோர்சுடலைகாக்க விதித்தானோபிரமனையா

வசனம், ஐயையோ அயோத்தியாபுரியை யரசாட்சி செய்தமகாராசனே நீர்செய்தபாவமோ நாங்கள் செய்த தீவினையோ உம்முடைய இராச்சியபாரத்தையு மிழந்து பெண்சாதிபிள்ளையையும் விற்று நீரும்பறையனுக்கடிமைப்பட்டுச்சுடுகாடுகாத்திருக்கவும் வந்ததாவிதி ஐயா.

இராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

கலங்கிநீ ரழுவதென்ன காரணமறிகிலாயோ
சலங்கொள்ளும்விதியையாரால் தவிர்த்திடலாவதுண்டோ
நலஞ்செய்தபாவமல்ல தந்தைதாய்பாவமல்ல
குலஞ்செய்தபாவமல்ல கொடியனேன்செய்தபாவம்

வசனம்.

இப்படியும் மனதுகலங்கி யழுவார்களா மந்திரி விதியைக்கடக்க ஒருவராலே கூடுமா அல்லது நாம் அரசாட்சிசெய்த அயோத்தியார் செய்தபாவமா என்குலத்தோர்செய்தபாவமா என்னைப்பெற்ற தாய்தகப்பன்செய்தபாவமா அதுவெல்லாமல்லபொல்லாதவனாகிய நான்செய்தபாவமே. யல்லது வேறில்லை இன்னம்வந்ததெல்லாம் அனுபவிக்கத்தானே வேணும் மந்திரி

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-சாவேரி

தலைவிதியெவர்களால் தவிர்க்கவொண்ணு மெய்யே
நலமுனக்கிருந்தபோது நான்சுகித்திருந்தேனல்லால்
பலனென்னகண்டவென்றும் பாவிநானும்மைவிட்டு
தலமிசைதரிக்கமாட்டே னிரந்தரமேவல்செய்வேன்

வசனம்.

என்னையாண்டராசசக்ரேஸ்வரா நீர்சகலபாக்கியமும் படைத்து அரசாட்சி செய்யும்போது உம்முடைய பாக்கியமெல்லா மென்னதாக அனுபவித்தேன் உமக்கிப்படிப்பட்ட விதிவந்ததென்று நீங்குவேனோ உம்முடைய பாதத்தண்டையிலிருந்து உமக்குடைய பணிவிடைகளைச்செய்துகொண்டிருக்கிறேன் அப்படிசெய்யாவிட்டால் என்னிலும் பாவியுண்டோ ஐயா

இராசன்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

தினைவிளைத்தவர்களெல்லாந் தினைகொய்வாரதனைப்போல
வினைவிளைத்தவர்களெல்லாம் வினைகளையனுபவிப்பார்



எனையடுத்துனக்குமிந்த வெழுத்துண்டோசகமாநீபோய்
மனையில்வாழ்ந்திருப்பாய்மந்திரி வஞ்சனையல்லசொன்னேன.

வசனம்.

தினையைவிளைத்தவர்கள் தினையைக்கைக்கொள்ளுகிறது போல அவரவர்கள்செய்த தீவினையை அவரவர்களே யனுபவிக்கவேணும் உனக்கேனிந்த எழுத்து நீசுகமாயுன்வீடுசேர்ந்துவாழ்ந் திருக்கலாம் இதுவஞ்சனையல்ல என்னைக்குறித்து விசனப்படவேண்டாம் மந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-நீலாம்புரி.

நம்பியிருந்தவென்னையின்று நட்டாற்றிற்கைவிட்டுவிடச்
செம்பையுருக்கிக்காதில்விடுஞ் செய்கையோதுமுரைப்பதென்ன
உம்பாரியவுலகறியவுயிரு முட்டலும்போலிருந்தேன்
வெம்புமுனைவிடுவதல்லால் வேறொன்றறியேன்விஸ்வேசா.

வசனம்.

அரஹரா விஸ்வநாதா இந்தமகாராசன் சொல்லுகிறதைக்கேட்டால் உருகுகிறசெம்பைக் காதிலேவிட்டாற்போலிருக்கிறதேஇப்படியும் நட்டாற்றிலே கைவிடுவாரா உடலிரண்டும் உயிரொன்றுமாயிருந்தநான் இவரைவிட்டுத்தனியே பூமியிலேயிருப்பதைப்பார்க்கிலும் பிராணனை விடுகிறதேநல்லது வேறென்னஇருக்கிறது சுவாமிவிஸ்வநாதா.

இராசன் விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

படுமெத்தன் துயரமெல்லாம் பார்த்துநீமனந்தளர்ந்து
சுடலையைக்காத்திருக்கத் தொல்லைநாளெழுத்தோவப்பா
விடுவிரதுயரம்வேண்டாம் விதியென்னோடநுபவிப்பாய்
அடுதொழில்செய்தவிந்த அரிசியாலமுதளிப்பாய்.

வசனம்.

என்னுடனே கூடநீயும் கஷ்டப்படமாட்டாயென்று தடுத்துச்சொன்னேனே நீயல்லது வேறில்லை என்விதி யுன்னையும்விடவில்லை அர்த்தக்கூடையில் வைத்திருக்கிற அரிசியை பசுவின்வாயிலே கொடுத்து அர்த்தச்சாணத்தில் விழுகிற அரிசியையெடுத்து சமைத்துநீயுஞ்சாப்பிட்டு எனக்கும் கொண்டுவந்துகொடு அப்பாமந்திரி.

சத்தியகீர்த்தி-வசனம்.

இவ்வளவு கிருபைவைத்ததே அதுபோதும் அந்தப்பிரகாரஞ் செய்கிறேன் சுவாமி.

பொதுகொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

சுடலைகாத்திருக்குமன்னன் சொற்படியேமந்திரியும்
கடமைவாய்க்கரிசிகொண்டு காலங்கழித்திருக்க

அடமுடையா லகண்ட னவர்களைக்கொண்டேபனைக்கு
மடமடென்றுவந்தவன்முன்மனை விவந்துதோன்றினளே.

வசனம்.

இந்தப்பிரகாரமாக மந்திரி சமைமல்பண்ணிப்போட்டுச் சாப்பிட்டுக்கொண்டு இராஜனனவர் சுடலை யாத்திருக்கச் சந்திரமதியை யுந் தேவதாசனையும் விலையாய்க்கொண்டகாலகண்டகன் அவர்களை வீட்டுக்கழைத்துக்கொண்டு போகும்போது அவன்பெண்சாதியான காலகண்டகி வருகிறவிதங்காண்க.

காலகண்டகி-வருகிற-தரு.

இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

எதுகாணும்பட்டுக்கிடப்பாளீரெங்கே போனீரோ
என்னைவிட்டெவளாத்துக்குப்போகவெண்ண மானீரோ
குதும்வாதுங்கற்றுகொண்டீரோபட்டுக் கிடந்தீரோ-நான்
சோபனம்பாடப்போனதுகண்டெட்டி நடந்தீரோ [கும்
அண்டையாத்துக்கு மசலாத்துக்கும்போகலாதீரோ நேக்கும்நாக்
மாகவொட்டாமற் பண்ணுவாள்வார்த்தைகேட்கலானீரோ
அண்டைவீட்டுச்சேஷையங்காரைப்பகைத்துக்கொண்டீரோநேக்கு
அவரால்வருத்தம்போச்சுதென்னபலனைக் கண்டீரோ
மாட்டையுங்கன்னையும்பார்த்தாலதெல்லா மறந்துபோகாதோ இ
வாராவிட்டால்கன்னைவிட்டுப் பால்கறந்தாலாகாதோ [டையன்
வாழைபெண்ணுக்குவரிசைவேணுநேக்கென்ன போச்சுநூரார்
வகைசொல்வாரோயதனல் நாணம்நேக்கல்லோ வாச்சு
சிப்பிப்பூயென்றுநெல்லுக்குத்திமுட்டை தட்டியே-காட்டில்
திரிந்தங்குள்ளவிலைகள்பறித்துவிறகுங் கட்டியே
தப்பிலிகோமுட்டிக்கடையில்விற்றுரொக்க மாக்கியே-நேக்குத்
தனிமைசாதித்தால்சாப்பிட்டுத்திரிகிறீர்காலம்போக்கியே
காலகண்டகன்-வசனம்-அடிசேஷி-அடிசேஷி.

காலகண்டகி-வசனம்.

உன்குடுமியறுந்தாயே பட்டுக்கிடப்பன்.

காலகண்டகன்-வசனம்.

எதடி சேஷிநேக்கு ஒருக்ஷணப்போதாகிலும் உன்னைவிட்டிருக்கிறதற்கு மனசுவாரதில்லை என்னைக்காணாமலிருந்தால் நேக்குமப்படிதானே இருக்கிறது.



காலகண்டகி-வசனம்.

ஆம் அதுதானே நினைத்துக்கொண்டு நேக்கு அடிவயிற்றிலே பக்குபக்கென்று இருந்தது அண்டைவீட்டு சேஷையங்கார் வந்தார் அவரை வைத்துக்கொண்டு சோபனம் பாடிக்கொண்டிருந்தேன்.

காலகண்டகன்-வசனம்.

நேக்கு மெத்தசந்தோஷம் அந்தசோபனஞ்சத்தேபாடடி இப்பநான்கேழ்க்கட்டும்.

காலகண்டகி-வசனம்.

வேறேயாரோபுருஷாளிருக்கிறுளே நேக்குநாணமாயிருக்கிறதே.

காலகண்டகன்-வசனம்.

நாணம் ஏதுக்கடி நீயறியாதபுருஷாளுண்டா

காலகண்டகி-வசனம்.

உம்மையறியாமல் நேக்கு ஆரிருக்கிறுர்கள்

காலகண்டகன்-வசனம்.

ஓதடி-சேஷி காலகண்டகி குப்பனையங்காரோ
காலகண்டகி-வசனம்-ஆம்-ஆர்-அவர்தான்வேறேயார்
காலகண்டகன்-வசனம்-சுப்பாசாஸ்திரியோ
காலகண்டகி-வசனம்-ஆம்-ஆம்-அவர்தான்ஒண்ணு
காலகண்டகன்-வசனம்-அப்டனையங்காரோ

காலகண்டகி வசனம்.

ஆம்-ஆம்-அவனையல்லாமல் வேறேயாரிருக்கிறது இதையெல்லாம் புருஷாள் சொல்லுவாளா.

காலகண்டகன்-வசனம்.

இருக்கட்டுமடி சேஷிகாலகண்டகிசற்றே சோபனப்பாட்டு பாடடி கேழ்ப்போம்.

காலகண்டகி சோபன-தரு இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

சோபனம்ஸ்திரீமகாலட்சுமியாகிய
தேவிக்கும்பூமாதேவிக்குநித்த் (சோப)
அத்தங்கார்தம்பியனைவோரும் வாழ்க
அத்தாத்துலட்சுமணையங்கார் வாழ்க
எத்தேசகாலமுநேக்குள்ளபேரெல்லாம்
எந்நாளுமென்னுடன்பிரியாமல் வாழ்க (சோ)
கொண்டபுருஷனிருந்தால்பய மென்ன
குடும்பத்தொல்லாயிருந்தால்பய மென்ன
அண்டைவீட்டுசுப்பாசாஸ்திரி மாத்திர
மறியாதிருந்தால்நேக்குச்சந் தோஷம் (சோப)

றெட்டைச்சேரஷியங்கார்கட்டைக் குப்பையங்காரர்
சேக்குதவிசெய்தபாக்கிய வான்களும்
வட்டாரஞ்செருந்துவாழ்ந்திருந்தா லது
மகத்தானபாக்கியம்நாக்கு மெத்தாசை(சோய்)

காலகண்டகன்-வசனம்.

அந்தடி சேஷி காலகண்டகி நேக்கு இருப்பியாக்சுது அதி ருக்கட்டும் இவனைக்கண்டாயோ

காலகண்டகி-வசனம்.

நீர்பட்டுக்கிடந்தீரோ அந்தநுகாணும் மாடுங்கன்னு மாக இழுந்துவந்தீர்.

காலகண்டகன்-வசனம்.

அந்தடிசேஷி காலகண்டகி நேக்கிவனும் நேர்க்கத்தப்பய லாமன்றுவேலை செய்வதற்குக்கொண்டுவந்தேன்.

காலகண்டகி-வசனம்.

நேக்சேதுக்கு இந்த அறியாதப்பயல் நோக்சேதுக்கிவன் எதுனாணும் விசித்திரம்பேசுகிறீர்இவாள்வெறுமைகொடுத்தார்களோ.

காலகண்டகன்-வசனம்.

வண் வேறன்பயந்தடி வெறுமைஅந்த இவன்நாலுகாசும் இந்தப் பயல் இரண்டுகாசும்.

காலகண்டகி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஊரினில்மாட்டின்பின்னை வுழன்றுநான் திரிந்துசாணம்
வாரியேமுட்டைதட்டி மாறுமல்விற்றகாசு
தேருதென்றறிந்தோகாசைச் செலவழித்திட நினைத்தீர்
ஆரிதைக்கொடுப்பாரிந்த வனியாயமுண்டோகூகூ.

வசனம்.

நேக்கு அடிவயிற்றைப்பற்றி யெரிகிறதேநாலும் ரெண்டும் ஆறுகாசு தெருவில் வெறுமைகிடக்கிறதாமந்தை மாட்டின் பின்னே லதிரிந்துசாணமெடுத்து முட்டைதட்டிவிற்றகாசு என்கையிலிருக்கிறதை இப்படி அனியாயமாகச்செலவழிக்கலாமா நேக்குவயிற் றைக்கலக்கிறதே-கூ-கூ-அடபட்டுக்கிடப்பன்இப்படியுஞ் செய்ய லாமா-கூ-கூ.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சாணமுமெடுப்பாள்முட்டை தட்டுவள்வேலையெல்லாம்
கோணவில்லாமல்நெல்லுங் குத்துவாள்கால்பிடிப்பாள்..
வீணல்லபயலுங்கொண்டன் விறகுடன்சமிதையெல்லாம்
வேணதுநமப்பனேவல் விவரமாய்விதித்திடாயே.



வசனம். அந்தடிசேஷி காலகண்டகி நோக்கப்படி நஷ்டம் வரச்செய்வேனோ இவளோ சாணந்தட்டி முட்டையாக்குவள் நெ ல்லுங்குற்றுவள் காலும்பிடிப்பள் சகலவேலையுஞ்செய்வள் இந்தப் பயலோ கெண்டலுக்கும் விறகு சமிதை இலை தருப்பைமுதலாகி யதெல்லாங் காட்டிலே ஒன்றாமல் நம்பிடவிடெல்லாங்கொடுக்கு வான் ஆனைபால் நோக்கிஷ்டமானபடி வேலையிடலாம்வயிற்றுக்கு மாத்திரம் எதுவாகிலும் மிஞ்சவொட்டாமல் விசாரித்துக் கொள்ள டி. சேஷி.

காலகண்டகி-வசனம்.

அந்தகாணுங் காசைக்கொடுத்தது மல்லாமல் இவள் வயிற் றுக்கு கூடப்படைக்கவேணுமா நல்லது இவள்பேரென்ன.

காலகண்டகன்-வசனம்-இவள்பேர்சந்திரி.

காலகண்டகி-வசனம்.

ஆம் இவள்பேர்தெரிந்துகொண்டேன் அந்தப்பயல்பேரென்ன.

காலகண்டகன்-வசனம்.

இந்தப்பயல் பேரென்னவென்றால் நம்முடையதாசன்.

காலகண்டகி-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

இரவினில்மூன்றுஞ்சாம மெழுந்திருந்திங்குண்டான
எருமைகள்பசுக்கள்சாண மெடுத்துமுத்தங்கள்கூட்டி
பரிவுடன்குப்பையெல்லாம் பள்ளத்திலெடுத்துக்கொட்டி
விரவுடனின்னஞ்செய்யும் வேலைகளடியேசந்தி.

வசனம்.

அடிசந்தி அடிசந்தி இங்கே நம்பிட ஆத்தின்வாயிலிலே படு த்திருக்கவேணும் இராத்திரி மூன்றுஞ்சாமத்தி லெழுந்திருந்து இ ந்தத்தொழுவத்திலே கட்டியிருக்கிற எருமைச்சாணம் பசுஞ்சாண ங்கள் கன்றின்சாணமெல்லா மெடுத்து ஒன்றாய்ச்சேர்த்து நன்று ய்த்துவைத்து முட்டைதட்டவேணும் (கா-ன்) வசனம்-ஒன்று (கா-கி) வசனம் தெருமுற்றம் வீட்டுமுத்தம் மாட்டுத்தொழுவம் அங் கேயெல்லாஞ் சாணந்தெளித்து அந்தக்குப்பையெல்லாம் பெருக் கி நம்பிடபள்ளக்கழனியிலே கொட்டவேணும் (கா-ன்) வசனம்-ஒன்று (கா-கி வசனம்-இன்னங்கொஞ்சம்வேலை சுளுவாயிருக்கிற து சொல்லட்டுமா சந்தி.

சந்திரமதி-வசனம்.

அம்மா நீரொன்னவேலை கட்டளையிட்டாலும் செய்யக்காத்தி ருக்கிறேனம்மா.

காலகண்டகி-விருத்தம்-இ-ம்-எதுகுலகாம்போதி.

மந்தையிற்சாணமெல்லாம் வாரியேமுட்டைதட்டி
சுத்தமய்வீட்டில்நெல்லுந் தாளிலைத்துவித்துக்கொட்டி

பந்தமாய்ப்பதிங்கலந்தான் பற்றநக்குத்தவேணும்
வந்துகால்பிழந்துக்கூழை வார்க்கவுண்டிருக்கவேணும்.

வசனம்.

கேளடிசந்தி வீட்டுவேலைதீர்த்தவுடனே மந்தைமாட்டின் பின்னாலேபோய்ச் சாணமெல்லாம் வாரிக்கொண்டுவந்து முட்டைதட்டவேணும் (கா-ன்) வசனம்-ஒன்று (கா-கி) வசனம்-தினம்பதின்கலம்நெல் அவித்துக்கொட்டி உலர்த்தி அன்றுடன் குத்தவேணும் (கா-ன்) வசனம்-ஒன்று (கா-கி-வசனம்) நோக்குத் தள்ளாதவேலைகளெல்லாம் நீசெய்யவேணும் நேக்குச்சற்றே கால்பிடிக்கவேணும்நோக்குச்சட்டமாய் கூழ்சாதிக்கிறேன் நீஓரோவேளையாய்சாப்பிட்டுக்கொண்டுநம்மிட ஆத்துவேலையில் சாக்கிரதையாயிரடிசந்தி.

சந்திரமதி-வசனம்.

அம்மா கிருபைபண்ணிக்காலாலேகாட்டின வேலைகளெல்லாங் கையாலேசெய்யவே காத்துக்கொண்டிருக்கிறேனம்மா.

காலகண்டகி-வசனம்.

ஏதோ நோக்குக் கைபழகியிருக்கிறது தெரியட்டும் இந்தத் தெருமுத்தத்துக்குச் சாணந்தெளியடி பார்ப்போம்.

சந்திரமதி-சாணந்தெளிக்கிற-தரு-கண்ணி.

இ-ம்-கெண்டா-ஆதிதாளம்.

வண்ணப்பொற்கிண்ணந்தன்னிற் சந்தனங்குழைத்தணிந்த கைகளாலேஇந்த, மாட்டுச்சாணமெடுத்துவாரிக்கரைக்கலாச்சே தெய்வமே,எண்ணவெண்ணுதாதிமார்களேவல்செய்யவிற்றிருந்த கைகளாலே-நான்,எடுத்துச்சாணஞ்சட்டியிலின்றுகரைக்கலாச்சே தெய்வ சவ்வாதெடுத்துனைத்தாற்றுனேசிவக்குமெந்தன் கைகளாலே-நானுஞ், சாணங்கரைக்கவெந்தன் றலைவிதிவரலாச்சே தெய்வமே
இவ்வாறுவருமென்றெவ்வளவும்நானறியேன் விதியினாலே-என்னை
இப்படியடிமையாக்கி யேங்கவைத்தாயோ ஐயோ தெய்வமே

சந்திரமதி-வசனம்.

சாணங்கரைத்துத்தெளித்தாச்சுதம்மா.

காலகண்டகி-வசனம்.

அடிசந்திநெதடிகட்டியுங்கிட்டியுமாயிருக்கிறது இருக்கட்டும் இந்தக்கட்டைத் துடைப்பத்தாலே முத்தம்பெருக்கடிபார்ப்போம்.



முத்தம்பெருக்கிற-தரு-கண்ணி.

இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

பாவிதெய்வமே ஐயோவுனக்கு கண்களில்லையோ-அந்தன்
பரிதாபத்திர வந்தொரு வார்த்தைசொல்லாயோ
ஈவிரக்கமோ ளெள்ளவாகிலுந் தெய்வத்துக்கிராதோ-ஐயோ
வேழையர்நொந்தால் தெய்வமேயுனக் கிரக்கம்வராதோ
விட்டநுறையோ ஐயோதெய்வமே விஸ்வாமித்திரமாயம்-ஒரு
வினையுமறியா யெனக்கிந்த விதிவருவதோநாயம்
அஷ்டதிசையும் புகழும்ராஜஸ்திரீ யாகியகோலம்-இன்று
கட்டைத்துடைப்பம் பிடித்துப்பெருக்க லாச்சுதேகாலம்

சந்திரமதி-வசனம். முத்தம்பெருக்கியாச்சுதம்மா.

காலகண்டகி-வசனம்.

அடிசந்தி எதடிகட்டைத்துடைப்பத்தைமுத்தமெல்லாம்பிறைத்துவிட்டாய் இருக்கட்டும் இந்தச்சாணத்தையெல்லாங்கூட்டிப்பிதித்து முட்டைதட்டடி பார்ப்போம்.

முட்டைதட்டுகிற-தரு-கண்ணி-இராகம்.

எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

வேணப்பணிவிடைகள் வெள்ளாட்டிமார்கள்செய்ய
வீற்றிருந்தேனேஐயோ தெய்வமே
சாணிப்புழுக்கள்காலிற் படவுமிதிக்கலாச்சே
தலைவிதிதானோஐயோ தெய்வமே
காணவேணுமென்றுவந்தால் தெய்வலோகஸ்திரீகளுக்குங்
காணவரிதானமேனி தெய்வமே
சாணம்பிதிக்கவந்து தெருவிலெல்லோருங்காண
நயங்கச்செய்தாயேஐயோ தெய்வமே
காணிக்கையாகராஜ ஸ்திரீகள்மல்லிகைச்செண்டு
கட்டிக்கொண்டுவந்துகாண்பார் தெய்வமே
சாணியுருண்டைகளைச் செண்டுபோலுருட்டத்
தலைவிதிவந்ததையோ தெய்வமே
மாணிக்கப்பந்துகட்டி மாதருடன்விளையாடி
மகிழ்ந்திருந்தேனேஐயோ தெய்வமே

சாணிப்பத்துதிரட்டிப்பார்ப்பாத்திமனதுக்கு
சரிச்சொல்லாச்சுதையோ தெய்வமே

சந்திரமதி-வசனம்.

சாணமெல்லாமிதித்து உருட்டித்தட்டியாச்சுதம்மா

காலகண்டகி-வசனம்.

அடிசந்தி தட்டினமுட்டையெல்லாம்நீபிண்டுவிழுந்தாற்போ லப் பிண்டுவிழுந்துபோறது ஏதடி இருக்கட்டும் இந்தநெல்லைக்கு த்தடிபார்ப்போம்.

நெல்லுகுத்துகிற-தரு-கண்ணி.

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

சித்திரப்பதுமைக்கு விசித்திரவுடைபூட்டிச்
சிங்காரஞ்செய்திருந்த கைகளாலே-இன்று
சித்தநொந்துருகிநெல்லைக் குத்தவுமாச்சுதேஐயோ தெய்வமே
மொத்தமலர்ச்செண்டுகளைப்பத்திபெரியச்சிவக்கும் கைகளாலே-இ
டுப்பிற்றுவிழப்பார்புளைக்க இத்தனைநெற்குத்துவதோ தெய்வமே
கைச்சிவந்துகொப்பளித்துக் காய்ப்பேறியுதிரங்கள்
கசியநெற்குத்துவேனோ தெய்வமே
மைபெயநித்துக்கண் ணுக்கிட்டால் கைகறுக்குமென்றிருந்தேன்
மனமுங்கறுத்ததையோ தெய்வமே
கதம்பப்பொடிஇமிர்ந்தாற் களைக்குமெனதுதேகங்
கப்புதேதவிடையோ தெய்வமே
விதம்விதமாய்ப்பன்னீர்பூசும் மேனியில்வேர்வைசிந்த
விதித்தாயோவிதியையா தெய்வமே

சந்திரமதி-வசனம்.

நெல்லைக்குத்தி அரிசிவேறு உமிவேறு தவிடுவேறு பிரித்து வைத்தேனம்மா.

காலகண்டகி-வசனம்.

அடிசந்தி யேதடி அரிசியெல்லாம் நொய்யாக்கிப் போட்டா ய் கொட்டனைபோதங்கூழ்சாதிக்கிறேன்சாதிச்சுக்கொள்ளடிசந்தி.

சந்திரமதி-வசனம்.

கூழைச்சாதித்தாலும் தேவாமிர்தமாய்ப் புசிக்கிறேனம்மா.

காலகண்டகன்-வசனம்.

அந்தடி அடி காலகண்டகி நீதான் இவளுக்குவேலைசட்டமா யமைத்துக்கொண்டாயேஇந்தப்பயலுக்குநானேவேலையிடுகிறேன்



காலகண்டகி-வசனம்.

நீர் பட்டுக்கிடந்திரோ குடுமையறுப்பன் நீதானே இந்தப்ப யலுக்குவேலையிடும் நேக்குச் சந்திப்பாரும்.

காலகண்டகன்- விருத்தம் இ-ம்-தோடி.

விலையெனக்கானபிள்ளாய் விடியுமுன்னெழுந்திருந்தே
இலையுடன்விறகுமற்று மெச்சியசமிதைகொண்டு
நிலைமையாய்வாவேணும் நேக்குள்ளவேட்டிதன்னை
இலகவேதோய்த்துக்கூழுண் டிருந்துகால்பிடிப்பாய்நித்தம்
(வசனம்) அடாபிள்ளாய் நம்பிடதாஸாய் நோக்கு வேலையிடு கிறேன்கேளடாய்.

தேவதாஸன்- வசனம்.

தேவரீர் என்னபணிவிடைகளைக் கட்டளையிட்டாலும் தலை யாலேசெய்யக் காத்திருக்கிறேன் கட்டளையிடும் சுவாமி.

காலகண்டன்-வசனம்.

ஆனால் கேளடாய் அடாய் அடாய் நம்பிடதாஸாய் விடியச் சாமத்திற் கெழுந்திருந்து காட்டுக்குப்போய் விறகு இரண்டுசுமை இலை மூன்றுசுமை தருப்பை ஆறுசுமை சூரியனுதயமாகுமுன்ன மே கொண்டுவரவேணும் இதல்லாமல் நமக்கு வேளையுஞ் சற் றுநேரம் ஒண்ணாச்சாமமட்டும் கால்பிடிக்கவேணும் அடாய் அ டாய் நம்பிட தாஸாய் நமக்கிருக்கிறது மூணுவேஷ்டி ஏழுஉத்தரீ கம் ஆறுதுண்டு கௌபீனம் விலைசுளுவாய் முழமதிகமாய் வாங்கி னது அதுகளை மூணுவேளையுந் தோய்க்கவேணும் நோக்குச் சட் டவட்டமாய் கூழ்சாதிப்பார்கள் கொட்டைப்பாக்களவு நம்பி ட ஆம்பிடையாள் நீ நன்றாய் நித்தம் ஒருவேளையாய்ச்சாப்பிட்டுப் போட்டு ஜாக்கிரதையா யிரும்பிள்ளாய்.

தேவதாசன்-வசனம்.

தேவரீர் வார்த்த கூழைச்சாப்பிட்டு நீரிட்டவேலையைச் செய் வேன் சுவாமி.

காலகண்டன்- வசனம்.

அடாய் அடாய் நம்பிடதாசாய் நீ இந்த மூன்று கன்றுக்குட் டிகளையுஞ் சற்றுநேரம் மேய்த்துக்கொண்டிரடா இதற்குள் அசலா த்து பிள்ளைகள் காட்டுக்குப்போகவருவார்கள்உடனே கூடப்போ ய்வா.

தேவதாசன்-வசனம்.

அப்படியே மேய்த்துக்கொண்டிருக்கிறேன் சுவாமி.

பொது விருத்தம்-இ-ம்-தோடி.

விதிவசத்தாலேயந்த வேதியர்வீட்டிற்சந்தி
மதியுடன்மகனுமிந்த வாறுள்ளவேலைசெய்து

மதிமருண்டிருக்கக்காசி வாழ்மறையோர்தம்மைந்தர்
சதிருடன்காட்டுக்கேகச் சட்டமாய்வருகின்றாரோ,

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதியம்மனுந் தேவதாசனும் காலகண்டகவேதியர் வீட்டில் பணிவிடை செய்துகொண்டிருக்க அந்தக் காசிப்பட்டணத்திலுள்ள அசலாத்துப்பிள்ளைகள் காட்டுக்குப்போக வருகிறவிதங்காண்க.

அசலாத்துப்பிள்ளைகள்- வருகிற-தரு.

இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பிர்ம்மசாரிகள்வந்தா-ரிதோ,- பிர்ம்மசாரிகள்வந்தார்.

பிர்ம்மகுலத்திலுதித்தவேதப் பிராமணரானமகத்வதித் (பிர்ம்ம)
தருமார்த்தகாமமோட்ச சதுர்விதமுறுஞ்சிவகடாட்ச (பிர்ம்ம)
மின்னும்பட்டஞ்சவேஷ்டிசட்டமா யுடுத்தி-வியாகரணத்தின்
விரிவெல்லாந்தங்கள் மனதினில்வசப்படுத்தி
நன்னயமாக முப்புரிநூலை
நன்றாய்த்திருத்தி மார்பில் பொருத்தி (பிர்ம்ம)
பின்குடுமிகள் தட்டிமுடித்துத் துலங்க-பஞ்சாட்சரத்தின்
பிரணவப்பெருமைநாவிலுச்சரித்திலங்க
அன்புடனித மோதுங்காவியம்
அங்கையிலெடுத்துச் சங்கையைவிடுத்து (பிர்ம்ம)
ஆகாசிவசம்போவென்று துதித்து-சமிதைகொய்ய
அடவிக்குநாம்போவோமென்றுநினைத்து
திருவெண்ணீறு நுதலில்விளங்கத்
தீர்க்கமாக அதிவிவேக. (பிர்ம்ம)

சுப்பாசாஸ்திரி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

வாரையோசேஷாய்நீதான் வரமாட்டேனோக்காளோநான்
வாரையோவரதாய்நீதான் வழிதெரியாதோநேக்கு
வாரையோகுப்பாய்நீதான் வருவாள்நோக்குள்ளபேர்கள்
வாரையோநாணாய்நீதான் வருவாள்நோக்குள்ளபேர்கள்.

சுப்பாசாஸ்திரி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

வழிதெரியாதோநோக்கு வரட்டோழிபிள்ளாய்நோக்கு
பழகினவழியேபின்னும் பார்க்கிறேனிவாளும்நீயும்
நுழைநரிபோலக்காட்டில் நுழைந்தலைந்திடப்போறீர்கள்
மழமழென்றிலையிருக்கும் மரங்களைக்காட்டுவேனோ.

வசனம்.

அந்நடாய் அடாய் சேஷாய் இவாளெல்லாங்கூட வரமாட்டோமென்னுறாளே இவாளோடேகூட நீயும்வரமாட்டோமென்னுறையே நோக்கிந்தக்காடு பழக்கமோ வழிநன்றாயறிவையோ மழமழென்று பளபளப்பாயிலைகளிருக்கிறதே அந்தமரங்களைக்காட்டுவேனோ நோக்குங் காட்டமாட்டேன்.



சேஷின் -வசனம்.

அடாகுப்பாய் வரதாய் சுப்பாய் நாணாய் நம்முடைய காலகண்டகன்ஆத்திலே எவளாகிலுங்காட்டுக்கு வாறதுண்டோ.

சுப்பாசாஸ்திரி-வசனம்.

ஆம் ஆம் அந்தமுறட்டுத்தேவடியாள் பிள்ளை ஆம்படையாளிருக்கிறாளே காலகண்டகி அவள்தான் காட்டுக்குவாறது.

சேஷையர்-வசனம்.

ஆனாலழைத்துப் பார்ப்போமே ஓய்ஆர்காணும் ஆத்திலேகாட்டுக்கு நீர்வாரீரோ உம்மிட ஆம்பிடையாளை எங்களோடேகூட்டிவிடுகிறீரோ.

காலகண்டகன்- வசனம்.

எதடா முரட்டுத்தேவடியாள் பிள்ளைகளா நம்மிட ஆம்பிடையாளுக்கு வேலைவைத்துப் போட்டீர்களா அடாபிள்ளைகளா நம்மிட அடிமைப்பயலை அனுப்புகிறேன் கூட அழைத்துக்கொண்டு போங்கள்.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

அவனார்காணும் அவனார்காணும் அவனைவனோ பார்க்கட்டும் அனுப்பும்.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அந்நடிசந்திரமதி அசலாத்துச்சிறுவரோடே
கன்றுகள்மேய்க்கப்போன கட்டையாம்பயலைக்கூட்டி,
பன்னுநெல்வெளிகருப்பு பரிவுள்ளஇலைகள்தர்ப்பை
இன்றுபோய்காட்டிற்கொய்தேயெடுத்துவந்திடச்செய்வாயே

வசனம்.

அடிசந்திரமதி நம்மிடகன்றுகளைமேய்க்கப்போன அடிமைப்பயலை இந்த அசலாத்துப்பிள்ளைகளுடனே கூட்டி காட்டுக்குப்போய் கொஞ்சமாய்த்தானே ஆளெப்பியதற் கிரட்டிப்பான சுமையாய் ஒருசுமைவிறகும் கருப்பை யிலை காளா முன்னே முகட்டை நனைமிந்துகளும் மூன்று சுமையிலே இதுகளெல்லாம் பறித்தெடுத்துக்கொண்டு குடுகுடென்றுவரச்சொல்லடி.

சந்திரமதி- விருத்தம்-இ-ம்-முகாரி.

வாயினில்முலைப்பாலின்னம் மாறவுமில்லையையா
பேய்நரிநிறைந்தகாட்டில் பெரும்புலிநிறைந்தகாட்டில்

போயிலைவிறகுதர்ப்பை புனிதமாய்க்கொடுவாவென்று
நீயிசைத்திவனைப்பார்த்தால் நெஞ்சிரங்காதோசுவாமி.

வசனம்

ஐயையோ இன்னம் வாயிலே முலைப்பால்நாற்ற மாறவில்லை யேகரடி புலி சிங்கம்யாளிபேய் பூதம் இவைகள் நிறைந்த காட்டுக்கனுப்பி இலை தருப்பை விறகு கொண்டுவரச் சொல்லுகிறீரா இவனுக்குத்தகுமானவேலை யிடலாகாதா இவனை நீர்காணும்போதும் உம்மிடமனதுக்குச் சற்றும் இரக்கமில்லையா சுவாமி.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

நோக்கிகண்ணபொன்னைக்கொட்டிநாயாளிட்டயலைக்கொண்
நேக்கந்நோநஷ்டியுன்னைநீதியார்சொல்லச்சொன்னார் [டால்
பாக்யவான்மகளென்றாலும் படைத்தவர்க்கடிமையந்நோ
சாக்கிரிசெய்வதற்குத் தடையுண்டோஅனுப்புவாயே.

வசனம்.

அர்நடி சந்தி அடிசந்தி அந்தப்பயல் இன்கிறத்தையும் தின்னும்போட்டு இப்படி நோய்கொண்டவனைப்போ விருந்தால் பொன்னைக்கொட்டி விலைக்குவாங்கின நேக்கந்நோநஷ்டி நோக்கென்னடி நியாயஞ்சொல்லவந்தாய் குபேரனுடைய பிள்ளையானாலும் அடிமைப்படைத்தவர்களுக்கு பிரம்மாண்டமே அசலாத்துப்பிள்ளைகளுடனே அனுப்படி அனுப்பு.

சந்திரமதி-வசனம்.

தேவரீர் சித்தத்தில் கோபம்வேண்டாம் வந்த விதியெல்லாம் அனுபவிக்கக் காத்திருக்கிறோம் உள்ளபடியாயின்றது அனுப்புகிறேன்சுவாமி.

காலகண்டகன்-வசனம்.

அர்நடி சந்தி இந்தப்பட்டுக்கிடப்பன் நான்முட்டைகட்டி வித்தமாசெல்லாம் கொட்டிக்கொடுத்து உங்களைக்கொண்டுவந்து பூசைபண்ணவோ அனுப்படி அனுப்பு.

சந்திரமதி-விருத்தம் -இ-ம்-ஆனந்தபைரவி.

பூதலமாண்ட அந்தப் புரவலன்றவத்தால்வந்த
காதல்சேர்மகனேயெந்தன் கண்மணிநீயேவாடா
பாதசப்பிரம்மதேவன் பரிந்தன்றேயெழுதிவிட்ட
சாதசப்படியேகட்டை சமித்திலைக்கிவான்பின்போடா.

வசனம்.

அப்பாமகனே தேவதாசா என்கண்ணேகண்மணிமணியே அந்தப்பாவியான பிரம்மதேவன் எழுதிய எழுத்தின் பிரகாரம் இந்தப்பிள்ளைகளுடனேகூடகாட்டுக்குப்போய் உன்னுடைய சக்கியமுள்



மட்டுஞ் சமிதைவிறகு தருப்பை இலைஇவைகள் சேகரம்பண்ணிக் கொண்டுவாடா அப்பா.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

வாழ்வினில்மிகுத்திருந்த மகிழ்ச்சியைநினைக்கலாமோ
சூழ்வினையொழிவதுண்டோ துயரத்தைவிடுவாய்தாயே
வேழ்விசெய்புண்யமாகும் வேதியர்க்கடிமைசெய்தால்
தாழ்வல்லஇவர்கள்பின்னே தைரியமாயனுப்புவாயே.

வசனம்.

கேளும் என்னைப்பெற்றதாயே விதி யொருவரையும் விடாது பிராமணனுக்கென்ன ஊழியஞ்செய்தாலும் யாகஞ்செய்தபுண்ணியஞ்சித்திக்கும் ஆகையால் நீ விசனப்படாமல்தைரியமாகச்சிலவுகொடும்மம்மா தாயே.

சந்திரமதி-தரு-இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

கேளடாமகனே-நான்சொல்லும்புத்தி-கேளடாமகனே
நாளடாநமக்கினி நலிந்துவாடவும் பொல்லா
நடுக்கங்கொண்டிடத்தெய்வங்
கெடுக்கவும் யென்னசெய்வோம் (கேளடா)
நடக்கும்வழியிலிந்த அசல்வீட்டுப்பிள்ளைகள்
நடக்கும்வழியைவிட்டு நடவாதே-அப்பா
நடக்கும்வழியிலொரு வேலையிவர்களிட்டால்
நான்செய்ய மாட்டேனென்று கடவாதே-மகனே
நடுக்குங்கிளைவழிகள் குறுக்கேயனேகம்வருந்
தப்பிப்போய்பின்னேவழி நடவாதே-அப்பா
சமத்தம்பேசுவார்நீயும் கூடப்பேசினாலுந்தன்
சாமர்த்திய மங்கையொன்றும் நடவாதே-மகனே
தொடுத்துநடந்தகாட்டிற் சுமைகளவர்கட்டும்போது
சிறுக்காய்நீசுமைகட்டித்தொடர்வாய்நாம்செய்வதேது
அடுத்துச்செய்புமோஅந்தப் பிரமுந்தெய்வமுஞ்சூது
ஐயர்சொல்லைக்கடக்கலாமோ விதிபொல்லாது (கேளடா)
பழங்களிருக்குதிந்த மரத்தினிலென்றுசொல்லிப்
பறிக்கப்பசைத்துமிஞ்சி யேறாதே-அப்பா
பறிப்பாயோநீயென்று பந்தயம்பேசுவார்கள்
பதட்டமாய்ப் பந்தயங்கள் கூறாதே-மகனே
முழங்குமோசையிதென்ன பார்ப்போமென்றுநுழைவார்
மூத்திபுதருக்குள்ளே நுழையாதே-அப்பா

நூசு

மோசமென்ன க்ஷத்திரியர்க்குரோஷமில்லையோவென்றெண்ணி
முகங்கடுத்திவர்களைச் சீறாதே-மகனே
வழங்கும்பேரிகைபோலச் சீறுங்கருடபட்சி
வரக்கண்டாலெருக்கும் பிடிக்குமோ பிராணகிலி
மழுங்கிப்பதுங்காவிட்டால்வாங்கிக்கொள்ளுமே பெலி
வயிற்றில்நெருப்பிடாமல்வந்துதீர்ப்பாய்பிள்ளைகலி(கேளடா

புற்றுகளைசுற்றிநிற்குந் தற்பைப்புற்களைக்கண்டால்
பொடுக்கென்றமுந்திவெட்டிப் பறியாதே-அப்பா
பொழுதுபோகுதென்று தனியேயிலைவிறகு
போதாதென்றுபதிக்கக் குதியாதே-மகனே
செத்துக்கிடப்பதுபோற் கிடக்குமிருகங்களைத்
தெரியாமல்கல்லுகளா லெறியாதே-அப்பா
திடுக்கென்றெழுந்துகொல்லுந் தப்புவதரிதப்பா
செழித்துவளர்குருத்தை முறியாதே-மகனே
பித்துப்பிடித்துநான் வழிபார்த்து வேசார
பேதலிப்புச்செய்யாமல் வருவாயென் கணேதிர
பத்துமாதஞ்சுமந்து பெற்றேயிந்தக கோர
பலனைக்கண்டவயிறு பதைக்காமல் களிகூற(கேளடா)

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

சிவனருளாலேவேறு தியக்கங்கள்நினைக்கவேண்டாம்
இவர்கள்பின்வனத்துக்கேகி யிலையுடன்விறகுதர்ப்பை
நவையறுசுமையாய்க்கட்டி நான்கொண்டுவருவேனேதுங்
கவலைகள்நினைக்கவேண்டாங் களிப்புடனிருப்பாயம்மா.

வசனம்.

கேளும் யென்னைப்பெற்றதாயே சாம்பசிவமூர்த்தியாருடைய கிருபையினாலே ஒருகுறைவும்வாராதுநீர் விசனப்படாமலிருமிந்தப்பிராமணப்பிள்ளைகளுடனேகூட நான்போய் தருப்பை சமித்துகள்கொண்டு வருகிறேனம்மா.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

எதுகாணும் இவாள்சம்பிரமத்திலே போதுபோறது வானாயோ வரமாட்டாயோ.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

போவென்றுசொல்லநெஞ்சம்புழுங்குதேன்செய்வேனப்பா
நீவாஞ்செய்புமிந்தச் சிறுவர்களுடன்போய்மீண்டு



நீவரும்வழியைப்பார்த்து நிலைதளர்ந்துருகிநிற்பேன்
காவலார்தெய்வமல்லாற் கண்மணி நானென்னசெய்வேன்.

வசனம்.

அப்பாமகனே தேவதாசா இ[?]சிறுவர்களுடனே வனத்துக்குப்போய் வருகிறபரியந்தம் வழிபார்த்து வழிபார்த்துப் பாதவித்துக் கொண்டேயிருப்பேன் இந்தப்பிராமணப்பிள்ளைகளையிடைவிடாமல் கூடவேவந்துசேரப்பா உனக்குத்துணை தெய்வமேயல்லது நானென்ன செய்வேனடாமகனே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-மோகனம்.

என்பிள்ளையல்லவப்பா விவனுங்கள்பிள்ளைசொன்னேன்
என்வயிற்றினில்நெருப்பை யிடாமலேபதனமாகப்
பின்வரச்செய்துகாட்டிற் பிரியாமற்சமித்தைசேர்த்து
நன்மையாய்க்கொண்டுவந்து நான்காணச்செய்குவீரே.

வசனம்.

அப்பா அசலாத்துப் பிள்ளைகளே இந்தக்குழந்தையைப் பத்திரமாகஅழைத்துக்கொண்டுபோய் உங்களோடொப்பந்தம் இலைவிறகு தருப்பை சமித்தை முதலானதுஞ் சேர்த்துக்கொண்டு யாதொருசிந்தையும் வாராமல் உங்கள் பிள்ளையாகப்பாவித்து மறுபடியுமென்கண்ணிற் கொண்டுவந்து காட்டுங்களப்பா.

சுப்பாசாஸ்திரி-வசனம்.

அடாய்சேஷாய் இவளழுறத்தைப் பார்த்தால் நேக்கு விநனமாயிருக்கிறது.

குப்பையர்-வசனம்-ஆம்-ஆம்-நேக்கும்-அப்படிதான்

வரதையர்-வசனம்-ஆம்-நேக்குமப்படிதான்

சுப்பாசாஸ்திரி-வசனம்.

அடாய்சூத்திரப்பிள்ளாய் நீ கூடவானாயோடா.

தேவதாசன்-வசனம்-ஆம்சுவாமி கூடவருகிறேன்.

காலகண்டன் -வசனம்.

அந்தடிசந்தி அந்தப்பையன் காட்டுக்குப்போய் விறகு கொண்டுவந்தானு.

சந்திரமதி-வசனம்.

இதோ அனுப்பிவிட்டேன் சுவாமி என்னசெய்வேனடா அப்பா மகனே உன்னைவிட்டெப்படியிருப்பேன் மகனே.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

நாங்கள் கொண்டுவந்துஉங்கள்கையி லொப்புவிக்கிறோம்நே

க்குள்ளவிறகில் பாதிதருகிறேன் ஆம் ஆம் நேக்குள்ளயிலேயிற்பா திதருகிறேன் நேக்குமப்படியே.

சந்திரமதி-வசனம்.

போய்வருகிறையா என்னப்பா கண்மணியே

தேவதாசன்-வசனம்.

அம்மா நீ விசனப்படவேண்டாம் நான்போய் வருகிறேன்தாயே

காலகண்டகி-வசனம்.

அடிசந்தி நேக்கேதுக்சடி அசலாத்துப் பிள்ளைகளுடனே வார்த்தை இந்தச்சாணத்தையெடுத்து முற்றத்திற் கொட்டடி.

சந்திரமதி-வசனம்-இதோவந்தேனம்மா

அசலாத்துப்பிள்ளைகள் -விருத்தம்-இ-ம்-மோகனம்.

எதடாவுன்னைப்பார்க்கி லிராஜராஜன்போற்றேறன்ற
சோதியுமழகுங்காட்டித் துலங்கிறயுன்னைப்பெற்ற
மாதுமோர்மன்னர்மன்னன் மகன்போலுமிருக்கின்றயே
ஓதுமுன் ஊரும்பேரும் உபத்ரம்வந்ததுஞ்சொல்வாயே

வசனம்.

அடாய் சிறுபிள்ளாய் உன்னைப்பார்த்தால் இராஜகுமாரனைப் போலும் உன்தாயைப்பார்த்தால் இராஜகுமாரத்தியைப்போலு மிருக்கின்றீர்களே உங்கள்பேரும்ஊரும்உங்களுக்குவந்தவிபத்துந் தெரியச்சொல்லிக்கொண்டு நடவுட்பிள்ளாய் நமக்குவழியுந் துலையவேணுமே.

தேவதாசன்-தரு-கண்ணி இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

என்னென்றுசொல்லுவே னெங்கள்தலைவிதியை ஐயமாரோ-என்னை
ஈன்றவனரிச்சந்திர மகாராஜனென்பார்கள் ஐயமாரோ
தன்மையாலெனைப்பெற்றதாய்சந்திரமதியென்பார் ஐயமாரோ-நாங்
சத்யந்தவறாமலே தரணியையாண்டிருந்தோம் ஐயமாரோ [கள்
வஞ்சனையாய்விஸ்வா மித்திரமுனிவர்வந்தார் ஐயமாரோ - அவர்
மகத்வயாகமொன்று செய்யதனங்கேட்டார் ஐயமாரோ
மகிழ்ந்துகொடுத்தாரதைவாங்கிவைத்துவைத்தார்ஐயமாரோ [ல்லா
மிருகங்களால் வனத்திலிழுத்துவிட்டார் ஐயமாரோ - பொ
கொடியதீச்சப்பெண்களைகூடிப்புணரச்சொன்னாரையமாரோ- அது
கூடாதெனவேயோத்திரமெல்லாம்வாங்கிக்கொண்டாரையமாரோ
வாங்கிக்கொண்டுமுன்னே வைத்தபொன்னைக்கேட்டாரையமாரோ
காசிமறையோர்க்கெங்களைவித்துமாமுனிகடன்தீர்த்தாரையமாரோ



மந்திரியுடவருமாய் மறுதேசம்போனார்க ளையமாரோ-எந்தன்
மாதாவுதானுமாய் மறையோர்க்கடிமையானோ மையமாரோ
சற்றுமிரக்கமுந் தாட்சண்யமில்லாம லையமாரோ-எந்தன்
தாய்க்குக்கொடியவேலை சமைத்தார்கள்செய்கின்றா ளையமாரோ
குழந்தையென்றெந்தனைக்குறியாமலுங்கள்பின் ஐயமாரோ-காட்டு
கூடப்போய்விறகுகள் கொண்டுவரச்சொன்னா ரையமாரோ [க்
தாயும்நீங்களெந்தன் தந்தையுநீங்களென் ஐயமாரோ-பிரம்மா
தலையிலெழுதினது தப்புமோயெவருக்கும் ஐயமாரோ

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

விறுவிறென்றிந்தகாட்டில் விடாமலேயனேகதூரம்
நெறநெறென்றோடிவந்தோம் நில்லுங்களிங்குண்டான
விறகுகள்சமிதைநல்ல விஸ்தாரமிலைகளுண்டு
பறியுங்கள்நமக்குமிந்தப் பயலுக்குங்கூடத்தானே

வசனம்.

அடாய் சேஷாய் சுப்பாய் குப்பாய்நாணாய்நாமாணல் வெகுதூர ங்காட்டுக்குள்ளே வந்துவிட்டோம் இங்கே நன்றாய் விறகுகளிரு க்கின்றது சமிதைகளிருக்கின்றது சட்டவட்டமா யறுத்துச் சுமை கட்டுங்கள் இந்தப்பிள்ளையைப் பார்த்தால் நேக்குப் பரிதாபமாயி ருக்கின்றது இவனுக்கு அவாளவாள் கொஞ்சங்கொஞ்சங் கொடு ப்போம்.

பிராமணப்பிள்ளைகள்-வசனம்.

ஆம்-ஆம்-அப்படியேசெய்வோம் நேக்குஞ்சந்தோஷம் நே க்குஞ் சந்தோஷந்தான்.

தேவதாசன் - விருத்தம் - இ - ம் - ஆனந்தபைரவி.

இனமாந்தாயாளமுள்ள செழுமறையோரேங்கள்
தானமாய்விறகட்டுந் தலைச்சுமையிலேயுந்தந்தீர்
ஞானவேதியரருந்தர்ப்பை நான்கொய்வேனிதுபோதாது
வானுயர்புற்றின்மீது வளர்ந்திட்டசெழிப்பைப்பாரீர்.

வசனம்.

கேளுஞ்சுவாமிகளே நீங்கள்கொடுத்த இலையும் விறகும் எ தேஷ்டமாச்சுது எங்களையருக்கு தருப்பைபோதாது அதோபுற் றின்மேலே செழிப்பாய்த் தருப்பைவளர்ந்திருக்கின்றதே அதை ஒருக்ஷணப்போதிலே அறுத்துக்கொண்டுவருகிறேன் சற்றேநில் லுங்கள் சுவாமிகளே.

பிராமணப்பிள்ளைகள்-வசனம்.

அடாய் பிள்ளாய் இதுபோதுமென்னாலுங் கேட்கமாட்டோ மென்கிறாய் எங்களுக்கானால் போதும்போதாது இனி இங்கேயிருக் கிறவருடைய வுபத்திரவமுண்டு சீக்கிரமாய்வாடா.

தேவதாசன்-வசனம்.

இதோ க்ஷணத்திலே வருகிறேன் சுவாமி.

பொதுவிருத்தம்-இ-ம்-தோடி.

இத்தகைமறையோர்மைந்த ரியம்பவுமெதிரேநிற்கும்
புற்றின்மேலெதிரப்பைப் புல்லைக்கொய்தேவதாசன்
சித்துசெய்விஸ்வாமித்ரர் செய்கையால்விளைந்தசர்ப்பம்
கொத்தியேகடிக்கக்கூவிக் குலைந்துகீழ்வீழ்ந்தானன்றே.

வசனம்.

இந்தப்பிரகாரமாகக் காட்டுக்குவந்த தேவதாசன் வீட்டுக்கு வருகிறதருணத்தில் தருப்பையை அறுக்கப்போகையில் அங்கேவி ஸ்வாமித்திரர் மாய்கையினாலே வந்திருந்த சர்ப்பங்கடித்திடதேவ தாசன் பிராமணப்பிள்ளைகளைக்கூவி அழுகிறவிதங்காண்க.

தேவதாசன்-வசனம்.

அரிகரி அரிகரி ஐயையோ என்னுடன் கூடவந்த பிராமணப் பிள்ளைகளே ஓடிவாருங்கள்.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

ஏதுகாணும் அந்தப்பிள்ளை அழுகுறன் அடாய் சுப்பாய் கு ப்பாய் சேஷாய் நாணாய் எதென்று பார்ப்போம் வாருங்கள்.

தேவதாசன்-விருத்தம்-இ-ம்-முகாரி.

என்குலத்தெய்வம்போலு மென்னுடன்கூடவந்த
பொன்புரிநூல்விளங்கும் புநிதவந்தணரோகேளீர்
என்விதிமுடிந்ததிங்கே யிருந்ததோர்காளசர்ப்பம்
என்னுயிர்வாங்கத்தீண்டி பேறுதேவிஷமென்செய்வேன்.

வசனம்.

கேளுங்களெனக்குத்துணையாய்வந்தபிராமணப்பிள்ளைகளே எனக்கு இங்கேதானே விதிமுடிந்தது இந்தத்தருப்பை கொய்யவ ந்தவிடத்திலே ஒருகாளசர்ப்பமிருந்து தீண்டி விஷமேறுது என் னசெய்வேன் என்னசெய்வேன் சுவாமிகளே.

அசலாத்துப்பிள்ளைகள்-வசனம்.

ஐயையோ பசவைத்தூக்கி விடப்போய் கிணற்றிலே தள்ளி னாற்போலாச்சுதே இதற்கென்னசெய்வோம் அரகரா அரகரா.



தேவதாசன்-விருத்தம்-இ-ம்-கெண்டா.

கடித்தவாய்கடித்துமார்பிற் கதுமெனஅடைத்துக்கைகால்
ஒடித்ததுபோலேசோர்ந்தே னுயிர்நிலைகலங்குதையோ
வடித்தகண்ணீராளெந்தன்மாதாவுக்கிதைப்போய்ச்சொல்வீர்
பிடித்தேனீசன்பாதம் பிறவிநோய்தொலைந்துதையா

வசனம்.

அரிகரி கடித்தவாயிலே கடித்து விஷம் சரசரென்று யேறிமா ர்பிலே அடைக்கின்றது கைகால் சோருகின்றது பிராணன் கலங்கு கின்றது என்னைப் பிறப்பித்த ஈஸ்வரருடைய பாதாரவிந்தம்போ ய்ச் சேருகிறேன் இந்தச்சேதியை என்னைப்பெற்ற தாயாருக்குப் போய்ச் சொல்லுங்கள் சுவாமிகளே.

பிராமணப்பிள்ளைகள்- விருத்தம்-இ-ம்- ஆனந்தபைரவி.

எங்களைத்துணையாய்ப்பற்றி இந்தக்காட்டுக்குள்வந்தாய்
வங்கையோபாம்புக்குன்மேல் மலரயன்விதியோவப்பா
வங்கியவிஷத்துக்கேற்ற வகைமருந்தறியோம்நாங்கள்
எங்கேயென்மகனென்றக்கா லென்சொல்வோமுனதுதாய்க்
[கே

வசனம்.

அப்பா தேவதாசா இந்தப்பாம்புக்குன்மேல் ஏதாகிலும் வங் கையுண்டோ அல்லது பிர்ம்மதேவனுடைய விதிதானோ இதற்காக வா எங்களைத்துணையாகக்கொண்டு காட்டுக்குவந்தாய் இந்தவிஷத் துக்கேற்ற மருந்துகளு மறியோமே என்மகன் எங்கேயென்றுகே ட்டால் உன்தாய்க்கு என்னசொல்லுவோமப்பா.

சேஷையர்-வசனம்.

அடாய் அப்பா யேதடா இந்நேரமட்டுக்கும் சுவாமியை நி னைத்தமூசானே இப்போ சுவாசமிழுக்கிறதே அடா என்னடா அ தையுங்காணோமே அரகரா அரகரா.

அசலாத்துப்பிள்ளைகள்-தரு-இ-ம்-கெண்டா- தாளம்-ஆதி.

பார்த்திருக்கும்போதேபிராணன்பறந்துபோச்சுதேஅப்பா (தேவ)
தூர்த்தயமன்போலேபாம்புக் காத்திருந்ததோஅப்பா (தேவ)
பேயுமிரங்குமேநீபேசும்வார்த்தை கேட்டாலப்பா (தேவ)
மாயமாயவர்கள்செய்த வஞ்சகமோஐயோஅப்பா (தேவ)
முத்துமுத்தாய்வார்த்தைசொல்லும் முகமுங்கறுத்துதையா (தேவ)
சற்றுமசைவில்லாமல் சரீரமுமரத்துதையோ (தேவ)
உயிர்த்தோழனென்றுசொல்லி உடன்கூட்டிவந்தோமப்பா (தேவ)
வயிறெரியவுன்தாய்க்கிந்த வார்த்தையெப்படிசொல்வோம் (தேவ)

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எங்கிநின்றழுவதாலே யிவனினிபிழைப்பதுண்டோ
தாங்கியேயெடுத்துப்போகத் தகையிலையிரும்போச்சு
ஈங்கினிப்பொழுதுபோன விலைகொள்ளுமிருகங்கண்டால்
ஓங்கியேயிவன்றாய்க்கித்தை யுரைப்பதேதகுமம்வாரீர்.

வசனம்.

இனி நாம்கூடியழுவதினால் இவன் பிழைக்கப்போகிறதில்லை இவனை யெடுத்துக்கொண்டு போவோமென்றாலுங் காட்டிலே யிறந்தபிணத்தை வீட்டிலே கொண்டுபோகக்கூடாது ஆகையா லிந்தச்சேதியை இவன் தாய்க்குச் சொல்லுகிறதேகாரியம் போதுபோனால் இங்குள்ள மிருகங்கள் நம்மைவாயிலே போட்டுக்கொள்ளும் இந்தமட்டோடேசுமைகளையெடுத்துக்கொண்டு நடப்போம் வாருங்கள்.

சேஷையர்- வசனம்.

அடாய் சுப்பாய் நேக்கு வயிற்றைப் பத்தியெரிகிறது இவனைப்பெற்றதாயார் கேட்டால் எப்படி அழாள் ஆம் ஆம்நேக்குமப்படிதான் இனிநடக்கிறதுதானே ஆம்ஆம்.

பொது-விருத்தம்.

காட்டினிலிறந்துபோன காதலன்சேதியெல்லாந்
தோட்டியார்மறையோர்வந்து சொல்லுவதற்குமுன்னே
நீட்டமாய்ப்போனபாலன் நோவுமிலையேயென்று
வாட்டமாய்நினைந்துசந்த்ர மதிபிரலாபிக்கின்றாளே.

பொது- வசனம்.

இந்தப் பிரகாரமாகக் காட்டில் இறந்துபோன தேவதாசன் சமாச்சாரம் பிராமணப்பிள்ளைகள்வந்து சொல்லுதற்கு முன்னமே இன்னந் தன்பிள்ளைவந்து சேரவில்லையென்று சந்திரமதியம்மனானவள் பரதவிக்கின்றவிதங்காண்க.

சந்திரமதி-தரு-இ-ம்-செஞ்சுருட்டி- ரூபகதாளம்

இன்னம்வரக்காண்கிலே னென்னமாயம்.

என்கண்மணியையென் னருமைமகனை
இன்னம்வரக்காண்கிலேனென்ன மாயம்
சின்னவயதுள்ளசிறுகுழந்தை யிதாச்சே-அந்த
தெய்வத்துக்குமெங்கள்மேலேதயைதப்பிப்போச்சே(இன்)
வஞ்சகமுனியென்னமே நிலையாமோ-விதி
வசந்தானின்னம்வரவா மலையாமோ
நெஞ்சமுமொருவகையாய் மயங்கி
நெறிதள்ளாடுதே அறிவும்வாடுதே (இன்னம்)



பொழுதுபோய்வெகுநேரமாச்சென்ன பர்பம்-குடல்
புழுங்கிற்றுடிக்குதீதென்னவதி தாபம்
அழுதாலந்தப்பிராமணன்சகியா
னடிமைநாங்களானதினாலே (இன்னம்)
அம்மா அம்மாவென்றடிக்கடிமகன் வருவான்-எந்த
னகத்துயர்தீரமலர்வாய் முத்தந் தருவான்
இம்மைமறுமையானவிகபா
மிருபயன்களைத்தருமகன்றனை (இன்னம்)

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தோடி.

தகைபெறுமறையோனேவல் தாழ்வின்றிச்செய்யவேணும்
புகழ்தலமறையோர்வீட்டுப் புத்ரர்களுடனேபோன
மகனைநான்வரக்காணேனென் வயிறுதான்றுடிக்குதையோ
பகையுளதெய்வஞ்செய்யும் படர்வினையறிகிலேனே.

வசனம்.

என்னசெய்வேன் என்னசெய்வேன் அடிமைகொண்ட பிராமணன் வீட்டுவேலையுந்தவறுமற்செய்யவேணும் சிலதூரம்நடந்துபோய்ப்பார்ப்போமென்றாலுஞ் சமயமில்லை இத்தலத்துப் பிராமணப்பிள்ளைகளுடனேகூடக் காட்டுக்குப்போனமகன் இன்னம் வரக்காணோமே என்பகையாளியாகிய தெய்வம் என்ன பாடுபடுத்துமோ தெரியவாரதே - ஈஸ்வரா-ஈஸ்வரா.

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

மகனைநினைந்துசந்த்ரமதி யுருகிவழிபார்த்து
மிகமெலியுந்தருணமதில் விறகுகொண்டுவரப்போன
தகுமறையோர்புதல்வரெல்லாந் தமதுசுமைதனையெடுத்தே
இகலிருளில்வரக்கண்டே யெதிர்கேட்கத்தொடங்கினளே.

வசனம்.

இந்தப் பிரகாரமாகக் காட்டுக்குப்போனமகன் வரக்காணோமென்று வழிபார்த்திருக்குஞ் சந்த்ரமதியம்மனானவள் அஸ்தமித்தபின் வருகிற பிராமணப்பிள்ளைகளைக்கண்டு கேட்கிறவிதங்காண்க.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பொழுதுபோயிருட்டாமட்டும் பூசலேவிளையாட்டோதான்
பழுதிலாமக்களேயென் பாலன்தானெங்கேகாணேன்
தொழுதுகைகூப்பிச்சொன்ன ஸ்துதியையுமறந்துகாட்டில்
அழுதுளந்தயங்கவெங்கே யலையவிட்டீர்களப்பா.

வசனம்.

ஆ என் கண்மணியான மக்களா பொழுதுபோ யிருட்டுகிறம ட்டும் ஒருவருக்கொருவர் சண்டைசெய்கிறீர்களோ அல்லது விளையாட் டோ என்மகனெங்கே உங்களை நமஸ்காரஞ்செய்துகூட அனுப்பின தை மறந்துகாட்டிலேயெங்கே தவிக்கவிட்டீர்கள்சொல்லுங்கள் பிள் ளைகளே.

சேஷையர்-வசனம்.

அடாய் சுப்பாய் நீசொல்லும்பிள்ளாய்.

சுப்பாசாஸ்திரி-வசனம்.

அடாய் சேஷாய் நேக்குவயிற்றைப் பத்தியெரிகிறது நீதான்சொ ல்லும்பிள்ளாய்.

குப்பையர்-வசனம்.

அடாய் நாணும் நோக்கு தோஷமில்லை நீயாகிலுஞ்சொல்லடாய்.

நாணையர்-வசனம்.

அடாய் குப்பாய், அறுதலைத்தேவடியாள் பிள்ளாய் நேக்கானுல்கை யுங்காலுங் நடுங்கிறது நாமெல்லோரும் ஒரே முகூர்த்தத்திலே சொல் லறதும ஒட்டிறதுமாயிருக்கவேணும் - ஆம்-ஆம்-அதுவேசரி.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தேம்பியழுதாலென்ன செய்குவோமம்மாவுந்தன்
பூம்பசுமேனியான புதல்வனையழைத்துப்போனோம்
காம்பிலேவிறகுதர்ப்பை கட்டியோர்சுமையுந்தந்தோம்
பாம்பினுக்கிரையாய்மாண்டான் பார்த்தழுதேங்கிவந்தோம்.

வசனம்.

நாங்க ளென்னசெய்குவோமம்மா உன்மகனைக் காட்டுக்குக்கூட வே அழைத்துப்போனோம எங்களோப்பந்தமாய்ச் சுமையுங்கட்டிக் கொடுத்தோம் தருப்பைகொய்ய அவன் சுதாவிற்போய் பாம்புகடித்து இறந்துபோனனம்மா.

சந்திரமதிவிருத்தம்-இ-ம்-கெண்டா.

இறந்தையோமகனேபாம்பா லென்னையுந்தெருவில்விட்டு
மறந்தையோவெனக்குச்சொல்லு மனதிடவுறுதியெல்லாம்
பறந்தையோவென்னைப்பூமிக்கே பாரமாயிருக்கவைத்துத்
துறந்தையோதாய்மேலன்பு துடித்தழக்கைவிட்டாயோ.

வசனம்.

ஐயையோமகனே என்னை இந்தப்பூமிக்குப்பாரமாகவைத்துப்பா தேசிபோலத் தெருவிலேயவிட்டு எனக்குச்சொன்ன தைரியத்தை யும் மறந்துநீமாத்திரம் இறந்தையா அப்பா தேவதாசா.



அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

கால்கள்நொந்திடுதேயெங்கள் கழுத்தயர்ந்திடுதேயம்மா
நால்வரோடொத்தபடாய் நாங்களுமழைத்துப்போனோம்,
வேல்விழியாயுன்பிள்ளை விதியினாற்செத்தான்மண்ணின்
மேல்விழுந்தழுவதாலே மீண்டினிவருகுவானோ.

வசனம்.

கேளுமம்மா உன்பிள்ளைவிதியினாலே அனியாயமாய்ச் செத்துப் போனான் அவனை நீ நினைத்து மண்ணின்மேல்விழுந் தழுவதினாலேவ ருவானோ நாங்கள் பிராமணான் தலையின்மேல் சுமையிருக்கிறது கழுத்து கள் வலிக்கிறது போதும்போறது.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆநந்தபைரவி.

கூடியேநீங்களெந்தன் குழந்தையைத்தனியேவிட்டு
நாடியெவ்விடம்போனீர்கள் நலிந்தவன்தனித்தவிதெங்கே
தேடியேபாம்புவந்து தீண்டினவிடந்தானெங்கே
வாடியேநான்போய்க்காண வழியதுவுரைப்பீரப்பா.

வசனம்.

ஐயையோ என்மகன் உங்களுடனேகூட வந்தவனைத் தனிக்கும் படியாகவிட்டு நீங்களெங்கேபோனீர்கள் அவனைப் பாம்புகடித்தவிட மெங்கே அதற்குவழியெப்படி சற்றேதெரியச் சொல்லுங்களப்பா.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

புறப்படும்பொழுதில்தர்ப்பை போதாதென்றோடிப்புற்றில்
நிறைப்படுதர்ப்பைகொய்ய நினைத்துப்போய்மடிந்தானம்மா
மறப்படாவிசாலஆல மரமொன்றிவ்வழியிலுண்டு
குறிப்புடனதின்வடக்குக் குறுகினால்தெற்கேகாண்பாய்.

வசனம்.

ஆனாற்சொல்லுகிறோம் கேளுமம்மா இந்தவழியேநடந்தால் அ ங்கேநடுக்காட்டிலே ஒரு ஆலமரம் வழிக்கு இடதுயிருக்கப்பட்ட அ ந்தமரத்துக்குநேர் தெற்கே ஒரு புற்றுதெரிகிறது அதிலிருந்ததருப் பையைத் தான்கொய்யப்போய் பாம்புகடித் திறந்துபோனான் அங் கேதேடிப்பார்த்தாலிருப்பான் உன்பிள்ளை.

சேஷையர்-வசனம்.

அடாய்குப்பாய் நோக்குத்தெரிகிறது அந்த அடையாளம் அந்தம் மாளுக்குந் தெரியவேண்டாமா.

குப்பையர்-வசனம்.

நோக்குத் தெரிந்ததைத்தான் சொல்லிக்கொளுத்தேண்டாபோது போறது.

சந்திரமதி-வசனம்.

ஆராகிலுந் தெரிந்தவர்கள் சற்றே விவரமாய்த்தெரியச்சொல்லுங் களேப்பா.

அசலாத்துப்பிள்ளைகள்-விருத்தம்-இ-ம்-ஆநந்தபைரவி.

வழியிதுதானேரால மரமுண்டுவடக்கேபார்த்தால்
நழுவாமலதற்குத்தெற்கே நாடினல்புற்றொன்றுண்டு
செழுமையாய்தர்ப்பையிற்குஞ் சிறுஇடஞ்சுற்றிப்பார்த்தால்
எழுதியவிதியாற்பால னிறந்ததைக்காண்பாயம்மா.

வசனம்.

அம்மா நீ விசனப்படவேண்டாம் இந்தவழியேபோனால் அதோ அங்கே ஒரு ஆலவிருட்சமிருக்கிறது அதற்குவடக்கே கொஞ்சந்தூரம் போய் இதோ இப்படிப்பார்த்தால் தெற்கே ஒருபுற்றிருக்கிறது அதைச்சுற்றித் தர்ப்பையிருக்கிறது அவடத்தில்தான் செத்துக் கிடக்கிறானம்மா.

சுப்பாசாஸ்திரி-வசனம்.

அடாய் சேஷாய் அடாய் நாணாய் அடாகுப்பாய்- நோக்கும்போதுபோறது நடவுங்கள்-ஆம்-ஆம்.

சந்திரமதி-தரு-கண்ணி-இ-ம்-பைரவி-தாளம்-ஆதி.

மாறுமற்றவஞ்செய்து வயிற்றிலிடங்கொடுத்து
மகிழ்ச்சியாய்ப்பெற்றேனடா மகனே-மகனே-மகனே

ஆறுதேஇந்தத்துயரம் ஆராலினிமேற்தீரும்
ஐயோநானென்னசெய்வேன் மகனே-மகனே-மகனே

தேற்றுவாரில்லையையோ ஆற்றுவாரில்லையினி
தெய்வஞ்சதிசெய்ததே மகனே-மகனே-மகனே

தேற்றிக்கொண்டாலுமனந் தேறுமோபடுபாவி
தெய்வத்துக்கென்னசெய்தேன் மகனே-மகனே-மகனே

வயிறுதளரவுண்டால் வளராநேமகனென்று
வளர்த்தேனிதற்கோஅப்பா மகனே-மகனே-மகனே

பயனல்லேர்காண்பாரிந்தப் பாரினிற்பிள்ளைபெற்றோர்-நான்
பாம்புக்கிரைகொடுத்தேன் மகனே-மகனே-மகனே

தாயைமொழிபுண்டு தவஞ்செய்துபெற்றபாலன்
தாணிபலரர்க்குண்டோன்போல் மகனே-மகனே-மகனே



குறையென்னசெய்தேனையோ கொடும்பாவிபிர்மதேவன்
கோவிலிடியொணுதோ மகனே-மகனே-மகனே

வயிறுதுடிக்குதெந்தன் மணிக்குடல்பதறுதே
மதியுமயங்குதையோ மகனே-மகனே-மகனே

பயமில்லையென்றிருந்த பாவியென்னெண்ணமெல்லாம்
பாழாச்சேவிதியாலே மகனே-மகனே-மகனே

நீண்டவுலகையாள நீமணிமுடிசூட
நிலைக்குமென்றிருந்தேனே மகனே-மகனே-மகனே

மாண்டாயென்றுன்பேர்சொல்லிமறையோர்கள்வந்துரைக்கும்
வார்த்தைநான்கேட்டேனப்பா மகனே-மகனே-மகனே

கூவியழுதாலையர் கோபஞ்செய்வாரேஐயோ
குலைவதென்னெஞ்சமப்பா மகனே-மகனே-மகனே

பாவியவர்மனையாள் பழிபாவமெண்ணுவாளோ
பதைத்துப்புழுங்கிறேனே மகனே-மகனே-மகனே

உன்னுயிர்போனசேதி யுரைத்தவர்சொல்லுமுன்னே
உயிர்விட்டாலல்லோநான்றாய் மகனே-மகனே-மகனே

என்னுயிர்பெரிதல்ல விழுந்தாலும்லாபமென்ன
இதோநான்வருவேனடா மகனே-மகனே-மகனே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-பைரவி.

இவ்விதிவருமென்றெண்ண மெள்ளளவறிந்தாலுன்னை
ஒவ்விநானனுப்புவேனோ வுறுதியாய்வனத்துக்கப்பா
கவ்வியேவிஷவாய்ப்பாமபு கடித்துநீமாண்டாயென்னுங்
கவ்வையாஞ்சேதிகேட்கக காத்திருந்தேனேஐயா.

வசனம்.

ஐயையோ மகனே இந்தவிதியுனக்குவருமென்று எள்ளளவுமறியேன் அறிந்தாலுன்னைக் காட்டுக்கனுப்புவேனோ இந்தத் துன்பமான சேதிகேட்கவா தெருவிலேதானே காத்திருந்தேன் பாம்புகடித்தா இறந்தாய் மகனே.

காலகண்டகன்-வசனம்.

அந்நுடிசந்தி அடிசந்தி ஏதடி தெருவிலேதானே நிற்கிறாய் ஏதாகிலும் அசைவுண்டோ.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

தெருவினில்நிற்கத்தானே தெய்வமும்விதித்ததையா
பெருகவேபுத்ரசோகம பெண்ஜென்மமெடுத்தபாவி
திருநிறைவனத்திலெந்தன் தனையனோர்பாம்பின்வாய்க்கே
இரையென்மாண்டானென்று நான்செய்வேனென்செய்வேனே

வசனம்.

தேவரீர் கோபம்பண்ணுகிறீர் என் வயிற்றெரிச்சலைக் கேளும் உம்முடைய அடிமையாகிய என்னுடைய கண்மணியான மகன் லோகிதாசன் காட்டிலே சர்ப்பந்தீண்டி இறந்தானென்று அசலாத்துப்பிள்ளைகள் சொன்னார்கள் நான் என்ன செய்வேன் என்ன செய்வேன் சுவாமி.

காலகண்டகன்-வசனம்.

செத்தவன் வீட்டிலே கெட்டவளாடி நீ சந்தோஷமாய்ச் சொல்லுகிறாய் எனக்கு [illegible] உயிரிருந்து நோக்கே துக்கடி துக்கந்துறந்துக்கொண்டு வாராது.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

துக்கம்வாராதோ ஐயோ சுமந்தனே பத்துமாதம்
அக்கிரப்பாம்பால்மாள அவனைநானனுப்பினேனே
மிக்கவேநான்போய்ப்பாலன் மேல்விழுந்தழுதிடாமற்
பக்கென்றேயெரியுங்கும்பி பதைப்பதுதீராதையா.

வசனம்.

துக்கம் வாராமலிருக்குமா சுவாமி பத்துமாதஞ் சுமந்துபெற்றேனே பெற்றகும்பி பற்றியெரிகின்றதே நானே அநியாயமாய்க் காட்டுக்கனுப்பி சாகக்கொடுத்தேனே செத்தபிள்ளையின்மேல் விழுந்தழாமலென் துக்கந்தீருமா சுவாமி.

காலகண்டகன்- விருத்தம்-இ-ம்-மோகனம்.

எத்துமுன்மொழியைப்பார்த்தா லென்னையேமாத்திப்போட்டு
சித்துசெய்தோடிப்போகத் திருட்டடியெடுக்கின்றாயோ
மெத்தவும்பணத்தைக்கொட்டி விழலப்பனானேனெனக்கு
நித்திரைவருமோவுன்னை நிமிஷம்நான்விடுவதுண்டோ.

வசனம்.

அந்நாடி சந்தி அடிசந்தி நீ எத்தனாய்ப்பேசுகிற சொல்லையும் நீயெடுத்த திருட்டடியையும் நீ பண்ணுகிற சித்தையும் பார்த்தால் நீயோடிப்போக நினைக்கும் எத்தனம்போலக் காணுகிறது விருதாவிலே என் கையிலிருந்த காசைக்கொட்டிக்கொடுத்து நான் விழலப்பனானேன் அதுதான்கண்டது அதைவிட்டுக்கொண்டால் நேக்கு நித்திரைவருமா பயலை அனுப்பிமோசம்போனேனே இனி உன்னையும் விடுவேனோ.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-முகாரி.

பணத்தினாலடிமையாக படைத்தீரதுவுமெய்தான்
கணத்தினிற்போயச்சக் காட்டிடமெல்லாந்தேடிக்



குணத்தவனுடலைச்செய் கொடியவெவ்வரவால்மாண்ட
பிணத்தைக்கண்டடக்கஞ்செய்து பிசகாமல்வருவேன்சுவாமி.

வசனம்.

தேவரீர் பணத்தைக்கொடுத்து அடிமையாகப் படைத்தாலும்பெற்றபிள்ளை செத்தானென்று கேட்டால் பெற்றவயிறு பற்றியெரிந்து கொதிக்காதா காட்டிலே திக்கில்லாமற் கிடக்கிற பிணத்தைக்கண்டு அடக்கஞ்செய்து உடனேவந்து விடுகிறேன் சத்தியந்தப்புவேனோ சுவாமி.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

செத்தவன்கூத்தைநீபோய்த் திருப்பிப்பார்த்தென்னசெய்வாய்
சத்தியமாய்வருவேனென்றாய்த் தவறினாலென்னசெய்வேன்
சித்திருப்பிதுவோபையல் செத்ததுபொய்யோமெய்யோ
மெத்தவுமலட்டவேண்டாம் விடிந்தபின்பார்ப்போம்போடி.

வசனம்.

அந்நாடி சந்தி செத்தவன்கூத்து கிடக்கிறதாலென்ன மேற்கிருந்தாலென்ன நீபோய்த்திருப்பிப்பார்த்தென்னசெய்கிறது சத்தியமாய்வருவேனென்று சொல்லுகிறாய் வராவிட்டாலென்னசெய்கிறது இந்தச்சித்திரிப்புத்திரியாளையெல்லாம் நானறிவேன் நேக்குநித்திரைவாராது நம்மையலட்டினாற் கோபம்வரும் எல்லாம்போது விடிந்தால் பார்ப்போய்போடிபோ.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

தெய்வத்துக்கடுத்திடாது திருவுளம்பொறுத்திடாது
வையுமில்வேளைக்கும்பி வகிந்துதான்கொதிக்குதையா
மெய்யுனாபிசகமாட்டேன் விடியுமுன்வருவேனுன்முன்
செய்தவப்பாலன்மாண்டசேதிகேட்டிருக்கின்றேனே.

வசனம்.

ஐயையோ நீர்சொல்லுகிறவார்த்தை தெய்வத்துக்கடுக்குமா திருவுளந்தான் பொறுக்குமா உனக்கு நானுஞ் சத்தியந்தப்பமாட்டேன் பொழுதுவிடியுமுன்னே வந்துசேருகிறேன் பெற்றவயிறுகொதிக்கின்றது தடைசொல்லாமல் உத்தரவுகொடும் சுவாமி.

காலகண்டகன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

பூனையும்வீங்கல்தொட்டாற் போய்விடும்பிராணன்செத்தால்
ஆனையாம்பாவமென்பா ரதுபோலவந்துசேர்ந்தாய்
நீனல்லசமர்த்திபோபோ நேக்குள்ளவேலையெல்லாஞ்
சுணக்கமில்லாமற்செய்து கொப்பெனவிடிமுன்வாராய்.

வசனம்.

ஆஹாஹா நேர்த்தியாயிருக்கின்றது நீசொன்னவார்த்தை ஒருவீங்கப்பூனையானது தொட்டாலும்போய்விடும் செத்தாலுந்தோஷம் அதுபோலநேக்குநேரிட்டாய் இருக்கட்டும் சட்டமாய் ஆத்திலுள்ளவேலையெல்லாஞ் செய்துபோட்டு பொழுதுவிடியுமுன்னமே ஆத்துக்கு வரவேணும் அடிசந்தி வீதிமுத்தமெல்லாம் பெருக்கியெடுத்தையா.

சந்திரமதி-கண்ணி-இ-ம்-பைரவி-தாளம்-ஆதி.

பெற்றவயிறெரியப் புத்ரசோபத்தாலே
  முத்தம்பெருக்கிவைத்தேன் மறையோனே
செத்தமகனைப்போய்க்காணத் தத்தளித்துத்தடுமாறி
  முத்தம்பெருக்கிவைத்தேன் மறையோனே

காலகண்டகன்-வசனம்.

ஆமடிசந்தி விசித்திரம் விசித்திரமாய்ப் பேசுகிறாய் கோலமிட்டையாடி.

சந்திரமதி-தரு-கண்ணி.

பாலன்செத்தசேதிகேட்டுக் காலயர்ந்துமனம்வாடி
  கோலமிட்டுவைத்தேனையா மறையோனே
ஓலமிட்டழுதாலுமக்குச் சாலவுங்கோபமாமென்று
  கோலமிட்டுவைத்தேனையா மறையோனே

காலகண்டகன்-வசனம்.

அந்நுடிசந்தி நீ முத்தம்பெருக்கினதிலேயுங் கோலமிட்டதிலேயும்பார்த்தால் திருவிளக்கு ஏத்திவைக்க மறந்தாற்போலக்காணுறது.

சந்திரமதி-தரு-கண்ணி.

திருவிளக்கையேற்றாவிட்டால் தீவினையொழியாதென்றே
  திருவிளக்கையேற்றிவைத்தேன் மறையோனே
ஒருவிளக்கோகோடிவிளக் கொத்தமகன்மாண்டானென்றே
  திருவிளக்கையேற்றிவைத்தேன் மறையோனே

காலகண்டகன்-வசனம்.

அந்நுடிசந்தி நேக்கு நம்மிட ஆம்பிடையாளுக்கும் பஞ்சணைமெத்தையெல்லாம் உதறி சப்ரமஞ்சம் அலங்காரம் பண்ணிவைத்தாயா.



நெஞ்சுருகி அறிவழிய நிலைகுலைந்தேயழுதழுது
  பஞ்சணையலங்கரித்தேன் மறையோனே
பஞ்சையைப்போலிறந்தமைந்தன்பாசத்தாலேபரதவித்து
  பஞ்சணையலங்கரித்தேன் மறையோனே

காலகண்டகன்-வசனம்.

அந்நுடிசந்தி நேக்குவேலையிடவேணுமானால் நேக்குமனதுவாசமவிருக்கின்றது தோக்குத்துக்கந் துறத்துக்கொண்டு வாரதுபொழுதுவிடியுமுன்னே நீவந்துசேரவேணும் போடிபோ.

சந்திரமதி-வசனம்.

இம்மாத்திரமுத்தரவு கொடுத்தீரோ அதுபோதும்சுவாமி.

பொது விருத்தம்-இ-ம்-தோடி.

விடியுமுன்வாபோவென்ற வேதியன்சொல்லைக்கேட்டு
கடுகிநடந்துகாசிக் கடிநகர்முழுதுந்தாண்டி
அடிதெரியாமலெங்கி யனையிருட்பொழுதிற்காட்டிற் (கொ
கொடியெனத்துவண்டுசென்று குலைந்துநொந் துருகின்றாள்

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதியம்மனவள் காலகண்டகவேதியரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு காசிப்பட்டணமெல்லாந்தாண்டி காட்டிலேவந்து இருட்டிலே வழிதெரியாமல்பரதவிக்கிறவிதங்காண்க.

சந்திரமதி-புலம்பல்-தரு-இ-ம்-அசாவேரி-தாளம்-ஆதி.

ஐயையோபழிகாரதெய்வமேயெனையிந்த
  அவதிப்படச்செய்தாயோ தெய்வமே
வையகம்புகழுமன்னர் மன்னனரிச்சந்திரன்பெற்ற
  மகனைப்பாம்புகடிக்க வயிறெரிந்துநான்றுடிக்க
  வருமோவருமோ கொடுமைசெய்தேனோ
  தருமம்பொதுவோ நெறிபிழைத்தானோ (ஐயை)

கொடுமைசெய்தவர்களில்நான்றானோ முதற்பாதம்
  குருடோதெய்வத்துக்குங்கண்ணிலையோஎன்ன பேதம்
தொடுவழக்கிட்டவிசுவாமித்திரர் செய்விகாதம்
  தொலைந்ததென்றிருந்தேனேதென்ன விநோதம்

கரிவாய்ப்புலிகரடிகாளிகூளி — சிங்கம்
கருவிநரிநாயோரிவாதடுங்குதென் — னங்கம்
சுனைசேர்நிலையொன்றறியே — னுருமா
முனைசேர்வதுவுமுன்னருளோவரகா — (ஐயை

கொள்ளிவாய்ப்பேயலைந்துழலுகோவென்று — கூவிக்
குலைநடுநடுங்கவேசிறுத்தயெதிர் — தாவி
அள்ளிமணலைத்தூவியதட்டுதோர்பேயை — யேவி
அடிதெரியாமல்வழியறிவேனோநான் — பாவி
மெள்ளநடப்போமென்றாற்பொழுதுவிடிந்துபோமே
விஷத்தாவிறந்தாகனிருப்பிடங்கா — ணேமே
விதியோபழவினையிதுவோ — சரிசரி
சதியோவயிறுசெய்தவமே — அரிகரி (ஐயை

எங்கெங்குங்கறுகறுத்திருக்குதேயிந்தக் — காடு
இதுவோஆலமர மிதுவோபுற்றின் — மேடு
தங்குமாலமரத்தைக் காணுமற்றடு — மாறி
தமியேன்றவிப்பதிது தானென்னகதி — மீறி
இக்கேதானேயிராவாச்சுதே — யந்த
இடத்தைக்காணுமட்டேயிருக்குமோபிராண — னிந்த
இடர்தான்பெருலைவது நிசமோ — நிசமோ
இடமாய்மனநிலைப்படவு — மென்வசமோ (ஐயை

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா-

எங்களுக்கென்றேசாலமிசைந்ததோர்விதிவசத்தால்
இங்கொருமாமுண்டென்றாரதிலொருபுற்றுண்டென்றார்
அங்கவர்சொல்லிப்போன வடையாளமொன்றுங்காணேன்
சங்கடந்தீர்க்கொணாதோ தயாபராவிஸ்வநாதா

வசனம்.

ஐயையோ காசிவிஸ்வநாதா அடியாள்படுகிற சங்கடவேதனையைத் தீர்க்கலாகாதா தயாபரமூர்த்தி அந்தப்பிராமணப்பிள்ளைகள் சொன்ன ஆலமரத்தையுங்காணேம் புற்றையுங்காணேம் ஓரடையாளமுங்காணப்படவில்லையே யென்னசெய்வேன்என்னசெய்வேன்

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-நவரோஸ்-தாளம்-திரிபுடை

என்னைப்போல்பெண்சென்மமெடுத்தவர்களுண்டோ
ஈதென்னகாரணந் — தெய்வமே



இன்னமுமென்னபாடுபடுக்குமோ — தெய்வமே
வழியுங்காணேனென்மனமுந்தயங்குதே — தெய்வமே
பழிபாவஞ்செய்திந்தப் பாரிற்பிறந்தேனோ — தெய்வமே
காலுமயர்ந்தென்கைகளுஞ்சோருதே — தெய்வமே
கால்வைக்குமிடமெல்லாம் கனமுள்ளாயிருக்குதே — தெய்வமே
தடவிவழிநடக்கத் தடமொன்றுங்காணேனே — தெய்வமே
அடரும்இருட்டிற்பொல்லா அடவிக்குளானேனே — தெய்வமே
பாழும்நரிகளென்னைப் பற்றிப்பிடுங்காதோ — தெய்வமே
குழும்புலிகளெனைத் துடுக்காய்க் கொன்றுபோடாதோ — தெய்வமே
சாரைக்குறைமுள்ளின் காடாயிருக்குதே — தெய்வமே
தூரப்பார்த்தால்நல்ல வழிபோலுங்காணுதே — தெய்வமே
கிட்டநடந்தால்வழி தட்டிப்போவதென்ன — தெய்வமே
கட்டிப்பிடிப்பதுபோற்பேய்கள்பயங்காட்டுதே — தெய்வமே
ஆசைக்கரும்பாமென்னப்பனைக்காணேனே — தெய்வமே
பாசமாவளர்த்தவென்பாலனைக்காணேனே — தெய்வமே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

வழிபிணுக்கருகேயால மாமுண்டுவடக்கேயென்றுஞ்
செழுமையாய்ப்புற்றொன்றங்கேதென்கினிலிருக்குமென்றார்
வழியதுபிசகினேனோ மாயமோநான்முன்செய்த
பழியிதுதானோவென்ன பாவமோவதனைக்காணேன்

வசனம்.

ஐயையோ தெய்வமே இது என்னபாவம் அந்தப்பிராமணப்பிள்ளைகள் சொன்னது இந்த வழியேபோனால் வடக்கேயொரு ஆலமரமுண்டென்றும் அதற்குத்தெற்கே புற்றிருக்குதென்றும் அங்கேமகனைக்காண்பாயென்றும் சொன்னார்களே அந்தவழிதான் தப்பிப்போச்சுதோ அவைகளைக்காணாமல் தவிக்கிறேனீஸ்வராஈஸ்வரா

சந்திரமதி-தரு-இ-ம்-கண்ணிகள்-காம்போதி-ஆதிதாளம்

பெருந்தாலைகளாக விருக்கிறீர்களேநான்
பெற்றமகனைக்கண்டீர் — காணீர்களா

வருத்தமறியீர்களோகொடும்பாவிபுலிகளா
　　மகனைக்காட்டில்நீங்கள் 　　　　காணீர்களா

அருமையாய்நான்பெற்ற மகனிறந்தானேயிந்த-
　　அடவிநரிகாள்நீங்கள் 　　　　காணீர்களா

ஒருமையாய்ப்பிள்ளைகுட்டியுடன்வாழுமான்களே
　　புத்திரமகனைக்கண்ணுற் 　　　　காணீர்களா

ஆடுமயில்காள்இந்த அடவிதனிலிறந்த
　　ஆசைமகனைக்கண்ணுற் 　　　　காணீர்களா

ஓடுங்கரடிகளே யுங்களைக்கும்பிடுகிறேன்
　　ஓசோஎன்மகனைக்கண்ணுற் 　　　　காணீர்களா

கூவுங்குயிலினங்காளன்னங்காள்நீங்களெந்தன்
　　குழந்தைபிறந்திடத்தைக் 　　　　காணீர்களா

பாவிநான்சுமந்துபெற்ற பாலன்றன்னுடல்தனைப்
　　பறவைகாள்நீங்கள்கண்ணுற் 　　　　காணீர்களா

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

சந்திரமதியிவ்வாறு தள்ளாடிக்கலங்கியேங்கி
அந்தவல்லிருளிற்காட்டி லலைந்தலைந்துளம்வெதும்பி
சிந்தைநொந்தலையும்போது சிறுவன்றன்காலிற்றட்ட
மைந்தனென்றறிந்துமேலே மறுகிவீழ்ந்தழுகின்றாளே

வசனம்.

இந்தப் பிரகாரம் சந்திரமதி யம்மனவள் அந்தஇருட்டிலே காடெல்லாந் தேடி நானாவித சங்கடப்பட்டுக் காலினாலே வழிதடவி வரும்போது காலிலே தட்டுப்பட்ட மகனுடைய வுடலைக்கண்டு தன்மகனென் றறிந்து மேல்விழுந்து அழுகிறவிதங்காண்க.

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-செண்டா-ஆதிதாளம்

மகனே-மகனே-மகனே-மகனே-மகனே

சகசீரமாச்சோ அப்பா துணையேயெந்தன் துணையே-யென்னைச்
　　சழலவிட்டேயிந்தப்புழுதியில்விழப்பட்டாய் 　　　　மகனே

பாம்புக்கோபால்கொடுத்து வளர்த்தேனுனே-இந்தப்
　　பழிபாவங்காணவோவுடம்பெடுத்தேன்

வெம்புக்காரவிஸ்வாமித்திரன் வினையச்செய்திட்டமாயம்-விடுமோ
　　விடுமோஅடடா நான்பெற்ற 　　　　மகனே

பத்துமாதஞ்சுமந்துபெற்றிட்ட 　　　　லாபம்
　　பலித்ததோ ஐயோநான்செய்துவைத்த 　　　　பாவம்
செத்தபினுன்முகங் காணவும்வைத்ததே 　　　　தீமை
　　தீமையிதுவோநான்பெற்ற 　　　　(மகனே)

உன்னைக்கடித்த வதற்குன்மேலென்ன 　　　　வெம்பு
　　உன்னைப்போலென்னையுங்கடியாதோ அந்தப் பாம்பு
என்னமாய்த்துணிந்திருப்பே னெப்படியுயிர்தரிப்பேன்
　　இதுவோஇதுவோகடவுளே நான்பெற்ற 　　　　(மகனே)

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

வயிற்றிடமாகவுன்னை வைத்தொருபத்துமாதம்
பயன்பெறலாமென் றெண்ணிப்பரிவுடன்பெற்றுப்பின்னர்
இயல்புடன்வளர்த்துப் போற்றியீயெறும்புறுமற்காத்தேன்
கயநரிபுலிகள்சூழுங் காட்டில்வாழ்பாம்புக்கோதான்.

வசனம்.

ஆ என்மகனே ஆ என்கண்ணின்மணியே பத்துமாதஞ்சுமந்துபெற்றேனே அந்தப்பாவமாநாளொருமேனியும் பொழுதொருவிதமாய்வளர்த்தேனே அந்ததோஷமாஉன்னைஇந்தக்காட்டிலேபாம்பக்கிரையாகக்கொடுத்தேன் அப்பாமகனே.

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பாம்புக்கோவுன்னை இரைகொடுத்திடவளர்த்தேன்-படு
　　பாவிஎன்னைப்போலாரினி இந்தப்பாரினில் 　　　　மகனே

தேம்பித்தேம்பியழுதுபதைத்துத் திகைத்திட்டாயோ-மனந்
　　திடுக்கிட்டலறியோடி விழுந்துசெத்தாயோ 　　　　மகனே

படம்விரித்தந்தப்பாவிபாம்புசீறிக்கடித்ததோ-மார்பிற்
　　படுக்கின்றேவிஷமடைத்துப்பிராணன்பறந்ததோ மகனே

தொடர்ந்துவந்தத்தோழருன்னைப் புரட்டிப்பார்த்தாரோ-ஆவி
　　சேர்ந்துபோதமாச்சு தென்றுசொன்னாரோ 　　　　மகனே

பஞ்சணைமிசைமலர்கள் தூவிப் பள்ளிகொள்வாயே-வெய்ய
　　பருக்காங்கல்லுகள்மீதிலிங்குபடுத்தாயோ 　　　　மகனே

மஞ்சத்தில்நித்திரைவாராதென்று பொன்னூஞ்சலாடுவாய்-இப்ப
　　மஞ்சம்புல்விளைப் புழுதியில்நித்திரைவந்ததோ 　　　　மகனே

குத்துவிளக்கெரிந்தாலும்கண்கள்கூசுதென்பாயே-இங்கே
கொள்ளிவாய்ப்பேய்கள் வெளிச்சத்திற்கண்கள் குளிர்ந்ததோ
(மகனே

சத்தியாயிரந்தாசகள்சூழ்ந்தாலும் போதாதென்பாயே-இந்தத்
துஷ்டமிருகங்கள்சூழ்ந்துகூவவுந்துணிந்தாயோ மகனே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-முகாரி.

அம்மாவென்றழைக்கும்வார்த்தை அசந்துநீமறந்திட்டாயோ
விம்மியேபால்சுரந்து வேதனைசெய்யுதப்பா
தம்மைமீட்டிடவேமன்னன் நாடிவந்துன்னைக்கேட்டால்
வெம்மைசேர்பாம்பால்மாண்ட விதஞ்சொன்னாலுயிர்வைப்பாரோ

வசனம்.

ஆ என்றுசைக்கரும்பான என்மகனே இனியாரென்னை அம்மாவென்றழைப்பார்கள் முலைப்பால்சுரந்து வேதனைசெய்யுதேயா இன்னமாகிலும் எழுந்திரடா அப்பா உன்தகப்பனார் ஒருவேளை மீட்டுக்கொள்ளும்படியாகவந்து என்மகனெங்கேயென்றுகேட்டால் பாம்புகடித்து இறந்தானென்று சொல்லவா அப்பா சொன்னால் பிராணனைவைத்துக்கொண் டிருப்பாரா என்னசெய்வேன் என்ன செய்வேன் மகனே.

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

தானேபழிகாரி-எந்தன்-நாயகமேயென்ன-மாயமிதார்செய்
யுபாயமென்றுவிதமாயவினோதம்
ஏனோஇதுநேரம்-நானெண்ணிய வெண்ணமும்பண்ணிய புண்யமும்
மண்ணிலமுந்தியிவ்வண்ணமதாமோ
விதியேதலைவிதியே-இந்த-மோகினிமேல்வரு மாதரென்போலொரு
பாதகராரிவினைகுசறியேனிது
சதியோவெவர்செய்சதியோ-தெய்வந்தானில்லையோஉண்மைதானில்லை
தானில்லையோதர்மந்தானில்லையோகர்மம் (யோவண்மை
எமக்கென்றேதிரோச்சே-பூமி-இழந்தேனேபதியிழந்தேனேநிதி
இழந்தேனேயுனைபிழந்தேனேயெனைத்
தனித்தேயழவைத்தாய்-சொல்லா-சற்பனையோவெவர்கற்பனைசெய்
உற்பனமோஇதுசொற்பனமானது (தவர்
மகனேயெந்தன்மகனே-என்ன-வாறிதுசீராவாலுயிர்போனது
கூறவும்வேறிலைகாரணமோவிது



தகுமோவிதுதகுமோ-பரி-தாபமென்றாலே பாவி பிரமாவெனை
சோபமிகுந்தழவோபுவிமேல்வைத்ததோஷமென்னதோஷம்

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-நாதநாமக்கிரியை

விதிவசமெனவோவிஸ்வாமித்திரன்செய்வினையென்பேனோ
மதிமோசமெனவேதெய்வ வஞ்சனைதானென்பேனோ
மதிமுகமகனைப்பார்த்தேன் வயறெரிந்தழுதத்தாலே
இதிலொருபயன்றானுண்டோவெரிமூட்டும்வகைசெய்வேனே

வசனம்.

ஆகொடுமைசெய்தாயா தெய்வமே இந்த ஆகோரம் விதிவசமா அந்த விஸ்வாமித்திருடைய சூதா தெய்வவஞ்சனையா அல்லது மதிமோசமா அப்பாமகனே இனிநானுனைப்பார்த்துக்கொண்டழுதத்தினாலே தீருமா இருக்கட்டும் சுடலைக்கரையிலே யாகிலும் கொண்டுபோய் பெற்றகடன்தீரத் தகனஞ்செய்கிறேன் வாடாஎன் கண்மணியே.

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-அசாவேரி-ஆதிதாளம்

என்னருமைமகனே-மகனே-அப்பா என்னருங்கண்மணியே
உன்னையு மிழந்தேனே-மகனே-மகனே-நான்
உள்ளம்நொந்து குழைந்தேனே

பெற்றவயிறெரிந்து குழையாதோ-மகனே-மகனே-நான்
பேசுவதுன்காதில் நுழையாதோ

சுற்றுமலையுங்காடு முறவாச்சோ-மகனே-மகனே யுன்னைச்
சூழநாய்நரிகளும் வரலாச்சோ

யாருமற்றபாவிநா னானேனே-மகனே-மகனே-ஒரு
ஆண்துணைக்கும்வழியில்லாமற்போனேனே

திருமோநான்செய்தபாவம் உன்னாலே மகனே-மகனே-புண்யம்
சித்திக்குமென்பாரல்லோ பின்னாலே

என்னுந்தண்ணீருமெனக் கிறைப்பாயே-மகனே-மகனே-எங்க
ளிருதயமகிழவே நிறைப்பாயே

கொள்ளியெனக்கிடாமல் நடந்தாயே-மகனே-மகனே-நான்
கொள்ளியுனக்குவைக்க தொடர்ந்தாயே

அள்ளிவாய்க்கரிசிநீ யிடுவாயே-மகனே-மகனே-என்னை
அம்மாவென்றழுதுகூப் பிடுவாயே

கர்மஞ்செய்வாயென்றிருந்தேன் மாண்டாயே-மகனே-மகனே-எ
கர்மஞ்செய்தேனென்றேயென்னைவேண்டாயே (ன்னை
பால்குடிக்கமடியில்வைத்து சுமந்தேனே-மகனே-மகனே-உன்னை.
பாடைகட்டிநானெடுக்க அமைந்தேனே
காலிவிட்டகன்றைபொஞ்ச விளையாடி.-மகனே-மகனே-வருங்
காட்சியுமறந்துபோச்சோ பறந்தோடி
இஷ்டிசுற்றிநான்வளர்த்த பிரயாசம்-மகனே-மகனே-எங்கே
சிதறவிட்டுநீபறந்தா யென்னமோசம்
சிஷ்டிசெய்தபிர்மாவொரு படுபாவி-மகனே-மகனே-பெண்
ஜென்மமெனக்களித்தான் பழிபாவி
எனமுதாயம்மாவென்று கேட்பாரார்-மகனே-மகனே-பெண்
இடுக்கந்தீர்த்துத்தூக்க மீட்பாரார்
ஆனமறையோனல்லாம லவன்தேவி-மகனே-மகனே-விடிந்தா
லாக்கினைசெய்வாளேயந்தப் படுபாவி

சந்திரமதி-வசனம்.

ஆ படுபாவிதெய்வமே பிள்ளையின்கையினாலே பேறடையலா மென்றிருந்தேனே பிள்ளைக்கு நானுவுரிமைசெய்யவந்தது இங்கே யிருடா என்கண்ணின்மணியே கட்டைமுட்டைகள்சேர்க்கட்டு மப்பா.

சந்திரமதி-தரு-கண்ணிகள்-இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

வெட்டிவேர்மயில்விசிறிமலரணைமீது
மெள்ளநித்திரைகொள்ளவைத்தாயுள்ளமுந்தளருதென்பாய்
(மகனே-மகனே
விதவிதமாய்மலரொடுத்து மிருதுவாய்பஞ்சணைசேர்த்து (கனே
மெத்தென்றுவைத்தேனதில்நித்திரைகொள்ளடாகட்டி - மகனே-ம
பட்டுவர்க்கவஸ்திரங்கள்பட்டவுடன்சகியாமலே
பக்குவமெனக்கிதுசகிக்கவசமல்லவேன்பாய்-மகனே-மகனே
பட்டெரிந்துவிட்டகட்டை முட்டைகளடுக்கிவைத்தேன்
பத்திரமாய்சற்றசைந்துநித்திரைகொள்ளடாகட்டி-மகனே-மகனே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

கண்டதேதூர்கோவிலெல்லாங் கையெடுத்ததைக்கும்பிட்டு
உண்டென்றுகெர்ப்பமான வுடன்வெகுதானஞ்செய்தே
அண்டரும்புகழப்பெற்ற ஏருமையாய்வளர்த்துன்னாலே
கண்டதிப்பலமென்றோசெய் கர்மம்நான்செய்தேனப்பா



வசனம்.

ஆ என்மணியானமகனே கண்ட கண்ட கோவில்களுக்கெல்லாங் கையெடுத்துக்கும்பிட்டு நீ வயிற்றிலே தரித்தமாத்திரத்திலே அநேகதானதருமங்கள்செய்து பெற்றுவளர்த்து நீ எனக்குக் கொள்ளிவைப்பாயென்றல்லோஇருந்தேன் உனக்கு நானேகொள்ளியும்வைத்தேனப்பா.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

சுடுகாடுதேடியேதன் தோளின்மேல்மகனையேந்தித்
தடுமாறிச்சுடலைகண்ட சந்திரமதிதானங்கே
விடுபாடாம்விறகுசேர்த்து மெள்ளவேதணலைமூட்டிச்[னே
சுடுமதையுதைத்துத்தள்ளித் தோட்டிமன்னவன் சொல்வா

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதியம்மனானவள் அந்தச்சுடுகாட்டிலேபிணஞ்சுட்டு மீந்திருந்தவிறகுக ளெல்லாஞ்சேர்த்து தணலைமூட்டிப்பிள்ளையைத் தகனஞ்செய்யும்போது அனிச்சத்தோட்டியாகிய இராஜனானவன் பிள்ளைவேறு காஷ்டம் வேறாகவுதைத்துத் தள்ளிச் சந்திரமதியைப்பார்த்துச்சொல்லுகிற விதங்காண்க.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

இரவினில்நடுச்சாமத்தி லிங்குள்ளசுடலைதன்னில்
திருடிபோல்வந்தநீயார் செத்ததோர்பிணமிதேது
மருவுமென்காவலுக்குள் மறைந்துநீசுடுவதேது
திருடிநீசெய்ததாலே தீயினிமூட்டவொட்டேன்.

வசனம்.

ஆடி இந்தநடுநேரத்திலே என்காவலுக்குள்ளேஇந்தச்சுடுகாட்டில் என்னுத்தரவில்லாமற்பிணஞ்சுடுவதேது நீயார்இந்தப்பிணமேது இத்தனை நீலித்தனமாக நீ எனக்கறிக்கை பண்ணாமல் காஷ்டமூட்டினதால் இதோ இந்தக்காஷ்டத்தையும் பிள்ளையையும் உதைத்துத்தள்ளிவிட்டேன் நீயிங்கே சுடக்கூடாது அப்புறம்நட.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

காவல்நீயிருப்பாயென்றுங் காட்டிலேபிறந்தபிள்ளை
சாவுனக்கறிவச்செய்து சபந்தனைச்சுடுவதெல்லாந்

௧௪

தாவிச்சொல்வாருண்டானுற் றனியநான்வருகுவேனே
பாவிநானேழையிந்தப் பாலனைச்சுடுவாயையா.

வசனம்.

கேளையா வீரவாகுவே காட்டிவிறந்தபிள்ளையைச் சுடுகாட்டிலேகொண்டுவந்து கொளுத்தவேண்டுமானுல் நீ இங்கே காவலிருக்கிறதென்றும் உனக்கறியச்செய்து கொளுத்துகிறதென்றுந் தெரிந்துசெய்ய வொருமனுஷர் திக்குண்டானுல் இந்த அர்த்தராத்திரியிலே நானேபிணத்தைச்சுமந்துவந்துசுடுவேனே நான் ஆருமற்ற பாவியாகையால் இந்தக்குழந்தையைத் தகனஞ்செய்யச்செலவுகொடுமையா.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஆருமிலாதபாவி யானேனென்றுரைத்ததாலே
நீரமாய்நீசான்செய்த தீமையைப்பொறுத்தேன்கண்டாய்
வாரமாயரிசித்துண்டு வழங்குகாற்பணந்தானுண்டு
பாரமோவிதைக்கொடுத்துன் பாலனைக்கொளுத்துவாயே.

வசனம்.

ஆனுல் நானொன்றுசொல்லுகிறேன்கேள் நீ திக்கில்லாதவளையென்றுசொன்னதால் நீ என்னிடவுத்தரவில்லாமற் காஷ்டமூட்டின குற்றத்தைப்பொறுத்தேன் நமக்குச்சேரவேண்டிய வாய்க்கரிசி முழத்துண்டுகாற்பணம் இதுகளைக்கொடுத்துவிட்டு உன்மகனைச்சுகமாய்த் தகனஞ்செய்துகொள்.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தோடி.

வினையினுற்பாம்புதீண்டி விஷத்தினுலிறந்தபிள்ளை
தனையினிச்சுடவோர்துண்டு சமையும்வாய்க்கரிசிமேலும்
புனைதருபணங்காலென்றும் புகன்றுனெங்கேபோவேன்
மனதுநீயிரங்கவேணு மலரடிபோற்றிஐயா.

வசனம்.

கேளுமையா தோட்டியாரே நான்செய்தபாவத்தினுலே பாம்புகடித்து இறந்தபிள்ளையைத் தகனம்பண்ணவேணுமென்றால் வாய்க்கரிசியும் முழத்துண்டுங் காற்பணமுங்கேட்கிறீர் எனக்குக்கொடுக்கவகையில்லையே நானெப்படிகொடுப்பேன் எப்படியாவது தயவுசெய்து தகனஞ்செய்யச் செலவுகொடுமையா.



அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

அடிமுடித்தழுதுநீதான் சொல்வதுமெய்யானுலும்
அடிமைநானெனக்கோராண்டை யவர்க்குள்ளகாசதுண்டும்
தடையின்றிக்கொடுக்கவேணுந் தருமத்துக்கரிசிவிட்டேன்
மிடியனைமிடியன்பார்த்து மெலிவதாலாவதுண்டோ.

வசனம்.

ஆனுல் உனக்கொன்று சொல்லுகிறேன்கேள் நானேழையென்றும் எனக்கு மனிதர்திக்கில்லையென்றும் நீசொல்லி யழுகிறதைப்பார்த்து உனக்கிரங்கவேணுமென்று நினைத்தாலும் நானொருவருக்கடிமை எனக்கெஜமான் வீரவாகு அவர்தான் பெரியதோட்டி அவருக்கு சேரவேண்டிய காற்பணமும் முழச்சீலையுங் கொடுத்துவிட்டால் எனக்குண்டான வாய்க்கரிசியை விட்டுவிடுகிறேன் தரித்திரனை தரித்திரன்வந்தடுத்தால் என்னபிரயோசனம் அதுதான் என்னுலேயானவுபகாரம்.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

காசுடன்சீலைத்துண்டுங் கட்டளைப்படிகொடுத்து
வீசிடவிருந்தாற்கூட்ட மென்னுடன்வராதோஜம்பம்
பேசியபறைகள்கொட்டிப் பெருத்தபல்லக்கில்வைத்து
மாசறுமசானந்தன்னில் மகனைநான்கொளுத்திடேனே.

வசனம்.

கேளுமையா தோட்டியாரே காற்பணமும் முழத்துண்டுங்கொடுக்கிறதற்கு எனக்கு வழியிருந்தால் என்னுடன் கூடப்பத்துபேர் கும்பலாகவாரார்களா ஒருபல்லக்குக்கிடையாதா கொட்டல்முழக்கல் வாராதா அதற்குள்ள ஜம்பத்துடனே தகனஞ்செய்வேனே ஒருகாசுக்கும் வழியில்லை ஐயா.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

தந்திரவிந்திரஜால சமர்த்தினில்கெட்டிக்காரி
இந்தமண்ணுலகமெல்லா மீடுண்டோவுனக்குப்போபோ
மைந்தனைச்சுடவுங்காசு வழியில்லையென்றுயுந்தன்
விந்தையுரைத்தென்சாவி மின்னுதேவிக்கொண்டோ.

வசனம்.

ஆஹாஹா ஸ்ரீசாதிகளிலே உன்னைப்போலிப்படிப்பட்ட இந்திரஜால மகேந்திரஜால தந்திரசாமார்த்தியங் கற்றவர்களை நான்கண்டதில்லை பிள்ளையிறந்து போனானென்றும் அழுகிறாய் அதற்குக் காசுகொடுக்க வழியில்லையென்றும் அழுகிறாய் இது நல்லவித்தைதான் உன்கழுத்திலிருக்கிற தாலியைப்பார்த்தால் விலையிடக்கூடுமா அதிலே கொஞ்சம்விற்றுக் கொடுக்கலாகாதா போபோமோசக்காரி.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

பாழான்தெய்வமேநீ பறந்துபோயொளித்திட்டாயோ
தாழானமனிதர்தம்மைத் தாழவும்விதித்திட்டாயோ
சூழாதவினைசூழ்ந்தாலுந் தோட்டிக்குமெளிதானேனே
வீழாதநெருப்பில்வீழ்ந்து வெந்தாலுந்தீர்ந்திடாதே.

வசனம்.

ஐயையோ பாழானதெய்வமே நீஎங்கே பறந்தொளித்தாய் தாழாதகுலத்திலேபிறந்தும் அடிமைப்படவைத்தாயே அதுபோதாதா இந்தச்சுடலைக்காத்திருக்கிற தோட்டிக்கு மெளிதாகவைத்தாயே என்னுடையதேகத்தை நெருப்பிலேபோட்டாலும் இந்தத்துக்கந்தீருமா ஆருக்கும்வாராதவிதி யெனக்குத்தானாவந்தது தெய்வமே தெய்வமே.

சந்திரமதி-தரு-இ-ம்-சங்கராபரணம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சூரியகுலத்தில்வந்து தோன்றியிவ்வுலகையாண்ட
துரையரிச்சந்திரன்கண்ட தாலி-இந்த
சுடலைக்காயிற்றோடி இருக்கும்புலையன்காணத்
துலங்கலாச்சுதோவென்றன் தாலி
ஆரியர்மறையோரெல்லா மாசீர்வாதங்கள்செய்த
அருமைபெருமையுள்ள தாலி-இந்த
அடவியிற்சுடுகாட்டி லமைந்தபுலையன்காண
வாச்சுதோவெளிப்பட்டெந்தன் தாலி
ஆதிபரமசிவனநுக்கிரகஞ்செய்துவைத்த
அழகுமிகுந்தவென்றன் தாலி இந்த



அரசட்டுப்புலையன்கண்ணுற்காணவோயிருந்ததெந்த
ஆசையன்புமிகுந்த தாலி
நீதிநெறியில்லையோ நிசமும்பொய்யாச்சுதோ
நித்யமாயிருக்குமென்றன் தாலி-இந்த
நீச்சப்புலையன்காண வாய்ச்சுதோகற்புடைய
நீதிமகாப்ரகாசத் தாலி
மன்னன்பிரிந்துபோனான் மகனுமிறந்தான்யானும்
மாளவோதெரிந்ததென்றன் தாலி இந்த
மாடுதின்னும்புலையன் காணவந்ததோநாளும்
மகிமையாய்மறைந்திருந்த தாலி
என்னசெனனம்நா னெடுத்தேன்காசிவிஸ்வேசா
இதுவோவுன்கூத்துக ளையா-இந்த
ஏழைதல்விதி இதுவோநானினி
இருந்துவாழ்வதெல்லா மெய்யா
தாயேவிசாலாட்சி தனமேயுமையவளே
தயைதானிதுவோஅம்மாபடு பாவி-இந்த
சண்டாளப்புலையன்கண்ணிற் றாலியைத்தெரியவைத்துச்
சதிசெய்யலானாயே மாதேவி
மதிதயன்குலத்து மகிபன்றிரிச்சங்குமைந்தன்
மனைவியாய் வேதியர்க்கடிமையா னேனே-இந்த
மகனைப்பார்புகழ்க்க மங்கல்யம்பறையன்காண
வந்ததோவிதியின்வசந் தானே

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

சந்திரமதிதான்சொல்லித் தயங்கியேயழுததெல்லாஞ்
சுந்தரவரிச்சந்திரன்றான் றுலங்கவேமுழுதுங்கேட்டுப்
மைந்தன்றானிறந்தானென்று மனைவியினழுகைகேட்டு
வந்திடும்விதியென்னென்று மண்ணில்வீழ்ந்தழுகின்றானே

வசனம்.

இந்தப்பிரகாரமாக சந்திரமதி யம்மனானவள் அழுகின்றவார்த்தையைக்கேட்ட அரிச்சந்திரமகாராஜனானவன் இறந்ததுதன்பிள்

வென்றும் அழுகிறவள் தன்பெண்சாதியென்றும் தெரிந்துபிரலாபிக்கிற விதங்காண்க.

அனிச்சத்தோட்டி-புலம்பல்-தரு-இ-ம்-சாரு-ஆதிதாளம்.

மகனேயுனக்கிந்தத் தலைவிதியிந்தநாளில்
வருமென்றறியேனடா — மகனே-மகனே

சகதலமெல்லாம்நீ யாள்வாயென்றிருந்தவெண்ணந்
தப்பிப்போச்சுதோ அப்பா — மகனே-மகனே

மகிமைசேர்திரிச்சங்கு மகனுகநான்பிறந்தேன்
மகனென்றுநீபிறந்தாய் — மகனே-மகனே

தகைபெறுஞ்சூரியகுலந் தழைக்குமென்றிருந்தேனே
தடமாறிவிட்டாயோ அப்பா — மகனே-மகனே

என்வயிற்றில்நீபிறந்து என்னபலனைக்கண்டாய்
இந்தப்பலன்காணவைத்தேன் — மகனே-மகனே

என்னையுமென்றுமையு மிவர்க்குவிற்றுக்கடன்தீரு
மேன்விதனமென்றுரைத்தாய் — மகனே-மகனே

முன்னொருப்பாற்றில்நீபோ யென்னைக்கரைசேர்ப்பேனென்ற
மொழியுமறந்தாயடா — மகனே-மகனே

முன்னமொருபூதம்வந்தால் முந்திநானிறப்பேனிங்கள்
முடுகிநடந்தேகுமென்றாய் — மகனே-மகனே

பேடிபோல்நான்பெண்டுவிற்றுப் பிள்ளைவிற்றுமகிழ்ந்திருந்தேன்
பேதகஞ்செய்தாயோ அப்பா — மகனே-மகனே

கோடிகாலமானாலென்ன குறைவருமோவென்றிருந்தேன்
குழந்தைபேநானுன்னைநம்பி — மகனே-மகனே

காட்டுக்குநீவருவாயென்று கடிப்போமென்றெண்ணிப்பாம்பு
காத்திருந்தமாயமென்ன — மகனே-மகனே

மேட்டுப்புற்றிலந்தப்பாம்பு காத்திருந்துகடித்தபோது
விதியைநினைந்தழுதாயடா — மகனே-மகனே

பாம்புக்கிரையாய்வளர்த்த பாவியென்றேயெனைநினைந்து
பதைபதைத்துயிர்விட்டாயோ — மகனே-மகனே



தேம்பித்தேம்பியழுதுநாலு திக்கையும்நோக்கிப்பார்த்து
சிவசிவாவென்றுயிர்விட்டாயோ — மகனே-மகனே

செத்தபிணஞ்சுட்டகட்டை சிதறினத்தைச்சேர்த்ததன்மேற்
றீயைமூட்டிவைக்கலாச்சே — மகனே-மகனே

சற்றும்விதையாதொன்றெண்ணி யுற்றுப்பார்த்திருந்திடாமற்
றனலில்விழவுதைத்தேனப்பா — மகனே-மகனே

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-ஆசிரி

மாணிக்கக்கிரீடம்பூண்டு வையகமாள்வாயென்று
காணிக்கைகொடுத்தேதெய்வ கடாட்சத்திலுன்னைப்பெற்றேன்
வீணுக்கோவளர்த்துப்பாம்பின் விஷத்துக்கோர்தாரைவார்த்தேன்
காணக்கிட்டாதசெல்வம் கண்டிழந்தவர்போலானேன்

வசனம்.

ஐயையோமகனே அனேகதெய்வஸ்தலங்களுக் கெல்லாம்பிரார்த்தனைசெய்து தெய்வகடாட்சத்தினாலே உன்னைப்பெற்று வளர்த்துப் பாம்புக்கிரை கொடுத்தேன் அது எப்படியாச்சுதென்றால் கிடையாத பாக்கியங்கிடைத்து உடனே பறிகொடுத்தவர்போலாச்சுது நானென்ன செய்வேனடா மகனே

பொது-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

வாத்தினாலுதித்தமைந்தன் மாண்டானென்றறிந்துமன்னன்
கருத்தழக்கண்டுகொண்ட கனவொன்றறிந்துகொண்டு
சிரத்தினால்வணங்கிப்புண்யஞ் சிதையுமோநிலையோகாயம்
வருத்தமேனென்றுசந்த்ர மதிதொழுதுரைசெய்வாளே

வசனம்.

இந்தப்பிரகாரம் பாடினாலே இறந்தபிள்ளையைத் தன்பிள்ளையென்றறிந்து துக்கப்படுகிற அரிச்சந்திரமகாராசனைச் சந்திரமதியம்மனானவள் தன்புருஷனென்றறிந்து வணங்கித் தைரியஞ்சொல்லுகிற விதங்காண்க.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எங்களைவிற்றபின்னை யிந்தவாறாக்குலைந்த
சங்கடமென்னமன்னா தலைவிதிக்கழுவாருண்டோ
தங்குமோகாயம்வாழ்வுநிலைபெறுமோதெய்வமேவல்லனாம்
பங்கமின்சத்தியத்துக்கே பழுதுவாராமற்காரும்

வசனம்.

அரிகரி பிரமாவெண்ணசாரணம் சத்தியத்துக்குப்பழுதுவாராம
ற் காப்பாற்றவேண்டும் சத்தியமே பெரிது காயமுள்வாழ்வுஞ்சத
மல்ல நீரிப்படி யழுகிறது தருமமல்ல மனதுதேறிக்கொள்ளும் எ
ங்களைப்பிராமணனிடத்தில் விற்றபின்பு உமக்கிந்த விதிவந்த விதம்
என்ன தெரியச் சொல்லும் மகாராசனே.

அரிச்சந்தோட்டி-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்

மகனையுமுனையும்விற்ற மகாநிதிமுதலுக்கென்றார்
நகைபெறுதாகுக்கூலி தாச்சொல்லித்தடுத்துக்கொண்டார்
புகைபடுசுடலைகாக்கப் புலையனுக்கடிமையானேன்
மகிழுடன்றாகுக்கூலி வந்ததென்றவரும்போனார்

வசனம்.

சௌாய்பெண்ணே யென்தலைவிதியா லுன்னையும் மகனையு
ம் பிராமணனுக்கு விற்றுக்கொடுத்த பொன்னையெல்லாங் கடனு
க்காச்சுதென்றார் அதற்குமேல் தாகுக்கூலி கொடுக்கச் சொல்லி
மறித்துக்கொண்டார் நானொரு பறையனுக்கடிமையாகி அவாதுத
ாகுக்கூலி கொடுத்தேன் அந்தப்பறையன் இட்டவேலை சுடலைகாத்
திருக்கிறேன் இதுதான்பெண்ணே யென்னிடவரலாறு.

சந்திரமதி-தரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

துரைமக்கள்நவரத்னமுடிபட்டிடபணிந்த பாதம்-இந்தச்
சுடலையிலுமீபுகள்பட்டிடவந்தென்னவி னோதம்

சரிகைப்பட்டயஞ்சமுதாடுசெங்கோல்கொண்ட பாணி-இந்தச்
சுடலைக்காயிற்பிணஞ்சுடவந்ததோமணம் தாணி



அரசர்பந்திபந்தியாய்ச் சூழக்கொலுவிருந்த வீரா-இந்த
அடிமைப்படவும்விதியமைந்ததோராஜகெம் பீரா

இரத்நபுஜ்கிருதி பெற்றிலங்கியராச தீரா-இந்த
செத்தப்பிணங்களிடை யுற்றிருப்பாயோ ஜெஜீரா

பூச்சக்ரக்குடையின்கீழ் பூமியையாண்டவுல் லாசா-இந்த
புகைசூழ்பிணநாற்றம் பொறுத்திருப்பாயோமகா ராசா

நீசத்யவானென்று நெஞ்சமிரங்காதோ தெய்வம்-இந்த
நீசச்சுடலைகாக்க வாச்சுதினியென் செய்வம்

பத்தியெரியுதென்றன் பாழ்நெஞ்சுருகிப்புண்ணா மையோ-இந்த
பாடுதொலையுமென்று நம்பமக்குச்சந்ய மெய்யோ

பரதேசிபோலநீர் பரதவித்தழுவதைக் கண்டு-இந்த
பாழும்பிராணன்விடாமலிருப்பேனோ வெதைநம்பிக் கொண்டு

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

பாவியென்பவர்களுக்குட் பாவிதானென்னைப்போலுண்டோ
தேவியென்றறிந்தீர்பிள்ளை செத்ததுங்கண்டீர்ஐயா
சீவன்போனாலுஞ்சத்யஞ் சிதறவொண்ணாதுதேறித்
தாவியமகனைவைத்துத் தகனஞ்செய்திடுகுவீரோ.

வசனம்.

கேளும் மகாராஜனே என்னைத் தேவரீருடையபெண்சாதியென்
றும் செத்துக்கிடப்பவன் உமதுபிள்ளையென்றுமறிந்தீர் இனிசெத்தபி
ள்ளையை வைத்துக்கொண்டழுதத்தினாலேசாரமென்ன பிராணன்போ
னாலுஞ் சத்தியத்துக்குத்தாழ்வுவாராமல் பிள்ளையைத்தகனஞ்செய்யும்
படியானவிதந்தேடி மனதைத்தேற்றிக்கொள்ளும் மகாராஜனே.

அரிச்சந்தோட்டி-விருத்தம்-இ-ம்-தோடி.

செய்வேனோதகனநான்தான் தெய்வத்தின்செயலினாலே
பொய்சொல்லாதிருக்கவெண்ணிப் புலையனுக்கடிமையானேன்
னையலேகாசுந்துண்டுந் தாச்சொல்லிமறையோன்கையில்
பையப்போய்வாங்கிவந்தால் பாலனைத்தகனஞ்செய்வேன்.

சுடு

வசனம்.

ஆனால் நானென்று சொல்லுகிறேன் கேளும் பெண்ணே நீ பிள்ளையைத் தகனஞ்செய்யச் சொன்னதினாலே நான்செய்வேனோ ஒரு பொய்சொல்ல மாட்டாமற்றானே பறையனுக்கடிமையானேன் உன்னையடிமைகொண்ட பிராமணனிடத்துக்குப்போய் காற்பணமும் முழச்சீலையும் வாங்கிவந்தால் தகனஞ்செய்வேன் பெண்ணே.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-தோடி.

மைந்தன்போய்மாண்டானென்றால் மனமிரங்காதபாவி
இந்தசொற்கேட்டிரங்கி யீவானோதுசுங்காசும்
மைந்தனைக்காத்திருப்பீர் வழியோட்டமாகநான்போய்
நொந்துனைத்தவர்கொடுத்தால் நொடிக்குள்ளேவருகுவேனே.

வசனம்.

விஷந்தீண்டி பிள்ளை காட்டிலிறந்தானென்றுசொன்னால் சற்றாகிலும் மனதிரங்காமற்போனானே அந்தப்பாவிப்பிராமணன் அவனேது கொடுக்கிறது நானேதுவாங்கிறது ஆனாலும் நான்போய் என்னாலானமட்டுக்கும் இதஞ்சொல்லிக்கேட்கிறேன் கொடுத்தால்வாங்கிவருகிறேன் நீரிந்தப்பிள்ளையைப் பத்திரமாய்க் காத்திருமகாராஜனே.

சந்திரமதி-தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

ஓவிதிவசமே-யெனக்கிலி-யொப்பார்-விதிவசமே.

பூவையரிலென் போலேர்ருப...
பூமியிலிருப்பாரோ நாமமுந்தரிப்பாரோ
பொருந்துமுளமினி யுறுதியதுசொல
அருகிலொருதுணை யறியேனரிகரி (ஓவிதி)

பார்ப்பானுக்குணவானே-சற்றும்பழி:பாவத்துக்கஞ்சானே
காற்பணத்துக்காசுங் கணக்காயோர்முழத்துசும்
ஏற்கவேகொடுப்பானோ யெரிந்துகடுகடுப்பானோ

இரவும் விடியுது இதையமடியுது
அரவுங்கொடியது அதர்மமுடிவிது (ஓவிதி)



அர்த்தராத்திரியாச்சே-இந்நேரத்தில்-யாசிப்பதும்போச்சே
கர்த்தத்துரோகஞ்செய்தேனோ கண்ணில்லோனைவதைத்தேனோ
வித்தகப்பெரியோர்நோக வெறுத்தேனோதாழ்வாக.

வினையின்செயலிது விடுவதிலையது
முனிவ னினைவது முடிவின்விளைவிது (ஓவிதி)

மகனுக்கழுவேனோ-சுடலைகாக்கு-மன்னர்க்கழுவேனோ
தகனஞ்செய்யக்கூடாத தடைவந்ததேயடாத
பகைவர்செய்யப்படாத பழிவந்ததேவிடாத
படருமடருது இடருந்தொடருது
அடியுமிடருது மிடியும்படருது (ஓவிதி)

பொது-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

கலங்கியந்தசந்திரமதி காசிநெடுவீதிவாத்
துலங்குமந்தநகராளுந் துரைமகனைக்கள்ளர்கொன்றே
இலங்கவெறிந்ததைக்கண்டே யிவன்மகனோவெனப்பார்க்க
பலன்கொள்பாளையக்காரர் பதிவீதிவந்தனரோ

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சுடலையிலே மகனைவைத்துக் காசுந்துண்டும் வாங்கிவரப் பிராமணனிடத்துக்கு வருகிறவழியிலே காசிராசன்பிள்ளையைக் கள்ளர்கொன்றுஎறிந்து போனதைக்கண்டுமகனோவென்றுசந்திரமதியம்மன் குனிந்துபார்க்க அந்தத்தருணத்திலே காசிப்பட்டணத்துப்பாளையக்காரர்கள் நகரிசோதனைக்குவருகிற விதங்காண்க.

பாளையக்காரர்-வருகிற-தரு-இ-ம்-பந்துவராளி-அடதாளம்.

நகரிக்காவல்பாளையக்காரர்நாங்களே-இரு
நாலெட்டுத்திசைக்குமேலெட்டிப்பார்க்கும் (நகரி)

ஜகதலமெல்லாம்புகழுங்காசித்
தலத்திலேமிகும்பலத்திலேகெட்டி! (நகரி)

தண்ணீரினிலடிகள்கண்டு பிடிப்போம்-கான
சர்ப்பம்போலக்கள்ளராவியைக் குடிப்போம்

புண்ணுய்ப்புழுத்துப்போனுலுமஞ்சாம  லடிப்போம்-களவு
போனதைக்கண்டாலெமனைப்போல்துடி  துடிப்போம்
மண்ணில்மரத்தின்  கல்லின்மேலே
வைத்தஅடிக  ளாவினுலே
எண்ணியெடுத்து  வைத்தாற்போலே
இருக்குமிடத்தைக்  கண்டொருக்காலே
எடுப்போம்  பதுங்கிப்பிடிப்போம்
நித்திரைவிடுப்போம்  துசந்தொடுப்போம்-கெட்டி  (நகரி)

கன்னம்வைக்குஞ் சாடைகளெல்லாம்  பார்ப்போம்-அவர்கள்
கன்னக்கோலின்முறைகளெல்லாஞ்  சேர்ப்போம்
சொர்னப்புதையலிருப்பதைக்கண்டு  பேர்ப்போம்-கொடிய
துடுக்கரைப்பிடித்துமூக்கிஸ்காரநீர்  வார்ப்போம்
என்னென்னவிதங்கள்  களவுக்காக
இருப்பதுண்டோ  அதற்குமேலாக
சன்னசாடை  சோரங்கள்போகச்
சர்ப்பனைசெய்வதை  அறிவிவேகத்
தகையால்வெகு  வசையால்கருமம்
புகைபோல்நுழை  புகழால்வரு  (நகரி)

சக்காஞ்சூலம்வளைதடி  வேலம்பு-தொடுக்குஞ்
சவுரியங்கண்டால்நிற்குமோகள்ளர்  கும்பு
உக்ரமாகச்சீறிவந்து  வுறும்பும்-புலியும்
உள்ளம்நடுங்கியோடாதென்பது  வம்பு
மிக்கவெங்களையாளுஞ்  சீலன்
வெகுநாள்தவம்புரிந்த  பாலன்
சொக்குப்பொடியோ  அல்லதுகாலன்
சுழலோவெந்தத்தந்திர  சாலன்
துடுக்காய்மறைந்து  முடிக்காய்கொன்ற
தடுக்காதிதுநடுக்காடல்ல  (நகரிக்காவல்பாளையக்காரர்நாங்க)

உற்பாதமிண்டகண்டபேரண்டன்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

மெள்ளப்பேசுங்கள்காற்று வீசியசாடைபார்த்தால்
கள்ளர்சஞ்சரிப்புப்போலக் காண்பதுமல்லாற்பின்னும்



கொள்ளையிட்டெடுத்துவந்து கொட்டிவைத்தடைமையெல்லாம்
விள்ளப்பங்கிட்டுக்கொள்ளும் வேளைபோல்நினைக்கின்றேனே.

வசனம்.

கேளுங்கள் அண்ணமார்களே மனுஷர்காற்று வீசுகிற சாடையைப்பார்த்தால் கள்ளர்சஞ்சரிக்கிறதுபோலக் காணப்படுகின்றது அல்லாமலும் ஊரிலே கொள்ளையிட்டுக்கொண்டு வந்தவுடைமையெல்லாம்பங்கிட்டுக்கொள்ளுகிற ஜாடைபோலுங்காணுகிறதுகூட்டாய்ப்பாருங்கள்

சண்டப்பிரசண்டதிண்டிமிண்டன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஜாடையுஞ்சரிதான்சொல்லுந் சமயமுமெய்தானிந்த
வாடையில்தருநிழற்கீழ் மறைந்துசற்றொதுங்கிநின்றால்
ஆடையாபரணமெல்லா மவரவர்சேர்ந்துகொண்டே
ஓட்டவேவழிபார்ப்பார்க ளுடனேபோய்ப்பிடித்துக்கொள்வோம்

வசனம்.

தம்பி உற்பாதமிண்ட கண்டபேரண்டா நீசொல்லுகிறதெல்லாஞ் சரியே நீங்களெல்லோரும் இந்தமரத்தின்கீழுமில் மறைந்துநில்லுங்கள் அந்தக்கள்ளர்கள் கொள்ளையிட்டதைப் பங்கிட்டுக்கொண்டு ஒருவன் போனவழி யொருவன்போகாமல் ஓடநினைப்பார்கள் அந்தத்தருணத்திற்போய் நாம்பிடித்துக்கொள்ளுவோம் சாக்ரதையாயிருங்கள்.

ஆர்த்தண்டகார்க்கோடநாய்க்கன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இறைச்சலேவிழிநீர்க ளெனக்கேர்க்கப்பார்த்தாலங்கே
நிரைச்சலுக்கருகேமாடு நிற்பதாய்தோற்றுதல்லால்
நரைச்சதாலென்னசாரம் நான்சொல்வேனவ்விடத்திற்
சுரைச்செடியிருப்பதாலே சோரனங்கிருக்கவேண்டும்

வசனம்.

அண்ணே சண்டப்ரசண்ட திண்டிமிண்டநாய்க்கா இதெல்லாம் வீணுலோசனை எனக்கேற்கப்பார்த்தால் அங்கேவெள்ளையாயிருக்கப்ப

ட்டது ஓலைகிளைச்சல்போல் காண்கிறது அதற்கடுத்தாற்போல் நிற்கின்றதுமாட்டைப்போலுமிருக்கின்றது அல்லாமலும் அங்கேகுணாச்செடியிருப்பதால் அகத்தியன் திருடனிருக்கலாம் உங்களுக்கு நணச்சதுமாத்திரமேயல்லது நிலைவரந்தெரியாது.

கண்டாரகண்ட சண்டப்பநாய்க்கன்-விருத்தம்.

இ-ம்-காம்போதி.

சிரிச்சாலுந்தீராதுங்கள் திறமைநானென்னசொல்வேன்
பெரிச்சாளிதன்னைப்பூனை புரட்டியேகடிக்கின்றாற்போல்
கிரிச்சானசத்தங்கேட்டேன் கிழவியைப்பாட்டியென்றே
உரைச்சாலுந்தெரிந்துகொள்ளீர் குறுதியென்வசனந்தானே.

வசனம்.

கேளடா அண்ணே தார்த்தண்டகார்க்கோடநாய்க்கா இம்மாத்திரஞ்சாடைதெரியாத வுங்கள்பேச்சைக்கேட்டா லெனக்குச் சிரிப்புவருகிறது ஆஹாஹா கிரிச்சென்றசத்தங்கேட்கிறது அதனாலே பெரிச்சாளியைப்பூனைகடிக்கிறதென்று நினைக்கவேண்டும் அதற்கொருசந்தேகமுமில்லை கிழவியைப் பாட்டியென்று உங்களுக்குளத்தனைதரமுரைத்தாலும் தெரிந்துகொள்ளப் புத்தியில்லாதவர்களாயிருக்கின்றீர்கள்.

பாளையக்காரர்கள்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

நீங்கள்சொன்ன நிலையொன்றும் நிலைவரந்தோற்றவில்லை
ஈங்கிவன்சொல்லைப்பார்த்தா லென்குறிக்கதுதான்மெய்யாம்
ஓங்கியேநீங்களெல்லா மொதுங்கியேகாலுதிக்கும்
பாங்குடனெங்கத்திட்டிப் பறந்தியென்றுடன்குழுங்கள்

வசனம்.

அடாதம்பி கண்டாரகண்ட சண்டப்பநாய்க்கா நீங்கள்சொல்லுகிறதெல்லா நிலைவரப்படவில்லை நம்முடைய உற்பாதமிண்ட கண்டபேரண்டன் சொன்னதே சரியாய்க்காணுகின்றது ஆகையால் நீங்கள் நாலுதிக்கிலேயும் பதுங்கி யொடுங்கி நெருங்கி அடிமேலடிவைத்து என்னுடன்கூடவேவந்து வொரோமாப்பாய் கவிந்துகொள்ளுங்கள்.



பாளையக்காரர்-தரு-இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

சிக்கிக்கொண்டதே-களவுகள்-சிக்கிக்கொண்டதே.

சிக்கிக்கொண்டது வலைக்குட்பட்சிகள்
திக்குமுக்கிட்டுத் திகைக்கிறாப்போல (சிக்கிக்)

பங்குகள்பிரியாமற்கள்ளர்கள்நி கைத்து-இவன்
பத்ரகாளியென்றேயெதிர் வைத்து
இங்கேநாம்வருஞ்சாடையைக் கண்டு
யேக்கம்பிடித்துக்கலங்கி மிரண்டு
தங்கிப்பிடிப்பாக ளென்றேபயங்கொண்டு
காலோட்டங்கொண்டார்கள் களவிங்கேயுண்டு (சிக்கிக்)

முன்னேபார்த்துச்சொன்னவன்றன் தானே-இவன்
முடிக்கிப்பின்னேவரவுமேபயந் தானே
குன்னமோவுனக்குப்பங்கும் தகாது,
கொள்ளைக்குப்போனாலுங்கூட்டுற வாகாது
அன்னியாருமறியவும் போகாது
அணைப்பங்கென் றுனக்கதுவுந் தகாது (சிக்கிக்)

பூதமோபெரும்பேயோவிதென்ன ரூபம்-மனிதப்
பூச்சிகளைத்தின்னும்ராக்ஷசியோவென்ன பாவம்
பேதாளங்களும்நடுங்குமிவ் வேளை
பிரமாய்நின்றுபார்க்குதே யானை
பாதாளம்போனாலும்விடுமோ நானை
பட்டதுபடுவோமுருவடா வாளை (சிக்கிக்)

உற்பாதமிண்டகண்டபேரண்டநாய்க்கன்-வசனம்.

அண்ணே கண்டாரகண்ட சண்டப்பநாய்க்கா கிணறுவெட்டப்போனவிடத்திற் பூதம் புறப்பட்டாற்போலாச்சே.

கண்டாரகண்ட சண்டப்பநாய்க்கன்-வசனம்.

தம்பி உற்பாதமிண்ட கண்டபேரண்டா பூதமுமல்ல பேயுமல்ல ராட்சசியடா ராட்சசி.

தார்த்தண்டகார்க்கோடநாய்க்கன்-வசனம்.

எனக்குக் காலோடே சலபாதைக்குவருகிறது.

சண்டப்ரசண்டதிண்டிமிண்டிநாய்க்கன்-வசனம்.

அண்ணே எனக்கு வேறொரு பயமுமில்லை சீவன்போய்விடுமே யென்கிற பயந்தானென்று.

தளபதி-வசனம்.

அடாதம்பி சண்டப்ரசண்டதிண்டிமிண்டிநாய்க்கா இந்தப்பயித்தியக்காரனைப்போலே நான் பயப்படவேறே ஆறு லொருதரமாத்திரம் பெரியசலபாதையாச்சுது இருக்கட்டுமே எல்லாருமாகக்கூடி மேலேவிழுந்து பிடிப்போம் வாருங்கள்.

தளபதி-விருத்தம்-இ-ம்-முகாரி.

கொள்ளையோகொள்ளைதெய்வக் குறையுண்டோநம்மையாளும்
வள்ளலாமன்னன்பெற்ற மகனையோகொன்றளித்த
கள்ளிதன்கையிற்பிள்ளை கண்டோம்வேறென்னசாட்சி
அள்ளடாசதையைக்கட்டி யடியடாவுதிரங்கக்க.

வசனம்.

அடாதம்பி ஆர்த்தண்ட கார்க்கோடநாய்க்கா இந்த காசிஸ்தலத்துக்கிராசனாகிய நம்முடைய அரசன்பிள்ளையைத்தானு கொல்லவேண்டும் இந்தப்பாவி பிள்ளையைத்தின்கிறவளைப்போலக் கையில்வைத்திருக்கிறுளே இதற்கொருசாட்சியும் வேணுமா இவளைப்பின்கட்டாக இறுக்கிக்கட்டடா அடா சண்டப்ரசண்ட திண்டிமிண்டிநாய்க்கா இந்தப்பிள்ளையை இவள்மடியிற்கட்டடா அடாதம்பி இவளைச்சதையச்சதைய அடிமேலடி இடிமேலிடியாய் இடியடா குண்டிகுபீலென்று ரத்தங்கக்கட்டும்.

ஆர்த்தண்டகார்க்கோடநாய்க்கன்-விருத்தம்.

இ-ம்-ஆனந்தபைரவி.

மடலொடுமடலைச்சேர்த்து மளமளென்றிறுக்கிக்கட்டிக்
குடகுடென்றுதிரங்கக்கக் குத்தியேபிடித்தடித்தோம்
திடமுடன்கொன்றுஇந்தச் சிறுவனைமடியிற்கட்டி
நடநடென்றிவளைக்கொண்டு நாதன்முன்விடுவோம்வாரீர்.

வசனம்.

சேருங்கள் அண்ணமார்களே இவளை மடலொடுமடலொடிய இறுக்கிக்கட்டி ரத்தங்கக்கத்தக்கதாக இடிமேலிடியிடித்தோம் இந்தப்பிள்ளையையும் இவள் மடியிலேதானே கட்டினேம் இனியவளை நடத்திக் கொண்டுபோய் நம்முடைய ஆண்டவன் முன்னேவிடுவோம் வாருங்கள்.



தளபதி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

இந்தமட்டோடேநீங்க ளினைத்திடவேண்டாநின்றால்
பித்திநின்றடித்துவாயால் பேசினுலுதிரங்கக்கச்
சந்துசந்தெலும்புகேல்லாம் சதையவேயடித்துவெட்டி
யந்துகட்டாகவிந்தப் பாவியைநடத்துவீரா

வசனம்.

மகாபாவியான இவளை இந்தமட்டோடேவிட்டு இனைக்கவேண்டாம் இன்னமும் நன்றாயிறுக்கிக்கட்டி எலும்பின்சந்துகளெல்லாம் நொறுங்க அடிமேலடியாய்க் கோடைகாலத்திடிபோல இடிக்கிறத்திலே யிரத்தம் குடங்குடமாய் குபீல் குபீலென்றுகக்கவேணும் இந்தப்பிரகாரமாகச்செய்யுங்கள் தம்பிமார்களே.

ஆர்த்தண்டகார்க்கோடநாய்க்கன்-வசனம்

அதற்கொரு தடையா நீதூளியென்றால் நாங்கள் நிர்த்தூளி செய்வோமே சகலமுஞ் செய்கிறோம் பாரும் நடவடி நட.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-கெண்டா.

என்னையீன்றெடுத்ததாயே யென்னையேன்பெற்றாயம்மா
சென்மநானெடுத்ததுக்கம் செகத்தினிலொருவர்க்குண்டோ
என்னமாய்ப்பொறுப்பேன்சிவ னென்னைவிட்டொழிந்திடா
தன்மைதானில்லாத்தெய்வ சற்பனையிதுவோவையோ (தோ

வசனம்.

அம்மா அம்மா அடிபாவி யென்னையேன்பெற்றாயடியம்மா என்னைப்போல் யென் செனனமெடுத்தவர்களில் யாராகிலு மிப்படிப்பட்டதுன்பத்தை யனுபவிப்பார்களா இந்த அடியுங் கட்டும் இடியும் பொறுக்க வென்றால் முடியுமா பாழானதெய்வத்தின் சர்ப்பனையோ அப்பா என்னையாரோவெட்டாய் வெட்டியாகிலும் பிராணனை வாங்கிப் போடுங்கள் என்சீவனும்போகவில்லையே ஐயையோ ஐயையோ.

தளபதி-வசனம்-அடி பழுதது போதுமடி நீலி நடவடி நட

சந்திரமதி தரு-இ-ம்-சண்டா-அடதாடளம்

கண்ணிகள்.

தெய்வமேஐயோபாழுந்தெய்வமேபடுபாவி
தெய்வமேயெனக்கிந்தத் தீங்குவரலாமோ — தெய்வமே
செய்வினையின்னமென்ன தீவினையாரால்வந்த
தீவினையெண்ணுய்வந்து சென்மமெடுத்தேனே — தெய்வமே
திக்குண்டோவெனக்கொரு திக்குண்டோமனுஷர்கள்
திக்குண்டோவெனக்கிந்தத் தீமைவிளைந்ததோ — தெய்வமே

சக்கிஷிர் இவர்கள்செய் சக்கிஷிமுதிரங்கள்
  கக்கின்றேனெனக்கிந்த கர்மம்வரலாமோ — தெய்வமே
ஒடியுதேயெலும்புக ளொடியுதேயுடம்பெங்கும்
  மொடியுதேயெனக்கிந்த புதைகள்வரலாமோ — தெய்வமே
வடியுதேகண்ணீராறாய் வடியுதேயுதிரங்கள்
  வடியுதேயீனர்கள்வசமோவென்றலையோ — தெய்வமே
எனென்றுகேட்பாரிங்கேதர்மந்தானெங்கே
  சத்யந்தானெங்கேபோச்சுதோ — தெய்வமே
நானென்றுநினைத்தால்தெய்வந்தானென்றுநினைத்ததேயிந்த
  நலங்கண்டேனையோ — தெய்வமே

களபதி-விருத்தம்-இ-ம்-நாட்டை-

சிணுங்கிநின்றழுகின்றாயே திருடர்க்குக்குருவோநீதான்
பணங்களைத்திருடிஞானும் பாலனைக்கொல்வாருண்டோ
பிணந்தின்னும்பேய்நீகண்டாய் பேசாதேமடமடென்று
சணுவுகளெலும்பெலும்பாய்க் கழற்றுவேனடந்துவாடி

வசனம்.

ஆமடி ஆம் நீகற்ற சித்துவித்தைகளெல்லாங்காட்டிச் சிணுங்கிநின்றால் விடுவோமோ உன்னைப்பார்த்தால் திருடர்க்கெல்லாம் குருபீடப்போ லிருக்கின்றாயே பணத்திற்காக ஆசைப்பட்டு உடைமையைத் திருடிக்கொண்டாலும் பிள்ளையைக் கொல்லுவார்களா கொன்றது.மாத்திரமா இன்னவும் பார்த்தாயே நீபிணந்தின்னுகிற பேயேயல்லது மனுஷியா நடிக்கிறையா அல்லது சணுவெலும்புகள் யாவற்றும் ஒடியும்படியாக இருப்புலக்கையாலேயடிக்கட்டுமா,

பாளையக்காரர்-வசனம்.

அடியடா அடி இடியடா இடிகுத்தடாகுத்து நெட்டடா நெட்டு

சந்திரமதி-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

காரணமேதோன்று — மறியேனே-இந்தக்
  காரணமேதோன்று — மறியேனே
பூரணனேகாசிபுரிவாழ் — சதுர்மறைப்
  போதாவோவிஸ்வநாதா — கமலபாதா (காரண)
நானொருபெண்சென்ம — மெடுத்தேனே-இவர்கள்
  நறுக்கிப்பிழியவுடல் — கொடுத்தேனே
தானேபோமுயிரென்றுகை — விடுத்தேனே-இருப்புத்
  தடியடியால்நடக்கத் — தொடுத்தேனே



  தீனதயாபராஇருவுளமிரங்காயோ
  நானழுவதற்கிவர்களிரங்காமையான்செய்ததீதோ (காரண)

அடிதாளவுடம்பினிற் — சதையுண்டோ-இவர்கள்
  அடிக்கத்துணிந்தா — ரென்னபழிகண்டோ
கொடியபாவியரிவர்க் — கென்னமிண்டோ-என்னைக்
  கொல்லாமற்கொல்வதென் — பகைகொண்டோ
அடியற்றமரம்போலே — அலைந்தழுமண்மேலே
  அடிகள்பட்டொருக்காலே அவதிவந்துநேர்ந்ததாலே (காரண)
வாயாலுதிரங்கக்க — வாய்ச்சதே-சத்ய
  வார்த்தைகளெல்லாம்பொய்த்துப் — போச்சுதே
ஓயாமலடிபட — வாய்ச்சதே-தெய்வம்
  உறவுபோலிருந்தென்னை — யேய்ச்சுதே
காயம்நிலையல்லவென்றேயுயிராவிடுவோ — மென்றால்
  கைகள்மடவிறுகக் கட்டியடித்துக் — கொன்றால் (காரண)

பாளையக்காரர்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

பார்க்கின்றபேர்களுக்குப் பரிதாபமாகவேநீ
சேர்க்கின்றசொல்லுங்கட்டுஞ் சிதையாமலழுவதாலே
தீர்க்கமாய்விடுவதில்லை சிறுவனைக்கொன்றதோஷம்
ஆர்க்கும்பொல்லாதுநெஞ்சம் நடுங்குதேயடிநீவாடி

வசனம்.

பார்க்கிறபேர்களெல்லாம் ஐயோவென் றிரக்கப்படுவதாகக் கட்டுமுட்டாய்ச் சொல்லியழுகிறாய் அப்படியழுதத்தினாலே விடுவோமா சிசுவத்தி செய்தால் அந்தத்தோஷம்யாரையும்விடாது அதுதான் உன்மனதை இப்படித்தவிக்கப் பண்ணுகின்றது நடவடிநட.

சந்திரமதி-வசனம்.

அரிசரி அரிசரி தெய்வமேயென்னை யிப்படிக் கெல்லாம்பரிசோதிக்க வேணுமா தெய்வமே.

பொது-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

மாசிலாமனத்தாள்சந்திர மதிதனைக்காவலாளர்
கூசிநின்றழுவேகட்டிக் கொண்டுவந்திடுமவ்வேளை
பூசிதமறைகளோதும் புராதனமுனிவர்போற்றும்
காசிவாழ்மாசன்வாசற் கட்டியக்காரன்வந்தான்

வசனம்.

இந்தப்பிரகாரமாகச்சந்திரமதியம்மனைக்கட்டிக்கொண்டுவருந்

போது காசிப்பட்டணத்திலே காசிராசன் சபையிற் கட்டியக்காரன் வருகிற விதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

மகாபுனிதஸ்தலவாசன்-காசிராசன்வாசற் - கட்டியக்காரன்வந்தான்
காசிராசன்வாசற்கட்டியக்காரன்வந்தான்
சகாஸ்தலங்களில்தருமொருபாநெறிவருவருநிலையறி
தவத்திற்சிறுத்த மகத்வசுகிர்த
சலத்தின்நலத்தின்நிலத்தின்நலத்தின்
தனநிகரில்லெயன வுனதமொடுமைகன
தாரதரங்களிலுஞ்சராசரங்கள்சொலும் (மகா)
உச்சிக்கொண்டைசுருட்டிபொயிலாயுரு மாலைகட்டி
உச்சிதமாய்முத்துத்துராய்வைத்திலங்கவே பகட்டி
மெச்சியசவ்வாடிபொட்டுமின்னவேமீசை முறுக்கி
வெருவச்சபையப்பார்த்துமிநட்டிக்கண்ணை உறுக்கிக்
கச்சிதக்குலழுதிருத்திக் கன்கணி பொருத்தி
பச்சைப்பட்டுத்தட்டிக்கட்டிபளாசபாசென் றதட்டிப்
பரிசியிலொளிதிசழ்சுரிகை வலையமது
பளபளவென்றுமிகவள மிகுந்திலக
பரிவுடனதிசுபசெயமென நிறைபடு
பலநவமணிமுடிஅரசர்கள் புகழொடு
பார்த்தபேர்மனவலியது நெறிதர
ஆர்த்தரானவரிடைதா சுபகர(மகா)

கட்டியக்காரன்-வசனம்.

கேளுங்கள் சபையோர்களே மகாராசராசகெம்பீரராசமார்த் தாண்டனாகிய காசிராசர் கொலுவுக்குவருகிறார் வெகுபராக்கு.

பொது-விருத்தம்-இ-ம்-சாவேரி.

மந்திரயாகவேமம் வரிசைமாதவர்கள்மற்றும்
இந்திரன்முதலோர்போற்று மிசைபெறுதலத்தையாளும்
சந்திரசூசிவேந்தன் துதிதருகொலுவிருக்க
மந்திரிமார்கள்சூழ மகிழ்வுடன்வருகின்றனே

வசனம்.

அகோ. இப்படியென்றால் காசிப்பட்டணத்தை யாளப்பட்ட காசிராசன்மந்திரிகளுடனே கூடக் கொலுவுக்கு வருகிற விதங் காண்க.

காசிராசன்வருகிற-தரு-இ-ம்-சாவேரி-ஆதிதாளம்.

ராசாதிராசர்புகழ்ராசவசீகரன்-காசிராசனிதோவந்தானே



வாசவன்முதல்மற்றமன்னர்மண்டலீகர்
வரையெனவுயர்புய வலிமைபுகழினிய
மதிதருகிரணமிதெனவுலகினி னிறை
மாசில்லாதவுல்லாசநேசபோசன்
வருகுடைநிழலுறை தருமநன்னெறி முறை
மயக்குமதிசய முயங்குமதிரய
வளமிகுந்துநலசுபகரதல நிதி
வுளமகிழ்ந்துவளர் சிவனகாதி பதி(ராசாதி)

சிங்காரமாமுடிபுனைந்து அனுதினமினியநல்லுரையுடனேவரு
மகிலமகிபர்துதிமிகு-மகிமைகள்தரு-சயப்பிரதாபத்தை நினைத்
தங்கும்புசிரிதிதரித்துவீர முனிந்து
தளதளவென நயமணியொளிதாநிறை
சகலமணியணிகளிலகிடவழகுற
சரப்பளிபூண்டுபெட்டாடைவணிந்து
துங்கவாகுவலையம் சரிகையம்பருந் தாணி
ஸ்தூலவில்லு மகாகுண்டலஞ்சமு தாணி
எங்கும்பளபளென்ன வெழில்வீரகண்டா மணி
இலகவேராசசெல்லா மியம்புஞ்சிரோ மணி
இருகைக்குவிப்புபுராவிப்புடையிற்பலபற்பலவிதவிசைகட் சொலி
இடிகுமுருடுமொலி அடிமுரசுகள்வலி (வா
இசைபடுதிசைதிசை விசயமெனவரிசை (ராசாதி)

காசிராசன்-விருத்தம்-இ-ம்-சாவேரி.

பார்மிசைவானமாதம் பரிந்துமும்மாரிபெய்க
சீரிதுவேதசாஸ்திர தெய்வசந்நிதிதழைக்க
பேர்பெறுமிசையின்முப்பத் திரண்டறம்வளரச்செங்கோல்
வருடன்பொலிகவென்றே யிறைவன்றாட் கமலம்போற்றி

முதல்மந்திரி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

தீரர்கள்தீராபோற்றி செயமுடனுலகையாளும்
வீரர்கள்வீராபோற்றி மேதினிக்கரசேபோற்றி
சூரகெம்பீரா நீதித் துலாவெலாந்தெரிந்தகோவே
தாரணிபுயனேகாசித் தலைவனேபோற்றிபோற்றி

இரண்டாவதுமந்திரி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

நால்வகைபிரதமேறி நடாத்தியேபகைவர்தம்மைத்
தோல்வியையடையச்செய்தே தொல்புவியாள்வோய்போற்றி

நால்வகைத்தருமநீதி நாட்டங்களதிர்தாய்போற்றி
வேல்விழிவில்லம்பேந்தும் விறல்காசியன்னுபோற்றி

கட்டியக்காரன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலவுத்தண்ட சூராமர்த்தாண்டாபோற்றி
நிஷ்டூரக்கண்டகர்களைகணக்குவகிர நிர்ப்பயவேந்தாபோற்றி
அஷ்டதிக்குள்ளோர்கள்வாழ்த்தியேபோற்றிடு மதிவீரசூராபோற்
இஷ்டமுடனேகாசிநகரையாள்மதிபூபதியினியமாமன்னுபோற்றி (றி

வசனம்.

கேளுங்கள் சபையோர்களே காசிப்பட்டணத்தையாளப்பட்டகாசிராசாவானவர்கொலுவாயிருக்கிறார்வெகுபராக்கு வெகுபராக் (கு

பாளையக்காரன்-வசனம்.

நடவடி நட ஓடடியோடு இந்தப்பராசாங்குகளிலேயெல்லாம் நாங்கள் பயப்படுவோமா அடியடா அடி, இடியடாஇடி, வெட்டு வெட்டு குத்துகுத்து தள்ளு தள்ளு.

சந்திரமதி-கொச்சகம்-இ-ம்-புன்னாகவராளி.

தீதியறிந்தோரிலையோ தேவரிலையோபூமியின்மேல்
மோதிவிழவடிக்கும் முறைமையேதறியேனே
தீதுசெய்தோரெனைப்போற் தேசத்திலொருவருண்டோ
ஆதிமறையோனெழுத்தோ வறியேன்விதிவசமோ

வசனம்.

ஐயையோ தெய்வமே பூமியிலே நீதியில்லையா சத்தியமில்லையா ஒருகாரணமு மில்லாமல் என்னையிப்படி வதைக்கிறார்களே பொல்லாங்கு செய்தவர்களிலே எந்தத்தேசங்களிலேயாவதுஎன்னைப்போற் கண்டதுண்டா இப்படியுமிருக்குமா பிரமன்விதித்தவிதி தெய்வமே தெய்வமே.

கட்டியக்காரன்-வசனம்.

சத்துரு சத்துரு கூப்பிடாதே கூப்பிடாதே யார்காணும் பாளயக்காரா நில்லுங்கள் நில்லுங்கள்.

பாளயக்காரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

முத்தணிகுடைக்கீழ்நின்றே மூவுலகத்தோர்போற்ற
இத்தலமாளநின்ற விறைவனே நின்றாள்போற்றி
சத்தியநகரிதன்னைச் சோதிக்குமூழியத்தைப்
பெற்றிடுங்காவலாளர் பிறங்கிடவந்தோஞ்சுவாமி

வசனம்.

சரணஞ்சரணம் காசிராசேஸ்வரா நகரிசோதிக்கும்காவற் காரரேவந்தோம் சுவாமி.



காசிராசன் விருத்தம்-இ-ம்-நாட்டை.

நகரிசோதிக்கும்நல்ல நயமுள்ளவீரர்நீங்கள்
பகலுமேயிரவுமாகப் பதுங்கியேயங்கங்குள்ள
நகைபிலாச்சூதுகன்னஞ் சர்ப்பனைவெவைகண்டீர்கள்
பகர்வீர்கள்நடுநேரத்திற் பரிந்துவந்ததுஞ்சொல்வீரோ

வசனம்.

கேளுங்கள் நகரிசோதிக்கும் காவலாளர்களே நீங்களிரவும்பகலுமாக அங்கங்கே பதிவிருந்து சோதித்துத் திரிகிறீர்களே சூதுகன்னக்கோல் இவைமுதலாகிய அதிசயங்கள் என்னென்ன கண்டீர்களோ நீங்களிந்த நடுநேரத்தில் வந்தகாரியமென்னமோ தெரியச்சொல்லுங்கள் காவலாளர்களே.

தளபதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

எங்களையாளுமன்னா என்னென்றுசொல்வோமிந்த
தங்கியகள்ளியுன்றன் மகவையேசர்மனைக்கொன்றாள்
பொங்கமாமுடைமையெல்லாம் புதைத்திட்டாள்கண்ணிற்கா
இங்கிவள்பிணத்தைத்தின்னும்ராட்சதகணத்தாளையா (ணேம்

வசனம்.

கேளும் ராசபரமேஸ்வரா இதோநிற்கிறாளே இந்தக்கள்ளி இவள்தேவரீர் பிள்ளையை நித்திரையிலே தூக்கிக்கொண்டுபோய் உடைமையெல்லாம் கழற்றிப் புதைத்துப்போட்டுப் பிள்ளையைக் கொன்றுபோட்டாள் இவள்பிணத்தைத்தின்கிற ராட்சசிஐயா.

காசிராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

பெண்ணாகப்பிறந்தவிந்தப் பேதைபென்மகனையெந்த
வண்ணமாய்க்கொன்றாள்கண்ட வாறென்ன வகையாயின்னங்
கண்ணாடிபார்க்கக்கண்ணிற் காட்டியவொளியைப்போல
மண்மீதிலிருந்துபொய்யை வழங்காமல்நிசஞ்சொல்வீரே

வசனம்.

கேளுங்கள் நகரிகாவலர்களே இந்தப்பெண்ணாய்ப்பிறந்தவளென்மகனைக்கொன்ற விதமென்ன நீங்களெப்படி கண்டீர்கள் மண்ணின்மேலிருந்து பொய்ஞ்சொல்லவேண்டாம் கண்ணாடி காட்டு முகச்சாயைபோல இருக்கும்வண்ணம் விவரமாய் எதார்த்தமாகச் சொல்லுங்கள்.

தளபதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கொன்றதுபொய்யோநாங்கள் கூடிப்போய்ப்பார்க்கும்போது
குன்றெனநின்றாளுந்தன் குழந்தையைமடியில்வைத்து
தின்றனள்சதையைக்கையால் திரட்டியேயுதிரமுண்டாள்
வென்றிவேல்மன்னாநாங்கள் வெருவியேபிடித்துவந்தோம்

வசனம்.

மகாராச சக்கிரேஸ்வரா ஐயையோ நாங்களப்படி பொய்சொல்லுவோமா யெண்பாவம் பொல்லாதே யெங்களுக்குத் தெரியாதா ந்தவரிருடைய குழந்தையைக்கொன்று மடிமீதுகிடத்திக்கொண்டு வாயினாலே சதையைக்கடித்துக் கையினாலே இரத்தத்தை வாரிக்குடிக்கும்போது யிவளைக் கண்டோம் முதல்நாங்கள்பார்க்கிறபோது பெரியராட்சசியைப்போல விருந்தாள் பிராணனுக்கு வொட்டிப் பயந்து போய்ப் பிடித்தோம் மகாராசனே.

காசிராசன்-விருத்தம்-இம்-பர்ஜுவராளி.

ஆம்மாவுன்பேரென்ன ஆதியாமுன்னூரெங்கே
நீரமாநிசியிலிந்தத் தெருவினில்வந்ததென்ன
கோரமாய்ச்சிறுவன்றன்னைக் கொன்றதார்சபத்தைக்கிழ்லவ
சாரமாயெனக்கிதெல்லாஞ் சந்தேகமறச்சொல்வாயே

வசனம்.

ஆம்மாநீ உன்பேரென்ன, நீவாசமாயிருக்கிற ஊரெங்கே நீஇந்தநிசவேளையிலே தனித்து வீதியிலே வரவேண்டியதென்ன இந்தப் பிள்ளையைக்கொன்றதார் அதைக்கீழேவைத்து நீயறிந்தகாரியங்களை விவரமாகச் சொல்லுமம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-நாதநாமக்கிரியை

சொல்லுவதென்னகாசித் துரையேநான்ராட்சசப்பெண்
எல்லையில்பிணங்கள்தின்றே யென்காலங்கழித்திருந்தேன்
புல்லியமதுராமுன் புத்ரனைத்தின்னவெண்ணி
வல்லிருள்தன்னிற்கொன்றேன் வந்திவர்பிடித்துக்கொண்டார்

வசனம்.

ஐயா நானென்னென்று சொல்லுவேன் என்குலம் ராட்சதக்குலந்தான் நானும் ராட்சசிதான் எப்போதுஞ் சிறுபிள்ளைகளைக் கொன்றுதான் வயிறு வளர்த்துக் கொள்ளுகிறது அதிலேயும் இராச குமாரனுன உனது மகனுடைய மாம்சம் நல்லருசியாயிருக்குமென்றுதான் இருட்டிலே யெடுத்துக்கொண்டுபோய்க் கொன்றேன் இவர்கள் கண்டுபிடித்துக் கொண்டார்கள் இதுதா னடந்தகாரிய மகாராசனே.

காசிராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஈதென்னமந்திரிமாரே யிறந்ததோர்பிள்ளை துக்கம்
போதவேவருந்தியிந்தப் பூவைவாய்மொழியைக்கேட்டால்
பாதகரெவரோசெய்த பழியல்லாலிவளைச்சொல்ல
நீதியோகுறிகாட்டாதோ நிலவாமறிகிலேனே.



வசனம்.

கேளுங்கள் மந்திரிமார்களே புத்திரனிறந்துபோனதனாலுண்டாகிற துக்கம் பெரிதாயிருக்கின்றது இந்தப்பாவை வாய்மொழியைக்கேட்டால் பிள்ளையைக் கொன்றவளாகத் தோற்றவில்லை இவள்கொன்றதாய் நிஜமாயானால் சவத்தைப் பண்ணினவர்களுடைய முகக்குறிகள் குறி வசனக்குறி இவையெல்லாம் இவளிடத்தி லிருக்கவேணும் அதுகளொன்று மிவளிடத்திற்காட்டவில்லை மனிதரூபமாகவே யிருந்து ராட்சசியென்று சொல்லுகிறாள் கொலைசெய்தவள் கொலைசெய்தேனென்று சொல்லமாட்டாள் இதுயெப்படி அறிந்துசொல்லுங்கள் மந்திரிகளே.

முதல்மந்திரி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

அலைகடலாழமேனு மதின்கரைமணல்களானில்
நிலைபெறுமீன்கள்தம்மை நேர்ந்தளந்தெண்ணினாலும்
மலர்நிறைமுகத்தாரான மாதர்கள்மனதையாரும் (ன்
நிலைகண்டுசொல்லொணாது நிசப்பொய்யெவ்வாறுசொல்வே

வசனம்.

கேளும் மகாராஜசக்கிரேஸ்வரா சமுத்திரத்தை ஆழங்கண்டாலும் அதன்கரை மணலையெண்ணினாலும் ஆகாசங்களிலுள்ள நட்சத்திரங்களைக்கணக்கிட்டாலும் ஸ்திரீகளுடைய மனதை இன்னவிதமென்று கணக்கிடக்கூடாது ஆனாலுமித்தக்காரியத்தை இவள்செய்தாளென்றுஞ் செய்யவில்லையென்றும் எப்படிச் சொல்லுவேன் மகாராஜனே.

இரண்டாவது-மந்திரி- விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பத்துபேர்சொல்லின்முன்னோர் பாவைசொற்பலிப்பதுண்
சுற்றியேயனேகர்கூடித் தோகையைக்கொண்டுவந்தார் (டோ
கைத்தலந்தன்னிற்பிள்ளை கண்டனமென்றுசொன்னார்
வித்தகாயிவள்செய்தக்கின் வினைவழியறிகிலேனே

வசனம்.

கேளும் மகாராஜசக்கிரேஸ்வராபத்துபேர் ஆமென்றுசொல்லவொருஸ்திரீ அல்லவென்று சொன்னதினாலே நிருமா அப்படியுமல்ல அனேகம்பேர்கூடி ஒரு ஸ்திரீயைப்பிடித்து அவள்கையிலே பிள்ளையுடனே சேர்த்துக்கட்டி இவள்தான்கொன்றவளென்று கொண்டுவந்துவிட்டிருக்க ஆமென்றும் அல்லவென்றும் நாங்களெப்படி சொல்லுவோம் விதிவசமெப்படியிருக்குமோ மகாராஜனே.

காசிராஜன்- விருத்தம்-இ-ம்-நாதநாமக்கிரியை.

அரக்கிநானென்றுரையம்மா அடிபட்டவருத்தமோர்நான்
வரத்தினாற்பெற்றெடுத்த மகனையுங்கொன்றேனென்றும்
யிருக்குமென்சமுகந்தன்னி லினியொருபயமுமில்லை

நெருக்கமேன்மெய்யைச்சொன்னால் நீதப்பிப்போவாயம்மா

வசனம்.

நானென்றுசொல்லுகிறேன்கேளம்மா நீராக்ஷிஎன்றுங்கொன்றவள் நானென்றுஞ் சொல்லுகிறாய் நீ சொல்லுகிறதைப்பார்த்தால் அடிபட்டவருத்தத்தினாலே சொல்லுகிறதுபோலக்காணுகின்றது இக்கிந்த ராஜசபையிலே ஒரு பயமுமில்லை எதார்த்தஞ்சொன்னால் தப்பிப்போவாய் உள்ளத்தைச்சொல்லுமம்மா.

சந்திரமதி விருத்தம்-இ-ம்-தோடி.

ஒடித்ததுகழுத்தைநானே யுன்மகன்வயிற்றைக்கீறிக்
குடித்திட்டேனுதிரமள்ளிக் குடலொடுசதையுந்தின்றேன்
பிடித்தனர்கைமெய்யாகப் பிணந்தின்னும்பூச்சிநானே
முடித்திடவேணுநீதி முறைப்படியெனக்கோராக்கினை

வசனம்.

கேளுமையா நானெத்தர்த்தஞ் சொல்லுகிறேன் உன்பிள்ளையைக் கழுத்தையொடித்து வயிற்றைக்கீறி இரத்தமுங்குடித்து பாவிசமுத்திக்கிறேன் நானெப்போதும் பிணந்தின்கிறபூச்சிதான் கையுமெய்யாக இந்தக்காவலாளர் பிடித்துவந்திருக்க நீரென்னசந்தேகப்படுகிறீர் உம்முடைய நீதியின்படியே இந்தபாவிக்கொரு ஆக்கினை கட்டளையிடும் மகாராசனே.

காசிராஜன்- விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மதியுள்ளமந்திரிமாரே மகன்மாண்டான்விதிவசத்தாற்
சதிவினைத்தெரியாதிந்தத்தையலாள்சொல்லைக்கேட்டால்
வதைசெய்வாளல்லவென்றே மனதினிற்றோன்றலாலே
உதையமாமின்னேஇந்த வூர்விட்டுப்போகச்சொல்வீர்

வசனம்.

கேளும் மந்திரிமார்களே என்பிள்ளை இறந்துபோனது விதிசமயமல்லது வேறில்லை இவள்வதைசெய்தாளென்று வெவ்வளவும் என்மனதிற்றோன்றவில்லை இது யாராலே விளைந்ததோ பொழுதுவிடியுமுன்னமே இவளை ஊர்கடக்கத் துரத்திவிடுகிறதே உத்தமம் அந்தப்படிவிட்டுவிடச்சொல்லுங்கள் மந்திரிகளே.

பாளையக்காரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

ஊரைவிட்டோட்டினாலு முலகைவிட்டோட்டினாலும்
பாரிசையெங்கள்பாலனைப் பண்புடனிற்கவைத்தவா
சேரவேகொலைசெய்தோனைத் துரத்திவிட்டாலதன்பின்
ஊர்காவற்காக்கமாட்டோ மோடிப்போய்விடுவோமையா

வசனம்.

இவளை இந்தவூரைவிட்டோட்டினாலும் இந்தவுலகத்தைவிட்டோட்டிவிட்டாலும் இவள்பயப்படுகிறவளா நாங்களித்தனைபேர் கண்ணாற்கண்டபோது இராக்ஷசியாயிருந்து மறுபடியும் அப்படி



ப்பட்டவளைவிட்டுவிட்டால் எங்கள்பிராணனிற்குமா கொலைசெய்தவளைவிடலாமா எங்கள்பேச்சைநம்பாமல் இவளைவிட்டுவிட்டால் நாங்களிந்தவூர்காவலைவிட்டுவோடிப்போகிறோம் இந்த அநியாயமுண்டா மகாராஜனே.

காசிராஜன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

நல்லதுமந்திரிமாரே நாடிப்போய்வவ்விடத்தில்
மெல்லிதன்னடியேயல்லால் வேறுள்ளோரடிகளுண்டோ
வல்லதிவெளிச்சந்தாமே வகையாகப்பரிசோதித்து
ஒல்லையில்வருவீர்மேல் யுனக்கிறேனிதற்குநியாயம்.

வசனம்.

ஆனால் நானென்று சொல்லுகிறேன்மந்திரிமார்களே இந்தம் பாவிந்தப்பிள்ளையைக்கொன்றுவென்கிற விடமிருக்கின்றதே அந்தஇடமுதல்நம்மிட அரண்மனைவாசல்வரும் அந்த அம்மாளுடைய அடிகளிருக்கின்றதா அதை தீவர்த்திவெளிச்சங்களுடனே நன்றாய்ப்பரிசோதித்து தெய்வத்துக்குப்பொதுவாய்ப் பார்த்துவந்துசொல்லுங்கள் அதற்குமேலே தீர்ப்புசொல்லுகிறேன்மந்திரிமார்களே.

மந்திரி-வசனம்.

அப்படியேபோய் பரிசோதித்துப்பார்த்துவந்து சொல்லுகிறோம் மகாராஜனே.

பொது-விருத்தம்-இ-ம்-தோடி.

வேற்றடியிருந்தாலந்த மெல்லியாற்றுமிவாராமற்
காத்திடச்சிலனாயேவிக் காசிமன்னவன்விடுக்கக்
கூத்திரமுனிவணங்கே தோன்றியவடிகளெல்லாம்
பார்த்திபதாலமங்கை மலரடிகண்டுவந்தார்.

வசனம்.

இந்தப்பிரகாரமாகக் காசிராசனானவர் சந்திரமதியம்மாளைத் தப்புவிக்கவேணுமென்று காவலாளர்சொல்லுக்கு விரோதமில்லாமல் மந்திரிமுதலாகிய சிலபேரை இந்த அம்மாளுடைய அடிகளோமற்றவர்களுடைய அடிகளோ பார்த்துவந்து சொல்லுங்களென்று அனுப்ப அங்கேவிசுவாமித்திரர்மற்ற அடிகளையெல்லாமாற்றிச் சந்திரமதியம்மாளுடைய அடிகள் தோன்றச்செய்வித்தார் அதைக்கண்டுவந்தவர் இராஜாவுக்குச்சொல்லுகிறவிதங்காண்க.

மந்திரிகள் விருத்தம்-இ-ம்-தோடி.

எப்படிசொல்வோமிந்த வேற்றிழையடியேயல்லால்
தப்படிவேறொன்றுஞ் சதுர்முகன்விதியேஐயா
தப்பிதமில்லையென்று தனட்சொல்லவழியாய்க்காணோம்
அப்புறமுனதுசித்த மாசனேநாமென்செய்வோம்.

வசனம்.

இந்தப்பாவத்தை நாங்களென்னென்று சொல்லுவோமையா தேவரீருடைய அரண்மனைமுதல் இந்த அம்மாளைப்பிடித்த விடம் வரைக்கும் இந்த அம்மாளுடையகாலடியேயல்லாமல் குறுக்கேவேறே மனுஷரடியுமில்லை இந்த அம்மாள்பேரில் தப்பிதமில்லையென்றுசொல்லுவதற்குயாதொருவழியுங்காணேம் அப்பால்தேவரீர் சித்தம் நாங்களென்னசெய்வோம்மகாராசனே.

பாளையக்காரர் வசனம்.

கைப்புண்ணுக்குக் கண்ணாடிவேணுமா இதற்குமேலொரு திருஷ்டாந்திரமென்னத்துக்கு இதிலேயுமிஞ்சியிவள்பேரில் பட்சமாய்விட்டால்நாங்கள் இந்தவூரையும்விட்டுவிடுகிறோம் எங்கள் பிராணனையும்விட்டுவிடுகிறோம் மகாராசனே.

காசிராசன்-விருத்தம்-இ-ம்-தோடி.

உனக்கென்னகர்மமோதா னூழ்வினைப்பயனோவிந்த
மனக்கவடந்தனைவிட்டு வழிப்படவுண்மைசொன்னால்
இனக்கமுடன்காவலாளர் செப்பியவார்த்தைகேளேன்
வினைக்குள்ளாகாமற்போவாய் விளைந்தவாறுவாசெய்வாயே.

வசனம்.

ஆனால் இன்னமுஞ் சொல்லுகிறேன்கேளம்மா இனியாகிலும் உண்மையைச்சொன்னால் நீயுயிர்தப்பிப்போவாய் காவற்காரர்சொல்லையுங்கேளேன் அப்பால் உன்விதிப்படியேமுடியும் என்பேரில் குற்றமில்லைகபடத்தைவிட்டுச் சொல்லுமம்மா.

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கபடமேதையாவுந்தன் காதல்சேர்மகனைக்கொன்றேன்
உபயபாரிசமுஞ்சாட்சி யுறுதியாயுரைக்கின்றார்கள்
தபனன்வந்துதிக்குமுன்னே சட்டமாயாக்கினைசெய்வாய்
தடையுள்ளார்தடுத்திட்டாலுந் தலைவேண்டாமரக்கினுனே.

வசனம்.

ஐயா நீரேன் சந்தேகப்படுகிறீர் கொன்றவள் நானே கண்ணாற்கண்டதற்குச் சாட்சியிவர்களே நானிராக்ஷசி மெய்யேயிதிலே சந்தேகமென்ன ஆர்தடுத்தாலுந் தடையில்லாமலென்னை யாக்கினைசெய்யும்படியாகக்கட்டளையிடும் மகாராசனே.

காசிராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

இசைபெறுமந்திரிமாரே இதற்குநாமென்னசெய்வோம்
நிசமதாய்நானேகொன்றேன் நின்மகன்றனையென்றாளே
விசயஞ்சேர்காவலாளர் மெய்யென்றார்விதிவசத்தால்
ஐயசயின்றிவளைக்குர்வீர வாகுவைவரச்செய்வீரே.



வசனம்.

இந்தக்கர்மத்துக்கென்னசெய்வோம் மந்திரிகளேயித்தனைவிதத்திற்சொன்னாலும் அந்தம்மாள் நானே கொலைசெய்தேனென்று சொல்லுகிறாள் இந்தக்காவலாளர்களும் அப்படியே அவளே கொன்றாளென்று சத்தியமாய்ச்சொல்லுகிறார்கள் இதுவும் விதிவசந்தான் ஆகையால் ஆக்கினைபண்ணுகிற வீரவாகுவை வரச்செய்யுங்கள்மந்திரிகளே.

மந்திரி வசனம்.

அப்படியேவரச்செய்கிறோம்மகாராசனே.

மந்திரி-விருத்தம்-இ-ம்-நாட்டை.

உத்தமகாசிவேந்த னுயர்சபைதனிற்காக்கும்
வித்தககட்டியக்காரா விரைவுடனீயபாயந்த
நித்தமுமயானந்தன்னில் நின்றுகாண்பிணஞ்சுட்டோங்கும்
மத்தனுமுசிதவீர வாகுவையழைத்துவாராய்.

வசனம்.

ஆரடா ஆசாரவாசற் கட்டியக்காரா நம்முடையஆண்டவாரழைத்தாரென்றுசுடலைகாக்கும் வீரவாகுவை யழைத்துவாடா.

கட்டியக்காரன்-மட்டு-விருத்தம்-இ-ம்-நாட்டை.

நூர்நொடிக்குள்ளே சீர்பெறச்சென்றே
வீரவாகுவைநான் பாரழைத்திடுவேன்

கட்டியக்காரன்-விருத்தம்-இ-ம்-நாட்டை.

சேரியிற்குடியிருந்தே செத்தபிணந்தனையெல்லாம்
வாரியேகொளுத்துவீர வாகுவேசொல்லக்கேளாய்
தாரணிபுகழுமன்னன் சபைதனில்வரவேயுன்னைச்
சீருடனழைத்தார்நீயுஞ் சீக்கிரமாய்வருகுவாயே.

வசனம்.

ஆரடா அடா தோட்டி வீரவாகு உன்னைராசா அழைக்கிறார் சீக்கிரமாய்வாடா.

வீரவாகு-வசனம்.

எனக்கென்ன வேலையில்லையா சும்மாஅழைக்கிறது தாங்வேலை வாரேன்சுவாமி

தோட்டி-சொல்லுக்குவருகிற-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

சொல்லுகிறேன்கேளுங்களாண்டவர்களே-தோட்டிசாமி
தோட்டிநானேயென்றாண்டவர்களே
கல்லுங்காவினமும்புல் லும்பூமியிலுள்ள
காலமெல்லாஞ்சாணியாச்சி காசியிலேயுண்டெமக்குச் (சொல்)
கூசாமலொருமைத்தோ லூரப்பன்-நிதம்
கூடினதெல்லாஞ்சே கரிப்பேன்

வாசடிலல்லாதீதோஸ விரிப்பேன்-செத்த
மாட்டைப்பாளமுந் தரிப்பேன்
ஆசாரமாய்ப்பசந்தோலெல்லாம்வேறே சேர்ப்பேன்
ஆண்டைமாரயின்றிக்கு அழுகத்தோலைத்தேடிப்பார்ப்பேன்
அந்தவேந்திட்டிகிறுக்கிக்கயும்மேலே
சந்தோசமாகுமன்றக்குள் ளதிருமே
ஆடிப்பாடிஅங்க கூடுவேன்
ஆண்டைமார்கூப்பிட்டா லுடனேயோடுவேன் (சொல்)

வீரவாகு-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

மகிதலந்தன்னையாளும் மன்னவர்மன்னேபோற்றி
பகைவரைவென்றவீர பாக்கிரமதீராபோற்றி
முகிலெனப்பேரிராளு முழக்கிடுஞ்சபையிலென்னை
மகிழ்வுடனழைத்ததென்ன வந்தேனன்தோட்டிசாமி.

வசனம்.

சரணஞ்சரணமையா ஆண்டைகளே வந்தேன் நான்வந்தேன் தோட்டிசாமி

காசிராசன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வருணமேசேர்தோட்டிவீர வாகுமேவயிவளையுந்தன்
நிலைபெறுகொலைக்களத்தில் நிமிஷத்திற்கொண்டுபோய்நீ
கொலைசெய்ததாகச்சொன்னசொடுமைபோர்வார்த்தையாலே
தலையதுவிழவேவீசிச் சபையில்வந்துரை செய்வாயே.

வசனம்.

ஆமடா அடாதோட்டி வீரவாகுவே இந்தமாள் நம்மிடபிள்ளையைக் கொன்றுளென்று இவர்களெல்லாஞ் சாதிக்கிறத்தினாலே கொலைக்களத்தினிற்கொண்டுபோய் சிரச்சேதம்பண்ணி நமக்குவந்து அறிக்கைபண்ணடா

வீரவாகு-வசனம்.

அப்படியே செய்கிறேன்சுவாமி வாழியமாராஜா.

சந்திரவதிதரு-கல்யாணி-இ-ம்-கண்டா-நாளம்-ஆதி.

பார்க்கவரும்பிரசைகளே பாவிநானென்னைநீங்கள்
பார்த்தாலும்பாவம் பாவம் அக்கவிதே
ஆர்க்குமொருமிந்தவிதி யார்படுவாரித்தத்துன்ப
மானதெந்தநாளுமினி அகலவிடோ
பெண்ணைவீறுதினைக்கிநீர்கள்பெண்ணுல்லபெண்ணாள்நாஞ்னோ
பிரம்மராட்சதிராவென்னை அதியிதோ
கண்ணிற்கண்டபிள்ளைகளை கழுத்தைமுறித்துக்கொல்லும்
[illegible] குறுநீரோ
இந்தசர்மன்னன் [illegible] யுமாயுண்ட
என்னைவந்துப்பக்கின்றீர் வெகுமோசம்



விந்தைவிந்தையாக்கொலைசள்வேணதெல்லாஞ்செய்தயென்னை
விட்டிரங்குவரோநெஞ்சம் லவலேசம்
ஞானவிசாலாட்சிமகிழ் நாயகனேகாசிவிஸ்வ
நாதரேயுமக்கிதெல்லாந் தெரியாதோ
ஈனமானவெண்ழைக்குத் திக்கில்லாப்பரதேசியர்க்குந்
திருவுளமிரங்கியருள் புரியாதோ

வீரவாகு-விருத்தம்-இ-ம்-நாட்டை.

காட்டியவேலைசெய்து கனிவுடன்சுடலைகாக்குந்
தோட்டியாமனிச்சாகாசித் துரைசொன்னபடியேகேளாய்
பேட்டிளமயிலனிந்தப் பேதையைக்கொடுபோயந்த
நாட்டிபகொலைக்களத்தில் நாணுடல்வதைசெய்வாயே.

வசனம்.

டா அனிச்சத்தோட்டி நம்மிட ஆண்டவனுத்தரப்படியே இவளைக் கொலைக்களத்திற் கொண்டுபோய் சிரச்சேதம்பண்ணடா இந்தக் கத்தியினாலே வெட்டு இந்தா.

இதுவும்-வீரவாகு-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கள்ளியாமிவள்தாமிந்தக் காசிமன்னவன்றான்பெற்ற
பிள்ளையைக்கொன்றுவிட்டப் பெருத்தராட்சசியாமப்பா
நள்ளிருட்பதிவிருந்து நகரிகாவலர்கண்டாராம்
ஆள்ளவேயிவளைவெட்டச் சொன்னாரப்படிசெய்வாயே

வசனம்.

இன்னமிவளுடையகாரியத்தைச் சொல்லுகிறேன் கேளடா கள்ளியாகிய இவள் பிள்ளைகளைத்தின்கிற இராக்ஷசியாம் நம்முடைய ஆண்டவராகிய காசிராஜாவினுடைய பிள்ளையை நிசிவேளையிலேயே எடுத்துக்கொண்டுபோய் கொலைசெய்து சதையைப் பிடுங்கித்தின்கிறபோது நகரிசோதிக்கிற காவலாளர்கள் கண்ணினாலேகண்டுபிடித்துக்கொண்டு வந்தார்களாம் ஆகையால் துள்ளத்துள்ளத் தலையை வெட்டி யெறியச்சொன்னார் அப்படியேசெய்யடா.

அனிச்சத்தோட்டி-வசனம்.

ஆண்டைவார்த்தைக் கொருதடையா அப்படியே செய்கிறேனையாவீரவாகுவே.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-கண்டா.

கோலம்வல்விழியாய்காலங் குறுகியதெறியினாலே
சீலமாம்விஸ்வாமித்ரர் செய்திடுமாயைக்குள்ளாய்
பாலனைக்கொன்றுவென்னும் பழிக்கிரையகப்பட்டாயோ
நீலகண்டேசாதித்தந் நிறைநிதந்தாவிதிபேதுவோ.

சந்திரமதி விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

பண்டிருங்கதிர்குலத்திற் பார்தனையாண்டமன்னர்
பெண்டுடன்பிள்ளைசுற்றம் பெரிதென்றுநினைந்திட்டாரோ
வுண்டென்றும்மாட்சத்தன்னை யுறுதியாய்ச்சத்யத்தாலே
அண்டர்நாடதிக்கவாழ்ந்தா ரறிந்துநீதளராவாயோ

வசனம்.

கேளும் மகாராஜனே நம்முடையவம்சமாகிய இந்த சூரியகு லத்திலேபிறந்து இராச்சியபாரம்பண்ண இராஜாக்களெல்லாமே சகத்தைவிரும்பி சத்தியத்தை பரிபாலனம்பண்ணினார்களேயல்ல து பெண்சாதிபிள்ளை சுற்றத்தாரென்றுமயங்கி அசத்தியவினாராயி னார்களா இதுதேவரீருக்குத்தெரியாதா வென்மயங்குகிறீர் விதனப் படாமல் நடத்தும் மகாராஜனே.

சத்தியகீர்த்தி- விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

கொடுமைதானிதனைப்போலுங் குவலயந்தன்னிலுண்டோ
அடிமையாய்மகனும்பாலுண்டே யரிவையைக்கொலைநீசெய்ய
விடுமிந்தப்பாழுந்தெய்வ வினையிதுதானோவையா
கடும்பசிவிஸ்வாமித்ரன் காலனேனமக்குமன்னா.

வசனம்.

ஐயையோ யென்னாண்டவனுக்கு வந்தகொடுமையாகிய இத னைப்போலும் லோகத்திலுண்டா இப்படியுந் தெய்வஞ்சோதிக்கு மா அடிமைப்படச்செய்ததே பாழுந்தெய்வம் அத்தோடுவிட்டதா மனைவியைப் பறிகொடுக்கவந்ததே அதுவும்போதாதென்று பெண்சா தியையும் வெட்டவந்ததா நம்முடைய பங்குக்கு விஸ்வாமித்ரன் எம னோ மகாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

நிற்பமோபூமிவாழ்வு நிலைமையோசேகமாவி
சத்தியகீர்த்திநீதான் தளர்வதுநெறியோவப்பா
சித்தசன்றன்னைவென்ற சிவனருளல்லால்வேறே
மற்றயாமலர்த்தச்செய்யும் வகையுண்டோதயங்கவேண்டாம்.

வசனம்.

ஆஹா இதென்ன மந்திரியாகிய சத்தியகீர்த்தி இப்படியுமுண் டா இந்தமேகம் நிலையா இதைதாமெச் சத்தியவிரதஞ்செப்பலாமாகிலிப் படி தளரலாமா எல்லாங் காசிவிஸ்வநாதருடைய கிருபையேயல்ல து மற்றவராலே வரப்பட்டதா விசனப்படவேண்டாமந்திரி.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்-முகாரி

முழுதுஞ்சோதிக்கத்தெய்வ மூர்க்கமாயெதிர்த்துநின்றால்
ப்முழுதோன்றுர்வாமலித்தப் பார்த்திபன்றன்னைக்காக்க



அழுதிவிசாரமென்ன அரகராவிஸ்வநாதா
தொழுகின்றேன்விதியேயிந்த தோஷந்தன்பார்க்கமாட்டேன்

வசனம்.

அரகரா காசிவிஸ்வநாதா இந்தக்கோரசன்சத்தியத்துக்குக் கு றைவராமல் எப்பாற்பட்டேனும் தெய்வமே நீசோதித்தால்நானமு ருசாரமென்னஇந்தக்கோரத்தை நானெப்படிபார்ப்பேன்ஐயையோ விதியே

பொது-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

சந்திரமதியையரிச்சந்திரபதியன்றன் கொலைசெய்யக்கொடுபோக
அந்தநகரங்கள்திரருளோர்கூடி யவரவாழுதுபின்வரவே
முந்தியவினையைமுடிக்கவேநினைத்த மூர்க்கனுங் கோசிகமுனிவன்
தந்திரசாலசிசயர்த்துடன்பேசத் தருக்குடனெதிரில்வந்தனனே

வசனம்.

இந்தப்பிரகாரமாகச் சந்திரமதியம்மனைவெட்டுவதற்காக அரி ச்சந்திரமகாராசன் கொலைக்களத்திற்குக்கொண்டுபோக அதைக்கண் டு அந்தக்காசிப்பட்டணத்திலுள்ள பிரசைகளெல்லாம்இரக்கமாயழு துகொண்டுபின்னேவர அத்தருணத்தில்விஸ்வாமித்திரமகாரிஷி வ ருகிறவிதங்காண்க.

விஸ்வாமித்திரர் வருகிற-தரு

இ-ம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்.

சாபானுக்கிரகசாமார்த்தியம்படைத்தோனே-மக
மகத்வத்தவத்தில்மிகுந்த விஸ்வாமித்திரனேனே
கோபாக்கினியில்காலருத்ரன்போல்கொதிப்பேன்
அண்டங்குலுங்கக்குதிப்பேன்பிரமத்தைமதிப்பேன் (சாபா)
பஞ்சாக்கினியில்நடுவுநிலையாய்நின்று-பிரணவம்புகன்று
பந்தபாசக்கட்டைவிட்டகன்று
அஞ்சாமலெந்தவினைகள்வரினும்வென்றுசெயம்செயமென்று
அடல்கொள்ளென்முன் எவர்நிற்பார்பயமகன்று (சாபா)
செஞ்சாமாருநம்பாலவிசிச்
சிவமுனிவர்திகைக்கப்பேசி
பஞ்சாய்ப்பறக்கும்வசிஷ்டன்கூசிப்
பதறவிடுக்கிறேன்விடவிடப்பேசி (சாபா)

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-தோடி.

ஐயையோமன்னாவீணா யவதியேன்படுகின்றாய்நீ
மெய்யனென்றுலகோருன்னை மெச்சிடுங்கொள்ளைபோதும்
வையகந்தன்னிற்பிராணன் வைத்தல்லோவாழவேணும்
பொய்யல்லவென்சொற்கேட்டாற் புனிதராய்வாழலாமே

வசனம்.

ஓய் ஓய் அரிச்சந்திரமகாராசனே நீயென்னாலும் விரும்பித்த அவதிப்படுகிறீர் நீர்மெய்யனென்றபேர் எடுக்கிறதினாலே வாடுமோ என்ன பிராணனிருந்தல்லவோ நல்லவன் பொல்லாதவனென்றாகவேணும் இனியாகிலும் நாஞ்சொன்னபடி கேட்டீரேயானால் சுகப்படலாம்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

மெய்யானபத்தைநாடு மாதவமுனியேபோற்றி
உயிரிருந்துலகில்வாழ்வு துறதியென்றுணர்ந்திலாயா
பயனறிந்தோருக்கிந்தப் பண்பில்லாவார்த்தையாமோ
அயருறவுன்சொற்கேளே னகலப்போம் விதிவிடாது

வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி விஸ்வாமித்திரரே மெய்யைவிட்டுப் பொய்பகிற புலிருடனேயுலகிலிருந்து என்னுமாறு இப்படிப்பட்ட வார்த்தை தேவரீர்வாயிலேவரலாமா நீரினி சொல்லவேண்டியதில்லை நடவும் சுவாமி.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்

உள்ளத்தைச்சொல்லவந்தா லுனக்கென்மேல்சலிப்பேனிந்த
வள்ளைவார்குழலாளுந்தன் மனைவிதன்னுயர்த்தாலும்
பிள்ளையுமடிந்ததாலும் பெருந்துயரடைந்திட்டாய்ய
மெள்ளவோர்பொய்யென்சாதில் விளைந்துலைமகிழச்செய்வேன்.

வசனம்.

ஐயையோ அரிச்சந்திரமகாராசனே நீபடுகிறதுக்கத்தினாலே சலித்துக்கொள்ளுகிறாய் சிரியபிள்ளையிறந்துபோனதாலும் பெண்சாதியைவெட்டநேரிட்டதாலும் இப்படிப்பட்ட துக்கப்படுகிறாயே கொடுத்தராட்டையிக்கிலையென்றுமாத்திரம் இரகசியமாக என்காதிலே சொல்லிவிடும் மர்மம்வேண்டாம் மகாராசனே

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

ஊழ்வினைவிடுவதுண்டோ வுனக்கிதுபொறுமையென்னை
வாழவைத்திடநினைத்து மயங்கிநீர்மலங்கவேண்டாம்
தாழ்வென்றுலஞ்சுவேனோ தலைவிதியனுபவிப்பேன்
சூழ்தவமுனிவரேநீர் தூரப்போம்கோபம்வேண்டாம்

வசனம்.

கோபமில்லாமற்சொன்னார் சுவாமி விசுவாமித்திரரே யென்னைவா மூலைக்கவேணுமென்று நினைக்கிறீர் பிசகில்லை யென்விதியைத்தானனுபவிப்பேன் நீர்போம் சுவாமி.



விஸ்வாமித்திரர்பிரலாபிக்கிற-தரு-இ-ம்

ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

இனியென்னசெய்குவேன் முடிவாச்சே-நான்
எண்ணினவெண்ணமிப் படியாச்சே

சனிபிடித்தல்லோஇந்திரன் சபைக்குநான் போனேனே
சண்டிபோல்வசிஷ்டனோடுசாமர்த்தியம் பேசினேனே (இனி)

ஐயையோவீண்வேலைக்காளாகிப் போனேனே
ஆண்மையால்நானேயித்தஅவதிக்குள் ளானேனே
செய்யுங்கபடமெல்லாந்திரமாகச் செய்தேனே
சித்தம்நொந்தவர்மனந்திகிடச் செய்தேனே
துய்யபதிவிரதைதோஷந்தான் விடுமோ
மையவுதைத்துமுள்ளநடஞ்சொன்னபாவம்விடாமோ (இனி)

நான்செய்ததந்திரகபடநாடக சூத்திரம்
நம்பிக்குமேபயண்டங்கள்நாசமெல்லாம் மந்திரம்
வான்முகிக்குஞ்கடலைமலைகளை முழங்குமென்
மாறுக்கோபத்தால்வடவாக்கினிபோல் புழுங்குவேன்
ஓதம்போலென்றோர்நாம்உன்னினால் மூவர்களும்
எனென்றெதிர்வருவாரினோத்துச்செய்த பலன்களும் (இனி)

பஞ்சைவசிஷ்டன்சொல்போலாச்சுதென்ன காலம்
பார்த்தபேருக்குநானினிக்கவந்துநேருந்தக் கோலம்
தஞ்சமென்றுவிரங்காமற்கெடுத்தேனே அனியாயந்
சலித்தோர்பொய்சொல்லாமலேசாதித்தானேவாளாயம்
அஞ்சாமலவன்மனையாளுமப்படி தானே
சஞ்சலப்படாமற்சாகத்துணிவாளென் றறியேனே (இனி)

பொது-விருத்தம் இ-ம்-ஆனந்தபைரவி

காதகவிஸ்வாமித்ரன் கலங்கியேமறைந்துபோக
வேதனையல்லாமன்னன் விஸ்வேசர்செயலென்றெண்ணி
மாதையும்ராசையிற்பற்றி வாள்வலக்கையிலேந்தி
மேதகுகொலைக்களத்தில் வெட்டவேதுணிந்திட்டானே

வசனம்.

இந்தப்பிரகாரமாகவிஸ்வாமித்திரரானவர் மெத்தவும் விசனப்பட்டுக்கொண்டு மறைந்துபோனபின்புவருகிறவிதியெல்லாம் விஸ்வேசருடையசெயலென்றெண்ணியரிச்சந்திரமகாராசனானவர் சந்திரமதியையிடதுகையிலேபிடித்துக்கொண்டு வாளையுருவிவலதுகையிலேபிடித்துக்கொண்டு கொலைக்களத்திற்குக் கொண்டுபோய் வெட்டுகிறவிதமாங்க.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-தோடி.

வழக்கமாய்நீமுன்வழிபடுதெய்வத்தைவணங்கி
கிழக்குநோக்கியே கிரிகைசேர்தலைதனைநீட்டு
வழுப்படாததும் மாயினிற்சத்தியம்வளா
முழக்குங்கைக்கலி யிட்டுனைவெட்டுவன்முனிந்தே

வசனம்.

இந்தவார்த்தையைச் சந்தோஷமாகக்கேளும்பெண்ணேநீயெப்போதும்வணங்கா நின்ற உன்னிஷ்டதேவதையை மனதிலேநினைந்துவணங்கிக்கிழக்குமுகமாயிருந்துதலையைநீட்டுமாசிலாதராயிடமாயிற் சத்தியம் காஸ்விதமாய்நிலைக்கும்படியாகச்சொர்ச்சித்து ஒரேவெட்டாய் வெட்டிப்போடுகிறேன்பெண்ணே

சந்திரமதி-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

நீரின்மேற்குமிழிபிந்த நீணிலவாழ்விதெல்லாஞ்
சீர்பெறுமுயிர்போனாலுஞ் சிதையாயுண்மைமாறாடி
நேர்பெறுமோட்சஞ்சேர நினைத்தெனையிரண்டாய்வீசித்
தாரணிதனிலேகீர்த்தி தழைத்திடச்செய்வாயின்று

வசனம்.

கேளும் மகாராசனே யிந்தவாழ்வெல்லாம் நீரின்மேற்குமிழியேயல்லாமல்வேறில்லையிராணன் போனாலுஞ்சத்தியத்துக்குக் குறைவுவாராமலென்னைவெட்டியெறிந்துபூமியிலேகீர்த்திநிலைக்கச்செய்யும் மகாராசனே.

அனிச்சத்தோட்டி-விருத்தம்-இ-ம்-பந்துவராளி

பொய்யுரையாதமாமபிறருயிர்க்கிறுதி பூமியிலிரப்பவர்க்கீயா
தைவினையஞ்சமிவைநவைமனதி லடிலறுயியென்னிசுய்
கையுடைவாள்தான்பயன்றனையுறுக் காரணமறிகிலேனேயுந்
தெய்வமேயின்றுநானிதோவெட்டிச் சிதைக்கிறேன்சிவன்செயற்ப
(படியே

வசனம்.

ஓகோ தெய்வமேநானபதங்கொலைகளவுகுருதுவாகு தருமதனமிடாதகுணம்இப்படிப்பட்டநடக்கைகளிலேஒன்றிலுந்தவறுயிருப்பனேயாகில்யான்கைப்பற்றிய இந்தக்கத்தி பயன்பெறக்கடவது இதுஈஸ்வரரொத்தனப்படிவெட்டுகிறேன் பாருங்கள்

பொர்து-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

இன்னவாறுண்மைபேசி யெதிர்நிற்றேவிமையாக
மன்னவனரிச்சந்த்ரன்றன் மனைவியைவாளால்வீச
முன்மணமாலையாக வீழ்ந்ததுகழுத்திலாங்கே
துன்னியவசிஷ்டரோடுஞ் சுரரெல்லாஞ்சூழ்கின்றாரே



வசனம்.

இந்தப்பிரகாரமாக அரிச்சந்திர மகாராஜனானவன் சத்தியத்தை நினைத்து தன்மனைவியாகிய சந்திரமதியைவாளை ஓரேவெட்டாக வெட்ட அந்தவாளானதுபட்டது முன் மணமாலையாக் அவள்கழுத்திலேவிழ பரமசிவன் முதலாகிய மும்மூர்த்திகளும் இந்திராதிதேவர்களும் அரிச்சந்திரமகாராஜனிடத்திற்கு வருகிறவிதங்காண்க.

தேவர்கள் வருகிற-தரு-இ-ம்-மத்தியமாவதி-ஆதிதாளம்.

தேவர்களிதோ வந்தார்களே-அந்தா
தேவர்களிதோ வந்தார்களே.

காவலனரிச்சந்த்ரன்றன் காதலியை வாளால்வீசத்
தாவியேமாலையாய்விழத் தனர்ந்துவிசுவா மித்ரனழைச்
சதிருறுசதுர்மறைமுதலிய நெறிமுறை
தருமமுநிலையுறை பெருமை யழகுநிறை
சத்தியமானவர்களென்று மகிழ்ந்து
நித்தியர்வாழ்கவெனநின்று புகழ்ந்து

வெள்ளைரிஷபமேறி-தளதளென்று-மெய்யெலாம்விபூதி துலங்க
பிள்ளைவெண்மதிவிளங்க-சூலகபாலம்-பெருந்தகரத்தி லிலங்க
கள்ளவிழ்குழலுமைபாகத்துறையு மீசர்
கருடவாகனர்தன்னில் வைகுந்தபுர வாசர்
ததிதருபலபல வுயிர்களையுதவிய
கமலமென்மலர்மிசை வருசதுர்முகனொடு
காணுறுத்துதி சயமென்று புகல
நீணிலத்தினில் நிஜமென்று சகல (தேவ)

மயில்வாகனத்தி லேறி-அசுரர்படை
மாளப்பொடிபொடியாய் தூறி
செயங்கொள்முருகேசர்வரச் சீறி- நடக்குந்திக
மூஷிகவாகனன்மகிழ் மீறி

நயமாய்வாதும்புரு நாரதர்முதலானோரும்
இயல்சேரிசைகள்பாடி இலசதவத்துள்ளோரும்
இகபரமொன்றுமொரு மகிமையினெறிசொலு
மிவரிவர்பொருளென வருமொடவையிலும்
இசைமேவியபல யதுவிக ஞானதரு
பிசகாநெறிமுறையறிவோ யெனவரு (தேவர்க)

வசிஷ்டவிஸ்வாமித்ரர் சூழ-திக்குப்பாலகர்கள்
வரிசையுடனேவந்து தாழ
விசித்ர அயிராபத வேழ - வாகனந்தன்னில்
விளங்கமார்பதி வாழ

இசைத்தரம்பையர்ஆடி இம்பதேவேந்த்ரஸ்வர
விசித்திர தூர்துமிடேரி மிருகம்போலேயெடிதர
விருதுகுரியணி மிருதிபரவி வர
விழைப்புமுகிலிலிருது விசையுடன வுடர
மடவியந்தர முழுதிலும் மறையத்
தாவிடணிபிசை எங்கினும் நிறைய (தேவர்க)

பொது - வசனம்.

இந்தப்பிரகாரமாக தேவர்கள் வந்திருக்குந்தருணத்தில் காசி ராஜன்இறந்துபோன தன்பிள்ளையைத் தகனஞ்செய்யச் சுடலைக்கலாக்குப்பிள்ளையுடன்வந்து சேர்ந்தானென்றறிக.

விஸ்வாமித்திரர் விருத்தம்-இ-ம்- ஆனந்தபைரவி.

என்றனுலரிச்சந்திரன்றன் னியல்குணம்விளங்கிநன்றாய்
ஒன்றமேபிசகிலானென் றுரங்கிசயபுகழுண்டாச்சு
நன்றியாலெனைப்போற்செய்தார் நானும்ஆஹாவந்தேன்
குன்றம்போல்வருந்தேவேந்த்ர கோவேநின்சமுகத்திற்கே

வசனம்.

இந்த அரிச்சந்திரமகாராஜனுடைய சத்தியமுங் குணசெயல்களும்என்னாலேயல்லவோ வெளிப்பட்டு எந்தஉலகங்களிலும் சாஸ்வதமான கீர்த்திப்பிரகாசித்தது என்னைப்போலே இந்தராஜனுக்கு நன்றிசெய்தவர்களார் ஆஹா ஆஹா நானும்வந்துவிட்டேன் உங்கள்சமுகத்திற்கு தேவேந்திரமகாராஜனே.

வசிஷ்டர்-விருத்தம்-இ-ம்-தோடி.

என்னிடசிஷனுனவரிச்சந்த்ரமன்னன்
தன்மையுநிறைபுத்தனுஞ் சத்தியவிரதமான
நன்மைகளயாவுஞ்செய்து நானிலம்புகழ்தேவர்
முன்னிட்டாசீர்வதிக்க முயற்சியுமெனக்கேதந்தான்

வசனம்.

ஆஹாஎன்னிடசிஷனுகிய அரிச்சந்திரமகாராஜனுடையபொறுமையுஞ் சத்தியமுந் தருமமுந் நிலையும் இன்னும் எல்லாதன்மைகளும் ஆசீர்வதிக்கப்பெற்ற கீர்த்தி என்னையடைந்ததே யல்லது வேறில்லை சபாஷ சபாஷ அரிச்சந்திரமகாராஜனே சிஷியனிருந்தா லிப்படியல்லவோ யிருக்கவேணும்.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-சங்கராபரணம்.

செப்பருபொருளாய்நின்ற சிவபரஞ்சுடரேபோற்றி
உப்புறுமயிலின்மேலுறந் தூயவேலவனேபோற்றி
ஒப்பருபொருளாய்நின்ற யொளிர்மணிவண்ணாபோற்றி
தப்பிலாவரசாட்சிற் றந்ததேவேந்திராபோற்றி



(வசனம்) சரணஞ் சரணஞ் சுவாமிகளே.

தேவர்கள் விருத்தம்-இ-ம்-மோகனம்.

நலமெலாந்திரண்டோருருவாய்வந்த நற்குணசீலனேவாழி
உலகினிலுன்னைப்போலு முன்னையாயுணர்ந்தோரில்லை
இலகியசத்யங்கீர்த்தி யியல்பொறை தருமம்புண்யம்
சலனமில்லாதசாக்ஷி தனியரிச்சந்த்ராவாழி

அரிச்சந்திரன்-விருத்தம் இ-ம்-பைரவி.

என்னமாதவங்கள்செய்தே னென்னிலும்பாவியுண்டோ
என்னையோர்பொருளாயெண்ணி யென்னையாண்டிடவந்தீர்க
அன்னையும்பிதாவுமற்ற மாருயிர்க்குறுதியான [ள்
தன்னிலையோர்களேபுன் னாயினேற்கிரங்கலாமோ

வசனம்.

சரணஞ் சரணம் சுவாமிகளே பெருமையிலாக பாதகனை அடியேனையொருபொருளாகவெண்ணி தெரிசனங்கொடுக்கத் திருவுளம்வருமா இந்தநாயேனையாளத்திருவுளமுண்டாகலாமா சுவாமிகளே

தேவர்கள்-விருத்தம்-இ-ம்-காம்போதி.

புண்ணியமுன்னைப்போலும் பூமியிற்செய்வாருண்டோ
மண்முதலுலகிலுள்ள மயல்களுமுருகிடாதோ
எண்ணுமுன்சுருத்துக்கேது மிடர்களில்லாததுசொன்னோம்
புண்ணியவுலகுமாள்வாய் பூமியுமாள்வாய்மன்னா

வசனம்.

நாங்களொன்று சொல்லுகிறோம் கேளும் அரிச்சந்திரமகாராஜனே சத்தியத்திலேயும் புண்ணியத்திலேயும் உன்னைப்போலொருவருண்டா நீ இந்தவுலகையுமாள்வாய் மோட்ச சாம்ராச்சியமுங் கைக்கொள்வாய் விசனப்படவேண்டாம் மகாராசனே.

பார்வதியம்மன்-விருத்தம்-இ-ம்-தோடி.

பெண்களிற்பெருமையெல்லாம் பிறந்ததுன்னாலேயிந்த
மண்ணுலகத்திலும்போல் வடிவழகருமைநீதி
எண்ணருங்கற்புசத்தியம் வளர்த்திடுந்தருமசிந்தை
பண்ணிவைத்தாற்போல்வாய்த்த பைங்கிளியெழுந்திராய்

வசனம்.

கேளாயம்மா சந்திரவதி பூலோகத்திலே உன்னைப்போலும்அழுத சத்தியம்பதிவிரதாதருமம் இதுகளெல்லாம் பண்ணிப்படைத்தாற்போலிருக்கிற ஸ்திரீகளுண்டோ எழுந்திராயம்மாவெழுந்திரு.

சந்திரவதி-விருத்தம்-இ-ம்-கண்டா.

அம்மம்மாவென்னைப்போலு மனியாயஞ்சென்மமுண்டோ
இம்மையிற்பிறந்துபட்ட விடர்களும்போதுந்தாயே

விம்முதேமனதிற்றுக்கம் மேனியில்வருத்தங்கண்ணுமை
செம்மையாய்ப்பாருந்தாயே திருவுளச்செயலோவம்மா

வசனம்.

ஓமாதேவி சர்வேஸ்வரி சாம்பவி இந்தப்பாவியைத்தொடவு ம்மனம்வருமா பூமியிலே நான் பெண்செனன மெடுத்தபோதினு ம்என்னுடதேகத்தைக்கண்ணிறைப் பாருமம்மாதாயே.

பார்வதியம்மன் விருத்தம்-இ-ம்-கேதாரகௌளம்.

எப்போதும்போலேவாழ்வா யிடரெல்லாந்துலைந்துதுந்தன்
ஒப்பிலாக்கணவரோடு முகந்துவாழ்ந்ததற்குமேலே
இப்புவியுள்ளோர்நம் மிணையிலாப்பதத்தைமேவி
தப்பாமல்வாழ்வாயேனுஞ் சஞ்சலப்படவேவேண்டாம்

வசனம்.

கேளாயம்மா சந்திரமதி இதுவரைக்கும் நீ பட்டசங்கடமெல் லாந் தொலைந்தது எப்போதும்போலே உன்புருஷனோடுகூடிச் ச கலசாம்பிராச்சியமு மனுபவிப்பாய் இதோடரிசந்ததேகமானுய்வி தனத்தைவிட்டுவிடம்மா கடைசியில் எங்கள்பதத்தையுஞ் சேரக்க டவீர்களம்மா,

சுப்பிரமணியர்-விருத்தம்- இ-ம்-தோடி.

உள்ளாருள்வினைகள்செய்யு மபத்திரவிசுவாமித்ரான்
தள்ளாடயிழுத்துவிட்ட சங்கடந்தனிலேசிக்கி
விள்ளாதவிதியரப்பாம்பின் விஷத்தினால்காட்டில்மாண்ட
பிள்ளாய்நீயெழுந்துவாடா பிரியமாத்தேவதாசா

வசனம்.

பொல்லாத விஸ்வாமித்திரனிடமாய் கையினாலேஇறந்துபோ ன அப்பாதேவதாசா யெழுந்துவாடா.

இதுவும்-சுப்பிரமணியர்- விருக்தம்-இ-ம்-சௌராஷ்டிரம்.

வாசியோடிரதமேறி வலிமையாயரசசெய்யும்
பூசிதவாசர்போற்றும் புண்ணியகுலத்தில்வந்தோய்
மேசியவிஸ்வாமித்ரான் புரட்டினால்வீணாய்மாண்ட
காசிராசேந்திரன்மைந்தா கடிதியேயெழுந்துவாடா

வசனம்.

அனியாயமாய் விஸ்வாமித்திரன் மாய்கையினாலே யிறந்த காசி ராஜன் குமாரனாகிய தேவதாசா யெழுந்துவாடா-

தேவதாசன்-விருத்தம்- ஆனந்தபைரவி.

மயிலேறிவினையாடி வையுருவவேல்விட்ட
வல்லகுமாரேசகுருவே
பயிலாதிமறையாதி மொழிகண்டுசொலவல்ல
டரிவாளவறுமுகவனே



செயிராளவினையேனை யுயிரோடுபுவிமீது
திகழ்வாகவைத்தமுதலே
சொரூபாகவுசார்தமை வென்றகுமரேசனே
திறியேனையாள்வதரிதோ

வசனம்.

சரணஞ் சரணஞ்சுவாமி தேவரீர்சடாட்சத்தினாலேயுயிர்பெ ற்றெழுந்திருந்தேனென்னை யெப்போதுங் காப்பாற்றி யிரட்சிக்க வேணுஞ் சண்முகநாதா

அரிச்சந்திரன்-விருத்தம் இ-ம்-மத்தியமாவதி.

அன்றந்தமார்க்கண்டேய னாவியைக்காப்பதற்கு
வென்றிகொளெமனைப்பாரில் விழவுதைத்திட்டபாதா
இன்றெனையாளவந்தா யெனக்கொருகுறைதானுண்டோ
மன்றலந்துளவினனே மண்பொறுத்தானைப்போற்றி

வசனம்.

அரகராகாலகண்ட திரிபுரந்திரசடாதரசாம்பவமூர்த்தியேமா ர்க்கண்டேயனை இரட்சிக்கத்தக்கதாக எமனையுதைத்த பாதாரவிந்த த்தையுடையசாந்தனே யென்னையிரட்சிக்கும் பொருட்டாய் திருவு ளம் வந்ததேசுவாமிசரணம் அளையாலிலையையுடைய வைகுந்தவா சாசரணம் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவரேசரணம்.

சத்திராத்தி-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மூலகாரணமாய்நின்ற முதற்பெருந்தாயேபோற்றி
ஆலைபாற்கடலில்வந்த அருந்திருமணியேபோற்றி
சீலமார்பிரமனாவில் திகழ்ந்திடுமணியேபோற்றி
பாலனையெனக்களித்தீர் பாக்கியமெல்லாம்பெற்றேன்

வசனம்

செகத்துக்குமூலகாரணமாய் நின்ற பார்வதித்தாயேபோற்றி திருப்பாற்கடலில் அவதரித்த ஸ்ரீமகாலட்சுமித்தாயே போற்றி பிரம தேவருடைய நாவில்வீற்றிருக்கின்ற சாஸ்வதிதேவியேபோற்றி எ ன்னிடத்திலிரங்கி யிறந்துபோன பிள்ளைக் குயிர்கொடுத்திர ட்சித்தீர்களே யிதனாலே நான் வாழ்வடைந்தேன் தாய்மார்களே.

சத்தியகீர்த்தி-விருத்தம்-இ-ம்- ஆனந்தபைரவி

உலகைப்படைத்துமதைக்காத்துமொடுக்கும்பரமவெளியாகி
நிலமைப்படைத்தமூவரென் நெறியாய் நின்றமூலவரோ
இலகச்சார்நாடாள்மன்னவனே யினையம்பார்தவத்தோரெல்லோர்க்கும்
நலமெய்ப்புவியிலடிவணங்க நாயனறிமயன்பொறுத்தாள்வீர்

வசனம்.

சரணஞ் சரணம் அடியேன்பேரில் கிருபைவைத்து இரட்சிக் கவேணுந் தேவர்களே.

ஈஸ்வரர்-விருத்தம்-இ-ம்-அடாணா.

என்றுரைத்தவமுயன்றே யிடைவிடாதவமகற்று
மின்றெனிவிஸ்வாமித்திர வித்தனமுனியேகேளாய்
இந்நிலையரிச்சந்த்ராற்கோ விடவொலாய்வினையச்செய்த
மன்பூமேதெவருங்கேட்கக் கருதியேயுனாசெய்வாயே

வசனம்.

வாரும் வாரும் விஸ்வாமித்திர மகாரிஷியேயிந்த அரிச்சந்திர மகாராசனை இப்படிக்கெல்லாம் வருத்தப்படுத்த வுமக்கிவர்மேலில் விளைந்த அடமென்ன நடந்தவரலாறென்னயாவற்றும் விபரமாகத் தெரியச்சொல்லும் முனிவரே.

விஸ்வாமித்திரர்-அகவல்-இ-ம்-எதுகுலகாம்போதி

கைலாசவாசக் கடவுளேகேளாய்
நயமானவிந்த்ர னற்சபைதனிலே
மாதவமுனிவர்கள் வந்திருந்தார்கள்
போசவேநானும் போயங்கிருந்தேன்
பூமியிலுள்ள புரவலர்தம்மில்
நேமநல்னீதி நிறைமொழியுண்மை
வழுவாதவரியார் மாதவத்தோரே
மொழிகுவீரென்று மொழிந்தனனிந்த்ரன்
அம்மொழிகேட்ட மாவருமிருக்க
தம்மொருதாச னவின்றிடான்பொய்மை
என்றிந்தவசிஷ்ட ரிவனையேசொன்னார்
அன்றிவன்பொய்ய னென்னவடியேன்
இவனுளமறியா நியம்பினேனதற்கோ
ரவதியாய்ப்பந்திய மவர்சொன்னார்யானும்
தவத்தினிற்பாதி தருகிறேனென்று
புவனியில்வந்து புகுந்திவனிடத்தில்
ஆனைமேற்கவண்க லதுபோனதூரம்
தானமாய்ப்பொன்னைத் தருக்குடன்வாங்கி
அந்தசர்தனிலே யடைக்கலமாக
மன்னனுமிவன்றன் வசத்தினில்வைத்தே
நலந்திகழுந்த நாட்டினிற்பயிரின்
பலன்களையழிக்கப் பாவவேமிருக
கூட்டமுண்டாக்கிக் கொடுமையாய்விடுத்தேன்
வேட்டைக்கேயேகி விளைந்திவன்கொன்றான்



பன்றியைவிடுத்தேன் பராக்ரமமாகக்
கொன்றெனுரைபன்றி குலையவேயெய்தான்
நீச்சமாதர்களை நிமிஷத்திற்படைத்தும்
பூச்சக்ரக்குடையைப் புரவலன்கையில்
வாங்குவீர்கொடுக்கான் மருகுவீரென்றே
பாங்குடனுரைத்த பரிவினலவர்போய்ப்
பாடியேகேட்ட பரிசதைமறுத்தான்
கூடுகவென்றார் கோபமுற்றடித்தான்
கண்டுநான்வெகுண்டேன் கைப்பிழையென்றான்
வண்டணிகுழலார் மணம்புணரென்றேன்
நாடுநகரமு நானளித்திடுவேன்
வாடியவிடையார் மணந்தனைவிரும்பேன்
நன்றெனக்கொடுத்தான் நான்முன்னேவைத்த
பொன்தனைக்கேட்டேன் புகழ்நனகாசி
தன்னகரடைந்தே நாற்பத்தெட்டா
நாளிற்குட்பொன்னை நானேதருவேன்
ஆள்விடுவென்று னனுப்பினேன்கூட
வழியினிற்பாம்பு வகையெலாம்விடுத்தேன்
காட்டெரிநெருப்புக் கல்மழைமுதலாஞ்
சேட்டைகளெல்லாந் திறமுடன்செய்தேன்
தப்பியேகாசி தன்னிலேவந்து
ஒப்பிலாமனைவியை யுற்றதோர்மகனை
விற்றிடச்செய்தேன் விடுக்கிலனிவனைக்
குற்றமாம்புலையன் கொள்ளவேவைத்தேன்
பாம்பினாலிவன்றன் பாலனைக்கொன்றேன்
வீம்பாயிப்பதி வேந்தன்மகனைக்
கொன்றிவன்மனையாட் கொன்றதாயமைத்தேன்
இன்றிப்பழியா லிவளையுங்கொல்லச்
சங்கடம்காட்டித் தயங்கவும்வைத்தேன்
மங்கைதன்பாகா மனதறிந்திந்தப்
பொல்லாங்குகளெல்லாம் பொருந்தினனிவன்பொய்
சொல்லழியாதொரு தோஷமுமறியான்
ஈதுதான்செய்த இடுக்கண்கள்சூழ்ச்சி
வேதவேதாந்த விமலனேபோற்றி

ஈஸ்வரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி

நன்றுநன்றிந்தப்பாவம் நாவினாலுரைக்கொணாது
வெற்றிகொள்தவத்தின்மிக்க விஸ்வாமித்ராமேனி!

அவ்விந்திரன்சபையிற்சொன்ன வசனியாய்ப் பந்தயத்தை
வென்றதார்தோற்றதாரோ விபரமாய்ப்புகலுவீரே

வசனம்.

ஆகா இந்தப்பாவமானவார்த்தைகளை நாவினாலே வசனிக்க வேண்டியது அதுஇருக்கட்டும் ஓய்விஸ்வாமித்திர மகாரிஷியே அன்று இந்திரன்சபையிலே நீரும் வசிஷ்டரும்பண்ணியபிரதிக்கினையிலே தோற்றதார் செயித்ததார் விவரமாகச்சொல்லும் விஸ்வாமித்திரரே.

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-தோடி.

மனதறிந்துரைத்த அந்த வசிஷ்டரோவென்றறிந்தப்
புனிதனைப்பொய்யனென்று புகன்றவனானேதோற்றேன்
புனைமுடிதரித்தேன் போற்றியஅடிமைவிட்டேன்
கனமுடன்றவத்திற்பாதி கர்த்தனேயளிப்பேன்சுவாமி

வசனம்.

கேளும் புவனகர்த்தாவாகிய பரமேஸ்வரரே வசிஷ்டரோவென்றோர் இந்தப்புனிதனைப் பொய்யனென்று சொன்னவனானே தோற்றேன் ஆதலால் நானருமையாய்ச்செய்ததவத்திற்பாதி இந்த அரிச்சந்திர மகாராசனுக்குக்கொடுக்கிறேன் நானய்வாங்கின பூமியுங்கொடுத்தேன் அடிமைத்தனத்தையும் விலக்கிவிட்டேன் சுவாமி மகாதேவரே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

இரந்தவர்க்கீந்தநாட்டை யானினிப்பெறுவதுண்டோ
நிரந்தரமடிமையான நெறிமுறைதவறலாமோ
வரந்தருமுதல்வர்முன்னே மனமுவந்துரைத்தீரையா
சுரந்தபால்கறந்தால்பின்பு சூழ்ந்துதான்முலைக்கேறுதே

வசனம்.

நன்றாய்ச்சொன்னீர் விஸ்வாமித்திரமகாரிஷியேயாசித்தவர்களுக்குக்கொடுத்தநாட்டை மறுபடியும்வாங்குவேனோவிதிவழியாயடிமைப்பட்டநான்மீண்டுபோவேனோகறந்தபால் முலைக்கேறுமோ சுவாமி.



176

விஸ்வாமித்திரர்-விருத்தம்-இ-ம்-மோகனம்.

இரந்தவர்க்கீந்தநாட்டை இனிவாங்கேனென்றும்பாரில்
நிரந்தரமடிமையான நெறிமுறைபிசகேனென்றும்
வருந்தவேவேண்டாம்பூமி வாழ்வெல்லாமொழிந்துநானே
பரிந்தொருதுறவியானேன் பேதித்தேன் வசிஷ்டராலே

வசனம்.

ஓய் அரிச்சந்திரமகாராஜனே பூலோகவாழ்க்கையெல்லாம் வெறுத்துத்துறவியானேன் எனக்கு நாடென்னசெய்ய இந்தவசிஷ்டராலே உன்னைப் பேதித்தேனேயல்லது வேறில்லை சுகமாய் நாட்டையாண்டுகொள்ளும் மகாராஜனே.

அரிச்சந்திரன்-விருத்தம்-இ-ம்-பந்துவராளி.

மறையவன்தனக்கேயெந்தன் மனைவியைமகனைவிற்றேன்
பறையனுக்கடிமையாகிப் படுசுடுசோதித்தேன்
நிறைமதிக்குடைக்கீழ்நின்று நெடுமணிமகுடஞ்சூட்டி
பொறையுடனுலகையாளப் பெற்றுக்குமோதருமமையா

வசனம்.

கேளும் சுவாமி பெண்சாதியையும் பிள்ளையையும் பிராமணனுக்கு விற்றேன் நானொருபறையனுக்கடிமையாகிச் சுடலையிணுக்கு விற்றேன் ... கூலிகொடுக்கவாங்கிப் பொசித்து அவையெல்லாஞ்சுட்டுப் புலையன் கூலிகொடுக்கவாங்கிப்பொசித்தேன் அப்படிப்பட்டநான் இராஜகிரீடம்பூண்டு புச்சக்கரக்குடையின் கீழிருந்து அரசாண்டால் நகைப்பார்களே தர்மதேவதைபொறுக்குமா சுவாமி.

விஸ்வாமித்திரர்- விருத்தம்-இ-ம்-தோடி.

மனையாளைமகனைக்கொண்ட மறையவனக்னிதேவன்
உனைவிலையாகக்கொண்டோ னுயர்ந்தயமதன்றிசைமன்னன்று
வினையங்கள்வசிஷ்டருக்கு மெனக்குமேவினைந்ததாலே. (ன்
இனையசங்கடங்கள்செய்தே னிதிலொருபழுதுண்டாமோ

வசனம்.

கேளாய் அரிச்சந்திரமகாராஜனே உன்பெண்சாதியையும் பிள்ளையையும் அடிமையாய்க்கொண்டவர் அக்கினிதேவன் அதோ நிற்கிறார் உன்னைவிலையாய்க்கொண்டவர் யமதருமராஜன் இதோ நிற்கிறார் வினையாய் வசிஷ்டருக்கு மெனக்கும் வந்தவிரோதத்தினாலே உன்னை பரிசோதித்ததேயல்லது உன்மையாய் நானொரு காரியமுஞ் செய்ததில்லை பொறுத்துக்கொள்ளு மிதனாற் பழியுண்டாகமாட்டாது மகாராஜனே.

அக்கினிதேவன் - விருத்தம் - இ-ம் - ஆனந்தபைரவி.

வாதுசெய்விசுவாமித்திரன் மனைவியை மனைவிற்கப்
பேதகம்வருமென்றெண்ணிப் பிரியமாய்முன்னமேநான்
நீதிலாக்காசிதன்னில் செனித்திட்டேன்மறையோனுக்
கீதனையீந்தாயேதுஞ் சஞ்சலப்படாதமன்னா

வசனம்.

கேளாய் அரிச்சந்திரமகாராஜனே இந்தவசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் வாதுவரப்போகிறது தெரிந்துமுன்னமேநான் இந்தக் காசியிலேவந்து பிராமணனாகப் பிறந்திருந்தேன் இந்தாரும் நீயெழுதிக்கொடுத்த அடிமைச்சாதனம்பாரும் இதனாலொருதோஷமுமில்லை மகாராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்.

பார்த்தேன் நானெழுதிக்கொடுத்த சாதனந்தான் சுவாமி.

எமதருமராஜன் - விருத்தம் - இ-ம் - ஆனந்தபைரவி.

வேதனைபிந்தவிஸ்வாமித்திரால்விளையுமென்றே
ஆகியிவரிந்துநானே வரியதோரிந்தக்காசி
யாதலந்தனிலுதித்து வளர்ந்திட்டேன்புலையனாகச்
சாதனமீந்தாயேதுஞ் சந்தேகப்படாதேமன்னா

வசனம்.

கேளாய் அரிச்சந்திரமகாராஜனே ஆதியிலேதானே இந்தவசிஷ்டருக்கும் விஸ்வாமித்திரருக்கும் இப்படி வாதுவிளையப்போகிறதென்று தெரிந்து இந்தக்காசிப்பட்டணத்தில் நான்பறையனாகப் பிறந்தேன் இந்தாரும் நீயெழுதிக்கொடுத்த சாதனம்பாரும்இதிலொரு தாட்சியுமில்லை மகாராஜனே.

அரிச்சந்திரன் - வசனம்.

பார்த்தேன் நானெழுதிக்கொடுத்த சாதனந்தான் சுவாமி.

எமதருமராஜன் - விருத்தம் - இ-ம் - பந்துவராளி.

என்னுடன்சுடலைகாத்தே யென்றெண்ணியிருக்கவேண்டாம்
வன்னமாஞ்சுடலையல்ல வளரெக்கியாகதுண்டம்
பண்ணியமுனிவர்வாழும் பருத்தவாசிரமம்பாராய்
அன்னவச்சொற்படிநீகட்டே மகமகிழ்ந்திருந்துவாழ்வாய்

வசனம்.

ஓய் அரிச்சந்திரமகாராஜனே நீசுடலைகாத்தேனென்று எண்ணவேண்டாம் அது சுடலையல்ல யாகங்களும் எக்கியங்களும்பண்



ணப்பட்டஇடம் இங்கே வாசம்பண்ணப்பட்டவர்கள் முனிவர்கள் தபோதனர்கள்தான் இந்த ஆசிரமங்களை நன்றாய் உற்றுப்பார்.

அரிச்சந்திரன் - வசனம்.

பார்த்தேன் மெய்தான் தாங்கள் சொன்னபடியே இருக்கின்றது சுவாமி.

எமதருமராஜன் - வசனம்.

இனிமேல்சந்தேகப்படாமல் அண்ணலாகியகைலாசவாசர் கட்டளைப்படி நடந்துகொள்ளும் அரிச்சந்திரமகாராஜனே.

ஈஸ்வரர் - விருத்தம் - இ-ம் - கேதாரகௌளம்.

புகழ்பெறுமரிச்சந்திரவுன் புண்ணியமென்னசொல்வேன்
தகைபெறுமெயமனோடக்னி தாங்களேபுவியில்வந்து
வகையுடன்பார்த்துநீதிவழுவாமலிருக்கத்தாங்கள்
மகிழ்வுடன்மௌலிசூடி வையகமாள்வாய்மன்னா.

வசனம்.

ஓஹோஹோ அரிச்சந்திரமகாராஜனே உன்னுடைய புண்ணியமோ புண்ணியம் நீ உத்தமனானதால் உனக்குஇப்படி துன்பம் வருமென்று முன்னமேயறிந்து அக்கினிதேவனும் எமதருமராஜனும் பூமியில்வந்து பிறந்தார்கள் ஆனதால் குறைவில்லை சுகமாய்மகுடந்தரித்துக்கொண்டு உன்னுடைய நாட்டை ஆளும் தடைசொல்லவேண்டாம்.

வசிஷ்டர் - விருத்தம் - இ-ம் - தோடி.

என்னுடன்விஸ்வாமித்திரரிடக்காகவாதுபேசி
உன்னையிவ்வாறுசெய்தா ருழ்வினையனுபவித்தாய்
மின்னியகயிலைவாசர் விளம்பியநெறியேசென்று
மன்னியநாட்டையாள்வாய் மாமுடிதரித்தேமன்னா

வசனம்.

கேளாய் அரிச்சந்திரமகாராஜனே என்னுடையசிஷன் மெய்யனென்று நான்சொன்னபடியினாலே இந்தவிஸ்வாமித்திரர் என்னுடனேவாதுபேசி என்பேரில் அடமாய் உன்னையிப்படி சங்கடப்படுத்தினார் இது நீயனுபவிக்கவேண்டிய ஊழ்வினையாதலால் அனுபவித்தாய் இனி ஸ்ரீகைலாசவாசர் கட்டளைப்படியே கிரீடந்தரித்து இராச்சியபரிபாலனம் பண்ணவாய்சம்மதித்துக்கொள்ளப்பா.

ஈஸ்வரர்-விருத்தம்-இ-ம்-ஆனந்தபைரவி.

வானவர்க்கரசேநீயும் வாரணவாசிவேந்தன்
தானுமெய்யிந்தமன்னன் தனையயோத்தியினிற்சேர்த்து
தேனெனுமொழியாளோடு சிங்காசனத்தில்வைத்தே
நீணிலமகுடஞ்சூட்டி நிலைபிறுக்கேகுவீரே

வசனம்.

சேனுச் தேவராஜனே நீரும் காசிராஜனும் வசிஷ்டர் விஸ்வாமித்திரரும் இவனை அழைத்துப்போய் அயோத்தியாபுரியைச்சேர்ந்து தம்பதிசமேதராகச் சிங்காதனத்தில்வைத்து மகுடாபிஷேகஞ்செய்து விஸ்வாமித்திரனுடைய தவத்தில் பாதிசத்தம்பண்ணிவித்து பின்பு உம்முடையலோகத்துக்குப்போய்ச் சேரும்.

தேவேந்திரன்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

தேவரீருரைக்கசொல்லை சிரமாகவகித்துக்கொண்டு
யாவருமகிழவித்த வேலையிச்சிறுவனோடு
தாவியபுகழ்சேர்மன்னன் றனையுமழைத்துநான்போய்
ஆவலாய்மகுடஞ்சூட்டி வழைத்துப்பின்போவேன்சுவாமி

வசனம்.

கேளுஞ்சுவாமி கைலாசவாசரே தேவரீர் சொன்னபடியே இந்தம்மாளையும் இந்தப்பிள்ளையையும் இத்தாஜனையும் அழைத்துக்கொண்டுபோய் அயோத்தியாபுரியிலே பட்டாபிஷேகஞ் செய்வித்து பின்பு நான்தெய்வலோகத்துக்குப்போகிறேன் கர்த்தனே.

ஈஸ்வரர்- வசனம்.

இனிநாம் நம்மிடலோகத்துக்குப்போவோம்வாருங்கள்தேவர்களே.

தேவேந்திரன்-வசனம்.

ஓய் அரிச்சந்திரமகாராஜனே அம்மா சந்திரமதி அப்பா லோகிதாசா ஓய் மந்திரி சத்தியகீர்த்தி இனிநாம் அயோத்தியாபுரிக்குப் போவோம் வாருங்கள்.

தேவேந்திரன்- வசனம்.

ஓய் காசிராஜனே உம்முடைய இரதகஜதுரகங்கள் முதலான பரிவட்டணைகளுடன் இவனையும் வசிஷ்டர்விஸ்வாமித்திரனாயும் அழைத்துக்கொண்டு புறப்படும்.



காசிராஜன்-வசனம்.

அப்படியே யாவருக்கும் வாகனம் இரதம் சேனசமுத்திரங்கள் யாவும் வந்தது புறப்படலாஞ் சுவாமி.

பொது-வசனம்.

அகோ தெப்படியென்றால் யாவரும் அயோத்தியாபுரியில் வந்துசேர்ந்து அரிச்சந்திரமகாராஜனும் சந்திரமதியும் லோகிதாசனும் சத்தியகீர்த்தியும் நவரத்தினகசிதமான சபாமண்டபத்தில் யெழுந்தருளி தேவர்கள்புட்பமாரிபொழியவும் குடிகள் போற்றிசெய்யவும் நடனமாதர்கள் நடனமாடவும் கட்டியங்கள்கூறவும் இத்தியாதி வைபவத்துடன் தேவேந்திரன்வசிஷ்டர் விஸ்வாமித்திரர் மூவர்களாலும் மகுடந்தரித்துக் கொள்ளுகிறவிதங்காண்க.

வசிஷ்டர்-மகுடந்தரிக்கிற-விருத்தம்.

தப்பிலாதயோத்தியாண்ட சத்திய அரிச்சந்த்ராவுன்
செப்பியபடியேவிஸ்வா மித்திரர்சொற்படிக்கும்
இப்போதுதேவர்காண வெழில்ரத்நமகுடந்தன்னை
அப்பனேசூட்டுவேனுன் அன்புடன்தரித்துக்கொள்வாய்

வசனம்.

அப்பா சத்தியபாஷி அரிச்சந்திரமகாராசனே தேவர் மூவர் யாவருஞ் சொல்லியபடிக்கும் விஸ்வாமித்திரன் மனதின்படிக்கும் முன்னம் உன்சிரசில் விளங்கும் நவரத்ந மகுடத்தையே தரிக்கிறேன் நீ சந்தோஷமாய் தரித்துக்கொள்ளுமையா சத்தியபாஷி அரிச்சந்திர மகாராசனே.

சரு



## அரிசந்திரமகாராஜன் பட்டாபிஷேகம்.

விருத்தம்.

சித்திரவிசித்திரஉள்ளங்கொண்டு தேவர்மாமுனிவரைப்போற்றிசெய்து
சத்தியகீர்த்தியருமெய்ப்புண்ணியங்கண்டு சகலவேதக்கவிகள்போற்றக்கண்டு
சத்தியமூர்த்தியுமேற்கொண்டுதுள்ளச் சகலமுங்கைக்கொண்டரிச்சந்த்ராராஜன்
பத்தினிசந்த்ரமதியுடனே உலகையாளும் படிகொண்டான் அபிஷேகமுடிகொண்டானே.

தரு-இ-ம்-அடாணா-திரிபுடைதாளம்.

(பல்லவி.) மகுடாபிஷேகங் கொண்டானே-அரிச்சந்த்ராராஜன்-மகுடாபிஷேகங்கொண்டானே.

அநுபல்லவி.

மகதர்குருதர் கற்றுடர் சோனகர் மகிழ்வுற்றிருபுறமும் வணங்கிட, விகிதத்துடன்குடிகளிணங்கி[ட]
மந்திரிதந்திரிமார்கள் அந்தணர்சைவர்கள்மேலோர் ஆசீர்வாதம்தான்கொடுக்க மாசிலா[னே]
கொலுவிருக்க--மகுடாபிஷேகங்கொண்டானே - அரிச்சந்த்ராஜன் - மகுடாபிஷேகங்கொண்டா



சரணங்கள்.

சொங்கணர் வங்கணர் குடதேசத்தோர் கூடித்திரிபுரமும் வணங்கிட
நாடித்துதி செய்துறிணங்கிட கோசிலாத மாதவரனைவரும்
வேதம்ஓதிட நீதியுடனேயிதோ (மகுடா) வீரசூர மைச்சர்வேந்தர்கள்
வெற்றிபெற்றராஜராஜர் சுற்றமுற்றபேர்களெல்லாம்
வேண்டிவந்தருகிருக்க வீரகெம்பீரத்துடனே (மகுடா)
தேவதேவர்பூமாரிபொழிந்திட திந்திமிதிமியென நாடகர்
தந்திமிதிமியென ஆடிட
சீருடன்பாதப்பெண்கள் சீருடன்சங்கீதம்பாட-தேவதுந்துமிமுழங்க சூலருமறிந்திடவே(ம)
ஓசையாகவே பேரிஅடிபட உலகத்தோரெவர்களுமறியவே
சகலவையவ போகமதாகவே
மாசிலாநகிருக் கொலுவிருந்திட தேசமன்னர்கள்யாவருமறிந்திட (மகுடா)
நடனமாதர்கள் நடனம்நடிக்கவே நாவலரெல்லாம்துதிசெய்திட
வானவரெல்லாம் கீர்த்திபுகழ்ந்திட
நாடித்தவஞ்செய்திடும்அமரர்கள் கூடிஅரிச்சந்திரனைப்புகழ்ந்திட (மகுடா)
வேதவேதியர் வேதமோதிட விற்பனமுள வெவர்களும்வாழ்த்திட
அற்புதமிகுமாகியமன்னவன் நீதியுடனேவித்தை செங்கோல்செலுத்திட
பூதலமெல்லாம் இதைப் புகழ்ந்திட (மகுடா)

அரிச்சந்திரமகாராஜன் - கொலுவிலிருந்துசொல்-போற்றி-

விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

தர்மமேதர்மமிந்த தாரணிதழைக்கவேணும்
தர்மமாய்மாரிபெய்து சதாகாலம்வாழ்கவேணும்
தர்மமாயெனதுசெங்கோல் தாழ்விலாதிருக்கவேணும்
தர்மமேபெருகவேணும் சதாசிவமைந்தாபோற்றி

சந்திரமதி-கொலுவிலிருந்து-சொல்-போற்றிவிருத்தம்.

இ-ம்-மத்தியமாவதி.

சூர்முகம்தடித்துமுன்னாள் சுரர்பதிக்காகநல்கி
சீர்பெறும்தேவர்சேனை பதியெனதெய்வலோகத்
தாரிடர்தீர்த்துக்காத்த சண்முகன்தனக்குமுன்னோர்
கார்முகக்கடவுளென்னுங் கணபதியடித்தாள்போற்றி

லோகதாசன்-கொலுவிலிருந்துசொல் போற்றி-கவி.

இ-ம்-மத்தியமாவதி.
திருவளர்கயிலை
சிவனிடமைந்தா
வரமருள்விநாயகா
மலரடிபோற்றி.

சத்தியகீர்த்திசொல்-முச்சீரடி-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி.

அலைகடலிரேழுலோகம் மதனில்பயிர்பச்சையோகம்
அரசேஉன் தேசயோகம்
நிலவுகதிர்போல்விளங்கி நெறிகுடிகள்மன்னர்பொங்கி
நிலவுநிதானங்களெங்கும்
மலர்விழிபடைத்தையாரும் வளர்மனைகுடும்பமேலும்
மகிமையாலோங்குமென்றே
பலகலையுணர்ந்தவேதா பகிரதிசடையாமுண்ட
பார்த்திபா சரணம் சரணம்.



சற்குணமந்திரிசொல்-முச்சீரடி விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

அன்னதானமிகவஸ்திரதானமுதலாவதானமேன்மேலுமாய்
இந்நிலத்தில்வெகுஉன்னிடத்துடனே பலமுசாதிகளுக்கின்பமா
யன்னசத்திரமடங்களெங்குமதி காரமாகசெய்யாகவே
நின்னையப்படிநடக்குதுமுடைய நீதியாலரசர்வேந்தனே

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

சந்திரமுகனைத்துதித்தன்புடன்வாழ்கின்றஅரசனேவெகுபராக்கு
ஆனைபரிசதுரங்கசேனைபோடனைந்தஅகளங்கனேவெகுபராக்கு
சத்தியொடுகட்டாரிதார்முகமணிந்தசெங்கையனேவெகுபராக்கு
கருதரியசூரியகுலர்வர்த்திக்கவேவர்சகாவலாவெகுபராக்கு
வெற்றிபெறுராசாதிராசர்துதிசெய்கின்றவேந்தனேவெகுபராக்கு
மேவிட்டபகைகுலாக்கூறிட்டுநின்றுசெயவீரனேவெகுபராக்கு
ரத்தினருநன்பரையும்சுத்தமுள்ளோரை ரட்சிப்பவனேவெகுபராக்
நாற்றிசையிலுங்கீர்த்திபெற்றரிச்சந்த்ரமகாராசனேவெகுபராக்கு

அரிச்சந்திரமகாராசன்சொல்-லோகதிட்டம்-கவி

அண்டப்புரக்கின்ற மித்திரனுக்கிடையூறி
லாமலரசாட்சிசெலுதா

சத்தியகீர்த்தி-சற்குணமந்திரிசொல்-கவி

அளவற்றபாக்கியத் துடனமரர்கொண்டாட
அனுதினம்பவனிவாரார்

அரிச்சந்திரமகாராசன்-கவி.

கொண்டன்மும்மாரியுங் குவலயத்திடை பூமில்
குறைவிலாமலே பெய்யுதா

சத்தியகீர்த்தி-சற்குணமந்திரிசொல்-கவி

குதிகொண்டுமும்மாரிபெய்து பயிர்பச்சைகள்
குறைவின்றிநிறையுதையா

அரிச்சந்திரமகாராசன்-கவி.

எண்டிசைமுனிவர்கள் யாகாதிகிரமங்கள்
இயல்பாய்நடந்துவருதா

சத்தியகீர்த்தி-சற்குணமந்திரி-கவி

வெகுவிதங்களெப்பொழுதும் முசியாமல்முனிவோர்கள்
இனிமைநிறைவேறுதையா

இராசன்-கவி

மண்டலத்திலுள்ளதேவாலயப் பூசைமகிழ்வாய்நடந்துவருதா

சத்தியகீர்த்தி-சற்குணமந்திரிசொல்-கவி.

வளாயாகமங்களொடோமவிதிதேபூசை வலுவாநடந்துவருகுதையா

அரிச்சந்த்ரமகாராசன்சொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

வந்திடாய்சத்திய கீர்த்தி வரிசையாய்நாமுமிப்போ
சந்தயமில்லாச்சொர்ன தானமேசெய்யவேணும்
தொத்தமாய்வானுலோகம் தொல்புவியறியவெந்தன்
சிந்தையுமகிழ்வதாக செயகண்டியார்விப்பாயே

சத்தியகீர்த்திசொல்-விருத்தம்-இ-ம்-மத்தியமாவதி

கட்டியக்காராகேளாய் கனதிரிச்சங்குமைந்தன்
இட்டமதாகத்தான மீயவேநினைவுகொண்டார்
யெட்டுதிக்கினிலுமுள்ள யேழைகளறியவேரி
சட்டமாயறிந்துவாராய் தரணியோரறியத்தானே

கட்டியக்காரன்-வசனம்.

அகோதெப்படியென்றால்காசியாத்திரைபோயிருந்தஅரிச்சந்திரமகாராசர்மோட்சம்பெற்று மறுபடியும்அயோத்தியாபுரி பட்டணம்வந்து கொலுவிருந்துஅரசுசெலுத்தித்தானங்கொடுக்கப்போறார் தானம்வேண்டியபேர்கள்வந்துசேருங்கள் தாம் தாம்தாம்தம தமதமதம தாம்தாம்தானபேரிசாற்றிவந்தேன்வந்தேன் மகாராசனே சரணம் சரணம்.

சோபனம்.

இராகம்-சாவேரி-ஆதிதாளம்.

சோபனம் நித்யசோபனம்

பூபதியரிச்சந்த்ரன் புகழுக்கிரங்கிவந்த
புனிதக்கவிவிலாச போதர்க்குங்கனநாதர்க்கும் (சோப)

பஞ்சாயுதபாணிக்கும் பாக்கியஇந்திர னுக்கும்
சஞ்சமலர்வேதனுக்குந் தலைவளர்சந்த னுக்கும் (சோப)



செம்பதுமமலருறைதிருவெனு மாதினுக்குஞ்
செழிந்தவினையகிரியாசன் புதல்விக்கும்
நம்புபாவலர்கள் நாவினுறைந்திடும்
நாயகிவெண்கமலாசனமேவிவரு
நங்கைக்குஞ்சசியெனு மங்கைக்கேநிதம் (சோப)

தத்துவமுதலாகத்தனழக்குஞ்சதுர்மறை
நாவிவரும்மதிகதிராகுஞ்சுடர் களுக்குஞ்
சத்யஅரிச்சந்திரன்புகழ் தன்னைவிரும்பினோர்க்கும்
தவறுநெறிநிலைதங்கவே வாழ்வோர்க்குந்
தாணிக்குமாராச வாணிக்கும் (சோப)

வாழ்த்து-கவி

சீர்பெருகுமரிச்சந்த்ரன் திகழ்கதையை
விலாசமெனச்செழிக்கஇந்தப்
பார்மிசைச்செந்தமிழாலேபுனிதமாகப்
பாடினேன்கவிரங்கநாதனென்போன்
ஏர்பெறுமிச்சரிதைதனையெழுதினோர்க
ளின்பமாய்ப்படித்தோர்க ளிதமாய்க்கேட்டோர்
கார்முகில்மெய்மலர்க்கண்ணனருளினாலே
கருதுமிருநிதியெனவே கதிப்பர்தாமே

அரிச்சந்திர விலாசம்

முற்றிற்று.



11/092